உ

கடவுள்துணை.

பவணந்திமுனிவர்

அருளிச்செய்த

நன்னூன்மூலமும்,

திருத்தியும் விளக்கியும் எழுதப்பட்ட

காண்டிகையுரையும்.

ரு-பதிப்பு.

நூல்நிலையம்
289 THUMBOO CHETTY ST. MADRAS

இவை

ஊ-புஷ்பரதசெட்டி அண்டு கம்பெனியாரால்

தமது

கலாரத்நாகரம் என்னும்

அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டன.

சென்னபட்டணம்.

1898.

அட்டவணை.

		பக்கம்.
பாயிரம் ...	க. சிறப்புப்பாயிரம் ...	க.
	உ. பொதுப்பாயிரம் ...	ச.
	ங. சிறப்புப்பாயிரத்திலக்கணம் ...	உக.
எழுத்ததிகாரம் ...	க. எழுத்தியல் ...	ஙச.
	உ. பதவியல் ...	சுஅ.
	ங. உயிரீற்றுப்புணரியல் ...	கூஎ.
	ச. மெய்யீற்றுப்புணரியல் ...	கரு0.
	ரு. உருபுபுணரியல் ...	கஅஉ.
சொல்லதிகாரம்.	க. பெயரியல் ...	ககூஅ.
	உ. வினையியல் ...	உசுக.
	ங. பொதுவியல் ...	உகூசு.
	ச. இடைச்சொல்லியல் ...	ஙருஉ.
	ரு. உரிச்சொல்லியல் ...	ஙசுசு.

அட்டவணை முற்றிற்று.

PREFACE TO THE FIRST EDITION.

THIS Edition of Nannul Kandikai has been carefully revised and improved with short clear headings, both in Tamil and English, to the several sutrams, that the rules of grammar therein contained may be more easily comprehended by the students preparing for the different Examinations of the Madras University. The examples under each sutram have also been clearly arranged so that they may be understood with little or no extraneous aid.

As the Editor is desirous of sparing no pains to make this book as useful as possible to students, any suggestions, &c., from friends and others towards further improvement thereof or in the way of correction, will be thankfully accepted and attended to in a subsequent edition.

In the revision of this work, the Editor has consulted different editions of the book hitherto published with commentaries and he is much indebted to them for this humble production.

PREFACE TO THE SECOND EDITION

Encouraged by the sale of the first edition of this book, the Editor has revised it thoroughly, improving it where-ever he found it necessary.

The sutrams of பொதுவியல், as per margin, 382, 361—366, 368—370, and 374. bearing reference to those in பதவியல் and உயிரீற்றுப் புணரியல் have been brought into these chapters as Nos. 141 *a*, and 152 *a*—*j*.

The Editor is thankful for the appreciation of his labor by the public and humbly requests that any suggestions towards the further improvement of the book may be sent to him through the Proprietor, K. R. Press, Madras.

MADRAS,
1*st August* 1889.

உ

கடவுள்துணை.

நன்னூற் காண்டிகையுரை.

பாயிரம்—PREFACE.

க. சிறப்புப்பாயிரம்.
SPECIAL PREFACE.

நூல்செய்தவர் பெயர்முதலியன;—THE NAME OF THE AUTHOR, &c.

மலர்தலை யுலகின் மல்கிரு ளகல
இலகொளி பரப்பி யாவையும் விளக்கும்
பரிதியி னொருதா னாகி முதலீ
றொப்பள வாசை முனிவிகந் துயர்ந்த
அற்புத மூர்த்திதன் னலர்தரு தன்மையின்
மனவிரு ளிரிய மாண்பொருண் முழுவதும்
முனிவற வருளிய மூவறு மொழியுளும்
குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனுநான் கெல்லையி னிருந்தமிழ்க் கடலுள்
அரும்பொரு ளைந்தையும் யாவரு முணரத்
தொகைவகை விரியிற் றருகெனத் துன்னார்
இகலற நூறி யிருநில முழுவதும்
தனதெனக் கோலித் தன்மத வாரணம்
திசைதொறு நிறுவிய திறலுறு தொல்சீர்க்
கருங்கழல் வெண்குடைக் கார்நிகர் வண்கைத்
திருந்திய செங்கோற் சீய கங்கன்
அருங்கலை விநோத னமரா பரணன்

மொழிந்தன னாக முன்னோர் நூலின்
வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்
பொன்மதிற் சனகைச் சன்மதி முனியருள்
பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி
என்னு நாமத் திருந்தவத் தோனே.

(இதன்பொருள்.) மலர் தலை உலகில் - பரந்த இடத்தை யுடைய உலகத்திலே, மல்கு இருள் அகல - நிறைந்த இருள் கெட, இலகு ஒளி பரப்பி - விளங்கும் கிரணத்தை விரித்து, யாவையும் விளக்கும் - (கண்களுக்குத் தெரியத்தக்க உருவங்கள்) எல்லாவற்றையுங் காட்டுகின்ற, பரிதியின் - சூரியனைப் போல, ஒரு தான் ஆகி - (உலகங்களுக்கெல்லாம்) தான் ஒரு முதலாகி, முதல் ஈறு ஒப்பு அளவு ஆசை முனிவு இகந்து உயர்ந்த - பிறப்பும் இறப்பும் உபமானமும் அளவும் விருப்பும் வெறுப்பும் (ஆகிய இவைகளைச் சுபாவமாகவே) நீங்கி நிற்கையினாலே தலைவனாகிய, அற்புத மூர்த்தி - ஞானமே திருமேனியாக வுடையவன், தன் அலர் தரு தன்மையின் - தனது மலர்ந்த குணமாகிய அருளினாலே, மன இருள் இரிய - (உயிர்களின்) மனத்திருளாகிய அஞ்ஞானங் கெட, மாண் பொருள் முழுவதும் - சிறந்த (அறம் பொருள் இன்பம் வீடு என்கிற) நான்கு பொருளையும், முனிவு அற அருளிய - ஆசையுடன் அருளிச் செய்த, மூ அறு மொழியுளும் - பதினெட்டு நிலத்து மொழிகளுள்ளும், குண கடல் குமரி குடகம் வேங்கடம் எனும் நான்கு எல்லையின் - கிழக்கே கடலும் தெற்கே கன்னியாகுமரியும் மேற்கே குடகமும் வடக்கே திருவேங்கடமும் ஆகிய நான் கெல்லையினையுடைய நிலத்து மொழியாகிய, இரு தமிழ் ஞாலத்துள் - (இயல் இசை நாடகம் எனப் பெயர்பெற்ற) முத்தமிழென்னுங் கடலுள், அரு பொருள் ஐந்தையும் - (அறம் முதலாகிய நான்கு பொருளையும் அறிதற்குக் காரணமாகி) அருமையாகிய (இயற்றமிழென்னும் இலக்கணத்தின் கூறுகளாகிய எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்னும்) ஐந்து பொருளையும், யாவரும் உணர - (இலக்கியப் பழக்கத்தில் வல்லவர் மாத்திரமல்லாமல்) ஏனையவரு மறிய, தொகை வகை விரியின் தருக என - தொகுத்தும் வகுத்தும் விரித்தும் (செய்யுளாகச் செய்யு

ஞலே) பாடித்தருக என, தன்னூர் இகல் அற நூறி - பகைவரது பகைமைகெட அவரை யழித்து, இரு நிலம் முழுவதும் தனது என கோலி - பெரிய பூமி முழுவதையுந் தன்னுடையதாகப் பற்றிக்கொண்டு, தன் மத வாரணம் திசைதொறும் நிறீஇ - தன் மதயானைகளை எட்டுத் திக்கிலுந் (திக்கியானைகளைப் போல) நிறுத்திய, திறல் உறு தொல் சீர் - (தன்னைப்பற்றி மாத்திர மல்லாமல் தன்னுடைய தகப்பன் பாட்டன் முதலானவரைப் பற்றி வரும்) வெற்றிமிகுந்த கீர்த்தியையும், கரு கழல் - பெருமைபொருந்திய வீரக்கழலையும், வெண் குடை - வெள்ளைக் குடையையும், கார் நிகர் வண் கை - மேகம்போலப் (பிரதி யுபகாரத்தை நினையாது) கொடுக்குங் கையினையும், திருந்திய செங்கோல் - கோணுத செங்கோலையும் (உடைய), சீயகங் கன் - சீயகங்கன், அரு கலை விநோதன் - அரியநூல்களை (ஆராய்ந்து பொழுது போக்கும்) விளையாட்டாக வுடையவன், அமர் ஆபரணன் - (தன்மேலே பெரிய காயம்படப்) போர் செய்தலையே ஆபரணமாக வுடையவன், மொழிந்தனன் ஆக - சொன்னுனாக, [கேட்டுக்கொள்ள என்றபடி], முன்னோர் நூலின் வழியே - முன்னே ரிலக்கண நூலின்வழியே, நன் னூல் பெயரின் வகுத்தனன் - நன்னூ லென்னும் பெயரினுற் செய்தனன், பொன் மதில் சனகை - பொன்மதில் சூழ்ந்த சனகாபுரத்துள் ளிருக்கும், சன்மதி முனி அருள் - சன்மதி முனிவன் பெற்ற, பன் அரு சிறப்பின் பவணந்தி என்னு நாமத்து - சொல்லுதற்கரிய ஞானவொழுக்கச் சிறப்பினையும் பவணந்தி என்னும் பெயரினையு முடைய, இரு தவத்தோன் - பெரிய தவத்தினை உடையோன், என்றவாறு.

(இதன் கருத்து.) சூரியன் உலகின்கண் நிறைந்த புற இருளை நீக்கிப் பொருள்களை விளக்குவதுபோல, கடவுள் தனது அருளினாலே ஆன்மாக்களின் மன இருளாகிய அஞ்ஞானம் கெடும்படி, அறம் பொருள் இன்பம் வீடு என்னு நான்கு பொருளையும் விளக்கும் பதினெண் பாஷைகளுள்ளும், கிழக்கே கடலும், தெற்கே கன்னியாகுமரியும், மேற்கே குடகமும், வடக்கே திருவேங்கடமும் எல்லையாகவுடைய நிலத்தில் வழங்குவதாகிய தமிழ்ப்பாஷையுள், எழுத்து சொல் பொருள் யாப்பு

அணி என்னும் ஐந்து பொருளையும் இலக்கியப் பழக்கத்தில் வல்லவரல்லாத ஏனையோரும் எளிதில் அறியும்படி தொகுத்தும் வகுத்தும் விரித்தும் செய்யப்படும் யாப்பினாலே பாடித் தருகவென்று சீயகங்கன் என்னும் அரசன் கேட்க, பவணந்தி முனிவன் முன்னோர் இலக்கண நூலின்வழியே நன்னூல் என்னும் பெயரினால் செய்து தந்தனன் என்பது.

பவணந்தி எனவே நூல்செய்தோன் பெயரும், முன்னோர் நூலின்வழி எனவே நூல் வந்த வழியும், நான்கெல்லை எனவே நூல் வழங்கும் எல்லையும், நன்னூல் எனவே நூலினது பெயரும், யாவரு முணர எனவே நிகண்டுகற்று இலக்கிய ஆராய்ச்சி செய்தபின்பு இந்த நூல் கேட்கத் தகும் என்னும் யாப்பும், அரும்பொரு ளைந்து எனவே நூலிற் சொல்லப்பட்ட பொருளும், அவை ஆராய்ந்தோர் இந்நூல் கேட்டற் குரியார் என்னும் கேட்போரும், அவர் அப்பொருள் ஐந்தையும் அறிந்து சொற்களின் முட்டுப்பாட்டை நீக்குதலாலே மொழித்திறத்தின் முட்டறுத்தல் என்னும் பயனும், சீயகங்கன் மொழிந்தனனாக நன்னூற்பெயரின் வகுத்தனன் எனவே அவன் காலத்திலே பாடப்பட்டு அவனது சபையிலே அரங்கேற்றியதெனச் செய்த காலமும், அரங்கேற்றிய இடமும், அவன் சொன்னதினாலும் யாவரிடத்தும் உண்டாகிய இரக்கத்தினாலும் வகுத்தமையால் காரணமும் பெறப்பட்டன.

சிறப்புப்பாயிர முற்றிற்று

உ. பொதுப்பாயிரம்.
GENERAL PREFACE.

பாயிரத்தின் பெயர்கள் :—NAMES OF A PREFACE.

1. முகவுரை பதிக மணிந்துரை நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்.

(இ-ள்.) முகவுரை - (பாயிரத்தின் இலக்கணங்களை முன்னே அறியவேண்டி நூலிற்கு முன் சொல்லப்படுதலினாலே) முகவுரை என்றும், பதிகம் - (ஐந்து பொதுவும் பதினொரு சிறப்பும் ஆகிய பலவகைப் பொருள்களையுந் தொகுத்துச் சொல்லு

தன்னுறுப்பு) பதிகம் என்றும், அணிந்துரை-(நூலினதுபெருமை முதலானவைகள் விளங்க அலங்கரித்துச் சொல்லுகையினாலே) அணிந்துரை என்றும், நூன்முகம் - (முகவுரை யென்றது போல) நூன்முகம் என்றும், புறவுரை - (நூல் சொல்லிய பொருளல்லாதவைகளைச் சொல்லுதலினாலே) புறவுரை என்றும், தந்துரை - (நூலிலேசொல்லப்பட்ட பொருளல்லாதவை களை அதற்குத் தந்து சொல்லுகையினாலே) தந்துரை என்றும், புனைந்துரை - (அணிந்துரை யென்றதுபோலப்) புனைந்துரை என்றும், பாயிரம் - பாயிரத்திற்குப் பெயர்களாம், எ - று.

பாயிரம்—வரலாறு. (க)

பாயிரத்தின் வகை :—KINDS OF PREFACE.

௨. பாயிரம் பொதுச்சிறப் பெனவிரு பாற்றே.

(இ - ள்.) பாயிரம் - பாயிரமானது, பொது சிறப்பு என - பொதுப்பாயிரமும் சிறப்புப்பாயிரமும் என, இரு பாற்று - இரண்டு பிரிவை யுடைத்தாகும், எ-று. ஏ-ஈற்றசை. (உ)

பொதுப்பாயிரம் :—GENERAL PREFACE.

௩. நூலே நுவல்வோ னுவலுந் திறனே
கொள்வோன் கோடற் கூற்றா மைந்தும்
எல்லா நூற்கு மிவைபொதுப் பாயிரம்.

(இ - ள்.) நூல் (திறன்) - நூலினது வரலாறும், நுவல்வோன் (திறன்) - ஆசிரியனது வரலாறும், நுவலும் திறன் - பாடஞ் சொல்லுதலினது வரலாறும், கொள்வோன் (திறன்) - மாணாக்கனது வரலாறும், கோடல் கூற்று-பாடங் கேட்கையினது வரலாறும், ஐந்தும் - ஆகிய ஐந்தும், எல்லா நூற்கும் ஆம் - எல்லா நூல்களுக்கும் ஆகும் (ஆதலால்), இவை - இவ்வைந்து வரலாற்றையும் (விளங்கக்காட்டுவது), பொதுப்பாயிரம் - பொதுப் பாயிரமாகும், எ-று. ஏ - ஈற்றசை. (௩)

க. நூலின்வரலாறு.

NATURE OF A CLASSICAL WORK.

நூல் :—A CLASSICAL WORK.

௪. நூலி னியல்பே நுவலி னோரிரு
பாயிரந் தோற்றி மும்மையி னொன்றாய்

நாற்பொருட் பயத்தோ டெழுமதந் தழுவி
ஐயிரு குற்றமு மகற்றியம் மாட்சியோ
டெண்ணான் குத்தியி னோத்துப் படலம்
என்னு முறுப்பினிற் சூத்திரங் காண்டிகை
விருத்தி யாகும் விகற்பநடை பெறுமே.

(இ-ள்.) நூலின் இயல்பு-நூலினது வரலாற்றை, நுவலின் - சொல்லுமிடத்து, ஓர் இரு பாயிரம் தோற்றி - (பொதுவுஞ் சிறப்பு மாகிய) இருவகைப் பாயிரத்தையு முன்னுடைத்தாகி, மும்மையின் ஒன்றாய்-(முதனூல், சார்புநூல், வழிநூல் ஆகிய) மூன்றனுள் * ஒன்றாகி, நாற் பொருள் பயத்தோடு - (அறம், பொருள், இன்பம், வீடு என்கிற) நான்கு † பொருளாகிய பிரயோசனத் துடனே, எழு மதம் தழுவி - (உடன்படன் முதலாகிய) எழுவகை ‡ மதத்தையுந் தழுவி, ஐயிரு குற்றமும் அகற்றி - (குன்றக்கூறல் முலாகிய) பத்துக் § குற்றங்களையும் ஒழித்து, அம் மாட்சியோடு - (சுருங்கச்சொல்லல் முதலாகிய) பத்து ¶ அழகுடனே, எண்ணான்கு உத்தியின் - (நுதலிப்புகுதல் முதலாகிய) முப்பத்திரண்டு || உத்தியைக்கொண்டு, ஓத்து படலம் என்னும் உறுப்பினில் - இயல் அதிகாரம் என்னும் அங்கங்களுடனே, சூத்திரம் - சூத்திரமும், காண்டிகை - காண்டிகையுரையும், விருத்தி - விருத்தியுரையும், ஆகும் - ஆகின்ற, விகற்ப நடைபெறும் - (பதின்மூன்று) வேறுபாட்டு நடையையும் பெற்று வரும், எ-று. ஏ - ஈற்றசை. (4)

நூலின்வகை.—KINDS OF CLASSICAL WORKS.

5. முதல்வழி சார்பென நூன்மூன் றாகும்.

(இ-ள்.) முதல் வழி சார்பு என - முதனூல் வழிநூல் சார்புநூல் என்று, நூல் மூன்று ஆகும் - நூலானது மூன்றுபிரிவையுடைத்தாகும், எ-று. (5)

---

* பொதுப்பாயிரம் சூ- 5. † பொதுப்பாயிரம் சூ-10.
‡ ஷை சூ-11. § ஷை சூ-12.
¶ ஷை சூ-13. || ஷை சூ-14.

முதனூல்: —ORIGINAL CLASSICS.

6. அவற்றுள்,
வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்.

(இ-ள்.) அவற்றுள் - அம்மூவகை நூலுள், வினையின் நீங்கி - இயல்பாகவே (இருவகை) வினைகளினின்றும் நீங்கி, விளங்கிய அறிவின் - பிரகாசிக்கின்ற அறிவினையுடைய, முனைவன் - கடவுள், கண்டது - (உயிர்களுக்கு ஆதிகாலத்திலே) செய்தது, முதல் நூல் ஆகும் - முதனூலாகும், எ-று. (சு)

வழிநூல்:—SUPPLEMENTAL CLASSICS.

7. முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
அழியா மரபினது வழிநூ லாகும்.

(இ-ள்.) முன்னோர் நூலின் முடிபு - கடவுளும் அவனருள் பெற்றோருஞ் செய்த நூல்களினுடைய (பொருள்) முடிபு, ஒருங்கு ஒத்து - முழுவதும் ஒத்து, பின்னோன் - வழிநூல் செய்வோன், வேண்டும் - (முதனூலிற் கூறாதனவற்றைக் கூறுதற்குக் காரணமாக) வேண்டுகிற, விகற்பம் கூறி - வேறுபாடுகளையும் உடன்சொல்லி, அழியா மரபினது - அழியாமல் (உலகத்திலே நிலைபெற்று) விளங்காநின்ற குணத்தை யுடையது, வழிநூல் ஆகும் - வழிநூலாகும், எ-று.

முதனூலை முழுவதும் மொத்துச் சிறிது வேறுபட்டிருப்பது வழிநூலாகும். (எ)

சார்புநூல்:—DERIVATIVE CLASSICS.

8. இருவர் நூற்கு மொருசிறை தொடங்கித்
திரிபுவே றுடையது புடைநூ லாகும்.

(இ-ள்.) இருவர் நூற்கும் - (முதனூல் வழிநூல் என்னும்) இருவகை நூல்களுக்கும், ஒருசிறை தொடங்கி - ஒரு புடை (பொருண்முடிபு) ஒத்து, வேறு திரிபு உடையது - மற்றவைகளெல்லாம் ஒவ்வாமையை உடைத்தாகியது, புடைநூல் ஆகும் - சார்புநூலாகும், எ-று. புடை - பக்கம்.

முதனூல் வழிநூல்களுக்குச் சிறுபான்மை ஒத்துப் பெரும்பாலும் வேறுபட்டிருப்பது சார்புநூலாகும். (அ)

வழிநூலுக்குஞ் சார்புநூலுக்கும் சிறப்புவிதி:—SPECIAL RULE REGARDING SUPPLEMENTAL AND DERIVATIVE CLASSICS.

9. முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொ
ழியும், பொன்னேபோற் போற்றுவ மென்ப
தற்கும்—முன்னோரின், வேறுநூல் செய்துமெ
னு மேற்கோளி லென்பதற்கும், கூறுபழஞ்
சூத்திரத்தின் கோள்.

(இ - ள்.) முன்னோர் மொழி - முதனூலோர் சொன்ன, பொரு ளே அன்றி - பொருளைமாத்திர மல்லாமல், அவர் மொழியும் - அவரது சொல்லையும், பொன்னே போல் போற்றுவம் என்பதற்கும் - பொன்னைப் போலவே காப்பாற்றிக்கொள்வோ மென்பதற்கு (அடையாளமாகவும்), முன்னோரின் - முன்னோர் (நூலையே சொல்லாமல் அந் நூலி) னின்றும், வேறு நூல் செய்தும் எனும் - வழிநூல் சார்புநூலென வேறுநூல்களைச் செய்தோமாயினும், மேற்கோள் - ஆசிரிய வசனமானது, இல் என்பதற்கும் - (இந்த நூலினிடத்து) இல்லையென்று சொல் லுங் குற்றம் ஒழிதற்காகவும், பழஞ் சூத்திரத்தின் கோள் கூறு - (முன்னோர் சொல்லிய பொருளை யல்லாமலும் அவர்) சூத்திரங் களையும், (இரோ ரிடத்திலே) எடுத்துச் சொல்லு, எ-று.

எனினும் என்பது எனும் என விகாரமாயிற்று. மேற்கோள், ஆசிரியவசனம், பழஞ்சூத்திரக்கோள் என்பன ஒருபொருட் பன்மொழியாம். (௯)

நூற்பயன்:—BENEFITS DERIVED FROM CLASSICAL WORKS.

10. அறம்பொரு ளின்பம்வீ டடைதனூற் பயனே.

(இ - ள்.) அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் - தருமம் பொருள் காமம் மோக்ஷம் (ஆகிய இவைகளை) அடைதல், நூல் பயன் - நூலிற்சொல்லப்படும் பிரயோசனமாம், எ-று.

எழுமதம்:—THE SEVEN OBJECTS OF AN AUTHOR.

11. எழுவகை மதமே யுடன்படன் மறுத்தல்
பிறர்தம் மதமேற் கொண்டு களைவே
தாஅ னாட்டித் தனாது நிறுப்பே
இருவர் மாறுகோ ளொருதலை துணிவே

பிறர்நூற் குற்றங் காட்ட லேனைப்
பிறிதொடு படாஅன் றன்மதங் கொளலே.

(இ - ள்.) எழு வகை மதம் - எழுவகை மதமாவன, உடன் படல் - (பிறர் மதத்திற்குத் தான்) உடன்படுதலும், மறுத்தல் - (அதனை) மறுத்தலும், பிறர்தம் மதம் மேற்கொண்டு களைவு - (பிறர் மதத்திற்கு உடன்பட்டுப் பின்பு மறுத்தலும், தான் நாட்டி தனாது நிறுப்பு - தான் ஒருபொருளை எடுத்துக்காட்டி அதனை (வருமிடந்தோறும்) நிறுத்துதலும், இருவர் மாறு கோள் ஒருதலை துணிவு - இருவராலே விரோதமாகக்கொண்ட (இரண்டனுள்) ஒன்றனிடத்துத் துணிதலும், பிறர் நூல் குற்றம் காட்டல் - பிறர் நூல்களிலிருக்கின்ற குற்றத்தைக் காட்டுதலும், பிறிதொடு படான் தன்மதம் கொளல் - பிறர் மதத்திற்கு உடன்படானாகித் தன் மதத்தையே கொள்ளுதலுமாம், எ-று. மதம்=மனத்தின் கொள்கை. ஏ - ஈற்றசை. (கக)

பத்துக்குற்றம் :—THE TEN FAULTS OF STYLE.

12. குன்றக் கூறன் மிகைபடக் கூறல்
கூறியது கூறன் மாறுகொளக் கூறல்
வழூஉச்சொற் புணர்த்தன் மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தன் மற்றொன்று விரித்தல்
சென்றுதேய்ந் திறுத னின்றுபய னின்மை
என்றிவை யீரைங் குற்ற நூற்கே.

(இ - ள்.) குன்ற கூறல் - (குறித்த பொருளைக் காட்டுதற்குரிய சொற்களில்) குறைவுபடச் சொல்லுதலும், மிகைபட கூறல் - (குறித்தபொருளை விளக்குதற்குரிய சொற்களில்) அதிகமாகச் சொல்லுதலும், கூறியது கூறல் - (முன்சொன்ன ஒரு பொருளையே) பின்னுஞ் சொல்லுதலும், மாறு கொள கூறல் - (முன்சொன்ன பொருளோடு பின்சொல்லும் பொருள்) விரோதப்படச் சொல்லுதலும், வழூஉ சொல் புணர்த்தல் - குற்றமுள்ள சொற்களைச் சேர்த்தலும், மயங்க வைத்தல் - (இதற்குப் பொருள் இதுவோ அதுவோ வென) மயங்க வைத்தலும், வெற்றென தொடுத்தல் - (பொருள் சிறவாத சொற்களை) பயனில்லாமற் சேர்த்தலும், மற்று ஒன்று விரித்தல் - (சொல்

லந் தொடங்கியதை விட்டு) மற்றொரு பொருளை இடையிலே விரித்தலும், சென்று தேய்ந்து இறுதல் - சொல்லின் முடியும் பொருளின் முடியும்) முன் (சிறப்பாக) நடந்து அந்நடை பின் சென் தேய்ந்து முடிதலும், நின்று பயன் இன்மை - சொற்க ளிருந்தும் ஒரு பிரயோசனமு மில்லாமற் போதலும், என்ற இவை - என்று சொல்லப்பட்ட இவை, நூற்கு - நூலுக்கு, ஈரைங் குற்றம் - பத்துக் குற்றங்களாகும், எ-று. (கஉ)

பத்துவகை அழகு :—THE TEN BEAUTIES OF STYLE.

13. சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை யுடைமை யாழமுடைத் தாதல்
முறையின் வைப்பே யுலகமலை யாமை
விழுமியது பயத்தல் விளங்குதா ரணத்த
தாகுத னூலிற் கழகெனும் பத்தே.

(இ - ள்.) சுருங்க சொல்லல் - (சொற்கள் வீணாக விரியாமல்) சுருங்கிநிற்கச் சொல்லுதலும், விளங்க வைத்தல் - (அப்படிச் சொல்லினும் யாவருக்கும் சந்தேகத்துக் கிடமாகாமல் பொருளை) விளங்கவைத்தலும், நவின்றோர்க்கு இனிமை - வாசிப்பவருக்கு இன்பத்தைத் தருதலும், நன்மொழி புணர்த்தல் - நல்ல சொற்களைச் சேர்த்தலும், ஓசை உடைமை - சந்த இன்பமுடைத்தாதலும், ஆழம் உடைத்தாதல் - ஆழ்ந்த கருத்தை யுடைத்தாதலும், முறையின் வைப்பு - (அதிகார முதலானவை களைக் காரண காரிய) முறையாக வைத்தலும், உலகம் மலை யாமை - உயர்ந்தோர் ஒழுக்கத்தோடு மாறுகொள்ளாமையும், விழுமியது பயத்தல் - சிறப்பாகிய பொருளைத் தருதலும், விளங்கு உதாரணத்தது ஆகுதல் - விளங்கிய உதாரணங்களை யுடையதாதலும், நூலிற்கு - நூலினுக்கு, அழகு என்னும் - அழகென்று சொல்லப்படும் பத்தாம், எ-று. ஏ - ஈற்றசை. (கந)

முப்பத்திரண்டு உத்தி :—THE THIRTY TWO RULES OF CRITICISM.

14. நுதலிப் புகுத லோத்துமுறை வைப்பே
தொகுத்துச் சுட்டல் வகுத்துக் காட்டல்

முடித்துக் காட்டன் முடிவிடங் கூறல்
தானெடுத்து மொழிதல் பிறன்கோட் கூறல்
சொற்பொருள் விரித்த றொடர்சொற் புணர்த்த
லிரட்டுற மொழித லேதுவின் முடித்தல்
லொப்பின் முடித்தன் மாட்டெறிந் தொழுகல்
லிறந்தது விலக்க லெதிரது போற்றல்
முன்மொழிந்து கோடல் பின்னது நிறுத்தல்
விகற்பத்தின் முடித்தன் முடிந்தது முடித்தல்
லுரைத்து மென்ற லுரைத்தா மென்றல்
லொருதலை துணித லெடுத்துக் காட்டல்
லெடுத்த மொழியி னெய்த வைத்தல்
லின்ன தல்ல திதுவென மொழிதல்
லெஞ்சிய சொல்லி னெய்தக் கூறல்
பிறநூன் முடிந்தது தானுடன் படுதல்
றன்குறி வழக்க மிகவெடுத் துரைத்தல்
சொல்லின் முடிவி னப்பொருண் முடித்தல்
லொன்றின முடித்த றன்னின முடித்தல்
லுய்த்துணர வைப்பென வுத்தியெண் ணான்கே.

(இ - ள்.) நுதலி புகுதல் - (இதனைச் சொல்லுவேனென்று) சொல்லிப் புகுதலும், ஓத்து முறை வைப்பு - இயல்களைக் (காரண காரிய) முறையால் வைத்தலும், தொகுத்துச் சுட்டல் - (பலவும்) திரட்டிக் காட்டுதலும், வகுத்து காட்டல் - (அப்படித் திரட்டிக் காட்டியவைகளை) வேறுவேறு விரித்துக் காட்டுதலும், முடித்து காட்டல் - (தான் மேலோர் முடித்த முடிபை) முடித்துக் காட்டுதலும், முடிவு இடம் கூறல் - (தான் [illegible] இலக்கணத்திற்கு) இலக்கியந் தோன்றுமிடத்தைச் சொல்லுதலும், தான் எடுத்து மொழிதல் - தான் (பழைய சூத்திரத்தை) எடுத்துச் சொல்லுதலும், பிறன் கோள் கூறல் - (முன்னூலிற்) பிறனது கோட்பாட்டைச் சொல்லுதலும், சொற்பொருள் விரித்தல் - சொல்லினது பொருளை (விளங்குதற்கு உருபு முதலானவைகளை) விரித்துச் சொல்லுதலும், தொடர் சொல் புணர்த்தல் - ஒன்றற்கொன்று சம்பந்தமுடைய சொற்களைச் சேர்த்துவைத்தலும, இரட்டுற மொழிதல் - (ஒரு வாக்

கியத்தை) இரண்டு பொருள்படச் சொல்லுதலும், ஏதுவின் முடித்தல் - (முன் காரணம் விளங்கப்பெறாத தொன்றை) பின்காரணத்தால் முடிவுசெய்தலும், ஒப்பின் முடித்தல் - (ஒன்றற்குச் சொல்லப்பட்ட இலக்கணம் வேறொன்றற்கும்) ஒத்து வருமாயின் அதற்கும் அதுவே இலக்கணமாக முடிவு செய்தலும், மாட்டெறிந்து ஒழுகல் - (ஒன்றற்குச் சொல்லப் பட்ட இலக்கணத்தை அதனைப் பெறுதற்குரிய மற்றொன் றற்கு) மாட்டிச்சொல்லி நடத்தலும், இறந்தது விலக்கல் - (முற்காலத்து வழங்கிய இலக்கணங்களுள்ளே பிற்காலத்து) வழங்காமற்போனதை நீக்குதலும், எதிரது போற்றல் - (முற் காலத்து வழங்காமற்) பிற்காலத்து வழங்கிவருகின்ற இலக் கணத்தைத் தழுவிக்கொள்ளுதலும், முன்மொழிந்து கோடல்- முன்னே ஒன்றனைச் சொல்லிப் (பின்பு அதனை வேண்டு மிடந்தோறும்) எடுத்துக் கொள்ளுதலும், பின்னது நிறுத் தல் - (ஒரு பொருளுக்குக் கருவியாக முன்வைத்தற் குரியது அங்கே வைத்தற்கு இடம் பெறாதாயின் அப்பொருளின்) பின்னே அதனை வைத்தலும், விகற்பத்தின் முடித்தல் - (விளங் குதற் பொருட்டு) வெவ்வேறாக முடித்தலும், முடிந்தது முடித் தல் - (வெவ்வேறாக) முடிந்ததைப் புலப்படவேண்டித் தொ குத்து) முடித்தலும், உரைத்தும் என்றல் - (பின்னே சொல் லப்படுவதை முன்னே ஒரு நிமித்தத்தினாலே சொல்ல வேண் டின் இதனைப்) பின்னே சொல்லுவோ மென்பது தோன்ற அங்கே சுருக்கிச் சொல்லுதலும், உரைத்தாம் என்றல் - (முன் னே ஒரு நிமித்தத்தினாலே சொல்லப்பட்டதை பின்னேசொல்ல வேண்டிய விடத்து இதனை) முன்னேதானே சொன்னோ மென்பது தோன்றச் சொல்லாதுவிடுதலும், ஒருதலை துணிதல்- (ஒன்றற்கொன்று மாறுபாடாகக் கொண்ட விரண்டு பக்கத் துள்) ஒரு பக்ஷம் துணிதலும், எடுத்துக் காட்டல் - (தான் சொல் லும் இலக்கணத்திற்குத் தானே இலக்கியத்தை) எடுத்துக் காட்டுதலும், எடுத்த மொழியின் எய்த வைத்தல் - (தான் சொல்லும் இலக்கணத்தைத்) தான் எடுத்துக் காட்டிய இலக்கி யத்தில் பொருந்தவைத்தலும், இன்னது அல்லது இது என மொழிதல் - (சந்தேகிக்க நின்றவிடத்து) இப்படிப்பட்ட தல்லா

தது இதுவெனச் சொல்லுதலும், எஞ்சிய சொல்லின் எய்தக் கூறல் - சொல்லாது விடப்பட்டவற்றிற்கு (சொல்லப்பட்டதனால்) இலக்கணம் பொருந்தச் சொல்லுதலும், பிற நூல் முடிந்தது தான் உடன்படுதல் - பிற நூலிலே முடிந்த முடிபைத் தான் அங்கீகரித்தலும், தன் குறி வழக்கம் மிக எடுத்து உரைத்தல் - தான் (நூதனமாகக்) குறித்து வழங்கும் வழக்கத்தையே பல விடங்களிலும் எடுத்துச் சொல்லுதலும், சொல்லின் முடிவின் அப்பொருள் முடித்தல் - சொல்லின் முடிவிலே அதன் பொருளையு முடித்தலும், ஒன்றின முடித்தல் - (விதியால்) ஒற்றுமைப்பட்டவைகளை ஒருங்குகூட்டி முடித்தலும், தன் இனம் முடித்தல் - (ஒன்றைச் சொல்லுமிடத்தில்) அதற்கு இனமாகிய மற்றொன்றையும் (விரியாதிருக்கவேண்டி அதனுடன்) முடித்தலும், உய்த்து உணர வைப்பு - (சில சூத்திர விதிகளைக் கொண்டு) ஆராய்ந்தறிய ஒருபொருளை வைத்தலும், என உத்தி எண் நான்கு - எனத் தந்திரவுத்திகள் முப்பத்திரண்டாம், எ-று.

ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல் என்னும் இரண்டும் ஒருத்தி. முன் சொன்ன மதங்களுக்கும் இவ்வுத்திகளுக்கும் உதாரணம் இந்நூலுள்ளே பின்வரு மிடந்தோறும் காட்டப்படும். (கசு)

உத்தி :—CRITICAL ACUMEN.

15. நூற்பொருள் வழக்கொடு வாய்ப்பக் காட்டி
ஏற்புழி யறிந்திதற் கிவ்வகை யாமெனத்
தகும்வகை செலுத்துத றந்திர வுத்தி.

(இ-ள்.) நூல் பொருள் - (ஒரு) நூலா லறிவிக்கப்படுகின்ற பொருளை, வழக்கொடு வாய்ப்பக் காட்டி - உலக வழக்கோடுஞ் செய்யுள் வழக்கோடும் பொருந்தக் காண்பித்து, ஏற்புழி அறிந்து - ஏற்குமிடத்தை யறிந்து, இதற்கு இவ்வகை ஆம் என - இவ்விடத்திற்கு இவ்வகை யாகுமென்று நினைத்து, தகும் வகை செலுத்துதல் - தக்க வகையாக நடத்துவது, தந்திர உத்தி - நூலுத்தியாம், ஏ-று.

தந்திரம் — நூல். உத்தியா லமைக்கப்படுபொருளை உத்தி என்றது காரணவிடுகுறிப்பெயர். (கரு)

ஓத்து :—CHAPTER.

16. நேரின மணியை நிரல்பட வைத்தாங்
கோரினப் பொருளை யொருவழி வைப்ப
தோத்தென மொழிப வுயர்மொழிப் புலவர்.

(இ-ள்.) நேர் இனம் மணியை - ஒருசாதியாயுள்ள மணிகளை, நிரல் பட வைத்தது ஆங்கு - வரிசையாகப் பதித்தாற்போல, ஓர் இனம் பொருளை - ஒருசாதியாயுள்ள பொருள்களை, ஒருவழி வைப்பது - ஒருவழிப்படச் சொல்லுவது, ஓத்து என - இயலுறுப்பென்று, உயர் மொழி புலவர் மொழிப - (உயிர்க்குறுதியைத் தருகின்ற) உண்மைச் சொற்களையுடைய வித்துவான்கள் சொல்லுவர், எ-று. நேர்தல்=ஒன்றுபடுதல்.

ஓரினப் பொருள்களையே தொகுப்பது ஓத்து அல்லது இயலெனப்படும். (கசு)

படலம் :—SECTION.

17 ஒருநெறி யின்றி விரவிய பொருளால்
பொதுமொழி தொடரி னதுபடல மாகும்.

(இ - ள்.) ஒரு நெறி இன்றி - ஒருவழிப்படாமல், விரவிய பொருளால் - கலந்த பொருள்களோடு (பொருந்தி), பொது மொழி தொடரின் - (பல பொருள்களைத்தரும்) பொதுச்சொற்கள் தொடர்ந்து வந்தால், அது படலம் ஆகும் - அது படலவுறுப்பாகும், எ-று.

பலவினப் பொருள்களுக்கும் பொதுவாகிய இலக்கணங் கூறுவது படலம் அல்லது அதிகாரமெனப்படும். (கஎ)

சூத்திரம் :—VERSE.

18. சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வ னாடியிற் செறித்தினிது விளக்கித்
திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்.

(இ - ள்.) ஆடியின் - (பெரிய சரீர முதலானவைகளின் சாயையைத் தனக்குள்ளே செவ்வையாக அடக்கி இனிதாகக் காட்டுகின்ற சிறிய) கண்ணாடியைப்போல, சில் வகை எழுத்தின் - சில எழுத்துகளாலாகிய செய்யுளில், பல் வகை பொருளை - பலவகைப்பட்டு அகன்ற பொருள்களை, செவ்வன் செறித்து -

செவ்வையாக அடக்கி, இனிது விளக்கி - இனிதாக வப்பொருள்களைக் காட்டி, திட்பம் - (குற்றமில்லாததிண்மையால்) சொல் வலியும் பொருள் வலியும், நுட்பம் - (ஆழ்ந்த கருத்துடைமையால்) பொருள் நுணுக்கங்களும், சிறந்தன - சிறந்து வருவன, சூத்திரம் - சூத்திரங்களாகும், எ-று. (கஅ)

சூத்திரநிலை :—THE ORDER AND CONNECTION OF VERSES.

19. ஆற்றொழுக் கரிமா நோக்கந் தவளைப்
பாய்த்துப் பருந்தின்வீழ் வன்னசூத் திரநிலை.

(இ - ள்.) ஆறு ஒழுக்கு - (இடையறாது செல்லுகின்ற) ஆற்று வெள்ளத்தினது செல்லுகையையும், அரிமா நோக்கம் - (முன்னும் பின்னும் பார்க்கின்ற) சிங்கத்தினது பார்வையையும், தவளை பாய்த்து - (நடுவே இடம்விட்டுக் குதிக்கின்ற) தவளையினது குதித்தலையும், பருந்தின் வீழ்வு - நெடுந்தூரத்திலிருந்து ஒன்றை வௌவிப்போதற்கு வீழ்கின்ற) பருந்தினது வீழ்ச்சியையும், அன்ன - போல்வன, சூத்திர நிலை - (முன்சொன்ன) சூத்திரங்கள் (ஒன்றோடொன்று தொடர்ந்து நிற்கும்) நிலைகள், எ-று. (க௯)

சூத்திரங்களுக்குக் காரணவகையால் வரும் பெயர்
வேறுபாடு :—DIFFERENT KINDS OF VERSE.

20. பிண்டந் தொகைவகை குறியே செய்கை
கொண்டியல் புறனடைக் கூற்றன சூத்திரம்.

(இ - ள்.) பிண்டம் - (பலதிறப் பொருள்களையும் உள்ளடக்கிக்கொண்டு பொதுப்பட வரும்) பிண்ட சூத்திரமும், தொகை - (அப்பலதிறப் பொருள்களையும் வேறு வேறாகத் தொகுத்துச் சொல்லும்) தொகைச் சூத்திரமும், வகை - (அத்தொகுத்துச் சொல்லப்பட்டவைகளை வேறுவேறாக வகுத்துச் சொல்லும்) வகைச்சூத்திரமும், குறி - (இவை உயிர் இவை மெய் என அறியவரும்) குறிச் சூத்திரமும், செய்கை-(புணர்ச்சிவிதி யறிந்து புணர்த்தலையும் முடிபுவிதி யறிந்து முடித்தலையும் செய்யும்) செய்கைச் சூத்திரமும், கொண்டு இயல் புறன் அடை - (இவைகளை) ஏற்றுக்கொண்டு இவைகளின் புறத்து அடையாக வருகின்ற புறனடைச் சூத்திரமு மாகிய, கூற்றன - (ஆறு) பிரிவையுடையன, சூத்திரம் - சூத்திரங்கள், எ-று.

விரி வகையிலே சேர்தலால் வேறு சொல்லவில்லை. ஆறு விதமாகச் சொன்னாலும் குறிச்சூத்திரம் செய்கைச் சூத்திரம் என்னு மிரண்டினுள்ளே மற்றை நான்கும் அடங்கும். (உ0)

உரையினது பொது இலக்கணம்:—THE GENERAL CHARACTERISTICS OF A COMMENTARY.

21. பாடங் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை யுதாரணம் வினாவிடை விசேடம்
விரிவதி காரந் துணிவு பயனோ
டாசிரிய வசனமென் றீரே ழுரையே.

(இ - ள்.) பாடம் - (மூல) பாடமும், கருத்து - கருத்துரையும், சொல் வகை - சொற்களை வகுத்துரைத்தலும், சொல் பொருள் - பதப்பொருளும், தொகுத்து உரை - பொழிப்புரையும், உதாரணம் - உதாரணமும், வினா - வினாவும், விடை - உத்தரமும், விசேடம் - (வேண்டியவைகளைத்) தந்துரைத்தலும், விரிவு - (வேற்றுமைத்தொகை முதலானவைகளை) விரித்துரைத்தலும், அதிகாரம் - அதிகாரத்தோடு பொருந்த உரைத்தலும், துணிவு - இதற்கு இதுவே பொருளென உரைத்தலும், பயன் - பயனை உரைத்தலும், ஆசிரிய வசனம் - மேற்கோள் காட்டியுரைத்தலும், என்ற ஈரேழ் - என்று சொல்லப்பட்ட பதினான்கு வகையது, உரை - நூலுக்கு (உரைக்கப்படும்) உரையாகும், எ-று. (உக)

காண்டிகையுரை:—BRIEF COMMENTARY.

22. கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும்
அவற்றொடு வினாவிடை யாக்க லானும்
சூத்திரத் துட்பொரு டோற்றுவ காண்டிகை.

(இ-ள்.) கருத்து பதப்பொருள் காட்டு - கருத்துரையும் பதவுரையும் உதாரணமும், மூன்றினும் - ஆகிய மூன்றனையுஞ் சொல்லுதலாலும், அவற்றொடு - அம்மூன்றினோடு, வினா விடை ஆக்கலானும் - வினாவும் உத்தரமும் (ஆகிய இரண்டனையும்) கூட்டிச் சொல்லுதலாலும், சூத்திரத்து உள் பொருள் - சூத்திரத்தி னிருக்கின்ற பொருளை, தோற்றுவ - காட்டுவன, காண்டிகை - காண்டிகையுரைகளாம், எ-று.

மூன்றினும் எனப்பிரித்தது வினு விடை யிரண்டு மின்றியுங் காண்டிகையுரை வழங்கப்படுமென்பதும், ஐந்துங் கூடிவருவது ஐங்காண்டிகையுரை யென்பதுந் தெரிவித்தற்காம். (உஉ)

விருத்தியுரை :—ELABORATE COMMENTARY.

23. சூத்திரத் துட்பொரு ளன்றியு மாண்டைக்
இன்றி யமையா யாவையும் விளங்கத்
தன்னுரை யானும் பிறநூ லானும்
ஐய மகலவைங் காண்டிகை யுறுப்பொடு
மெய்யினை யெஞ்சா திசைப்பது விருத்தி.

(இ-ள்.) சூத்திரத்து உள் பொருள் அன்றியும் - சூத்திரத்தினுள்ள பொருளையல்லாமலும், ஆண்டைக்கு-அவ்விடங்களுக்கு, இன்றி அமையா யாவையும் - இல்லாது நிறையாத எல்லாப் பொருள்களும், விளங்க - விளங்கும்படியாக, தன் உரையானும் - நூலுரைக்கு முரையாலும், பிற நூலானும் - ஆசிரிய வசனங்களாலும், ஐங் காண்டிகை உறுப்பொடு - (முன்சொன்ன) காண்டிகையுரையின் உறுப்பு ஐந்தனுலும், ஐயம் அகல - சந்தேகந் தீர, மெய்யினை - மெய்ம்மைப்பொருளை, எஞ்சாது இசைப்பது - குறையாமல் (விரித்து) உரைப்பது, விருத்தி - விருத்தியுரையாகும், எ-று.

சூத்திரத் துட்பொரு ளன்றியு மென்றதால், முன் உக-ம் சூத்திரத்திற் சொன்ன பதினொன்கு உறுப்புகளையுங் கொண்டு வருவது விருத்தியுரை யென்றதாயிற்று. (உங)

நூலென்னும் பெயர்க்கு இலக்கணம் :—EXPLANATION OF THE TERM நூல்.

24. பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூன்முடியு மாறு.

(இ - ள்.) தன் சொல் பஞ்சி ஆ - தனது சொல் பஞ்சாகவும், பனுவல் இழை ஆக - செய்யுள் இழையாகவும், செம் சொல் புலவன் சேயிழை ஆ - செவ்வையாகிய சொற்களை யறிந்த புலவன் நூற்கின்ற பெண்ணாகவும், எஞ்சாத வாய் கை

ஆக - குறையாத வாய்க்கை யாகவும், மதி கதிர் ஆக - அறிவு கதிராகவும். மை இலா நூல் - குற்றமில்லாத இந்நூலானது, முடியும் ஆறு - முடியும் வழி (இது வாகும்), எ-று.

நூலென்றது உவமவாகுபெயராம். (உச)

25. உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா - மரத்தின்
கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோன் மாந்தர்
மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு.

(இ-ள்.) புரத்தின் - உடம்பினுளிருக்கின்ற, உரத்தின் வளம் பெருக்கி - அறிவின் வளத்தை வளர்வித்து, உள்ளிய - நினைக்கப்பட்ட, தீமை வளம் முருக்கி - அறியாமையின் மிகுதியைக் கெடுத்து, பொல்லா மரத்தின் - பொல்லாத மரத்தினது, கனம் கோட்டம் - கனம் பொருந்திய கோணலை, நூல் தீர்க்கும் - (எற்று) நூலானது நீக்கும், அஃதே போல் - அதுபோலவே, நூல் மாண்பு - கல்விநூலினது மாட்சிமையானது, மாந்தர் - மனிதரது, மனம் கோட்டம் தீர்க்கும் - மனத்தினது கோணலை நீக்கும், எ-று. (உரு)

உ. ஆசிரியனது வரலாறு.
THE CHARACTERISTICS OF A TEACHER.

நல்லாசிரியராவார் :—WHO CAN BE TEACHERS.

26. குலனரு டெய்வங் கொள்கை மேன்மை
கலைபயி றெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோன் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மினையவும்
அமைபவ னூலுரை யாசிரி யன்னே.

(இ-ள்.) குலன் - நல்ல குடிப்பிறப்பும், அருள் - சீவகாருண்ணியமும், தெய்வம் கொள்கை - கடவுள் வழிபாடும், மேன்மை - மேன்பாடும், கலை பயில் தெளிவு - நூல்களிலே பழகிய தெளிவும், கட்டு உரை வன்மை - கேட்போர் எளிதிலறியும்படி தொடுத்துச் சொல்லுகின்ற உரைவலிமையும், நிலம் மலை நிறைகோல் மலர் நிகர் - நிலத்தையும் மலையையும் துலாக்கோலையும் மலரையும் நிகர்கின்ற, மாட்சியும் - குணங்களும், உலகு

இயல் அறிவு - உலகநடையை (அறியும்) அறிவும், இனையவும் உயர் குணம் - இவைபோல்வன பிறவுமாகிய உயர்ந்த குணங்கள், அமைபவன் - நிறைந்திருப்பவன், நூல் உரை ஆசிரியன் - நூல் கற்பிக்கும் ஆசிரியனாவான், எ-று.

நிலமுதலிய நான்கின் மாட்சிகளை முறையே கூறுவர். (உசு)

27. தெரிவரும் பெருமையுந் திண்மையும் பொறையும்
பருவ முயற்சி யளவிற் பயத்தலும்
மருவிய நன்னில மாண்பா கும்மே.

(இ - ள்.) தெரிவு அரு பெருமையும் - பிறரா லறியப்படாத (உருவத்தின்) பெருமையும், திண்மையும் - (பெரிய பாரஞ் செய்து தன்மேலே நெருங்கினவைகளாற் கலங்காத) வலிமையும், பொறையும் - (தன்னையடுத்த மனிதர் தோண்டுத லாதியாகிய குற்றங்களைச் செய்யினும் பொறுக்கின்ற) பொறுமையும், பருவம் முயற்சி அளவில் பயத்தலும் - பருவத்திலே (உழவர் செய்கின்ற) முயற்சியளவிற்குத் தக்கபயனை அவர்க்குத் தருதலும், நல் நிலம் மருவிய - நல்ல நிலத்தினிடத்துப் பொருந்திய, மாண்பு ஆகும் - குணங்களாகும், எ-று.

பிறரா லறியப்படாத கல்வியறிவின் பெருமையும், பெரிய வாதஞ்செய்து தன்மேலே நெருங்கினவராற் கலங்காத வலிமையும், தன்னையடுத்த மாணாக்கர் இகழ்த லாதியாகிய குற்றங்களைச் செய்யினும் பொறுக்கின்ற பொறுமையும், பருவத்திலே மாணாக்கர் செய்கிற முயற்சி யளவிற்குத் தக்கபடி அவர்க்குப் பயனைத் தருதலும் ஆசிரியனிடத்துப் பொருந்திய குணங்களாதலால் நிலம் அவனுக்கு உவமான மாயிற்று. (உஎ)

28. அளக்க லாகா வளவும் பொருளும்
துளக்க லாகா நிலையுந் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையு மலைக்கே.

(இ - ள்.) அளக்கல் ஆகா அளவும் - அளவுசெய்யப்படாத (தன் வடிவத்தின்) அளவும், (அளக்கல் ஆகா) பொருளும் - அளவுசெய்யப்படாத பலவகைப்பொருளும், துளக்கல் ஆகா நிலையும் - (எப்படிப்பட்ட வலிமை யுடையவராலும்) அசைக்கப்படாத உருவத்தினிலையும், தோற்றமும் - (நெடுந் தூரத்தி

ளுள்ளாராலும் காணப்படும் உயர்ச்சியும், வறப்பினும் வளம் தரும் வண்மையும் - (மழை பெய்யாமல்) வறந்தகாலத்திலும் (தன்னைச் சேர்ந்த உயிர்களுக்கு நீர்வளத்தைக்) கொடுக்கிற கொடையும், மலைக்கு - மலைக்கு (உள்ள குணங்களாகும்,)எ-று.

அளவுசெய்யப்படாத தன் கல்வியினளவும், அளவு செய்யப் படாத பலவகை நூற்பொருளும், எப்படிப்பட்ட புலமையை யுடையோராலும் அசைக்கப்படாத கல்வி யறிவி னிலையும், நெடுந்தூரத்தி லுள்ளோராலும் அறியப்படும் உயர்ச்சியும், பொருள்வருவழி வறந்தகாலத்திலுந் தன்னைச் சேர்ந்த மாணாக்கருக்குக் கல்விப் பொருளைக் கொடுக்கின்ற கொடையும், ஆசிரியனுக்குள்ள குணங்களாதலால், மலை அவனுக்கு உவமானமாயிற்று. மலைக்கு(மாண்பாகும்) என வினை வருவித்து முடிக்க.

29. ஐயந் தீரப் பொருளை யுணர்த்தலும்
மெய்ந்நடு நிலையு மிகுநிறை கோற்கே.

(இ - ள்.) ஐயம் தீர பொருளை உணர்த்தலும் - சந்தேகந் தீர (நிறுக்கப்பட்ட) பண்டத்தி னளவைக் காட்டலும், மெய் நடு நிலையும் - உண்மைபெறத் (தான் இரண்டு தட்டுகளுக்கும்) நடுவே நிற்கையும், நிறை கோற்கு - தராசுக் கோலின்கண்; மிகும் - (குணங்களாக) மிகும், எ-று.

சந்தேகந்தீர வினவப்பட்ட சொற்பொருளி னியல்பைக் காட்டலும், புலவ ரிருவர் மாறுபட்டாராயின் உண்மைபெறத் தான் அவ்விருவருக்கும் நடுவாக நிற்கையும், ஆசிரியனிடத்துக் குணங்களாக மிகும் ஆதலால், நிறைகோல் அவனுக்கு உவமானமாயிற்று. (உகூ)

30. மங்கல மாகி யின்றி யமையா
தியாவரு மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்
பொழுதின் முகமலர் வுடையது பூவே.

(இ-ள்.) மங்கலம் ஆகி - சுபச்செய்கைக் குரியதாகி, இன்றி அமையாது - (யாதொரு செயலும் அலங்கரிக்குந் தான்) இல்லாது முடியாததாக, யாவரும் மகிழ்ந்து மேல் கொள - (கண்டோர்) யாவருங் களித்து மேலாகத் தன்னைச் சூடிக்கொள்ள; மெல்கி - மெல்லிய குணமுடையதாகி, பொழுதின் முக மலர்வு

உடையது - மலர்தற்குரிய காலத்திலே முகம் விரிதலை யுடையது, பூ - பூவாகும், எ-று.

சுபகருமத்துக் குரியனுகி யாதொரு செயலுஞ் சிறப்பிக்குந் தானில்லாது முடியாதாகக், கண்டோர் யாவருங் களித்து மேலாகத் தன்னை வைத்துக்கொள்ள மெல்லியகுண முடையவனுகிப், பாடஞ் சொல்லுதற்குரிய காலத்திலே முகமலர்தலை யுடையவன் ஆசிரியனுதலால், பூ அவனுக்கு உவமான மாயிற்று.

ஆசிரியராகாதார் :—WHO CANNOT BE TEACHERS.

31. மொழிகுண மின்மையு மிழிகுண வியல்பும்
அழுக்கா றவாவஞ்ச மச்ச மாடலும்
கழற்குட மடற்பனை பருத்திக் குண்டிகை
முடத்தெங் கொப்பென முரண்டுகொள் சிந்தை [யும்
உடையோ ரிலரா சிரியரா குதலே.

(இ - ள்.) மொழி குணம் இன்மையும் - பாடஞ்சொல்லுங் குணமில்லாமையும், இழி குண இயல்பும் - இழிகுணமாகிய சுபாவத்தையும், அழுக்காறு - (பிறருக்கு வருங் கல்வியைக் குறித்துக் கொள்ளும்) பொறாமையையும், அவா - பொருளின் மே லதிகமாக வைக்கும்) ஆசையையும், வஞ்சம் - (மெய்ப்பொருளை மறைத்துப் பொய்ப்பொருளைக் காட்டி) வஞ்சித்தலையும், அச்சம் ஆடலும் - (கேட்போர்க்கு) அச்சமுண்டாகப் பேசுதலையும், கழல் குடம் மடற்பனை பருத்தி குண்டிகை முடத்தெங்கு - கழற்குடமும் மடற்பனையும் பருத்திக் குண்டிகையும் முடத்தெங்கும் ஆகிய நான்கனையும், ஒப்பு என - ஒப்பு என்று சொல்ல, முரண் கொள் சிந்தையும்-மாறுபாடுகொண்ட கருத்தையும், உடையோர் - (தம்மிடத்தில்) உடையவர், ஆசிரியர் ஆகுதல் - கற்பிக்கும் ஆசிரியராகுதல், இலர் - இலராவர், எ-று. ஏ - அசை. கழற்குடமுதலிய நான்கினையும் முறையே விளக்குவர். (௩௧)

32. பெய்த முறையன்றிப் பிறழ வுடன்றரும்
செய்தி கழற்பெய் குடத்தின் சீரே.

(இ - ள்.) பெய்த முறை அன்றி - தன்னுள்ளே போட்ட முறையினு லல்லாமல், பிறழ - (முன் போடப்பட்டவையும் பின் போடப்பட்டவையும் அம்முறை) பிறழ்ந்துபோக, உடன்

தரும் - விரைவிலே (தன்னுள்ளே கொண்ட கழற்காய்களைக்) கொடுக்கின்ற, செய்தி - செய்கையானது, கழல் பெய் குடத்தின் சீர் - கழற்காய்போட்ட குடத்தினது தன்மையாம், என்று.

தாம் முன்கற்ற வரிசைப்படி தன் மாணுக்கர்களுக்குக் கற்பிக்கப் புகாமல் தாம் முன் கற்றவைகளைப் பின்னும் பின் கற்றவைகளை முன்னுமாக முறைபிறழ விரைந்து கற்பித்தல் ஆசிரியராகாதவர்து மாறுபட்ட நினைப்பின் குற்றமாதலால், கழற்குடம் அவருக்கு உவமானமாயிற்று. (௩உ)

33. தானே தரக்கொளி னன்றித் தன்பால்
மேவிக் கொளக்கொடா விடத்தது மடற்பனை.

(இ - ள்.) தானே தர - தானே (தன்னிடத்துள்ள பழங்களைத்) தர, கொளின் அன்றி - கொண்டாற் கொள்ளலாமேயல்லாமல், தன்பால் மேவி கொள - (ஒருவர்) தன்னிடத்து நெருங்கிவந்து பறித்துக்கொள்ள, கொடாத இடத்தது - (அப்பழங்களைக்) கொடாத இடத்தையுடையது, மடல் பனை - (தன் வடிவமுழுவதும்) மடல் விரிந்த பனை, எ-று.

தாமே தம்மிடத்திலுள்ள நூற் பொருள்களைச் சொல்ல அறிந்துகொண்டாற் கொள்ளலாமேயல்லாமல் ஒருவர் தம்மிடத்து நெருங்கிவந்து வினவி யறிந்துகொள்ள இடங்கொடாதவர் ஆசிரியராகாதவராதலால், மடற்பனை அவருக்கு உவமானமாயிற்று. (௩௩)

34. அரிதிற் பெயக்கொண் டப்பொரு டான்பிறர்க்
கெளிதீ வில்லது பருத்திக் குண்டிகை.

(இ - ள்.) அரிதின் பெய கொண்டு - (பஞ்சைக்கொண்டபோதும்) வருத்தத்தோடு (சிறிது சிறிதாக) அடைப்பத் தன்னுள்ளே கொண்டு, அப்பொருள் தான் பிறர்க்கு எளிது ஈவு இல்லது - (கொடுக்கும்போது) அப்பஞ்சைத் தான் பிறர்க்கு எளிதிற்கொடாத குற்றமுடையது, பருத்தி குண்டிகை - பஞ்சுபோட்ட குடுக்கை யாகும், எ-று.

கல்வியைக் கற்றபோதும் வருத்தத்தோடு சிறிது சிறிதாகக் கற்பிக்கத் தம்முள்ளே கொண்டு, பாடஞ் சொல்லும் போதும் அக்கல்வியைத் தாம் பிறர்க்கு எளிதிற் கொடாத குற்றமுடைய

வர் ஆசிரியராகாதவ ராதலால், பருத்திக் குண்டிகை அவர்க்கு உவமான மாயிற்று. (கச)

35. பல்வகை யுதவி வழிபடு பண்பின்
அல்லோர்க் களிக்கு மதுமுடத் தெங்கே.

(இ - ள்.) பல் வகை உதவி - (நீர் விடுகை முதலாகிய) பல வகை உபகாரங்களையுஞ் செய்து, வழிபடு பண்பின் அல்லோர்க்கு - தனக்கு வழிபாடு செய்யுங் குணத்தினர் அல்லாத பிறருக்கு, அளிக்குமது - தன்னிடத்துள்ள காய்களைத் தருங் குற்ற முடையது, முடத் தெங்கு - வேலிக்கப்புறம் வளைந்த தென்னமரமாம், எ-று.

பொருள் கொடுத்தல் முதலாகிய பலவகை உபகாரங்களையுஞ் செய்து தமக்கு வழிபாடு செய்யுங் குணமுடைய ரல்லாத மாணுக்கருக்குத் தம்மிடத்துள்ள கல்விப் பொருளைத் தருங் குற்றமுடையவ ராசிரியராகாதவ ராதலால், முடத் தெங்கு அவருக்கு உவமான மாயிற்று. (கரு)

௩. பாடஞ் சொல்லும்வகை.
THE METHOD OF TEACHING.

36. ஈத லியல்பே யியம்புங் காலைக்
காலமு மிடனும் வாலிதி னோக்கிச்
சிறந்துழி யிருந்துதன் றெய்வம் வாழ்த்தி
உரைக்கப் படும்பொரு ளுள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை யறிந்தவ னுளங்கொ
ளக், கோட்டமின் மனத்தினூல் கொடுத்த லெ
ன்ப.

(இ - ள்.) ஈதல் இயல்பு - பாடஞ் சொல்லுதலின்து வரலாற்றை, இயம்புங் காலை - சொல்லும்போது, காலமும் இடனும் - (உரிய) காலத்தையும் இடத்தையும், வாலிதின் நோக்கி - நன்றாகப்பார்த்து, சிறந்த உழி இருந்து - சிறந்த இடத்திருந்து, தன் தெய்வம் வாழ்த்தி - தான் வழிபடு கடவுளைத் துதித்து, உரைக்கப்படும் பொருள் - பாடஞ் சொல்லப்படும்

பொருளை, உள்ளத்து அமைத்து-தன் கருத்திற் பொருத்தமாக நிறைத்து, விரையான் வெகுளான் - விரையானுகியும் கோபஞ் செய்யானுகியும், விரும்பி - இச்சித்து, முகம் மலர்ந்து - முக மலர்ச்சியை அடைந்து, கொள்வோன் - கேட்பவனது, கொள் வகை அறிந்து - கேட்கு மறிவின் வகையை உணர்ந்து, அவன் உளம்கொள - அவனது மனம் ஏற்றுக்கொள்ள, கோட்டம் இல் மனத்தின் - மாறுபாடில்லாத மனத்துடனே, நூல்-நூலை, கொடுத்தல் - கொடுத்தலாகும், என்ப - என்று சொல்லுவர் அறிவுடையோர், எ-று. (௩௬)

---

௪. மாணுக்கனது வரலாறு.
THE CHARACTERISTICS OF A STUDENT.

---

37. தன்மக னாசான் மகனே மன்மகன்
பொருணனி கொடுப்போன் வழிபடு வோனே
உரைகோ ளாளற் குரைப்பது நூலே.

(இ-ள்.) தன் மகன் - தன் புதல்வனுக்கும், ஆசான் மகன் - தன்னாசிரியன் புதல்வனுக்கும், மன் மகன் - அரசன் புதல்வ னுக்கும், பொருள் நனி கொடுப்போன் - பொருளை மிகுதியா கக் கொடுப்போனுக்கும், வழிபடுவோன் - வழிபாடு செய்வோ னுக்கும், உரை கோள் ஆளற்கு - (தன்னாற் சொல்லப்பட்ட) உரையை விரைவிலே கற்கும் அறிவுடையோனுக்கும், உரைப் பது - சொல்லப்படுவது, நூல் - நூலாகும், எ-று. (௩௭)

38. அன்ன மாவே மண்ணொடு கிளியே
இல்லிக் குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

(இ-ள்.) அன்னம் - அன்னத்தையும், ஆ - பசுவையும், (அன் னர்) - போல்வார், தலை (மாணுக்கர்) - முதன் மாணுக்கர்; மண் ணொடு - மண்ணையும், கிளி - கிளியையும், (அன்னர்) - போல் வார், இடை (மாணுக்கர்) - நடு மாணுக்கர்; இல்லி குடம் - சில் லிக்குடத்தையும், ஆடு - ஆட்டையும், எருமை - எருமையையும், நெய்யரி - பன்னாடையையும், அன்னர் - போல்வார், கடை மா ணுக்கர் - கடைமாணுக்கர், எ - று.

அன்னம் பாலையும் நீரையும் வேறுபிரித்துப் பாலைமாத்திரங் குடித்தல் போல, முதன் மாணாக்கர் குணத்தையுங் குற்றத்தையும் வேறுபிரித்துக் குணத்தைமாத்திரங் கொள்ளுதலாலும்; பசு மிகுந்தபுல்லையுடைய இடத்தைக்கண்டால் அப்புல்லை வயிறுநிறைய மேய்ந்து பின்போரிடத்திற் போயிருந்து சிறிது சிறிதாக வாயில் வருவித்துக்கொண்டு மென்று தின்றல் போல, முதல் மாணாக்கர் மிகுந்த கல்வியுடைய ஆசிரியனைக் கண்டால் அக்கல்வியைத் தன் னுள்ளநிறையக் கேட்டுக் கொண்டு பின்போரிடத்துப் போயிருந்து சிறிது சிறிதாக நினைவிற் கொண்டுவந்து சிந்தித்தலாலும்; அவருக்கு அவ்விரண்டும் உபமானமாத லறிக.

மண் உழவர் வருந்திப் பயிர்செய்யு முயற்சியளவு விளைவைத் தன்கட் காட்டல்போல, இடைமாணாக்கர் ஆசிரியன் வருந்திக் கற்பிக்கு முயற்சியளவு கல்வியறிவைத் தன்கட் காட்டுதலாலும்; இளி தனக்குக்கற்பித்த சொல்லையல்லாமல் வேறொன்றையுஞ் சொல்ல மாட்டாமை போல, இடைமாணாக்கர் தமக்குக் கற்பித்த நூற்பொருளை யல்லாமல் வேறொரு நூற்பொருளையுஞ் சொல்லமாட்டாமையாலும்; அவருக்கு அவ்விரண்டும் உபமானமாத லறிக.

பொள்ளற்குடம் நீரைவார்க்குந்தோறும ஒழுகவிடுதல்போல, கடைமாணாக்கர் நூற்பொருளைக் கற்பிக்குந்தோறும் மறந்துவிடுதலாலும்; ஆடு ஒருசெடியிலே தழை நிறைந்திருந்தாலும் வயிறுநிறைய மேயாமற் செடிதோறும் போய் மேய்தல்போல, கடைமாணாக்கர் ஓராசிரியனிடத்து மிகுந்த கல்வியிருந்தாலும் புலமை நிறையக்கற்றுக்கொள்ளாமற் பலரிடத்திலும் போய்ப் பாடங்கேட்கையாலும்; எருமை குளத்துநீரைக் கலக்கிக் குடித்தல்போல, கடைமாணாக்கர் ஆசிரியனை வருத்திப் பாடங் கேட்கையாலும்; பன்னாடை தேன் முதலியவற்றைக் கீழேவிட்டு அவற்றிலுள்ள குற்றங்களைப் பற்றிக்கொள்ளுதல் போல, கடைமாணாக்கர் நல்லபொருளை மறந்துவிட்டுத் தீயபொருளைச் சிந்தித்துப் பற்றிக்கொள்ளுதலாலும்; அவருக்கு இந்நான்கும் உபமானமாத லறிக. (௧௮)

மாணாக்கராகாதார் :—WHO CANNOT BE STUDENTS.

39. களிமடி மானி காமி கள்வன்
பிணிய னேழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் றொன்னூற் கஞ்சித்
தடுமா றுளத்தன் றறுகணன் பாவி
படிறனின் னோர்க்குப் பகரார் நூலே.

(இ-ள்.) களி - கட்குடியனும், மடி - சோம்பேறியும், மானி - அபிமானமுடையவனும், காமி - காமமுடையவனும், கள்வன் - திருடனும், பிணியன் - நோயாளியும், ஏழை - அறிவில்லாதவனும், பிணக்கன் - பிணக்குடையவனும், சினத்தன் - கோபமுடையவனும், துயில்வோன் - (மிகத்) தூங்குவோனும், மந்தன் - புத்தி நுட்பமில்லாதவனும், தொல் நூற்கு அஞ்சி தடுமாறு உளத்தன் - பழைய நூற்களைக்கண்டு அஞ்சித் தடுமாறும் உள்ளத்தை யுடையவனும், தறுகணன் - அஞ்சத்தக்கவைகளில் அஞ்சாதவனும், பாவி - பாவஞ்செய்வோனும், படிறன் - பொய் பேசுகிறவனும், இன்னோர்க்கு - (ஆகிய) இப்படிப்பட்ட குற்றங்களை யுடையவருக்கு, நூல் - நூலை, பகரார் - சொல்லார், எ-று.

தரித்திரனுக்கும் மனம் நிலைப்படுதலில்லையாதலால் ஏழை என்பது இவனெனக் கொள்ளலும் ஆம். (௩௯)

ரு. பாடங்கேட்டலின் வரலாறு.
THE WAY TO LEARN.

---

40. கோடன் மரபே கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடன் முனியான்
குணத்தொடு பழகி யவன்குறிப் பிற்சார்ந்
திருவென விருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவ னன்ன வார்வத்த னாகிச்
சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்
செவிவா யாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போவெனப் போத லென்மனார் புலவர்.

(இ-ள்.) கோடல் மரபு - பாடங்கேட்கையினது வரலாற்றை, கூறும் காலை - சொல்லும்பொழுது, பொழுதொடு சென்று -

தகுங்காலத்திற் போய், வழிபடல் முனியான் - வழிபாடு செய் தலில் வெறுப்பில்லாதவனாகி, குணத்தொடு பழகி - (ஆசிரியன்) குணத்தோடு (பொருந்தப்) பயின்று, அவன் குறிப்பின்சார்ந்து - அவன் குறிப்பின் (வழியிலே) சேர்ந்து, இரு என இருந்து - இரு வென்று சொன்னபின் இருந்து, சொல் என சொல்லி - படி யென்று சொன்னபின் படித்து, பருகுவன் அன்ன ஆர்வத் தன் ஆகி - (பசித்து) உண்பவன் (விருப்பத்தைப்) போன்ற (மிக்க) விருப்பத்தை யுடையவனாகி, சித்திரப் பாவையில் - சித்திரப் பாவையைப்போல, அத் தகவு அடங்கி - அவ் (அசை வறு) குணத்தினோ டடங்கி, செவி வாய் ஆக - காதானது வா யாகவும், நெஞ்சு களன் ஆக - மனமானது கொள்ளுமிடமாக வும், கேட்டவை கேட்டு - (முன்) கேட்கப்பட்டவற்றைத் (திரும் பிக்) கேட்டு, அவை - அப்பொருள்களை, விடாது உளத்து அமைத்து - மறந்துவிடாமல் உள்ளத்தின்கண் நிறைத்துக் கொண்டு, போ என - போவென்று சொல்ல, போதல் - போகுதலாகும், என்மனார் புலவர் - என்று அறிவுடையோர் சொல்லுவர், எ-று.

கேட்டவை கேட்டவை என்றவடுக்குத் தொறுப்பொருளது.

41. நூல்பயி லியல்பே நுவலின்வழக் கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை யமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்த லென்றிவை
கடனாக் கொளினே மடநனி யிகக்கும்.

(இ-ள்.) நூல் பயில் இயல்பு - நூலைக்கற்றலி னியல்பை நுவலின் - சொல்லினால், வழக்கு அறிதல் - (உலகவழக்குஞ் செய்யுள்வழக்கு மாகிய இருவகை) நடையையும் ஆராய்ந் தறி தலும், பாடம் போற்றல் - (கேட்ட) பாடத்தைப் (பலகால்) சிந்தித்தலும், கேட்டவைநினைத்தல் - (தான்) கேட்ட பொருள் களை எண்ணுதலும், ஆசான் சார்ந்து - ஆசிரியனை அடுத்து, அவை அமைவர கேட்டல் - அவற்றைக் குறைவுதீரக் கேட் டலும், அம் மாண்பு உடையோர் தம்மொடு பயிறல் - அக்கல்வி மாட்சிமை உடையவரோடு பழகுதலும், வினாதல் - (தான்

ஐயுற்றபொருளை) வினவுதலும், வினயவை விடுத்தல் - (அவர் வினவியவைகளுக்கு உத்தரங் கொடுத்தலும், என்ற இவை - என்று சொல்லப்பட்ட இச்செயல்களை, கடன் ஆக கொளின் - முறையாக (மாணக்கன்) கொண்டால், மடம் நனி இகக்கும் - அறியாமையானது மிகவும் (அவனைவிட்டு) நீங்கும், எ-று. (சக)

42. ஒருகுறி கேட்போ னிருகாற் கேட்பின்
பெருக நூலிற் பிழைபா டிலனே.

(இ-ள்.) ஒரு குறி கேட்போன் - ஒருதரம் ஒருநூலைப்பாடங் கேட்பவன், இருகால் கேட்பின் - இரண்டுதரங் கேட்பானாயின், பிழைபாடு - (அந்நூலிற்) பிழைபடுதல், பெருக இலன் - மிகுதியும் இல்லனவன், எ-று. பிழை - ஐயம், திரிபு. (சஉ)

43. முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும்.

(இ-ள்.) முக்கால் கேட்பின் - மூன்றுதரம் கேட்டானாயின், முறை அறிந்து உரைக்கும் - (ஆசிரியன் கற்பித்த) முறையை யுணர்ந்து சொல்லுவான், எ-று. (சங)

44. ஆசா னுரைத்த தமைவரக் கொளினும்
காற்கூ றல்லது பற்றல னாகும்.

(இ-ள்.) ஆசான் உரைத்தது - ஆசிரியன் கற்பித்த பொருளை, அமைவர கொளினும் - (தன்னறிவினிடத்து) நிறையக் கற்றானாயினும், கால் கூறு அல்லது - (புலமைத் திறத்திற்) காற்பங்கல்லது, பற்றலன் ஆகும் - (அதற்கதிகமாகப்) பெறுதலனுவான். எ-று. (சச)

45 அவ்வினை யாளரொடு பயில்வகை யொருகால்
செவ்விதி னுரைப்ப வவ்விரு காலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும்.

(இ-ள்.) அவ்வினை ஆளரோடு - அக்கல்வித் தொழிலையாளுத லுடையாரோடு, பயில் வகை - பழகும் வகையால், ஒரு கால் - காற் கூறும், செவ்விதின் உரைப்ப - (தன் மாணக்கருக்குஞ் சபையாருக்கும்) உணர விரித்துரைத்தலால், அவ் இருகாலும் - அரைக்கூறுமாக, மை அறு புலமை - குற்றமற்ற புலமைத் திற மானது, மாண்பு உடைத்து ஆகும் - நிரம்புதலுடைத்தாகும், எ-று. (சரு)

46. அழலி னீங்கா னணுகா னஞ்சி
நிழலி னீங்கா னிறைந்த நெஞ்சமோ
டெத்திறத் தாசா னுவக்கு மத்திறம்
அறத்திற் றிரியாப் படர்ச்சிவழி பாடே.

(இ-ள்.) அழலின் - (குளிர்காய்வோன் விட்டு நீங்காமலும் நெருங்காமலும் இருக்கிற) நெருப்பைப்போல (ஆசிரியனை நினைத்து), அஞ்சி - அச்சமுற்று, நீங்கான் - (விட்டு) நீங்கானுகியும், அணுகான் - நெருங்கானுகியுமிருந்து, நிழலின் நீங்கான் - (விடாது பின்செல்லு)நிழலைப்போலத் தொடர்ந்து தொடர்ந்து, நிறைந்த நெஞ்சமோடு - அன்பு நிறைந்த கருத்துடனே, எத்திறத்து ஆசான் உவக்கும் - எத்தன்மையினுலே ஆசிரியனுனவன் மகிழ்வானே, அத்திறம் - அத்தன்மையோடு (பொருந்தி), அறத்தின் திரியா படர்ச்சி அறத்தினின்றும் வேறுபடாத நடத்தலானது, வழிபாடு - (மாணுக்கன் செய்யும்) வழிபாடாகும், எ-று.

அழலினென்பதற்கு ஆசிரியன் கோபித்தா லெனப் பொருள் கூறினும் பொருந்தும். (சகசு)

பொதுப்பாயிரம் முற்றிற்று.

௩. சிறப்புப்பாயிரத் திலக்கணம்.

THE CHARACTERISTICS OF A SPECIAL PREFACE.

சிறப்புப்பாயிரத்தின் பொதுவிலக்கணம் :—DEFINITION OF A SPECIAL PREFACE.

47. ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனே டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே.

(இ-ள்.) ஆக்கியோன் பெயர் - நூல் செய்தோன் பெயரும், வழி - (நூல்வந்த) வழியும், எல்லை - (நூல்வழங்கு) நிலமும், நூல் பெயர் - நூலினது பெயரும், யாப்பு - (இந்நூல் முடிந்த பின்பு இந்நூல் கேட்கத்தகு மென்னும்) இயைபும், நுதலிய பொருள் - நூலிற் சொல்லப்பட்ட பொருளும், கேட்போர் -

(இந்நூல் கேட்டற்குரிய வதிகாரிக ளிவரென்பதும், பயன் - (நூல் கேட்கையாற் பெறப்படும்) பயனும், ஆ என் பொருளும் - அவ்வெட்டுப்பொருளையும், வாய்ப்ப காட்டல் - விளங்க வுணர்த்துதல், பாயிரத்து இயல்பு - சிறப்புப்பாயிரத்தினது இலக்கணமாம், எ-று.

ஆ யென்பொருள் - சுட்டுநீளலால் யகரம்தோன்றியது. ()

48. காலங் களனே காரண மென்றிம்
மூவகை யேற்றி மொழிநரு முளரே.

(இ-ள்.) காலம் - (நூல் செய்த) காலமும், களன் - (நூல் அரங்கேற்றிய) சபையும், காரணம் - (நூல் செய்ததற்குக்) காரணமும், என்று இம் மூவகை - என்று இம்மூன்றனையும், ஏற்றி - (அவ்வெட்டனோடு) கூட்டி, மொழிநரும் - (பதினொன்றாகச்) சொல்லுவாரும், உளர் - (சிலர்) உளர், எ-று.

காலமுதலிய மூன்றும் நூல்செய்தகாலத்தேயன்றி அது வழங்குங்காலத்தின்மையாற் றனியே கூறினர். (௪௮)

நூற்பெயருக்குச் சிறப்புவிதி :—HOW A BOOK IS TO BE NAMED.

49. முதனூல் கருத்த னளவு மிகுதி
பொருள்செய் வித்தோன் றன்மைமுத னிமித்தினும்
இடுகுறி யானுநூற் கெய்தும் பெயரே.

(இ-ள்.) முதனூல் - முதனூலும், கருத்தன் - செய்தவனும், அளவு - அளவும், மிகுதி - மிகுதியும், பொருள் - பொருளும், செய்வித்தோன் - செய்வித்தவனும், தன்மை - குணமும், முதல் நிமித்தினும் - முதலாகிய காரணங்களாலும், இடுகுறியானும் - இடுகுறியாலும், நூற்கு பெயர் எய்தும் - நூலுக்குப் பெயரானது வரும், எ-று. நிமித்து - நிமித்தம்.

முதனூலாற் பெயர் பெற்றவை பாரதம் முதலியன; கருத்தனாற் பெயர்பெற்றவை திருவள்ளுவர் முதலியன; அளவினாற் பெயர்பெற்றவை நாலடிநானூறு முதலியன; மிகுதியாற் பெயர்பெற்றவை களவியல் முதலியன; பொருளாற் பெயர் பெற்றவை அகப்பொருள் முதலியன; செய்வித்தோனாற் பெயர் பெற்றவை சாதவாகனம் முதலியன; தன்மையாற் பெயர்பெற்

றவை நன்னூல் முதலியன. இடுகுறியாற் பெயர் பெற்றவை நிகண்டு முதலியன. (௪௯)

நூல்யாப்பினுக்குச் சிறப்புவிதி :—HOW A BOOK IS TO BE COMPOSED.

50. தொகுத்தல் விரித்த றொகைவிரி மொழிபெயர்
 த்தெனத்தகு நூல்யாப் பீரிரண் டென்ப. [ப்

(இ - ள்.) தொகுத்தல் - (விரிந்து கிடக்கின்றவைகளைத்) தொகுத்துச் சொல்லுதலும், விரித்தல் - (சுருங்கிக்கிடக்கின்றவைகளை விரித்துச் சொல்லுதலும், தொகைவிரி - தொகுத்தும் விரித்துஞ் சொல்லுதலும், மொழி பெயர்ப்பு - (ஒரு பாஷையி லிருக்கின்றபொருளை) மற்றொன்றுள்ளே திருப்பிச் சொல்லுதலும், எனத்தகும் நூல் யாப்பு - என்று சொல்லத் தகும் நூல்யாப்பானது, ஈரிரண்டு என்ப - நான்கு பிரிவை யுடைத்தாகும் என்று சொல்வர் புலவர், எ-று.

தொகுத்தல் விரித்தலுக்கு உதாரணம் வடமொழியில் இருபத்தினாலாயிரக் கிரந்தமான வால்மீகத்தைக் கம்பர் தென்மொழியிற் பன்னீராயிர மாக்கியதுபோல்வதும், நாரதவாக்யத்தை வால்மீகர் இருபத்தினாலாயிர மாக்கியது போல்வதுமாம்.

தொகைவிரி என்பதற்கு உதாரணம் தொல்காப்பியத்துள் தனியியலாகக் குற்றியலுகரத்திற்குக் கூறியிருக்க, இந்நூலார் உயிரீற்றுப்புணரியலுள் அடக்கியதுபோல்வதும், தொல்காப்பியத்துள் சுருக்கிக்கூறிய காலவிடைநிலைகளை இந்நூலார் விரித்துக் கூறியதுபோல்வதுமாம். (௫0)

சிறப்புப்பாயிரஞ்செய்தற்குரியார் :—WHO CAN WRITE A SPECIAL PREFACE.

51. தன்னா சிரியன் றன்னொடு கற்றோன்
 றன்மா ணாக்கன் றகுமுரை காரனென்
 றின்னோர் பாயிர மியம்புதல் கடனே.

(இ - ள்.) தன் ஆசிரியன் - தன்னுடைய ஆசிரியனும், தன்னொடு கற்றோன் - தன்னோடு பாடங் கேட்டவனும், தன் மாணாக்கன் - தன்னுடைய மாணாக்கனும், தகும் உரைகாரன் - தன் னூலுக்குத் தகும் உரையைச் செய்தவனும், என்ற இன்னோர் -

என்று சொல்லப்பட்ட இந்நால்வருள் ஒருவர், பாயிரம் - சிறப்புப்பாயிரத்தை, இயம்புதல் கடன் - சொல்லுதல் முறைமையாகும், எ-று. (௫௧)

சிறப்புப்பாயிரம் பிறர் கூறவேண்டிய காரணம் :—WHY A SPECIAL PREFACE SHOULD BE WRITTEN BY OTHERS.

52. தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும்
தான்றற் புகழ்தல் தகுதி யன்றே.

(இ - ள்.) தோன்றா - தோன்றாத நுட்பங்களை யெல்லாம், தோற்றி-காட்டி, துறை பல - பலதுறைப்பட்டு (விரித்தநூலை), முடிப்பினும் - (செய்து) முடித்தாலும், தான் தன் புகழ்தல் - தானே தன்னைப் புகழ்ந்துகொள்ளுதல், தகுதி அன்று - தகுதியன்றாம், எ-று. (௫௨)

தற்புகழ்ச்சியும் ஒரோவழிக் குற்றமன்று :—WHEN ONE MAY PRAISE HIMSELF.

53. மன்னுடை மன்றத் தோலைத் தூக்கினும்
தன்னுடை யாற்ற லுணரா ரிடையினும்
மன்னிய வவையிடை வெல்லுறு பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலுந் தகும்புல வோர்க்கே.

(இ-ள்.) மன்னுடைய மன்றத்து - அரசனது சபைக்கு, ஓலை தூக்கினும் - (எழுதும்) சீட்டுக்கவியிலும், தன்னுடைய ஆற்றல் உணரா ரிடையினும் - தனது (கல்வி) வலிமையை அறியாதாரிடத்திலும், மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும் - பெரியசபையில் (வாதஞ்செய்து) வெல்லும்பொழுதும், தன்னை மறுதலை பழித்த காலையும் - தன்னை எதிரி பழித்த காலத்திலும், தன்னைப்புகழ்தலும் - தன்னைத்தான் புகழ்ந்துகொள்ளுதலும், புலவோர்க்கு தகும் - புலவனுக்குத் தகுதியாம், எ-று.

புகழ்தலும் என்ற எச்ச உம்மையால் இவ்விடங்களிலும் தன்னைப்புகழ்ந்து கொள்ளாமையே மேன்மையுடைத்தென்பது கருத்து.

பாயிரம் நூலுக்கு இன்றியமையாதது :—PREFACE INDISPENSABLE TO A CLASSICAL WORK.

54. ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே.

(இ - ள்.) ஆயிர முகத்தான் - ஆயிரமுகப்புகளால், அகன்ற தாயினும் - விரிந்ததாயினும், பாயிரம் இல்லது - பாயிரம் இல்லாதது, பனுவல் அன்று - நூலன்றாகும், எ-று. ஏ-அசை. (௫௪)

55. மாடக்குச் சித்திரமு மாநகர்க்குக் கோபுரமு
ம், ஆடமைத்தோ ணல்லார்க் கணியும்போல்-
நாடிமுன், ஐதுரையா நின்ற வணிந்துரையை
யெந்நூற்கும், பெய்துரையா வைத்தார் பெ
ரிது.

(இ-ள்.) மாடக்கு சித்திரமும், - மாளிகைக்குச் சித்திரமும், மா நகர்க்கு கோபுரமும்-பெரியபட்டணத்திற்குக் கோபுரமும், ஆடு அமை தோள் நல்லார்க்கு அணியும் - நாட்டியஞ் செய்கின்ற மூங்கில்போன்ற தோள்களையுடைய மங்கையருக்கு ஆபரணமும், போல் - போல, நாடி - நினைத்து, ஐது உரையா நின்ற - அழகிய பொருளைச் சொல்லுகின்ற, அணிந்துரையை - இருவகைப் பாயிரங்களையும், எந் நூற்கும் - எவ்வகைப்பட்ட பெரிய நூலுக்கும், உரையா - உரைத்து, முன் - முன்னே, பெரிது பெய்துவைத்தார் - (ஆசிரியர்) பெரும்பாலும் சேர்த்து வைத்தார், எ-று. (௫௫)

சிறப்புப்பாயிரத்திலக்கணம்
முற்றுப்பெற்றது.

க. எழுத்ததிகாரம்.

ORTHOGRAPHY.

க. எழுத்தியல்.

ON LETTERS.

கடவுள்வணக்கம் :—AN INVOCATION.

56. பூமலி யசோகின் புனைநிழ லமர்ந்த
நான்முகற் றொழுதுநன் கியம்புவ னெழுத்தே.

(இ - ள்.) பூ மலி அசோகின் - மலர்கள் நிறைந்த அசோக மரத்தினது, புனை நிழல் அமர்ந்த - அலங்கரிக்கும் நிழலின்கண் எழுந்தருளி யிருந்த, நான்முகன் தொழுது - நான்கு திருமுகங்களையுடைய கடவுளை வணங்கி, நன்கு இயம்புவன் எழுத்து - எழுத்திலக்கணத்தை நன்றாகச் சொல்லுவன், எ-று. ஏ - ஈற்றசை. அதிகாரம் - இங்கே பெரும்பிரிவு. இயல் - இங்கே சிறுபிரிவு. எழுத்திலக்கணத்தை எழுத்தென்றது ஆகுபெயர்.

எல்லாம் வல்ல கடவுளை வணங்கலால் இனிது முடியுமென்பது கருதி 'நன்கியம்புவன்' என்று புகுந்தமையின் இது துதலிப் புகுதலென்னு முத்தி. (க)

எழுத்திலக்கணத்தின் பகுதி :—DIVISIONS OF ORTHOGRAPHY.

57. எண்பெயர் முறைபிறப் புருவ மாத்திரை
முதலீ றிடைநிலை போலி யென்றா
பதம்புணர் பெனப்பன் னிருபாற் றதுவே.

(இ-ள்.) எண் - (எழுத்தின்) எண்ணும், பெயர் - பெயரும், முறை - முறையும், பிறப்பு - பிறப்பும், உருவம் - வடிவமும், மாத்திரை - அளவும், முதல் (நிலை) - முதனிலையும், ஈறு (நிலை) - கடை நிலையும், இடை நிலை - இடைநிலையும், போலி - போலியும், பதம் - பதமும், புணர்பு - புணர்ச்சியும், என - என்று, பன்னிரு பாற்று - பன்னிருபகுதியினை யுடைத்தாகும், அது - அவ்வெழுத்திலக்கணம், எ-று.

எண் முதலிய பத்தும் எழுத்தின் அகத்திலக்கணம் என்பதும், பதம் புணர்பு என்னும் இரண்டும் புறத்திலக்கணம் என்பதும் தோன்ற 'என்று' என்னும் எண்ணிடைச்சொல் கொடுத்துப் பிரித்துக் கூறினர். இச்சூத்திரம் தொகுத்துச் சுட்டலென்னும் உத்தி. மேல்வருவனவெல்லாம் வகுத்துக் காட்டல்.

எழுத்தின் அகத்திலக்கணமாகிய பத்தையும் **எழுத்தியல்** என ஓரியலாகவும், அவ்வெழுத்தாலாகிய பதத்திலக்கணத்தைப் **பதவியல்** என ஓரியலாக்கி யதன்பின்னும்; அப்பதம் புணரும் புணர்ச்சி யிலக்கணத்தை **உயிரீற்றுப்புணரியல், மெய்யீற்றுப்புணரியல், உருபுபுணரியல்** என மூன்று இயலாக்கி, அவற்றுட் சிறந்த உயிரீற்றுப் புணரியலைப் பதவியலின்பின்னும், மெய்யீற்றுப்புணரியலை யதன்பின்னும், உயிரீறு மெய்யீறு என்றவற்றுள் அடங்குதலால் உருபுபுணரியலென்றதை அவ்விரண்டின் பின்னும் ஒத்துமுறைவைப் பென்னும் உத்தியால் வைத்தார். (உ)

க. எழுத்தின் எண்.
NUMBER OF LETTERS.

F. M. எழுத்தும் அதன் வகையும் :—LETTERS DEFINED AND CLASSIFIED.

58. மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே.

(இ - ள்.) மொழி முதல் காரணம் ஆம் - சொல்லுக்கு முதற் காரணமாகி வருகின்ற, அணுத்திரள் ஒலி - அணுக்கூட்டத்தின் (காரியமாகிய) ஒலியானது, எழுத்து - எழுத்தாகும்; அது-அவ்வெழுத்து, முதல் சார்பு என - முதலெழுத்தென்றும் சார்பெழுத்தென்றும், இரு வகைத்து - இரண்டு வகையினை யுடைத்தாகும், எ-று.

அணுத்திரள்—அணுக்கூட்டம்; இங்கு செவிக்குப் புலனும் ஒலி நுட்பம். மொழிமுதற் காரணமா மொலி யெழுத்தென்றால் கா ஙீ முதலியவை எழுத்தாகா வென்றும், அணுத்திரளொலி எழுத்தென்றால் மூற்கு இருமல் வீளைமுதலியவை எழுத்தா

மென்றுங் கொள்ளவேண்டுதலால், 'மொழிமுதற் காரணை மாமணுத் திரளொலி யெழுத்து' என்றார். வினை - குறிப்பிசை ()

M. F. முதலெழுத்தின் வகையும் விரியும்:—PRIMARY LETTERS CLASSIFIED.

59. உயிரு முடம்புமா முப்பது முதலே.

(இ-ள்.) உயிரும் உடம்பும் - உயிரெழுத்துப் பன்னிரண்டும் மெய்யெழுத்துப் பதினெட்டும், ஆம் முப்பதும் முதல் - ஆகிய முப்பதெழுத்துகளும் முதலெழுத்தாகும், எ-று.

உயிருமுடம்பும் என்றது வகை; முப்பதும் என்றது விரி.(௪)

M. F. சார்பெழுத்தின் வகை:—SECONDARY LETTERS CLASSIFIED.

60. உயிர்மெய் யாய்த முயிரள வொற்றள
அஃகிய இஉ ஐஔ மஃகான்
தனிநிலை பத்துஞ் சார்பெழுத் தாகும்.

(இ - ள்.) உயிர்மெய் - உயிர்மெய்யும், ஆய்தம் - ஆய்தமும், உயிரளபு - உயிரளபெடையும், ஒற்றளபு - ஒற்றளபெடையும், அஃகிய இ - குற்றியலிகரமும், (அஃகிய) உ - குற்றியலுகரமும், (அஃகிய) ஐ - ஐகாரக் குறுக்கமும், (அஃகிய) ஔ - ஔகாரக் குறுக்கமும், (அஃகிய) மஃகான் - மகரக் குறுக்கமும், (அஃகிய) தனி நிலை - ஆய்தக் குறுக்கமும், பத்தும் - ஆகிய பத்தும், சார்பெழுத்து ஆகும் - சார்பெழுத்து ஆகும், எ - று. அஃகுதல் - சுருங்குதல். (௫)

சார்பெழுத்தின் விரி:—SECONDARY LETTERS—NUMBER.

61. உயிர்மெய் யிரட்டுநூற் றெட்டுய ராய்தம்
எட்டுயி ரளபெழு மூன்றொற் றளபெடை
ஆறே ழஃகு மிம்முப் பானேழ்
உகர மாறு றைகான் மூன்றே
ஔகா னொன்றே மஃகான் மூன்றே
ஆய்த மிரண்டொடு சார்பெழுத் துறுவிரி
ஒன்றொழி முந்நூற் றெழுபா னென்ப.

(இ - ள்.) உயிர்மெய் இரட்டு நூற்றெட்டு - உயிர்மெய் இருநூற்றுப் பதினாறு, உயர் ஆய்தம் எட்டு - குறுகாத ஆய்தம்

எட்டு; உயிரளபு எழுமூன்று-உயிரளபெடை இருபத்தொன்று; ஒற்றளபெடை ஆறேழ் - ஒற்றளபெடை நாற்பத்திரண்டு; (அஃகும்) இ முப்பானேழ் - குற்றியலிகரம் முப்பத்தேழு; (அஃகும்) உகரம் ஆறுறு - குற்றியலுகரம் முப்பத்தாறு; (அஃகும்) ஐகாரம் மூன்று - ஐகாரக் குறுக்கம் மூன்று; (அஃகும்) ஔகாரம் ஒன்று - ஔகாரக் குறுக்கம் ஒன்று; (அஃகும்) மஃகான் மூன்று - மகரக் குறுக்கம் மூன்று; (அஃகும்) ஆய்தம் இரண்டொடு - ஆய்தக் குறுக்கம் இரண்டுடனே, சார்பெழுத்து உறு விரி - சார்பெழுத்தினது மிகுந்த விரி, ஒன்றொழி மூந்நூற்று எழுபான் என்ப - மூந்நூற் றறுபத்தொன்பது என்று சொல்லுவார் (புலவர்), எ-று.

இவை இத்தனையாதல் அவ்வவற்றின் பிறப்பிலக்கணத்திற் காண்க. இருநூற்றுப்பதினொன்றாயின் மற்றவை இடவேற்றுமையாயின. (சு)

உ. எழுத்தின் பெயர்.
NAMES OF LETTERS.

M. F. பொதுவிலக்கணம் :—GENERAL CHARACTERISTICS NAMES.

62. இடுகுறி காரணப் பெயர் பொதுச் சிறப்பின.

(இ-ள்.) இடுகுறி காரணப்பெயர் - இடுகுறிப்பெயருங் காரணப் பெயருமாகிய இரண்டும், பொது சிறப்பின - பலபொருளுக்குப் பொதுப்பெயராகியும் ஒரு பொருளுக்கே சிறப்புப் பெயராகியும் வருவனவாம், எ-று.

எனவே, இடுகுறிப் பொதுப்பெயர், இடுகுறிச் சிறப்புப்பெயர், காரணப்பொதுப்பெயர் காரணச்சிறப்புப்பெயர் எனப் பெயர் நான்காயின.

இடுகுறியாய் வழங்குவது இடுகுறி. காரணத்தோடு வழங்குவது காரணம்.

(உதாரணம்) மரம்—இடுகுறிப் பொதுப்பெயர்.
பனை—இடுகுறிச் சிறப்புப்பெயர்.

அணி—காரணப் பொதுப்பெயர்.
முடி—காரணச் சிறப்புப்பெயர்.

இனி இரட்டுறமொழித லென்னு முத்தியால் இச்சூத்திரத்திற்கு வேறொரு பொருளும் உரைக்கப்படும். அதாவது—இடுகுறி காரணப்பெயர் - இடுகுறி யென்றுங் காரணமென்றுஞ் சொல்லப்படு மிலக்கணங்களையுடைய பெயர்கள், பொது - இடுகுறி காரணமென்னு மிரண்டற்கும் பொதுவாகியும், சிறப்பின் - இடுகுறிக்கே சிறப்பாகியுங் காரணத்திற்கே சிறப்பாகியும் வருவனவாம்.

எனவே இடுகுறிப்பெயர் காரணப்பெயர் காரணவிடுகுறிப் பெயர் எனப்பெயர் மூவகைப்படும்.

(உ-ம்.) பரம், பொன்—இடுகுறிப்பெயர்.
பரமன், பொன்னன்—காரணப்பெயர்.
முக்கணன், அந்தணன்,—காரண விடுகுறிப்பெயர்.

முக்கணனென்பது காரணங் கருதியவழி மூன்று கண்களையுடைய விநாயகமூர்த்தி முதலாகிய பலர்க்குஞ் செல்லுதலாலும், காரணங் கருதாதவழி இடுகுறி யளவேயாய்ப் பரமசிவனுக்குச் செல்லுதலாலுங் காரண விடுகுறிப்பெய ராயிற்று.

அந்தணனென்பதும் அப்படியே அழகிய தண்மையையுடைய பலர்க்கும் பார்ப்பாருக்குஞ் செல்லுதலால் காரண விடுகுறிப்பெய ராயிற்று. மற்றைப் பெயர்களுக்கும் இப்படியே காண்க. (எ)

M. F. உயிரும் மெய்யும் அவைகளின் தொகையும் :—VOWELS AND CONSONANTS AND THEIR NUMBER.

63. அம்முத லீரா றாவி கம்முதல்
மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர்.

(இ-ள்.) அம்முதல் ஈராறு - அகரமுதலாகிய பன்னிரண்டையும், ஆவி (என) - உயிரெழுத்தென்றும், கம்முதல் மூவாறு - ககரமுதலாகிய பதினெட்டையும், மெய் என - மெய்யெழுத்தென்றும், விளம்பினர் புலவர் - அறிவுடையோர் சொன்னார், எ-று.

அ ஆ முதலிய பன்னிரண்டும் உயிர்போலத் தனித்தியங்குவ வாகலான் உயிர் எனவும், க் ங் முதலிய பதினெட்டும் உயி ரோடு கூடியல்லது இயங்கா வாகலான் மெய் எனவும் பெயர் பெற்றன. இவை உவமவாகுபெயராய்க் காரணப் பொதுப்பெயராயின. பிறவெழுத்துகளும் இவ்வாறே வருதல் காண்க. உயிர் ஆவி என்பனவும், மெய் உடல் உடம்பு உறுப்பு ஒற்று என்பனவும் ஒருபொருளன. (அ)

M. F. குறில் —SHORT VOWELS.

64. அவற்றுள்,
அ இ உ எ ஒக்குறி லைந்தே.

(இ - ள்.) அவற்றுள் - (ஆவியு மெய்யு மென்ற) அவற்றுள், அ இ உ எ ஒ ஐந்து - அ இ உ எ ஒ என்கிற ஐந்தும், குறில் - குற்றெழுத்தாம், எ-று.

அவற்றுள் என்பதை மேல் இடையினம் என்னும் சூத்திரம் வரையில் எல்லாச்சூத்திரத்தோடுங் கூட்டுக. குறில் - குறிய அளவுள்ளது. (௯)

M. F. நெடில் :—LONG VOWELS.

65. ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில்.

(இ - ள்.) ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ - ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என் கிற ஏழும், நெடில் - நெட்டெழுத்தாம், எ-று.

நெடில் - நீண்ட அளவுடையது. (௧௦)

M. F. சுட்டு :—DEMONSTRATIVE LETTERS.

66. அ இ உம்முதற் றனிவரிற் சுட்டே.

(இ - ள்.) அ இ உ - அ இ உ என்கிற மூன்றும், முதல் - சொல்லுக்கு முதலில், தனி வரின் - தனித்துச் (சுட்டுப்பொரு ளைக் காட்ட) வந்தால், சுட்டு - சுட்டெழுத்தாம், எ-று.

முதலெனப் பொதுப்படச் சொன்னதனால் புறத்தும் அகத் தும் வருமெனக் கொள்க.

(உ-ம்.)

அக் கொற்றன் இக் கொற்றன் உக் கொற்றன்	புறத்துவந்தன.	அவன் இவன் உவன்	அகத்துவந்தன.

அகரம் தூரத்திலிருக்கிற பொருளையும், இகரம் சமீபத்திலிருக்கிற பொருளையும், உகரம் எதிர்முகமின்றிப் பின்னிடு மேலிருக்கும் பொருள்களையுஞ் சுட்டுதற்கு வரும். (௬௬)

M. F. வினா :—INTERROGATIVE LETTERS.

67. எயா முதலும் ஆ ஓ வீற்றும்
ஏயிரு வழியும் வினாவா கும்மே.

(இ - ள்.) எ யா முதலும் - எகரமும் யாவும் சொல்லுக்கு முதலிலும், ஆ ஓ ஈற்றும் - ஆகாரமும் ஓகாரமும் சொல்லுக்கு ஈற்றிலும், ஏ இரு வழியும் - ஏகாரம் அவ்விரண்டிடத்திலும், (தனிவரின்) வினா ஆகும் - தனித்து வினாப்பொருளைக் காட்ட வந்தால் வினாவெழுத்தாகும், எ-று.

முன் சூத்திரத்தில் தனிவரி னென்றது இதற்குங் கூட்டப்பட்டது. ஒன்றினமுடித்த றன்னின முடித்தலென்னு முத்தியால் உயிர்மெய்யாகிய யா வினாவும் உடன்கூறப்பட்டது. இவை புறத்தும் அகத்தும் வருதல் ஏற்றபடி கொள்க.

(உ-ம்.) எக் கொற்றன், யாங் ஙனம், எவன், யாவன் } எ, யா, முதலிலே புறத்தும் அகத்தும் வந்தன.
கொற்றனா, கொற்றனோ } ஆ, ஓ ஈற்றிலே புறத்து வந்தன.
ஏவன், கொற்றனே } ஏ முதலில் அகத்தும் ஈற்றில் புறத்தும் வந்தது. (௬௭)

M. F. வல்லினம் :—HARD CONSONANTS. (*Surds.*)

68. வல்லினங் கசட தபறவென வாறே.

(இ-ள்.) க ச ட த ப ற என ஆறு - க ச ட த ப ற என்கின்ற ஆறும், வல்லினம் - வல்லினமாம், எ-று.

இவை வல்லோசை யுடையன வாகலின் வலி வன்மை வன்கணம் வல்லெழுத்து எனவும்பெயர்பெறும். (௬௮)

M. F. மெல்லினம் :—SHORT CONSONANTS. (*Nasals.*)

69. மெல்லினம் ஙஞண நமனவென வாறே.

(இ-ள்.) ங ஞ ண ந ம ன என ஆறு - ங ஞ ண ந ம ன என்கின்ற ஆறும், மெல்லினம் - மெல்லினமாம், எ-று.

இவை மெல்லியவோசை யுடையனவாகலின் மெலி மென்மை மென்கணம் மெல்லெழுத்து எனவும் பெயர்பெறும். ( )

M. F. இடையினம் :—MEDIAL CONSONANTS. (*Liquids.*)

70. இடையினம் யரலவ ழளவென வாறே.

(இ-ள்.) ய ர ல வ ழ ள என ஆறு - ய ர ல வ ழ ள என்கிற ஆறும், இடையினம் - இடையினமாம், எ-று.

இவை வல்லின மெல்லினங்களுக்கு நடுத்தரமான வோசை யுள்ளனவாகலின் இடை இடைமை இடைக்கணம் இடையினம் எனவும் பெயர்பெறும். (௧௫)

M. F. இனவெழுத்து :—KINDRED LETTERS.

71. ஐ ஔ இ உச் செறிய முதலெழுத்
திவ்விரண் டோரின மாய்வரன் முறையே.

(இ-ள்.) ஐ ஔ - (இனமில்லாத) ஐகார ஔகாரங்கள், இ உ செறிய - (ஈகார ஊகாரங்களுக்கு இனமாகிய) இகர உகரங்கள் (தமக்கு இனமாகப்) பொருந்த, முதலெழுத்து - முதலெழுத்துகளானவை, இவ்விரண்டு - இரண் டிரண்டு, ஓர் இனமாய் வரல் - ஓரினமாகி வருதல், முறை - முறையாதலால் (அவை இனவெழுத் தெனப் பெயர் பெறும்), எ-று. ஏ - ஈற்றசை.

(உ-ம்.) அ - ஆ, இ - ஈ, உ - ஊ, எ - ஏ, ஐ - இ, ஒ - ஓ, ஔ - உ எனவும், க - ங, ச - ஞ, ட - ண, த - ந, ப - ம, ற - ன எனவும் இரண்டிரண்டு ஓரினமாய் வந்தன காண்க.

சுருக்கச்சொல்லல் என்னும் அழகுபற்றி, முதலெழுத்தெனக் கூறினாரேனும் ஏற்புழிக்கோடலென்னு முத்தியால் இரண்டிரண்டு ஓரினமாய்வரல், இடையினமொழிந்த மற்றவைகட்கே எனக்கொள்க.

இடையெழுத்தாறும் இடப்பிறப்பால் ஒத்து முயற்சிப்பிறப்பால் வேறுபடுதலால் எல்லாம் ஓரினமாம். (௧௧)

இனமென்றதற்குக் காரணம் :—GROUNDS FOR KINDREDNESS.

72. தான முயற்சி யளவு பொருள்வடி
வானவொன் றுடையோர் புடையொப் பினமே.

(இ - ள்.) தானம் - பிறப்பிடமும்; முயற்சி - தொழிலும், அளவு - மாத்திரையும், பொருள் - பொருளும், வடிவு - உருவமும், ஆன - ஆகிய இவற்றுள், ஒன்று ஆதி - ஒன்று முதலாக, ஓர் புடை ஒப்பு - ஒருபுடை யொத்தலால், இனம் - இனமாம், எ - று.

தானத்தாலும் முயற்சியாலும் ஒத்துவருவன உயிரினமெல்லாம், முயற்சியாலும் அளவாலும் மெய்யினமெல்லாம், பொருளால் ஒத்துவருவன. எ-ஏ, ட-ண, ப-ம-முதலியன.

(உ-ம்.) எது-ஏது ; படம் - பணம் ; அப்பு - அம்பு. வடிவத்தால் ஒத்துவருவன - இ - ஈ, ஐ - இ, ஔ - உ, ஒழிந்த மற்றை உயிர்கள். இச்சூத்திரம் ஏதுவின் முடித்தலென்னு முத்தி.(கஎ)

ங. எழுத்தின்முறை.

ARRANGEMENT OF LETTERS.

---

73. சிறப்பினு மினத்தினுஞ் செறிந்தீண் டம்முதல்
நடத்த றானே முறையா கும்மே.

(இ - ள்.) சிறப்பினும் இனத்தினும் - சிறப்பினாலும் இனத்தினாலும், செறிந்து - (ஒன்றின்பின் னொன்று) பொருந்தி, ஈண்டு - இவ்வுலகத்தில், அ முதல் நடத்தல் தானே - அகரமுதலாக வழங்குதலே, முறை ஆகும் - (எழுத்துகளது)முறையாம், எ-று.

தனித்தியங்கும் ஆற்றலுடைய பன்னிரண்டு உயிர்களும் அவ்வுயிர்களோடு கூடியல்லது இயங்கும் ஆற்றலில்லாத பதினெட்டு மெய்களுக்கு முன் நிற்பதும், குற்றெழுத்துகள் தம்து விகாரங்களாகிய நெட்டெழுத்துகளின் முன் நிற்பதும், வலியோர் மெலியோர்க்கு முன் நிற்றல்போல, வல்லெழுத்துகள் மெல்லெழுத்துகளுக்கு முன் நிற்பதுஞ் சிறப்பினால் எனவும், குற்றெழுத்துகளுக்குப் பின் அவ்வவற்றின் இனமொத்த நெட்டெழுத்துகள் நிற்பதும், வல்லெழுத்துக்குப் பின் அவ்வவற்றின் இனமொத்த மெல்லெழுத்துகள் நிற்பதும் இனத்தினாலெனவுங் கொள்க. (கஅ)

ச. எழுத்தின் பிறப்பு.
ORIGIN OF LETTERS.

பொதுவிதி: —GENERAL RULE.

74. நிறையுயிர் முயற்சியி னுள்ளவளி துரப்ப
எழுமணுத் திரளுரங் கண்ட முச்சி
மூக்குற் றிதழ்நாப் பல்லணத் தொழிலின்
வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே.

(இ - ள்.) நிறை உயிர் முயற்சியின் - (ஒலியெழுத்திற்கு வேண்டுங் காரணங்களிற் குறைவின்றி) நிறைந்த உயிரினது முயற்சியால், உள் வளி துரப்ப - உள்ளேநின்ற காற்றானது எழுப்ப, எழும் அணு திரள்-எழுகின்ற (செவிப்புலனும்) அணுக் கூட்டம், உரம் கண்டம் உச்சி மூக்கு உற்று - மார்பும் கழுத்தும் தலையும் நாசியும் (ஆகிய நான்கிடத்தையும்) பொருந்தி, இதழ் நா பல் அணம் தொழிலின் - உதடும் நாக்கும் பல்லும் மேல்வாயும் (ஆகிய நான்கனுடைய) முயற்சிகளால், வெவ்வேறு எழுத்து ஒலி ஆய் வரல் - வெவ்வேறு எழுத்தாகிய ஓசைகளாய் தோன்றுதல், பிறப்பு - அவற்றின் பிறப்பாம், எ - று. அணம் - மேல்வாய், கீழ்வாய். (கக)

முதலெழுத்துகளுக்குப் பிறப்பிடம்: —THE DIFFERENT PLACES FROM WHICH PRIMARY LETTERS ORIGINATE.

75. அவ்வழி,
ஆவி யிடைமை யிடமிட றாகும்
மேவு மென்மைமூக் குரம்பெறும் வன்மை.

(இ - ள்.) அவ்வழி - முன்சொன்ன வழியாற் பிறக்குமிடத்து, ஆவி இடைமை இடம் - உயிரெழுத்துகளுக்கும் இடையினத்திற்கும் இடம், மிடறு ஆகும் - கழுத்தாகும், மென்மை மூக்கு மேவும் - மெல்லினம் நாசியை இடமாகப் பொருந்தும், வன்மை உரம் பெறும் - வல்லினம் மார்பை இடமாகப் பெறும், எ-று. (உ0)

முதலெழுத்துகளுக்கு முயற்சிவகையாற்பிறப்பு :—EFFORT TO PRONOUNCE PRIMARY LETTERS.

76. அவற்றுள்,
முயற்சியுள் அ ஆ வங்காப் புடைய.

(இ-ள்.) அவற்றுள் - (மேல் இடம் வகுத்த) முதலெழுத்துக்களுள், அ ஆ அங்காப்பு உடைய - அ ஆ இரண்டும் (நால்வகை முயற்சியுள் அண்ணத்தின் றொழிலாகிய) அங்காத்தலை யுடையனவாய்ப் பிறக்கும், எ-று. அங்காத்தல் - வாய்திறத்தல். ()

77. இ ஈ எ ஏ ஐ அங் காப்போ
டண்பல் முதனா விளிம்புற வருமே.

(இ-ள்.) இ ஈ எ ஏ ஐ - இ ஈ எ ஏ ஐ (ஆகிய ஐந்தும்), அங்காப்போடு - வாய்திறத்தலுடனே, அண் பல் - மூன்னம் பல்லை, நா முதல் விளிம்பு உற - நாக்கடியினது ஓரமானது பொருந்த, வரும் - பிறக்கும், எ-று. அண்பல் - (நாவின் ஓரத்தால்) அணுகப்படும் பல். (உஉ)

78. உ ஊ ஒ ஓ ஔவிதழ் குவிவே.

(இ - ள்.) உ ஊ ஒ ஓ ஔ - உ ஊ ஒ ஓ ஔ (ஆகிய ஐந்தும் பிறத்தற் கேதுவாகிய முயற்சி), இதழ் குவிவு - உதடுகளின் குவிதலாம், எ-று. (உ௩)

79. கஙவுஞ் சஞவும் டணவு முதலிடை
நுனிநா வண்ண முறமுறை வருமே.

(இ - ள்.) க ங - கவ்வும் ஙவ்வும், (நா) முதல் - நாக்கினடி, (அண்ணம் முதல்) - மேல்வா யடியையும், ச ஞ - சவ்வும் ஞவ்வும், நா இடை - நாக்கின் நடு, (அண்ணம் இடை) - மேல்வாய் நடுவையும், ட ண - டவ்வும் ணவ்வும், நா நுனி - நாக்கின் கடை, அண்ண (நுனி) - மேல்வாய்க் கடையையும், உற - பொருந்த, முறை - இம்முறையே, வரும் - பிறக்கும், எ-று. ()

80. அண்பல் லடிநா முடியுறத் தநவரும்.

(இ - ள்.) அண் பல் அடி - மேல்வாய்ப் பல்லினது அடியை, நா முடி உற - நாக்கு நுனி பொருந்த, த ந வரும் - தவ்வும் நவ்வும் பிறக்கும், எ-று. (உ௫)

81. மீகீ ழிதழுறப் பம்மப் பிறக்கும்.

(இ - ள்.) மீ (இதழ்) கீழ் இதழ் உற - மேலுதடும் கீழுதடும் பொருந்த, ப ம - பவ்வும் மவ்வும், பிறக்கும் - பிறக்கும், எ - று. (உ௬)

82. அடிநா வடியண முறயத் தோன்றும்.

(இ-ள்.) நா அடி - நாக்கினடியானது, அண்ணம் அடி உற - மேல்வா யடியைப் பொருந்த, ய தோன்றும் - யகரமானது பிறக்கும், எ-று. (உஎ)

83. அண்ண நுனிநா வருட ரழவரும்.

(இ-ள்.) அண்ணம் நுனி - மேல்வாய்க்கடையை, நா (நுனி) வருட - நாக்கு நுனியானது தடவ, ர ழ - ரவ்வும் ழவ்வும், வரும் - பிறக்கும், எ-று. (உஅ)

84. அண்பன் முதலு மண்ணமு முறையின்
நாவிளிம்பு வீங்கி யொற்றவும் வருடவும்
லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும்.

(இ-ள்.) அண் பல் முதல் - அண்பல்லடியை, நா விளிம்பு - நாவோரமானது, வீங்கி ஒற்ற - தடித்து நெருங்க, லகாரம் (ஆய்) - லகரமாகியும், அண்ணம் - மேல்வாயை, நா விளிம்பு (வீங்கி) வருட - நாவோரமானது (தடித்துத்) தடவ, ளகாரம் ஆய் - ளகாரமாகியும், இரண்டும் - இரண்டெழுத்துகளும், முறையின் பிறக்கும் - இம்முறையே பிறக்கும், எ-று. (உகூ)

85. மேற்பல் லிதழுற மேவிடும் வவ்வே.

(இ-ள்.) மேல் பல் இதழ் உற - மேற்பல்லானது கீழுதட்டைப் பொருந்த, வ மேவிடும் - வகரமானது பிறக்கும், எ-று.

86. அண்ண நுனிநா நனியுறிற் றனவரும்.

(இ-ள்.) அண்ணம் - மேல்வாயை, நா நுனி நனி உறின் - நாக்குநுனி மிகப்பொருந்தின், ற ன - றவ்வும் னவ்வும், வரும் - பிறக்கும், எ-று. (௩0)

சார்பெழுத்து இடமுயற்சி :—THE PLACES FROM WHICH SECONDARY LETTERS ORIGINATE AND THE EFFORT TO PRODUCE THEM.

87. ஆய்தக் கிடந்தலை யங்கா முயற்சி
சார்பெழுத் தேனவுந் தம்முத லனைய.

(இ-ள்.) ஆய்தக்கு இடம் தலை - ஆய்தம் பிறத்தற்கு இடமானது தலையாம், முயற்சி அங்கா - தொழிலானது வாயைத்

திறத்தலாம், சார்பெழுத்து ஏனவும் - (ஆய்தம் நீங்கலாகிய) மற்றைச் சார்பெழுத்துகளும், தம்முதல் அனைய - தம் முதலெழுத்துகளோ டொப்பனவாய்ப் பிறக்கும், எ-று. (௯௧)

எழுத்துகளின் பிறப்புக்கு புறனடை :—A REMARK ON THE ORIGIN OF LETTERS.

88. எடுத்தல் படுத்த னலித லுழப்பின்
திரிபுந் தத்தமிற் சிறிதுள வாகும்.

(இ - ள்.) (பலவெழுத்திற்குப் பிறப்பு ஒன்றாகச் சொல்லப் பட்டனவேனும்) எடுத்தல் - உயர்த்திக் கூறுதலும், படுத்தல் - தாழ்த்திக் கூறுதலும், நலிதல் - வருந்திக் கூறுதலும் ஆகிய, உழப்பின் - (எழுத்திற்குரிய) ஒலி முயற்சி வகையால், திரிபும் - (ஒன்றற்கொன்று பிறப்பு) வேறுபாடுகளும், தத்தமில் - அவ்வவற்றின்கண், சிறிது உள ஆகும் - சிறிது சிறிது உள்ளன வாம், எ-று. (௯௨)

F. உயிர்மெய் :—VOWEL CONSONANTS.

89. புள்ளிவிட் டவ்வொடு முன்னுரு வாகியும்
ஏனை யுயிரோ டுருவு திரிந்தும்
உயிரள வாயதன் வடிவொழித் திருவயின்
பெயரொடு மொற்றுமுன் னாய்வரு முயிர்மெய்.

(இ - ள்.) புள்ளி விட்டு - (மெய்) புள்ளியை விட்டு, அவ்வொடு-அகரத்தோடு கூடியவழி, முன் உரு ஆகியும் - அவ்விட்ட உருவே உருவாகியும், ஏனை உயிரோடு - அது நீங்கலாகிய உயிர்களோடு கூடியவழி, உருவு திரிந்தும் - உருவு வேறுபட்டும், உயிர் அளவு ஆய் - (தன் மாத்திரை தோன்றாது) உயிர் மாத்திரையே மாத்திரையாய், அதன் வடிவு ஒழித்து - (தன்வரி வடிவின் விகாரவடிவே வடிவாய்) உயிர்வடிவை யொழித்து, இருவயின் பெயரொடும் - (உயிரும மெய்யும் ஆகிய) இரண்டிடத்தும் பிறந்த (உயிர்மெய் யென்னும்) பெயருடனே, ஒற்று முன் ஆய் - ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாகி, உயிர் மெய் வரும் - உயிர் மெய்யெழுத்து வரும், எ-று.

க்அ - க, க்ஆ - கா, க்இ - கி,
க்ஈ - கீ, க்உ - கு, க்ஊ - கூ,
க்எ - கெ, க்ஏ - கே, க்ஐ - கை,
க்ஒ - கொ, க்ஓ - கோ, க்ஔ - கௌ.

} இப்படியே மற்றைமெய்களின்மேலும் பன்னிரண்டுயிர்களும் தனித்தனி ஏறிவர உயிர்மெய் இருநூற்றுப் பதினாறாதல் காண்க.

சார்பெழுத்துக்குச் சார்ந்துவருதலும் ஓர் பிறப்பாதலால், பிறப்பிலக்கணத்துட் சார்த்திக் கூறினார். (௩௩)

M. F. முற்றாய்தம் :—THE AYDAM.

90. குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே.

(இ - ள்.) ஆய்தப் புள்ளி - புள்ளிவடிவினதாகிய ஆய்தம், குறியதன் முன்னர் - குற்றெழுத்தின் முன்னதாய், உயிரொடு புணர்ந்த - உயிரோடு கூடிய, வல் ஆறன் மிசைத்து - வல்லெழுத் தாறனு ளொன்றன் மேலதாய் வரும், எ-று.

(உ - ம்.)

எஃகு, கஃசு, கஃடு, இருபஃது, அஃபு, பஃறி. } வல்லினவகையால் இயல்பாகவரும் ஆய்தம் ஆறு.

அவ் + கடியது = அஃகடியது
அல் + திணை = அஃறிணை } திரிதலென்னும் புணர்ச்சி விகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று.

அ + கான் = அஃகான் } விரித்த லென்னும் செய்யுள் விகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று.

} ஆ முற்றாய்தம் - ௮.

இச்சூத்திரம் மேற்கோளாதலால் தானெடுத்து மொழிதலென்னு முத்தி. (௩௪)

உயிரளபெடை :—VOWEL PROLONGATION.

91. இசை கெடின் மொழிமுத லிடைகடை நிலைநெடில், அளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே.

(இ - ள்.) இசை கெடின் - (பாட்டில்) ஓசை குறையின், மொழி முதல் இடை கடை - (அவ்வோசை குறைந்த) சொல்லுக்கு முதலிலாகிலும் நடுவிலாகிலும் இறுதியிலாகிலும், நிலை நெடில் - நின்ற நெட்டெழுத் தேழிலொன்று, அளபெழும் - (அவ்வோசையை நிறைக்கத்) தன்மாத்திரையின் மிகுந்தொலிக்கும்; அவற்று - அவற்றின்பின், அவற்று இனக்குறில் - அது தற்கு இனமாகிய குற்றெழுத்து, குறி - (அளபெடுத்தமையை அறிதற்கு வரிவடிவில்) அறிகுறியாய் வரும், எ-று.

(உ - ம்) "ஓஒதல் வேண்டுமொளி மாழ்குஞ் செய்வினை
ஆஅது மென்னு மவர்"
"உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு"
"அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தா ளுசிப்பிற்கு
நல்ல படாஅ பறை" எனவரும்.

ஓதல் என்பதில் ஓ முதலிலும், உறாஅர் என்பதில் ஆ இடையிலும், படா என்பதில் ஆ இறுதியிலும் அளபெடுத்தன. மற்றை நெட்டெழுத்துகளும் இப்படியே அளபெடுக்கும். செறாய் என்பதில் ஆ இடையில் ஈரளபெடுத்தது.

ஔகாரம் சொல்லுக்கு நடுவிலும் கடையிலும் வாராமையால் அவ்விடங்களில் அது நீங்கலாக நின்று அளபெடுக்கின்ற அளபெடை பத்தொன்பதோடும்,

"கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை"

என இன்னிசை நிறைக்கவரும் அளபெடையும்,

"உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்
வரனசைஇ யின்னு முளேன்"

எனச் சொல்லிசை நிறைக்கவரு மளபெடையுங் கூடி உயிரள பெடை இருபத்தொன்றாய் வருதல் காண்க.

செய்யுளோசை குன்றாவிடத்தும் இனிய ஓசையைத்தருதற் பொருட்டாக குறில் நெடிலாய் அளபெடுப்பது இன்னிசையளபெடை.

ஒருசொல் மற்றொருசொல்லின் இசையைநிறைக்க அளபெடுப்பது சொல்லிசையளபெடை. (௯௫)

ஒற்றளபெடை :—CONSONANT PROLONGATION.

92 ஙஞண நமன வயலள வாய்தம்
அளபாங் குறிலிணை குறிற்கீ ழிடைகடை
மிகலே யவற்றின் குறியாம் வேறே.

(இ - ள்.) (இசை கெடின்) பாட்டிலோசை குறையின், குறிலிணைக் (கீழ்) - குறிலிணையின் கீழும், குறில் கீழ் - குறிலின் கீழும், மொழி இடை கடை - மொழிக்கு நடுவிலும் கடையிலும், ங ஞ ண ந ம ன வ ய ல ள ஆய்தம் - ஙம்முதலிய இப் பத்தும் ஆய்தமும் ஆகிய பதினோரெழுத்து மொன்று, அளபு மிகல் ஆம் - (அவ்வோசையை நிறைக்கத் தன்மாத்திரையின்) மிகுந்தொலிக்கும், அவற்றின் குறி ஆம் வேறு - (அப்படி யள பெடுத்தமையை யறிதற்கு) அதனதன்பின் அவ் வெழுத்தே (வரிவடிவில்) அறி குறியாய் வரும், எ-று.

முன் சூத்திரத்தில் 'இசை கெடின்' என்றது இதற்குங் கூட்டப்பட்டது.

(உ - ம்) "இலங்ங்கு வெண்பிறைசூ டீசனடி யார்க்குக்
கலங்ங்கு நெஞ்சமிலை காண்"
"எங்ங் கிறைவனுள னென்பாய் மனனேயா
னெங்ங் கெனத்திரிவா ரின்"
"மடங்ங் கலந்த மனனே களத்து
விடங்ங் கலந்தானை வேண்டு"
"அங்ங் கனிந்த வருளிடத்தார்க் கன்புசெய்து
நங்ங் களங்கறுப்பா நாம்" என வரும்.

இலங்கு — குறிலிணைக்கீ ழிடையிலும், எங்கு — குறிற்கீழ் இடையிலும், மடங் — குறிலிணைக்கீழ் கடையிலும், அங் — குறிற்கீழ்க் கடையிலும், ஙகரம் அளபெடுத்தது.

"எஃஃகி லங்கிய கையரா யின்னுயிர்
வெஃஃகு வார்க்கில்லை வீடு.

ஆய்தம் அளபெடுத்தது. மற்ற மெய்களு மிப்படியே யள பெடுக்கும். ஆய்தம் ஙகரம்போல விதி யீருகவும் வாராமை யால், ஆய்தத்தை இறுதியில் விலக்க ஒற்றளபெடை நாற்பத் திரண்டாதல் காண்க. (௩௭)

M. F. குற்றியலிகரம் :—SHORTENED இ.

93. யகரம் வரக்குற ளுத்திரி யிகரமும்
அசைச்சொன் மியாவி னிகரமுங் குறிய.

(இ - ள்.) யகரம் வர - யகரத்தை முதலிலே யுடைய சொல் வர, குறள் உ திரி இகரமும் - குற்றியலுகரம் திரிந்த இகரமும், அசைச்சொல் மியாவின் இகரமும் - அசைச் சொல்லாகிய மியா என்பதின் (மகரத்தின்மே லிருக்கிற) இகரமும், குறிய - குற்றிய லிகரங்களாம், எ-று.

(உ - ம்) நாகு + யாது = நாகியாது
எஃகு + யாது = எஃகியாது
வரகு + யாது = வரகியாது
கொக்கு + யாது = கொக்கியாது
குரங்கு + யாது = குரங்கியாது
அல்கு + யாது = அல்கியாது
} எனவும்,
கேண்மியா எனவும் வரும்.

பொதுப்படக் கூறிய குற்றியலுகரம் முப்பத்தாறினும், அசைச்சொல் மியாவினும் குற்றியலிகரம் முப்பத்தேழாய் வருமாறு காண்க. (௩௮)

M. F. குற்றியலுகரம் :—SHORTENED உ.

94 நெடிலோடாய்த முயிர்வலி மெலியிடை
தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகரம்
அஃகும் பிறமேற் றொடரவும் பெறுமே.

(இ - ள்.) நெடிலோடு - தனிநெடி லேழுடனே, ஆய்தம் - ஆய்தமொன்றும், உயிர் - (சொல்லுக்கு நடுவிலுங் கடையிலும் வாராத ஔகாரம் நீங்கிய) உயிர் பதினொன்றும், வலி - வல்லெழுத்தாறும், மெலி - மெல்லெழுத்தாறும், இடை - (வல்லெழுத்துகளோடு தொடராத வகரம் நீங்கிய) இடையெழுத் தைந்தும் (ஆகிய முப்பத்தாறனு ளொன்றால்), தொடர் - (ஈற் றுக் கயலெழுத்தாகத்) தொடரப்பட்டு, மொழி இறுதி - சொல் லினிறுதியில், வன்மை ஊர் உகரம் - வல்லெழுத்துகள் யாதா யினு மொன்றன்மேல் ஏறி வருகின்ற உகரமானது, அஃகும் - (தன்மாத்திரையிற்) குறுகும், பிற மேல் தொடரவும் - பிற வெழுத்துகளுள் (ஒன்றும் பலவும் குறுகுதற்கும் மொழிநிறை

தற்கும் காரணமாக) மேலே தொடரவும், பெறும் - (தனிநெடி லொழிந்த வைந்து தொடரும்) பெறும், எ-று.

'நெடிலோடு' என்று ஒடு கொடுத்துப்பிரித்தது பிறமேற் றொடருதலில்லாத தனி நெடிலென்று தோன்றுதற்கு. உயிர் என்றது குறில் நெடிலை.

(உ-ம்.) நாகு, காசு, நீறு —நெடிற்றொடர்.
எஃகு, கஃசு, பஃது —ஆய்தத்தொடர்.
வரகு, பலாசு, கரிது —உயிர்த்தொடர்.
கொக்கு, கச்சு, பற்று —வன்றொடர்.
குரங்கு, மஞ்சு, கன்று —மென்றொடர்.
தெள்கு, சேர்பு, வீழ்து —இடைத்தொடர்.

இங்கே ஈற்றயலெழுத்தைக் கொண்டு ஆறு வகையாகச் சொல்லிப் பின்னே புணரியல் முதலான இடங்களிலே எடுத்தாளுதலால் 'முன்மொழிந்து கோடல்' என்னுமுத்தி.

'மொழிந்த பொருளோ டொன்ற வவ்வயின் மொழியாததனையு முட்டின்று முடித்தல்' என்னு முத்தியால், 'நுந்தை' என்னு முறைப்பெயரின் முன்னின்ற நகரமெய்யி லிருக்கிற உகரமுங் குறுகுமென்று கொள்க. ஈற்றயலெழுத்தை நோக்கி குற்றியலுகரம் (௯௩) ஆதல் காண்க.

முற்றியலுகரம்.

☞ தனித்தும் தனிக்குறலைச் சேர்ந்தும் வரும் வல்லின மெய்யின்மேலும், தனித்துந் தொடர்ந்தும் வரும் மெல்லின இடையின மெய்களின் மேலும் வரும் உகரம் முற்றியலுகரம் என்னப்படும். (௯௪)

F. ஐகார ஔகாரக் குறுக்கங்கள் :—SHORTENED ஐ AND ஔ.

95. தற்சுட் டளபொழி யைம்மூ வழியும்
நையு மௌவு முதலற் றாகும்.

(இ - ள்.) ஐ - ஐகாரம், தன் சுட்டு அளபு - தன்னைக்குறித்துத் தன்பெயர் சொல்லுமளவில் (குறுகாது), ஒழி - ஒழிந்த, மூவழியும் - (சொல்லுக்கு) முதல் இடை கடைகளிலே யெங்கே நின்றாலும், நையும் - (தன் மாத்திரையிற்) குறுகும்,

ஔவும் - ஔகாரமும், முதல் - (சொல்லுக்கு) முதலில், அற்று ஆகும் - தன் மாத்திரையிற் குறுகும், எ-று.

(உ-ம்.) ஐப்பசி, வலையன், குவளை, மௌவல்.

இடவகையால் ஐகாரக் குறுக்கம் மூன்றும் ஔகாரக் குறுக்கம் ஒன்றும் வருதல் காண்க. (சுo)

F மகரக்குறுக்கம் :—SHORTENED ம்.

96. ணனமுன்னும் வஃகான் மிசையுமக் குறுகும்.

(இ - ள்.) ண ன முன்னும் - ணகர னகரங்களி லொன்று (நின்றுதொடர அதன்) முன்னின்றாலும், வஃகான் மிசையும் - வகரம் வந்துதொடர (அதன்) பின்னின்றாலும், ம குறுகும் - மகரம் (தன் மாத்திரையிற்) குறையும், எ-று.

(உ - ம்.) "வெருளினு மெல்லாம் வெருளுமஃ தன்றி
மருளினு மெல்லா மருண்ம்"
"திசையறி மீகானும் போன்ம்"
தரும்வளவன்.

இவற்றுள், 'மருளும்' — மருண்ம், என்றும் 'போலும்'— போன்ம் என்றும் விகாரப்பட்டு நின்றன வென்றறிக.

இச்சூத்திரக் கருத்தைப் பினவருஞ் சில சூத்திரங்களைக் கொண்டு உய்த்துணர வைத்தலால் இது 'உய்த்துணர வைப்பு' என்னு முத்தி. இச்சூத்திரம் பருந்தின்வீழ்வு. இடவகையால் மகரக்குறுக்கம் மூன்றாதலறிக. (சுக)

F. ஆய்தக்குறுக்கம் :—SHORTENED ĀYDAM.

97 லளவீற் றியைபினு மாய்த மஃகும்.

(இ - ள்.) ல ள ஈற்று இயைபின் ஆம் - லகார ளகார வீற்றுப் புணர்ச்சியில் வரும், ஆய்தம் - "குறில்வழி லளத்தவ் வணையி னாய்த - மாகவும் பெறூஉ மல்வழி யானே" என்ற ஆய்தம், அஃகும் - (தன் மாத்திரையிற்) குறுகும், எ-று.

(உ - ம்.) கல் + தீது=கஃறீது
முள் + தீது=முஃடீது

இது 'முடிவிடங் கூறல்' என்னு முத்தி. ஆய்தக்குறுக்கம் இடவகையால் இரண்டாதலறிக. (சுஉ)

ரு. எழுத்தின் உருவம்.
FORM OF LETTERS.

98. தொல்லை வடிவின வெல்லா வெழுத்துமாண்
டெய்து மெகர வொகரமெய் புள்ளி.

(இ - ள்.) எல்லா எழுத்தும் - எல்லா வெழுத்துகளும், தொல்லை வடிவின - (பல வேறுவகைப்பட எழுதி வழங்கும்) பழைய வடிவினை யுடையனவாம், ஆண்டு - அவ்வடிவையுடையனவாய் வழங்குமிடத்து, எகரம் ஒகரம் - எகரமும் ஒகரமும், மெய் - மெய்களும், புள்ளி எய்தும் - புள்ளியைப்பெறும், எ-று.

(உ - ம்.) எ ஒ க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் எனவரும். (சாக)

M. F. சு. எழுத்தின் மாத்திரை.
QUANTITY OF LETTERS.

99. மூன்றுயி ரளபிரண் டாநெடி லொன்றே
குறிலோ டையௌக் குறுக்க மொற்றள
பரையொற் றிஉக் குறுக்க மாய்தம்
கால்குறண் மஃகா னாய்த மாத்திரை.

(இ - ள்.) மாத்திரை - ஒலிக்கு மளவு, உயிர் அளபு மூன்று (ஆம்) - உயிரளபெடைக்கு மூன்றாகும்; நெடில் இரண்டு ஆம் - நெட்டெழுத்திற்கு இரண்டாகும்; குறிலோடு - குற்றெழுத்திற்கும், ஐ (குறுக்கம்) - ஐகாரக் குறுக்கத்திற்கும், ஔ குறுக்கம் - ஔகாரக் குறுக்கத்திற்கும், ஒற்று அளபு - ஒற்றளபெடைக்கும், ஒன்று (ஆம்) - (தனித்தனி) ஒன்றாகும்; ஒற்று - மெய்யெழுத்திற்கும், இ (குறுக்கம்) - குற்றிய லிகரத்திற்கும், உ குறுக்கம் - குற்றியலுகரத்திற்கும், ஆய்தம் - ஆய்தத்திற்கும், அரை (ஆம்) - (தனித்தனி) அரையாகும்; குறள் மஃகான் - மகரக்குறுக்கத்திற்கும், (குறள்) ஆய்தம் - ஆய்தக்குறுக்கத்திற்கும், கால் (ஆகும்) - (தனித்தனி) காலாகும், எ-று.

மேல் (கூ-அகூ-ல்) 'உயிரளவாய்' என்றதனால் இங்கே உயிர்மெய்க்கு மாத்திரை சொல்லவில்லை. இது 'உரைத்தாம்' என்னு

முத்தி. உயிரளபெடை சிறுபான்மை நான்கு மாத்திரையும் பெறும். (௪௪)

M. F. மாத்திரை.—QUANTITY DEFINED.

100 இயல்பெழு மாந்த ரிமைநொடி மாத்திரை.

(இ - ள்.) மாந்தர் - மனிதருடைய, இயல்பு எழும் - இயல்பாக உண்டாகின்ற, இமை நொடி - கண்ணிமைப்பொழுதும் கைந்நொடிப் பொழுதும், மாத்திரை - ஒருமாத்திரை யென்னும் வரையறைப் பொழுதாம், எ-று.

இது 'பின்னது நிறுத்தல்' என்னு முத்தியால் மாத்திரையினளவைப் பின்னாகச் சொன்னார்.

உன்னி நொடித்தலினும் உன்னாது நிகழ்வது இமையாதலால், அச்சிறப்புத்தோன்ற இமையை முன் கூறினார். (௪௫)

M. F. மாத்திரைக்குப் புறனடை :—EXCEPTION REGARDING QUANTITY.

101. ஆவியு மொற்று மளவிறந் திசைத்தலும்
மேவு மிசைவிளி பண்டமாற் றாதியின்.

(இ - ள்.) இசை விளி பண்டமாற்று ஆதியின் - இராகமும் அழைத்தலும் பண்டமாற்றலும் முதலானவைகளிடத்து, ஆவியும் ஒற்றும் - (முதலுஞ் சார்புமாகிய) உயிரெழுத்துகளும் மெய்யெழுத்துகளும், அளவு இறந்து இசைத்தலும் - (முன் சொன்ன) அளவைக்கடந்து (அதிகமாக) ஒலித்தலையும், மேவும் - பொருந்தும், எ-று.

'ஆதி' என்றதனால் புலம்பல் முறையிடல் முதலியவுங் கொள்க. இராகத்தில் அதிகமாக ஒலிக்கும்போது உயிர் பன்னிரண்டு மாத்திரை யீறாகவும், ஒற்று பதினொரு மாத்திரை யீறாகவும் ஒலிக்குமென்பார் இசைநூலார். இது 'பிறநூன் முடிந்தது தானுடன்படுதல்' என்னு முத்தி. இச்சூத்திரம் 'இயல்பெழு' என்ற சூத்திரத்தைத் தழுவாமல் அதன்முன் னின்ற 'மூன்றுயிர்' என்ற சூத்திரத்தைத் தழுவலால் தவளைப் பாய்த்து. (௪௬)

எ. எழுத்தின் முதனிலை.
INITIAL LETTERS.

M F. பொதுவிதி :—GENERAL RULE.

102. பன்னீ ருயிருங் கசதந பமவய
ஞஙவீ ரைந்துயிர் மெய்யு மொழிமுதல்.

(இ-ள்.) பன்னீர் உயிரும் - பன்னிரண்டு உயிரெழுத்துகளும், க ச த ந ப ம வ ய ஞ ங - ககரமுதல் ஙகரமீறாகச் சொல்லப்பட்ட, ஈரைந்து உயிர்மெய்யும் - பத்து உயிரேறிய மெய்யெழுத்துகளும், மொழி முதல் - சொல்லுக்கு முதலாகும், எ-று.

(உ - ம்.) அடை, ஆடை, இடை, ஈடு, உடை, ஊடல், எடு, ஏடு, ஐயம், ஒதி, ஓதி, ஔவியம் எனவும்; களி, சவடி, தளிர், நலம், படை, மலை, வளம், யவனர், ஞமலி, அங்ஙனம் எனவும் வரும்.

உயிர்போலத் தனித்து முதலாக மாட்டாமையால், 'உயிர்மெய்' என்றார். இது 'இன்னதல்ல திதுவென மொழிதல்' என்னு முத்தி. (௪எ)

சிறப்புவிதி :—SPECIAL RULE.

F. வகரமுதனிலை :—INITIAL வ்.

103. உஊ ஒஓ வலவொடு வம்முதல்.

(இ-ள்.) உ ஊ ஒ ஓ அலவொடு-உ ஊ ஒ ஓ என்கின்ற நான்குமல்லாத எட்டுயிர்களோடும், வ முதல் - வகரமெய் (சொல்லுக்கு) முதலாகும், எ-று.

(உ - ம்.) வளி, வாளி, விளி, வீறு, வெளி, வேளை, வைகல், வௌவால் எனவரும். (௪அ)

F. யகரமுதனிலை :—INITIAL ய்.

104. அஆ உஊ ஓஔ யம்முதல்

(இ - ள்.) அ ஆ உ ஊ ஓ ஔ (ஒடு) - அ ஆ உ ஊ ஓ ஔ என்கிற ஆறுயிரோடும், ய முதல் - யகரமெய் (சொல்லுக்கு) முதலாகும், எ-று.

முன் சூத்திரத்தின் 'ஒடு' இங்கே வருவிக்கலாயிற்று.

(உ - ம்.) யவனர், யானை, யுகம், யூகி, யோகி, யௌவனம் எனவரும். (௪௯)

F. ஞகரமுதனிலை :—INITIAL ஞ்.

105. அ ஆ எ ஒவ்வோ டாகு ஞம்முதல்.

(இ - ள்.) அ ஆ எ ஒவ்வோடு - அ ஆ எ ஒ என்கிற நான்குயிரோடும், ஞ முதல் - ஞகரமெய் (சொல்லுக்கு) முதலாகும், எ-று.

(உ - ம்.) ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கிற்று, எனவரும்.

இலக்கணப் போலியான ஞிமிறு என்பதையுங் கூட்டி ஞகரம் ஐந்துயிரோடுங் கூடிவரும் என்பா பிற்காலத்தார். (௫௦)

F. ஙகரமுதனிலை :—INITIAL ங்.

106. சுட்டியா வெகர வினாவழி யவ்வை
ஒட்டி ஙவ்வு முதலா கும்மே.

(இ - ள்.) சுட்டு - மூன்று சுட்டும், யா எகர வினா - யாவினாவும் எகரவினாவும் (ஆகிய ஐந்தனுடைய), வழி - பின்னே, அவ்வை ஒட்டி - அகரத்தைச் சேர்ந்து, ஙவ்வும் முதல் ஆகும் - ஙகர மெய்யும் (சொல்லுக்கு) முதலாகும், எ-று.

(உ - ம்.) அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம் எனவரும்.

ஒருவிதத்தினாலே முதலாகையால் 'ஙவ்வும்' என இழிவு சிறப்பும்மை கொடுத்துக் கூறினார். முதலாகா தென்பவர்க்கு உடன்படுதலு மறுத்தலு மாதலால் இது 'பிறர்தம் மதமேற் கொண்டு களைவு' என்னுமதம்.

முதலாமென்ற பத்து உயிர்மெய்யுள் வகரமுதலிய நான்கையும் எடுத்துக் கூறவே, ஒழிந்த க ச த ந ப ம என்னும் ஆறு மெய்களும் பன்னிரண்டு உயிரோடுங்கூடி மொழிக்கு முதலாமென்பது அருத்தாபத்தியாற் கொள்ளப்பட்டது. (௫௧)

அ. எழுத்தின் இறுதிநிலை.
FINAL LETTERS.

M. F. பொதுவிதி :—GENERAL RULE.

107. ஆவி ஞணநமன யரலவ ழளமெய்
சாயு முகரநா லாறு மீறே.

(இ - ள்.) ஆவி - (தனித்தும் மெய்யோடும் வரும் பன்னி ரண்டு) உயிர்களும், ஞ ண ந ம ன ய ர லவ ழ ள மெய் - , ஞ ண ந ம முதலிய பதினொரு மெய்களும், சாயும் உகரம் - குற்றியலுகரமும் (ஆகிய), நாலாறும் - இருபத்துநான் கெழுத் தும், ஈறு - மொழிக்கீறாகும், எ - று.

(உ - ம்.) ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எ-ம்; விள, பலா, கரி, தீ, கடு, பூ, சே, தே, தை, நொ, போ, கௌ எ - ம்; உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வாள், அஃகு எ-ம் வரும்.

குற்றுகரமும் உயிரீற்றி லடங்குமாயினும் புணர்ச்சி வேறுபா டுதோன்ற வேறு எடுத்துக் கூறினார். (ருஉ)

சிறப்புவிதி :—SPECIAL RULE.

108. குற்றுயி ரளபி னீறா மெகரம்
மெய்யொடே லாதொந் நவ்வொ டாமௌக்
ககர வகரமோ டாகு மென்ப.

(இ - ள்.) குற்றுயிர் - (அ இ உ எ ஒ என்கிற) குற்றுயிர்கள், அளபின் - அளபெடையிலே, ஈறு ஆம் - (வரிவடிவில் அறிகுறி யாகத் தனித்து) ஈறாகும், எகரம் - எகரமானது, மெய்யொடு ஏலாது - மெய்யோடு ஈறாகாது, ஒ - ஒகரமானது, நவ்வொடு ஆம் - நகரமெய் ஒன்றுடன் ஈறாகும், ஔ - ஔகாரமானது, ககரவகரமோடு ஆகும் - ககர வகரங்களாகிய இரண்டு மெய்க ளுடன் ஈறாகும், என்ப - என்றுசொல்லுவர் (புலவர்), எ-று.

(உ - ம்.) பலாஅ, தீஇ, பூஉ, சேஎ, கைஇ, கோஒ, கௌஉ எ-ம்; நொ எ-ம்; கௌ, வௌ எ-ம்; வரும். (ருங)

உயிர்மெய்யெழுத்துக்கு முதலும் ஈறும் :—INITIAL AND FINAL LETTERS IN VOWEL-CONSONANTS.

109. நின்ற நெறியே யுயிர்மெய் முதலீறே.

(இ-ள்.) நின்ற நெறியே - (மெய்முன்னும் உயிர் பின்னுமாக ஒலித்து) நின்றவழியே, உயிர்மெய் - உயிர்மெய்க்கு, முதல் ஈறு - (மெய்) முதலும் (உயிர்) ஈறும் ஆகும், எ-று.

எனவே உயிரும் ஒற்றும் ஆய்தம் முதலிய ஒன்பது சார்பெ ழுத்துகளும் ஓரெழுத்தாகையால் அவற்றிற்கு முதலும் ஈறும்

அவையேயா மென்பதை அருத்தாபத்தியாற் கூறினர். இது 'எஞ்சியசொல்லி னெய்தக்கூறல்' என்னு முத்தி. இப்படிச் சொல்லாதவை யெல்லாம் 'சொல்லின்முடிவினப்பொருண் முடித்தல்' என்னு முத்தி. (௫௪)

---

௬. எழுத்தின் இடைநிலை.
MIDDLE LETTERS.

இடைநிலைமயக்கம் (பொதுவிதி).—COMBINATION OF LETTERS IN WORDS, (GENERAL RULE.)

110. கசதப வொழித்தவீ ரேழன் கூட்டம்
மெய்ம்மயக் குடனிலை ரழவொழித் தீரெட்
டாகுமிவ் விருபான் மயக்கு மொழியிடை
மேவு முயிர்மெய் மயக்கள வின்றே.

(இ-ள்.) க ச த ப ஒழித்த - க ச த ப என்னு நான்கையும் நீக்கிய, ஈரேழன் கூட்டம் - (மற்றைப்) பதினான்கு மெய்களும் (பிறமெய்களோடு கூடுங்) கூட்டம், மெய் மயக்கு (ஆகும்) - (வேற்று நிலை) மெய்ம்மயக்கமாகும், ர ழ ஒழித்து - ரழ என்னும் இரண்டனையும் நீக்கி, ஈரெட்டு (கூட்டம்) - (மற்றைப்) பதினாறு மெய்களும் (தம்மோடு கூடும்) கூட்டம், உடனிலை (மெய்ம்மயக்கு) ஆகும் - உடனிலை மெய்மயக்க மாகும், இவ் இருபால் மயக்கும் - இவ்விருவகை மயக்கமும், மொழி இடை மேவும் - ஒருமொழிக்குந் தொடர்மொழிக்கும் நடுவில் வரும், உயிர்மெய் மயக்கு - உயிருடன் மெய்யும் மெய்யுடன் உயிரும் மாறிமயங்கு மயக்கத்திற்கு, அளவு இன்று - அளவில்லை, [வேண்டியவாறே மயங்கும் என்றபடி] எ-று.

உயிர்மெய் மயங்குதற்கு உதாரணம்.

அல், வில், — மொழியிடை உயிருடன் மெய் மயங்கின.
கா, கூ — மொழியிடை மெய்யுடன் உயிர் மயங்கின.
க ச த — எழுத்திடை மெய்யுடன் உயிர் மயங்கின.

மெய்யுடன் மெய் மயங்குதற்கு உதாரணம் பின்வருஞ் சிறப்புச் சூத்திரங்களுட் காண்க.

இங்கே மொழி என்றது ஒருமொழி தொடர்மொழி இரண்டனையும்.

மொழியிடையன்றி ஒரெழுத்தினு மயங்குதலால் உயிரும் மெய்யும் மயங்குதற்கு இடங்கூறு தொழிந்தார்.

இச்சூத்திரத்தால் மெய்யுடன் மெய் மயங்குங்கால் க ச த ப என்னு நான்கும் தம்மொடுதாமே மயங்கு மெனவும், ர ழ என்னு மிரண்டும் தம்மொடு பிறவே மயங்குமெனவும், ஒழிந்த பன்னிரண்டு மெய்களுந் தம்மொடுதாமும் பிறவும் மயங்குமெனவும் பெறப்பட்டன.

கூட்டம் மயக்கம் சையோகம் என்பன ஒருபொருட்சொற்கள். பின் 'உடனிலை' என்றதனுல் முன் 'பிறமெய்' என்பது கொள்ளப்பட்டது. (௫௫)

வேற்றுநிலை மெய்ம்மயக்கச் சிறப்புவிதி :—CONBINATION OF DIFFERENT CONSONANTS, SPECIAL RULE.

111. ஙம்முன் கவ்வாம் வம்முன் யவ்வே.

(இ - ள்.) ஙம்முன் க - ஙகரத்தின்முன் ககரமும், வம்முன் ய் - வகரத்தின்முன் யகரமும், ஆம் - மயங்கும், எ-று.

(உ-ம்.) கங்கன் —ககரம்.

தெவ்யாது —யகரம். (௫௬)

112. ஞநமுன் றம்மினம் யகரமொ டாகும்.

(இ-ள்.) ஞ ந முன் - ஞகர நகரங்களின் முன், தம் இனம் - அவற்றிற் கினமாகிய சகர தகரங்களும், யகரமொடு - யகரமும், ஆகும் - மயங்கும், எ-று.

(உ-ம்.) கஞ்சன் கந்தன் — இனம்.

உரிஞ்யாது பொருந்யாது — யகரம். (௫௭)

113 டறமுன் கசப மெய்யுடன் மயங்கும்.

(இ-ள்.) ட ற முன் - டகர றகரங்களின்முன், க ச ப மெய் - க ச ப என்கிற மூன்றுமெய்களும், உடன் மயங்கும் - இணங்கி மயங்கும், எ-று.

(உ-ம்.) கட்கம் கற்கை — ககரம்.

கட்சி கற்சுவர் — சகரம்.

திட்பம் கற்பு — பகரம். (௫௮)

114. ணனமுன் னினங்கச ஞபமய வவ்வரும்.

(இ - ள்.) ண. ன முன் - ணகர னகரங்களின்முன், இனம் - (அவற்றிற்கு) இனமாகிய டகரறகரங்களும், க ச ஞ ப ம ய வ- ககர முதலிய இவ்வேழு மெய்களும், வரும் - மயங்கும், எ-று.

(உ-ம்.) விண்டு	புன்றலை	— இனம்.	
வெண்கலம்	புன்கண்	— ககரம்.	
வெண்சோறு	புன்செய்	— சகரம்.	
வெண்ஞமலி	புன்ஞமலி	— ஞகரம்.	
வெண்பல்	புன்பயிர	— பகரம்.	
வெண்மலர	புன்மலர்	— மகரம்.	
மண்யாது	பொன்யாது	— யகரம்.	
மண்வலிது	பொன்வலிது	— வகரம்.	(௫௯)

115. மம்முன் பயவ மயங்குமென்ப.

(இ - ள்.) மம்முன் - மகரத்தின்முன், ப ய வ - ப ய வ் என்னு மூன்று மெய்களும், மயங்கும் என்ப - மயங்குமென்று சொல்லுவர் (புலவர்), எ-று.

(உ - ம்.) கம்பம் — பகரம்.
கலம்யாது — யகரம்.
கலம்வலிது — வகரம். (௬0)

116. யரழ முன்னர் மொழிமுதன் மெய்வரும்.

(இ - ள்.) ய ர ழ முன்னர் - ய ர ழ என்னும் மூன்று மெய்களின்முன், மொழி முதல் மெய் - மொழிக்கு முதலாக நின்ற பத்து மெய்களும், வரும் - மயங்கும், எ-று.

(உ - ம்.)

வேய் கடிது	வேர் கடிது	வீழ் கடிது
— சிறிது	— சிறிது	— சிறிது
— தீது	— தீது	— தீது
— நீண்டது	— நீண்டது	— நீண்டது
— பெரிது	— பெரிது	— பெரிது
— மாண்டது	— மாண்டது	— மாண்டது
— வலிது	— வலிது	— வலிது
— யாது	— யாது	— யாது
— ஞான்றது	— ஞான்றது	— ஞான்றது
வேய்ங்குழல்	ஆர்ங்கோடு	பாழ்ங்கிணறு.

பத்துமெய்களும் வந்தன.

மொழிமுதன்மெய், என்று கருங்கச்சொல்லலென்னு மழகால் கூறினுரோனும், யகரத்தின்முன் யகரம் மயங்கல் உடனிலை மயக்கத்திற்கே எனக்கொள்க. (சுக)

117. லளமுன் கசப வயவொன் றும்மே.

(இ - ள்.) ல ள முன் - லகர ளகரங்களின்முன், க ச ப வ ய - ககர முதலிய இவ்வைந்தும், ஒன்றும் - மயங்கும், எ-று.

(உ - ம்.)

வேல் கடிது	வாள் கடிது	கசபவய்ய வந்தன. ()
— சிறிது	— சிறிது	
— பெரிது	— பெரிது	
— வலிது	— வலிது	
— யாது	— யாது.	

உடனிலை மெய்ம்மயக்கச் சிறப்புவிதி :—COMBINATION OF SAME CONSONANTS, SPECIAL RULE.

118 ரழவல்லன தம்முற் றுமுட னிலையும்.

(இ - ள்.) ர ழ அல்லன - ரகர ழகரங்கள் அல்லாத மற்றைப் பதினாறு மெய்களும், தம்முன் தாம் - தமக்குமுன் தாம், உடனிலையும் - உடனின்று மயங்கும், எ-று.

(உ - ம்.)

அக்கம்	— க	அத்து	— த	அவ்வை	— வ
அங்ஙனம்	— ங	அந்நீர்	— ந	அள்ளல்	— ள
அச்சம்	— ச	அப்பு	— ப	அற்றம்	— ற
அஞ்ஞானம்	— ஞ	அம்மை	— ம	அன்னை	— ன.
அட்டு	— ட	அய்யம்	— ய		
அண்ணம்	— ண	அல்லி	— ல		(சுரு)

தனிமெய்யுடனே தனி மெய்யாய் மயங்கும் எழுத்துகள் :—WHAT DOUBLE LETTERS MAY FOLLOW ய், ர், ழ்.

119 யரழவொற் றின்முன் கசதப ஙஞநம
ஈரொற் றும்ரழத் தனிக்குறி லணையா.

(இ - ள்.) ய ர ழ ஒற்றின் முன் - யரழ என்கிற மூன்று மெய்களின்முன், க ச த ப ங ஞ ந ம - (இவற்றின்முன் மயங்குமென்ற பத்து மெய்களுள்) ககரமுதலாகிய இவ்வெட்டு மெய்களும், ஈரொற்று ஆம் - (தனிமெய்யும் உயிர்மெய்யுமாகி) மயங்குதலன்றியும் ஈரொற்றாயு மயங்கும்; ர ழ - ரகார ழகார

மெய்களும், தனி குறில் - தனிக்குற்றெழுத்தும், அனையா - (சொல்லுக்கு உறுப்பாக வருவது நிற்பதுமாக) மயங்குவன அல்ல, எ - று.

(உ-ம்.)	வேய்க்குறை	வேர்க்குறை	வீழ்க்குறை
	வேய்ச்சிறை	வேர்ச்சிறை	வீழ்ச்சிறை
	வேய்த்தலை	வேர்த்தலை	வீழ்த்தலை
	வேய்ப்புறம்	வேர்ப்புறம்	வீழ்ப்புறம்
	வேய்ங்குழல்	ஆர்ங்கோடு	பாழ்ங்கிணறு
	மெய்ஞ்ஞானம்	கூர்ஞ்சிறை	பாழ்ஞ்சுனை
	காய்ந்தனம்	நேர்ந்தனம்	வாழ்ந்தனம்
	மெய்ம்மயிர்	ஈர்ம்பனை	பாழ்ம்பதி.

'ர ழ தனிக்குறிலணையா' என்றாரேனும், 'உரையிற்கோடல்' என்னு முத்தியால் ரகர ஒற்றும் தனிக்குறிலைச் சேர்ந்து விகுதி யிடைச்சொல்லாய் வருமெனக் கொள்க. (உ-ம்.) வந்தனர். ()

செய்யுளில் ஈரொற்றாய் நிற்கும் எழுத்துகள் :—DOUBLE CONSONANTS THAT OCCUR IN POETRY.

120 லளமெய் திரிந்த னணமுன் மகாரம்
நைந்தீ ரொற்றாஞ் செய்யு ளுள்ளே.

(இ - ள்.) ல ள மெய் திரிந்த - லகார ளகார வொற்றுத் திரிந்த, ன ண முன் - னகார ணகாரங்களின் முன் வரும், மகாரம் - மகர வொற்றானது, நைந்து - முன்சொன்னபடியே குறுகி, ஈரொற்று ஆம் - அந்த மெய்களுடனே ஈரொற்றுட னிலையாம், செய்யுளுள்ளே - பாட்டினுள், எ-று.

(உ-ம்.) "திசையறி மீகானும் போன்ம்"
"மயிலியன் மாதர் மருண்ம்"

'செய்யுளிலே' என்றமையால், முன்னர்க்கூறியவை வழக்குச் செய்யுள் இரண்டினும் எனி அறிக. (சுரு)

முதனிலை இறுதிநிலை இடைநிலைகளுக்குப் புறனடை :— A REMARK OF THE INITIAL, FINAL AND MIDDLE LETTERS.

121. தம்பெயர் மொழியின் முதலு மயக்கமும்
இம்முறை மாறியு மியலு மென்ப.

(இ - ள்.) தம் பெயர் மொழியின் - எழுத்துகளின் பெயர்களைச்சொல்லி (நிலைமொழி வருமொழிகளாகப்) புணர்க்குமிடத்து, முதலும் மயக்கமும் - மொழி முதலுக்கும் இடைநிலைமயக்கத்திற்கும் (சொன்ன), இம்முறை - (விதிக்கப்பட்டனவும் விலக்கப்பட்டனவு மாகிய) இவ்விலக்கணம், மாறியும் இயலும் - பிறழ்ந்தும் வரும், என்ப - என்றுசொல்லுவர் (புலவர்), எ-று.

எனவே மொழிமுதற்கு விதித்தனவும், விலக்கியனவுமாகிய எல்லா வெழுத்துகளும் முதலாம் என்பதும், இடைநிலை மயக்கத்திற்கு விதித்தனவும் விலக்கியனவுமாகிய எல்லா வெழுத்துகளும் இடைநின்று மயங்குமென்பதும் ஆயிற்று. இப்படியெல்லா வெழுத்துகளும் தனித்தனி அதற்கதுவே முதலாமெனவே, ஈற்றிற்கு விதிக்கப்பட்டனவும் விலக்கப்பட்டனவுமாகிய வெல்லாவெழுத்துகளும் தனித்தனி அதற்கதுவே ஈறாமெனத் தானே விளங்குதலால், 'ஈறும்' என மிகைபடக் கூறாமல் விட்டார்.

(உ - ம்.)

"அவற்றுள், லளஃகான் முன்னர் யவ்வுந்தோன்றும்."— இதிலே லகரமானது முதலாகியும், கூனிறுதி ளகரமெய்யோடு மயங்கியும் வந்தது.

'கெப்பெரிது' — இதில் எகரமானது மெய்யோடு ஈறாய் வந்தது. பிறவு மிப்படியே. (கூசா)

கo. எழுத்தின்போலி.
INTERCHANGE OF LETTERS.

M. F. மொழியிறுதிப்போலி:—INTERCHANGE AT THE END OF WORDS.

122. மகர விறுதி யஃறிணைப் பெயரின்
னகரமோ டுறழா நடப்பன வுளவே.

(இ - ள்.) அஃறிணைப் பெயரின் - பால்பகா வஃறிணைப் பெயர்களிடத்து, இறுதி மகரம் - ஈற்றிலே நின்ற மகரமெய்யானது, னகரமோடு உறழா - னகரமெய்யோடு ஒத்து, நடப்பன உள - நடப்பவை உண்டு, எ-று.

மகரம் னகரத்தோ டொத்தலாவது பெயரி னிறுதியிலே மகர மிருந்தவிடத்து னகரம் வந்திருந்தாலும் வேறுபடாம லொத்தலாம். இம்மகரம் குறிலிணையைச் சேர்ந்து வருவதென் றறிக. போலி - போல நிற்பது.

(உ-ம்.) அகம்—அகன்
நிலம்—நிலன்.

இவ்விறுதிப்போலியை முன்னே சொல்லுதலால், மென் றொடர்க் குற்றியலுகரப் பெயரிறுதி உகரம் 'அர்' என்பதனோ டொத்து வருதலும், சில லகரமெய்யீற்றுப் பெயரி னிறுதி லகரமெய் ரகரமெய்யோ டொத்து வருதலுங் கொள்க.

(உ-ம்.) சுரும்பு — சுரும்பர்
வண்டு — வண்டர்
பந்தல் — பந்தர்
சாம்பல் — சாம்பர்.

மென்றொடர்க் குற்றிய லுகரமேயன்றி, உயிர்த்தொடரில், சிறகு - சிறகர் என்றும், வன்றொடரில் இடக்கு - இடக்கர் என்றும், நெடிற்றொடரில் மாது - மாதர் என்றும் வருதலு மறிக.

சிறுபான்மை மதில் - மதிள் என்று லகரத்திற்கு ளகரமும், ஐந்து - ஐஞ்சு, உய்ந்தனன் - உய்ஞ்சனன் என நகர தகரங்களுக்கு ஞகர சகரங்களும், பித்து - பிச்சு, வைத்த - வைச்ச என தகரத்திற்குச் சகரமும், நேயம் - நேசம், கயம் - கசம், என யகரத்திற்கு சகரமும், போலியாய் வருதலும் இங்கே அமைத்துக்கொள்க. (௬௭)

F. மொழிமுதற்போலியும் மொழியிடைப்போலியும் :—INTERCHANGE AT THE BEGINNING AND MIDDLE OF WORDS.

123. அஐ முதலிடை யொக்குஞ் சஞயமுன்.

(இ-ள்.) அ ஐ - அகரமும் ஐகாரமும், முதல் இடை - (சொல்லுக்கு) முதலிலும் நடுவிலும், ச ஞ ய முன் - சகர ஞகர யகரங்களுக்கு முன் வந்தால், ஒக்கும் - (வேறுபாடில்லாமல்) ஒத்து வரும், எ-று.

(உ-ம்.) பசல் — பைசல் | அமச்சு — அமைச்சு
மஞ்சு — மைஞ்சு | இலஞ்சி — இலைஞ்சி
மயல் — மையல் | அரயர் — அரையர்.

அ ஐ ஒக்கும் எனப் பொதுப்படக் கூறினோனும், வைச்ச - வச்ச, ஐஞ்சு - அஞ்சு, பைய - பய, என ஐகாரத்துக்கு முன் அகரம் போலியாய் வருதலும், கொள்க.

பழைமை - பழமை, இளைமை - இளமை எனப் பிறவெழுத்தின்முன்னும் இவ்வாறு வரும். (சுஅ)

மொழியிடைப்போலி :—INTERCHANGE AT THE MIDDLE OF WORDS.

124. ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி
ஞஂகா னுறழு மென்மரு முளரே.

(இ-ள்.) சில் வழி - (சொல்லுக்கு நடுவே)சிலவிடத்து, ஐகான் (வழி) - ஐகாரத்தின் பின்னும், யவ் வழி - யகரமெய்யின் பின்னும், நவ்வொடு - (இயல்பாய்வரும்) நகரமெய்யினோடு, ஞஂகான் - ஞகரமெய்யானது, உறழும் - ஒத்து நடக்கும், என்மரும் - என்றுசொல்வாரும், உளர் - சிலருண்டு, எ-று.

(உ - ம்.)

ஐந்நூறு - ஐஞ்ஞூறு.

“செய்ஞ்ஞின்றநீலமலர்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
மைஞ்ஞின்றவொண்கண்மலைமகள்கண்டுமகிழ்ந்துநிற்க
நெய்ஞ்ஞின்றெரியும்விளக்கொத்தநீலமணிமிடற்றான்
கைஞ்ஞின்ற வாடல்கண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்ப தென்னே”

இங்கே கூறிய நகரம் தொடர்மொழியில் நிற்கும் நகரமாம். இச்சூத்திரம் பிறன்கோட்கூறல் என்னும் உத்தி.

மண்யாத்த—மண்ஞாத்த, பொன்யாத்த — பொன்ஞாத்த, என ணகரனகரங்களின் முன் வருமொழி வினைச்சொல்லின் முதலெழுத்து யா ஆக நின்றவிடத்து, ஞா போலியாக வருவதற்கு ஆசிரியர் தொல்காப்பியர் இலக்கணஞ் சொன்னபடி இந்நூலாசிரியர் சொல்லாமல் விட்டது ‘இறந்தது விலக்கல்’ என்னு முத்தி.

இனி உரையிற்கோடல் என்னு முத்தியால் நயம் - ஞயம், நாயிறு - ஞாயிறு, நேயம் - ஞேயம், என மொழிமுதல் நகரத்துக்கு ஞகரமும், ஞண்டு - ஞெண்டு என மொழிமுதல் அகரத்துக்கு எகரமும் போலியாக வருதலும் கொள்க. (சுசு)

M F. சந்தி அக்ஷரம் ஐ, ஔ (அ+இ or அ+ய்=ஐ and அ+உ or அ+வ்=ஔ):—COMBINED LETTERS.

125. அம்மு னிகரம் யகர மென்றிவை
எய்தி னையொத் திசைக்கு மவ்வோ
டுவ்வும் வவ்வு மௌவ்வோ ரன்ன.

(இ - ள்.) அம் முன் - அகரத்தின்முன், இகரம் - இகரமும், யகரம் - யகரமெய்யும், என்ற இவை - என்று சொல்லப்பட்ட இவை, ஒத்து எய்தின் - தம்முளொத்துப் பொருந்தினால், ஐ இசைக்கும் - ஐ என்கிற நெட்டெழுத்து ஒலிக்கும்; அவ்வோடு - அகரத்தோடு, உவ்வும் - உகரமும், வவ்வும் - வகரமெய்யும், (ஒத்து) தம்முளொத்து, ஓர் அன்ன (எய்தின்) - ஒருதன்மையனவாகப் பொருந்தினால், ஔ (இசைக்கும்) - ஔ என்கிற நெட்டெழுத்து ஒலிக்கும், எ-று.

யகர வகர மெய்கள் நடுவிலே கலக்குமெனக் கொள்க. "மொழிந்த பொருளோடொன்ற வவ்வயின் மொழியாததனையு முட்டின்று முடித்தல், என்னு முத்தியால், அகரக்கூறும் இகரக்கூறும் தம்முளொத்து எகரமொலிக்கும், அகரக்கூறும் உகரக்கூறும் தம்முளொத்து ஒகரமொலிக்கும் எனக் கொள்க.

இச்சூத்திரம் எழுத்துப்போலியை உணர்த்துவதெனவே கொண்டு, அகரத்தோடு இகரம் கூடியும், அகரத்தோடு யகரம்கூடியும், ஐயை ஒத்திசைக்கும் என்றும், அகரத்தோடு உகரமும் அகரத்தோடு வகரமும்கூடி ஔவை ஒத்திசைக்குமென்றும் கொள்ளலுமாம்.

(உ - ம்.) வைத்தியம் - வயித்தியம், கைடபன் - கயிடபன்; எ-ம், வையம் - வய்யம், ஐவனம் - அய்வனம்; எ - ம், பௌத்தர் - பவுத்தர், கௌரி - கவுரி, எ - ம், ஔவை, அவ்வை, வௌவுதல் - வவ்வுதல், எ-ம், வரும். (எ0)

எழுத்தின் சாரியைகள்.
PARTICLES ATTACHED IN NAMING LETTERS.

126. மெய்க ளகரமு நெட்டுயிர் காரமும்
ஐயௌக் கானு மிருமைக் குறிலிவ்
விரண்டொடு கரமுமாஞ் சாரியை பெறும்பிற.

(இ - ள்.) மெய்கள் - ஒற்றுக்கள், அகரமும் - அகரச்சாரியையும், நெட்டுயிர் - உயிர் நெடில்கள், காரமும் - காரச்சாரியையும், ஐ ஔ கானும் - (அவற்றுள்) ஐகார ஔகாரங்கள் (காரச்சாரியையுடனே) கான் சாரியையும், இருமைக்குறில் - உயிர்க் குறிலும் உயிர்மெய்க் குறிலும், இவ்விரண்டொடு - (காரம் கான் என்கிற) இரண்டுடனே, கரமும் - கரச்சாரியையும், ஆம் - ஆகின்ற, சாரியை பெறும் - சாரியைகளைப் பெறும், எ - று.

'மெய்கள் அவ்வும்' என்றது 'அகரமும்' என்றதனால், இப்படியே கரங் காரம் கான் வந்தால், அவை அகரத்தினது சாரியை யென்று கொள்க. மெய்கள் சாரியை பெறுமலும் உயிர் மெய்நெடில்கள் சாரியை பெற்றும் வருவனவல்ல. ஆய்தம் தனியே வாராமையால், கேனம் என்ற சாரியையைச்சேர்த்து அஃகேனம் என வழங்குவர்.

'பிற' என்றதனாலே குறிலோடு கான் சாரியை புணரும்போது இடையிலே ஆய்தம் தோன்றும்.

(உ-ம்.)

க-ங-ச-ஞ — அகரச்சாரியை

ஆகாரம் }
ஐகாரம் } — காரச்சாரியை
ஔகாரம் }

ஐகான் }
ஔகான். } — கான்சாரியை.

உயிர்க்குறில்	உயிர்மெய்க்குறில்	
அகாரம்	மகாரம்	} காரம், கான்
அஃகான்	மஃகான்	} கரச்சாரியைகள்.
அகரம்	மகரம்.	

'விகற்பத்தின் முடித்தல்' என்னு முத்தியால், மேல் விரிந்து கிடந்தனவற்றை விளங்கவேண்டி இங்கே தொகுத்து முடித்த லால் இச்சூத்திரம் 'முடிந்தது முடித்தல்' என்னு முத்தி. (எக)

எழுத்தியலுக்குப் புறனடை:—A GENERAL REMARK ON THE RULES OF THIS CHAPTER.

127. மொழியாய்த்தொடரினுமுன்னனைத்தெழுத்தே.

(இ - ள்.) எழுத்து - இவ்வெழுத்துக்கள், மொழியாய் - பத மாயினும், தொடரினும் - (அப்பதந் தம்மோடும் உருபோடும்) புணர்ந்தாலும், முன் அனைத்து - முன்சொல்லப்பட்ட (அப்பத் திலக்கணத்தையும்) உடையன வாகும், எ-று. (எஉ)

எழுத்தியல் முற்றுப்பெற்றது.

உ. பதவியல்.

ON STRUCTURE OF WORDS.

பதம்.

WORDS.

M. F. பதமும் அதன் வகையும்:—DEFINITION AND CLASSIFICATION OF WORDS.

128. எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருடரின்
பதமா மதுபகாப் பதம்பகு பதமென
இருபா லாகி யியலு மென்ப.

(இ - ள்.) எழுத்தே - எழுத்துக்கள்தாமே, தனித்தும் தொடர்ந்தும் - (ஒவ்வொன்றாகத்) தனித்தாகிலும் (இரண்டு முதலாகத்) தொடர்ந்தாகிலும், பொருள் தரின் - பிறபொருளைக் காட் டுமே யானால், பதம் ஆம் - பதமாகும், அது - அப்பதமானது, பகாப்பதம் பகுபதம் என - பகாப்பத மெனவும் பகுபதமென வும், இருபால் ஆகி - இரண்டுவகையினை யுடையதாகி, இயலும் என்ப - நடக்கும் என்று சொல்லுவர் (புலவர்), எ-று. (க)

ஓரெழுத்தொருமொழி:—WORDS OF ONE LETTER.

129. உயிர்மவி லாறுந் தபநவி லைந்தும்
கவசவி னாலும் யவ்வி லொன்றும்
ஆகு நெடிநொது வாங்குறி லிரண்டோ
டோரெழுத் தியல்பத மாறேழ் சிறப்பின.

(இ - ள்.) உயிர் மவில் ஆறும் - உயிர்வருக்கத்திலும் மவ்வருக்கத்திலும் அவ்வாறும், த ப நவில் ஐந்தும் - தவ்வருக்கத்திலும் பவ்வருக்கத்திலும் நவ்வருக்கத்திலும் ஐவ்வைந்தும், க வ சவில் நாலும் - கவ்வருக்கத்திலும் வவ்வருக்கத்திலும் சவ்வருக்கத்திலும் நந்நான்கும், யவ்வில் ஒன்றும் - யவ்வருக்கத்தில் ஒன்றும், ஆகும் நெடில் - ஆகுநெட்டெழுத்தாலாகிய மொழி நாற்பதும், நொ து ஆம் குறில் இரண்டோடு - நொவ்வும் துவ்வும் ஆகுங் குற்றெழுத்தாலாகிய மொழி இரண்டுடனே, ஓரெழுத்து இயல் பதம் - ஓரெழுத்தாலாகிய மொழிகள், ஆறு ஏழ்-நாற்பத்திரண்டும், சிறப்பின - சிறப்பினவாம், எ-று.

(உ-ம்.)

ஆ - ஈ - ஊ - ஏ - ஐ - ஓ ;
மா - மீ - மூ - மே - மை - மோ;
தா - தீ - தூ - தே - தை ;
பா - பூ - பே - பை - போ ;
நா - நீ - நே - நை - நோ ;

கா - கூ - கை - கோ ;
வா - வீ - வை - வௌ ;
சா - சீ - சே - சோ ;
யா ; நொ ; து.

இவற்றுள் ஊ - இறைச்சி, ஓ - மதகுநீர்த்தாங்கும்பலகை, பே - நுரை, நே - அன்பு, சோ - மதில், நொ - துன்பப்படு, து - உண்.

இவை 'சிறப்பின' எனவே, கு - கௌ - பீ - வே எனச் சிறப்பில்லாதவைகளுஞ் சிலவுளவென் றறிக. (உ)

தொடரெழுத் தொருமொழி :—WORDS OF MORE THAN ONE LETTER.

130. பகாப்பத மேழும் பகுபத மொன்பதும்
எழுத்தீ றுகத் தொடரு மென்ப.

(இ-ள்.) பகாப்பதம் - பகாப்பதங்கள், ஏழும் - (இரண்டெழுத்து முதல்) ஏழெழுத்தீறுகவும், பகுபதம் - பகுபதங்கள்,

ஒன்பதும் - (இரண்டெழுத்து முதல்) ஒன்ப தெழுத் தீருகவும், தொடரும் என்ப - தொடரும் என்று சொல்லுவர் (புலவர்), எ-று.

	பகாப்பதம்.		பகுபதம்.	
(உ-ம்.)	அணி	என 2 முதல் 7 எழுத்தீறாக	கூனி	என 2 முதல் 9 எழுத்தீறாக
	அறம்		கூனன்	
	அகலம்		குழையன்	
	அருப்பம்		பொருப்பன்	
	தருப்பணம்		அம்பலவன்	
	உத்திரட்டாதி.		அரங்கத்தான்	
			உத்திராடத்தான்	
			உத்திரட்டாதியான்.	

'நடத்துவிப்பிக்கிறுன்' நடத்துவிப்பிக்கப் படுகின்றவர்கள், எனப் பகுதிமுதலிய உறுப்பு வேறுபட்டு வருகின்றவைகளுக்கு இவ்வரையறை யில்லையென் றறிக.

M. F. பகாப்பதம்:—INDIVISIBLE WORDS.

131. பகுப்பாற் பயனற் றிடுகுறி யாகி
முன்னே யொன்ருய் முடிந்தியல் கின்ற
பெயர்வினை யிடையுரி நான்கும் பகாப்பதம்.

(இ - ள்.) பகுப்பால் பயன் அற்று - பிரிக்கப்படுதலினுலே (பகுதி விகுதி முதலாகிய) பயனில்லாமல், இடுகுறி ஆகி - (காரணமில்லாமல்) இடப்பட்ட குறியாகி, முன்னே ஒன்று ஆய் - படைப்புக்காலந் தொட்டு ஒன்ருகி, முடிந்து இயல்கின்ற - முடிந்து நடக்கின்ற, பெயா வினை இடை உரி நான்கும் - பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லு மாகிய நான்கும், பாகாப்பதம் - பகாப்பதங்களாகும், எ-று.

(உ-ம்.) நிலம், நீர், நெருப்பு, காற்று,—பெயர்ப்பகாப்பதம்.
நட, வா, உண், தின், —வினைப்பகாப்பதம்.
மன், கொல், போல், மற்று,—இடைப்பகாப்பதம்.
உறு, கழி, அன்பு, அழகு, —உரிப்பகாப்பதம். (௪)

புளி, கடு, முதலிய ஆகுபெயர்கள் காரணத்தால் வருவனவாயினும் விகுதிமுதலிய உறுப்புகள் இல்லையாதலால், பகாப்பதமென்றே கொள்ளப்படும்.

M. F. பகுபதம் :—DIVISIBLE WORDS.

132. பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழிலின்
வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே.

(இ - ள்.) பொருள் இடம் காலம் சினை குணம் தொழிலின் - பொருளும் இடமும் காலமும் உறுப்பும் குணமும் தொழிலுங் காரணமாக, வரு பெயர் - வருகின்ற பெயர்ச் சொற்களும், பொழுது கொள் வினை - (தெரிநிலையாகவுங் குறிப்பாகவுங்) காலத்தைக்கொள்ளும் வினைச்சொற்களும், பகுபதம - பகுபதங்களாகும், எ-று. தெரிநிலை—வெளிப்படை.

'பொழுதுகொளவினை பகுபதம்' எனவே தெரிநிலைக் குறிப்புவினையாலணையும் பெயர்களும் பகுபதமா மென்பது அருத்தாபத்தியாற் சொன்னாரென வறிக.

பொன்னன்	—பொருள்	பெயர்ப்பகுபதம்.
அகத்தன்	—இடம்	
ஆதிரையான்	—காலம்	
கண்ணன்	—சினை	
கரியன்	—குணம்	
ஊணன்	—தொழில்.	

நடந்தான், நடக்கின்றான், நடப்பான்	உடன்பாட்டுத் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம்.
நடந்த, நடக்கின்ற, நடக்கும்	உடன்பாட்டுத் தெரிநிலைவினைப் பெயரெச்சப் பகுபதம்.
நடந்து, நடக்க, நடக்கின	உடன்பாட்டுத் தெரிநிலைவினை வினையெச்சப் பகுபதம்.
நடந்திலன், நடக்கின்றிலன், நடவான்	எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம்.
நடவாத	எதிர்மறைத் தெரிநிலைவினைப் பெயரெச்சப் பகுபதம்.
நடவாமல்	எதிர்மறைத் தெரிநிலைவினை வினையெச்சப் பகுபதம்.
பொன்னன், ஊணன்	உடன்பாட்டுக் குறிப்பு வினைமுற்றுப் பகுபதம்.
கரிய, பெரிய	உடன்பாட்டுக் குறிப்புவினைப் பெயரெச்சப் பகுபதம்.

பைய, மெல்ல	உடன்பாட்டுக் குறிப்புவினை வி வினையெச்சப் பகுபதம்.
அல்லன், இல்லன், அன்று, இன்று	எதிர்மறைக் குறிப்பு வினைமுற்றுப் பகுபதம்.
அல்லாத, இல்லாத	எதிர்மறைக் குறிப்புவினைப் பெயரெச்சப் பகுபதம்.
அன்றி, இன்றி, அல்லாமல், இல்லாமல்	எதிர்மறைக் குறிப்புவினை வினையெச்சப் பகுபதம்.
நடந்தான், நடந்தவன்	தெரிநிலை வினையாலணையும் பெயர்ப்பகுபதம்.
பொன்னன், பொன்னவன்	குறிப்பு வினையாலணையும் பெயர்ப்பகுபதம்.

பெயர்ப்பகுபதங்கள் — இப்பகுபதங்கள் பகுதி விகுதி முதலிய ஆறுறுப்புகளில், பகுதி விகுதி இரண்டிலும் பொருள் சிறந்துநின்று காலங்காட்டாமல் வேற்றுமை யுருபுகளை ஏற்று வரும்.

(உ-ம்.) பொன்னனை.

குறிப்புவினை முற்றுப்பகுபதம், காலத்தைக் குறிப்பாகக் காட்டி வேற்றுமைஉருபை ஏலாதுவரும்.

(உ-ம்.) (இவன்இப்போது) பொன்னன்.

குறிப்புவினையா லணையும்பெயர்ப் பகுபதம் — காலத்தைக் குறிப்பாகக்காட்டி, வேற்றுமை உருபை ஏற்றுவரும்.

(உ - ம்.) பண்டுபொன்னனை இப்போது ஏழையாகக் கண்டேன்.

தெரிநிலை வினைமுற்றுப்பகுபதம்—காலத்தை வெளிப்படையாகக்காட்டி வேற்றுமை உருபுகளை ஏலாதுவரும்.

(உ-ம்.) சாத்தன் நடந்தான்.

தெரிநிலை வினையாலணையும் பெயர்ப்பகுபதம் — காலத்தை வெளிப்படையாகக்காட்டி, வேற்றுமை யுருபுகளை ஏற்றுவரும்.

(உ - ம்.) நடந்தானைத் தடுத்தேன்; இது சிறுபான்மை ஈறு திரிந்து நடந்தவன் என்றும் வரும்.

ஆகவே, பெயர்ப்பகுபதங்கள் பெயர்த்தன்மையையும் வினை முற்றுகள் வினைத்தன்மையையும், வினையாலணையும்பெயர்கள் அவ்விருதன்மைகளையும் பெற்று வருவனவென்றறிக. (ரு)

M. F. பகுபத உறுப்புகள் :—THE ELEMENTS OF DIVISIBLE WORDS.

133. பகுதி விகுதி யிடைநிலை சாரியை
சந்தி விகார மாறினு மேற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும்.

(இ - ள்.) பகுதி விகுதி இடைநிலை சாரியை சந்தி விகாரம் ஆறினும் - முதனிலையும் இறுதிநிலையும் இடைநிலையும் சாரியையும் சந்தியும் விகாரமும் ஆகிய இவ்வாறு உறுப்பினுள்ளும், ஏற்பவை - (பொருளமைதிக்கு) ஏற்பவைகளை, முன்னி புணர்ப்ப - நினைத்து (அறிவுடையோர்) கூட்டிமுடிக்க, எப் பதங்களும் முடியும் - எவ்வகைப்பட்ட பகுபதங்களும் முடிவு பெறும், எ-று.

(உ-ம்.) கூனி—கூன்+இ எனப் பகுதி விகுதியான் முடிந்தது.
உண்டான்—உண் + ட் + ஆன் என அவ்விரண்டுடன் இடைநிலை பெற்று முடிந்தது.
உண்டனன்—உண்+ட்+அன்+அன் என அம் மூன்றுடன் சாரியைபெற்று முடிந்தது.
பிடித்தனன்—பிடி+த்+த்+அன்+அன் என நான்குடன் சந்திபெற்று முடிந்தது.
நடந்தனன்—நட+த்+த்+அன்+அன் என அவ்வைந்தும் பெற்றுச் சந்தியால் வந்த த்கரம் மெல்லொற்றாத லாகிய விகாரமும் பெற்று முடிந்தது.

பதப்புணர்ச்சிக்கு விதிக்கப்பட்ட தோன்றல் திரிதல் கெடுதல் என்கிற மூன்று புணர்ச்சிவிகாரங்களையும், வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல் விரித்தல் *தொகுத்தல் முதற்குறை இடைக்குறை கடைக்குறை என்கிற ஒன்பது செய்யுள்விகாரங்களையும் இது பெறுமென மாட்டுதலால், இது 'மாட்டெறிந் தொழுகல்' என்னு முத்தி. (சு)

பகுதி விகுதி- ப்ரக்ருதி விக்ருதி என்னும் வடமொழிகளின் திரிபு.

ஏற்பவை முன்னிப்புணர்ப்ப என்றாராயினும் வினைப்பகுபத மாத்திரம் ஆறு உறுப்புகளையும் பெயர்ப்பகுபதம் இரண்டொன்று குறையவும் வரும்.

பகுதி.
THE ROOT.

M. F. பொதுவிதி :—GENERAL RULE.

134. தத்தம்,
பகாப்ப தங்களே பகுதி யாகும்.

(இ - ள்.) தத்தம் பகாப்பதங்களே - (பெயர்ப்பகுபதங்களுள்ளும் வினைப் பகுபதங்களுள்ளும்) அதனதனுடைய (முன்னிற்கின்ற) பகாப்பதங்களே, பகுதி ஆகும் - பகுதிகளாகும், எ-று.

சாரியை சந்தி விகாரம் மூன்றும் புணரியலிலே சொல்லப்படுதலால், அவற்றை யொழித்துப் பகுதி விகுதி இடைநிலை என்ற மூன்றனுள் பகுதிகள் இவையெனக் கூறப்பட்டன.

பகுபதத்துள்ளே பகுதி விகுதி முதலிய உறுப்புகளெல்லாம் பகாப்பதமாயினும், விகுதி முதலியவற்றை மேலெடுத்துக் கூறுதலால், இங்கே "தத்தம் பகாப்பதங்கள்" என்றது முதனிலைகளை என்பது பெறப்பட்டது. (எ)

M. F. பண்புப்பகுதிகளுக்குச் சிறப்புவிதி :—ABSTRACT NOUN ROOTS, (SPECIAL RULE.)

135 செம்மை சிறுமை சேய்மை தீமை
வெம்மை புதுமை மென்மை மேன்மை
திண்மை யுண்மை நுண்மை யிவற்றெதிர்
இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே.

(இ-ள்.) செம்மை.. ...நுண்மை - செம்மைமுதல் நுண்மை ஈறுகச் சொல்லப்பட்ட பதினொன்றும், இவற்று எதிர் - இவைகளுக்கு எதிரான வெண்மை முதலானவைகளும், இன்னவும் -

இவைபோல்வன பிறவும், பண்பின் பகாநிலை - பண்புப் பொருளினின்றும் வேறுபொருள் பகுக்கப்படாத நிலையையுடைய, பதம் - பதங்களாகும், எ-று.

சொன்னிலையாற் பகுபதமாயினும் 'மை' விகுதிக்குப் பகுதிப் பொருளல்லது வேறுபொருள் இல்லாமையினாலே 'பண்புப் பகாநிலை' என்னாது 'பண்பிற்பகாநிலை' என்றார். இது 'சொற் பொருள் விரித்தல்' என்னு முத்தி. செம்மை சிறுமை சேய்மை தீமை முதலிய வாய்பாடுகள் 'எடுத்துக்காட்டல்' என்னு முத்தி.

இன்னவும் என்பன மடமை புன்மை இன்மை முதுமை இழுமை வறுமை அருமை முதலியவாம். (அ)

M F பண்புப்பகுதிகளின் விகாரம்:—CHARGES IN ABSTRACT NOUN ROOTS, (SPECIAL RULE.)

136. ஈறு போத லிடையுகர மிய்யாதல்
ஆதி நீட லடியகர மையாதல்
தன்னொற் றிரட்டன் முன்னின்ற மெய்திரிதல்
இனமிக லினையவும் பண்பிற் கியல்பே.

(இ-ள்.) ஈறு போதல் - இறுதியிலுள்ள மை விகுதியானது கெடுதலும், இடை உகரம் இ ஆதல் - நடுநின்ற உகரமானது இகரமாதலும், ஆதி நீடல் - முதலினின்ற குறிலானது நெடிலாதலும், அடி அகரம் ஐ ஆதல் - முதலினின்ற அகரமானது ஐகாரமாதலும், தன் ஒற்று இரட்டல் - தன் மெய்யானது நடுவே மிகுதலும், முன் நின்ற மெய் திரிதல் - முன்னின்ற மெய்யானது வேறொரு மெய்யாதலும், இனம் மிகல் - (வருமெழுத்திற்கு) இனவெழுத்து மிகுதலும், இனையவும் - இவைபோல்வன பிறவும், பண்பிற்கு இயல்பு - அப்பண்பினுக்கு இயல்பாகும், எ-று.

இவ்விகாரங்கள் பதப்புணர்ச்சிக்கும் கொள்க. இது 'ஒப்பின் முடித்தல்' என்னு முத்தி.

(உ-ம்.) நல்லன்—நன்மையின் மை விகுதி கெட்டது.
கரியன்—கருமையின் மை விகுதிகெட்டு நடுநின்ற உகரம் இகரமாயிற்று.

பாசி—பசுமையின் மை விகுதிகெட்டு ஆதிநீண்டது.

பைந்தார—பசுமையின் மை விகுதியும் நடுநின்ற உயிர் மெய்யுங் கெட்டு வருமெழுத்திற்கு இன வெழுத்து மிகுந்து முதலிலிருந்த அகரம் ஐகாரமாயிற்று.

வெற்றிலை—வெறுமையின் மை விகுதி கெட்டுத் தன்னொற்றிரட்டியது.

சேதாம்பல் — செம்மையின் மை விகுதிபோய் ஆதி நீண்டு முன்னின்ற மகரமெய் தகர மெய்யாகத் திரிந்தது.

அவ்விகாரங்கள் அன்பன் அழகன் முதலிய வாய்பாடுகளுக்கு அடையாமல் செம்மை முதலிய வாய்பாடுகளுக்கே அடைய வைத்தலால், 'எடுத்தமொழியி னெய்தவைத்தல்' என்னுமுத்தியாம்.

இவைபோல்வன பிறவாவன — பைந்தார் முதலியவற்றில், பசுமையின் இடைநின்ற உகரம் சகரமெய்யோடு கெடுதலும் கார்முதலிய இடங்களில் கருமையின் இடைநின்ற உகரம் கெடுதலும் முதலியன. (கூ)

M. F. தெரிநிலைவினைப்பகுதிக்குச் சிறப்புவிதி :— VERBAL (ROOTS, SPECIAL RULE.)

137. நடவா மடிசீ விடுகூ வேவை
நொப்போ வௌவுரி ஞுண்பொருந் திருந்தின்
தேய்பார் செல்வவ் வாழ்கே ளஃகென்
றெய்திய விருபான் மூன்றா மீற்றவும்
செய்யெ னேவல் வினைப்ப காப்பதமே.

(இ - ள்.) நடவா . . . அஃகு என்று-நட வா மடி சீ விடு கூ. வே வை நொ போ வௌ உரிஞ் உண் பொருந் திரும் தின் தேய் பார் செல் வவ் வாழ் கேள் அஃகு என்று, எய்திய - (முதனிலையாகப்) பொருந்திய, இருபான் மூன்று ஆம் - இருபத்து மூன்றாகும், ஈற்றவும் - (உயிரும், மெய்யுங் குற்றியலுகரமு மாகிய) ஈற்றையுடைய (இவை முதலாகிய) வாய்பாடுகளெல்லாம், செய் என் ஏவல்-செய் யென்கின்ற ஏவலினது, (பகாப்பதம்) -

பகாப்பதமாகிய பகுதியும், வினை - மற்றை வினைகளுக்கு, பகாப்பதம் ஆம் - பகாப்பதங்களாகிய பகுதியும் ஆகும், எ-று.

இருடான்மூன்றீற்றன வென்பது எகரம் வினாவிடைச் சொல்லிலும் அளபெடையிலும் தன்னை புணர்த்துமிடத்திலும் ஈறுகுதலல்லது மற்றச்சொற்களின் இறுதியினில்லா வாதலால் என்க.

'விகற்பத்தின் முடித்தல்' என்னு முத்தியால் இருபத்து மூன்றீற்றனவாக விகற்பித்து எடுத்துக்காட்டும் வாய்பாடுகளெல்லாம் இப்பொது வாய்பாட்டில் அடங்குமென்பார், 'முடிந்தது முடித்தல்' என்னு முத்தியால் 'செய்' எனவுங் கூறினார்.

'செய்யென் வினைப்பகாப்பதம்' என்றவளவிலே செய்யெனேவற் பகாப்பதமும் அடங்குமாயினும், முதனிலைகளே ஏவற் பொரு ளுணர்த்தாமல் ஆய் விகுதியோடு புணர்ந்து நின்று உணர்த்துமென் றறிவித்தற்கு வேறு கூறினார்.

ஏவற்பகுதி.

(உ - ம்.) நடவாய் வாராய் உண்ணாய் அஃகாய் தின்மின்.

முன்னிலை யேவலொருமை வினைச்சொற்கள் எதிர்கால வினை முற்றிற்குவரும் ஆய் விகுதி குன்றியும் வரும்.

(உ - ம்.) நட வா உண் தின் அஃகு.

இதுபோலவே, விகுதிபுணர்ந்து கெட்டுநிற்குஞ் சொற்கள் இன்னும் பலவுண்டு; அவையெல்லாம் பகுபத முடிக்கும்போது காண்பிக்கப்படும்.

மற்றை வினைப்பகுதி.

(உ - ம்.) நடந்தான் - வந்தான் - மடித்தான் - சீத்தான் - விட்டான் - கூவினான் - வெந்தான் - வைத்தான் - நொந்தான் - போயினான் - வெளவினான் - உரிஞினான் - உண்டான் - பொருநினான் - திருமினான் - தின்றான் - தேய்த்தான் - பார்த்தான் - சென்றான் - வவ்வினான் - வாழ்ந்தான் - கேட்டான் - அஃகினான்.

இந்நூலாசிரியர் வடநூன் மேற்கோளாக ஒருமொழிகளை விதந்து பகாப்பதம் பகுபதமெனக் காரணப்பெயர் தாமே

யிட்டு 'எழுத்தே' என்னுஞ் சூத்திரமுதல் இதுவரைக்கும் பகாப்பதம் பகுபதமெனப் பலதாஞ் சொல்லுதல் 'தன்குறி வழக்க மிகவெடுத்துரைத்தல்' என்னு முத்தி.

இத்தெரிநிலை வினைப்பகுதிகள் விகுதியோடு புணரும்போது, தொழுதான் - உண்டான் எனச் சில இயல்பாத லல்லாமலும், செல்—சேறல் என முதல் நீண்டும், தா—தந்தான் எனத் தனி நெடில் குறுகியும், சா — செத்தான் என முதல் ஆகாரம் எகரமாகியும், கொணு—கொணர்ந்தான் என முதல் அயலெழுத்துக் குறுகி ரகரமெய் விரிந்தும், விரவு—விராவினன் என நடுக் குறில் நீண்டும், முழுகு—முழுகினன், மூழ்கினன் என இயல்பும் விகாரமுமாக உறழ்ந்தும், வா — வருகிறன் எனத் தனி நெடில் குறுகி ஒருயிர்மெய் விரிந்தும், கல் — கற்றன் என ஈற்றுமெய் வருமெய்யாகத் திரிந்தும், செல்—சென்றன் என ஈற்றுமெய் வருமெழுத்திற்கு இனமாகத் திரிந்தும், இன்னும் பலவாறு விகாரப்பட்டும் வரும.

கா-சா-தா—இவை முறையே காத்தான் - செத்தான் - தந்தான் எனவும், கல் - நில் - புல்-சொல்—இவை கற்றன் - நின்றன் - புல்லினன் - சொன்னன் எனவும், ஒரு நிகராகிய பகுதிகள் பலவிதமாக விகாரப்படுதலால், அவையெல்லாம் தனித் தனிச் சொல்லப்புகுந்தால் விரியுமாதலால், செய்யுள் வழக்கத்தையும் உலகவழக்கத்தையும் பார்த்துச் செய்யுள் விகாரமும் புணர்ச்சி விகாரமுங் கொண்டு அமைத்துக்கொள்க.

தெரிநிலை வினைகள் நட - வா முதலாகிய முதனிலை வினைப் பகுதிகளி லிருந்தேயன்றிச் சிறுபான்மை பெயர்ச்சொற்களி லிருந்தும் இடைச்சொற்களிலிருந்தும் உரிச்சொற்களிலிருந்தும் பிறக்கும்.

(உ-ம்.)	கடைக்கண்	—கடைக்கணித்தான்	பெயர்ச் சொற்பகுதி.
	சித்திரம்	—சித்திரித்தான்.	
	போல்	—போன்றன்	இடைச்சொற் பகுதி.
	நிகர்	—நிகர்த்தான்.	
	மால்	—மாலும்	உரிச்சொற் பகுதி. (கυ)
	சால்	—சான்றன்.	

M. F பிறவினை ஏவற்பகுதிகட்குச் சிறப்புவிதி :—CAUSAL IMPERATIVE VERBAL ROOTS, SPECIAL RULE.

138. செய்யென் வினைவழி விப்பி தனிவரின்
செய்வியென் னேவ லிணையினீ ரேவல்.

(இ-ள்.) செய் என் வினைவழி - செய்யென்னும் வாய்பாட்டு முதனிலைத் தனிவினையின்பின், வி பி தனி வரின் - விவ்விகுதியாவது பிவ்விகுதியாவது தனித்து வருமாயின், செய்வி என் ஏவல் - (செய் என்னு மேவலின்மேல் ஓரேவலாய்ச்) செய்வி என்னும் வாய்பாட் டேவற்பகுதியாம், இணையின் - (அவ்வினையின்பின் இந்த விகுதிகள் தன்னொடும் பிறிதொடும்) இணைந்து வருமாயின், ஈரேவல் - செய்விப்பி என்னும் வாய்பாட் டேவற்பகுதியாம், எ-று.

(உ-ம்.)

வருவியாய், நடப்பியாய்	வி பி தனித்துவந்தன.
நடப்பிப்பியாய்	பி தன்னோடுஇணைந்துவந்தது.
வருவிப்பியாய்	வி பிறிதோடு இணைந்துவந்தது.

சிறுபான்மை 'உரையிற்கோடல்' என்னு முத்தியால் கு - சு - டு - து - பு - று என்கிற ஆறு விகுதிகளுள் ஒன்று பெற்றும் சில பகுதிகள் விகாரப்பட்டும் அப்படி வருமெனக் கொள்க.

(உ-ம்)

போ	— போக்கு	கு, சு, டு, து, பு, று விகுதிகள் பெற்று பிறவினையாயின.
பாய்	— பாய்ச்சு	
உருள்	— உருட்டு	
நட	— நடத்து	
எழு	— எழுப்பு	
துயில்	— துயிற்று.	
இயங்கு	— இயக்கு	பகுதிகள் விகாரப்பட்டுப் பிறவினையாயின.
திருந்து	— திருத்து	
தோன்று	— தோற்று	
ஆடு	— ஆட்டு	
தேறு	— தேற்று	
உருகு	— உருக்கு.	

இங்ஙனமேயன்றி, கரை தேய் மறை உடை அலை சோ மடி முதலியபகுதிகள் தன்வினை பிறவினைகட்குப் பொதுவாய்வரும்.

தன்வினை வினையானால், கரைந்தான் கரைந்திலன் கரைகின்றான் கரைகின்றிலன் கரைவான் கரையான் என வல்லெழுத்து மிகாமல் வரும்.

பிறவினையானால், கரைத்தான் கரைத்திலன் கரைக்கின்றான் கரைக்கின்றிலன் கரைப்பான் கரைக்கான் என வல்லெழுத்து மிக்குவரும். (கக)

வினைப்பகுதிக்குப் புறனடை :—A REMARK ON VERBAL ROOTS.

139. விளம்பியபகுதிவே றாதலும் விதியே.

(இ - ள்.) விளம்பிய பகுதி - (ஏவற்பகுதி வேறாதல்போல அதன்பின்னே) சொல்லப்பட்ட மற்றை வினைப்பகுதிகள், வேறு ஆதலும் - வேறுபடுதலும், விதியே - விதியேயாகும், எ-று.

(உ - ம்.) நடத்தினான், நடப்பித்தான், நடத்துவிப்பித்தான் எனவரும். இங்கே தன்வினைப்பகுதிகள் பிறவினைப்பகுதிகளானமை காண்க. (கஉ)

விகுதி.

PERSONAL AND OTHER TERMINATIONS.

140. அன் ஆன் அள் ஆள் அர் ஆர் பம் மார்
அ ஆ கு டு து று என் ஏன் அல் அன்
அம் ஆம் எம் ஏம் ஓ மொ டும்றூர்
க ட த ற ஐ ஆய் இம் மின் இர் ஈர்
ஈயர் கயவு மென்பவும் பிறவும்
வினையின் விகுதி பெயரினுஞ் சிலவே.

(இ - ள்.) அன்... ...என்பவும் - அன் ஆன் முதல் முப்பத்தேழாகச் சொல்லப்பட்டவைகளும், பிறவும் - (இவைபோல்வன) பிறவும், வினையின் விகுதி - வினைப் பகுபதங்களின் விகுதிகளாகும்; பெயரினும் - பெயர்ப் பகுபதங்களிலும், சில - (இவற்றுள்) சில விகுதிகளாகும், எ-று.

அன் விகுதி தன்மைக்கு 'எதிரதுபோற்றல்' என்னு முத்தியாற் சேர்க்கப்பட்ட தாகலின் வலியுறுத்தற்குப் பின்னுங் கூறினார்.

வினைப்பகுபதங்களின் விகுதி.

(உ-ம்.) நடந்தனன், நடந்தான் —	அன் ஆன் ஆண்பாற்படர்க்கை.
நடந்தனள், நடந்தாள் —	அள் ஆள் பெண்பாற்படர்க்கை.
நடந்தனர், நடந்தார், நடப்ப, நடமார் —	அர் ஆர் ப மார் பல்லோர்படர்க்கை.
நடந்தன, நடவா —	அ ஆ பலவின்படர்க்கை.
உண்கு, உண்டு, நடந்து, சேறு, நடந்தனென், நடந்தேன், நடப்பல், நடப்பன் —	கு, டு, து, று, என், ஏன், அல், அன் தன்மையொருமை.
நடப்பம், நடப்பாம், நடப்பெம், நடப்பேம், நடப்போம், நடக்கும், உண்டும், நடத்தும், சேறும் —	அம், ஆம், எம், ஏம், ஓம், கும், டும், தும், றும், தன்மைப்பன்மை.
நடந்தனை, நடந்தாய் சேறி —	ஐ, ஆய், இ முன்னிலையொருமை.
நடமின், நடந்தனிர், நடந்திர் —	மின், இர், ஈர் முன்னிலைப்பன்மை.
நிலீயர், நடக்க, வாழிய —	ஈயர், க, ய வியங்கோள்.
நடக்கும் —	உம்-செய்யுமென் முற்று.

டு து று விகுதிகள் ஒன்றனபாலில் வரும்போது தாமே காலங்காட்டாது.

(உ-ம்.) குறுந்தாட்டு, நடந்தது, கூயிற்று.

'பிறவும்' என்றதனால் நடந்திடு, எழுந்திரு, அருளு, மருல், அழேல், சொல்லிக்காண் என, இடு - இரு - உ - ஆல் - ஏல் - காண், முதலியவும் வரும். இவையெல்லாந் தெரிநிலை வினைமுற்றுக்கள்.

வினைக்குறிப்பு முற்றுக்கள் குறிப்பாகக் காலங்காட்டுவன வாதலால், இந்த விகுதிகளுக்குள்ளே தாமே காலங்காட்டும் விகுதிகளொழிந்த அன், ஆன், அள், ஆள், அர், ஆர், அ, டு, து, று, என், ஏன், அம், ஆம், எம், ஏம், ஓம் ஐ, ஆய், இ, இர், ஈர் என்னும் விகுதிகளோடு வருமெனக் கொள்க.

(உ - ம்.)

படர்க்கை.	தன்மை.	முன்னிலை.
குழையன்	குழையினென்	குழையினை
குழையான்	குழையினேன்	குழையாய்
குழையள்	குழையம்	வில்லி
குழையாள்	குழையாம்	குழையினிர்
குழையர்	குழையினெம்	குழையீர்.
குழையார்	குழையினேம்	
குழையன	குழையினோம்.	
குறுந்தாட்டு		
குழையது		
குழையிற்று.		

'பெயரினுஞ்சில' என்றதனால் இவ்விகுதிகளுள்—அன், ஆன். அள், ஆள், அர், ஆர், மார், அ, து, இ என வருகின்றவைகளுடனே மன், மான், கள், வை, தை, கை, பி, முன், அல், ன், ள், ர், வ், முதலானவைகளும் பிறவும் பெயர் விகுதிகளாம்.

(உ - ம்.)

குழையன்	தேவிமார்	கோக்கள்	தோன்றல்
வானத்தான்	குழையன	அவை	பிறன்
குழையள்	யாது	எந்தை	பிறள்
வானத்தாள்	பொன்னி	எங்கை	பிறர்
குழையர்	வடமன்	எம்பி	அவ்
வானத்தார்	கோமான்	எம்முன்	

இன்னும் 'வினையின்விகுதி பெயரினுஞ் சில' என்றதனாலும், 'பிறவும்' என்றதனாலும், பலவகைப்பட்ட வினைகளுக்கும் பெயர்களுக்கும் இவ் விகுதிகளுக்குள் அடங்கியும் அடங்காமலும் வரும் விகுதிகளெல்லாங் கொள்ளப்படும்.

தெரிநிலைபெயரெச்சவிகுதிகள்:—அ, உம்.

(உ-ம்.) நடந்த, நடக்கின்ற, நடக்கும் என வரும்.

குறிப்புப்பெயரெச்சவிகுதி:—அ. (உ-ம்.) பெரிய. உம் விகுதி காலங்காட்டு மாதலால் குறிப்பில் வாராது.

தெரிநிலைவினையெச்சவிகுதிகள்:—

உ இ ய் பு ஆ ஊ என ; அ ; இன் ஆல் கால் கு இய இயர் வான் பான் பாக்கு கடை வழி இடத்து ; உம் ; மல் மை மே து என் பனவும் பிறவுமாம். கடையிற் கூறிய மல்முதலிய நான்கும் எதிர்மறையில் மாத்திரம் வரும்.

(உ - ம்.)

நடந்து	உண்டென;	உண்ணிய	செய்தவழி
ஓடி	உண்ண;	உண்ணியர்	செய்தவிடத்து;
போய்	நடக்கின்	வருவான்	காண்டலும்;
உண்குபு	நடந்தால்	உண்பான்	உண்ணாமல்
உண்ணூ	ஒலித்தக்கால்	உண்பாக்கு	உண்ணாமை
உண்ணூ	உணற்கு	செய்தக்கடை	உண்ணாமே.
			உண்ணாது.

குறிப்பு வினையெச்சவிகுதிகள்:—அ றி து ஆல் மல் கால் கடை வழி இடத்து என்பனவும் பிறவுமாம்.

(உ - ம்.) மெல்ல அன்றி அல்லது அல்லால் அல்லாமல் அல்லாக்கால் அல்லாக்கடை அல்லாவழி அல்லாவிடத்து.

தொழிற்பெயர்விகுதிகள்:—தல் - அல் - அம் - ஐ - கை - வை - கு - பு - உ - தி - சி - வி - உள் - காடு - பாடு - அரவு - ஆனை - மை - து - மதி - மானம் முதலியன.

(உ - ம்.)

நடத்தல்	போக்கு	விக்குள்	பாய்த்து
ஆடல்	நடப்பு	சாக்காடு	ஏற்றுமதி
வாட்டம்	வரவு	கோட்பாடு	வருமானம்.
கொலை	மறதி	தோற்றரவு	
நடக்கை	புணர்ச்சி	வாரானை	
பார்வை	புலவி	நடவாமை	

துவ்விகுதி நடந்தது, நடக்கின்றது, நடப்பது என முக்கால இடைநிலையோடும், மை விகுதி நடந்தமை, நடக்கின்றமை என இறந்தகால நிகழ்கால இடைநிலைகளோடும் கூடியும் வரும்.

இவ்விகுதிகளில் ஒன்று புணர்ந்து கெட்டும் வரும், அது முதனிலைத்தொழிற்பெயரென்பர்.

(உ-ம்.) அடி அறி கெடு.

விகுதி புணர்ந்துகெடும்போது பகுதி விகாரப்பட்டும் வரும். அது முதனிலைதிரிந்த தொழிற்பெயரென்பர்.

(உ-ம்.) கோள் கேடு இடையீடு.

பண்புப்பெயர்விகுதிகள்:—மை - ஐ - சி - பு - உ - கு - றி - று - அம் - நர் - பம் முதலியன.

(உ-ம்.) நன்மை	மாண்பு	நன்றி	நன்னர்
தொல்லை	மழவு	நன்று	திட்பம்.
மாட்சி	நன்கு	நலம்	

எதிர்மறைவிகுதிகள்:—இல் - அல் - ஆ என்பன.

(உ - ம்.) நடந்திலன்	நடக்கலன்
நடக்கின்றிலன்	நடவாதான்.
நடக்கிலன்	

பிறவினைவிகுதிகள்:—வி - பி - கு - சு - டு - து - பு - று என்பன.

(உ - ம்.) வருவித்தான்	உருட்டினான்
நடப்பித்தான்	நடத்தினான்
போக்கினான்	எழுப்பினான்
பாய்ச்சினான்	துயிற்றினான்.

கரை தேய் முதலியபகுதிகள் பிறவினைப்பொருள் தரும்போது வலி மிகுந்தும், தன்வினைப்பொருள் தரும்போது வலி மிகாமலும் வருதற்கு 'செய்யென்வினைவழி' என்னும் சூத்திரத்தின் கீழ்காட்டிய உதாரணத்தையே கொள்க.

இ, ஐ, அம் விகுதிகள் அலரி - பறவை - எச்சம் என வினைமுதற்பொருளையும், ஊருணி - தொடை - தொல்காப்பியம் எனச் செயப்படுபொருளையும், மண்வெட்டி - பார்வை - நோக்கம் எனக் கருவிப் பொருளையும் உணர்த்திவரும்.

வினைமுதற்பொருளை உணர்த்தும் விகுதியும் செயப்படுபொருளை யுணர்த்தும் விகுதியும், பகுதியோடு புணர்ந்து பின் கெட்டும் வரும்.

(உ-ம்.) காய் தளிர் பூ கனி திரை நுரை அலை என்பவைகளில் வினைமுதற் பொருளை யுணர்த்தும் விகுதிபுணர்ந்து கெட்டது. உண் உரி துணி மடி என்பவைகளில் செயப்படு பொருளுணர்த்தும் விகுதிபுணர்ந்து கெட்டது.

விடு, ஒழி விகுதிகள் வந்துவிட்டான், கேட்டொழிந்தான் எனத் துணிவுப்பொருளை யுணர்த்திவரும்.

கொள் விதி அடித்துக்கொண்டான், கடித்துக்கொண்டான் எனத் தற்செயலுணர்த்திவரும்.

படு, உண் விகுதிகள் கட்டப்பட்டான், கட்டுண்டான் எனச் செயப்பாட்டு வினைகளுக்கு வரும்.

மை விகுதி ஆண்மை பெண்மை எனத் தன்மைப்பொருளை யுணர்த்தும்.

இரு இடு என்பன எழுந்திருக்கின்றான் உரைத்திடுகின்றான் எனப் பகுதிப்பொருளாக வரும்.

'வரிப்புனைபந்து' என்பதில் வரிந்து என்பதன் வினையெச்ச விகுதியும் கொள்வாருங் கள்வருநேர் என்பதில் நேர்வர் என்பதன் வினைமுற்று விகுதியுங்கெட்டு வந்தன. இவ்வாறு சிறுபான்மை கெட்டுவருதலும் உண்டு.

எல்லாவிகுதிகளையும் அளவுசெய்தல் கூடாமையால், அதிகமாக வழங்குகிற சில விகுதிகளைக் காட்டினோம். (கங)

இடைநிலை.

MEDIAL PARTICLES.

பெயரிடைநிலை :—MEDIAL PARTICLES OF NOUNS.

141. இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலின்
பகுதி விகுதி பகுத்திடை நின்றதை
வினைப்பெய ரல்பெயர்க் கிடைநிலை யெனலே.

(இ-ள்.) இலக்கியம் கண்டு - (அறிவுடையோராலே நியமிக்கப்பட்ட) இலக்கியத்தைப் பார்த்து, அதற்கு - அவ்விலக்கி

யத்திற்கு, இலக்கணம் - (அவ்விலக்கியத்தி னமைதியே) இலக்கணமாக, இயம்பலின் - சொல்லுதலால், பகுதி விகுதி பகுத்து - (முன்சொல்லப்பட்ட) பகுதியையும் விகுதியையும் பிரித்து - இடை நின்றதை - நடுநின்றதை, வினைப்பெயர் அல் பெயர்க்கு - வினையாலணையும் பெயரல்லாத பெயர்களுக்கு, இடைநிலை எனல் - இடைநிலையென்று சொல்லுக, எ-று.

(உ - ம்.) அறிஞன் கவிஞன் — ஞ்
ஓதுவான் பாடுவான் — வ்
வலைச்சி இடைச்சி — ச் } இடைநிலை.
வண்ணாத்தி பாணத்தி — த்
செட்டிச்சி தச்சச்சி. — இச்

மற்றவையு மிப்படியே வருதல் காண்க. (கச)

* **141** (*a*) காலம் மூன்று :—THE THREE TENSES.

இறப்பெதிர்வு நிகழ்வெனக் கால மூன்றே.

[See சூத்திரம் 382-பொதுவியல்.]

M. F இறந்தகாலவினை இடைநிலை :—MEDIAL PARTICLES OF VERBS OF THE PAST TENSE.

142. தடறவொற் றின்னே யைம்பான் மூவிடத்
திறந்த காலந் தருந்தொழி லிடைநிலை.

(இ - ள்.) த ட ற ஒற்று - தகர டகர றகர மெய்களும், இன் - இன்னும், ஐம்பால் மூவிடத்து - ஐம்பால் மூவிடங்களிலும், இறந்த காலம் தரும் - இறந்தகாலத்தைக் காட்டுகின்ற, தொழில் இடை நிலை - வினைப்பகுபதங்களினுடைய இடைநிலைகளாகும், எ-று.

(உ - ம்.) நடந்தான் நடந்தேன்
நடந்தாள் நடந்தோம்
நடந்தார் நடந்தாய் } த் இடைநிலை.
நடந்தது நடந்தீர்.
நடந்தன

---

* இப்பொதுவியற்சூத்திரம் தகுதிபற்றி இங்கு சேர்க்கப்பட்டது. இதன் உரை முதலியன அவ்வியலிற் கண்டுகொள்க.

உண்டான் — ட் இடைநிலை.
சென்றான் — ற் ,,
உறங்கினன் — இன் ,,

'இன்' இடைநிலை 'எஞ்சியது' எனக் கடைகுறைந்தும், 'போனது' என முதல் குறைந்தும் வரும். (கஈ)

F. M. நிகழ்காலவினை இடைநிலை :—MEDIAL PARTICLES OF VERBS OF THE PRESENT TENSE.

143 ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்
ஐம்பா னிகழ்பொழு தறைவினை யிடைநிலை.

(இ - ள்.) ஆநின்று கின்று கிறு - ஆநின்று கின்று கிறு என்பன, ஐம்பால் மூவிடத்தின் - ஐம்பால் மூவிடங்களிலும், நிகழ்பொழுது அறை - நிகழ்காலத்தைக் காட்டுகின்ற, வினை-வினைப் பகுபதங்களினுடைய, இடைநிலை - இடைநிலைக ளாகும், எ-று.

(உ - ம்.) நடவாநின்றான் — ஆநின்று இடைநிலை.
நடக்கின்றான் — கின்று ,,
நடக்கிறான். — கிறு ,, (கசு)

F. M. எதிர்காலவினை இடைநிலை :—MEDIAL PARTICLES OF VERBS OF THE FUTURE TENSE.

144 பவ்வ மூவிடத் தைம்பா லெதிர்பொழு
திசைவினை யிடைநிலை யாமிவை சிலவில.

(இ - ள்.) பவ்வ - பகரமெய்யும் வகரமெய்யும், ஐம்பால் மூவிடத்து - ஐம்பால் மூவிடங்களிலும், எதிர் பொழுது இசை - எதிர்காலத்தைக் காட்டுகின்ற, வினை இடைநிலை ஆம் - வினைப் பகுபதங்களினுடைய இடைநிலைகளாகும், இவை - இம் மூக்கால இடைநிலைகளும், சில - சில (முற்றெச்சங்களுக்கு), இல - இல்லை, எ-று.

(உ - ம்.) நடப்பான் — ப் இடைநிலை.
வருவான். — வ் ,,

இவை 'சிலவில' என்றதனால் விகுதியாவது பகுதியாவது வேறிடைநிலையாவது காலங் காட்டுமென்பது பெற்றாம். அவை பின்வருஞ் சூத்திரத்திற் காண்க. (கஎ)

F. M. காலங்காட்டும் விகுதி :—VERBAL TERMINATIONS SHEWING TENSE.

145. றவ்வொ டுகர வும்மைநிகழ் பல்லவும்
தவ்வொ டிறப்பு மெதிர்வும் டவ்வொடு
கழிவுங் கவ்வோ டெதிர்வுமின் னேவல்
வியங்கோ ளிம்மா ரெதிர்வும் பாந்தம்
செலவொடு வரவுஞ் செய்யுநிகழ் பெதிர்வும்
எதிர்மறை மும்மையு மேற்கு மீங்கே.

(இ-ள்.) றவ்வொடு உகர உம்மை - றகரமெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும், நிகழ்பு அல்லவும் - இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும், தவ்வொடு (உகரவும்மை) - தகரமெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும், இறப்பும் எதிர்வும் - இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும், டவ்வொடு (உகரவும்மை) - டகர மெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும், கழிவும் - இறந்தகாலத்தையும், கவ்வோடு (உகர உம்மை) - ககர மெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும், எதிர்வும் - எதிர்காலத்தையும், மின் - மின் விகுதியும், ஏவல் - முன்னிலையேவல் விகுதிகளும், வியங்கோள் - வியங்கோள் விகுதிகளும், இ - இகர விகுதியும், மார் - மார் விகுதியும், எதிர்வும் - எதிர்காலத்தையும், பாந்தம்-பகரவிகுதி, செலவொடு வரவும் - இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும், செய்யும் - செய்யுமென்னும் (வாய்பாட்டு முற்று விகுதி), நிகழ்பு எதிர்வும் - நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும், எதிர்மறை - எதிர்மறை (ஆகாரவிகுதி), மும்மையும் - மூன்று காலத்தையும், ஏற்கும் - ஏற்று வரும், ஈங்கு - "இவை சிலவில" என்றவைகளுள், எ-று.

அந்தம் என்பதனை எல்லாவற்றிலும் ஒட்டுக.

அந்தம்—ஈறு விகுதி.

(உ-ம்.)

சென்று	(சென்றேன்)	று	இறப்பு.
சென்றும்	(சென்றோம்)	றும்	
சேறு	(செல்வேன்)	று	எதிர்வு.
சேறும்	(செல்வோம்)	றும்	

வந்து	(வந்தேன்)	து	இறப்பு.
வந்தும்	(வந்தோம்)	தும்	
வருது	(வருவேன்)	து	எதிர்வு.
வருதும்	(வருவோம்)	தும்	
உண்டு	(உண்டேன்)	டு	இறப்பு.
உண்டும்	(உண்டோம்)	டும்	
உண்கு	(உண்பேன்)	கு	எதிர்வு.
உண்கும்	(உண்போம்)	கும்	
உண்மின்		மின்	
உண்ணீர்		ஈர்	
உண்ணும்		உம்	
உண்ணாய்		ஆய்	
உண்க		க	
வாழிய		இய	
வாழியர்		இயர்	
சேறி	(செல்வாய்)		
உண்மார்	(உண்பார்)		
உண்ப	(உண்டார) (உண்பார்)		இறப்பு எதிர்வு.
உண்ணும்			நிகழ்வு எதிர்வு.
உண்ணு			முக்காலமும்.

காலங்காட்டும் விகுதிகளைமட்டுஞ் சொல்லிக் காலங்காட்டும் பகுதியையும் பிற இடைநிலையையுஞ் சொல்லாமையால், அவை சிறுபான்மை வரும்; வந்தவிடங்களிற் கண்டுகொள்க என்றாராயிற்று. அவை வருமாறு :—

தொட்டான் - உற்றான் - புக்கான் என டு - று - கு - என்கிற மூன்றெழுத்துகளுள் ஒன்று ஈறுகிய சில குறிலிணைப்பகுதிகள் விகாரப்பட்டு இறந்தகாலங் காட்டும்.

என்மனார், என்றிசினோர், போயது என மன் - இசின் - ய் இம்மூன்று இடைநிலைகளும் இறந்தகாலங் காட்டும்.

உண்ணாநின்றான் - உண்ணாவிருந்தான் என ஆநின்று ஆவிருந்து என்னும் இரண்டு இடைநிலைகளும் நிகழ்காலமும் என்மர் என மகர இடைநிலை எதிர்காலமும், காட்டும்.

'ஈங்கே' என்ற மிகையால் வருதி என இகரவிகுதி நிகழ் காலங் காட்டுதலையும், எச்சவிகுதிகள் காலங்காட்டுதலையும் அமைத்துக்கொள்க.

இனிப் பகுதி விகுதி முதலிய உறுப்புகளாற் பதபத முடிக்குமாறு.

பொன்னன் என்கிற உயர்திணை ஆண்பால் ஒருமைப் படர்க்கைப் பொருட்பெயர்ப்பகுபதத்தை முடிக்குமிடத்து, "பொருளிடங்காலம்" என்னுஞ் சூத்திரவிதியால், பொன் - என்னும் பகுதியை முதலில் வைத்து, அதன்பின் "அன் ஆன் அள் ஆள்" என்னுஞ் சூத்திரவிதியால் உயர்திணை ஆண்பாலொருமைப் படர்க்கையைக் காட்டுகிற அன் - விகுதியை வருவித்து, பொன் - அன் என வைத்து, "தனிக்குறின் முன்ஒற்றுயிர்" என்னுஞ் சூத்திரவிதியால் பகுதி ஈற்று னகரமெய்யை யிரட்டித்து, பொன் - ன் - அன் என வைத்து, "உடன்மேலுயிர்" என்னுஞ் சூத்திரவிதியால் அகரவுயிரை மிகுந்த னகரமெய்யின்மே லேற்றி, பொன்னன் என முடிக்க.

நடந்தனன் என்கிற உயர்திணை ஆண்பால் ஒருமைப்படர்க்கை இறந்தகால இயற்றும் வினைமுதற் றெரிநிலை வினைமுற்றுப் பகுபதத்தை முடிக்குமிடத்து,—"நடவா" என்னுஞ் சூத்திரவிதியால் நட - என்னும் பகுதியை முதலில் வைத்து, "அன் ஆன் அள் ஆள்" என்னுஞ் சூத்திரவிதியால் உயர்திணை ஆண்பாலொருமைப் படர்க்கையைக் காட்டுகிற அன் - விகுதியை அதன்பின் வருவித்து, நட - அன் என வைத்து, "தடறவொற்றின்னே" என்னுஞ் சூத்திரவிதியால் இறந்தகாலங் காட்டுந் தகர இடைநிலையை அவ்விரண்டிற்கும் நடுவிலே வருவித்து, நட - த் - அன் என வைத்து, "அன் ஆன் இன் அல்" என்னுஞ் சூத்திரவிதியால் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையிலே அன் சாரியையை வருவித்து, நட - த் - அன் - அன் என வைத்து, "உடன்மேலுயிர்வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் இடைநிலைத் தகர மெய்யின்மேலே சாரியை அகரவுயிரை ஏற்றி, நட - தன் - அன் என வைதது, இன்னும் அச்சூத்திரவிதியால் சாரியை னகரமெய்யின்மேல் விகுதி அகர வுயிரை ஏற்றி, நட-

தனன் என வைத்து, "இயல்பினும்" என்னுஞ் சூத்திரவிதியால் இடைநிலைத் தகரத்தை மிகுவித்து, நடத்தனன் என வைத்து, "வலித்தன் மெலித்தல்" என்னுஞ் சூத்திரவிதியால் மிகுந்த தகரவல்லொற்றை நகரமெல்லொற்றாக்கி, நடந்தனன் என முடிக்க.

நட - உண் என வருகிற முன்னிலையேவல்வினைகளிலே ஆய் விகுதியும், நடவான் - நடவேன் - நடவாய் என்கிற எதிர்மறை வினைகளிலே ஆ என்னும் எதிர்மறை விகுதியும், கொல்களிறு- ஓடாக்குதிரை என்பவைகளிலே கொன்ற - கொல்கின்ற - கொல்லும்-ஓடாத என வருகிற பெயரெச்சவினை விகுதிகளும், 'வரிப்புனைபந்து' இதில் 'வரிந்து' என வருகிற வினையெச்ச விகுதியும, 'கொள்வாரும்கள்வருநேர்' இதில் நேர்வர் என வருகிற முற்றுவினை விகுதியும், முடி - அடி என்பவைகளிலே முடித்தல் - அடித்தல் என வருகிற தொழிற்பெயர் விகுதியும், காய் - தளிர் இவைகளில் வினைமுதற் பொருளுணர்த்தும் இகரவிகுதியும், ஊண் - எழுத்து இவைகளிலே செயப்படுபொருளுணர்த்தும் ஐ விகுதியும் புணர்ந்து குன்றின அவ்விகுதிகள், புணர்ந்து குன்றினும் புணர்ந்து நின்றாற் போலவே பொருளுணர்த்தும். இவ்விடயங்களை முன்னரும் காட்டினும். உய்த்துணர்க. (கஅ)

வடமொழி யாக்கம்.

[ஆரியமொழி தமிழில் வடமொழியாதல்.]

EXPRESSION OF SANSKRIT WORDS IN TAMIL.

பொதுவிதி:—GENERAL RULE.

146. இடையி னான்கு மீற்றி லிரண்டும்
அல்லா வச்சை வருக்க முதலீறு
யவ்வாதி நான்மை ளவ்வாகு மையைம்
பொதுவெழுத் தொழிந்தநா லேழுந் திரியும்.

(இ - ள்) இடையில் நான்கும் - (ஆரியத்தில் அ ஆ இ ஈ உ ஊ ஐ ஔ ஏ ஐ ஓ ஔ அம் அः என்கிற உயிர்

ப்திறுறனுள்) நடுவிலிருக்கிற (𑌋, 𑍠, 𑌌, 𑍡 என்கிற) நாலெ ழுத்துகளும், ஈற்றில் இரண்டும் - கடையிலிருக்கின்ற (𑌅𑌂 𑌅𑌃 என்கிற) இரண்டெழுத்துகளும், அல்லா - நீங்கலாகிய, அச்சு - (அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ என்கிற பத்து) உயிர்களும், ஐவ ருக்கம் - (𑌕 𑌖 𑌗 𑌘 𑌙 𑌚 𑌛 𑌜 𑌝 𑌞 𑌟 𑌠 𑌡 𑌢 𑌣 𑌤 𑌥 𑌦 𑌧 𑌨 𑌪 𑌫 𑌬 𑌭 𑌮 𑌯 𑌰 𑌲 𑌵 𑌶 𑌷 𑌸 𑌹 𑌳 𑌕𑍍𑌷 𑌃𑌕 𑌃𑌪 என்கிற மெய் முப்பத்தேழுள் ககரமுதல் ஐந்தைந் தெழுத்து களாகிய) ஐவருக்கங்களுடைய, முதல் - முதலில் இருக்கிற (க ச ட த ப என்கிற ஐந்து) மெய்களும், ஈறு - கடையில் இருக்கின்ற (ங ஞ ண ந ம என்கிற ஐந்து) மெய்களும், ய ஆதி நான்மை - ய ர ல வ என்கிற நான்கு மெய்களும், ள - ளகரமெய்யும், ஆகும் ஐயை எழுத்து - ஆகிய இருபத்தைந் தெழுத்துகளும், பொது - (தமிழிற்கும் ஆரியத்திற்கும்) பொ துவெழுத்துகளாகும்; ஒழிந்த - அவையொழிந்த, நாலேழும் - இருபத்தெட்டு எழுத்துகளும், திரியும் - (ஆரியத்திற்குச் சிறப் பெழுத்துகளாய்த் தமக்கேற்ற பொது வெழுத்துகளாகத் திரிந் துவரும், எ-று.

ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுவெழுத்தாலாகி விகார மின்றித் தமிழில் வந்துவழங்கும் வடமொழிதற்சமம் என்பர். (உ-ம்.) அமலம், கமலம், காரணம் முதலியன.

ஆரியத்துக்குரிய சிறப்பெழுத்தாலும், பொதுவும் சிறப்பு மாகிய ஈரெழுத்தாலுமாகித் திரிதல் முதலிய விகாரம்பெற் றுத் தமிழில் வந்து வழங்கும் வடமொழி தற்பவமென்னப் படும். (உ - ம்.) சுகி போகி சுத்தி எனவும், அரன் செபம் ஞானம் எனவும் வரும். (௧௧)

சிறப்புவிதி :—SPECIAL RULE.

147. அவற்றுள்,

ஏழாமுயி ரிய்யு மிருவுமை வருக்கத்
திடையின் மூன்று மவ்வம் முதலும்
எட்டே யவ்வு முப்பது சயவும்
மேலொன்று சடவு மிரண்டு சதவும்

முன்றே யகவு மைந்திருகவ்வும்
ஆவீ ரையு மீயீ றிகரமும்.

(இ-ள்.) அவற்றுள் - (முன்னே "திரியும்" என்ற) எழுத்துக ளுள், ஏழ் ஆம் உயிர் - (சிறப்பெழுத்தாகிய) ஏழாமுயிரானது, இய்யும் இருவும் - இகரமாகவாவும் இருவாகவாவும் (வரும்); ஐ வருக்கத்து இடையில் மூன்றும் - ஐந்துவருக்கங் களிலும் நடுநின்ற மும்மூன்று மெய்யெழுத்துகளும், அவ் வம் முதலும் - அவ்வவ் வருக்கங்களின் முதலெழுத்துகளா கும்; எட்டு - எட்டாவதாகிய சகரவருக்கத்து மெய்யானது, யவ்வும் - (ஒரோவிடத்தில்) யகரமுமாகும்; முப்பது - முப்ப தாமெய்யானது, சயவும் - (மொழிக்கு முதலிலே) சகரமும் (நடுவிலே) யகரமு மாகும்; மேல் ஒன்று - முப்பத்தோரா மெய்யானது, சடவும் - (மொழிக்கு முதலிலே) சகரமும் (நடு விலே) டகரமு மாகும்; இரண்டு - முப்பத்திரண்டா மெய்யா னது, சதவும் - (மொழிக்கு முதலிலே) சகரமும் (நடுவிலே) தகரமு மாகும்; மூன்று - முப்பத்துமூன்ற மெய்யானது, அக வும் - (மொழிக்கு முதலிலே) அகரமும் (நடுவிலே) ககரமு மா கும்; ஐந்து - முப்பதைந்தா மெய்யானது, இரு கவ்வும் - இரண்டு ககர மாகும்; ஆ ஈறு - பொதுவெழுத்துகளிலே மொழியிறுதி ஆகாரமானது, ஐயும் - ஐகார மாகும்; ஈ ஈறு - மொழியிறுதி ஈகாரமானது, இகரமும் - இகர மாகும், எ - று.

(உ - ம்.)

ருஷப:	— இடபம்	ஏழாமுயிர் இகரமும் இருவு மாயிற்று.
ம்ருக:	— மிருகம்.	

நகம்	— நகம்	கூடம்	— கூடம்.	ஐந்துவருக்கத்திடை நின்ற மும்மூன்றும் அவ்வவ் வருக்கத்து முதலெழுத்தாயின.
நாக:	— நாகம்	ஸ்தலம்	— தலம்	
மேக:	— மேகம்.	திநம்	— தினம்	
ஜலவாதி	— சலவாதி	தரா	— தரை.	
விஜய:	— விசயம்	பலம்	— பலம்	
ஸுஸர்ணா	— சருச்சனை.	பந்த:	— பந்தம்	
பீடம்	— பீடம்	பார:	— பாரம்.	
ஜடம்	— சடம்			

𑌪𑌂𑌕𑌜𑌃	— பங்கயம்	ஜ மொழியிடையில் யகரமாயிற்று.
𑌶𑌂𑌕𑌰𑌃	— சங்கரன்	ஶ முதலில் சகரமும், இடையில் சகரமும் யகரமுமாயிற்று.
𑌪𑌾𑌶𑌃	— பாசம்	
𑌦𑍇𑌶𑌃	— தேயம்	
𑌷𑌣𑍍𑌮𑍁𑌖𑌃	— சண்முகன்	ஷ முதலில் சகரமும் இடையிலும் கடையிலும் டகரமுமாயிற்று.
𑌵𑌿𑌷𑌮𑍍	— விடம்	
𑌭𑌾𑌷𑌾	— பாடை	
𑌸𑌭𑌾	— சபை	ஸ முதலில் சகரமும், இடையில் சகரமும் தகரமுமாயிற்று.
𑌵𑌾𑌸𑌃	— வாசம்	
𑌮𑌾𑌸𑌃	— மாதம்	
𑌹𑌰𑌃	— அரன்	ஹ முதலில் அகரமும், இடையிலும் கடையிலும் ககரமுமாயிற்று.
𑌮𑍋𑌹𑌃	— மோகம்	
𑌮𑌹𑍀	— மகி	
𑌪𑌕𑍍𑌷𑌃	— பக்கம்	க்ஷ மொழியிடையில் இரண்டு ககரமாயிற்று.
𑌮𑌾𑌲𑌾	— மாலை	ஆகார ஈறு ஐகார ஈறு ஆயிற்று.
𑌪𑍁𑌰𑍀	— புரி	ஈகார ஈறு இகர ஈறு ஆயிற்று.

இச்சூத்திரக்கடை இகரமாகும் எனமுடியாமல், இகரமும் என அவாய்நிலையாக நிற்றலால், க்ஷகரம் இருககரமாதலன்றி க்ஷணம் - கணம், க்ஷமை - கமை, க்ஷீரம் - கீரம் என ஒரு ககரமாதலும்; பக்ஷம் - பட்சம், கக்ஷி - கட்சி, மோக்ஷம் - மோட்சம் என டகர சகரங்களாதலும்; பிக்ஷை - பிச்சைஎன இருசகரமாதலும், க்ஷேமம் - சேமம் என ஒரு சகரமாதலும் கொள்க.()

148. ரவ்விற் கம்முத லாமுக் குறிலும்
லவ்விற் கிம்முத லிரண்டும் யவ்விற்
கிய்யு மொழிமுத லாகிமுன் வருமே.

(இ - ள்.) ரவ்விற்கு - ரகரத்திற்கு, அம்முதலாம் முக்குறிலும் - அ இ உ என்கிற மூன்று குற்றெழுத்துகளி லொன்றும்,

லவ்விற்கு - லகரத்திற்கு, இம்முதல் இரண்டும் - இ உ என்கிற இரண்டி லொன்றும், யவ்விற்கு - யகரத்திற்கு, இய்யும் - இகரமும், மொழி முதல் ஆகி - (அவ்வெழுத்துகளை முதலினுடைய) வடமொழிகளுக்கு முதலாகி, முன் வரும் - (அம் மூன்றெழுத்துகளுக்கு) முன்னே வரும், எ-று.

(உ-ம்.)

ரங்க:	— அரங்கம்	ரகர முதன்மொழிகளுக்கு அ, இ, உ என்பவற்றில் ஒன்று முதலில் வந்தது.
ராம:	— இராமன்	
ரோம	— உரோமம்	
லாட:	— இலாடம்	லகர முதன்மொழிகளுக்கு இ, உ என்னு மிரண்டில் ஒன்று முதலில் வந்தது.
லோப:	— உலோபம்	
யக்ஷ:	— இயக்கன்	யகர முதன்மொழிக்கு இகரம் முதலில் வந்தது.

சிறுபான்மை யுத்தம் - உயுத்தம் என யகரத்துக்கு உகரமும் வருமென அறிக. (உக)

149. இணைந்தியல் காலை யரலக் கிகரமும்
மவ்வக் குகரமு நகரக் ககரமும்
மிசைவரும் ரவ்வழி யுவ்வு மாம்பிற.

(இ - ள்.) இணைந்து இயல் காலை - (ஆரியமொழியுள் இரண்டெழுத்து) இணைந்து (ஓரெழுத்தைப்போல) நடக்கும்போது, ய ர லக்கு - (பின்னின்ற) யகர ரகர லகரங்களுக்கு, இகரமும் - இகரமும், மவ் வக்கு - மகர வகரங்களுக்கு, உகரமும் - உகரமும், நகரக்கு - நகரத்திற்கு, அகரமும் - அகரமும், மிசை வரும் - மேலே வந்து வடமொழிகளாகும்; ரவ்வழி - இணைந்து முன்னின்ற) ரகரத்திற்குப்பின், உவ்வும் ஆம் - உகரமும் வரும், எ-று.

(உ - ம்.)

வாக்ய	— வாக்கியம்	யகர ரகர லகரங்களுக்கு முன் இகரம் வந்தது.
வக்ர	— வக்கிரம்	
சுக்ல	— சுக்கிலம்	

𑌪𑌦𑍍𑌮𑌂 — பதுமம்		மகர வகரங்களுக்குமுன்
𑌪𑌕𑍍𑌵𑌃 — பக்குவம்		உகரம் வந்தது.
𑌰𑌤𑍍𑌨𑌂 — அரதனம்		நகரத்துக்குமுன் அகரம் வந்தது.
𑌅𑌰𑍍𑌥𑌃 — அருத்தம்		ரகரத்தின் பின் உகரம் வந்தது.

"பிற" என்றதனால்,

𑌵𑌾𑌕𑍍 — வாக்கு	முதலிய தோன்றலும்,
𑌵𑌿𑌰𑌾𑌟𑍍 — விராட்டு	
𑌸𑌤𑍍 — சத்து	
𑌶𑌕𑍍𑌤𑌿 — சத்தி	முதலிய திரிபும்,
𑌕𑌕𑍍𑌷𑌿 — கட்சி	
𑌕𑌾𑌵𑍍𑌯𑌂 — காப்பியம்	
𑌪𑌰𑍍𑌵𑌤𑌃 — பருப்பதம்	
𑌸𑍍𑌥𑍂𑌲𑌃 — தூலம்	முதலிய கேடும்,
𑌹𑌸𑍍𑌤𑌃 — அத்தம்	
𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌃 — ஆதித்தன்	

மற்றும் விகாரத்தால் வருவனவுங் கொள்க. (உஉ)

தமிழெழுத்திற் சிறப்பெழுத்தும் பொதுவெழுத்தும் :—

LETTERS PECULIAR TO TAMIL AND THOSE COMMON TO SANSKRIT AND TAMIL.

150 றனழ எ ஒவ்வு முயிர்மெய்யு முயிரள
பல்லாச் சார்புந் தமிழ்பிற பொதுவே.

(இ-ள்.) ற ன ழ எ ஒ வ்வும் - (முதலுஞ் சார்புமாகிய தமிழெழுத்து நாற்பதுகளிலே) றகர னகர ழகர எகர ஒகரங்கள் ஐந்தும், உயிர்மெய்யும் உயிரளபு அல்லா சார்பும் - உயிர்மெய்யும் உயிரளபெடையு மல்லாத சார்பெழுத்தெட்டும், தமிழ் - தமிழுக்கே (சிறப்பெழுத்துகளாம்); பிற - மற்ற இருபத்தேழெழுத்துகளும், பொது - பொது எழுத்துகளாம், எ-று.

(உ-ம்.)

தமிழுக்குரியசிறப்பெழுத்துகள்	பொதுவெழுத்து.
ற், ன், ழ், எ, ஒ, ஃ	மெய்—க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ள்.
ஒற்றளபு	உயிர்—அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ.
குற்றியலிகரம்	சார்பெழுத்து.
குற்றியலுகரம்	க, கா, கி, கீ, முதலியஉயிர்மெய், உயிரளபு.
ஐகாரக்குறுக்கம்	
ஔகாரக்குறுக்கம்	
மகரக்குறுக்கம்	
ஆய்தக்குறுக்கம்.	

பதவியல் முற்றுப்பெற்றது.

---

௩. உயிரீற்றுப்புணரியல்.
COMBINATION OF VOWEL FINALS

புணர்ச்சி.
COMBINATION.

புணர்ச்சி :—COMBINATION DEFINED.

151. மெய்யுயிர் முதலீ றாமிரு பதங்களும்
தன்னொடும் பிறிதொடு மல்வழி வேற்றுமைப்
பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத் திையைவது புணர்ப்பே.

(இ-ள்.) மெய் உயிர் - மெய்யாவது உயிராவது, முதல் ஈறும் - முதலும் ஈறுமாகிய, இரு பதங்களும் - (பகாப்பதம் பகுபதம் என்கின்ற) இரண்டு பதங்களும், தன்னொடும் பிறிதொடும் - தன்னொடுதானும் பிறிதொடு பிறிதுமாய், அல்வழி வேற்றுமைப் பொருளின் - அல்வழிப் பொருளினலாவது வேற்றுமைப் பொருளினலாவது, பொருந்துழி - பொருந்துமிடத்து, நிலை வரு மொழிகள் - நிலைமொழியும் வருமொழியும், இயல்பொடு விகாரத்து - இயல்போடாயினும் விகாரத்தோடாயினும், இயைவது - பொருந்துவது, புணர்ப்பு - (முன் சொல்லப்பட்ட) புணர்ச்சியாம், எ - று.

'மெய்யுயிர் முதலீறும்' எனவே மெய்ம்முதன் மெய்யீறு, உயிர்முத லுயிரீறு, மெய்ம்முத லுயிரீறு, உயிர்முதன் மெய்யீறு என நான்கு வகையாம்.

இயல்பு இயற்கை தன்மை என்பன ஒருபொருட்சொற்கள். விகாரம் செயல் செயற்கை விதி என்பன ஒருபொருட்சொற்கள்.

தன்னொடு தான்பொருந்தல்—பகுபதத்தோடும் பகாப்பதத்தோடும் அதததுவே வந்து பொருந்துதல்.

பிறிதொடுபிறிது பொருந்தல்—பகுபதத்தோடு பகாப்பதமும் பகாப்பதத்தோடு பகுபதமும் பொருந்துதல். (க)

M. F. அல்வழி வேற்றுமைப் புணர்ச்சி :—NON-CASAL AND CASAL COMBINATIONS.

152. வேற்றுமை யைம்முத லாறு மல்வழி
தொழில்பண் புவமை யும்மை யன்மொழி
எழுவாய் விளியீ ரெச்சமுற் றிடையுரி
தழுவு தொடரடுக் கெனவீ ரேழே.

(இ ள்.) வேற்றுமை - வேற்றுமைப் புணர்ச்சியாவது, ஐம்முதல் ஆறு ஆம் - ஐ ஆல் கு இன் அது கண் என்கின்ற ஆறுருபுகளும் (மறைந்தாகிலும் வெளிப்பட்டாகிலும்) வரப் பதங்கள் பொருந்துந் தொடர்ச்சியாம் ; அல்வழி - அல்வழிப்புணர்ச்சியாவது, தொழில் - வினைத்தொகையும், பண்பு - பண்புத்தொகையும், உவமை - உவமைதொகையும், உம்மை - உம்மைத் தொகையும், அன்மொழி - அன்மொழித் தொகையும், எழுவாய் - எழுவாயும், விளி - விளியும், ஈர் எச்சம் - பெயரெச்ச வினையெச்சங்களும், (ஈர்) முற்று - தெரிநிலைவினை குறிப்புவினை முற்றுகளும், இடை - இடைச்சொல்லும், உரி - உரிச்சொல்லும், அடுக்கு என - அடுக்கு என்று, ஈர் ஏழ் - பதினான்கு வகையாக, தழுவுதொடர் - (பதங்கள்) பொருந்துந் தொடர்ச்சியாம், எ-று.

(உதாரணம்.)

(வேற்றுமைப் புணர்ச்சி.)

வேற்றுமைத்தொகை.	வேற்றுமைவிரி.
2. [ஐ] — நிலங்கடந்தான்	நிலத்தைக்கடந்தான்.

3. [ஆல்] —கல்லெறிந்தான் கல்லாலெறிந்தான்.
4. [கு] —கொற்றன்மகன் கொற்றனுக்குமகன்.
5. [இன்]—மலைவீழருவி மலையின்வீழருவி.
6. [அது]—சாத்தன்கை சாத்தனதுகை.
7. [கண்]—குன்றக்கூகை குன்றத்தின்கட்கூகை.

(அல்வழிப் புணர்ச்சி.)

1 வினைத்தொகை	கொல்யானை, அடுகளிறு.	தொகைநிலைத்தொடர் - ரு.
2 பண்புத்தொகை	கருங்குதிரை, செந்தாமரை.	
இருபெயரொட்டுப் பண்புத்தொகை	சாரைப்பாம்பு, ஆயன் சாத்தன்.	
3 உவமைத்தொகை	மதிமுகம், பவளவாய்.	
4 உம்மைத்தொகை	சேரசோழபாண்டியர், இராப்பகல்.	
5 அன்மொழித்தொகை	பொற்றொடி, தாழ்குழல்.	
6 எழுவாய்த்தொடர்	சாத்தன் வந்தான், கொற்றன் கண்டான்.	தொகாநிலைத்தொடர் - கூ.
7 விளித்தொடர்	சாத்தாவா, கொற்றாகேள்.	
8 பெயரெச்சத்தொடர்	வந்தசாத்தன், வருகின்றசாத்தன்.	
9 வினையெச்சத்தொடர்	வந்து போனான், வரப் போனான்.	
10 தெரிநிலை வினைமுற்றுத்தொடர்	வந்தான் சாத்தன், கண்டான் கொற்றன்.	
11 குறிப்பு வினைமுற்றுத்தொடர்	குழையன் கொற்றன், பெரியன் சாத்தன்.	
12 இடைச்சொற்றொடர்	மற்றொன்று, கொன்னே கழிந்தன்று.	
13 உரிச்சொற்றொடர்	நனிபேதை, கடிக்கமலம்.	
14 அடுக்குத்தொடர்	பாம்பு பாம்பு, நெருப்பு நெருப்பு.	

இவை 'தழுவுதொடர்' எனவே, அவ்விருவழியிலும் தழாத் தொடருஞ் சில உண்டென்பதாயிற்று. 'கைக்களிறு' என்பது

கையையுடைய களிறு என விரிக்கப்படுதலால் 'கை' என்பது 'களிறு' என்பதைத் தழுவாமையால், இப்படி வருகின்றவைக ளெல்லாந் தழாத்தொடராகிய வேற்றுமைத்தொகைப் புணர்ச்சியாம். "சுரையாழ வம்மி மிதப்ப" என்பது 'சுரைமிதப்ப அம்மியாழ எனக் கூட்டப்படுதலால், 'சுரை' என்பது 'ஆழ' என்பதையும் 'அம்மி' என்பது 'மிதப்ப' என்பதையுந் தழுவாமையால், இப்படி வருகின்றவைக ளெல்லாந் தழாத்தொடரான அல்வழிப்புணர்ச்சியாம்.

தழாத்தொடராவது—நிலைமொழியானது வருமொழியைப் பொருட்பொருத்தமுறத் தழுவாததொடர். பொருட்பொருத்தமுறத் தழுவியதொடர் தழுவுதொடராம்.

☞ அடியில்வரும் பொதுவியற் சூத்திரங்கள் (*a* to *j*) தகுதிபற்றி இங்கு சேர்க்கப்பட்டன. இவைகளின் உரை முதலியன அவ்வியலுட் காண்க.

M. F. தொகைநிலைத் தொடர்மொழி இலக்கணம்:—*
DEFINITION OF ELLIPTICAL COMBINATION.

(*a*) பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளி னவற்றி னுருபிடை
யொழிய விரண்டு முதலாத் தொடர்ந்தொரு
மொழிபோ னடப்பன தொகைநிலைத் தொடர்
சொல்.

[Vide 361.]

M. F. அறுவகைத் தொகைநிலைத்தொடர்:—SIX KINDS OF ELLIPTICAL COMPOUNDS.

(*b*) வேற்றுமை வினைபண் புவமை யும்மை
அன்மொழி யெனவத் தொகையா றாகும்.

[Vide 362.]

M. F. வேற்றுமைத்தொகை:—ELLIPSIS OF CASAL PARTICLES.

(*c*) இரண்டு முதலா மிடையா றுருபும்
வெளிப்பட லில்லது வேற்றுமைத் தொகையே.

[Vide 363.]

M. F. வினைத்தொகை :—ELLIPSIS OF THE PARTICLES DENOTING TENSE, &C. IN RELATIVE PARTICIPLES.

(*d*) காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை.

[Vide 364.]

M. F. பண்புத்தொகை :—ELLIPSIS OF ADJECTIVAL PARTICLES.

(*e*) பண்பை விளக்கு மொழிதொக் கனவும்
ஒருபொருட் கிருபெயர் வந்தவுங் குணத்தொ
கை.

[Vide 365.]

M. F உவமத்தொகை :—ELLIPSIS OF THE PARTICLES OF COMPARISON.

(*f*) உவம வுருபில துவமத் தொகையே.

[Vide 366.]

M. F. உம்மைத்தொகை :—ELLIPSIS OF THE CONJUNCTIVE PARTICLE உம்.

(*g*) எண்ண லெடுத்தன் முகத்த லீட்டல்
எனுநான் களவையு ளும்மில தத்தொகை.

[Vide 368.]

M. F. அன்மொழித்தொகை :—MYTONYMY [ELLIPSIS OF OTHER WORDS.]

(*h*) ஐந்தொகை மொழிமேற் பிறதொக லன்மொழி.

[Vide 369.]

F. தொகைநிலைத் தொடர்மொழிகளுள் பொருள் சிறந்து நிற்குமிடம் :—ELLIPTICAL EXPRESSION, HOW RENDERED INTELLIGIBLE.

(*i*) முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி
எனுநான் கிடத்துஞ் சிறக்கும் தொகைப்பொ
ருள்.

[Vide 370.]

F. தொகாநிலைத் தொடர்மொழிகள் :—UNELLIPTICAL EXPRESSIONS.

(j) முற்றீ ரெச்ச மெழுவாய் விளிப்பொருள்
ஆறுரு பிடையுரி யடுக்கிவை தொகாநிலை.
[Vide 374.]

M. F. இயல்புப்புணர்ச்சி:— NATURAL COMBINATION.

153. விகார மனைத்து மேவல தியல்பே.

(இ - ள்.) விகாரம் அனைத்தும் - (மேல்வரும்) விகாரவகை யனைத்தும், மேவலது - அடையாதது, இயல்பு - இயல்பாகும், எ - று.

(உ-ம்.) பொன் + மலை = பொன்மலை
புகழ் + அழகிது = புகழழகிது
ஒளி + மணி — ஒளிமணி. (ந)

M. F. விகாரப்புணர்ச்சி:— MUTATIONAL COMBINATION.

154. தோன்ற றிரிதல் கெடுதல் விகாரம்
மூன்று மொழிமூ விடத்து மாகும்.

(இ - ள்.) தோன்றல் - (எழுத்தாவது சாரியையாவது) தோன்றுதலும், திரிதல் - வேறுபடுதலும், கெடுதல் - கெடுதலும், விகாரம் - (முன்சொன்ன) விகாரமாகும்; மூன்றும் - இம்மூவகை விகாரமும், மொழி - நிலைமொழி வருமொழிகளுடைய, மூவிடத்தும் - (முதல் இடை கடை என்கின்ற) மூன்றிடத்தும், ஆகும் - (ஏற்றபடி) வரும், எ-று.

(உ-ம்.)

பூ + கொடி = பூங்கொடி, —வருமொழி முதலில் மெய் தோன்றிற்று.

பல் + தலை = பஃறலை, —வருமொழி முதலிலும் நிலைமொழி யீற்றிலு முள்ள மெய்கள் திரிந்தன.

நிலம் + வலயம் = நிலவலயம், —நிலைமொழி யீற்று மெய் கெட்டது.

ஆறு + பத்து = அறுபது, —நிலைமொழி முதலுயிர் திரிந்து வருமொழியிடையொற்றுக் கெட்டது.

பல + பொருள் = பல்பொருள், —நிலைமொழி யீற்றுயிர் கெட்டது.

நாழி + உரி = நாடுரி, —நிலைமொழி யீற்றுயிர்மெய் கெட்டு டகரமெய் தோன்றிற்று.

பனை + காய் = பனங்காய், —நிலைமொழி யீற்றுயிர் கெட்டு சாரியை தோன்றிச் சாரியையீற்று மகரம் ஙகரமாயிற்று.

M F. செய்யுள் விகாரம்:— POETICAL CHANGES.

155. வலித்தன் மெலித்த னீட்டல் குறுக்கல்
விரித்த றொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி.

(இ-ள்.) வலித்தல் - (மெல்லொற்றை) வல்லொற்றாக்கலும், மெலித்தல் - (வல்லொற்றை) மெல்லொற்றாக்கலும், நீட்டல் - (குற்றெழுத்தை) நெட்டெழுத்தாக்கலும், குறுக்கல் - நெட்டெழுத்தைக்) குற்றெழுத்தாக்கலும், விரித்தல் - (இல்லாத வெழுத்தை) வருவித்தலும், தொகுத்தல் - (உள்ளவெழுத்தை) நீக்கலும், வரும் - வருவனவாம், செய்யுள் - செய்யுளிடத்து, வேண்டுழி - (அடி தொடை முதலானவைகளை நோக்கி)அமைக்க வேண்டு மிடத்து, எ-று.

(உ - ம்.)

"குறுத்தாட் பூதஞ் சுமந்த வறக்கதி ராழியெம் மண்ணலைத் தொழினே"—குறுந் தாளில் நகர மெல்லொற்று வல்லொற் றாக்கப்பட்டது.

"தண்டையி னினக்கிளி கடிவோள் பண்டைய ளல்லண் மானோக் கினளே"—தட்டையில் டகரவல்லொற்று மெல்லொற் றாக்கப்பட்டது.

"தித்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற் போத்தரார் புல்லறிவினார்"—பொத்தில் குற்றெழுத்து நெட்டெழுத் தாக்கப்பட்டது.

"யானை யெருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன்றிருத் தார் நன்றென்றேன் றியேன்"—தீயேனில் நெட்டெழுத் துக் குற்றெழுத் தாக்கப்பட்டது.

"சிறியிலை வெதிரி நெல்விளை யும்மே"—விளையுமே என்பதில் மகரமெய் விரிக்கப்பட்டது; சிறிய இலையில் அகரவுயிர் தொகுக்கப்பட்டது. (௫)

156. ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே.

(இ-ள்.) ஒருமொழி - ஒருசொல்லினுடைய, மூவழி - (முதல் இடை கடை என்கிற) மூன்றில் ஓரிடத்து, குறைதலும் - குறைந்து வருதலும், அனைத்து - அச்செய்யுள் விகாரமாம், ஏ - று.

(உ - ம்.)

"மரையிதழ் புரையு மஞ்செஞ் சீறடி"—தாமரையில் முதலெழுத்துக் குறைந்தது.

"வேதின வெரிநி னோதிமுது போத்து"—ஓந்தியில் இடையெழுத்துக் குறைந்தது.

"நீலுண் டுகிலிகை கடுப்ப"—நீலத்திற் கடை எழுத்துகள் குறைந்தன.

இன்னும் "குறைதலும்" என்ற எச்ச உம்மையால் விதியின்றி வருகிற விகாரங்களுஞ் சிலவுண்டு.

(உ - ம்.)

யாது — யாவது	..	தோன்றல்
மாகி — மாசி	...	திரிதல்
யார் — ஆர்	...	கெடுதல்
பொழுது — போழ்து	..	நீளல்
மிஞிறு — ஞிமிறு	}	எழுத்து நிலைமாறுதல்
தசை — சதை	}	
நகர்ப்புறம் — புறநகர்	}	சொல் நிலைமாறுதல்.
இன்முன் — முன்றில்	}	

தொகுத்தல்விகாரம் பகுபதத்திலும், முதல் இடை கடைக் குறைவிகாரங்கள் பகாப்பதத்திலும் வரும். (சு)

157. ஒருபுணர்க் கிரண்டு மூன்று முறப்பெறும்.

(இ - ள்.) ஒரு புணர்க்கு - ஒருபுணர்ச்சிக்கு, இரண்டு மூன்றும் - ஒன்றேயல்லாமல் இரண்டும் மூன்றும், உறப்பெறும் - வரப்பெறும், எ - று.

(உ-ம்.) யானை + கோடு = யானைக்கோடு—தோன்றல்.
நிலம் + பனை = நிலப்பனை—கெடுதலும் தோன்றலும்.
பனை + காய் = பனங்காய்—கெடுதலும் தோன்றலும் திரிதலும்.

பொதுப்புணர்ச்சி.
GENERAL COMBINATION.

M. F. எல்லா வீற்றின்முன்னும் மெல்லினமும் இடையினமும் புணர்தல்:— COMBINATION OF 24 FINALS WITH SOFT AND MIDDLE CONSONANTS.

158. எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும்
முன்வரு ஞநமய வக்க ளியல்பும்
குறில்வழி யத்தனி யைநொது முன்மெலி
மிகலுமாம் ணளனல வழிநத் திரியும்.

(இ - ள்.) எண்மூ எழுத்து ஈறு - இருபத்துநான் கெழுத்துகளையும் (இயல்பினு லாயினும் விதியினு லாயினும்) ஈறாக வுடைய, எவ்வகை மொழிக்கும் முன் - (பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல் திசைச்சொல் வடசொல் என்கின்ற) பலவகைப்பட்ட சொற்களுக்கும் முன்னே, வரும் ஞ ந ம ய வக்கள் - வருகிற ஞகர நகர மகர யகர வகரங்கள், இயல்பும் - (அல்வழி வேற்றுமை யிரண்டிலும்) இயல்பாதலும், குறில்வழி ய - குற்றெழுத்தின் பின்னின்ற யகர மெய்யும், தனி ஐ - (ஓரெழுத் தொருமொழிகளாகிய உயிர் உயிர்மெய்களாய் வரும்) ஐகாரமும், நொ து - நொ து என்னும் ஓரெழுத்து மொழிகளும், முன் - (ஆகிய இவைகளுக்கு)

முன் வருகிற மெலி - ஞகார நகார மகாரங்கள், மிகலும் - (பிறசொற்களுக்கு முன் இயல்பாதலன்றி) மிகுதலும், ஆம் - ஆகும்; ண ள ன ல வழி - ணகார ளகார னகார லகாரங் களின் முன் வருகிற, ந-நகரமானது, திரியும் - (மற்றை ஈறு களுக்கு முன் இயல்பாதலன்றித்) திரியும், எ-று.

விதி ஈறுவது இயல்பாக ஈற்றில் நின்ற உயிராவது ஒற்று வது போய் மற்றொரு உயிரீறுகவாவது ஒற்றீறுகவாவது நிற் பது. செயற்கை, விதி என்பன ஒருபொருட் சொற்கள்

இது புணரியலி லெங்கும் அல்வழி வேற்றுமைகளி லொன் றைக் குறிப்பாக வாறுலும் வெளிப்படையாக வாறுலுங் கூறு ராயின் அவ்விரண்டையுங் கொள்க.

(உ-ம்.) விள, பலா, கிளி, தீ, கடு, பூ, சே, பனை, கோ, கௌ; உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், யாழ், வாள், எஃகு இவற்றின்முன் ஞான்றது, நீண்டது - மாண் டது - யாது - வலிது, ஞாற்சி - நீட்சி - மாட்சி - யாப்பு - வலிமை இவற்றை வருவித்து,

(அல்வழி.)

விள + ஞான்றது = விளஞான்றது
+ நீண்டது = விளநீண்டது
+ மாண்டது = விளமாண்டது
+ யாது = விளயாது
+ வலிது = விளவலிது.

(வேற்றுமை.)

விள + ஞாற்சி = விளஞாற்சி
+ நீட்சி = விளநீட்சி
+ மாட்சி = விளமாட்சி
+ யாப்பு = விளயாப்பு
+ வலிமை = விளவலிமை.

என முறையே கூட்டி எல்லாவீற்றின் முன்னும் ஞ ந ம ய வக்கள் இயல்பாதல் காண்க.

உரிஞ் + ஞான்றது = உரிஞுஞான்றது
பொருந் + ஞான்றது = பொருநுஞான்றது

வேல் + ஞான்றது = வேன்ஞான்றது
வாள் + ஞான்றது = வாண்ஞான்றது
மரம் + ஞான்றது = மரஞான்றது

என நிலைமொழியீறுகள் விகாரப்படுதல் அவ்வவ் வீற்றுச் சிறப்புவிதிகளிற் காண்க.

(அல்வழி.)

மெய் + ஞான்றது = மெய்ஞ்ஞான்றது
+ நீண்டது = மெய்ந்நீண்டது
+ மாண்டது = மெய்ம்மாண்டது
கை + ஞான்றது = கைஞ்ஞான்றது
+ நீண்டது = கைந்நீண்டது
+ மாண்டது = கைம்மாண்டது.

(வேற்றுமை.)

மெய் + ஞாற்சி = மெய்ஞ்ஞாற்சி
+ நீட்சி = மெய்ந்நீட்சி
+ மாட்சி = மெய்ம்மாட்சி
கை + ஞாற்சி = கைஞ்ஞாற்சி
+ நீட்சி = கைந்நீட்சி
+ மாட்சி = கைம்மாட்சி.

எனக் குறின்முன்னின்ற யகரத்தின் முன்னுந் தனி ஐம் முன்னும் மெலி மிகுதல் காண்க.

"நொதுமுன் மெலி மிகலுமாம்" என்ற எச்சவும்மையால், அவ்விரண்டன் முன்னும் இடையெழுத்து மிகலுமா மென்ற தாயிற்று.

நொ + ஞெள்ளா = நொஞ்ஞெள்ளா
+ நாகா = நொந்நாகா
+ மாடா = நொம்மாடா
+ யவனா = நொய்யவனா
+ வளவா = நொவ்வளவா
து + ஞெள்ளா = துஞ்ஞெள்ளா
+ நாகா = துந்நாகா
+ மாடா = தும்மாடா

து + யவ ஞெ = துய்யவஞெ
+ யவளவா = துவ்வளவா.

இவை வினைச்சொற்க ளாதலால் அல்வழியிலே மிகுந்தன, "ணளனல வழி நத்திரியும்" என்றது பின்வரும் "னலமுன் றனவும்" என்னும் 287 - வது சூத்திரத்திலே காண்க.

இச்சூத்திர முதலாக ஒன்றற்கொன்று தொடர்ச்சியாகப் புணர்த்தலால், 'தொடர்சொற் புணர்த்தல்' என்னு முத்தி. ()

M. F. பொதுப்பெயர் உயர்திணைப்பெயர் ஈறு:—CONSONANT AND VOWEL FINALS OF EPICENE AND PERSONAL NOUNS.

159. பொதுப்பெய ருயர்திணைப் பெயர்க ளீற்றுமெய்
வலிவரி னியல்பா மாவி யரமுன்
வன்மை மிகாசில விகார மாமுயர்திணை.

(இ - ள்.) பொதுப்பெயர் - (இருதிணைகளுக்கும்) பொது வான பெயர்களுக்கும், உயர்திணைப் பெயர்கள் - உயர்திணைப் பெயர்களுக்கும், ஈறு மெய், ஈற்றிலுள்ள மெய்கள், வலி வரின் - வல்லெழுத்து (முதன்மொழிகள்) வந்தால், இயல்பாம்- இயல்பாகும் ; ஆவி - உயிரையும், ய ர - யகர ரகரமெய்களையும் (ஈறாகவுடைய அவ்விருவகைப் பெயர்களுக்கும்), முன் - முன் வருகிற, வன்மை - வல்லெழுத்துக்கள், மிகா - மிகாவாம் ; உயர்திணை - (உயிரீறு மெய்யீறுமாகிய) உயர்திணைப்பெயர்கள் (நாற்கணங்களோடும் புணருமிடத்து), சில விகாரம் ஆம் - (நிலைமொழி வருமொழிகள்) விகாரப்படுவனவுஞ் சில உள வாம், எ - று.

நாற்கணம்—வன்கணம், மென்கணம், இடைக்கணம், உயிர்க் கணம்.*

பொதுப்பெயர் — உயர்திணை அஃறிணைக்குப் பொதுவான பெயர்.

பொதுப்பெயர் விரவுப்பெயர் என்பன ஒருபொருட் சொற் கள்.

---

* இங்கும், பின்வரும் சூத்திரங்களிலும், வலி மெலி முதலி யன என்றால் அந்தந்தக் கணங்களில் மொழிக்கு முதலில் வரும் எழுத்துகளையே குறித்ததாகக் கொள்ளல்வேண்டும்.

விரவுப்பெயர் — இரண்டு திணையிலும் கலந்தலையுடைய பெயர்.

வல்லினம்வந்தால் திரிதற்குரிய நிலைமொழியீற்று மெய்கள் திரியாமல் இயல்பாதலைப்பற்றி 'ஈற்றுமெய் இயல்பாம்' என்றும், ஆவி ய ர க்கள் முன் திரிதற்குரிய வருமொழிமுதல் வல்லெழுத்துக்கள் மிகாமல் இயல்பாதல்பற்றி 'வன்மைமிகா' என்றும் கூறினர்.

(உ - ம்.)

சாத்தன் + குறிது	= சாத்தன்குறிது	அல்வழி.
+ சிறிது	= சாத்தன்சிறிது	
+ தீது	= சாத்தன்றீது	
+ பெரிது	= சாத்தன்பெரிது	
+ குறியன்	= சாத்தன்குறியன்	
+ சிறியன்	= சாத்தன்சிறியன்	
+ தீயன்	= சாத்தன்றீயன்	
+ பெரியன்	= சாத்தன்பெரியன்.	
சாத்தன் + கை	= சாத்தன்கை	வேற்றுமை.
+ செவி	= சாத்தன்செவி	
+ தலை	= சாத்தன்றலை	
+ புறம்	= சாத்தன்புறம்.	

கொற்றன், ஆன் முதலியவற்றோடும் மேலே காட்டியபடியே கூட்டிப் பொதுப்பெயரீற்றுமெய் வலிவர, இருவழியிலும் இயல்பாதல் காண்க.

ஊரன் + குறியன்	= ஊரன்குறியன்	அல்வழி.
+ சிறியன்	= ஊரன்சிறியன்	
+ தியன்	= ஊரன்றீயன்	
+ பெரியன்	= ஊரன்பெரியன்.	
ஊரன் + கை	= ஊரன்கை	வேற்றுமை.
+ செவி	= ஊரன்செவி	
+ தலை	= ஊரன்றலை	
+ புறம்	= ஊரன்புறம்.	

கூனன், அவன் முதலியவற்றோடும் மேலே காட்டியபடியே கூட்டி, உயர்திணைப்பெயரீற்றுமெய் வலிவர இருவழியும் இயல்பாதல் காண்க.

சாத்தி	+ குறிது	= சாத்திகுறிது	அல்வழி.
	+ சிறிது	= சாத்திசிறிது	
	+ தீது	= சாத்திதீது	
	+ பெரிது	= சாத்திபெரிது	
	+ குறியள்	= சாத்திகுறியள்	
	+ சிறியள்	= சாத்திசிறியள்	
	+ தீயள்	= சாத்திதீயள்	
	+ பெரியள்	= சாத்திபெரியள்.	
தாய்	+ குறிது	= தாய்குறிது	
	+ சிறிது	= தாய்சிறிது	
	+ தீது	= தாய்தீது	
	+ பெரிது	= தாய்பெரிது	
	+ குறியள்	= தாய்குறியள்	
	+ சிறியள்	= தாய்சிறியள்	
	+ தீயள்	= தாய்தீயள்	
	+ பெரியள்	= தாய்பெரியள்.	
சாத்தி	+ கை	= சாத்திகை	வேற்றுமை.
	+ செவி	= சாத்திசெவி	
	+ தலை	= சாத்திதலை	
	+ புறம்	= சாத்திபுறம்	
தாய்	+ கை	= தாய்கை	
	+ செவி	= தாய்செவி	
	+ தலை	= தாய்தலை	
	+ புறம்	= தாய்புறம்.	

எனப் பொதுப்பெயரீற்றுயிரின்முன்னும் யகரத்தின்முன்னும் வலி இருவழியும் இயல்பாயின.

நீர்+குறியீர் = நீர்+குறியீர். இப்படியே சிறியீர், தீயீர், பெரியீர் என்பனவற்றைக்கூட்டி ரகரவீற்றுப் பொதுப்பெயர் அல்வழியில் மாத்திரம் இயல்பாதலறிக.

நம்பி	+ குறியன்	= நம்பிகுறியன்	அல்வழி.
	+ சிறியன்	= நம்பிசிறியன்	
	+ தீயன்	= நம்பிதீயன்	
	+ பெரியன்	= நம்பிபெரியன்.	
அவர்	+ குறியர்	= அவர்குறியர்	
	+ சிறியர்	= அவர்சிறியர்	
	+ தீயர்	= அவர்தீயர்	
	+ பெரியர்	= அவர்பெரியர்.	

நம்பி + கை = நம்பிகை			வேற்றுமை.
+ செவி = நம்பிசெவி			
+ தலை = நம்பிதலை			
+ புறம் = நம்பிபுறம்.			
அவர் + கை = அவர்கை			
+ செவி = அவர்செவி			
+ தலை = அவர்தலை			
+ புறம் = அவர்புறம்.			

விடலை, ஒருவர் முதலியவற்றோடும் மேலே காட்டியபடிக் கூட்டி, உயர்திணை ஈற்றுயிரின் முன்னும் ரகரத்தின் முன்னும் வலி இருவழியும் இயல்பாதல் காண்க.

கபிலன் + பரணன் = கபிலபரணர்
வடுகன் + நாதன் = வடுகநாதன்
அரசன் + வள்ளல் = அரசவள்ளல்
ஆசீவகன் + பள்ளி = ஆசீவகப்பள்ளி
குமரன் + கோட்டம் = { குமரகோட்டம் / குமரக்கோட்டம்.

என இருவழியும் உயர்திணையுள் சில தமக்கேற்ற விகாரமாயின. (கூ)

M. F. வினைப்பெயர் விளிப்பெயர்முன் வல்லினம்:—HARD CONSONANTS AFTER INTERROGATIVES AND VOCATIVES.

160. ஈற்றியா வினாவிளிப் பெயர்முன்வலி யியல்பே.

(இ - ள்.) ஈற்று (வினாமுன்) - (ஆ ஏ ஓ என்கின்ற மூன்று) ஈற்று வினாமுன்னும், யா வினா (முன்) - யா வினா முன்னும், விளிப்பெயர் முன் - (உயிரீறும் மெய்யீறுமாகிய) விளிப்பெயர் முன்னும், வலி - (வருகிற) வல்லெழுத்துக்கள், இயல்பு - இயல்பாகும், எ-று.

(உ - ம்.)

நம்பியா + கொண்டான் = நம்பியாகொண்டான்
+ சென்றான் = நம்பியாசென்றான்
+ தந்தான் = நம்பியாதந்தான்
+ போயினான் = நம்பியாபோயினான்.

அவனே + கொண்டான் = அவனே கொண்டான்
+ சென்றான் = அவனே சென்றான்
+ தந்தான் = அவனே தந்தான்
+ போயினான் = அவனே போயினான்.
சாத்தனோ + கொண்டான் = சாத்தனோ கொண்டான்
+ சென்றான் = சாத்தனோ சென்றான்
+ தந்தான் = சாத்தனோ தந்தான்
+ போயினான் = சாத்தனோ போயினான்.
யா + குறியன = யாகுறியன
+ சிறியன = யாசிறியன
+ தீயன = யாதீயன
+ பெரியன = யாபெரியன.

என ஈற்று வினாமுன்னும் யாவினா முன்னும் வலி இயல்பாயின.

நம்பீ + கொள் = நம்பீகொள்
+ செல் = நம்பீசெல்
+ தா = நம்பீதா
+ போ = நம்பீபோ.

நம்பி, விடலை, விடலாய், இளை, இளாய், தாய், தாயே முதலிய வற்றின் முன்னும் மேலே காட்டியபடியே கூட்டி விளிப்பெயர்முன் வலி இயல்பாதல் காண்க. (௫௦)

M. F. முன்னிலைவினைமுன் ஏவல்வினைமுன் வல்லினம்:—HAR CONSONANTS AFTER SECOND PERSON AND IMPERATIVE VERBS ENDING IN VOWELS, ய், ர், AND ழ்.

161. ஆவி யரழ விறுதிமுன் னிலைவினை
ஏவன்முன் வல்லின மியல்பொடு விகற்பே.

(இ - ள்.) ஆவி - உயிரையும், ய ர ழ - ய ர ழ என்கின்ற மூன்று மெய்களையும், இறுதி - இறுதியாக வுடைய, முன்னிலை வினை (முன்) - முன்னிலைவினை முன்னும், ஏவல் முன் - ஏவல் வினை முன்னும், வல்லினம் - (வருகிற) கசதபக்கள், இயல்பொடு - இயல்புடனே, விகற்பு - விகற்பமாம் எ-று.

(உ-ம்.) உண்டி + கொற்றா = உண்டிகொற்றா
+ சாத்தா = உண்டிசாத்தா
+ தேவா = உண்டிதேவா
+ பூதா = உண்டிபூதா.

உண்டாய் + கொற்று = உண்டாய்கொற்று
+ சாத்தா = உண்டாய்சாத்தா
+ தேவா = உண்டாய்தேவா
+ பூதா = உண்டாய்பூதா.
உண்டனிர் + கொற்றரே = உண்டனிர்கொற்றரே
+ சாத்தரே = உண்டனிர்சாத்தரே
+ தேவரே = உண்டனிர்தேவரே
+ பூதரே = உண்டனிர்பூதரே.

உண்டனை, உண்டீஈ முதலியவற்றோடும் மேலே காட்டிய படியே கூட்டி, முன்னிலைவினைமுன் வலி இயல்பாதல் காண்க. ழகரமெய் முன்னிலைவினைக்கு ஈறுகாதாகையால் உதாரணமில்லை. விகற்பம் வந்தவழியுணர்க. முன்னிலைவினையாவது - மூன்று காலத்துக்கும் உரியதாய் முன்னிற்கும் பொருளினது தொழிலையுணர்த்துவது.

கொணு + கொற்று = கொணுகொற்று
+ சாத்தா = கொணுசாத்தா
+ தேவா = கொணுதேவா
+ பூதா = கொணுபூதா.
ஆய் + கொற்று = ஆய்கொற்று
+ சாத்தா = ஆய்சாத்தா
+ தேவா = ஆய்தேவா
+ பூதா = ஆய்பூதா.
சேர் + கொற்று = சேர்கொற்று
+ சாத்தா = சேர்சாத்தா
+ தேவா = சேர்தேவா
+ பூதா = சேர்பூதா.
தாழ் + கொற்று = தாழ்கொற்று
+ சாத்தா = தாழ்சாத்தா
+ தேவா = தாழ்தேவா
+ பூதா = தாழ்பூதா.

எறி, விடு, கடி, வே முதலியவற்றோடும் மேலே காட்டியபடியே கூட்டி ஏவல்வினைமுன் வலி இயல்பாதல் காண்க.

ஏவல்வினையாவது — எதிர்காலத்துக்கு மாத்திரமே உரியதாய் முன்னிற்கும் பொருளைக் கட்டளையிடுவது. ஏவலெல்லாம் முன்னிலையாகும்; முன்னிலை ஏவலாகா.

நட + கொற்றா = நடக்கொற்றா

எய் + கொற்றா = எய்க்கொற்றா.

ஏவன்முன் வல்லினம் விகற்பித்தன. விகற்பமாவது—ஒரு புணர்ச்சிக்கே ஒருவகையாயும் மற்றொருகால் வேறுவகையாயும் வருவது. விகற்பம் உறழ்ச்சி பொருதல் என்பன ஒருபொருட் சொற்கள். (௧௧)

உயிரீற்றுச் சிறப்புப்புணர்ச்சி.
SPECIAL COMBINATION OF VOWEL FINALS.

M. F. உயிர்முன் உயிர்புணர்தல், (உடம்படுமெய்):—COMBINATION OF VOWEL FINALS WITH VOWEL INITIALS.

(*Insertion of* ய் *or* வ்.)

162. இஈ ஐவழி யவ்வு மேனை
உயிர்வழி வவ்வு மேமுனிவ் விருமையும்
உயிர்வரி னுடம்படு மெய்யென் றாகும்.

(இ-ள்.) இ ஈ ஐ வழி - இகர ஈகார ஐகாரங்களின் முன்னே, **யவ்வும்** - யகரமும், ஏனை உயிர் வழி - (அ ஆ உ ஊ ஒ ஓ ஔ **என்கிற**) இவ்வேழு உயிர்களின் முன்னே, வவ்வும் - வகரமும், **ஏ முன்** - ஏகாரத்தின் முன்னே, இவ் இருமையும் - யகரமும் **வகரமும்**, உயிர் வரின் - உயிர் முதன்மொழி வந்தால், உடம்படு மெய் என்று ஆகும் - உடம்படு மெய்யென்று வரப்பெறும், **எ-று.**

(உ-ம்.) மணி+அழகிது = மணியழகிது
+அழகு = மணியழகு
தீ+அழகிது = தீயழகிது
+அழகு = தீயழகு
பனை+அழகிது = பனையழகிது
+அழகு = பனையழகு

} இ ஈ ஐ முன் இருவழியும் யகரம் வந்தது.

விள + அழகிது = விளவழகிது
+ அழகு = விளவழகு
பலா + அழகிது = பலாவழகிது
+ அழகு = பலாவழகு

கடு + அழகிது = கடுவழகிது
+ அழகு = கடுவழகு
பூ + அழகிது = பூவழகிது
+ அழகு = பூவழகு
நொ + அழகிது = நொவ்வழகிது
+ அழகு = நொவ்வழகு.
} மற்றைய உயிரீற்றின்முன் இருவழியும் வகரம் வந்தது.

மற்றைய ஈற்றுக்களுக்கும் இப்படியே உதாரணத்தை ஒட்டிப்பார்க்க.

அவனே+இவன் = அவனேயிவன்
ஏ+அழகு = ஏவழகு
சே+அழகிது = சேவழகிது
சே+அடி = சேவடி, சேயடி.
} ஏ முன் யகரமும் வகரமும் வந்தன.

உயிரோடு உயிர்க்கு மயக்கமில்லாமையால், அவ்விரண்டு உயிர்களும் உடன்படுதற்பொருட்டு வரும் மெய்யை உடம்படுமெய் என்றார். உடன்படு என்பது உடம்படு என மருவியதென்று கொள்க. உடன்படுமெய் என்பதை வரும் உயிர்க்கு உடம்பாக அடுக்குமெய் எனினும் அமையும்.

ஏமுன்னிருமையும் எனக்கூறினாரேனும், இடைச்சொல் ஏகாரமாயின் யகரமும், ஓரெழுத் தொருமொழியில் உயிரிலாவது உயிர்மெய்யிலாவது வரும் ஏகாரத்தின்முன் வகரமும், செம்மை என்னும் பண்பின் விகாரமான சே என்னும் எழுத்தின் முன் யகரமும் வகரமும் வரும். (௬௨)

M. F எகரவினா முன்னும் சுட்டின் முன்னும் நாற்கணமும் புணர்தல்:—COMBINATION OF INTERROGATIVE AND DEMONSTRATIVES WITH THE FOUR KINDS OF INITIAL LETTERS.

163. எகர வினாமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமு மெய்தின் வவ்வும்
பிறவரி னவையுந் தூக்கிற் சுட்டு
நீளின் யகரமுந் தோன்றுத னெறியே

(இ-ள்.) எகர வினா (முன்னர்) - எகர வினா இடைச்சொலின் முன்னும், முச் சுட்டின் முன்னர் - மூன்று சுட்டிடைச்சொற்களின் முன்னும், உயிரும் யகரமும் எய்தின் - உயிரும் யகரமும் வந்தால், வவ்வும் - வகரமும், பிற வரின் - யகரம் ஒழிந்த மெய்கள் வந்தால், அவையும் - அவ் வந்தமெய்களும்,

தூக்கில் - செய்யுளிடத்து, சுட்டு நீளின் - சுட்டுக்கள் நீண்டு வருமிடத்து, யகரம் - யகரமும், தோன்றுதல் - மிகுதல், நெறி-முறையாம், எ-று.

(உ-ம்.) எ + அணி	= எவ்வணி	உயிரும் யகர மும்வர வக ரந் தோன் றிற்று.
+ ஆடு	= எவ்வாடு	
+ இடம்	= எவ்விடம்	
+ ஏடு	= எவ்வேடு	
+ ஓடு	= எவ்வோடு	
+ யானை	= எவ்யானை.	
எ + குதிரை	= எக்குதிரை	யகரம் ஒழிந்த மெய்கள் மு ன்வந்த மெ ய்கள் தோன் றின.
+ சேனை	= எச்சேனை	
+ தண்டு	= எத்தண்டு	
+ படை	= எப்படை	
+ ஞாலம்	= எஞ்ஞாலம்	
+ நாடு	= எந்நாடு	
+ மனை	= எம்மனை	
+ வளை	= எவ்வளை	
+ ஙனம்	= எங்ஙனம்	

அ, இ, உ என்னும் சுட்டுக்களின் முன்னும் இப்படியே கூட்ட முறையே வகரமும், வந்தமெய்களும் தோன்றுதல் காண்க.

ஆ + இடை = ஆயிடை—யகரந் தோன்றியது.

“நெறி” என்றமையால் யாங்ஙனம் என யாவினு முன்னும், ஆங்ஙனம் - ஈங்ஙனம் - ஊங்ஙனம் என நீண்ட சுட்டின் முன்னும் ஙகரமிகுதலும், ஈது - ஆங்கு - ஈங்கு - ஊங்கு - ஆண்டு ஈண்டு எனச்சுட்டுப்பெயர் நீளலும், “விண்வத்துக்கொட்கும்” “செல்வுழிச்செல்க” என மெய்யீற்றின் முன் உயிர்வர இடை உடம்படுமெய் யல்லாத வகரம் பெறுதலுங் கொள்க. ([illegible])

M. F குற்றியலுகரத்திற்கும் சில முற்றியலுகரத்திற்கும் முன் உயிரும் யகரமும் புணர்தல்:—COMBINATION OF SHORTENED உ AND NATURAL உ WITH VOWELS AND ய்.

164 உயிர்வரி னுக்குறண் மெய்விட் டோடும்
யவ்வரி னியாமுற் றுமற் றொரோவழி.

(இ-ள்.) உ குறள் - குற்றிய லுகரமானது, உயிர் வரின் - உயிர் முதன்மொழி வந்தால், மெய் விட்டு - (தனக்கிடமாகிய)

மெய்யைவிட்டு, ஓடும் - கெடும்; ய வரின் - யகரமுதன்மொழி வந்தால், இ ஆம் - (அது) இகரமாகத் திரியும்; முற்றும் - முற்றிய லுகரமும், ஒரோவழி - ஒவ்வோரிடத்து அற்று - அவ்விருவிதியும் பெறும், எ-று.

(உ-ம்.) நாகு + அரிது = நாகரிது + யாது = நாகியாது. எஃகு + அரிது = எஃகரிது + யாது = எஃகியாது. பந்து + எறிந்தான் = பந்தெறிந்தான் + யாது = பந்தியாது.		குற்றிய லுகரம் உயிர் முன் கெட்டது, யகரத்தின் முன் இகரமாயிற்று.
கதவு + அழகிது = கதவகிது + யாது = கதவியாது. அது + ஐ = அதை கனவு + அரிது = கனவரிது + யாது = கனவியாது.		முற்றியலுகரம் உயிர் முன் கெட்டது, யகரத்தின் முன் இகரமாயிற்று.

'கெடும்' என்னாது 'ஓடும்' என்றமையால் "தன்முகமாகத் தானழைப்பதுவே" எனக் குற்றிய லுகரம் பொதுவிதியால் வகர உடம்படுமெய் பெறுதலுங் கொள்க. (கசு)

உயிரீற்றின்முன் வல்லினம் புணர்தல்.
COMBINATION OF HARD CONSONANTS WITH VOWEL FINALS.

M. F பொதுவிதி:—GENERAL RULE.

165. இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன்
கசதப மிகும்வித வாதன மன்னே.

(இ-ள்.) இயல்பினும் - இயல்பினாலும், விதியினும் - விதியினும், நின்ற உயிர் முன் - (இறுதியாக) நின்ற உயிர்களின் முன், க ச த ப - (வருகிற) கசதபக்கள், விதவான - (சிறப்பு விதியிற்) சொல்லாதவைகள், மிகும் மன் - பெரும்பாலும் மிகும், எ-று.

இயல்பு உயிரீறுவது - விகாரப்படாமல் இயற்கையாக நின்ற உயிர் சொல்லுக்கு இறுதியாக நிற்பது.

விதியுயிரீறுவது - மொழியிறுதியில் இயற்கையாக நின்ற உயிராவது மெய்யாவது ஒருவிதி பற்றிப்போய் மற்றோர் உயிரீறுகநிற்பது.

(அல்வழி)

உயர்திணைப்பெயர்.	ஆடூஉ	+	குறியன்	=	ஆடூஉக்குறியன்
	நம்பி	+	கொற்றன்	=	நம்பிக்கொற்றன்
பொதுப்பெயர்.	சாத்தி	+	பெண்	—	சாத்திப்பெண்.
அஃறிணைப்பெயர்.	தாரா	+	கடிது	=	தாராக்கடிது
	ஒற்றை	+	கை	=	ஒற்றைக்கை
	வட்ட	+	கால்	=	வட்டக்கால்
	தாழ	+	கோல்	—	தாழக்கோல்.

(வேற்றுமை)

உயர்திணைப்பெயர்.	ஆடூஉ	+	கை	=	ஆடூஉக்கை
	நம்பி	+	பூ	=	நம்பிப்பூ
அஃறிணைப்பெயர்.	கடு	+	காய்	=	கடுக்காய்
	ஆடு	+	கால்	=	ஆட்டுக்கால்.

ஆடி	+	கொண்டான்	=	ஆடிக்கொண்டான்	எச்சங்களின்முன் வலிமிக்கன.
ஆடா	+	கொண்டான்	=	ஆடாக்கொண்டான்	
ஆடூஉ	+	கொண்டான்	—	ஆடூஉக்கொண்டான்	
ஆடென	+	கொண்டான்	=	ஆடெனக்கொண்டான்	
ஆட	+	கொண்டான்	=	ஆடக்கொண்டான்	
உண்பாக்கு	+	சென்றான்	=	உண்பாக்குச் சென்றான்	
பூத்து	+	காய்த்தது	=	பூத்துக்காய்த்தது	
பொள்ளென	+	பறந்தது	=	பொள்ளெனப்பறந்தது	
சால	+	பகைத்தது	=	சாலப்பகைத்தது.	
இருளின்றி	+	கண்டார்	=	இருளின்றிக்கண்டார்.	

மற்றை	+	சாதி	=	மற்றைச்சாதி	இடைச்சொல்.	இவைகளின்முன் வலிமிக்கன.
இனி	+	செய்வேன்	—	இனிச்செய்வேன்.		
கடி	+	கமலம்	=	கடிக்கமலம்.	உரிச்சொல்.	
சொன்றி	+	குழிசி	=	சொன்றிக்குழிசி.	திசைச்சொல்	
கங்கை	+	சடை	=	கங்கைச்சடை.	வடசொல்.	

விதவாதன பெரும்பாலு மிகுமெனவே விதந்தன சிறுபான்மை மிகுமெனவும், விதவாதன சிறுபான்மை மிகாவெனவுங் கூறியதாயிற்று.

(உ-ம்.) நொ + கொற்ற = நொக்கொற்ற
து + கொற்ற = துக்கொற்ற.

"ஏவன்முன் வல்லின மியல்பொடு விகற்பே" எனச் சொல்லிய சிறப்புவிதி பெறாமல் வல்லெழுத்து மிக்கன.

ஏரிகரை
குழந்தைகை
"பழமுதிர்சோலை மலைகிழவோனே".
கூப்புகரம்
நாட்டுபுகழ்.
} விதவாதன இருவழியிலும் மிகாவாயின.()

M. F. உயிரீற்று மரப்பெயர்முன் வல்லினம்:—HARD CONSONANTS AFTER NAMES OF TREES ENDING IN VOWELS.

166. மரப்பெயர் முன்ன ரினமெல் லெழுத்து
வரப்பெறு னவுமுள வேற்றுமை வழியே.

(இ-ள்.) மரப்பெயர் முன்னர் - (உயிரீற்றுச் சில மரப்பெயர்களுக்கு முன், இன மெல்லெழுத்து வர- (முன்சொன்ன பொது விதியால் வருகிற வல்லெழுத்து மிகாமல் அவற்றிற்கு) இனமாகிய மெல்லெழுத்து மிக, பெறுனவும் - பெறுவனவும், உள- சிலவுளவாம், வேற்றுமை வழி - வேற்றுமை வழியில், எ-று.

(உ-ம்.) விள + காய் = விளங்காய்
மா + கொம்பு= மாங்கொம்பு. (கசு)

அகரவீற்றுப்புணர்ச்சி:—COMBINATION OF FINAL அ.

M F. அகரவீற்றின்முன் வல்லினம்.—HARD CONSONANTS AFTER FINAL அ.

167. செய்யிய வென்னும் வினையெச்சம் பல்வகைப்
பெயரி னெச்சமுற் ருற ஹுருபே
அஃறிணைப் பன்மை யமமமுன் னியல்பே.

(இ-ள்.) செய்யிய என்னும் வினையெச்சம் - செய்யிய என்னும் வினையெச்ச வினையும், பல்வகை பெயரினெச்சம் - பல

வகைப்பட்ட பெயரெச்ச வினையும், (பல்வகை) முற்று - பலவகைப்பட்ட முற்றுவினையும், ஆறன் உருபு - ஆறாம்வேற்றுமை அகரவுருபும், அஃறிணைப் பன்மை - அஃறிணைப்பன்மைப் பெயரும், அம்ம - அம்ம என்கின்ற உரையசை இடைச்சொல்லும், முன் - (ஆகிய அகரவீற்றுச்சொற்கள் ஆறன்) முன்னும், இயல்பு - (வரும் வல்லெழுத்துகள்) இயல்பாம், எ-று.

முதலிலும் கடையிலும் அகரவீற்றுச்சொல் வைத்ததினாலே இடையிலுள்ளனவும் அகரவீறென்பதும், 'பல்வகைப்பெயரினெச்சமுற்று' என்றதனால், பெயர் வினை இடை உரி அடியாகப்பிறந்த பெயரெச்சமும் வினைமுற்றும் என்பதும், முற்று என வேறுகூறினமையால் 'அஃறிணைப்பன்மை' என்பது அஃறிணைப் பன்மைப் பெயர் என்பதும் பெறப்பட்டன.

(உ-ம்.) உண்ணிய + கொண்டான் = உண்ணியகொண்டான்
+ சென்றான் = உண்ணியசென்றான்
+ தந்தான் = உண்ணியதந்தான்
+ போனான் = உண்ணியபோனான்.

எனச் செய்யிய என்னும் வினையெச்சத்தின்முன் வலி இயல்பாயின.

உண்ட + குதிரை = உண்டகுதிரை
+ செந்நாய் = உண்டசெந்நாய்
+ தகர் = உண்டதகர்
+ பன்றி = உண்டபன்றி.

உண்ணுகின்ற உண்ணாத எனவும், கடைக்கணித்த - சித்திரித்த - வெளுத்த - சினவிய - கறுவிய - அமரிய எனவும், பொன்போன்ற, திண்ணென்ற எனவும், சான்ற - உற்ற எனவும் வருகிற நால்வகைத் தெரிநிலை வினைப் பெயரெச்ச வினைகளோடும், அமர்முகத்த, கடுங்கண்ண, சிறிய, பெரிய, உள, பல, சில எனவும், பொன்னன் எனவும், கடிய எனவும் வருகிற மூவகை வினைக்குறிப்புப் பெயரெச்சங்களோடும் மேலே காட்டியபடி குதிரை, செந்நாய், தகர், பன்றி இவற்றை முறையே கூட்டிப் பலவகைப் பெயரெச்சங்களின் முன் வலி இயல்பாதல் காண்க.

உண்டன + குதிரை = உண்டனகுதிரை
+ செந்நாய் = உண்டனசெந்நாய்
+ தகர் = உண்டனதகர்
+ பன்றி = உண்டனபன்றி.

உண்ணுகின்றன - உண்பன - கடைக்கணித்தன - சித்திரித்தன - வெளுத்தன - சினவின - கறுவின - அமரின - திண்ணென்றன - பொன்போன்றன முதலிய நால்வகைத் தெரிநிலை வினைமுற்றுக்களோடும், அமர்முகத்தன - கடுங்கண்ணன - சிறியன - பெரியன முதலிய மூவகைக் குறிப்பு வினைமுற்றுக்களோடுங் குதிரை, செந்நாய், தகர், பன்றி இவற்றை முறையே கூட்டி இயல்பாதல் காண்க. வாழ்க, வாழிய என்னும் வியங்கோள் வினைமுற்றுக்களோடும் கொற்றா, சாத்தா, தேவா, பூதா என்பவற்றை முறையே கூட்டிப் பலவகை வினைமுற்றுக்களின் முன் வலி இயல்பாதல் காண்க.

மேற்காட்டிய பெயரெச்ச வினைகளுக்கும் அகரவீற்றுப் பல்வகை வினைமுற்றுக்களுக்கும் பொருள் வேறுபாடேயன்றிச் சொல் வேறுபாடு இல்லாமையால் அவற்றையே உதாரணமாகவுங் கொள்ளலாம்.

மூற்றின்முன் இயல்பாமெனவே அருத்தாபத்தியால் உண்டகண்டன, அமர்முகத்த, கலக்கின என வினைமுற்று வினையெச்சமாகியும் குறிப்புமுற்று ஈரெச்சமாகியும் வந்தவிடத்தும் இயல்புமாமென்றறிக.

தன + கைகள் = தனகைகள்
+ தாள்கள் = தனதாள்கள்
+ பன்றிகள் = தனபன்றிகள்
+ செவிகள் = தனசெவிகள்.

} ஆறனுருபின் முன் வலி இயல்பாயின.

(அல்வழி.)

பல + குதிரைகள் = பலகுதிரைகள்
+ செந்நாய்கள் = பலசெந்நாய்கள்
+ தகர்கள் = பலதகர்கள்
+ பன்றிகள் = பலபன்றிகள்.

(வேற்றுமை.)

பல + கொடுத்தான் = பலகொடுத்தான்
+ செய்தான் = பலசெய்தான்
+ தந்தான் = பலதந்தான்
+ போக்கினான் = பலபோக்கினான்.

} அஃறிணைப் பன்மைப் பெயர்முன் இருவழியும் வலி இயல்பாயின.

அம்ம + கொற்றா = அம்மகொற்றா
+ சாத்தா = அம்மசாத்தா
+ தேவா = அம்மதேவா
+ பூதா = அம்மபூதா.
} உரையசை இடைச்சொல் முன் வலி இயல் பாயின.

M. F. வாழிய என்னுஞ் சொல்லுக்குச் சிறப்புவிதி:—

SPECIAL RULE REGARDING வாழிய.

168. வாழிய வென்பத னீற்றி னுயிர்மெய்
ஏகலு முரித்தஃ தேகினு மியல்பே.

(இ-ள்.) வாழிய என்பதன் - வாழிய என்னும் வியங்கோண் முற்றினுடைய, ஈற்றின் உயிர்மெய் - இறுதியிலுள்ள யகர உயிர்மெய்யானது, ஏகலும் - குறைதலும், உரித்து - உரித்தாகும்; அஃது - அவ்வுயிர்மெய்யானது, ஏகினும் - குறைந்து (இகர ஈறாய்) நின்றாலும், இயல்பே - (வல்லினம் பொதுவிதியினாலே மிகாமற் சிறப்புவிதியிற் கூறியபடி) இயல்பேயாம், எ-று.

(உ-ம்.) ஆ + வாழிய = ஆவாழி—ஈற்றுயிர் மெய்குறைந்தது.

வாழிய + கொற்றா = வாழிகொற்றா
+ சாத்தா = வாழிசாத்தா
+ தேவா = வாழிதேவா
+ பூதா = வாழிபூதா
} ஈற்றுயிர்மெய் குறைந்த விடத்தும் வல்லினம் இயல்பாயின. ()

F சாவ என்னுஞ் சொல்லுக்குச் சிறப்புவிதி:—

SPECIAL RULE REGARDING சாவ.

169. சாவவென் மொழியீற் றுயிர்மெய் சாதலும்விதி

(இ-ள்.) சாவ என் மொழி - சாவ என்னுஞ் செயவெனெச்ச வினைச்சொல்லினுடைய, ஈறு உயிர்மெய் - இறுதியிலிருக்கின்ற வகர உயிர்மெய்யானது, சாதலும் - கெட்டுப் புணர்தலும், விதி - விகுதியாகும், எ-று.

(உ-ம்.) சாவ + குத்தினான்=சாக்குத்தினான்.

இப்புணர்ச்சி சாவக்குத்தினான் என்னும் புணர்ச்சிபோற் சிறந்த தல்லாமையாற் 'சாதலும் விதி' என்றார். (கக)

F. பல சில என்னுஞ் சொற்களுக்குச் சிறப்புவிதி:—

SPECIAL RULE REGARDING பல AND சில.

170. பலசில வெனுமிவை தம்முன் றாம்வரின்
இயல்பு மிகலு மகர மேக

லகரம் றகர மாகலும் பிறவரின்
அகரம் விகற்ப மாகலு முளபிற.

(இ - ள்.) பல சில எனும் இவை - பல சில என்கின்ற இவ்விருசொல்லும், தம்முன் தாம் வரின் தமக்கு முன்னே தாம் வருமாயின், இயல்பும் - இயல்பாதலும், மிகலும் - மிகுதலும், அகரம் ஏக - அகரம் கெட, லகரம் றகரம் ஆகலும் - லகரம் றகரமாகத் திரிதலும், பிறவரின் - (இவற்றின் முன்) பிற மொழிகளுள் யாதாயினு மொன்று வந்தால், அகரம் விகற்பம் ஆகலும் - அகரமானது நிற்றலும் நீங்கலும், உள - உளவாம், எ-று.

(உ-ம்.) பல + பல = பலபல
சில + சில = சிலசில. } இயல்பாயின.

பல + பல = பலப்பல
சில + சில = சிலச்சில. } மிக்கன.

பல + பல = பற்பல
பல + சில = சிற்சில. } அகரங்கெட லகரம் றகரமாயிற்று.

பல + கலை	= பலகலை	பல்கலை	பிற வர அகரம் விகற்பமாயிற்று.
+ சாலை	= பலசாலை	பல்சாலை	
+ தாழிசை	= பலதாழிசை	பஃறாழிசை	
+ படை	= பலபடை	பல்படை	
+ ஞானம்	= பலஞானம்	பன்ஞானம்	
+ நாள்	= பலநாள்	பன்னாள்	
+ மணி	= பலமணி	பன்மணி	
+ வளை	= பலவளை	பல்வளை	
+ ஆயம்	= பலவாயம்	பல்லாயம்.	

'பிற' என்ற மிகையால், பல்பல, சில்சில என அகரங்கெட லகரம் றகரமாகாமல் ஒரோவிடத்து வருதலும், இன்னும் அகரவீற்றுப் புணர்ச்சியுள் அடங்காது வருவனவுங் கொள்க. (உ0)

---

2. ஆகாரவீற்றுப்புணர்ச்சி:—COMBINATION OF FINAL ஆ.

F. ஆ மா மியா என்னுஞ் சொற்களுக்கும் ஆகாரவீற்று வினைமுற்றுக்களுக்குஞ் சிறப்புவிதி:—SPECIAL RULE REGARDING ஆ மா மியா, AND FINITE VERBS ENDING IN ஆ.

171. அல்வழி யாமா மியாமுற்று முன்மிகா.

(இ - ள்.) அல்வழி - அல்வழியில், ஆ மா மியா - ஆவு மாவு மாகிய இருபெயரும் மியா என்னு முன்னிலையசை இடைச் சொல்லும், முற்று - (ஆகாரவீற்று அஃறிணைப்பன்மை எதிர் மறை) முற்றுவினையுமாகிய, முன் - (இவற்றின்) முன், மிகா - (வருகிற வல்லினம்) இயல்பாகும், எ-று.

(உ-ம்.) ஆ + குறிது = ஆகுறிது
+ சிறிது = ஆசிறிது
+ தீது = ஆதீது
+ பெரிது = ஆபெரிது.

மா + குறிது = மாகுறிது
+ சிறிது = மாசிறிது
+ தீது = மாதீது
+ பெரிது = மாபெரிது.

கேண்மியா + கொற்றா = கேண்மியாகொற்றா
+ சாத்தா = கேண்மியாசாத்தா
+ தேவா = கேண்மியாதேவா
+ பூதா = கேண்மியாபூதா.

உண்ணா + குதிரைகள் = உண்ணாகுதிரைகள்
+ செந்நாய்கள் = உண்ணாசெந்நாய்கள்
+ தகர்கள் = உண்ணாதகர்கள்
+ பன்றிகள் = உண்ணாபன்றிகள்.

இரட்டுறமொழிதலால், காட்டுப்பசு என்னும் பொருளைத் தருகிற ஆமா என்பதன் முன்னும் ஆமா குறிது, ஆமா சிறிது, ஆமா தீது, ஆமா பெரிது என இயல்பாம் எனக் கொள்க.

'முற்றுமுன்மிகா' என்ற அருத்தாபத்தியால், அவ்வினையா லணையும் பெயர்முன்னும், அவ்வினைமுற்று வினையெச்சமான வற்றின் முன்னும் அவ்வாறு மிகாது வரும். அருத்தாபத்தி- ஒருபொருளைக் கூறியமாத்திரத்தால் அதன் குறிப்பைக்கொண்டு கூறப்படாத மற்றொருபொருளையும் அறிவது.

(உ-ம்.) உண்ணாகிடந்தன - வினையாலணையும்பெயர். - (உண்ணா உண்ணாதனவாகிய குதிரைமுதலியன.) வினைமுற்று வினையெச்சமாதற்கு உதாரணமாகக்கொள்ளில் (உண்ணா தனவாய்க் கிடந்தன) எனப் பொருள்பெறும். உண்ணாக்குதிரை என ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தினும், உண்ணாக்கிடந்தான் என ஈறுகெட்ட எதிர்மறை

வினையெச்சத்தினும், உண்ணுக்கிடந்தன என உடன்பாட்டு இறந்தகால வினையெச்சத்தினும், பொதுவிதியால் வலி மிகும். (உக)

F. குறிலிணைந்த ஆகாரவீற்றுச் சொற்களுக்குச் சிறப்புவிதி:—

SPECIAL RULE REGARDING FINAL ஆ AFTER SHORT VOWELS OR VOWEL-CONSONANTS.

172 குறியதன் கீழாக் குறுகலு மதனோ
டுகர மேற்றலு மியல்புமாந் தூக்கின்.

(இ-ள்.) குறியதன் கீழ் ஆ - (உயிரும் உயிர்மெய்யும் ஆகிய) குற்றெழுத்தின் கீழ்நின்ற ஆகாரம், குறுகலும் - அகரமாதலும், அதனோடு - அவ்வகரமாதலுடனே, உகரம் ஏற்றலும் - உகரம் பெறுதலும், இயல்பும் - (அவ்விரண்டு மில்லாமல்) இயல்பாதலும் ஆகிய மூன்று விதியும்), ஆம் - ஆகும், தூக்கின்- பாட்டினிடத்து, எ-று.

(உ-ம்.) "நிலவிரிகானல்"—நிலா என்பது நில என ஈற்று ஆகாரம குறுகியது.

"மருவினென் செய்யுமோ நிலவு"—நிலா என்பது நிலவு என ஈற்று உயிர் குறுகலோடு உகரம் பெற்றது.

"நிலா வணங்கு வெண்மணன்மே னின்று"—நிலா என்பது இயல்பாயிற்று.

செய்யுளிலே மூன்றுமாம் என்றதனால்,

அரா — அரவு புறா — புறவு
இரா — இரவு சுறா — சுறவு

என ஆகார ஈறு இயல்பாதலும், அவ்வீறு குறுகி உகரம் ஏற்றலும் வழக்கில் வருமெனக் கொள்க. (உஉ)

---

3. இகரவீற்றுப்புணர்ச்சி:—COMBINATION OF FINAL இ.

M. F. அன்றி, இன்றி என்னுஞ் சொற்களுக்குச் சிறப்புவிதி:—

SPECIAL RULE REGARDING அன்றி AND இன்றி.

173. அன்றி யின்றியென் வினையெஞ் சிகரம்
தொடர்பினு ளுகர மாய்வரி னியல்பே.

(இ - ள்.) அன்றி இன்றி என் - அன்றி இன்றி என்கின்ற, வினை எஞ்சு இகரம் - வினையெச்சக் குறிப்புச் சொற்களி னீற்றி லிருக்கின்ற இகரம், தொடர்பினுள் - செய்யுளில், உகரம் ஆய் வரின் - உகரமாய்த் திரிந்துவரின், இயல்பு - வருகிற கசதபக்கள் இயல்பாகும், எ-று.

(உ-ம்.) நாள் + அன்றி + போகி = நாளன்றுபோகி
உப்பு + இன்றி + புற்கையுண்கமா = உப்பின்று புற்கையுண்கமா.

உகரமாகத் திரியாவிடின,
நாள் + அன்றி + போகி = நாளன்றிப்போகி
விண் + இன்றி + பொய்ப்பின் = விண்ணின்றிப் பொய்ப்பின்
உப்பு + இன்றி + புற்கை = உப்பின்றிப் புற்கை.
எனப் பொதுவிதியால் வல்லொற்று மிகுமெனக் கொள்க. ()

174 உரிவரி னாழியி னீற்றுயிர் மெய்கெட
மருவும் டகர முரியின் வழியே
யகர வுயிர்மெய்யா மேற்பன வரினே.

(இ - ள்.) உரி வரின் - உரி என்னும் அளவுப்பெயர் வந்தால், நாழியின் - நாழி என்னும் அளவுப்பெயரினது, ஈறு உயிர்மெய் கெட - ஈற்றிலுள்ள ழிகரமானது நீங்க, டகரம் மருவும் - டகர மெய்யானது வரும்; உரியின் வழி - உரி என்னும் அளவுப்பெ யரின் பின், யகர உயிர்மெய் ஆம் - யகர வுயிர்மெய் வரும், ஏற்பன வரின் - அவ்வுயிர்மெய் வருதற்கு ஏற்றமொழிகள் வந்தால், எ-று.

(உ-ம்.) நாழி + உரி = நாடுரி
உரி + உப்பு = உரியவுப்பு
+ பயறு = உரியபயறு
+ மிளகு = உரியமிளகு
+ வரகு = உரியவரகு.

"ஏற்பனவரின்" என்வே ஏலாதனவரின், உரி + அரிசி = உரி யரிசி எனப் பொதுவிதி பெறுதல் கொள்க. நாடுரி என்பது நாவுரி என இக்காலத்து மருவிற்று.

ஆழாக்கு இரண்டுகொண்டது உழக்கு, உழக்கு இரண்டுகொ ண்டது உரி, உரி இரண்டுகொண்டது நாழி. (உச)

புளி என்னுஞ் சொல்லுக்குச் சிறப்புவிதி:—
SPECIAL RULE REGARDING புளி.

175. சுவைப்புளிமுன்னின மென்மையுந் தோன்றும்.

(இ-ள்.) சுவை புளி முன் - அறுசுவையுள் ஒன்றை யுணர்த்து கின்ற புளி என்னும் பெயர்முன், இன மென்மையும் - (வருகிற வல்லெழுத்துகள் மிகுதலல்லாமல் அவற்றிற்கு) இனமாகிய மெல்லெழுத்துகளும், தோன்றும - (ஒரோவிடத்து) மிகும், எ - று.

(உ-ம்.) புளி+கறி = புளிங்கறி
+சோறு = புளிஞ்சோறு
+தயிர் = புளிந்தயிர்
+பாளிதம் = புளிம்பாளிதம்
} இன மென்மை மிக்கன.

புளிப்பாகிய கறி எனவும், புளிப்பையுடைய கறி எனவும், விரிக்கப்படுதலால் இருவழிக்கு மாகும்.

"மென்மையும்" என்ற உம்மையால் புளி + கறி=புளிக்கறி எனப் பொதுவிதி பெறுதலே சிறப்புடைத்தாகும். (உரு)

---

3. *a*. இகர ஐகாரவீற்றுப்புணர்ச்சி:—COMBINATION OF FINAL இ AND ஐ.

M. F. இகர ஐகார ஈற்றின்முன் வல்லினம்:—HARD CONSONANTS AFTER FINAL இ AND ஐ.

176. அல்வழி இஐம் முன்ன ராயின்
இயல்பு மிகலும் விகற்பமு மாகும்.

(இ - ள்.) இ ஐ முன்னர் - இகர ஐகாரவீற்று அஃறிணைப் பெயர்முன், அல்வழி - அல்வழியினிடத்து, ஆயின் - (வல்லினம்) வருமாயின், இயல்பும் - இயல்பாதலும், மிகலும் - (பொது விதியான்) மிகுதலும், விகற்பமும் ஆகும் - (ஒன்றற்கே) ஒருகான் மிகாமையும் ஒருகான் மிகுதலும் ஆகும், எ-று.

ஒப்பின் முடித்தலால் ஐகாரவீறும் உடன் கூறினர்.

(உ-ம்.) பருத்தி + குறிது = பருத்திகுறிது
+ சிறிது = பருத்திசிறிது
+ தீது = பருத்திதீது
+ பெரிது = பருத்திபெரிது.
யானை + குறிது = யானைகுறிது
+ சிறிது = யானைசிறிது
+ தீது = யானைதீது
+ பெரிது = யானைபெரிது.
} இ ஐ முன் அல்வழியில் இயல்பாயின.

சாரை + பாம்பு = சாரைப்பாம்பு
பனை + கை = பனைக்கை
} வலிமிக்கன.

கிளி + குறிது = கிளிகுறிது, கிளிக்குறிது
தினை + குறிது = தினைகுறிது, தினைக்குறிது
} விகற்பித்தன.

இயல்பு எழுவாய்த்தொடர் உம்மைத்தொகைகளிலும், மிகுதி பண்புத்தொகை உவமைத்தொகைகளிலும், விகற்பம் சில பெயர்முன் எழுவாய்த்தொடரிலுங் கொள்ளப்படும்.

பொதுப்பெயர் உயர்திணைப் பெயாகட்கு விதி முன்னரே கூறினாராதலால், இச்சூத்திரம் அஃறிணைப்பெயருக்கு எனக் கொள்க. (உ௬)

---

4. ஈகாரவீற்றுப்புணர்ச்சி :—COMBINATION OF FINAL ஈ.

ஆப்பீ முன் நாற்கணமும் :—FOUR KINDS OF INITIAL LETTERS AFTER ஆப்பீ.

177. ஆமுன் பகரவீ யனைத்தும் வரக்குறுகும்
மேலன வல்வழி யியல்பா கும்மே.

(இ-ள்.) ஆமுன் பகர ஈ - ஆ என்னும் பெயரின் பின்னின்ற பகர ஈகாரம், அனைத்தும் வர - நாற்கணமும் வந்தால், குறுகும் - குறுகும் ; அல்வழி - அல்வழியில், மேலன - மேலைச்சூத்திரத்தினுட் கூறியவிதி மூன்றனுள், இயல்பு ஆகும் - (வருகிற வல்லினம்) இயல்பைப் பெறும், எ-று.

(உ-ம்.) ஆப்பீ + அரிது = ஆப்பியரிது
ஆப்பீ + குளிரும் = ஆப்பிகுளிரும்
ஆப்பீ + நன்று = ஆப்பிநன்று
ஆப்பீ + வலிது = ஆப்பிவலிது.
} அல்வழி.

அல்வழியில் இயல்பாகு மெனவே வேற்றுமையில் பொது விதியால் வலி மிகுமெனக் கொள்க.

(உ-ம்.) ஆட்பீ + குளிர்ச்சி = ஆப்பிக்குளிர்ச்சி } வேற்று
ஆப்பீ + திரட்சி = ஆப்பித்திரட்சி } மை.

இதில் "பகரவீ" என்றதும், வருஞ் சூத்திரத்தில் "பவ்வீ" என்பதும் இடக்கரடக்கல். இடக்க ரடக்கலாவது—சபையிற் சொல்லத்தகாததை மறைத்துச் சொல்லுதல். [இது ஒருவகை வழக்கு. பெய - சூ - கo.] இருமொழியை நிலைமொழியாக வைத்துப் புணர்த்த, செயற்கைஇகர வீறு ஆதலால், எய்தியது பிறழாமல் இயல்பாகு மென்றார். (உஎ)

சில ஈகார வீற்றின்முன் வல்லினம் :—HARD CONSONANTS AFTER பீ, நீ, AND மீ.

178. பவ்வீ நீமீ முன்ன ரல்வழி
இயல்பாம் வலிமெலி மிகலுமா மீக்கே.

(இ-ள்.) பவ்வீ - பகரமெய்யின்மேல் ஏறிநின்ற ஈகாரவீற்று (இடக்கரப்) பெயரும், நீ - நீ என்கிற (முன்னிலைப்) பெயரும், மீ-மீ என்கிற (மேலாகிய பண்பையும் மேலிடத்தையும் உணர்த்தும்) பெயருமாகிய, முன்னர் - (இம் மூன்றன்) முன்னும், அல்வழி - அல்வழியில், இயல்பாம் - (வருகிற வல்லினம்) இயல்பாகும்; மீக்கு - (இவற்றுள்ளே) மீ என்னுஞ் சொல்லுக்கு, வலி மெலி மிகலும் ஆம் - வல் லெழுத்தும் மெல்லெழுத்தும் மிகுதலுமாகும், எ-று.

(உ-ம்.) பீ + குறிது = பீகுறிது
+ சிறிது = பீசிறிது
+ தீது = பீதீது
+ பெரிது = பீபெரிது.
நீ + குறியை = நீகுறியை
+ சிறியை = நீசிறியை
+ தீயை = நீதீயை
+ பெரியை = நீபெரியை
மீ + கண் = மீகண். } இயல்பாயின.

மீ + கூற்று = மீக்கூற்று
+ கோள் = மீக்கோள்
+ தோல் = மீந்தோல். } வலி மெலி மிக்கன.

மீக்கூற்று=மேலாய சொல்லாற் பிறந்த புகழ். மீந்தோல்= மேலாயதோல். இது இக்காலத்துப் பீந்தோல் என வழங்கு கின்றது. நீ என்னும் பொதுப்பெயர் அல்வழியிலே நீ என் றும், வேற்றுமையிலே நின் என்றும் நிற்கையினாலே "பொதுப் பெய ருயர்திணைப் பெயர்" என்னுஞ் சூத்திரத்து ளடங்க வில்லை. இனி நீ என்னும் முன்னிலைப்பெயர் 'பொதுப்பெயர்' என்னும் சூத்திரத்து ளடங்குவதாகக்கொண்டு, இங்குக்கூறிய நீ என்பது நீக்குதல் என்னும் பொருள்கொண்ட முதனிலைத் தொழிற்பெயரென்றும் அதற்கு முன்வருகிற வலி நீ குறிது என இயல்பாம் என்றும் கொள்வது நேராகும். (உஅ)

---

5. உகரவீற்றுப்புணர்ச்சி :—COMBINATION OF FINAL உ.

M. F சில முற்றியலுகர வீற்றின்முன் வல்லினம் :—
HARD CONSONANTS AFTER NATURAL உ.

176. மூன்றா றுருபெண் வினைத்தொகை சுட்டீ
றாகு முகர முன்ன ரியல்பாம்.

(இ-ள்.) மூன்று ஆறு உருபு - ஒடு அது என்னும் மூன்றாம் வேற்றுமை ஆறாம் வேற்றுமை உருபுகளுக்கும், எண் - (இயல் பாயும் விகாரமாயும் வருகிற) எண்ணிற்கும், வினைத்தொகை - வினைத்தொகைக்கும், சுட்டு - சுட்டுப்பெயருக்கும், ஈறு ஆகும்- ஈறாகிய, உகர முன்னா - (முற்றியல்) உகரத்தின் முன்னே, இயல்பு ஆம் - (வருகிற வல்லினம்) இயல்பாகும், எ-று.

(உ-ம்.)

சாத்தனொடு + கொண்டான் = சாத்தனொடுகொண்டான்
+ சென்றான் = சாத்தனொடுசென்றான்
+ தந்தான் = சாத்தனொடுதந்தான்
+ போயினான் = சாத்தனொடுபோயினான்.

என மூன்றனுருபின்முன் வலி இயல்பாயின.

சாத்தனது + கை	= சாத்தனதுகை		ஆற னுருபின்
+ செவி	= சாத்தனதுசெவி		முன் வலி
+ தலை	= சாத்தனதுதலை		இயல் பாயி
+ புறம்	= சாத்தனதுபுறம்.		ன.

135

ஒரு + கை = ஒருகை
+ செவி = ஒருசெவி
+ தலை = ஒருதலை
+ புறம் = ஒருபுறம்.

} எண்ணுப் பெயர்முன் வலி இயல் பாயின.

இரு, அறு, எழு, ஏழு என்னும் எண்களோடும் மேலே காட்டியபடியே கை, செவி, தலை, புறம் என்பவற்றைக் கூட்டி வலி இயல்பாதல் காண்க.

அடு + களிறு = அடுகளிறு
+ சேனை = அடுசேனை
+ தானை = அடுதானை
+ படை = அடுபடை.

} வினைத்தொகை முன் வலி இயல்பாயின.

தரு, புகு, தெறு, எழு, விரவு முதலிய வினைத்தொகைகளோடும் மேலே காட்டியபடியே களிறு, சேனை, தானை, படை என்பவற்றைக் கூட்டி வலி இயல்பாதல் காண்க.

(அல்வழி)

அது + குறிது = அதுகுறிது
+ சிறிது = அதுசிறிது
+ தீது = அதுதீது
+ பெரிது = அதுபெரிது.

(வேற்றுமை)

அது + கண்டான் = அதுகண்டான்
+ செகுத்தான் = அதுசெகுத்தான்
+ தந்தான் = அதுதந்தான்
+ படைத்தான் = அதுபடைத்தான்.

} சுட்டுப்பெயர் முன் இருவழியும்வலி இயல் பாயின.

இது, உது என்பவற்றோடும் மேலே காட்டியபடியே கூட்டி வலி இருவழியும் இயலபாதல் காண்க.

உது + காண் = உது காண் உதுக்காண் என விகற்பித்து வருவது "இயல்பின்விகாரமும்" என்னுஞ் 225-ம் சூத்திரத்தில் "அன்னபிறவும்" என்றதனால் அமையும்.

சுட்டீறும் என்ற உபலக்ஷணத்தால் எதுகண்டான் எது பெரிது என வினாவீறும் முற்றுகரத்தின்முன்னும் வலி இயல்பாதல் கொள்க. (உக)

அது என்னும் மொழிக்குச் சிறப்புவிதி :—SPECIAL RULE REGARDING அது IN POETRY.

180. அதுமுன் வருமன் றுன்றுந் தூக்கின்.

(இ - ள்.) அது முன் வரும் - அது என்னுஞ் சுட்டுப்பெயர் முன் வருகிற, அன்று - அன்று என்னும் வினைக்குறிப்பு முற்றானது, தூக்கின் - பாட்டினிடத்து, ஆன்று ஆம் - ஆன்று என முதல் நீளும், எ-று.

(உ-ம்.) அது + அன்று = அதான்று. எனவரும்.

ஆன்றே யாம் என இயல்பை விலக்காமையால் அதன்று, அதுவன்று எனவும் வரும். (௧௮௦)

M. F. குற்றியலுகர வீற்றின்முன் நாற்கணமும்: —HARD CONSONANTS AFTER SHORTENED உ.

181. வன்றொட ரல்லன முன்மிகா வல்வழி.

(இ - ள்.) வன்றொடர் அல்லன முன் - வன்றொடரொழிந்த ஐந்து குற்றியலுகரவீற்றின் முன்னும், அல்வழி - அல்வழியில், மிகா - (வருகிற வல்லினம்) இயல்பாகும், எ-று.

நாகு	+	கடிது	=	நாகுகடிது
எஃகு	+	சிறிது	=	எஃகுசிறிது
வரகு	+	தீது	=	வரகுதீது
குரங்கு	+	பெரிது	=	குரங்குபெரிது
தெள்கு	+	கொடிது	=	தெள்குகொடிது
ஏகு	+	கால்	=	ஏகுகால்
அஃகு	+	பிணி	=	அஃகுபிணி
பொருது	+	சென்றான்	=	பொருதுசென்றான்
அறிந்து	+	தந்தான்	=	அறிந்துதந்தான்
எய்து	+	கொன்றான்	=	எய்துகொன்றான்.

அல்வழியில் வலி இயல்பாயின.

'வன்றொடரல்லன' என்றமையால், வன்றொடரின்முன் அல்வழியில் 'கொக்குப்பெரிது' என மிகும் என்க.

ஏழாம்வேற்றுமை இடப்பொருளுணர்த்தும் அங்கு இங்கு உங்கு எங்கு யாங்கு ஆண்டு ஈண்டு யாண்டு என்னும் மென்றொடர்க் குற்றியலுகரவீற்று இடைச்சொற்களின்முன் வலி மிகும்.

(உ-ம்.) அங்குக்கண்டான் இங்குச்சென்றான். மற்றவையும் இப்படியே ஒட்டிப்பார்க்க.

ஆனால், அன்று இன்று என்று பண்டு முந்து என்னும் மென்றொடர்க் குற்றியலுகரவீற்று இடைச்சொற்களின்முன் வரும் வல்லினம் இயல்பாகவே வரும்.

(உ-ம்.) அன்றுகண்டான் இன்றுபோனான் மற்றவையும் இப்படியே ஒட்டிப்பார்க்க. (கக)

182. இடைத்தொட ராய்தத் தொடரொற் றிடை
M. F. யின், மிகாநெடி லுயிர்த்தொடர் முன்மிகா
வேற்றுமை.

(இ-ள்) இடைத்தொடர் (முன்) - இடைத்தொடர் முன்னும், ஆய்தத்தொடர் (முன்) - ஆய்தத்தொடர் முன்னும், ஒற்று இடையில் மிகா - மெய்யெழுத்து இடையே மிகாத, நெடில் உயிர்த்தொடர் முன் - நெடிற்றொடர் முன்னும் உயிர்த்தொடர் முன்னும், வேற்றுமை - வேற்றுமையில், மிகா - (வருகிற வல்லினம்) இயல்பாம், எ-று.

(உ-ம்.)

தெள்கு	+கடுமை	=தெள்குகடுமை	இடைத் தொடர் முன் வேற்றுமையில் வலிமிகாது இயல்பாயின.
	+சிறுமை	=தெள்குசிறுமை	
	+தீமை	=தெள்குதீமை	
	+பெருமை	=தெள்குபெருமை.	
எஃகு	+கடுமை	=எஃகுகடுமை	ஆய்தத் தொடர் முன் வேற்றுமையில் வலிமிகாது இயல்பாயின.
	+சிறுமை	=எஃகுசிறுமை	
	+தீமை	=எஃகுதீமை	
	+பெருமை	=எஃகுபெருமை.	
நாகு	+கடுமை	=நாகுகடுமை	மெய் இடையில் இரட்டியாத நெடிற்றொடர் முன் வேற்றுமையில் வலிமிகாது இயல்பாயின.
	+சிறுமை	=நாகுசிறுமை	
	+தீமை	=நாகுதீமை	
	+பெருமை	=நாகுபெருமை.	
வரகு	+கடுமை	=வரகுகடுமை	மெய் இடையில் இரட்டியாத உயிர்த்தொடர்முன் வேற்றுமையில் வலி மிகாது இயல்பாயின
	+சிறுமை	=வரகுசிறுமை	
	+தீமை	=வரகுதீமை	
	+பெருமை	=வரகுபெருமை.	

ஒற்றிடையே மிகா என்றதை உயிர்த்தொடருக்கும் கூட்டிக்கொள்க. வீடு - வீட்டு, வயிறு - வயிற்று என ஒற்று இடையில் மிகும் நெடிற்றொடர் உயிர்த்தொடர்களன்றி மற்றும் கு - சு -

து - பு என்னும் ஈற்றினையுடைய நெடிற்றொடர் உயிர்த்தொட ரினையே கொள்க.

மேற்கூறிய டு - று ஈற்று நெடிற்றொடர் வேற்றுமையில் வயிற்றுக்கடுப்பு என்றும், அல்வழியில் மூட்டுப்பூச்சி என்றும் மிகுந்து வருமெனக் கொள்க. (௩௨)

M. F. டு, று ஈற்றுச் சில குற்றியலுகரங்கள் :—

WORDS WITH SHORTENED உ TERMINATIONS டு, and று.

183. நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுட்
டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே.

(இ - ள்.) நெடிலோடு உயிர்த்தொடர் குற்றுகரங்களுள் - நெடிற்றொடர்களும் உயிர்த்தொடர்களுமாகிய குற்றிய லுகர மொழிகளுள், ட ற ஒற்று - (அவ்வுகர மேறிநின்ற) டகர றகர மெய்கள், வேற்றுமை - வேற்றுமையில், மிக இரட்டும் - பெரும் பாலும் இரட்டும், எ-று.

வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்க.

(உ-ம்.) ஆடு	+ கால்	= ஆட்டுக்கால்	
	+ செவி	= ஆட்டுச்செவி	
	+ தலை	= ஆட்டுத்தலை	
	+ புறம்	= ஆட்டுப்புறம்	
	+ ஞாற்சி	= ஆட்டுஞாற்சி	
	+ நிறம்	= ஆட்டுநிறம்	
	+ மயிர்	= ஆட்டுமயிர்	
	+ யாப்பு	= ஆட்டியாப்பு	
	+ வலிமை	= ஆட்டுவலிமை	
	+ அடி	= ஆட்டடி.	
பாறு	+ கால்	= பாற்றுக்கால்	
	+ செவி	= பாற்றுச்செவி	
	+ தலை	= பாற்றுத்தலை	
	+ புறம்	= பாற்றுப்புறம்	
	+ ஞாற்சி	= பாற்றுஞாற்சி	
	+ நிறம்	= பாற்றுநிறம்	
	+ மயிர்	= பாற்றுமயிர்	
	+ யாப்பு	= பாற்றியாப்பு	
	+ வலிமை	= பாற்றுவலிமை	
	+ அடி	= பாற்றடி.	

நெடிற்றொடர்க் குற்றிய லுகரத்தில் ட ற ஒற்று இரட்டின.

முருடு + கால்	= முருட்டுக்கால்		
+ செவி	= முருட்டுச்செவி		
+ தலை	= முருட்டுத்தலை		
+ புறம்	= முருட்டுப்புறம்		
+ ஞாற்சி	= முருட்டுஞாற்சி		
+ நிறம்	— முருட்டுநிறம்		
+ மயிர்	= முருட்டுமயிர்		
+ யாப்பு	= முருட்டியாப்பு		
+ வலிமை	— முருட்டுவலிமை		
+ அடி	= முருட்டடி.		
முயிறு + கால்	= முயிற்றுக்கால்		
+ செவி	= முயிற்றுச்செவி		
+ தலை	= முயிற்றுதலை		
+ புறம்	= முயிற்றுப்புறம்		
+ ஞாற்சி	= முயிறுஞாற்சி		
+ நிறம்	= முயிற்றுநிறம்		
+ மயிர்	= முயிற்றுமயிர்		
+ யாப்பு	= முயிற்றுயாப்பு		
+ வலிமை	= முயிற்றுவலிமை		
+ அடி	= முயிற்றடி.		

உயிர்த்தொடர்க் குற்றியலுகரக்கு டறவொற்று இரட்டின.

இவ்விரண் டொற்றும் பெரும்பாலும் வேற்றுமைக்கண் இரட்டுமெனவே, சிறுபான்மை வேற்றுமைக்கண் இரட்டாமையும், சிறுபான்மை அல்வழிக்கண் இரட்டுதலும், சிறுபான்மை இருவழிக்கண் பிறவொற்றுக்கள் இரட்டுதலுங் கொள்க.

(உ - ம்.) காவிரிபுரக்குநாடுகிழவோனே } காடுகமிறந்தார்க்கே } கறைமிடறணியலும் } வேற்றுமையில் டற ஒற்றுக்கள் இரட்டாவாயின.

காட்டரண் } களிற்றுயானை } அல்வழியில் ட ற ஒற்றுக்கள் இரட்டின.

வெருக்குக்கண் } எருத்துக்கால் } எருத்துமாடு } இருவழியிலும் பிற ஒற்றுக்கள் இரட்டின. (௩௩)

M. F. மென்றொடர்க் குற்றியலுகரவீற்றின்முன்னாற்கணமும் :

FOUR KINDS OF INITIAL LETTERS AFTER SHORTENED உ FOLLOWING SOFT CONSONANTS.

184. மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையில்
தம்மின வன்றொட ராகா மன்னே.

(இ - ள்) மென்றொடர் மொழியுள் சில - மென்றொடர்க் குற்றியலுகர மொழிகளுள் சிலமொழிகள், வேற்றுமையில் - வேற்றுமைக்கண், தம் இனம் - தமக்கினமாகிய, வன்றொடர் - வன்றொடர்க் குற்றியலுகர மொழிகளாக (ஆகும்) ; ஆகா மன் - பெரும்பாலன (அப்படி வன்றொடர்) ஆதலையொழிந்தன, எ-று.

வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்க.

(உ-ம்.)	கழஞ்சு + கோல் = கழச்சுக்கோல்	வன்றொடராயின.	
	எண்கு + குட்டி = எட்டிக்குட்டி		
	மருந்து + பை = மருத்துப்பை		
	சுரும்பு + நாண் = சுருப்புநாண்		
	கரும்பு + வில் = கருப்புவில்		
	கன்று + ஆ = கற்று		

சில வன்றொடராம் எனவே - ஆகாதன பல என்பது தானே வந்தியையவும், 'மன்' என்ற மிகையாலே அல்வழியிலுஞ் சிறுபான்மை வன்றொடராதலும், வேற்றுமையில் விகற்பித்து வருதலுங் கொள்க.

(உ - ம்.)

(உ-ம்.)	வண்டு + கால் = வண்டுக்கால்	வன்றொடராகாதன.
	பந்து + திரட்சி = பந்துத்திரட்சி	
	ஞெண்டு + கால் = ஞெண்டுக்கால்	
	குரும்பு + சான்றோர் = குரும்பிற்சான்றோர்.	
	என்பு + உடம்பு — எற்புடம்பு	அல்வழியில் வன்றொடராயின.
	குரங்கு + மனம் — குரக்குமனம்	
	குரங்கு + குட்டி — குரங்குக்குட்டி	வேற்றுமையில் விகற்பித்து வந்தன.
	— குரக்குக்குட்டி	
	பாம்பு + தோல் — பாம்புத்தோல்	
	— பாப்புத்தோல்	

அன்பு + தளை = அன்புத்தளை, அற்புத்தளை. இது அன்பாகிய தளை, அன்பாலாகிய தளை என வருதலால், அல்வழி வேற்றுமை இரண்டிலும் ஒன்றுதானே விகற்பித்து வருதலுங் கொள்க.

இச்சூத்திரத்தில் சில என்றதனால் பல என்பதும், ஆகா என்றதனால் ஆவன என்பதும் தாமே வந்து இயைந்தன. ஆதலால், ஆவன சில, ஆகா பல எனக் கொள்க. (௩௪)

F. ஐயீற்றுக் குற்றியலுகரம் :—FINAL SHORTENED உ CHANGED INTO ஐ.

185. ஐயீற் றுடைக்குற் றுகரமு முளவே.

(இ - ள்.) ஐ ஈறு உடை - ஐகாரச்சாரியையை இறுதியிலே பெற்றுவருகிற, குற்றுகரமும் - (மென்றொடர்க்)குற்றிய லுகர மொழிகளும், உள - சில உண்டு, எ-று.

வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்க.

(உதாரணம்.)

பண்டு + காலம்	— பண்டைக்காலம்	}	அல்வழி.
இன்று + நாள்	— இற்றைநாள்.	}	
அன்று + கூலி	— அற்றைக்கூலி	}	வேற்றுமை.
இன்று + நலம்	— இற்றை நலம்.	}	

மேலைச்சூத்திரத்தைச் சாரவைத்தலால் மென்றொடரென்பது, குற்றுகரம் எனப் பொதுப்படச் சொன்னமையால், நேற்று + பொழுது = நேற்றைப் பொழுது என வன்றொடர் ஐகாரச்சாரியை பெறுதலும் ;

"ஐயீற்றுடைக்குற் றுகரமும்" என உடைமையாக்கிக் கூறினமையால் வருமொழிப் புணர்ச்சியின்றி, ஒன்று - ஒற்றை இரண்டு - இரட்டை, வேட்டு - வேட்டை என ஒருமொழியாய் நின்று ஐகாரம் பெறுதலும் ;

ஓராண்டு - ஓராட்டை, ஈராண்டு - ஈராட்டை எனத் தொடர் மொழியாய் நின்று ஐகாரம் பெறுதலும் கொள்க. (கூரு)

F. குற்றுகர வீற்றுத்திசைப்பெயர் :—WORDS IN SHORTENED உ BEING NAMES OF THE POINTS OF THE COMPASS.

186. திசையொடு திசையும் பிறவுஞ் சேரின்
நிலையீற் றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
றகரம் னலவாத் திரிதலு மாம்பிற.

(இ - ள்.) திசையொடு திசையும் - திசைச்சொல்லோடு திசைச்சொல்லும், பிறவும் - பிறசொல்லும், சேரின் - புணருமிடத்து, நிலை ஈறு உயிர்மெய் - நிலைமொழியீற்றிலே நின்ற உயிர்மெய்யும், க ஒற்று - (அதன்பின் நின்ற) ககர மெய்யும்

நீங்கலும் - கெடுதலும், றகரம் - (அவ்விடத்து நின்ற) றகர மெய், ன ல ஆக - னகர மெய்யாகவும் லகர மெய்யாகவும், திரிதலும் - திரிதலும், ஆம் - ஆகும், எ-று..

நிலையீற்றுயிர்மெய் கவ்வொற்று நீங்கல் - கிழக்கு குணக்கு குடக்கு வடக்கு என்பவற்றிற்கும், றகரம் னகரமாகத்திரிதல் தெற்கு என்பதற்கும், றகரம் லகரமாகத்திரிதல் மேற்கு என்பதற்கும், என அறிக.

(உ - ம்.)

வடக்கு + கிழக்கு	= வடகிழக்கு		உயிர்மெய்யுங் ககரமெய்யுங் கெட்டு வந்தன.
+ மேற்கு	= வடமேற்கு		
+ திசை	= வடதிசை		
+ மலை	= வடமலை		
+ வேங்கடம்	= வடவேங்கடம்.		
குடக்கு + திசை	= குடதிசை		
+ நாடு	= குடநாடு		
குணக்கு + கடல்	= குணகடல்		
+ திசை	= குணதிசை		
+ பால்	= குணபால்.		
தெற்கு + கிழக்கு	= தென்கிழக்கு		உயிர்மெய் கெட றகரம் னகரமாயிற்று.
+ மேற்கு	= தென்மேற்கு		
+ மலை	= தென்மலை		
+ வீதி	= தென்வீதி.		
மேற்கு + பால்	= மேல்பால்		உயிர்மெய் கெட றகரம் லகர மாயிற்று.
+ நாடு	= மேனாடு		
+ திசை	= மேற்றிசை.		

'பிற' என்றமையால் திசைப்பெயரோடு திசைப்பெயர் விகாரப்பட்டுப் புணரும்போது நிலைமொழியாய் நிற்பன வடக்கு தெற்கு என்னும் பெருந்திசைகளேயாம். கிழக்கென்பது ழகரத்தின் அகரம்கெட்டு முதல் நீண்டு வரும்.

(உ-ம்.) கிழக்கு + காற்று	= கீழ்காற்று	ஈற்றுயிர் மெய்யும் ககரவொற்றும் அகரமும் கெட்டு முதல் நீண்டது.
நாடு	= கீழ்நாடு	
யாறு	= கீழ்யாறு	
ஊர்	= கீழூர்.	

143

இன்னும் 'பிற' என்ற மிகையால், கீழைக்குளம் மேலைச்சேரி என ஐகாரம் பெறுதலும், வடக்கூர் தென்மலை என விகாரமின்றி வாலும், தெற்கு வடக்கு வடக்கு தெற்கு கிழக்கு மேற்கு மேற்கு கிழக்கு என பொதுவிதி பெறுதலும் கொள்க. (ஙசு)

M F. தெங்கு என்னும் மொழிக்குச் சிறப்புவிதி:—SPECIAL RULE REGARDING தெங்கு.

187. தெங்குநீண் டீற்றுயிர் மெய்கெடுங் காய்வரின்.

(இ - ள்.) காய் வரின் - காய் என்னுஞ் சொல் வந்தால், தெங்கு நீண்டு - தெங்கு என்னும் நிலைமொழி முதல் நீண்டு, ஈற்று உயிர்மெய் கெடும் - ஈற்றிலுள்ள உயிர்மெய் நீங்கும், எ-று.

(உ-ம்) தெங்கு + காய் = தேங்காய்.

கெட்டே வரு மென்னுமையால், தெங்கங்காய் என அம் சாரியை பெற்று வருவதுங் கொள்க. (ஙஎ)

F. எண்ணுப்பெயர்கள், (பொதுவிதி) :—NOUNS OF NUMBER, (GENERAL RULE.)

188. எண்ணிறை யளவும் பிறவு மெய்தின்
ஒன்று முதலெட் டீறு மெண்ணுள்
முதலீ ரெண்முத னீளு மூன்று
றேழ்குறு கும்மா றேழல் லவற்றின்
ஈற்றுயிர் மெய்யு மேழ னுயிரும்
ஏகு மேற்புழி யென்மனார் புலவர்.

(இ - ள்.) எண் - எண்ணுப் பெயரும், நிறை - நிறைப் பெயரும், அளவும் - அளவுப் பெயரும், பிறவும் - பிற பெயர்களும், எய்தின் - (வருமொழிகளாக) வந்தால், ஒன்று முதல் எட்டு ஈறு ஆம் - ஒன்று முதல் எட்டு ஈறாகும், எண்ணுள் - எண்களுள், முதல் ஈரெண் - முதலிலுள்ள இரண்டெண்களும், முதல் நீளும் - முதற்குறில் நீளும்; மூன்று ஆறு ஏழ் - மூன்றும் ஆறும் ஏழும், (முதல்) குறுகும் - முதல் நெடில் குறுகும்; ஆறு ஏழ் அல்லவற்றின் - ஆறும் ஏழும் அல்லாத ஆறெண்களினுடைய, ஈறு உயிர்மெய்யும் - இறுதியிலுள்ள உயிர்மெய்களும், ஏழன் - ஏழினுடைய, (ஈறு) உயிரும் - இறுதியிலுள்ள உகா

உயிரும், ஏகும் - கெடும்; ஏற்புழி - ஏற்கு மிடங்களில், என்மனார் - என்று சொல்லுவர், புலவர் - அறிவுடையோர், எ - று.

இச்சூத்திரத்துட் கூறியவிகாரமும் இப்புணர்ச்சி முற்ற முடித்தற்குப் பின் ஐந்துசூத்திரத்தாற் கூறும் விகாரமும் பண்புத்தொகைக்கே உரியனவாம். ஏழு முற்றுகரமாயினும் ஒன்றின முடித்தறன்னினமுடித்தலென்னும் உத்தியால் சேர்க்கப் பட்டது.

(உ-ம்.) ஆறு	+ பத்து	— அறுபது	ஆறு, ஏழு குறுகின.
	+ கழஞ்சு	— அறுகழஞ்சு	
	+ நாழி	— அறுநாழி	
	+ மீன்	— அறுமீன்.	
ஏழு	+ பத்து	— எழுபது	
	+ கழஞ்சு	— எழுகழஞ்சு	
	+ நாழி	— எழுநாழி	
	+ மீன்	— எழுமீன்.	
ஏழு	+ கடல்	— ஏழ்கடல் என ஏழனீற்றுயிர் கெட்டது.	

மற்றவைகளுக்கு உதாரணம் பின்னே அவ்வவ் வெண்களின் சிறப்புச் சூத்திரங்களில் காட்டப்படும்.

'ஏற்புழி' என்றதனால் பொதுவிதியால் இரண்டாயிரம், ஏழாயிரம், இரண்டுகழஞ்சு, மூன்றுபடி, நான்குபொருள், ஏழுகடல் என நிற்பனவும் உண்டு என்பதும், முதலிரண்டு எண்களும் உயிர் முதன்மொழி வரும்வழியே முதல் நீளும் எனவும், மெய்ம்முதன்மொழி வரும்வழி அப்படி நீளா எனவும், மூன்று, ஆறு, ஏழு என்னும் மூன்று எண்களும் மெய்ம்முதன்மொழி வரும்வழியே முதல் குறுகும் எனவும், உயிர் முதன்மொழி வரும்வழி அப்படிக் குறுகா எனவும், ஆறு ஏழு அல்லாத மற்றை ஆறெண்களின் ஈற்றுயிர்மெய் நாற்கணமும் வரும்வழிக் கெடும் எனவும், ஏழு என்பதின் ஈற்றுயிர் கெடுவது முதற் குறுகாவழி எனவும் கொள்க. (௩௮)

F. ஒன்று இரண்டு என்னு மொழிகளுக்குச் சிறப்புவிதி :—
SPECIAL RULE REGARDING ஒன்று AND இரண்டு.

189. ஒன்றன் புள்ளி ரகர மாக
இரண்ட னொற்றுயி ரேகவுவ் வருமே.

(இ - ள்.) ஒன்றன் புள்ளி - (ஈற்றுயிர்மெய் கெடநின்ற) ஒன்று என்னும் எண்ணினது னகரமெய்யானது, ரகரம் ஆக - ரகரமெய்யாக, இரண்டன் ஒற்று - இரண்டு என்பதினுடைய ணகரமெய்யும், உயிர் - அகர வுயிரும், ஏக - கெட, உ வரும் - (அவ்விரண்டு ரகர மெய்களின்மேலும்) உகரம் வரும், எ-று.

(உ-ம்.) ஒன்று + ஆயிரம் = ஓராயிரம்
இரண்டு + ஆயிரம் = ஈராயிரம்.

என உயிர்வர முதல் நீண்டு, ஈற்றுயிர்மெய் கெட்டு, உகரம் பெற்று, "முற்றுமற் றொரோ வழி" என்பதனால் அவ்வுகரமுங் கெட்டு வந்தன.

ஒன்று + பத்து = ஒருபது
இரண்டு + பத்து = இருபது.

மெய்வர முதல்நீளாது ஈற்றுயிர்மெய் கெட்டு உகரம்பெற்று வந்தன.

இங்கே சொல்லியபடி மற்றைத் திரிபு முதலானவை வருத லுங் காண்க. சிறுபான்மை ஓராயிரம், இராயிரம் என வருதலு முண்டு. (௩௧)

F. மூன்று என்னும் மொழிக்குச் சிறப்புவிதி:—SPECIAL RULE REGARDING மூன்று.

190. மூன்ற னுறுப்பழிவும் வந்தது மாகும்.

(இ - ள்.) மூன்றன் உறுப்பு (இறுதி உயிர்மெய் கெட நின்ற) மூன்று என்னும் எண்ணினது மெய்யானது, அழிவும் - கெடுத லும், வந்ததும் - வருகிற மெய்யாகத் திரிதலும், ஆகும் - ஆகும் எ - று.

(உ - ம்.)

மூன்று + ஒன்று = மூவொன்று என உயிர்வர முதல் குறு காது ஈற்றெழுத்தும் னகர மெய்யுங் கெட்டன.

மூன்று + பத்து = முப்பது என மெய்வர ஈறுகெட்டு னகர மெய் வந்த மெய்யாய்த் திரிந்தது. ()

வகர முதன் மொழிவரில், முதற்குறுகி முவ்வட்டில் என வருதலேயன்றி, மூவட்டி என வருதலும் யகரம்வரின் முதல் குறுகி னகரமெய் வகர மெய்யாகத்திருந்து முவ்யானை என வருதலும் கொள்க. (சூ0)

F. நான்கு என்னும் மொழிக்குச் சிறப்புவிதி :—SPECIAL RULE REGARDING நான்கு.

191. நான்கன் மெய்யே லறவா கும்மே.

(இ - ள்.) நான்கன் மெய் - (இறுதி உயிர்மெய் கெட நின்ற) நான்கு என்னும் எண்ணினது னகரமெய்யானது, ல ற ஆகும் - லகரமெய்யாகவும் றகரமெய்யாகவுந் திரியும், எ-று.

(உ-ம்.) நான்கு + ஆயிரம் = நாலாயிரம்
நான்கு + வழி = நால்வழி.

என உயிரும் இடையெழுத்தும் வர ஈற்றுயிர்மெய் கெட்டு னகரமெய் லகரமெய் ஆயிற்று.

நான்கு + பத்து = நாற்பது என வல்லெழுத்து வர ஈற்றுயிர்மெய் கெட்டு னகரமெய் றகர மெய் ஆயிற்று.

நான்கு + மணி = நான்மணி என லகரமெய்யோடு மயங்காத மெல்லெழுத்துவரின் னகர மெய் இயல்பா மென்க. (சூக)

மூவின மெய்வரினும் நாலுகுதிரை நாலுநாள் நாலுவழி என ஈறு கெட்டு னகரம் லகரமாய் உகரம் பெற்று வருதலும் கொள்க.

F. ஐந்து என்னும் மொழிக்குச் சிறப்புவிதி:—SPECIAL RULE REGARDING ஐந்து.

192. ஐந்தனொற் றடைவது மினமுங் கேடும்.

(இ - ள்.) ஐந்தன் ஒற்று - (இறுதி உயிர்மெய் கெட நின்ற) ஐந்து என்னும் எண்ணினது நகரமெய்யானது, அடைவதும் - வருகிற மெய்யாகியும், இனமும் - அதற்கினமாகியும், கேடும் - கெடுதலடைந்தும் வரும், எ-று.

(உ - ம்.)
ஐந்து + மூன்று = ஐம்மூன்று என மெல்லெழுத்து வர ஈற்றுயிர்மெய் கெட்டு நகரமெய் வந்த மெய்யாகத் திரிந்தது.

ஐந்து + கழஞ்சு = ஐங்கழஞ்சு என வல்லெழுத்துவர ஈற்றுயிர்மெய் கெட்டு நகரமெய் வந்த வெழுத்திற்கு இனமாய்த்திரிந்தது.

ஐந்து + ஆயிரம் = ஐயாயிரம்
ஐந்து + வழி = ஐவழி
என உயிரும் இடையெழுத்தும் வர ஈற்றுயிர் மெய்யுடன் நகரமெய் கெட்டது.

ஐந்து + வண்ணம் = ஐவண்ணம் என வருதலுமேயன்றி ஐவ்வண்ணம் என ஒரோவிடத்து இடையினம் வர நகரம் வந்த எழுத்தாதலு மறிக.

'அடைவது மினமும்' என்றமையால் அருத்தாபத்தியால் நகர தகரங்கள் வருமிடத்து ஐந்து + நூறு = ஐந்நூறு, ஐந்து + தூணி = ஐந்தூணி என நகரமெய் இயல்பாதல் கொள்க. (சஉ)

F. எட்டு என்னும் மொழிக்குச் சிறப்புவிதி:—SPECIAL RULE REGARDING எட்டு.

193. எட்ட னுடம்பு ணவ்வாகு மென்ப.

(இ-ள்) எட்டன் உடம்பு - (இறுதி உயிர்மெய்கெட நின்ற) எட்டு என்னும் எண்ணினது டகரமெய்யானது, ண ஆகும் - ணகரமெய் ஆகும், என்ப - என்று சொல்லுவர் புலவர், எ-று.

(உ-ம்) எட்டு + ஆயிரம் = எண்ணாயிரம்
எட்டு + கழஞ்சு = எண்கழஞ்சு
எட்டு + நாழி = எண்ணாழி
எட்டு + வகை = எண்வகை.

என ஈற்றுயிர்மெய் கெட்டு டகரமெய் ணகரமெய் ஆயிற்று.

F. ஒன்பது என்னும் மொழி பத்து, நூறு என்பவற்றோடு புணருஞ் சிறப்புவிதி :—SPECIAL RULE REGARDING ஒன்பது BEFORE பத்து AND நூறு.

194. ஒன்பா னொடுபத்து நூறு மொன்றின்
முன்னதி னேனைய முரணி யொவ்வொடு

தகர நிறீஇப்பஃ தகற்றி னவ்வை
நிரலே ணளவாத் திரிப்பது நெறியே.

(இ - ள்.) ஒன்பானொடு - ஒன்பஃதுடனே, பத்தும் - பத்து என்பதும், நூறும் நூறு என்பதும், ஒன்றின் - வந்து புணருமாயின், முன்னதின் - முன்னதாகிய ஒன்பது என்னும் நிலைமொழியி னின்றும், ஏனைய - மற்ற வருமொழிகளாகிய பத்தையும் நூற்றையும், முரணி - (முறையே நூறெனவும் ஆயிரமெனவும்) திரித்து, ஒவ்வொடு - (நிலைமொழி முதலிலுள்ள) ஒகர உயிரோடு, தகரம் நிறீஇ - தகரமெய்யை (அதற்கு ஆதாரமாக) நிறுத்தி, பஃது அகற்றி - (அந்நிலைமொழி யிறுதியிலுள்ள) பஃதைக் கெடுத்து, னவ்வை -(அம்மொழிமுதற்கு அயல் நின்ற) னகரமெய்யை, நிரலே ண ள ஆக - முறையே ணகரமெய்யாகவும் ளகரமெய்யாகவும், திரிப்பது - திரிப்பது, நெறி - முறையாகும், எ-று.

'நெறியே' என்றமையால் தனிக்குறின் முன்னொற் றிரட்டித்தலுங் கொள்க.

'பஃதகற்றி' என்பதனோடு பொருந்த ஒன்பஃதனோ டென்னாது 'ஒன்பானொடு' என்றமையால் ஒன்பது நின்று புணரினும் இவ்விதியே பெறுமென் றறிக.

(உ-த.) ஒன்பது + பத்து } —தொண்ணூறு.
ஒன்பஃது + பத்து }

ஒன்பது + நூறு } —தொள்ளாயிரம்.
ஒன்பஃது + நூறு }

தொளாயிரம் என் இக்காலத்தில் வழங்குகின்றது. (௬௪)

F. ஒன்று முதலிய எட்டு எண்களின்முன் பத்து:—SPECIAL RULE REGARDING பத்து AFTER NUMERALS ஒன்று TO எட்டு.

195. முதலிரு நான்கா மெண்முனர்ப் பத்தின்
இடையொற் றேக லாய்த மாகல்
எனவிரு விதியு மேற்கு மென்ப.

(இ - ள்.) முதல் இரு நான்கு ஆம் எண் முனர் - ஒன்று முதலாகிய எட்டெண்களின் முன்னும் வருகிற, பத்தின் - பத்து என்னும் எண்ணினது, இடை ஒற்று - நடுநின்ற தகரமெய்

யானது, ஏகல் - கெடுதலும், ஆய்தம் ஆகல் - (தகரம் நின்ற விடத்து அதுகெட) ஆய்தம் வருதலும், என இரு விதியும் - என்னும் இவ்விரண்டு விதியையும், ஏற்கும் என்ப - ஏற்கும் என்று சொல்லுவர், புலவர், எ-று.

(உ-ம்.) ஒன்று + பத்து = ஒருபது, ஒருபஃது
இரண்டு + பத்து = இருபது, இருபஃது
மூன்று + பத்து = முப்பது, முப்பஃது
நான்கு + பத்து = நாற்பது, நாற்பஃது
ஐந்து + பத்து = ஐம்பது, ஐம்பஃது
ஆறு + பத்து = அறுபது, அறுபஃது
ஏழு + பத்து = எழுபது, எழுபஃது
எட்டு + பத்து = எண்பது, எண்பஃது. (சஅ)

பது, பஃது ஈற்று எண்ணுப் பெயர்களுக்குச் சிறப்புவிதி:—

SPECIAL RULE REGARDING COMPOUNDS ENDING IN பத்து OR பஃது.

196 ஒருபஃ தாதிமுன் னொன்றுமுத லொன்பான்
எண்ணு மவையூர் பிறவு மெய்தின்
ஆய்த மழியவாண் டாகுந் தவ்வே.

(இ-ள்.) ஒருபஃது ஆதி முன் - ஒருபஃது முதலாகிய எட்டு எண்களின் முன், ஒன்று முதல் ஒன்பான் எண்ணும் - ஒன்று முதலாகிய ஒன்பது எண்களும், அவை ஊர் - அவ்வெண்களை ஊர்ந்த, பிறவும் - மற்றவையும், எய்தின் - வந்து புணருமாயின், ஆய்தம் அழிய - (நிலைமொழி யிடையிலே நின்ற) ஆய்தமானது கெட, த - (இயல்பாகிய) தகரம், ஆண்டு - அவ்வாய்தம் நின்றவிடத்து, ஆகும் - வரும், எ-று.

(உ-ம்.) ஒருபஃது + ஒன்று = ஒருபத்தொன்று
இருபஃது + மூன்றரை = இருபத்துமூன்றரை
முப்பஃது + நான்கு = முப்பத்துநான்கு
நாற்பஃது + ஐந்து = நாற்பத்தைந்து
ஐம்பஃது + ஆறு = ஐம்பத்தாறு
அறுபஃது + மூன்று = அறுபத்துமூன்று
எழுபஃது + நான்கு = எழுபத்துநான்கு
எண்பஃது + ஒன்பது = எண்பத்தொன்பது.

ஆய்தங்கெடத் தகரம் வரும் என்றமையால், அருத்தாபத்தியால் ஆய்தமில்லாத ஒருபது முதலானவைகளும் தகரம் பெறும் என்றதாயிற்று. (சசு)

பத்தின்முன்னும் ஒன்பதின்முன்னும் மற்ற எண்கள்:—

SPECIAL RULE REGARDING பத்து AND ஒன்பது BEFORE OTHER NUMBERS AND WORDS.

197. ஒன்றுமுத லீரைந் தாயிரங் கோடி
எண்ணிறை யளவும் பிறவரிற் பத்தின்
ஈற்றுயிர் மெய்கெடுத் தின்னு மிற்றும்
ஏற்ப தேற்கு மொன்பது மினைத்தே.

(இ-ள்.) ஒன்று முதல் ஈரைந்து - ஒன்றுமுதலாகிய பத்தெண்களும், ஆயிரம் - ஆயிரமும், கோடி - கோடியுமாகிய, எண் - எண்ணுப்பெயரும், நிறை - நிறைப்பெயரும், அளவும் - அளவுப்பெயரும், பிற - பிறபெயரும், வரின் - வந்து புணருமாயின், பத்தின் ஈறு உயிர்மெய் - (நிலைமொழியாகிய) பத்தினது இறுதியிலுள்ள தகர உயிர்மெய்யை, கெடுத்து - அழித்து, இன்னும் இற்றும் - இன் சாரியையாயினும் இற்றுச் சாரியையாயினும், ஏற்பது ஏற்கும் - (அவ்விடத்திற்கு) ஏற்பது ஏற்று நிற்கும்; ஒன்பதும் - ஒன்பது என்னும் நிலை மொழியும், இனைத்து - இப்படியே (எண்ணுப்பெயர் முதலானவை வந்து புணருமாயின் இன்னையினும் இற்றையினும் அவ்விடத்திற்கு ஏற்பது) ஏற்றுநிற்கப் பெறும், எ-று.

(உ-ம்.) பத்து + ஒன்று = பதினொன்று, பதிற்றொன்று
ஒன்பது + ஆயிரம் = ஒன்பதினாயிரம், ஒன்பதிற்றாயிரம்.

'ஏற்பதேற்கும்' என்றதனால் இன்சாரியை பண்புத்தொகை உம்மைத்தொகைகளில் ஏற்றபடி வருதலும், இற்றுச்சாரியை பண்புத்தொகைக்கே வருதலும், ஒன்பதன் ஈற்றுயிர்மெய் கெடாமலிருத்தலும், ஒன்பதுகோடி பத்துக்கோடி எனப் பொதுவிதிப்படி முடிதலுங் கொள்க. (சஎ)

பத்து என்னும் மொழிமுன் இரண்டு வருவதற்குச் சிறப்புவிதி:

SPECIAL RULE REGARDING பத்து BEFORE இரண்டு

198. இரண்டு முன்வரிற் பத்தினீற் றுயிர்மெய்
கரந்திட வொற்றுனவ் வாகு மென்ப.

(இ-ள்.) இரண்டு - இரண்டு என்பது, முன் வரின் - வருமொழியாக வருமாயின், பத்தின் ஈறு உயிர்மெய் - பத்து என்னும் நிலைமொழியினது ஈற்றிலுள்ள து என்னும் உயிர்மெய்யானது, கரந்திட - கெட, ஒற்று - தகரமெய்யானது, ன ஆகும் - னகர மெய்யாகத் திரியும், என்ப - என்று சொல்லுவர் புலவர், எ-று.

(உ-ம்.) பத்து + இரண்டு = பன்னிரண்டு. (சஅ)

ஒன்பது ஒழிந்த மற்ற எண்கள் இரட்டித்தலுக்குச்சிறப்புவிதி:
SPECIAL RULE REGARDING NUMERALS REPEATED.

199. ஒன்ப தொழித்தவெண் ணொன்பது மிரட்டின்
முன்னதின் முன்னல வோட வுயிர்வரின்
வவ்வு மெய்வரின் வந்தது மிகனெறி.

(இ-ள்.) ஒன்பது ஒழித்த - ஒன்பது என்கிற எண்ணொன்றனையும் ஒழித்துநின்ற, எண் ஒன்பதும் - (ஒன்றுமுதல் பத்தீறாகிய) ஒன்பது எண்ணினையும், இரட்டின் - இரட்டித்துச் சொன்னால், முன்னதின் - நிலைமொழியினது, முன் அல - முதலெழுத் தல்லாதவைகளெல்லாம், ஓட - கெட, உயிர் வரின் - உயிர்முதலான எண் வரின், வவ்வும் - வகரமெய்யும், மெய் வரின் - மெய்முதலான எண்வரின், வந்ததும் - வந்த மெய்யும், மிகல் - மிகுதல், நெறி - முறையாம், எ-று.

(உ-ம்.) ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று
இரண்டு + இரண்டு = இவ்விரண்டு.
மூன்று + மூன்று = மும்மூன்று
நான்கு + நான்கு = நந்நான்கு
ஐந்து + ஐந்து = ஐவ்வைந்து
ஆறு + ஆறு = அவ்வாறு
ஏழு + ஏழு = எவ்வேழு
எட்டு + எட்டு = எவ்வெட்டு
பத்து + பத்து = பப்பத்து.

'நெறி' என்றமையால், நந்நான்கு என நான்கிற்குக் குறுக்கமும், ஒரோவொன்று - ஒன்றொன்று - கழக்கழஞ்சு என இரட்டித்தலும், இன்னுங் குற்றியலுகரப் புணர்ச்சியுள் அடங்காதனவுங் கொள்க. (சக)

[library stamp]

6. ஊகார வீற்றுப்புணர்ச்சி:—COMBINATION OF FINAL ஊ.

F. பூ என்னும் மொழிக்குச் சிறப்புவிதி:—SPECIAL RULE REGARDING பூ.

200. பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும்.

(இ-ள்.) பூப்பெயர் முன் - பூ (என்னும் பலபொருள் ஒரு சொல்) முன், இன மென்மையும் - (வருகிற வல்லின மிகுத லல்லாமல் அவற்றிற்கு) இனமாகிய மெல்லினமும், தோன்றும் - மிகும், எ-று.

(உ-ம்.) பூ + கொடி = பூங்கொடி
பூ + சோலை = பூஞ்சோலை
பூ + தடம் = பூந்தடம்
பூ + பனை = பூம்பனை.

பூ என்பது மலராயின் இரண்டாம் வேற்றுமைத் தொகை யும் அழகாயின் பண்புத்தொகையு மாம். (௫0)

7. ஏகார ஓகார வீற்றுப்புணர்ச்சி:—COMBINATION OF FINAL ஏ AND ஓ.

201. இடைச்சொல் லேயோ முன்வரி னியல்பே.

(இ - ள்.) இடைச்சொல் - இடைச்சொல்லாகிய, ஏ (முன்) - (ஆறுவகை) ஏகாரத்தின் முன்னும், ஓ முன் - (எட்டுவகை) ஓகாரத்தின் முன்னும், வரின் - (வல்லினம்) வந்தால், இயல்பு — (பொதுவிதியான் மிகாது) இயல்பாகும், எ-று.

(உ-ம்.) அவனேகொண்டான் — பிரிநிலையும் வினாவும் ஈற்ற சையுந் தேற்றமுமாம்.

அறமே பொருளே காம மேதுறவே—எண்.

ஏயே தனையென்றே ரிருடிவினவ—இசைநிறை.

அவனோகொண்டான்—ஒழியிசை முதலிய எட்டுமாம். (௫௧)

8. ஐகாரவீற்றுப்புணர்ச்சி :—COMBINATION OF FINAL ஐ.

ஐகார ஈற்றின்முன் நாற் கணமும்:—FOUR KINDS OF INITIAL LETTERS AFTER FINAL ஐ.

202. வேற்றுமை யாயி னைகா னிறுமொழி
ஈற்றழி வோடுமம் மேற்பவு முளவே.

(இ - ள்) ஐகான் இறு மொழி - ஐகாரவீற்றுச் சொற்கள், வேற்றுமை ஆயின் - வேற்றுமைக்கண் வருமாயின், ஈற்று அழிவோடும் - ஈற்று ஐகாரங் கெடுதலுடனே, அம் - அம் சாரியை, ஏற்பவும் உள - பெற்று முடிவனவும் சில வுள, எ-று.

அழிவோடும் என்றமையால், அழியாமையோடும் அம் ஏற்பவுமுள எனக் கொள்க. வருமெழுத்துச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்க.

(உ - ம்.)

புன்னை + கானல்=புன்னையங்கானல் முல்லை + புறவம்=முல்லையம்புறவம்	ஐ அழியாமையோடும் அம் ஏற்றது.
வழுதுணை + காய் =வழுதுணங்காய் ஆவிரை + வேர் =ஆவிரம்வேர்.	ஐ அழிவோடு அம் ஏற்றது.

ஏற்பவு முள என்றதனால் முல்லை + பறவு = முல்லைப்பறவு என ஏலாதனவும் உள. (ருஉ)

பனை என்னும் மொழிக்குச் சிறப்புவிதி :—SPECIAL RULE REGARDING பனை.

203. பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரின்
ஐபோ யம்முந் திரள்வரி னுறழ்வும்
அட்டுறி னைகெட்டந் நீள்வுமாம் வேற்றுமை.

(இ - ள்) பனை முன் - பனை என்னும் பெயர்முன், கொடி வரின் - கொடி என்னும் பெயர் வருமாயின், மிகலும் - வந்த ககரமெய் மிகலும், வலி வரின் க ச த ப க்கள் வருமாயின், ஐ போய் - நிலைமொழியீற்று ஐகாரங்கெட்டு, அம்மும் - அம்

சாரியை பெறுதலும், திரள் வரின் - திரள் என்னும் பெயர் வருமாயின், உறழ்வும் - (வந்தமெய் மிகுந்தும் ஐபோய் அம் சாரியை பெற்றும்) விகற்பித்தலும், அட்டு உறின் - அட்டு என்னும் பெயர் வருமாயின், ஐ கெட்டு - ஐகாரங்கெட்டு, அ நீள்வும் - (வருமொழி) அகரம் ஆகாரமாதலும், ஆம் வேற்றுமை - வேற்றுமைக்கண் ஆகும், எ-று.

(உ-ம்.) பனை + கொடி = பனைக்கொடி—வலிமிகுந்தது.

பனை + காய் = பனங்காய்
பனை + செறும்பு = பனஞ்செறும்பு
பனை + நாண் = பனந்நாண்
பனை + பழம் = பனம்பழம். } ஐ கெட்டு அம் சாரியை பெற்றது.

பனை + திரள் = பனைத்திரள்
= பனந்திரள். } உறழ்ந்தது.

பனை + அட்டு = பனாட்டு { ஐ கெட்டு அ நீண்டது. ()

உயிரீற்றுப்புணரியல் முற்றுப்பெற்றது.

௩. மெய்யீற்றுப்புணரியல்.

COMBINATION OF CONSONANT FINALS.

I, மெய்யீற்றின் முன் உயிர்.

CONSONANT FINALS BEFORE VOWELS.

M. F. பொதுவிதி :—GENERAL RULE.

204. உடன்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பே.

(இ-ள்.) உடல் மேல் - நிலைமொழி ஈற்றில் நின்ற மெய்யின் மேல், உயிர் வந்து ஒன்றுவது - (வருமொழி முதல்) உயிர் வந்து ஒன்றுபட்டு இணங்கி நிற்பது, இயல்பே - இயல்புப் புணர்ச்சியே யாம், எ-று.

(உ-ம்.) தோன்றல் + அழகன் = தோன்றலழகன்
உரிஞ் + அழகிது = உரிஞழகிது } அல்வழி.

புகழ்	+ அழகிது = புகழழகிது	}	வேற்
வேல்	+ எறிந்தான் = வேலெறிந்தான்.	}	றுமை.

M. F தனிக்குறிலொற்றின் முன் உயிர்:—CONSONANT FINALS FOLLOWING SHORT VOWELS BEFORE VOWEL INITIALS.

205. தனிக்குறின் முன்னொற் றுயிர்வரி னிரட்டும்.

(இ - ள்.) தனி குறில் முன் ஒற்று - தனிக்குற்றெழுத்தின் முன் நின்ற மெய்யானது, உயிர் வரின் - உயிர் எழுத்து வந்தால், இரட்டும் - இரட்டித்து நிற்கும், எ-று.

(உ-ம்.) மண் + அரிது = மண்ணரிது
பொன் + அரிது = பொன்னரிது
மண் + அகம் = மண்ணகம்
பொன் + ஒளி = பொன்னொளி. (உ)

CONSONANT FINALS BEFORE CONSONANT INITIALS.

F. யகரம் ஒழிந்த பத்து மெய்களின்முன் யகரம்:—CONSONANT FINALS BEFORE INITIAL ய்.

206. தன்னொழி மெய்ம்முன் யவ்வரி னிகரம்
துன்னு மென்று துணிநரு முளரே.

(இ-ள்.) தன் ஒழி மெய் முன் - தன்னை யொழிந்த (ஈற்றில் வரும் ஞணநமனரலவழள என்கிற பத்து) மெய்களின் முன்னும், ய வரின், யகரமானது வந்தால், இகரம் - இகரச்சாரியை, துன்னும் என்று - (தன்முன்) பொருந்துமென்று, துணிநரும் உளர் - (அறிந்திற்) கொள்வாரும் சிலருளர், எ-று.

(உ-ம்.) வேள் + யாவன் = வேளியாவன்
மண் + யாது = மண்ணியாது.

துணிநரும் என்ற எதிர்மறையாய இழிவு சிறப்பும்மையால், வேள்யாவன் மண்யாது எனப் பொதுவிதி பெறுமென்பார் பலருளரெனக் கொள்க. (௩)

முதனிலைத் தொழிற்பெயர்க்கும் ஏவலுக்கும் :—CERTAIN VERBAL ROOT NOUNS AND IMPERATIVES WITH CONSONANT FINALS.

207. ஞணநமலவளன வொற்றிறு தொழிற்பெயர்
ஏவல் வினைநனி யவ்வல் மெய்வரின்
உவ்வுறு மேவ லுறாசில சில்வழி.

(இ-ள்.) ஞணநமலவளன ஒற்று - ஞ ண ந ம ல வ ள ன என்கிற (எட்டு) மெய்களும், இறு - இறுதியாகிய, தொழிற்பெயர் - (முதனிலைத்) தொழிற்பெயர்களும், ஏவல் வினை - ஏவல் வினைகளும், ய அல் மெய்வரின் - யகரமொழிந்த மெய்கள் வருமாயின், நனி - பெரும்பாலும், உ - உகரச்சாரியை, உறும் - (இறுதிக்கண்) பொருந்தும்; சில ஏவல் - சில ஏவல் வினைகள், சில் வழி - சிலவிடங்களிலே, உறா - (அவ்வுகரச்சாரியையைப்) பொருந்தாவாம், எ-று.

(உ - ம்.)

உரிஞ்	+ கடிது	= உரிஞுக்கடிது	அல்வழியில் முதனிலைத் தொழிற்பெயர்கள் உகரச்சாரியை பெற்றன.
	+ நீண்டது	= உரிஞுநீண்டது	
	+ வலிது	= உரிஞுவலிது.	
உண்	+ கடிது	= உண்ணுக்கடிது	
	+ நீண்டது	= உண்ணுநீண்டது,	
	+ வலிது	= உண்ணுவலிது.	
பொருந்	+ கடிது	= பொருநுக்கடிது	
	+ நீண்டது	= பொருநுநீண்டது	
	+ வலிது	= பொருநுவலிது.	
திரும்	+ கடிது	= திருமுக்கடிது	
	+ நீண்டது	= திருமுநீண்டது	
	+ வலிது	= திருமுவலிது.	
தின்	+ கடிது	= தின்னுக்கடிது	
	+ நீண்டது	= தின்னுநீண்டது	
	+ வலிது	= தின்னுவலிது.	

மேலே காட்டியபடியே கடுமை, நீட்சி, வலிமை என்பவற்றைக் கூட்டி வேற்றுமையிலும் முதனிலைத் தொழிற்பெயர்கள் உகரச்சாரியை பெற்றுவருவது காண்க.

உரிஞ்	+ கொற்று	= உரிஞுகொற்று		
	+ நாகா	= உரிஞுநாகா		
	+ வளவா	= உரிஞுவளவா.		
உண்	+ கொற்று	= உண்ணுகொற்று		
	+ நாகா	= உண்ணுநாகா		
	+ வளவா	= உண்ணுவளவா.		
பொருந்	+ கொற்று	= பொருநுகொற்று		ஏவல் வினைகள் உகரச்சாரியை பெற்றன.
	+ நாகா	= பொருநுநாகா		
	+ வளவா	= பொருநுவளவா.		
திரும்	+ கொற்று	= திருமுகொற்று		
	+ நாகா	= திருமுநாகா		
	+ வளவா	= திருமுவளவா.		
தின்	+ கொற்று	= தின்னுகொற்று		
	+ நாகா	= தின்னுநாகா		
	+ வளவா	= தின்னுவளவா.		

'ஏவலுறுசில சில்வழி' என்றதனால் உண்ணுகொற்று, உண் கொற்று என உகரம் பெற்றும் பெறாதும் வருவனவும், உரிஞு கொற்று என உகரம் பெற்றே வருவனவும், உளவென் றறிக.

முதனிலைத் தொழிற்பெயராவது தொழிற்பெயர் விகுதி குன்றி வினைப்பகுதிமாத்திரம் நின்று தொழிற்பெயர்ப் பொருளைத் தருவதாம். (௪)

நகரவீற்று முதனிலைத் தொழிற்பெயர்க்குச்
சிறப்புவிதி :—SPECIAL RULE REGARDING VERBAL ROOT NOUNS ENDING IN ந்.

208. நவ்விறு தொழிற்பெயர்க் கவ்வுமாம் வேற்றுமை.

(இ-ள்.) ந இறு - நகரம் இறுதியாகிய, தொழிற் பெயர்க்கு- (முதனிலைத்) தொழிற்பெயர்க்கு, வேற்றுமை - வேற்றுமைக் கண், அவ்வும் ஆம் - (உகரச்சாரியை யல்லாமலும்) அகரச் சாரியையும் ஆகும், எ-று.

(உ-ம்.)

பொருந்	+ கடுமை	= பொருநக்கடுமை	வேற்றுமையில் அகரச் சாரியைபெற்றது.
	+ நன்மை	= பொருநநன்மை	
	+ வன்மை	= பொருநவன்மை.	

பொருநுதல் = ஒத்தல், அதாவது ஒருவர் மற்றொருவர் போல வேடங்கொள்ளும் பொருநர் தொழில். பொருநர்=கூத்தாடிகள். (௫)

---

1. ணகர னகரவீறு:—CONSONANT FINALS ண், ன்.

M F ணகர னகர ஈற்றின் இயல்பும் திரிபும்:—NATURAL AND MUTATIONAL COMBINATIONS OF ண் AND ன் FINALS.

209. ணனவல் லினம்வரட் டறவும் பிறவரின்
இயல்பு மாகும் வேற்றுமைக் கல்வழிக்
கனைத்துமெய் வரினு மியல்பா கும்மே.

(இ-ள்.) ண ன - ணகார னகாரங்கள், வேற்றுமைக்கு-வேற்றுமைக்கண், வல்லினம் வர - வன்கணம் வந்தால், டறவும் - (முறையே) டகாரமும் றகாரமும், பிற வரின் - மெல்லினமும் இடையினமும் வந்தால், இயல்பும் ஆகும் - இயல்பும் ஆம்; அல்வழிக்கு - அல்வழிக்கண், அனைத்து மெய் வரினும் - மூவின மெய்களும் வந்தாலும், இயல்பு ஆகும் - இயல்பே யாகும், எ-று.

(உ-ம்.)

சிறுகண் + களிறு	=	சிறுகட்களிறு	வேற்றுமையில் வல்லினம் வர ணனக்கள் திரிந்தன.
பொன் + தகடு	=	பொற்றகடு.	

மண்	+ ஞாற்சி	=	மண்ஞாற்சி	வேற்றுமையில் மெல்லினமும் இடையினமும் வர ணனக்கள் இயல்பாயின.
	+ நீட்சி	=	மண்ணீட்சி	
	+ மாட்சி	=	மண்மாட்சி	
	+ யாப்பு	=	மண்யாப்பு	
	+ வன்மை	=	மண்வன்மை.	
பொன்	+ ஞாற்சி	=	பொன்ஞாற்சி	
	+ நீட்சி	=	பொன்னீட்சி	
	+ மாட்சி	=	பொன்மாட்சி	
	+ யாப்பு	=	பொன்யாப்பு	
	+ வன்மை	=	பொன்வன்மை.	

மண் + கடிது	= மண்கடிது		
+ சிறிது	= மண்சிறிது		
+ தீது	= மண்டீது		
+ பெரிது	= மண்பெரிது		
+ ஞான்றது	= மண்ஞான்றது		
+ நீண்டது	= மண்ணீண்டது		
+ மாண்டது	= மண்மாண்டது		
+ யாது	= மண்யாது		
+ வலிது	= மண்வலிது.		அல்வழியில் மூவினமும் வர ணனக்கள் இயல்பாயின.
பொன் + கடிது.	= பொன்கடிது		
+ சிறிது	= பொன்சிறிது		
+ தீது	= பொன்றீது		
+ பெரிது	= பொன்பெரிது		
+ ஞான்றது	= பொன்ஞான்றது		
+ நீண்டது	= பொன்னீண்டது		
+ மாண்டது	= பொன்மாண்டது		
+ யாது	= பொன்யாது		
+ வலிது	= பொன்வலிது.		

ஒப்பின் முடித்தலால் னகரமும் உடன் கூறினார். பின்னே கூட்டிச் சொல்லப்படு மெழுத்துக்களுக்கும், இவ்வுத்தியே கொள்க. (கூ)

M. F. ணகர னகர வீற்றின் கேடு:—WHERE ண் AND ன் FINALS ARE DROPPED.

210. குறிலணை வில்லா ணனக்கள் வந்த
நகரந் திரிந்துழி நண்ணுங்கேடே.

(இ-ள்.) குறில் - (தனிக்) குறில் ஒன்றனையும், அணைவு இல்லா - சாராமல் (ஒருமொழி தொடர்மொழிகளைச் சார்ந்த), ணனக்கள் ணகார னகார மெய்களானவை, வந்த நகரம் - (வருமொழிக்கு முதலாக) வந்த நகரமானது, திரிந்துழி - (மயக்கவிதி யில்லாமையினாலே) திரிந்தவிடத்து, கேடு நண்ணும் - கெடுதலைப் பொருந்தும், எ-று.

(உ-ம்.)

தூண் + நன்று	= தூணன்று	ணகரம் இருவழியுங் கெட்டது.
பசுமண் + நன்று	= பசுமணன்று	
தூண் + நன்மை	= தூணன்மை	
பசுமண் + நன்மை	= பசுமணன்மை.	

அரசன் + நல்லன் = அரசனல்லன்		னகரம் இருவழியுங் கெட்டது.
செம்பொன் + நன்று = செம்பொனன்று		
அரசன் + நன்மை = அரசனன்மை.		
செம்பொன் + நன்மை = செம்பொனன்மை.		

நகரந்திரிதல் 'னல முன்றனவும்' என்னும் சூத்திரத்துட் காண்க. (எ)

ணகரவீற்றுச் சாதி குழூஉப் பெயர் முதலியவற்றிற்குச் சிறப்புவிதி:—SPECIAL RULE REGARDING CERTAIN NOUNS ENDING IN ண்.

211. சாதி குழூஉப்பரண் கவண்பெய ரிறுதி
இயல்பாம் வேற்றுமைக் குணவெண் சாண்பிற
டவ்வா கலுமா மல்வழி யும்மே.

(இ - ள்.) சாதி குழூஉ பரண் கவண் பெயர் ரிறுதி - சாதி பற்றிவரும் பெயர்களுக்கும் திரள் பற்றிவரும் பெயர்களுக்கும் பரண் கவண் என்னும் பெயர்களுக்கும் ஈற்று ணகரமானது, வேற்றுமைக்கு (உம்) - வேற்றுமைக்கண்ணும், இயல்பாம் - (வல்லினம் வந்தால்) இயல்பாகும்; உணவு எண் சாண் (பெயர் இறுதி) - உணவிற்குரிய எள் (என்னுஞ் சொல்லின் திரிபாகிய) எண் என்னும் பெயருக்கும் சாண் என்னும் (நீட்டலளவைப்) பெயருக்கும் ஈற்று ணகரமானது, அல்வழியும் - அல்வழிக் கண்ணும், ட ஆகலும் ஆம் - (வல்லினம் வந்தால் திரிந்து) டகரமாதலும் பொருந்தும், எ-று.

பாண் + குடி = பாண் குடி	வேற்றுமையிலும் இயல்பாயின.
அமண் + குடி = அமண் குடி	
பரண் + கால் = பரண்கால்	
கவண் + கால் = கவண்கால்.	
எண் + கடிது = எட்கடிது	அல்வழியிலுந் திரிந்தன.
சாண் + கோல் = சாட்கோல்.	

(உ - ம்.)

'டவ்வாகலுமாம்' என்ற உம்மையால், எண் + கடிது = எண் கடிது, சாண் + கோல் = சாண்கோல் என இயல்பாதலே சிறப்பாம்.

'பிற' என்ற மிகையால், வேற்றுமையில், பாண் + குடி = பாணக்குடி என அகரச்சாரியை பெறுதலும், அட்டேண் +

துழனி—அட்டேண்டுழனி என இயல்பாதலும், மண்+குடம் = மண்குடம், மட்குடம், என உறழ்ந்து வருதலும், இருவழியி லும் இன்னும் ணகரவீற்றுள் அடங்காதவை உண்டேல் அவை யுங் கொள்க. (அ)

ணகரவீற்றுக் கிளைப்பெயருக்குச் சிறப்புவிதி:—SPECIAL RULE REGARDING CERTAIN NOUNS ENDING IN ன்.

212. னஃகான் கிளைப்பெய ரியல்பு மஃகான்
அடைவு மாகும் வேற்றுமைப் பொருட்கே.

(இ - ள்.) னஃகான் கிளைப்பெயர் - னகரத்தை இறுதியிலு டைய சாதிப்பெயர், இயல்பும் - (வல்லினம் வர ஈறு திரியாது) இயல்பாதலும், அஃகான் அடைவும் - அகரச்சாரியை பெறுத லும், வேற்றுமைப் பொருட்கு ஆகும் - வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக்கண் ஆகும், எ-று.

(உ-ம்.) எயின் + குடி = { எயின்குடி, எயின க்குடி
+ சேரி = { எயின்சேரி, எயின ச்சேரி
+ தோட்டம் = { எயின்றோட்டம், எ யினத்தோட்டம்.

'பொருட்கே' என்ற மிகையால், எயின்+மரபு=எயினமரபு, எயின் + வாழ்வு=எயினவாழ்வு, எயின் + அணி=எயினவணி என மற்றைக் கணம் வரினும் அகரச்சாரியை பெறுதலும், எயின் + கன்னி = எயினக்கன்னி, எயின் + பிள்ளை = எயி னப் பிள்ளை, எயின் + மன்னன் = எயின மன்னன் என அல் வழியில் அகரச்சாரியை பெறுதலுங் கொள்க. எயின்—வேட சாதி. கிளை என்னும் பலபொருள் ஒருசொல் இங்கு சாதி மேல் நின்றது. (க)

மீன் என்னும் மொழிக்குச் சிறப்புவிதி:—SPECIAL RULE REGARDING மீன்.

213. மீன்றவ்வொடு பொரூஉம் வேற்றுமை வழியே.

(இ - ள்.) மீன் - மீன் என்னு மொழியிறுதி னகரம், வேற் றுமை வழி - வேற்றுமைக்கண் (வல்லெழுத்து வரின்), றவ் வொடு - றகரத்தோடு, பொரூஉம் - உறழ்ந்து வரும், எ-று.

(உ-ம்.) மீன் + கண் = மீன்கண், மீற்கண்
\+ செவி = மீன்செவி, மீற்செவி
\+ தலை = மீன்றலை, மீற்றலை
\+ புறம் = மீன்புறம், மீற்புறம். } அல்வழி. வேற்றுமை. (௧௦)

F. தேன் என்னு மொழிக்குச் சிறப்புவிதி:—

SPECIAL RULE REGARDING தேன்.

214. தேன்மொழி மெய்வரி னியல்பு மென்மை
மேவி னிறுதி யழிவும் வலிவரின்
ஈறுபோய் வலிமெலி மிகலுமா மிருவழி.

(இ-ள்.) தேன் மொழி - தேன் என்னுஞ் சொல், மெய் வரின் - (மூவின) மெய்களும் வரின், இயல்பும் - (இறுதி னகர மெய்) இயல்பாதலும், மென்மை மேவின் - மெல்லினம் வரின், இறுதி அழிவும் - அவ்விறுதிமெய் (இயல்பாதலே யன்றிக்) கெடுதலும், வலி வரின் - வல்லினம் வரின், ஈறு போய் - அவ் வீற்றுமெய் (இயல்பாதலே யன்றிக்) கெட, வலிமெலி மிகலும் ஆம் - (வந்த) வல்லினமாவது (அதற் கினமான) மெல்லின மாவது மிகுதலும் ஆகும், இருவழி - இருவழிக்கண்ணும், எ-று.

உ - ம்.

தேன் + கடிது = தேன்கடிது
\+ ஞான்றது = தேன்ஞான்றது
\+ யாது = தேன்யாது
\+ மொழி = தேன்மொழி. } இயல்பு.
= தேமொழி. ன் அழிவு.
\+ குழம்பு = தேன்குழம்பு
= தேக்குழம்பு
= தேங்குழம்பு. } இயல்பும் வலி மெலிமிகலும்.
} அல்வழி.

தேன் + கருமை = தேன்கருமை
\+ மலிவு = தேன்மலிவு
\+ யாப்பு = தேன்யாப்பு
\+ மலர் = தேன்மலர். } இயல்பு.
= தேமலர் ன் அழிவு.
\+ குடம் = தேன்குடம்
= தேக்குடம்
= தேங்குடம். } இயல்பும்வலி மெலிமிகலும்.
} வேற்றுமை.

எகின் என்னு மொழிக்குச் சிறப்புவிதி:—SPECIAL RULE REGARDING எகின்.

215. மரமல் லெகின்மொழி யியல்பு மகரம்
மருவ வலிமெலி மிகலு மாகும்.

(இ - ள்) மரம் அல் - மரப்பெயரல்லாத, எகின் மொழி - (அன்னத்தை யுணர்த்தும்) எகின் என்னுஞ் சொல், இயல்பும் - (வேற்றுமையிலும் வல்லினம் வர இறுதி) இயல்பாதலும், அகரம் மருவ - (இருவழியிலும்) அகரச்சாரியை பொருந்த, வலி மெலி மிகலும் ஆகும் - வல்லெழுத்தாவது அதற்கு இனமான மெல்லெழுத்தாவது மிகுதலும் ஆகும், எ-று.

(உ-ம்) எகின் + கால் = எகின்கால்
+ சிறை = எகின்சிறை
+ தலை = எகின்றலை
+ புறம் = எகின்புறம்.
} வேற்றுமையில் வலி இயல்பாயிற்று.

எகின் + புள் = எகினப்புள்
= எகினம்புள்
+ கால் = எகினக்கால்
= எகினங்கால்.
} இரு வழியிலும் அகரம் வர வலி மெலி மிக்கன.

அகரம் வருவதற்கு வருமெழுத்தைச் சொல்லாமையால் கற்கணமுங் கொள்க.

(உ-ம்.) எகின் + மாட்சி = எகினமாட்சி
+ வாழ்க்கை = எகினவாழ்க்கை
+ அழகு = எகினவழகு. (கஉ)

216. குயினூன் வேற்றுமைக் கண்ணு மியல்பே.

(இ - ள்.) குயின் ஊன் - குயின் என்னும் பெயரும் ஊன் என்னும் பெயரும், வேற்றுமைக் கண்ணும் - வேற்றுமையிடத்தும், இயல்பு - இயல்பாகும், எ-று.

(உ-ம்) குயின் + கடுமை = குயின்கடுமை
+ சிறுமை = குயின்சிறுமை
+ தீமை = குயின்றீமை
+ பெருமை = குயின்பெருமை.
ஊன் + கடுமை = ஊன்கடுமை
+ சிறுமை = ஊன்சிறுமை
+ தீமை = ஊன்றீமை
+ பெருமை = ஊன்பெருமை.
} வேற்றுமை.

[குயின் = மேகம்.] (கங)

மின், பின், பன், கன் என்னும் சொற்களுக்குச் சிறப்புவிதி:—SPECIAL RULE REGARDING மின், பின், பன் AND கன்.

217: மின்பின் பன்கன் றொழிற்பெய ரனைய
கன்னவ் வேற்று மென்மையோ டுறழும்.

(இ - ள்.) மின் பின் பன் கன் - மின் முதலிய நான்குசொற்களும், தொழிற்பெயர் அனைய - (முதனிலைத்) தொழிற்பெயர் போல (யகரமல்லாத மெய்கள்வரின்) உகரச்சாரியை பொருந்தும்; கன் - (இவற்றுள்) கன் என்னுஞ் சொல், அ ஏற்று-அகரச்சாரியையும் பெற்று, மென்மையோடு உறழும் - (வருமிற) வல்லெழுத்தாவது அதற்கு இனமான மெல்லெழுத்தாவது மிகப்பெறும், எ-று.

(உ-ம்.)

மின்	+ கடிது	=	மின்னுக்கடிது	அல்வழியில் உகரம் பெற்றன.
	+ நன்று	=	மின்னுநன்று	
	+ வலிது	=	மின்னுவலிது.	
பின்	+ கடிது	=	பின்னுக்கடிது	
	+ நன்று	=	பின்னுநன்று	
	+ வலிது	=	பின்னு வலிது.	
பன்	+ கடிது	=	பன்னுக்கடிது	
	+ நன்று	=	பன்னுநன்று	
	+ வலிது	=	பன்னுவலிது.	
கன்	+ கடிது	=	கன்னுக்கடிது	
	+ நன்று	=	கன்னுநன்று	
	+ வலிது	=	கன்னுவலிது.	
மின்	+ கடுமை	=	மின்னுக்கடுமை	வேற்றுமையில் உகரம் பெற்றன.
	+ நன்மை	=	மின்னுநன்மை	
	+ வன்மை	=	மின்னுவன்மை.	
பின்	+ கடுமை	=	பின்னுக்கடுமை	
	+ நன்மை	=	பின்னுநன்மை	
	+ வன்மை	=	பின்னுவன்மை.	
பன்	+ கடுமை	=	பன்னுக்கடுமை	
	+ நன்மை	=	பன்னுநன்மை	
	+ வன்மை	=	பன்னுவன்மை.	
கன்	+ கடுமை	=	கன்னுக்கடுமை	
	+ நன்மை	=	கன்னுநன்மை	
	+ வன்மை	=	கன்னுவன்மை.	

கன் + தட்டு = கன்னத்தட்டு
= கன்னந்தட்டு
+ தூக்கு = கன்னத்தூக்கு
= கன்னந்தூக்கு.

} இருவழியிலும் அகரச் சாரியை பெற்று உறழ்ந்தது.

[பன்=இறை. கன் = சிறுதராசுத்தட்டு.] (கசு)

M. F. தன், என் நின் என்னுஞ் சொற்களுக்குச் சிறப்புவிதி:—

SPECIAL RULE BEGARDING தன், என், AND நின்.

218. தன்னென் னென்பவற் றீற்றுனவ் வன்மையோ
டுறழு நின்னீ றியல்பா முறவே.

(இ - ள்.) தன் என் என்பவற்று ஈறு ன - தன் என் என்கிற விகாரமொழிகளினுடைய இறுதியிலுள்ள னகரமெய்யானது, வன்மையோடு உறழும் - வல்லினம் வரிற் (பொதுவிதியால்) றகரமாகத்திரிதலும் (அவ்விதி ஏலாது) இயல்பாதலுமாம்; நின் ஈறு - நின் என்னும் விகாரமொழியினது இறுதியிலுள்ள னகர மெய்யானது, இயல்புஆம் - (வல்லினம் வரிற் றிரியாது) இயல்பே யாகும், எ-று.

(உ-ம்.) தன் + பகை = தன்பகை
= தற்பகை
என் + பகை = என்பகை
= எற்பகை.

} னகரம் உறழ்ந்தது.

நின் + பகை = நின்பகை. இயல்பாயிற்று.

'உறவே' என்ற மிகையால் மின் பின் முதலியவை மின் + கடிது = மின்கடிது, மின் + கடுமை = மின்கடுமை என இருவழியுஞ் சாரியை பெறுதலுந் திரிதலுமில்லாமல் வருதலும், மான் + குளம்பு = மான்குளம்பு, அழன் + கை=அழன்கை என வேற்றுமையிலே சிறப்புவிதி சொல்லாதவைகள் இயல்பாதலும், வரின் + கொள்ளும் = வரிற்கொள்ளும் எனச் செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம் பொதுச் சூத்திரத்தால் இயல்பாகாது திரிதலும், இன்னும் னகர மெய்யீற்றுள் அடங்காதவையிருந்தால்அவையுங் கொள்க. [அழன்=பிணம்.]

2. மகர ஈறு:—CONSONANT FINAL ம்.

M. F. பொதுவிதி:—GENERAL RULE.

219. மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்
வன்மைக் கினமாத் திரிபவு மாகும்.

(இ-ள்.) ம ஈறு - மகர ஈற்றுச்சொற்கள், ஒற்று அழிந்து - (இறுதியிலுள்ள மகரமெய் கெட, உயிர் ஈறு ஒப்பவும் - (விதி உயிரீறாய் நின்று) இயல்பு உயிரீறுபோலப் புணர்வனவும், வன்மைக்கு இனம் ஆக திரிபவும் - (வல்லினம் வரிற் கெடாது) அவற்றிற்கு இனமான மெல்லெழுத்தாகத் திரிவனவும், ஆகும்- ஆகும், எ-று.

உயிரீறொத்தலாவது உயிர்வரின் உடம்படுமெய் பெறுதலும், வல்லினம் வரின் மிகுதலும், மெல்லினமும் இடையினமும் வரின் இயல்பாதலுமாகப் புணாதல்.

மகரமெய் உயிரும் இடையினமும் வல்லினமும்வரக் கெடுவது வேற்றுமையிலேயாம்.

(உ-ம்.) மரம் + அடி = மரவடி
மரம் + வேர் = மரவேர்
மரம் + கோடு = மரக்கோடு.

மகரமெய் உயிரும் இடையினமும் வல்லினமும்வரக் கெடுவது அல்வழியில் பண்புத்தொகை உவமைத்தொகைகளிலேயாம்.

(உ-ம்.)

வட்டம் + ஆழி = வட்டவாழி வட்டம் + வடிவம் = வட்டவடிவம் வட்டம் + கல் = வட்டக்கல்.	}	பண்புத்தொகை.
பவளம் + இதழ் = பவளவிதழ் பவளம் + வாய் = பவளவாய் கமலம் + கண் = கமலக்கண்.	}	உவமைத்தொகை.

மெல்லினம்வர இருவழியிலும் மகரம் கெடும்.

(உ-ம்.) மரம் + நார் = மரநார்
மரம் + நீண்டது = மரநீண்டது
வட்டம் + நேமி = வட்டநேமி.

மகரம் வல்லினம்வரக்கெடாது இனமெல்லெழுத்தாகத் திரிவது பண்புத்தொகை உவமைத்தொகை இரண்டுமொழிந்த அல்வழிப் புணர்ச்சியிலேயேயாம்.

(உ - ம்.)

நாம் + கடியம் = நாங்கடியம்
நிலம் + தீ = நிலந்தீ
உண்ணும் + சோறு = உண்ணுஞ்சோறு
உண்டனம் + சிறியேம் = உண்டனஞ் சிறியேம்
பூதனும் + தேவனும் = பூதனுந் தேவனும்.

* எழுவாய்த் தொடாமுதலியவற்றில் வல்லினம்வர ஈறுதிரிந்தது.

வினையாலணையும் பெயரிறுதி மகரமும் தனிக்குறிலைச் சார்ந்தமகரமும் வேற்றுமையிலும் வல்லினம் வரக்கெடாது இனமெல் லெழுத்தாகத் திரியும்.

(உ-ம்.) சிறியேம் + கை = சிறியேங்கை
நம் + கை = நங்கை.

'இனமாத்திரியும்' என்றமையின் அருத்தாபத்தியால் நாம்+ பெரியம் = நாம் பெரியம் எனப் பகரம் வரும்வழித் திரியாதெனக் கொள்க. (கசு)

M. F. சில மகர ஈற்றிற்குச் சிறப்புவிதி:—SPECIAL RULE REGARDING CERTAIN CONSONANT FINAL ம்.

220. வேற்றுமை மப்போய் வலிமெலி யுறழ்வும்
அல்வழி யுயிரிடை வரினியல் பும்முள.

(இ - ள்.) வேற்றுமை - வேற்றுமைக்கண், ம போய் - மகர இறுதி கெட, வலி மெலி உறழ்வும் - வல்லினமாவது அவற்றிற்கு இனமான மெல்லினமாவது மிகுதலும், அல்வழி - அல்வழிக்கண், உயிர் இடை வரின் - உயிரும் இடையினமும் வந்தால், இயல்பும் - (கெடாது) இயல்பாதலும், உள - உளவாம், எ-று.

(உ-ம்) குளம் + கரை=குளக்கரை
=குளங்கரை. } வேற்றுமையில்ஈறு கெட்டு உறழ்ந்தது.

மரம் + அடைந்தது = மரமடைந்தது
வலம் + இடம் = வலமிடம்

உண்ணும் + உணவு — உண்ணுமுணவு
உண்டனம் + அடியேம் = உண்டனமடியேம்
அரசனும் + அமைச்சனும் = அரசனு மமைச்சனும்.

எழுவாய்த் தொடர்முதலியன அல்வழியில் உயிரும் இடையினமும் வர ஈறுகெடா தியல்பாயின.

சிறியேம் + அன்பு = சிறியேமன்பு சிறியேம் + வாழ்வு = சிறியேம்வாழ்வு நம் + அன்பு = நம்மன்பு நம் + வாழ்வு = நம்வாழ்வு	வினையாலணையும் பெயரிறுதி மகாரமும் தனிக்குறிலைச்சாாந்த மகாரமும் வேற்றுமையிலும் இயல்பாயிற்று. (கள)

நும், தம், எம், நம் என்னுஞ் சொற்களுக்குச் சிறப்புவிதி:—
SPECIAL RULE REGARDING நும், தம், எம் AND நம்.

221. நுந்தம்,
எம்நம் மீறு மவ்வரு ஞநவே.

(இ - ள்.) நும் தம் எம் நம் - நும் முதலிய நான்கு விகார மொழிகளுக்கும், ஈறு ஆம் ம - இறுதியாகிய மகரமெய்யானது, வரும் ஞ ந வருகிற ஞகர நகரங்களாகத் திரியும், எ - று.

(உ - ம்.)

நும் + ஞாண் = நுஞ்ஞாண் + நூல் = நுந் நூல் தம் + ஞாண் = தஞ்ஞாண் + நூல் = தந்நூல்	எம் + ஞாண் = எஞ்ஞாண் + நூல் = எந்நூல் நம் + ஞாண் = நஞ்ஞாண் + நூல் = நந்நூல்.

ஞ ந வரின் அவையாகத் திரியுமெனவே ஒழிந்த மகரம் வரின் நும்+மணி=நும்மணி என இயல்பா மென்பது பெற்றாம்.

உஞ்ஞாண் நீர்என்பதன் திரிபாகிய உம் என்பதின் மகாரமும் அந்நலம் என பிறமொழிகளின் மகரமும் ஞநவாகத்திரிதல் உரையிற் கோடலென்னும் உத்தியால் என்க. (கஅ)

அகம். என்னுஞ் சொல்லுக்குச் சிறப்புவிதி:—SPECIAL RULE REGARDING அகத.

222. அகமுனர்ச் செவிகை வரினிடை யனகெடும்.

(இ - ள்.) அகம் முனர் - அகம் என்னும் இடப்பெயர் முன், செவி கை வரின் - செவி கை (என்கிற சினைப்பெயர்கள்) வந்

தால், இடையன - (நிலைமொழி) நடுநின்ற ககரமெய்யும் அதன் மேலேறிய அகரவுயிரும், கெடும் - அழியும், எ-று.

(உ-ம்.) அகம் + செவி = அஞ்செவி
+ கை = அங்கை.

கெட்டே வரும் என்றமையால் அகஞ்செவி, அகங்கை என வருவனவுங் கொள்க. (கக)

ஈம், கம், உரும் என்னும் சொற்களுக்குச் சிறப்புவிதி:—
SPECIAL RULE REGARDING ஈம், கம் AND உரும்.

223. ஈமுங்,
கம்மு முருமுந் தொழிற்பெயர் மானும்
முதலன வேற்றுமைக் கவ்வும் பெறுமே.

(இ - ள்.) ஈமும் கம்மும் உருமும் - ஈம் கம் உரும் என்கின்ற மூன்றும், தொழிற்பெயர் மானும் - (இருவழியிலும்) தொழிற்பெயர்போல (யகரமல்லாத மெய்கள் வந்தால்) உகரச்சாரியை பெற்றுமுடியும்; முதலன - (இவற்றுள்ளே) முதற்கண் நின்ற ஈமும் கம்மும், வேற்றுமைக்கு - வேற்றுமைக்கண், அவ்வும் பெறும் - (உகரச்சாரியை யல்லாமலும்) அகரச்சாரியையும் பெறும், எ-று.

(உ - ம்.)

ஈம்	+ கடிது	= ஈமுக்கடிது
	+ நீண்டது	= ஈமுநீண்டது
	+ வலிது	= ஈமுவலிது
கம்	+ கடிது	= கம்முக்கடிது
	+ நீண்டது	= கம்முநீண்டது
	+ வலிது	= கம்முவலிது
உரும்	+ கடிது	= உருமுக்கடிது
	+ நீண்டது	= உருமுநீண்டது.
ஈம்	+ கடுமை	= ஈமுக்கடுமை
	+ நீட்சி	= ஈமுநீட்சி
	+ வலிமை	= ஈமுவலிமை
கம்	+ கடுமை	= கம்முக்கடுமை
	+ நீட்சி	= கம்முநீட்சி
	+ வலிமை	= கம்முவலிமை
உரும்	+ கடுமை	= உருமுக்கடுமை
	+ நீட்சி	= உருமுநீட்சி
	+ வலிமை	= உருமுவலிமை.

அல்வழி வேற்றுமைகளில் உகரச்சாரியை பெற்றன.

ஈம் + குடம் = ஈமக்குடம்	வேற்றுமையில் அகரச் சாரியை பெற்றன.
கம் + குடம் = கம்மக்குடம்	

[ஈம் = சுடுகாடு, கம் = கம்மியரது தொழில், உரும் = இடி.] (உ0)

3. ய, ர, ழ ஈறு:—CONSONANT FINALS ய், ர், ழ்.

ய ர ழ ஈற்றின்முன் வல்லினம்:—HARD CONSONANTS AFTER CONSONANT FINALS ய், ர், ழ்.

224 யரழ முன்னர்க் கசதப வல்வழி
இயல்பு மிகலு மாகும் வேற்றுமை
மிகலு மினத்தோ டுறழ்தலும் விதிமேல்.

(இ-ள்.) ய ர ழ முன்னர் - யகர ரகர ழகர மெய்களின் முன், க ச த ப - ககர சகர தகர பகரங்கள் வரின், அல்வழி - அல்வழியில், இயல்பும் - இயல்பாதலும், மிகலும் - மிகுதலும், வேற்றுமை - வேற்றுமையில், மிகலும் - மிகுதலும், இனத்தோடு உறழ்தலும் - வல்லினமாவது மெல்லினமாவது மிகுதலும், விதி ஆகும் - விதியாகும், எ-று.

அல்வழி இயல்பு மிகுதி இரண்டனுள், இயல்பு - எழுவாய்த் தொடர் உம்மைத் தொகை வினைத்தொகைகளிலும், மிகுதி - பண்புத்தொகை உவமைத் தொகைகளிலும் கொள்ளப்படும்.

(உ-ம்.)

வேய் + கடிது	= வேய்கடிது		அல்வழியில் இயல்பும் மிகலும் ஆயின.
வேர் + சிறிது	= வேர்சிறிது		
வீழ் + தீது	= வீழ்தீது		
மெய் + கீர்த்தி	= மெய்க்கீர்த்தி		
கார் + பருவம்	= கார்ப்பருவம்		
பூழ் + பறவை	= பூழ்ப்பறவை.		
நாய் + கால்	= நாய்க்கால்		வேற்றுமையில் மிகுந்தும் உறழ்ந்தும் வந்தன.
தேர் + தட்டு	= தேர்த்தட்டு		
பூழ் + செவி	= பூழ்ச்செவி		
வேய் + குழல்	= வேய்க்குழல்		
	= வேய்ங்குழல்		
ஆர் + கோடு	= ஆர்க்கோடு		
	= ஆர்ங்கோடு.		

'மேல்' என்ற மிகையால் வாய் + புகுவது = வாய்புகுவது என வேற்றுமையில் இயல்பாதலும், பாழ் + கிணறு=பாழ்க் கிணறு, பாழ்ங்கிணறு எனப் பண்புத்தொகையில் விகற்பித்த லும், பீர் + கொடி = பீர்ங்கொடி, பீரங்கொடி, குமிழ் + கோடு = குமிழ்ங்கோடு, என ரகர ழகரவீறுகள் வேற்று மையில் மெல்லெழுத்தும் அம் சாரியையும் பெற்று விகற் பித்தலும், வேய் + யாது = வேயாது, வேய்+யாப்பு = வேயாப்பு என யகரவீறு யகரத்தின்முன் இருவழியுங் கெடு தலும், இன்னும் அடங்காதவைக ளிருந்தால் அவைகளுங் கொள்க. (உக)

தமிழ் தாழ் என்னுஞ் சொற்களுக்குச் சிறப்புவிதி:—
SPECIAL RULE REGARDING தமிழ் AND தாழ்.

225. தமிழவ் வுறவும் பெறும்வேற் றுமைக்கே
தாழுங் கோல்வந் துறுமே லற்றே.

(இ - ள்.) தமிழ் - தமிழ் என்கிற சொல், வேற்றுமைக்கு - வே ற்றுமையிலே (நாற்கணமும் வந்தால்), அ உறவும் பெ றும் - அகரச்சாரியை பொருந்தவும் பெறும்; தாழும் - தாழ் என்னுஞ் சொல்லும், கோல் - கோல் என்னுஞ் சொல், வந்து உறு மேல் - வந்து பொருந்துமாயின், அற்று - அவ் வகரச்சாரி யை பெறும், எ-று.

(உ ம்.) தமிழ் + பிள்ளை = தமிழப்பிள்ளை
+ நாகன் = தமிழநாகன்
+ வளவன் = தமிழவளவன்
+ அரசன் = தமிழவரசன்
தாழ் + கோல் = தாழக்கோல்.

தமிழையுடையபிள்ளை, தாழைத்திறக்குங்கோல் என விரி யும். தாழக்கோல்=திறவுகோல்; தாழாகிய கோல் என விரித் து இருபெயரொட்டுப் பண்புத்தொகை எனினும் பொருந்தும்.

அவ்வுறவும் என்ற எதிரதுதழீஇய எச்சவும்மையால், தமி ழின்சுவை என இன்சாரியைப் பெறுதலுங் கொள்க. (உஉ)

M. F. கீழ் என்னுஞ் சொல்லுக்குச் சிறப்புவிதி:—SPECIAL RULE REGARDING கீழ்.

226. கீழின்முன் வன்மை விகற்பமு மாகும.

(இ - ள்.) கீழின் முன் - கீழ் என்கிற சொல்லின்முன் வருகிற, வன்மை - வல்லினம், விகற்பமும் ஆகும் - (ஒருகா லியல்பாகியும் ஒருகால் மிக்கும் வருகிற) விகற்பத்தையும் பொருந்தும், எ-று.

(உ-ம்.) கீழ் + குலம் { = கீழ்குலம் / = கீழ்க்குலம்.

கீழ் + சாதி { = கீழ்சாதி / = கீழ்ச்சாதி.

விகற்பமும் என்னு மிழிவு சிறப்பும்மையால், இவற்று ளியல்பே சிறப்புடைத் தென்றறிக. (உக)

---

4. ல ள ஈறு:—CONSONANT FINALS ல் AND ள்.

M. F. பொதுவிதி:—GENERAL RULE.

227. லளவேற் றுமையிற் றடவு மல்வழி
அவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி
மேவி னணவு மிடைவரி னியல்பும்
ஆகு மிருவழி யானு மென்ப.

(இ-ள்.) ல ள - லகர ளகரமாகிய இரண்டு மெய்யீறும், வலி வரின் - வல்லினம் வந்தால், வேற்றுமையில் - வேற்றுமைக் கண், றடவும் - முறையே றகர டகரமெய்களும், அல்வழி - அல்வழிக்கண், அவற்றோடு உறழ்வும் ஆம் - றகர டகரங்களுடனே உறழ்வனவும் ஆகும்; இரு வழியானும் - அல்வழி வேற்றுமைக் கண்ணும், மெலி மேவின் - மெல்லினம் வந்தால், ன ணவும் - முறையே னகர ணகரமெய்களும், இடை வரின், இடையினம் வந்தால், இயல்பும் ஆகும் என்ப - இயல்பும் ஆகும் என்று சொல்லுவர் புலவர், எ-று.

(உ - ம்.)

கல் + குறை = கற்குறை
முள் + குறை = முட்குறை. } வேற்றுமையில் றகர டகரங்களாகத் திரிந்தன.

கல் + குறிது { = கல்குறிது / = கற்குறிது }
முள் + குறிது { = முள்குறிது / = முட்குறிது. }
} அல்வழியில் உறழ்ந்து வந்தன.

கல் + நெரிந்தது = கன்னெரிந்தது
முள் + நெரிந்தது = முண்ணெரிந்தது
கல் + ஞெரி = கன்ஞெரி
முள் + ஞெரி = முண்ஞெரி.
} இருவழியிலும் மெல்லினம்வர னகர ணகரங்களாகத் திரிந்தன.

கல் + யாது = கல்யாது
முள் + யாது = முள்யாது
கல் + யாப்பு = கல்யாப்பு
முள் + யாப்பு = முள்யாப்பு
} இருவழியிலும் இடையினம் வர இயல்பாயின.

'அல்வழியவற்றோ டுறழ்வும்' என்றூலும், இவற்றோடு மயங்காத தகரம் வரின் ஏற்புழிக் கோடலால் கல்+தீது=கற்றீது முள்+தீது=முட்டீது எனத் திரிபு ஒன்றுமே கொள்க. (உச)

லள ஈறு தகரத்தின்முன் ஆய்த மாதல்:—CONSONANT FINALS ல் AND ள் CHANGED INTO ஃ.

228 குறில்வழி லளத்தவ் வணையி னாய்தம்
ஆகவும் பெறூஉ மல்வழி யானே.

(இ - ள்.) குறில் வழி ல ள - தனிக்குறிலின் பின் நின்ற லகர ளகர மெய்களானவை, அல்வழியான் - அல்வழிக்கண், த அணையின் - தகரம் வருமாயின், ஆய்தம் ஆகவும் - (றகர டகரங்களாகத் திரித லல்லாமலும்) ஆய்தமாகத் திரிதலையும், பெறும் - பொருந்தும், எ-று.

(உ-ம்.) கல் + தீது = கஃறீது
முள் + தீது = முஃடீது. (உரு)

லள ஈறு தநக்கள்முன் கெடுதல் முதலியன:—CONSONANT FINALS ல் AND ள் DROPPED BEFORE WORDS BEGINNING IN த AND ந.

229. குறில்செறி யாலள வல்வழி வந்த
தகரந் திரிந்தபிற் கேடுமீ ரிடத்தும்
வருநத் திரிந்தபின் மாய்வும் வலிவரின்
இயல்பும் திரிபு மாவன வுளபிற.

174

(இ-ள்.) குறில் செறியா ல ள - தனிக்குறி லொன்றனையுஞ் சாராத லகார ளகார மெய்களானவை, அல்வழி - அல்வழிக்கண், வந்த தகரம் - (வருமொழிக்கு முதலாய்) வந்த தகரமானது, திரிந்தபின் - திரியுமிடத்து, கேடும் - கெடுதலும், ஈரிடத்தும் - அல்வழி வேற்றுமைக்கண்ணும், வரு ந - (வருமொழிக்கு முதலாய்) வந்த நகரமானது, திரிந்த பின் - திரியுமிடத்து, மாய்வும் - கெடுதலும், வலி வரின் - வல்லெழுத்து (முதன்மொழி) வந்தால், இயல்பும் திரிபும் - (அல்வழிக்கண் உறழாது) இயல்பாதலுந் திரிதலும் (வேற்றுமைக் கண்ணே) திரியா தியல்பாதலும், ஆவன உள - பொருந்துவன வுள, எ-று.

ல ள க்கள் அல்வழியில் வல்லினம்வர உறழாது இயல்பாவது எழுவாய்த்தொடர் உம்மைத்தொகை விளித்தொடர் வினைமுற்றுத்தொடர் வினைத்தொகைகளிலும் திரிவது பண்புத்தொகை உவமைத்தொகை வினை எச்சங்களிலும் எனக் கொளக.

(உ-ம்.) தோன்றல் + தீயன் = தோன்றறீயன்
வேள் + தீயன் = வேடீயன்.

என அல்வழியிலே தகரந் திரியுமிடத்து ல ள கெட்டன.

தோன்றல் + நல்லன் = தோன்றனல்லன்.
வேள் + நல்லன் = வேணல்லன்.
தோன்றல் + நன்மை = தோன்றனன்மை
வேள் + நன்மை = வேணன்மை.

என இருவழியிலும் நகரந் திரியுமிடத்து ல ள கெட்டன.

கால் + கடிது = கால்கடிது
மரங்கள் + கடிய = மரங்கள்கடிய
வேல் + படை = வேற்படை
வாள் + படை = வாட்படை.

என அல்வழியில் வல்லினம்வர ல ள உறழாது இயல்புந் திரிபுமாயின.

'கால்குதித்தோடிக் கடல்புகமண்டி
வாள்போழ்ந்தட்ட நீள்கழன் மறவர்'

என வேற்றுமையிலே வலிவரத் திரியா தியல்பாயின.

பிற என்ற மிகையால் தோன்றல்+தீமை=தோன்றறீமை, வேள்+தீமை=வேடீமை என வேற்றுமையினும், தகரந் திரியுமிடத்துக் கெடுதலும்; கால் + துணை = காற்றுணை, தாள்+துணை=தாட்டுணை என அல்வழியினுங் கெடாமையும்; வில்+படை = விற்படை என உறழாது திரிதலும்; கொல் + களிறு = கொல்களிறு, கொள் + பொருள் = கொள் பொருள் என வினைத்தொகை இயல் பாதலும், இன்னும் இவ்விரண்டற்றுள் அமையாதன பிறவுங் கொள்க. உயர்திணையிற் காட்டிய உதாரணங்கள் மயக்கவிதி யில்லாவிடத்து வருதலால் 'சில விகாரமா முயர்திணை' என்றவற்று ளடங்காவாம்.

லள ஈற்றுத் தொழிற்பெயர்:—VERBAL NOUNS ENDING IN ல் AND ள்.

230. லளவிறு தொழிற்பெய ரீரிடத்து முவ்வுரு
வலிவரி னல்வழி யியல்புமா வனவுள.

(இ - ள்.) லள இறு தொழிற்பெயர் - லகாரத்தை இறுதியாகவுடைய (விகுதிபெற்ற) தொழிற்பெயரும் ளகாரத்தை இறுதியாகவுடைய (முதனிலை திரிந்த) தொழிற்பெயரும், ஈரிடத்தும் - இருவழியினும், உ உரு - (யகரமல்லாத மெய்கள்வந்தால்) உகரம் பெறுவாம்; வலி வரின் - வல்லினம் வந்தால், அல்வழி - அல்வழிக்கண், இயல்பு ஆவன - (உறழாது) இயல்பாவனவும், உள - சிலவுள, எ-று.

(உ-ம்.)	ஆடல்	+ சிறந்தது	= ஆடல்சிறந்தது	இருவழியினும் உகரம் பெறாது பொது விதியான் முடிந்தன.
			= ஆடற்சிறந்தது	
		+ நன்று	= ஆடனன்று	
		+ வலிது	= ஆடல்வலிது	
		+ சிறப்பு	= ஆடற்சிறப்பு	
		+ நன்மை	= ஆடனன்மை	
		+ வன்மை	= ஆடல்வன்மை.	
	கோள்	+ கடிது	= கோள்கடிது	
			= கோட்கடிது	
		+ நன்று	= கோணன்று	
		+ வலிது	= கோள்வலிது	
		+ கடுமை	= கோட்கடுமை	
		+ நன்மை	= கோணன்மை	
		+ வன்மை	= கோள்வன்மை.	

நடத்தல்+கடிது=நடத்தல்கடிது, நடப்பித்தல் + கடிது= நடப்பித்தல்கடிது எனச் சில வுறழாது அல்வழியில் இயல்பாயின.

'இயல்பும்' என்ற உம்மையால் பின்னல் + கடிது=பின்னல் கடிது, பின்னற்கடிது ; உன்னல்+கடிது=உன்னல்கடிது, உன்னற்கடிது எனப் பொதுவிதியால் உறழ்தலே பெரும்பாலன என்க. (உஎ)

வல் என்னுஞ் சொல்லுக்குச் சிறப்புவிதி:—SPECIAL RULE REGARDING வல்.

231. வல்லே தொழிற்பெய ரற்றிரு வழியும்
பலகைநாய் வரினும் வேற்றுமைக் கவ்வுமாம்.

(இ - ள்) வல் - வல் என்கிற (சூதாடு கருவிப்பெயர்), இருவழியும் - இருவழிக்கண்ணும், தொழிற்பெயர் அற்று - (யகரமல்லாத மெய்கள் வந்தால்) தொழிற்பெயர்போல உகரச்சாரியைபெறும் ; பலகை நாய் வரினும் - பலகை நாய் என்கிற இருபெயர் வரினும் (பிறபெயர்கள் வரினும்), வேற்றுமைக்கு - வேற்றுமைக்கண், அவ்வும் ஆம் - (உகரச்சாரியை யல்லாமல்) அகரச்சாரியையும் பெறும், எ - று.

உ - ம.)

வல் + கடிது	= வல்லுக்கடிது		இரு வழியிலும் உகரச் சாரியை பெற்றது.
+ நன்று	= வல்லுநன்று		
+ வலிது	= வல்லுவலிது.		
+ கடுமை	= வல்லுக்கடுமை		
+ நன்மை	= வல்லுநன்மை		
+ வன்மை	= வல்லுவன்மை.		
வல் + பலகை	= வல்லுப்பலகை		வேற்றுமைக்கண் பலகை நாய் முதலியவர உகரமேயன்றி அகரமும்பெற்றது.
	= வல்லப்பலகை		
+ நாய்	= வல்லுநாய்		
	= வல்லநாய்		
+ புலி	= வல்லுப்புலி		
	= வல்லப்புலி		
+ குதிரை	= வல்லுக்குதிரை		
	= வல்லக்குதிரை.		

இவை வல்லினது அறை, வரைந்த பலகை, வல்லினுள் நாய் என விரியும். (உஅ)

நெல், செல், கொல், சொல் எனனுஞ் சொற்களுக்குச்
சிறப்புவிதி:—SPECIAL RULE REGARDING
நெல், செல், கொல், AND சொல்.

232. நெல்லுஞ் செல்லுங் கொல்லுஞ் சொல்லும்
அல்வழி யானும் றகர மாகும்.

(இ - ள்.) நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும் - நெல் முதலிய நான்கு சொற்களின் ஈற்று லகரமெய்யானது, அல்வழியானும் - அல்வழிக்கண்ணும், றகரம் ஆகும் - (பொது விதியால் உறழாது வேற்றுமை போல) றகர மெய்யாகத் திரியும், எ-று.

உ-ம்.)

நெல்	+ கடிது	=	நெற்கடிது
	+ சிறிது	=	நெற்சிறிது
	+ தீது	=	நெற்றீது
	+ பெரிது	=	நெற்பெரிது.
செல்	+ கடிது	=	செற்கடிது
	+ சிறிது	=	செற்சிறிது
	+ தீது	=	செற்றீது
	+ பெரிது	=	செற்பெரிது.
கொல்	+ கடிது	=	கொற்கடிது
	+ சிறிது	=	கொற்சிறிது
	+ தீது	=	கொற்றீது
	+ பெரிது	=	கொற்பெரிது.
சொல்	+ கடிது	=	சொற்கடிது
	+ சிறிது	=	சொற்சிறிது
	+ தீது	=	சொற்றீது
	+ பெரிது	=	சொற்பெரிது.

[செல்=மேகம், கொல்=கொல்லன்.] (உகூ)

இல் என்னுஞ் சொல்லுக்குச் சிறப்புவிதி:—SPECIAL RULE REGARDING இல்.

233. இல்லெ னின்மைச் சொற்கை யடைய
வன்மை விகற்பமு மாகா ரத்தொடு
வன்மை யாகலு மியல்பு மாகும்.

(இ - ள்.) இல் என் இன்மை சொற்கு - இன்மைப் பண்பை உணர்த்துகின்ற இல் என்கிற சொல்லுக்கு, ஐ அடைய - ஐகாரச்சாரியை பொருந்த, வன்மை - (அவ்விடத்து வருகிற) வல்லினம், விகற்பமும் - விகற்பித்தலும், ஆகாரத்தோடு - ஆகாரச்சாரியை பொருந்த, வன்மை ஆகலும் - அவ்விடத்து வருகிற வல்லினம் மிகுதலும், இயல்பும் - (இவ் விகுதியும் பெறாது) இயல்பாதலும், ஆகும் - பொருந்தும், எ-று.

இல் + பொருள் = இல்லைப்பொருள், இல்லைபொருள்—ஐகாரச்சாரியை வர வலி விகற்பித்தது.

இல் + பொருள் = இல்லாப்பொருள்—ஆகாரச் சாரியை பெற வலிமிக்கது.

இல் + பொருள் = இல்பொருள் — சாரியை பெறாது வலி இயல்பாயிற்று.

இல் + ஞானம் = இல்லைஞானம், இல்லாஞானம்
+ வன்மை = இல்லைவன்மை, இல்லாவன்மை
+ அணி = இல்லையணி, இல்லாவணி

என மற்ற முக்கணமும் வர ஐகார ஆகாரச்சாரியை பெற்று வந்தது.

சாரியை பெறுதற்கு வரு மெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்க. (௩0)

புள், வள் என்னுஞ் சொற்களுக்குச் சிறப்புவிதி:—SPECIAL RULE REGARDING புள் AND வள்.

234. புள்ளும் வள்ளுந் தொழிற்பெயரு மானும்

(இ - ள்.) புள்ளும் வள்ளும் - புள் வள் என்கிற இரண்டு சொற்களும், தொழிற்பெயரும் மானும் - (இருவழியும் யகர

மல்லாத மெய்கள் வந்தாற் பொதுவிதியான் முடிதலல்லாம லும்) தொழிற்பெயர்போல உகரச்சாரியையும் பெற்றுப் புணரும், எ-று.

(உ-ம்.)

புள்	+ கடிது	= புள்ளுக்கடிது	இருவழியினும் உகரச்சாரியை பெற்று வந்தன. (நக)
	+ நன்று	= புள்ளுநன்று	
	+ வலிது	= புள்ளுவலிது.	
	+ கடுமை	= புள்ளுக்கடுமை	
	+ நன்மை	= புள்ளுநன்மை	
	+ வன்மை	= புள்ளுவன்மை.	
வள்	+ கடிது	= வள்ளுக்கடிது	
	+ நன்று	= வள்ளுநன்று	
	+ வலிது	= வள்ளுவலிது.	
	+ கடுமை	= வள்ளுக்கடுமை	
	+ நன்மை	= வள்ளுநன்மை	
	+ வன்மை	= வள்ளுவன்மை.	

வள்=வாள், வாளுறை.

---

5. வகரஈறு:—CONSONANT FINAL வ்.

வவ்வீற்றுச் சுட்டுப்பெயர்க்குச் சிறப்புவிதி:—SPECIAL RULE REGARDING DEMONSTRATIVES ENDING IN வ்.

235. சுட்டு வகரமூ வினமுற முறையே
ஆய்தமு மென்மையு மியல்பு மாகும்.

(இ-ள்.) சுட்டு வகரம் - (அவ் இவ் உவ் என்கிற அஃறிணைப் பன்மைச்) சுட்டுப் பெயர்களீற்று வகரமெய், மூவினம் உற - வல்லின மெல்லின இடையினங்கள் வர, முறை - முறையாக, ஆய்தமும் - தனிநிலையும், மென்மையும் - மெல்லினமும், இயல்பும் - இயல்பும், ஆகும் - ஆகும், எ-று.

(உ-ம்.) அவ் + கடிய = அஃகடிய
அவ் + ஞானம் = அஞ்ஞானம்
அவ் + யானை = அவ்யானை.

இவ் உவ் என்பவைகளுடனேயும் இப்படியே கூட்டுக.

வேற்றுமைப் புணர்ச்சிக்கு அற்றுச்சாரியை பெறும் என மேலெடுத்துக் கூறுதலால், இவ்விதி அல்வழிக்கெனக்கொள்க(*)

தெவ் என்னுஞ் சொல்லுக்குச் சிறப்புவிதி:—SPECIAL RULE REGARDING தெவ்.

236. தெவ்வென் மொழியே தொழிற்பெய ரற்றே
மவ்வரின் வஃகான் மவ்வு மாகும்.

(இ - ள்.) தெவ் என் மொழி - தெவ் என்கிற (பகையை உணர்த்தும்) பெயரானது, தொழிற் பெயர் அற்று - (யகரமல்லாத மெய்களோடு புணருமிடத்துத்) தொழிற்பெயர் போல உகரச்சாரியை பெற்று முடியும்; ம வரின் - மகரமெய்யானது வந்தால், வஃகான் - வகரமெய்யானது, மவ்வும் ஆகும் - (உகரச்சாரியை பெறுத லல்லாமலும் ஒரோவிடத்து) மகர மெய்யாகவுந் திரியும், எ-று.

(உ - ம்.)

தெவ் + கடிது	= தெவ்வுக்கடிது	இருவழியிலும் உகரச் சாரியை பெற்றது.	
+ மாண்டது	= தெவ்வுமாண்டது		
+ வலிது	= தெவ்வுவலிது.		
+ கடுமை	= தெவ்வுக்கடுமை		
+ மாட்சி	= தெவ்வுமாட்சி		
+ வலிமை	= தெவ்வுவலிமை.		
தெவ் + மன்னர்	= தெவ்வுமன்னர்	இரு வழியிலும் மகரம்வர உகரச் சாரியை பெற்றும் மகரமாகத் திரிந்தும்வந்தது()	
	தெம்மன்னர்		
+ முனை	= தெவ்வுமுனை		
	தெம்முனை		

வருமொழிமுதலில் நிற்குந் த நக்கள்திரிபு.
CHANGE OF INITIAL த் AND ந்.

237. னலமுன் றனவும் ணளமுன் டணவும்
ஆகுந் தநக்க ளாயுங் காலே.

(இ-ள்.) னல முன் - னகர லகர மெய்களின்முன், தநக்கள் - (வருகிற) தகர நகரங்கள், ற ன (உம்) - (முறையே) றகர னகரங்களாகவும், ண ள முன் - ணகர ளகர மெய்களின்முன், (தநக்கள்) - (வருகிற) தகர நகரங்கள், டணவும் - (முறையே)

டகர ணகரங்களாகவும், ஆகும் - ஆகும், ஆயுங்கால் - ஆராயு மிடத்து, எ-று.

(உ-ம்.) பொன் + தீது = பொன்றீது
பொன் + தீமை = பொற்றீமை.
கல் + தீது = கற்றீது
கல் + நன்மை = கன்னன்மை.
மண் + தீது = மண்டீது
மண் + நன்மை = மண்ணன்மை.
முள் + தீது = முட்டீது
முள் + நன்மை = முண்ணன்மை.
} இருவழிப்பொருட்கும்

ஆயுங்கால் என்றதனால், மயக்கவிதி இல்லாமையால் இப்ப டிப் புணரு முதலீறு இரண்டனுள் ஒன்றுவது இரண்டுமாவது விகாரப்பட்டு மயங்குதற்கு உரியனவாகிப் புணருமென்பதும், மயக்கவிதி உள்ளனவற்றிற்கு வருகிறவிகாரம் அல்வழி வேற் றுமைப் பொருணோக்கத்தால் வருமென்பதும் பெற்றாம். ()

உயிரீற்றுப்புணரியலுள்ளும் இவ்வியலுள்ளுங் குறித்த வேற்று மைப்பொருட் புணர்ச்சிக்குச் சிறப்புவிதி:—

SPECIAL RULE REGARDING CASAL COMBINATIONS REFERRED TO IN THIS AND PRECEDING CHAPTERS.

238. உருபின் முடிபவை யொக்குமப் பொருளினும்.

(இ - ள்) உருபின் முடிபவை - மேல் உருபு புணர்ச்சிக்கண் முடியு முடிபுகள், அப்பொருளினும் - அப்பொருட் புணர்ச்சிக் கண்ணும், ஒக்கும் - ஒத்துமுடியும், எ-று.

(உ-ம்.) எல்லாவற்றதும்—உருபு புணர்ச்சி.
எல்லாவற்றுக்கோடும் — வேற்றுமைப் பொருட் புணர்ச்சி.

அஃறிணைக்கண் அற்றும் உருபின்மேல் உம்மும் பெற்றாற் போல இங்கு பொருட்புணர்ச்சிக்கும் பெற்றன.

எல்லாநமதும்—உருபுபுணர்ச்சி
எல்லாநங்கையும்—வேற்றுமைப் பொருட்புணர்ச்சி.

உயர்திணைக்கண் நம்மும் உருபின்மேல் உமமும் பெற்றாற் போல இங்கு பொருட் புணர்ச்சிக்கண்ணும் பெற்றன.

உருபுபுணர்ச்சி.	வேற்றுமைப் பொருட்புணர்ச்சி.
எல்லார்தமதும்	எல்லா தங்கையும்
எல்லீர்நுமதும்	எல்லீர் நுங்கையும்
தனது	தன்கை
தமது	தங்கை
நமது	நங்கை
எனது	என்கை
எமது	எங்கை
நினது	நின்கை
நுமது	நுங்கை.

என உருபுபுணர்ச்சிபோற் பொருட்புணர்ச்சியு முடிந்தவாறு காண்க. மற்றவைகளு மிப்படியே.

உருபு புணர்ச்சியாவது வேற்றுமையுருபுகள் விரிந்துநிற்கப் புணரும்புணர்ச்சி. வேற்றுமைப் பொருட்புணர்ச்சியாவது வேற்றுமை யுருபுகள் தொக்குநின்று அவ்வுருபுகளின் பொருள்தோன்றப் புணரும் புணர்ச்சி. (௩௫)

புணரியல்களுக்காவதோர் புறனடை.

A REMARK ON THE CHAPTERS ON COMBINATION.

239. இடையுரி வடசொலி னியம்பிய கொளாதவும்
போலியு மரூஉம் பொருந்திய வாற்றிற்
கியையப் புணர்த்தல் யாவர்க்கு நெறியே.

(இ - ள்.) இடை உரி வடசொலின்-இடைச்சொற்களுள்ளும் உரிச்சொற்களுள்ளும் வடசொற்களுள்ளும், இயம்பிய - (உயிரீறும் ஒற்றீறுமான புணரியலிலே தோன்றல் திரிதல் கெடுதல் இயல்பாதல் எனச்) சொல்லிய புணர்ச்சி இலக்கணங்களுள், கொளாதவும் - பொருந்தாது (வேறுபட்டு) வருவனவும், போலியும் - இலக்கணப்போலி மொழிகளும், மரூஉம் - மரூஉ மொழிகளும், பொருந்திய ஆற்றிற்கு - (இருவகை வழக்கினும்) நடக்கின்ற முறைமைக்கு, இயைய - பொருந்துமாறு, புணர்த்தல் - புணர்க்கை, யாவர்க்கும் - (அறிவுடையோர்) எல்லாருக்கும், நெறி - முறையாகும், எ-று.

(உ - ம்.)

ஆ + கன்று	= ஆன்கன்று	}	வேற்றுமைப் புணர்ச்சிக்கண் சாரியை இடைச் சொற்கள் னகர ஈறு திரியாது இயல்பாயின. (209-வது சூத்திரத்திற்குப் புறனடை.)
மா + கன்று	= மான்கன்று		
வண்டு + கால்	= வண்டின்கால்		
தேர் + கால்	= தேரின்கால்		
மழ + களிறு	= மழகளிறு	}	உயிரீற்று உரிச்சொற்களின்முன் வலி மிகாது இயல்பாகியும், மெலிமிகுந்தும் வந்தன. (165-வது சூத். புறனடை.)
உறு + புனல்	= உறுபுனல்		
தட + தோள்	= தடந்தோள்		
கம + சூல்	= கமஞ்சூல்		
அளி + குலம்	= அளிகுலம்	}	இயல்பீறும் விதியீறுமாகிய உயிரீற்று வடசொற்களின் முன் வலிமிகாது இயல்பாயின. (165) - வது சூத். புறனடை.)
தன + தடம்	= தனதடம்		
ஆதி + பகவன்	= ஆதிபகவன்		
இல் + முன்	= முன்றில்	}	இலக்கணப் போலி.
பொது + இல்	= பொதியில்		
வேட்கை + நீர்	= வேணீர்		
வேட்கை + அவா	= வேணவா		
அருமருந்தன்னபிள்ளை	= அருமந்தபிள்ளை	}	மரூஉமொழிகள் முன் விதிபெறாது கேட்டபடி விகாரமாயின.
அவர்யாவர்	= அவர்யார்		
குணக்குள்ளது	= குணாது		
தெற்குள்ளது	= தெனாது		
வடக்குள்ளது	= வடாது		
சோழநாடு	= சோணாடு		
பாண்டியநாடு	= பாண்டிநாடு		
மலையமாநாடு	= மலாடு		
தஞ்சாவூர்	= தஞ்சை		
ஆற்றூர்	= ஆறை		
ஆதன்றந்தை	= ஆந்தை		
பூதன்றந்தை	= பூந்தை		
வடுகன்றந்தை	= வடுகந்தை.		

நிலைமொழி வருமொழிகளுள்ளே ஏற்குஞ் செய்கை யறிந்து முடித்துக்கொள்க.

நிலைமொழி வருமொழிகளுள் வடநூலிற் புணர்க்கப்பட்ட படியே தமிழில் சிறுபான்மை வந்து வழங்குகின்ற அடியிற் குறித்தனபோன்ற தீர்க்கசந்தி, குணசந்தி முதலாயின கொள்க.

தீர்க்கசந்தி.

1. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் அவ்விரண்டில் ஒன்று வந்தால், அந் நிலைமொழியீறும் வருமொழி முதலுங்கெட ஆகாரம் தோன்றும்.

(உ-ம்.) பத + அம்புயம் = பதாம்புயம்
பரம + ஆனந்தம் = பரமானந்தம்
கங்கா + அமிர்தம் = கங்காமிர்தம்
சதா + ஆனந்தம் = சதானந்தம்.

2. இகர ஈகாரங்களில் ஒன்றன்முன் அவ்விரண்டில் ஒன்று வந்தால் அந்நிலைமொழி ஈறும் வருமொழி முதலுங் கெட ஈகாரந் தோன்றும்.

(உ-ம்.) சசி + இந்திரன் = சசீந்திரன
கிரி + ஈசன் = கிரீசன்
மகி + இந்திரன் = மகீந்திரன்
மகி + ஈசன் = மகீசன்,

3. உகர ஊகாரங்களில் ஒன்றன்முன் அவ்விரண்டில் ஒன்று வந்தால் அந் நிலைமொழி ஈறும் வருமொழி முதலுங்கெட ஊகாரந் தோன்றும்.

(உ-ம்.) குரு + உதயம் = குரூதயம்
தரு + ஊனம் = தரூனம்
சுயம்பூ + உபதேசம் = சுயம்பூபதேசம்
சுயம்பூ + ஊர்ச்சிதம் = சுயம்பூர்ச்சிதம்.

குணசந்தி.

1. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் இகர ஈகாரங்களில் ஒன்று வந்தால் அந் நிலைமொழி ஈறும் வருமொழி முதலுங் கெட ஏகாரந் தோன்றும்.

(உ-ம்.) நர + இந்திரன் = நரேந்திரன்
சுர + ஈசன் = சுரேசன்
தரா + இந்திரன் = தரேந்திரன்
உமா + ஈசன் = உமேசன்.

2. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் உகர ஊகாரங்களில் ஒன்று வந்தால் அந் நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் கெட ஓகாரந் தோன்றும்.

(உ-ம்.) பாத + உதகம் = பாதோதகம்
ஞான + ஊர்ச்சிதன் = ஞானோர்ச்சிதன்
தயா + உற்பத்தி = தயோற்பத்தி
தயா + ஊர்ச்சிதன் = தயோர்ச்சிதன்.

விருத்திசந்தி.

1. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் ஏகார ஐகாரங்களில் ஒன்று வந்தால் அந் நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் கெட ஐகாரந் தோன்றும்.

(உ-ம்.) சிவ + ஏகம் = சிவைகம்
சிவ + ஐக்கியம் = சிவைக்கியம்
தரா + ஏகவீரன் = தரைகவீரன்
மகா + ஐசுவரியம் = மகைசுவரியம்.

2. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் ஓகார ஔகாரங்களில் ஒன்று வந்தால் அந் நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் கெட ஔகாரந் தோன்றும்.

(உ-ம்.) கோமள + ஓடதி = கோமளௌடதி
திவ்விய + ஔடதம் = திவ்வியௌடதம்
மகா + ஓடதி = மகௌடதி
மகா + ஔடதம் = மகௌடதம்.

ஆதிவிருத்தி. *

1. ஒரு மொழியுள்ளே மொழிமுதலில் நின்ற இகர ஈகார ஏகாரங்கள் ஐகாரமாகத் திரியும்.

* சந்தியாவது நிலைமொழி யீறும் வருமொழி முதலும் புணர்வது ஆகையால் இதைச் சந்தி என்பது பொருந்தாது இதை வடநூலார் "தத்திதம்" என்று சொல்லுவார்.

சிவனைத் தொழுவோன் — சைவன்
வீரத்தின் தன்மை — வைரம்
கேவலத் தன்மை — கைவல்லியம்.

2. ஒரு மொழியுள்ளே மொழிமுதலில் நின்ற உகர ஊகார ஓகாரங்கள் ஔகாரமாகத் திரியும்.

புத்தனைத் தொழுவோன் — பௌத்தன்
சூரன் தன்மை — சௌரியம்
கோசலன் புத்திரி — கௌசலை.

3. ஒரு மொழியுள்ளே மொழிமுதலில் நின்ற அகரம் ஆகாரமாகவும், ஐ என்னும் ஏழாமுயிர் ஆர் ஆகவுந் திரியும்.

தசரதன் புத்திரன் — தாசரதி
கிருத்திகையின் புத்திரன் — கார்த்திகேயன். (௩௬)

மெய்யீற்றுப்புணரியல் முற்றுப்பெற்றது.

ரு. உருபுபுணரியல்.

COMBINATION OF CASAL PARTICLES.

உருபுகள்.

CASAL PARTICLES.

எட்டுஉருபுகளும் சாரும் இடவகையாலாகிய உருபுகளின் தொகை:—NUMBER OF CASAL PARTICLES.

240. ஒருவ னொருத்தி பலரொன்று பலவென
வருபெய ரைந்தொடு பெயர்முத லிருநான்
குருபு முறழ்தர நாற்பதா முருபே.

(இ-ள்.) ஒருவன் - ஒருவனும், ஒருத்தி - ஒருத்தியும், பலர் - பலரும், ஒன்று - ஒன்றும், பல - பலவும், என வரு - என்று கருத வருகின்ற, பெயர் ஐந்தொடு - ஐந்துவகைப் பெயரோடும், பெயர் முதல் இருநான்கு உருபும் - (எழுவாய் வேற்றுமையான) பெயர் முதல் விளி ஈறாக நின்ற எட்டுருபுகளையும், உறழ்தர - பெருக்க, உருபு நாற்பது ஆம் - (வேற்றுமை) உருபுகளானவை நாற்பதாகும், எ-று.

(வரலாறு.)

க - வது வேற்றுமை		= நம்பி
உ - வது ,,	நம்பி + ஐ	= நம்பியை
ங - வது ,,	நம்பி + ஆல்	= நம்பியால்
ச - வது ,,	நம்பி + கு	= நம்பிக்கு
ரு - வது ,,	நம்பி + இன்	= நம்பியின்
சு - வது ,,	நம்பி + அது	= நம்பியது
எ - வது ,,	நம்பி + கண்	= நம்பிக்கண்
அ - வது ,,		= நம்பீ

என ஒருவன் என்னும் வாய்பாட்டு உயர்திணை ஆண்பாற் பெயரோடு எட்டுருபுகளும் வந்தன.

சாத்தி, மக்கள், மரம், மரங்கள் என்கிற ஒருத்தி, பலர், ஒன்று, பல என்னும் மற்ற நான்கு வாய்பாட்டுப் பெயர்களோ டும் இப்படியே கூட்டுக. (க)

வேற்றுமையுருபுகள் வருதற்குக் காரணமும் வருமிடமும்:—THE POSITION AND USE OF CASAL PARTICLES.

241 பெயர்வழித் தம்பொரு டரவரு முருபே.

(இ - ள்.) உருபு - (வேற்றுமை) உருபுகளானவை, தம் பொருள் தர - தம்பொருளைக் கொடுக்க, பெயர் வழி வரும்-பெயர்க் குப் பின் வரும், எ-று.

(உ - ம்.)

நம்பி + பெற்றான் = நம்பிபெற்றான் — முதல் வேற்றுமை
நம்பி + ஐ + பெற்றான் = நம்பியைப் பெற்றான் — உ - ம் வேற்றுமை.

மற்றவைகளு மிப்படியே. (உ)

ஐ முதலிய ஆறு உருபுகளின் புணர்ச்சி:— COMBINATION OF CASAL PARTICLES.

242. ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியின்
ஒக்குமன் னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே.

(இ - ள்.) ஒற்று உயிர் முதல் ஈறு - (நிலைமொழியோடும் வருமொழியோடும் புணருகிற) மெய்யையும் உயிரையும் முத

னும் ஈறுமாகவுடைய, உருபுகள் - (ஐம்முதலிய ஆறு) உருபுகளும் (இடைச்சொல்லாயினும்), புணர்ச்சியின் - (இயல்பொடு விகாரத்து இயையும்) புணர்ச்சிவகையால், மன் ஒக்கும் - பெரும்பாலும் ஒக்கும், வேற்றுமைப் புணர்ப்பு - (போன இரண்டினுள்ளும்) வேற்றுமை புணர்ச்சிக்கண், அப்பெயர் - (இயல்பொடு விகாரத்தியைந்த) மெய்யுயிர் முதலீற்றுப் பெயர்களை, எ-று.

மன் என்றமையால் சிறுபான்மை ஒவ்வா வென்பதாம்.

(உ-ம்.)

நம்பி + கண் + வாழ்வு = நம்பிகண்வாழ்வு—இங்கே "ஆவியர முன் வன்மைமிகா" என்றும், "ணனவல்லினம் வரட்டறவும் பிறவரி னியல்புமாகும் வேற்றுமைக்கு" என்றுஞ் சொல்லிய படியே கண்ணுருபின் முதலும் ஈறும் இயல்பாயின.

உறி + கண் + தயிர் = உறிக்கட்டயிர் — இங்கே "இயல்பினும் விதியினுநின்றவுயிர்முன் கசதபமிகும்" என்றும், "னண வல்லினம் வரட்டறவும்" என்றுஞ் சொல்லியபடியே கண்ணுருபின் முதலும் ஈறும் விகாரமாயின.

பழி + கு + அஞ்சி = பழிக்கஞ்சி — இங்கே "இயல்பினும் விதியினு நின்றவுயிர்முன் கசதபமிகும்" "முற்றுமற்றொரோவழி" என்றுஞ் சொல்லியபடியே குவ்வுருபின் முதலும் ஈறும் விகாரமாயின.

நம்பி+கு+பிள்ளை=நம்பிக்குப்பிள்ளை—இங்கே "ஆவியரமுன் வன்மை மிகா" என்ற விதி ஒவ்வாமற் குவ்வுருபின் முதல் வல்லொற்று மிக்கது. மற்றவையு மிப்படியே வருதலை ஆராய்ந்தறிக. (௫)

சாரியை.
EUPHONIC PARTICLES.

சாரியை வருமாறு:—THE USE OF EUPHONIC PARTICLES.

243. பதமுன் விகுதியும் பதமு முருபும்
புணர்வழி யொன்றும் பலவுஞ் சாரியை
வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும்.

(இ - ள்) பதமுன் - பதத்தின்முன், விகுதியும் பதமும் உருபும் புணர்வழி - விகுதியாவது பதமாவது உருபாவது புணருமிடத்து, சாரியை ஒன்றும் பலவும் - ஒருசாரியை யாயினும் பலசாரியை யாயினும், வருதலும் தவிர்தலும் - வருதலும் வாராதொழிதலும், விகற்பமும் - (வருதலும் தவிர்தலுமாகிய இரண்டு) விகற்பமும், ஆகும் - ஆகும், எ-று.

(உ-ம்.)

விகுதிப்புணர்ச்சி.

நடந்தனன் — நடந்து + அன் + அன் என அன் சாரியை வேண்டியே வந்தது.

நடந்தான் — நடந்து + ஆன் எனச் சாரியை வேண்டாமல் வந்தது.

நடந்தன — நடந்து + அன் + அ என அன் சாரியை வேண்டியும்

நடந்த — நடந்து + அ எனச் சாரியை வேண்டாமலும்

} விகற்பம் வந்தது.

பதப்புணர்ச்சி.

புளியங்காய் — புளி + அம் + காய் என அம் சாரியை பெற்று வந்தது.

புளிக்கறி — புளி + கறி எனச் சாரியை பெறாமல் வந்தது.

நெல்லின்குப்பை — நெல் + இன் + குப்பை என இன் சாரியை பெற்றும்

நெற்குப்பை — நெல் + குப்பை எனச் சாரியை பெறாமலும்

} விகற்பம் வந்தது.

உருபுப்புணர்ச்சி.

அவற்றை — அவ் + அற்று + ஐ என அற்றுச் சாரியை பெற்று வந்தது.

தன்னை — தன் + ஐ எனச் சாரியை பெறாமல் வந்தது.

ஆனை	— ஆ + ன் + ஐ என ன் சாரியை பெற்றும்	உதாரணங்கள்.
ஆவை	— ஆ + ஐ எனச் சாரியை பெறாம லும்	

பலசாரியை.

ஆவினுக்கு — ஆ + இன் + உ + கு

மரத்தினுக்கு — மரம் - அத்து + இன் + உ + கு

எனச் சாரியைகள் பல வந்தன. (௪)

பொதுச்சாரியை:—GENERAL EUPHONIC PARTICLES.

244. அன் ஆன் இன் அல் அற்றிற் றத்தம்
தம்நம் நும்ஏ அஉ ஐகுன
இன்ன பிறவும் பொதுச்சா ரியையே.

(இ - ள்.) அன் . . . ன - அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன், என்று சொல்லப்பட்ட பதினேழும், இன்ன பிறவும் - இவை போல்வன பிறவும், பொது சாரியை - (விகுதி பதம் உருபு என்ற மூன்று புணர்ச்சிகளிலுந் தனிமொழிகளிலும் வருதலினாலே) பொதுச்சாரியை யாகும், எ-று.

(உ - ம்.)

	சாரியை.		சாரியை.
ஒன்றன்கூட்டம்	— அன்	எல்லார்தம்மையும்	— தம்
ஒருபாற்கு	— ஆன்	எல்லாநம்மையும்	— நம்
வண்டின்கால்	— இன்	எல்லீர் நும்மையும்	— நும்
தொடையல்	— அல்	கலனேதூணி	— ஏ
பலவற்றை	— அற்று	நடந்தது	— அ
பதிற்றுப்பத்து	— இற்று	சாத்தனுக்கு	— உ
மரத்திலே	— அத்து	ஏற்றை	— ஐ
மன்றம்	— அம்	உய்குவை	— கு

"இன்னபிறவும்" என்றதனால்

அவன்றனை	— தன் சாரியை.
அவன்றான்	— தான் ,,
அவர்தாம்	— தாம் ,,

புற்றுஞ்சோறு — ஆம் „
இல்லாப்பொருள் — ஆ „

என வருகின்றவையும் மற்றுமிப்படி வருமவைகளையும் கொள்க. (ரு)

உருபுபுணர்ச்சிக்குச் சிறப்புவிதி.
SPECIAL RULE REGARDING THE COMBINATION OF CASAL PARTICLES.

M. F. எல்லாம் என்னுஞ் சொல்லுக்குச் சிறப்புவிதி:—
SPECIAL RULE REGARDING எல்லாம்.

245. எல்லா மென்ப திழிதிணை யாயின்
அற்றோ டுருபின் மேலும் முறுமே
அன்றே னம்மிடை யடைந்தற் றாகும்.

(இ - ள்.) எல்லாம் என்பது - எல்லாம் என்னும் பொதுப் பெயர், இழி திணை ஆயின் - அஃறிணையில் வரும்போது (அதினோடு ஆறுருபுகளும் புணரின்), (இடை) - இடையிலே, அற்று - அற்றுச் சாரியையும், உருபின் மேல் - உருபின் மேல், உம் உறும் - முற்றும்மையும் பெறும்; அன்றேல் - உயர்திணையில் வரும்போது, இடை - இடையிலே, நம் அடைந்து - நம் சாரியையைப் பெற்று, அற்று ஆகும் - உருபின்மேல் முற்றும்மையும் பெறும், எ-று.

(உ - ம்.)

எல்லாம் + ஐ = எல்லாவற்றையும் — அஃறிணை [பன்மை.
+ ஐ = எல்லாநம்மையும் — உயர்திணைத் தன்மைப்

மற்றை உருபுகளோடும் இப்படியே கூட்டுக.

இரட்டுற மொழிதலால் இழிதிணையாய் இன் அற்றோடெனக் கொண்டு எல்லாவற்றினையும் என அற்று, இன் என்னும் இரண்டுசாரியை வருமெனினு மாம். (சு)

எல்லாரும் எல்லீரும் என்னுஞ் சொற்களுக்குச் சிறப்புவிதி:—
SPECIAL RULE REGARDING எல்லாரும் AND எல்லீரும்.

246. எல்லாரு மெல்லீரு மென்பவற் றும்மை
தள்ளி நிரலே தம்நும் சாரப்
புல்லு முருபின் பின்ன ரும்மே.

(இ-ள்.) எல்லாரும் எல்லீரும் என்பவற்று உம்மை - (ஆறுருபும் புணருமிடத்து) எல்லாரும் எல்லீரும் என்கிற இரு பெயர்களினுடைய (இறுதியிலுள்ள) முற்றும்மைகளை, தள்ளி - தள்ளி, நிரல் - முறையாக, தம் நும் சார - தம் என்னும் சாரியையும் நும் என்னும் சாரியையும் (அவையிருந்த இடங்களிலே) பொருந்த, உம் - (அவற்றினாலே தள்ளுண்ட முற்றும்மைகள், உருபின் பின்னர் - உருபுகளின் பின்னே, புல்லும் - வந்து புணரும், எ-று.

(உ-ம்.) எல்லாரும் + ஐ = எல்லாரதம்மையும் } தம், நும்
எல்லீரும் + ஐ = எல்லீர நுமமையும் } சாரியைகள்

எல்லாரையும், எல்லீரையும் எனச் சாரியைபெறுமலும்வரும்.

மற்ற உருபுகளோடு மிப்படியே கூட்டுக.

நந்தம்மை, நுந்தம்மை எனப் படர்க்கைக்குரிய தம்முச் சாரியை தன்மை முன்னிலைகளில் வருதல் "ஓரிடம் பிறவிடந் தழுவலு முளவே" என்னும் [பொது-சூத்-29] வழுவமைதி.(எ)

தான், தாம், நாம், யான், யாம், நீ, நீர் என்னுஞ்சொற்களுக்குச் சிறப்புவிதி:—SPECIAL RULE REGARDING தான், தாம், நாம், யான், யாம், நீ AND நீர்.

247 தான்தாம் நாம்முதல் குறுகும் யான்யாம்
நீ நீர் என்எம் நின்னு மாம்பிற
குவ்வி னவ்வரு நான்கா றிரட்டல.

(இ-ள்.) தான் தாம் நாம் - தான் முதலிய மூன்றுபெயர்களும், முதல் குறுகும் - (உருபுகள் புணருமிடத்து நெட்டெழுத்துகளாகிய) முதல் குறுகி (முறையே தன் தம் நம் என) வரும்; யான் யாம் நீ நீர் - யான் முதலிய நான்கு பெயர்களும், என் எம் நின் நும் ஆம் - (உருபுகள் புணருமிடத்து முறையே) என் எம் நின் நும் என வரும்; குவ்வின் - (இவ்வேழுபெயரோடு) குவ்வுருபு புணருமிடத்து, அவ்வரும் - (நடுவே) அகரச் சாரியை வரும்; நான்கு - நான்காம் வேற்றுமையின் குவ்வுருபின்கண் அகரச்சாரியை வரினும், ஆறு - ஆறும்வேற்றுமையுருபுயிர்கள் வரினும், இரட்டல - (அவ்வேழு சொற்களிலுமிறுதியாகிய தனிக்குறின் முன்னொற்றுகள்) இரட்டாவாம், எ-று.

(உ-ம்.) தான் + ஐ = தன்னை
+ ஆல் = தன்னால்
தாம் + ஐ = தம்மை
+ ஆல் = தம்மால்
நாம் + ஐ = நம்மை
+ ஆல் = நம்மால்.
} முதல் குறுகின.

மற்றை உருபுகளோடும் இப்படியே கூட்டுக.

யான் + ஐ = என்னை
+ ஆல் = என்னால்
யாம் + ஐ = எம்மை
+ ஆல் = எம்மால்
நீ + ஐ = நின்னை
+ ஆல் = நின்னால்
நீர் + ஐ = நும்மை
+ ஆல் = நும்மால்.
} என், எம் நின், நும் எனத் திரிந்தன.

மற்ற உருபுகளோடும் இப்படியே கூட்டுக.

தான் + கு = தனக்கு
+ அது = தனது
தாம் + கு = தமக்கு
+ அது = தமது
நாம் + கு = நமக்கு
+ அது = நமது
யான் + கு = எனக்கு
+ அது = எனது
யாம் + கு = எமக்கு
+ அது = எமது
நீ + கு = நினக்கு
+ அது = நினது
நீர் + கு = நுமக்கு
+ அது = நுமது.
} ச-ம். வேற்றுமையில் அகரச்சாரியை பெறுமிடத்தும் அது உருபு புணருமிடத்துந் தனிக்குறின் முன்னொற் றிரட்டாவாயின.

பிற என்றமையால் நீ—உன்னை எனவும், நீர்—உம்மை எனவுந் திரிந்து வருதலுங் கொள்க. (அ)

ஆ, மா, கோ என்னுஞ் சொற்களுக்குச் சிறப்புவிதி:—
SPECIAL RULE REGARDING ஆ மா AND கோ.

248. ஆமா கோனவ் வணையவும் பெறுமே.

(இ-ள்.) ஆ - ஆ என்கிற பசுவின்பெயரும், மா - மா என்கிற விலங்கின் பொதுப்பெயரும், கோ - கோ என்கிற இறை

வனே உணர்த்திநிற்கும் பெயரும், ன அணையவும் பெறும் - (உருபுகள் புணருமிடத்து) னகரச்சாரியை பொருந்தவும் பெறும், எ-று.

(உ - ம்.)

ஆ + ஐ = ஆனே, ஆவை மா + ஐ = மானே, மாவை கோ + ஐ = கோனே, கோவை.	னகரச்சாரியை பெற்றும் பெறுமலும் விகற்பித்து வந்தன.

அணையவும் என்ற உம்மையால், குவ்வுருபு புணரும்போது ஆனுக்கு என உகரச்சாரியையு முடன்பெறுதலும், ஆவுக்கு என உகரச்சாரியை ஒன்றே பெறுதலும், ஆவினுக்கு என இன்சாரியையுடன் உகரச்சாரியை பெறுதலும், ஆவினே என மற்றை யுருபுகள் புணரும்போது இன் சாரியை ஒன்றுமே பெறுதலும்; இரட்டுறமொழிதலால் ஆமா ஒருசொல்லாய்க் காட்டுப் பசுவை யுணர்த்திநின்ற விடத்தும், ஆமானே, ஆமானுக்கு, ஆமாவினுக்கு என இவ்விதி பெறுதலும்; அணையுமென் ளுெழியாது பெறும் என்றமையால் ஆன், மான், கோன், எனத் தனி மொழிக்கண்ணும் னகரச்சாரியை வருதலுங் கொள்க. (சு)

பது ஈற்று எண்ணுப்பெயர்களுக்குச் சிறப்புவிதி :—

SPECIAL RULE REGARDING NUMBERS ENDING IN பது.

249. ஒன்று முதலெட் டீறு மெண்ணூர்
பத்தின்முன் னுன்வரிற் பவ்வொற் ளுெழியமே
லெல்லா மோடு மொன்பது மிற்றே.

(இ - ள்.) ஒன்று முதல் எட்டு ஈறு ஆம் - ஒன்று முதல் எட்டீறுகிய, எண் ஊர் பத்தின் முன் - எண்களோடு புணர்ந்த பத்து என்கிற எண்முன் (உருபுகள் புணருமிடத்து), ஆன் வரின் - ஆன் சாரியை வருமாயின், பவ்வொற்று ஒழிய - பகரமெய் நிற்க, மேல் - (அதன்) மேலேநின்ற, எல்லாம் ஓடும் - எல்லா வெழுத்தும் கெடும்; ஒன்பதும் - ஒன்பது என்கிற எண்முன்னும், இற்று - (உருபுகள் புணருமிடத்து ஆன் சாரியை வரின்) அதன் பகரமெய் நிற்க மேலேநின்ற எல்லாவெழுத்துங் கெடும், எ-று.

(உ-ம்.) ஒருபது + ஐ = ஒன்பானை, ஒருபஃதை } விகற்பி
ஒருபஃது + ஐ = ஒருபானை, ஒருபஃதை } த்து வந்
ஒன்பது + ஐ = ஒன்பானை, ஒன்பஃதை. } தன.

ஒருபது ஒருபஃது என விகாரப்பட்டுவருகிற பத்தென்பார் எண்ணூர். பத்தென்றூர். ஆன் வருதலைப் பராமுகமாகச் சொன்னமையால் உகரச்சாரியை இன்சாரியைகளும் வேண்டிய விடத்து வருமெனக் கொள்க. (கO)

M. F. வகரவீற்றுச் சுட்டுப்பெயர்களுக்குச் சிறப்புவிதி:—
SPECIAL RULE REGARDING DEMONSTRATIVES ENDING IN வ்.

250. வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே.

(இ - ள்.) வ இறு சுட்டிற்கு - வகரமெய்யீற்று மூன்று சுட்டுப் பெயர்களுக்கும், அற்று உறல் - (உருபுகள் புணருமிடத்து) அற்றுச்சாரியை பொருந்துதல், வழி - முறைமையாம், எ-று.

(உ-ம்.) அவ் + ஐ = அவற்றை
இவ் + ஐ = இவற்றை
உவ் + ஐ = உவற்றை.

என அற்றுச்சாரியை வேண்டியே வருதல் காண்க. மற்ற வேற்றுமைகளோடும் இப்படியே கூட்டுக.

'வழியே' என்ற மிகையால் அவற்றினை, இவற்றினை, என இன் சாரியை வருதலுந் தனிக்குறின் முன்னொற்று உயிர்வரின் இரட்டாமையுங் கொள்க. (கக)

F. அஃது, இஃது, உஃது என்னுஞ் சொற்களுக்குச் சிறப்புவிதி—SPECIAL RULE REGARDING அஃது, இஃது, AND உஃது.

251. சுட்டின்முன் னாய்த மன்வரிற் கெடுமே.

(இ-ள்.) சுட்டின் முன் - (அஃது இஃது உஃது என்கிற சுட்டுப்பெயர்களின் மொழிமுதல்) சுட்டெழுத்தின் முன்னின்ற, ஆய்தம் - ஆய்தமானது, அன் வரின் - (அச்சுட்டுப் பெயர்களோடு உருபுகள் புணருமிடத்து) அன் சாரியைவரின், கெடும்- கெடும், எ-று.

(உ-ம்.) அஃது + ஐ = அதனை, அஃதை
இஃது + ஐ = இதனை, இஃதை
உஃது + ஐ = உதனை, உஃதை.

எனச் சாரியை விகற்பித்து வருதலும், சாரியை வந்தவழி ஆய்தங் கெடுதலுங் காண்க.

அன் சாரியை வருதலை நோக்கி ஆய்தங் கெட்டவழி அது இது உது என ஆய்தமில்லாச் சுட்டுப்பெயர்களாய்ப் பின்பு அன் சாரியை பெறுதலால், ஆய்தமில்லாச் சுட்டுப்பெயர்களுக்கும் இதுவே விதியெனக் கொள்க. அன் வருதலைப் பராமுகமாகக் கூறலால் குவ்வுருபு புணரும்போது அது+கு=அதற்கு என அன் சாரியை தனித்து வருதலல்லாமலும், அதனுக்கு என உகரச்சாரியை யுடன்வருதலுங் கொள்க. (கஉ)

இச்சூத்திரத்து உபலக்ஷணத்தால் வினாப்பெயராகிய எது என்பது எதனை எதனுக்கு எதை என இவ்வாறு வருதலுங் கொள்க.

M. F. அகர ஈற்றுச்சொற்களுக்கு முன் வரும் அத்துச் சாரியையின் முதல் அகரக் கேடு :— THE EUPHONIC PARTICLE அத்து DROPS ITS INITIAL அ AFTER FINAL அ.

252 அத்தி னகர மகரமுனை யில்லை.

(இ-ள்.) அத்தின் - அத்துச் சாரியையினது, அகரம் - அகர உயிரானது, அகர முனை - (இயல்பினும் விதியினு நின்ற) அகர உயிரீற்றின் முன்வரின், இல்லை - (வகர உடம்படுமெய் பெறாது) கெடும், எ-று.

(உ-ம்.) மர + அத்து குறை = மரத்துக்குறை விதியீறு.
மக + அத்து கை = மகத்துக்கை இயல்பீறு.

என இரண்டு அகரவீற்றின் முன்னுங் கெட்டது.

போழ்தத்துவள்ளன்மை அவையத்துச்சென்றார் எனப் பிற உயிரீற்றின்முன் அகரம் கெடாது.

விளவத்துக்கோடு அதவத்துக்கண் என அகர ஈற்றின் முன் கெடாமையும், நிலாத்துக்கொண்டான் என ஆகார ஈற்றின்முன்னும், தேத்து என ஏகாரவீற்றின்முன்னும் கெடுதலும் அறிக. ()

சாரியைகளை அறியும் வகை:—HOW TO FIND OUT EUPHONIC PARTICLES.

253. இதற்கிது சாரியை யெனினள வின்மையின்
விகுதியும் பதமு முருபும் பகுத்திடை
நின்ற வெழுத்தும் பதமு மியற்கையும்
ஒன்ற வுணர்த்த லுரவோர் நெறியே.

(இ - ள்.) இதற்கு இது சாரியை எனின் - (விகுதி முதலிய புணர்ச்சிக்கண்) இதற்கு இது சாரியை என்று (அளவுசெய்து விதித்தனவற்றுள்ளும் ஒழிந்தனவற்றுள்ளுந் தனித்தனி சொல்லப்புகின், அளவு இன்மையின் - அளவுபடாமையால், விகுதியும் - விகுதிப்புணர்ச்சியையும், பதமும் - பதப்புணர்ச்சியையும், உருபும் உருபுப் புணர்ச்சியையும், பகுத்து - (கண்டவிடத்துப்) பகுத்து, இடை நின்ற - நடுவே நின்ற, எழுத்தும் - (ஏகாரம் அகரம் முதலிய) எழுத்துச் சாரியையினையும், பதமும் - (அன் ஆன் முதலிய) பதச் சாரியையினையும், இயற்கையும் - (இவ்விரண்டுவகைச் சாரியையுந் தோன்றாத) இயல்பினையும், ஒன்ற உணர்த்தல - தெரிய அறிவித்தல், உரவோர் நெறி - பெரியோரது கடனாகும், எ-று.

(உ - ம்.) 'ஆனநெய் தெளித்து நான நீவி'—விதித்தபொருட் புணர்ச்சிக்கண் 'உருபின்முடிபவை' என்பதனால் அமைந்த னகரமெய்ச் சாரியை யன்றியும் அகரச்சாரியையு முடன் வந்தது.

இனி விதியா தொழிந்தவற்றின்கண் பாட்டின் பொருள் ... க் குற்றிய லுகரத்திற்கு இன சாரியை வந்தது.

... தன்மை எனச் சாரியையின்றி இயல்பாக வந்தது.

இப்படியே மூவகைப் புணர்ச்சிகளையும் பகுத துணர்ந்து கொள்க. (கசு)

விகுதி, பதம், சாரியை, உருபு என்னும் நால்வகைப் புணர்ச்சிக்கும் புறனடை.

GENERAL REMARKS REGARDING THE COMBINATION OF FINAL PARTICLES, WORDS, EUPHONIC AND CASAL PARTICLES.

254. விகுதி பதஞ்சா ரியையுரு பனைத்தினும்
உரைத்த விதியினோர் தொப்பன கொளலே.

(இ - ள்.) விகுதி - விகுதியும், பதம் - பதமும், சாரியை - சாரியையும், உருபு - உருபும் ஆகிய, அனைத்தினும் - நான்கின் புணர்ச்சிகளிடத்தும், உரைத்த விதியின் - (பொதுப்படச்) சொல்லப்பட்ட விதிகளுள், ஓர்ந்து - (இவ்விதி (இதற்குப் பொருந்தும் இவ்விதி இதற்குப் பொருந்தாது என) உய்த்துணர்ந்து, ஒப்பன - எவ்விதி எதற்குப் பொருந்துமோ அவ்விதியை, கொளல் - அதற்குக் கொள்க, எ-று.

(உ - ம்.) **விகுதிப்புணர்ச்சியுள்** 'றவ்வொடு உகர வும்மை நிகழ்பல்லவும்' எனப் பொதுப்பட விதித்தாரேனும் 'சென்று' என்கிறவிடத்து இறந்தகாலமும், 'சேறு' என்கிறவிடத்து எதிர்காலமும் பொருந்துமென்று கொள்க.

பதப்புணர்ச்சியுள் 'அல்வழி இ ஐம் முன்னராயி னியல்பு மிகலும் விகற்பமுமாகும்' எனப் பொதுப்பட விதித்தாரேனும் 'பருத்திகுறிது' எனவருகிற எழுவாய்ப் புணர்ச்சிக்கண் இயல்பா மெனவும், 'ஆடித்திங்கள்' என வருகிற பண்புத்தொகைக்கண் மிகுமெனவுங் கொள்க.

சாரியைப்புணர்ச்சியுள் 'பதமுன்விகுதியும் பதமுமுருபும் புணர்வழியொன்றும் பலவுஞ் சாரியை வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும்' எனப் பொதுப்பட விதித்தாரேனும், 'நாட்டின்கணிருந்தான், எனக் கண்ணுருபிற்கு இன் சாரியை வருமென்றும், 'நாட்டினீங்கினான்' என இன்னுருபிற்கு இன் சாரியை வாராதென்றுங் கொள்க.

உருபு புணர்ச்சியுள் 'ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியி னொக்குமன்னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே' எனப் பொதுப்பட விதித்தாரேனும் 'நம்பிகண்' எனக் கண்ணுருபு மிகாதென்றும், 'நம்பிக்கு' எனக் குவ்வுருபு மன் என்றமையால் மிகுமென்றுங் கொள்க. மற்றவைகளு மிப்படியே. (கரு)

M. F. இரண்டாம் வேற்றுமைக்குச் சிறப்புவிதி :—SPECIAL RULE REGARDING THE SECOND CASE.

255. இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்
உயர்திணை யிடத்து விரிந்துந் தொக்கும்

விரவுப் பெயரின் விரிந்து நின்றும்
அன்ன பிறவு மாகுமை யுருபே.

(இ - ள்.) இயல்பின் விகாரமும் - (பொதுவிதியோடு முடிதலே யன்றி அப்படி விதித்த) இயல்பிலே விகாரமாகியும், விகாரத்து இயல்பும் - விகாரத்திலே இயல்பாகியும், உயர்திணையிடத்து - உயர்திணைப் பெயரின்கண், விரிந்தும் தொக்கும் - வெளிப்பட்டும் மறைந்தும், விரவுப்பெயரின் - பொதுப்பெயரின் கண், விரிந்தும் - வெளிப்பட்டும், நின்றும் - மறைந்தும், அன்ன பிறவும் - அவைபோல்வன பிறவேறுபாடுகளும், ஆகும் - ஆகி வரும், ஐ உருபு - இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி, எ-று.

(உ-ம்.) 'வழிபடு தெய்வ நிற்புறங்காப்ப'—இது "நின்னீறியல்பா முறவே" என இயல்பாகவேண்டு மிடத்து விகார மாயிற்று.

மண்கொணர்ந்தான்—இது "ணனவல்லினம் வரட்டறவும்" என விகாரமாக வேண்டியவிடத்து இயல்பாயிற்று.

நம்பியைக் கொணர்ந்தான்—உயர்திணையிடத்து விரிந்தது.

பல்லோரறியுஞ்சொல்—உயர்திணையிடத்துத் தொக்கது.

கொற்றனைக் கொணர்ந்தான்—விரவுப் பெயரிடத்து விரிந்தது.

ஆண் பெற்றாள் என விரவுப் பெயரிடத்துத் தொக்கது.

'அன்னபிறவும்' என்றமையால் 'தற்கொண்டான்' என உறழ்ப்படுவது திரிந்தே வருதலும் பிறவுங் கொள்க. எண்ணி நின்ற இறந்தது தழீஇய இழிவுசிறப்பும்மையால் வேற்றுமைக்கென விதித்த பொதுவிதியோ டெருங்கொத்து 'வாருகட்டினான்' என இயல்பி லியல்பாகியும், பலாக்குறைத்தான்' என விகாரத்தில் விகாரமாகியும் வருதலே பெரும்பாலன என்க. (௧௬)

மூன்றும் வேற்றுமைக்குச் சிறப்புவிதி :— SPECIAL RULE REGARDING THE THIRD CASE.

256 புள்ளியு முயிரு மாயிறு சொன்முன்
தம்மி னாகிய தொழின்மொழி வரினே
வல்லினம் விகற்பமு மியல்பு மாகும்.

(இ - ள்) புள்ளியும் உயிரும் ஆய் இறு சொல் முன் - (மூன்றும் வேற்றுமைப் புணர்ச்சியுள்ளே) மெய்யும் உயிரும் இறுதியாக நின்ற சொற்களின்முன், தம்மின் ஆகிய - கருத்தாவாகிய நிலைமொழிப் பொருள்களாலாகிய, தொழில் மொழி - தொழிற் சொல், வரின் - வந்தால், வல்லினம் - (அவ்விடத்து வருகிற) வல்லினம், விகற்பமும் - உறழ்ச்சியும், இயல்பும் - இயல்பும், ஆகும் - ஆகும், எ-று.

இவ்விதியும் இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிபோல் ஒப்பன கொள்க.

(வரலாறு) பேய்கோட்பட்டான்
பேய்க்கோட்பட்டான்
சூர்கோட்பட்டான்
சூர்க்கோட்பட்டான்
பேய்பிடிக்கப்பட்டான்
புலிகடிக்கப்பட்டான்.

உம்மையால் அராத்தீண்டப்பட்டான், சுறாப்பாயப்பட்டான் என வேற்றுமைப் பொதுவிதியான் முடிவனவே பெரும்பாலன என்க. (௱)

எழுத்ததிகாரத்திற்குப் புறனடை:—GENERAL REMARKS ON THE FOREGOING CHAPTERS ON ORTHAGRAPHY.

257. இதற்கிது முடிபென் றெஞ்சாது யாவும்
விதிப்பள வின்மையின் விதித்தவற் றியலான்
வகுத்துரை யாதவும் வகுத்தனர் கொளலே.

(இ - ள்.) இதற்கு இது முடிபு என்று - இதற்கு இது முடிபென்று, யாவும் - (இவ்வதிகாரத்துள் விதிக்கத் தகுவனவற்றை) எல்லாம், எஞ்சாது விதிப்பு - குறையாமல் (தனித்தனி அளவுசெய்து) விதிக்கப்புகின், அளவு இன்மையின் - அதற்கு ஓர்ளவில்லாமையால், விதித்தவற்று இயலான் - வகுத்து விதித்தவற்றினுடைய (இலக்கணங்களை) ஏதுவாகக் கொண்டு, வகுத்து உரையாதவும் - வகுத்து விதி உரையாதனவற்றையும், வகுத்தனர் கொளல் - (கருத லளவையால்) வகுத்து விதியுரைத்துக்கொள்க, எ-று.

(உ - ம்) எழுத்தியலுள் "மொழி முதற்காரண மாமணுத்திரளொலி யெழுத்து" என உரைத்தமையால், "கட்புல னில்

லாக் கடவுளைக் காட்டுஞ் - சட்டகம் போலச் செவிப்புல வொலி யை - யுட்கொளற் கிடுமுரு பாம்வடி வெழுத்தே" எனப் பிறர் கூறியவாறு இவ்வொலி வடிவைக் காட்டுதற்கு ஓர் கருவியாக எழுதிக் கொள்ளப்பட்டது வரிவடிவெழுத்து எனக் கொள்க.

பதவியலுள் "அன், ஆன், அள், ஆள்" என்னுஞ் சூத்திரத் திலே முறையே அன் ஆன் விகுதி ஆண்பாற்கென வுரைத்த மையால் பெருமாள் எனகிற பதம் பெருமையை யுடையா னென்னும் பொருள் தோன்ற நின்ற பெருமான் என்கிற பதத் தினது ஆன் விகுதி ஆள் விகுதியாக ஒரோவிடத்தே திரிந்து ஆண்பாலையே யுணர்த்தி நின்றதெனக் கொள்க.

உயிரீற்றுப்புணரியலுள் "இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன் கசதபமிகும்" என்று சொன்னமையால் "ணனவல் லினம்வரட்டறவும்" என்ற விடத்து டகரமும் வல்லினமா தலின் மிகுந்ததெனக் கொள்க.

மெய்யீற்றுப்புணரியலுள் "நுந்தம் எம் நம் மீறு மவ்வரு ஞவே" என உரைத்தமையால் அம என்கிற சொல்லிறுதி மக ரமுங் குற்றெற்றுதலின் தன்னொடு மயங்காத மெல்லினம் வரின் அதுவாய்த் திரிந்து அஞ்நலம் என அழகினது நலமென் னும் பொருளதாய் வருமெனக் கொள்க.

உருபுபுணரியலுள் "வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே" என உரைத்தமையால் அதுபோலும் வினவும் 'எவற்றை' என அற்றுச்சாரியை பெறு மெனவும், இரண்டாம் வேற்றுமைக்கும் மூன்றும் வேற்றுமைக்கும் புறனடை யுரைத்தமையால் ஏழாம் வேற்றுமையும் 'மண்புகுந்தும் விண்பறந்து மாலுமயனுங் காணு வொருபொருள்' என வேற்றுமைப் பொதுவிதி யேலாது சிறு பான்மை வருமெனவுங் கொள்க.

இன்னும் இவ்வைந்தியலுள்ளும் வகுத்துரையாதனவற்றை யெல்லாம் துன்பப்படாமல் இதுவே இடமாக முடித்துக் கொள்க. (கஅ)

உருபுபுணரியல் முற்றுப்பெற்றது.

அடையெண்பெயர்முறைதோற்றம்வடிவளவாதியந்தம்
இடைநிலைபோலியென்றீரைந்தெழுத்துமிருபதமும்
படுபுணாமூன்றினியல்பும்விகாரமுஞ்சாரியையும்
உடனுணர்வாரையெழுத்தறிவாரென்பருத்தமரே.

எழுத்ததிகார முற்றிற்று.

உ. சொல்லதிகாரம்.

ETYMOLOGY.

க. பெயரியல்.

ON NOUNS.

கடவுள்வணக்கம்:—INVOCATION.

258. முச்சக நிழற்று முழுமதி முக்குடை
அச்சுத னடிதொழு தறைகுவன் சொல்லே.

(இ - ள்.) முச்சகம் நிழற்றும் - மூன்றுலகத்திற்கும் நிழலைச்செய்கின்ற, முழு மதி - நிறைந்த மதிபோலும், முக்குடை மூன்று குடைகளையுடைய, அச்சுதன் அடி தொழுது - அழியாத கடவுளுடைய பாதங்களை வணங்கி, சொல் அறைகுவன் - (முன்னதிகாரத்துட் சொல்லிய எழுத்தினாலாகிய) சொல்லிலக்கணத்தைச் சொல்லுவேன், எ-று. ஏகாரம் - ஈற்றசை. (க)

க. சொல்லின் பொதுவிலக்கணம்.

GENERAL CHARACTERISTICS OF WORDS.

M. F. சொல்:—WORD DEFINED.

259. ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி யென்று, இருதிணை யைம்பாற் பொருளையுந் தன்னையும், மூவகை யிடத்தும் வழக்கொடு செய்யுளின், வெளிப்படை குறிப்பின் விரிப்பதுசொல்லே.

(இ - ள்) ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி என்று - ஒருமொழியும் தொடர்மொழியும் பொதுமொழியும் என (மூன்று பிரிவினது) ஆகி, இரு திணை ஐம்பால் பொருளையும் - (உயர்திணை அஃறிணை என்னும்) இருதிணையாகிய (ஆண் பெண் பலர் ஒன்று பல என்னும்) ஐம்பாற் பொருளையும், தன்னையும் - (அப்பொருளையன்றித்) தன்னையும், மூவகை இடத்தும் - (தன்மை

முன்னிலை படர்க்கை என்னும்) மூன்றிடத்திலும், வழக்கொடு செய்யுளின் - வழக்கினிடத்தும் செய்யுளினிடத்தும், வெளிப் படை குறிப்பின் - வெளிப்படையாலும் குறிப்பினாலும், விரிப் பது சொல் - விளக்குவது சொல்லாகும், எ-று.

பொருளையுந் தன்னையும் என்றதனால், உயிர்க்கு அறிவானது கருவியாய் நின்று தன்னையும் பொருளையும் உணர்த்துமாறு போல ஒருவருக்குச் சொல்லானது கருவியாய் நின்று தன்னை யும் இருதிணை ஐம்பாற் பொருளையும் உணர்த்து மென்பது பெற்றாம். (உ)

M. F. மூவகை மொழிகளின் இலக்கணம்:—THREE KINDS OF WORDS DEFINED.

260. ஒருமொழி யொருபொரு ளனவாந் தொடர்
மொழி, பலபொரு ளனபொது விருமையு
மேற்பன.

(இ - ள்.) ஒருமொழி ஒரு பொருளன ஆம் - ஒருமொழிக ளாவன (பகாப்பதமாவது பகுபதமாவது ஒன்று நின்று தத் தம்) ஒருபொருளைத தருவனவாம்; தொடர்மொழி பல பொரு ளன - தொடர்மொழிகளாவன (அவ்விருவகைப் பதங்களுந் தன்னோடும் பிறிதோடும அல்வழிவேற்றுமைப்பொரு ளோக் கத்தால் இரண்டு முதலியவாகத் தொடர்ந்துநின்று இரண்டு முதலிய) பலபொருளைத் தருவனவாம்; பொது (மொழி) இரு மையும் ஏற்பன - பொதுமொழிகளாவன (ஒரு மொழியாய் நின்று ஒருபொருளைத் தந்தும் அதுவே தொடர்மொழியாய் நின்று பலபொருளைத் தந்தும்) இவ்விரண்டற்கும் பொதுவாய் நிற்பனவாம், எ-று.

(உ - ம்.)

ஒருமொழி	நிலம் நிலத்தன்	பெயர்ச்சொல்.
	நட நடந்தான்	வினைச்சொல்.
	நில், மன்	இடைச்சொல்.
	தவ, நனி	உரிச்சொல்.

தொடர்மொழி { நிலம்வலிது, அதுகொல், சாலபபகை, நிலங்கடந்தான், நிலத்தைக்கடந்தான், நிலத்தைக்கடந்த நெடுமால்.

பொது மொழி.

எட்டு — இது ஒருமொழியாய் நின்று எட்டு என்னும் ஓரெண்ணைக் குறிப்பதுமன்றி, தொடர்மொழியாய் நின்று (என்+து) எனப் பிரிவுபட்டு எள்ளைத்தின்னு எனவும் பொருள்படும். து=உண்ணு.

தாமரை—இது ஒருமொழியாய்நின்று தாமரை என்னும் ஓர புட்பத்தைக் குறிப்பதுமன்றி, தொடர்மொழியாய் நின்று (தா+மரை) எனப் பிரிவுபட்டுத் தாவுகின்ற மரை எனவும் பொருள்படும். மரை - மான்.

வேங்கை—இது ஒருமொழியாய்நின்று வேங்கை என்னும் ஓர மரத்தைக்குறிப்பது மன்றி, தொடர்மொழியாய் நின்று (வே+கை) எனப் பிரிவுபட்டு வேகின்ற கை எனவும் பொருள்படும்.

எழுந்திருந்தான்—இது ஒருமொழியாய்நின்று எழுந்தான் என்னும் பொருள் தருவதுமன்றி, தொடர்மொழியாய் நின்று (எழுந்து + இருந்தான்) எனப் பிரிவுபட்டு எழுந்து பின் இருந்தான்எனவும் பொருள்படும்.()

M. F. இருதிணை:—THE TWO CLASSES (PERSONAL AND INPERSONAL) DEFINED.

261. மக்கடேவர் நரக ருயர்திணை
மற்றுயி ருள்ளவு மில்லவு மஃறிணை.

(இ-ள்.) மக்கள் தேவா நரகா - மக்களும் தேவரும் நரகரும், உயர்திணை - உயர்திணையாகும்; மற்று உயிர் உள்ளவும் இல்லவும் - அவரொழிந்த (விலங்கு முதலாகிய) உயிருள்ளவையும் (நிலம் நீர் முதலாகிய) உயிரில்லாதவையும், அஃறிணை - அஃறிணையாகும், எ-று.

இம்மூவகையோருடைய உடம்பையும் உயிரையும் வேறாகக் குறிக்கும்போது அவையும் அஃறிணையாம்.

உயர்திணை=உயர்வாகிய குலம்; அஃறிணை=அதுவல்லாத குலம். திணை=குலம், சாதி.

(உ)

M. F. உயர்திணையின பாற்பிரிவு:—SUB-DIVISIONS OF THE PERSONAL CLASS.

262. ஆண்பெண் பலரென முப்பாற் றுயர்திணை.

(இ - ள்.) ஆண் பெண் பலர் என - ஆண்பாலும் பெண்பாலும் பலர்பாலும் என்று, முப்பாற்று - மூன்றுபாலினை யுடைத்தாகும், உயர்திணை - உயர்திணை, எ-று.

ஆடவர் என்கிறது முதலாகிய ஆண்பன்மையையும், பெண்டிர் என்கிறது முதலாகிய பெணபன்மையையும், மக்கள் என்கிறது முதலாகிய அவ்விருவர் பன்மையையும் அடக்கிப் பலரென்றார்; பின் பல எனபதும் அது. (ரு)

M. F. அஃறிணையின் பாற்பிரிவு:—SUB-DIVISION OF THE IMPERSONAL CLASS.

263. ஒன்றே பலவென் றிருபாற் றஃறிணை.

(இ - ள்.) ஒன்று பல என்று - ஒன்றன்பாலும் பலவின்பாலும் என்று, இருபாற்று - இரண்டுபாலினை யுடைத்தாகும் அஃறிணை - அஃறிணை, எ-று.

அஃறிணையிலே சேவல் என்கிறது முதலாகிய ஆண்பாலும் பெடை என்கிறது முதலாகிய பெண்பாலும் இருந்தாலும், உயிருள்ளவைகளிலே சிலவற்றிற்கும் உயிரில்லாதவைகளுக்கும் இல்லாமையால் அப்பகுப்பொழித்து எல்லாவற்றிற்கும் பொருந்த ஒற்றென்றார். (சு)

F. திணைபால்களுக்குப் புறனடை:—A REMARK ON THE PERSONAL AND IMPERSONAL CLASSES, AND THEIR SUB-DIVISIONS, (EPICENES.)

264. பெண்மைவிட் டாணவா வுவபே டாண்பால்
ஆண்மைவிட் டல்ல தவாவுவ பெண்பால்
இருமையு மஃறிணை யன்னவு மாகும்.

(இ - ள்.) பெண்மை விட்டு ஆண் அவாவுவ - பெண் தன்மையைவிட்டு ஆண்தன்மையை அவாவுவனவாகிய, பேடு - பேடுகள், ஆண்பால் - உயர்திணை ஆண்பாலாகும்; ஆண்மைவிட்டு

அல்லது அவாவுவ - ஆண்தன்மையைவிட்டு பெண்தன்மையை அவாவுவனவாகிய, (பேடு)-பேடுகள், பெண்பால் - உயர்திணைப் பெண்பாலாகும்; இருமையும - இவ்விருவகைப் பேடுகளும் அஃறிணை அன்னவும் ஆகும் - அஃறிணையை ஒப்பனவும் ஆகும், எ-று.

(உ-ம்.) "பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ
கண்ணவாத் தக்க கலம்."

எனப் பெண்ணிலக்கணஞ் சிறந்தமையினாலே பெண்பாற் பட்டது.

ஆண்பாற் பட்டதற்கும் அஃறிணையையொத்து நின்றதற்கும் இலக்கியம் வந்தவழிக் காண்க.

'பெண்ணவாய் ஆணிழந்தது பேடு; பிருகந்நளை முதலியோர்.

ஆணவாய் பெண்மை இழந்தது அலி - இதனைப் பேடும் என்பர் ஒற்றுமைநயத்தால்; சிகண்டி முதலியோர்.()

உணர்த்துதல்:—WORDS IN THE THREE PERSONS EXPRESS THEIR RESPECTIVE PERSON, CLASS, GENDER AND NUMBER.

265 படர்க்கை வினைமுற்று நாமங் குறிப்பின்
பெறப்படுந் திணைபா லனைத்து மேனை
இடத்தவற் றொருமைப் பன்மைப் பாலே.

(இ-ள்.) படர்க்கை வினைமுற்று நாமம - படர்க்கை வினைமுற்றுச் சொல்லையும் படர்க்கைப் பெயர்ச்சொல்லையும், குறிப்பின் - (முன்) குறித்தால், திணை பால் அனைத்தும் பெறப்படும்- இருதிணை ஐம்பாலும் (பின் அவ்விருவகைச் சொல்லாலும்) பெறப்படும்; ஏனை இடத்து - ஒழிந்த தன்மை முன்னிலைகளில், (வினைமுற்று நாமம் குறிப்பின்) - வினைமுற்றுச் சொல்லையும் பெயர்ச்சொல்லையும் (முன்) குறித்தால், அவற்று ஒருமை பன்மை பால் - அவ்விருதிணை ஐம்பாலுள் ஒருமைப்பாலும் பன்மைப்பாலும், (பெறப்படும்) - அந்நால்வகைச் சொல்லாலும் பின் பெறப்படும், எ-று.

207

(உ-ம்.)

நடந்தான் நடந்தாள் நடந்தார் நடந்தது நடந்தன.	படர்க்கை வினைமுற்று.	முன்பு தம்மை யுணர்த்திப் பின்பு இருதிணை யைம்பாலையு முணர்த்தின.
அவன் அவள் அவர் அது அவை.	படர்க்கைப் பெயர்.	
நடந்தேன் நடந்தேம்.	தன்மை வினைமுற்று.	முன்பு தம்மையுணர்த்திப் பின்பு ஒருமைப் பாலையும் பன்மைப் பாலையு முணர்த்தின.
யான் யாம்.	தன்மைப் பெயர்.	
நடந்தாய் நடந்தீர்.	முன்னிலை வினைமுற்று.	
நீ நீர்.	முன்னிலைப் பெயர்.	

மூவிடங்களி லொன்றற் குரிய வினைமுற்றும் பெயரும் தம்மையும் பொருளையும் இப்படி யுணர்த்துமெனவே, இவ்விடங்களுக்குப் பொதுவாகிய வினைமுற்றுகளும் பெயர்களும் பொதுமை நீங்கி ஓரிடத்திற் குரியவாகியும், எச்சவினை முதலியனவும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயர்வினைகளைச் சார்ந்தும், இப்படியே தம்மையும் பொருளையும் உணர்த்துமெனக் கொள்க. (அ)

M. F. மூவிடம்:—THE THREE PERSONS.

266. தன்மை முன்னிலை படர்க்கை மூவிடனே.

(இ-ள்.) மூவிடன் - மூவிடங்களாவன, தன்மை முன்னிலை படர்க்கை - தன்மை முன்னிலை படர்க்கைகளாம், எ-று.

(உ-ம்.)

(பெயர்.)	(வினை.)	
யான் யாம்	வந்தேன் வந்தோம்.	தன்மை.

நீ	வந்தாய்	முன்னிலை.
நீர்	வந்தீர்.	
அவன்	வந்தான்	படர்க்கை.
அவள்	வந்தாள்	
அவர்	வந்தார்	
அது	வந்தது	
அவை	வந்தன.	

(௬)

M. F. வழக்கு:—PROSE DEFINED.

267 இலக்கண முடைய திலக்கணப் போலி
மரூஉ வென்றாகு மூவகை யியல்பும்
இடக்க ரடக்கன் மங்கலங் குழூஉக்குறி
எனுமுத் தகுதியோ டாறும் வழக்கியல்.

(இ - ள்.) இலக்கணமுடையது - இலக்கணவழியால் வருவதும், இலக்கணப்போலி - (இலக்கணமில்லையாயினும்) இலக்கணமுடையதுபோல வருவதும், மரூஉ - (இலக்கணஞ் சிதைந்து) மருவியதும், என்று ஆகும் மூவகை இயல்பும் - என்று வழங்குகிற மூவகை இயல்பு வழக்கும், இடக்கரடக்கல்-சொல்லத்தகாததை மறைத்துச் சொல்வதும், மங்கலம் - (மங்கலமில்லாததை ஒழித்து) மங்கலமாகக் கூறுவதும், குழூஉக்குறி - ஒரு கூட்டத்திலுள்ளோரா (யாதாயினு மொருகாரணத்தால் ஒரு பொருளினது சொற்குறியை ஒழித்து) வேறொரு சொற்குறியாற் கூறுவதும், எனும் முத் தகுதியோடு - என்று வழங்குகின்ற மூன்று தகுதிவழக்குடனே, வழக்கு இயல் ஆறும் - வழக்கிலக்கணம் ஆறாகும், எ-று.

(உ - ம்.)

இயல்புவழக்கு.

இலக்கண முடையன.	நிலம், நீர், தீ, காற்று, வானம், நானிலம், தண்ணீர், வெந்நீர் முதலியன.
இலக்கணப் போலி.	முன்றில் = இல் முன்
	புறநகர் = நகர்ப்புறம்
	மீகண் = கண்மீ
	கோயில் = கோவில்.

மரூஉ.	அருமந்தபிள்ளை	= அருமருந் தன்னபிள்ளை
	மலாடு	= மலையமாநாடு
	சோணாடு	= சோழநாடு
	பாண்டிநாடு	= பாண்டியநாடு
	அந்த, இந்த	= அ, இ (சுட்டு)
	மராடி	= மரவடி
	குளாம்பல்	= குளவாம்பல்
	ஆர்	= யார்
	தஞ்சை	= தஞ்சாவூர்
	புதுவை	= புதுச்சேரி.

தகுதிவழக்கு.

இடக்கரடக்கல்.	கால்கழீஇவருதும்	= மலங்கழுவிவருதும்
	ஆமுன்பகரவீ	= ஆப்பீ
	பவ்வீ	= பீ.
மங்கலம்.	துஞ்சினார்	= செத்தார்
	திருமுகம்	= ஓலை
	வெள்ளாடு	= காராடு.
குழூஉக்குறி.	பறி	= பொன் (பொற்கொல்லர்)
	காரை	= ஆடை (யானைப்பாகர்)
	சொல்விளம்பி	= கள். (வேடர்) (௬0)

செய்யுள்:—POETRY DEFINED.

268. பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்.

(இ-ள்) பல் வகை தாதுவின் - (தோல் இரத்தம் இறைச்சி மேதை எலும்பு மச்சை சுவேதநீர் என்கிற) எழுவகைத் தாதுக்களினாலே, உயிர்க்கு உடல் போல் - உயிர்க்கு (இடமாகச் செய்யப்பட்ட) உடம்புபோல, பல சொல்லால் - இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்கிற) நால்வகைச் சொற்களால், பொருட்கு இடன் ஆக - பொருளுக்கு இடமாக, உணர்வினின் வல்லோர் - கல்வியறிவினால் (செய்யுள் செய்ய) வல்லவர், அணி பெற செய்வன - அலங்காரம் பெற உண்டாக்குவன - செய்யுளாம், எ-று.

இப்படிச் சொல்லவே எழுத்தாலானது சொல்லாதலால் எழுத்து சொல் பொருள் அணி நான்கினாலும் உண்டாவது செய்யுளென்பதாயிற்று.

(உ-ம்.)

"வருங்குன்ற மொன்றுரித் தோன்றில்லை யம்பல வன்மலயத்
திருங்குன்ற வாண ரிளங்கொடி யேயிட ரெய்தலெம்மூர்ப்
பருங்குன்ற மாளிகை நுண்கள பத்தொளி பாயநும்மூர்க்
கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுக மேய்க்குங் கனங்குழையே."

இக்கட்டளைக்கலித்துறை இடமணித்தென்கிற பொருளுக் கிடமாகித் தன்மையுவமையுருவக அணிகளும் பிறவுமுடைத்தாய் வருதல்காண்க. மற்றவைகளுமிப்படியே. (கக)

ரு. குறிப்பும் வெளிப்படையும்:—AMBIGUOUS AND UNAMBIGUOUS (OR INDIRECT AND DIRECT) EXPRESSIONS.

269. ஒன்றொழி பொதுச்சொல் விகாரந் தகுதி
ஆகு பெயரன் மொழிவினைக் குறிப்பே
முதலொகை குறிப்போ டின்ன பிறவும்
குறிப்பிற் றருமொழி யல்லன வெளிப்படை.

(இ-ள்) ஒன்றொழி பொதுச்சொல் - (இருதிணை ஆண்பெண்ணுள்) ஒன்றனை யொழிக்கும் பொதுச்சொல்லும், விகாரம் - (வலித்தல் மெலித்தன் முதலாகிய ஒன்பதுவகை) விகாரச் சொற்களும், தகுதி - (மூவகைத்) தகுதிவழக்குச்சொற்களும், ஆகுபெயர் - ஆகுபெயர்ச்சொல்லும், அன்மொழி - அன்மொழித்தொகைச் சொல்லும், வினைக்குறிப்பு - குறிப்புவினைச் சொல்லும், முதல் - முதற் குறிப்புச்சொல்லும், தொகை - தொகைக் குறிப்புச் சொல்லும், குறிப்பு - (இம்முதலொகை யல்லாத பலவழியாலும் வருங்) குறிப்புச்சொல்லும், இன்ன பிறவும் - இவை போல்வன பிறவும், குறிப்பின் தரு மொழி - குறிப்பினால் (இருதிணை ஐம்பாற் பொருள்களையுந்) தருகிற சொற்களாம்; அல்லன - (இவை) அல்லாதனவெல்லாம், வெளிப்படை (தருமொழி) - வெளிப்படையால் அப்பொருளைத் தருகிற சொற்களாம். எ-று.

ஆயிரமக்கள்பொருதார்,—இதில் மக்கள் என்கிற பொதுப் பெயரும், பொருதார் என்கிற பொதுவினையும் உயர் திணைப் பெண்பாலையொழித்து ஆண்பாலைக் காட்டின,

குறுத்தாட்பூதம், மரைமலர்,—இவ்விகாரச்சொற்கள் குறுந் தாட்பூதம், தாமரை, என்பவற்றைக் குறிப்பினாற் காட்டின.

கால்கழீஇவருதும், திருமுகம், பறி—இம்மூவகைத் தகுதி வழக்குகள், மலங்கழுவிவருதும், ஓலை, பொன் என்பவற்றைக் குறிப்பா லுணர்த்தின.

புளிதின்றான், கடுத்தின்றான், — இவ்வாகுபெயர்கள் அவற்றின் பழத்தைக் குறிப்பா லுணர்த்தின.

பொற்றொடிதந்த புனைமடல் — இங்கே பொற்றொடி என்கிற அன்மொழித்தொகை அதனையுடையாளைக் குறிப்பா லுணர்த்திற்று.

இவனிப்போது பொன்னன்,—இங்கே பொன்னன் என்கிறது பெயர்ப்பொருளை யொழித்து வினைக்குறிப்புப் பொருளைக் குறிப்பா லுணர்த்திற்று.

'அறத்தாறிதுவென வெள்ளைக்கிழிப்'— இங்கே இம்முதற் குறிப்பு 'அறத்தாறிதுவென வேண்டாசிவிகை-பொறுத் தானோ டூர்ந்தானிடை' என்கிற பாட்டைக் குறிப்பா லுணர்த்திற்று.

'அலங்குளைப்புரவியைவரொடுசினைஇ'—இங்கே ஐயவர் என்கிற தொகைக்குறிப்பு பாண்டவரைக் குறிப்பா லுணர்த்திற்று.

கற்கறித்து நன்கட்டாய், பாயாவேங்கை, "உவர்க்கடலன்ன செல்வருமுளரே - கணற்றூற்றன்ன நீயுமாருளையே" "பல்சான்றீரோ பல்சான்றீரே கயன்முள்ளன்ன நரைமுதிர்திரைகவுட் - பயனின் மூப்பிற் பல்சான்றீரோ"— இவை முதலானவையெல்லாம் பலவழியாலும் வருங் குறிப்புச்சொற்கள்.

இன்னபிறவு மென்றதால் 'தெரிநிலைவினைக் குறிப்புவினையாலணையும்பெயர்களும், வினைமுற்றுங் குறிப்புமுற்றும் வருமெச்சங்களும், செய்யுமென்முற்றும், 'கேட்குநபோல' முதலியவாக அஃறிணையிடத்துச் சொல்லப்படுவனவும், ஆகிய வினை முதலானவை குறிப்பாற் பொருளுணர்த்துமெனக் கொள்க.

இப்படி யல்லாமல், நிலம், நீர், தீ, காற்று, வானம் என வருவன வெளிப்படையாற் பொருளுணர்த்துவனவாம். (கஉ)

உ. சொல்லின் பிரிவு.
KINDS OF WORDS.

M. F. சொற்களின் வகை:—PARTS OF SPEECH.

270. அதுவே,
இயற்சொற் றிரிசொ லியல்பிற் பெயர்வினை
எனவிரண் டாகு மிடையுரி யடுத்து
நான்குமாந் திசைவட சொலணு காவழி.

(இ - ள்.) அது - (முன்னே) காட்டிய சொல், இயற்சொல் திரிசொல் இயல்பின் - இயற்சொல்லும் திரிசொல்லும் (என்கிற) தன்மையையுடைய, பெயர் வினை (சொல்) - பெயர்ச் சொல்லும் வினைச்சொல்லும், என இரண்டாகும் - என்று இரண்டாகும்; இடை உரி (சொல்) - இடைச்சொல்லும் உரிச் சொல்லும், அடுத்து - (அவற்றுடன்) சேர்ந்து, நான்கும் ஆம் - நான்குமாகும்; திசை வடசொல் - திசைச்சொல்லும் வட சொல்லும், அணுகாவழி-(அவற்றுடன்) சேராதவிடத்து, எ-று.

அதுவே யெனக் குறித்த சொல்—பெயரியற்சொல், பெயர்த் திரிசொல், வினையியற்சொல், வினைத்திரிசொல், இடையியற் சொல், இடைத்திரிசொல், உரியியற்சொல் உரித்திரிசொல் என எண்வகைப் படுமென்றும், திசைச்சொல்லும், வடசொல்லும் சேர்ந்தவிடத்துப் பத்துவகைப்படுமென்று மாம். (கங)

F. M. இயற்சொல்:—UN-EQUIVOCAL (OR NATURAL) WORDS.

271. செந்தமி ழாகித் திரியாது யார்க்கும்
தம்பொருள் விளக்குந் தன்மைய வியற்சொல்.

(இ - ள்.) செந்தமிழ் ஆகி - செந்தமிழ் நிலத்துமொழி யாகி, திரியாது - திரிசொற்போலாகாது, யார்க்கும் - கற்றோருக்குங் கல்லாதோருக்கும், தம் பொருள் விளக்கும் - தம்பொருளை யொப்ப விளக்குகின்ற, தன்மைய - தன்மையையுடைய (உலக வழக்கே), இயற்சொல் - இயற்சொல்லாகும், எ-று.

பெயரியற்சொல் — மண் பொன், மரம்.

வினையியற்சொல் —நடந்தான், வந்தான்.

இடையியற்சொல்— அவனை, அவனால் என்பவைகளி லே வந்த ஐ ஆல் என்னும் வேற்றுமையுருபுகள்.

உரியியற்சொல் — அழகு, அன்பு முதலானவை.

செந்தமிழ் நாடாவது பாண்டியநாடு. (௧௪)

M. F. திரிசொல்:—EQUIVOCAL (OR VARIABLE) WORDS.

272. ஒருபொருள் குறித்த பலசொல் லாகியும்
பலபொருள் குறித்த வொருசொல்லாகியும்
அரிதுணர் பொருளன திரிசொல் லாகும்.

(இ - ள்) ஒருபொருள் குறித்த பலசொல் ஆகியும் - ஒரு பொருளைக் கருதிய பலசொற்களாகியும், பலபொருள் குறித்த ஒருசொல் ஆகியும் - பலபொருள்களைக் கருதிய ஒருசொல் லாகியும், அரிது உணர் பொருளன - அரிதாகக் கற்றோர் அறி தின்ற பொருளினவாய் வருவன, திரிசொல் ஆகும் - திரி சொல்லாகும், எ-று.

'அரிதுணர் பொருளன' என்றதனால் ஒருபொருள் குறித்த பலசொற்களினும் பலபொருள் குறித்த ஒரு சொற்களினும் இயற்சொல் லொழியக் கொள்க.

கிள்ளை, சுகம், தத்தை—இவை கிளி என்கிற ஒருபொருள் குறித்த பலபெயர்த் திரிசொல்.

வாரணம்—இது யானை கோழி சங்கு முதலாகிய பலபொருள் குறித்த ஒருபெயர்த் திரிசொல்.

படர்ந்தான், சென்றான். { இவை போயினான் என்கிற ஒருபொருள் குறித்த பலவி னைத் திரிசொல்.

வணர்ந்தான் { இது எழுதினான் நீக்கினான் கொண்டான் என்கிற பலபொ ருள் குறித்த ஒருவினைத் திரி சொல்.

சேறும், வருதும்	இவற்றினுடைய றும், தும் விகுதிகள் தன்மைப் பன்மை யெதிர்காலம் என்கிற ஒருபொருள் குறித்த பல இடைத்திரி சொல்.
கொல்.	இது ஐயம் அசைநிலை என்கிற பலபொருள் குறித்த ஓர் இடைத்திரிசொல்.
சால, உறு, தவ, நனி, கூர், கழி.	இவை மிகல் என்கிற ஒரு பொருள் குறித்த பல உரித் திரிசொல்.
கடி.	இது, காப்பு, கூர்மை, அச்சம், கரிப்பு, விளக்கம், சிறப்பு, மணம் முதலிய பல பொருள் குறித்த ஓருரித் திரி சொல்.

மற்றவையு மிப்படியே வருதல் காண்க. (கரு)

F. திசைச்சொல்:—PROVINCIALS.

273. செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரண்டினிற் றமிழொழி நிலத்தினும்
தங்குறிப் பினவே திசைச்சொ லென்ப.

(இ-ள்.) செந்தமிழ் நிலம் சேர் பன்னிரு நிலத்தினும் - செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு (கொடுந்தமிழ்) நிலங்களிலும், ஒன்பதிற்று இரண்டினில் - பதினெண் மொழிகளுள், தமிழ் ஒழி நிலத்தினும் - தமிழ் நிலமானது ஒழிந்த மற்ற நிலங்களினு முள்ளோர், தங்குறிப்பின - தங்குறிப்பினவாய் (அத்திசைகளினின்றுஞ் செந்தமிழ் நிலத்து வந்து) வழங்குவன, திசைச்சொல் என்ப - திசைச்சொல்லென்று சொல்லுவர் புலவர், எ-று.

கஉ - கொடுந்தமிழ்நாடாவன.

"தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி
பன்றி யருவா வதன்வடக்கு - நன்றாய
சீத மலாடு புனனாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்."

தென்பாண்டி நாட்டார்—ஆவினைப் பெற்றம் என்பர்.
குட்டநாட்டார்—தாயைத் தள்ளை என்பர்.
குடநாட்டார்—தந்தையை அச்சன் என்பர்.
கற்காநாட்டார்—வஞ்சரைக் கையர் என்பர்.
வேணாட்டார்—தோட்டத்தைக் கிழார் என்பர்.
பூழிநாட்டார்—சிறுகுளத்தைப் பாழி என்பா.
அருவாநாட்டார்—செறுவைச் செய் என்பா.
அருவாவடதலையார்—புளியை எகின் என்பர்.
சீதநாட்டார்—தோழனை எலுவன் என்பர்.
மலைநாட்டார்—நன்னீரை வெள்ளம் என்பர்.
புனனாட்டார்—அம்மானை அம்மாஞ்சி என்பர்.

இவைமுதலானவையும் தமிழும் மேற்கூறும் வடமொழியும் ஒழிந்த பதினெழுநிலத்து மொழிகளு ளேற்பனவுஞ் செந்தமி ழோடு கலந்து வருதல் காண்க.

தமிழொழிந்த கஎ - நிலமாவன.

"சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந் துளுக்குடகங்
கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலுங்கங் கலிங்கம்வங்கங்
கங்க மகதங் கராடங் கவுடங் கடுங்குசலந்
தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி னேழ்புவி தாமிவையே."

அந்தோ என்பது சிங்களச்சொல், எருத்தைப் பாண்டிலென் பது தெலுங்குச்சொல், மாமரத்தைக் கொக்கு என்பது துளு வச்சொல் மற்றவை வந்தவழிக்காண்க. (கசு)

F. வடசொல்:—SANSCRIT DERIVATIVES.

274. பொதுவெழுத் தானுஞ் சிறப்பெழுத் தானும்
ஈரெழுத் தானு மியைவன வடசொல்.

(இ - ள்) பொது எழுத்தானும் - (ஆரியத்திற்குந் தமிழிற் கும்) பொதுவெழுத்தாலும், சிறப்பு எழுத்தானும் - (ஆரியத் திற்கே உரிய) சிறப்பெழுத்துத் திரிந்த வெழுத்தாலும், ஈர் எழுத்தானும் - இவ்விரண்டெழுத்தினாலும், இயைவன - (செந் தமிழ்ச்சொல்லை ஒப்பனவாகி வடதிசையிலிருந்து செந்தமிழ் நிலத்து வந்து) வழங்குவன, வடசொல் - வடசொல்லாம். எ-று.

(உ-ம்.)

அமலம், கமலம், காரணம், காரியம். } இவை பொது வெழுத் தா லியைந்தன.

சுகி, போகி, சுத்தி	இவை சிறப்பெழுத்தா லியைந்தன.
அரன், அரி, கடினம், சலனம்.	இவை ஈரெழுத்தாலு மியைந்தன. (கஎ)

ந. பெயர்ச்சொல்.

NOUN.

M F. பெயர்:—NOUN DEFINED.

275. இடுகுறி காரண மரபோ டாக்கம்
தொடர்ந்து தொழிலல காலந் தோற்றா
வேற்றுமைக் கிடனாய்த் திணைபா லிடத்தொன்
றேற்பவும் பொதுவு மாவன பெயரே.

(இ - ள்.) இடுகுறி காரண (க்குறி) - இடுகுறியும் காரணக் குறியும், மரபோடு ஆக்கம் - மரபினையும் ஆக்கப்பாட்டினையும், தொடர்ந்து - தொடர்ந்து, தொழில் அல - வினையாலணையும் பெயராகிய காரணக்குறி யல்லாதவை, காலம் தோற்றா - காலத்தைக் காட்டாமல், வேற்றுமைக்கு இடனாய் - எட்டுவேற்றுமையுஞ் சார்தற்கு இடமாகி, திணை பால் இடத்து - இருதிணை ஐம்பால் மூவிடங்களில், ஒன்று ஏற்பவும் - ஒன்றனை ஏற்பனவும், பொதுவும் ஆவன - பலவற்றினை ஏற்பனவும் ஆகி வருவன, பெயர் - பெயர்களாம், எ-று.

(உ - ம்.)

மரம், விளா, பனை, ஆண், பெண், தெங்கு, கமுகு.	இவைமுதலானவை இடுகுறி மரபு.
அவன், அவள் காளை, காரிகை, பறவை, விலங்கு.	இவை முதலானவை காரணக் குறி மரபு.

"பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
யென்பேதை செல்லற் கியைந்தனளே - மின்போலு
மானவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போங்
கானவேன் முட்டைக்குங் காடு."

இப்பொய்யாமொழிப் புலவன் பாட்டினுள் குமரன் றன்பெயர் "முட்டை" என்று பாடச்சொல்லுதல்	இது முதலானவை இடுகுறி யாக்கமாம்.

217

பொன்னன், பூணன், பல்லன், உதடன், கூனன், "மலைமகன் மகனே மாற்றோர் கூற்றே"	இவை முதலானவை காரணக்குறியாக்கம்.
நடந்தவனை, நடந்தோனை, படித்தவனை, படித்தானை.	இவை முதலாகிய வினையாலணையும் பெயர்களாகிய காரணக்குறி காலங்காட்டும்.

மரம், பனை முதலாகிய இடுகுறிப்பெயரும் அவன், அவள் முதலாகிய காரணப்பெயரும் அவ்விலக்கணங்களோடு தோற்றிய பொருள்களுக்கெல்லாந் தொன்றுதொட்டு மரபுபற்றி வருவன. முட்டை முதலாகிய இடுகுறிப்பெயரும், பொன்னன் முதலாகிய காரணப்பெயரும், நடுவிலே ஒருவரால் ஆக்கப்பட்டு வருவனவாம். (கஅ)

உயர்திணை ஆண்பாற்பெயர்:—MASCULINE NOUNS.

276. அவற்றுள்,
கிளையெண் குழூஉமுதற் பலபொரு டிணைதேம்
ஊர்வா னகம்புற முதல நிலன்யாண்
டிருது மதிநா ளாதிக் காலம்
தோள்குழன் மார்புகண் காது முதலுறுப்
பளவறி வொப்பு வடிவு நிறங்கதி
சாதி குடிசிறப் பாதிப் பல்குணம்
ஓத லீத லாதிப் பல்வினை
இவையடை சுட்டு வினாப்பிற மற்றோ
டுற்றனவ் வீறு நம்பி யாடூஉ
விடலை கோவேள் குரிசி றோன்றல்
இன்னன வாண்பெய ராகு மென்ப.

(இ - ள்.) அவற்றுள் - மேலே பெயரென்றவற்றுள், கிளை - சுற்றமும், எண் - எண்ணும், குழூஉ - கூட்டமு, முதல் பல பொருள் (ஓடு) - முதலாகிய பலபொருள்களோடும், திணை - ஐந்திணையும், தேம் - தேயமும், ஊர் - ஊரும், வான் - வானும், அகம் - அகமும், புறம் - புறமும், முதல் - முதலியனவாகிய, நிலன் (ஓடு) - இடங்களோடும், யாண்டு - வருடமும், இருது - பருவமும், மதி - மாதமும், நாள் - நட்சத்திரமும்,

ஆதி காலம் (ஓடு) - முதலாகிய காலங்களோடும், தோள் - புயமும், குழல்-மயிரும் மார்பு-மார்பும், கண் - கண்ணும், காது - காதும், முதல் உறுப்பு (ஓடு) - முதலாகிய அவயவங்களோடும், அளவு - அளவும், அறிவு - அறிவும், ஒப்பு - ஒப்பும், வடிவு-வடிவும், நிறம் - நிறமும், கதி - நாற்கதியும், சாதி - குலமும், குடி - குடியும், சிறப்பு - சிறப்பும், ஆதி பல் குணம் (ஓடு) - முதலாகிய பலகுணங்களோடும், ஓதல் - ஓதுதலும், ஈதல் - கொடுத்தலும், ஆதி பல் வினை (ஓடு) - முதலாகிய பலதொழில்களோடும், இவை அடை - இவற்றை அடைந்த, சுட்டு வினா பிற மற்றோடு - சுட்டும் வினாவும் பிறவும் மற்றும் ஆகிய நான்கனோடும், உற்ற - பொருந்திய, ன ஈறு - னகர மெய்யீற்றுப் பெயர்களும், நம்பி ஆடூஉ விடலை கோ வேள் குரிசில் தோன்றல் - நம்பி முதலாகச் சொல்லப்பட்ட இவ்வேழுபெயர்களும், இன்னன-இவைபோல்வன பிறவும், ஆண்பெயா ஆகும் எனப-(உயர்திணை) ஆண்பாற் பெயாகளாகும் என்று சொல்லுவர் புலவர், எ-று.

க. பொருட்பெயர்.	தமன், நமன் நுமன், எமன், தம்மான், நம்மான், நும்மான், எம்மான்,	கிளை	என்பவற்றுள் வருபெயர்கள்.
	ஒருவன்	எண்	
	அவையத்தான், வலங்கையான், இடங்கையான்.	குழூஉ	
	பொருளன், பொன்னன், முடியன், குழையன், வில்லன், மாலையன்.	பிறபொருள்	
உ. இடப்பெயர்.	வெற்பன், பொருப்பன், சிலம்பன். (குறிஞ்சி)	திணை	
	மறவன் எயினன். (பாலை)		
	இடையன், ஆயன், முல்லையான். (முல்லை)		
	ஊரன், மகிழ்நன், மள்ளன். (மருதம்)		
	சேர்ப்பன், துறைவன், கரையான். (நெய்தல்)		
	சோழியன். கொங்கன், சீனத்தான்.	தேயம்	

	கருவூரான், மதுரையான், சிற்றூரான்.	ஊர்
	வானத்தான்	வான்
	அகத்தான்	அகம்
	புறத்தான்	புறம்
	மண்ணகத்தான், பாதலத்தான்.	பிறவிடங்கள்
௩. காலப்பெயர்.	மூவாட்டையான், ஐயாண்டினன், பிரபவன்.	வருடம்
	வேனிலான், காரான்	பருவம்
	தையான், மாசியான், சித்திரையான்.	மாதம்
	ஆதிரையன், ஓணத்தான், விசாகத்தான்.	நக்ஷத்திரம்
	நெருநலான, காலையான், மாலையான்.	பிறகாலம்
௪. சினைப்பெயர்.	திணிதோளன் (தோள்)	தோள் முதலிய உறுப்புகள்
	செங்குஞ்சியான் (குழல்)	
	வரைமார்பன் (மார்பு)	
	செங்கண்ணன் (கண்)	
	குழைக்காதன். (காது)	
	குறுந்தாளன் (பாதம்)	பிற உறுப்புகள்
	நெடுங்கையன் (கரம்)	
	மதிமுகத்தான் (முகம்)	
	மூக்கன் (மூக்கு)	
	பல்லன் (பல்)	
	உதடன் (உதடு)	
௫. குணப்பெயர்.	பெரியன், சிறியன்.	அளவு
	அறிஞன், புலவன்.	அறிவு
	பொன்னனையான், மணியனையான், மடங்கலேறனையான்.	ஒப்பு
	கூனன், குறளன், முடவன்.	வடிவு
	கரியன், செய்யான், மாநிறத்தான்.	நிறம்
	மானுடன், தேவன், நரகன், நாகன்.	கதி

என்பவற்றால் வரும் பெயர்கள்.

	அந்தணன், அரசன், வணிகன், வேளாளன், சூத்திரன், குயவன்.	சாதி	என்பவற்றால் வருபெயர்கள்.
	சேரன், சோழன், பாண்டியன், இரகுவமிசத்தான், குருகுலத்தான்.	குடி	
	ஆசிரியன், படைத்தலைவன்,	சிறப்பு	
	நல்லன், தீயன், நெடியன், கொடியன், குரூரன்.	பிறகுணங்கள்	
சு. தொழிலால்வருபெயர்.	ஓதுவான்	ஓதல்	
	ஈவான்	ஈதல்	
	கணக்கன், தச்சன், தட்டான், கொல்லன், கருமான், உறங்குவான்.	பிறதொழில்	
எ. சுட்டு வினா பிறமற்று என்பவற்றால் வருபெயர்.	அவன் இவன், உவன்	சுட்டு	
	எவன், ஏவன், யாவன்.	வினா	
	பிறன், மற்றையான்.	பிற மற்று.	

அ. நம்பி முதலாகிய ஏழுபெயர்களும் உரைக்கிடையிற் காண்க.

இன்னன என்றதனால் வில்லி, வாளி, கிள்ளி, சென்னி, ஏந்தல், செம்மல், ஏனாதி, காவிதி, குடுமி, தோன்றல், அண்ணல், என உயர்திணை யாண்பாற் பொருள் குறித்து வருவன வெல்லாங் கொள்க. (கக)

உயர்திணைப் பெண்பாற்பெயர்:—FEMININE NOUNS.

277. கிளைமுத லாகக் கிளந்த பொருள்களுள்
ளவ்வொற் றிகரக் கேற்ற வீற்றவும்
தோழி செவிலி மகடூஉ நங்கை
தையலோ டின்னன பெண்பாற் பெயரே.

(இ-ள்.) கிளை முதலாக கிளந்த - (முன் சூத்திரத்திலே) சுற்றம் முதலாகப் பகுத்துச் சொல்லப்பட்ட, பொருள்களுள் - (அறுவகைப்) பொருள்களுள்ளும், (இடைச் சொற்களுள்ளும் ஒன்றினடியாகப்பிறந்த) ள ஒற்று இகரக்கு - ளகர மெய்யும் இகரவுயிரும், ஏற்ற - (பொருந்துதற்கு) தக்க, ஈற்ற

வும், ஈற்றுப்பெயர்களும், தோழி செவிலி மகளே நங்கை தைய லோடு-தோழி முதலாக எடுத்துச்சொல்லப்பட்ட ஐந்துபெயர்களும் ஆகிய இவற்றுடனே, இன்னன-இவைபோல்வன பிறவும், பெண்பாற் பெயர்-உயர்திணைப் பெண்பாற்பெயர்களாம், எ-று.

(உ-ம்.)

க. பொருட்பெயர்.	தமள், நமள், நுமள், எமள்.	கிளை
	ஒருத்தி	எண்
	அவையத்தாள், அவையத்தி.	குழூஉ
	பொன்னாள், பொன்னி.	பிறபொருள்
உ. இடப்பெயர்.	குறத்தி, எயிற்றி, ஆய்ச்சி உழத்தி, கரையாத்தி.	ஐந்திணை
	சோழிச்சி, மலையாளத்தி	தேயம்
	கருவூராள், கருவூரி.	ஊர்
	வானத்தாள், வானத்தி	வான்
	அகத்தாள், அகத்தி.	அகம்
	புறத்தாள், புறத்தி	புறம்
	மண்ணகத்தாள், மண்ணகத்தி.	பிறவிடம்
ங. காலப்பெயர்.	மூவாட்டையாள்	ஆண்டு
	வேனிலாள்	பருவம்
	தையாள், மாசியாள்	மாதம்
	ஆதிரையாள்	நக்ஷத்திரம்
	நெருநலாள்	பிறகாலம்
ச. சினைப்பெயர்.	திணிதோளாள், திணிதோளி.	தோள்
	சுரிகுழலாள், சுரிகுழலி.	குழல்
	நெடுமார்பாள், நெடுமார்பி.	மார்பு
	தடங்கண்ணாள், தடங்கண்ணி.	கண்
	குழைக்காதாள், குழைக்காதி.	காது
	குறுந்தாளாள், குறுந்தாளி, மதிமுகத்தி, மூக்கி, பல்லி.	பிறவுறுப்பு
ரு. குணப்பெயர்.	பெரியள்	அளவு
	புலமையாள்	அறிவு
	பொன்னனையாள்	ஒப்பு
	கூனள், கூனி.	வடிவு
	கரியள்	நிறம்
	மானுடத்தி	கதி
	பார்ப்பினி, குயத்தி.	சாதி
	குறுக்கையள்	குடி
	படைத்தலைவி	சிறப்பு
	நல்லாள், தீயாள்.	பிறகுணம்

என்பவற்றால் வருபெயர்கள்.

222

௬. தொழிலால் வருபெயர்.	ஓதுவாள், ஈவாள் தச்சிச்சி, தட்டாத்தி.	தொழில்	என்பவற்றால் வருபெயர்கள்.
௭. சுட்டுப் பெயர்.	அவள், இவள், உவள்.	சுட்டு	
வினாப்பெயர்.	எவள், ஏவள், யாவள்.	வினா	
அ பிற, மற்று என்பவற்றால் வருபெயர்.	பிறள், மற்றையாள்.	பிற மற்று	

தோழி முதலிய ஐந்துபெயரும் உரைக்கிடையிற் காண்க. இன்னன என்றதனால் பேதை, பெதும்பை, செவிலி, இகுளை, மாது என உயர்திணைப் பெண்பால் குறித்து வருவனவெல்லாங் கொள்க, (௨௦)

உயர்திணைப் பலர்பாற்பெயர்:—PERSONAL PLURAL NOUNS.

278. கிளந்த கிளைமுத லுற்றரவ் வீற்றவும்
கள்ளெ னீற்றி னேற்பவும் பிறவும்
பல்லோர் பெயரின் பகுதி யாகும்.

(இ - ள்.) கிளந்த கிளை முதல் - முன்னே சொல்லப்பட்ட சுற்ற முதலாகிய அறுவகைப்பொருளையும்பிறவற்றையும், உற்ற - பொருந்திய, ர ஈற்றவும் - ரகரமெய் ஈற்றுப்பெயர்களும், கள் என் ஈற்றின் ஏற்பவும் - கள் என்னும் விகுதியை ஈறாகவுடைய பெயர்களுள் இவ்விடத்துக்குப் பொருந்திவருவனவும், பிறவும் - இவைபோல்வன பிறவும், பல்லோர் பெயரின் பகுதியாகும் - பலர்பாலின் பெயர்களாம், எ-று.

கள் விகுதி அஃறிணைப்பன்மைக்கும் வருதலால் ஏற்பவு மென்றார்.

(உ - ம்.)

க. பொருட் பெயர்.	தமர், நமர், நுமர், எமர், தம்மார், நம்மார், நும்மார், எம்மார்.	கிளை	என்பவற்றால் வரு பெயர்கள்.
	ஒருவர்	எண்	
	அவையத்தார், வலங்கையார், இடங்கையார்.	குழூஉ	
	பொருளர், பொன்னர், முடியார், குழையா, வில்லர், வாளர்.	பிறபொருள்	

உ. இடப்பெயர்.

பெயர்கள்		
வெற்பர், பொருப்பர், சிலம்பர்.	குறிஞ்சி	திணை
மறவர், எயினர்.	பாலை	திணை
இடையர், ஆயர்.	முல்லை	திணை
ஊரார், மகிழ்நர், மன்னர்.	மருதம்	திணை
சேர்ப்பர், துறைவர், கரையார்.	நெய்தல்	திணை

பெயர்கள்	
நிடதத்தார்.	தேயம்
பட்டணத்தார்.	ஊர்
வானத்தார்.	வான்
அகத்தார் புறத்தார்.	அகம்புறம்
மண்ணகத்தார்.	பிறபொருள்.

ங. காலப்பெயர்.

பெயர்கள்	
மூவாட்டையார், ஐயாண்டினர், பத்தாண்டினர்.	வருடம்
வேனிலார், காரார்.	பருவம்
தையார், மாசியார், சித்திரையார்.	மாதம்
ஆதிரையார், ஓணத்தார், விசாகத்தார்.	நக்ஷத்திரம்
நெருநலார், காலையார், மாலையார்.	பிறகாலம்

ச. சினைப்பெயர்.

பெயர்கள்		
திணிதோளர்	தோள்	தோள் முதலிய உறுப்பு
செங்குஞ்சியர்	குழல்	தோள் முதலிய உறுப்பு
வரைமார்பர்	மார்பு	தோள் முதலிய உறுப்பு
செங்கண்ணர்	கண்	தோள் முதலிய உறுப்பு
குழைக்காதர்	காது	தோள் முதலிய உறுப்பு
குறுந்தாளர்	பாதம்	பிற உறுப்பு
நெடுங்கையர்	கரம்	பிற உறுப்பு
மதிமுகத்தர்	முகம்	பிற உறுப்பு
மூக்கர்	மூக்கு	பிற உறுப்பு
பல்லர்	பல்	பிற உறுப்பு
உதடர்	உதடு	பிற உறுப்பு

என்பவற்றால் வருபெயர்கள்.

ரு. குணப்பெயர்.	பெரியர், சிறியர்.	அளவு	என்பவற்றூல் வருபெயர்கள்.
	அறிஞர், புலவர்.	அறிவு	
	பொன்னெப்பார், மணியனையார், மடங்கலேறனையார்.	ஒப்பு	
	கூனர், குறளர், முடவர்.	வடிவு	
	கரியர், செய்யார், மாணிறத்தார்.	நிறம்	
	மானுடர், நரகர், நாகர்.	கதி	
	அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், சூத்திரர், வண்ணா, குயவர்.	சாதி	
	சேரர், சோழா, பாண்டியர், இரகு வமிசத்தார், குருகுலத்தார்.	குடி	
	ஆரியர், படைத்தலைவர், எசமானர்.	சிறப்பு	
	நல்லர், தீயர், நெடியா, கொடியர், குரூரர்.	பிற குணங்கள்	
சு. தொழிலால்வருபெயர்.	ஓதுவார்	ஓதல்	
	ஈவார்	ஈதல்	
	கணக்கர், தச்சர், தட்டார், கொல்லர், கருமார், உறங்குவார்.	பிறதொழில்	
எ. சுட்டுப்பெயர்.	அவர், இவர், உவா.	சுட்டு	
வினாப்பெயா.	எவர். ஏவர், யாவர்.	வினா	
அ பிற மற்று என்பனவற்றால் வருபெயர்.	பிறர், மற்றையர்.	பிற மற்று	

கோக்கள், மனுக்கள், குருக்கள் எனப் பகுதிப்பொருள் விகுதியாகவும், தமர்கள், நமர்கள் என விகுதிமேல் விகுதியாகவும், கள் விகுதி வருமென்றறிக.

பிற என்றமையால், மாந்தர், மக்கள் எனப் பலர்பாலைக் குறித்து வருவனவெல்லாங் கொள்க. (உக)

அஃறிணை ஒன்றன்பாற்பெயர்:—SINGULAR IMPERSONAL NOUNS.

279 வினாச்சுட் டுடனும் வேறு மாம்பொருள்
ஆதி யுறுதுச் சுட்டணை யாய்தம்
ஒன்றனெண் ணின்னன வொன்றன் பெயரே.

(இ-ள்.) வினா சுட்டுடனும் - வினாவிலுஞ் சுட்டிலு மமைந்து அவற்றுடனாகியும், வேறுமாம் - (வினாவுஞ் சுட்டவும் படாது) வேறாகியும் வருகிற, பொருள் ஆதி - பொருளாதி ஆறனையும், உறு து-பொருந்திய துவ்விகுதி யீற்றுப்பெயரும், சுட்டு அணை ஆய்தம் - சுட்டோடுகூடிய ஆய்தத்தைப்பொருந்திய (துவ்விகுதி யீற்றுப்பெயரும்), ஒன்றன் எண் - ஒன்றென்கிற எண்ணுகு பெயரும், இன்னன - இவைபோல்வன பிறவும், ஒன்றன் பெயர் - அஃறிணை யொருமைப்பாற் பெயராகும், எ-று.

(உ - ம்.)

க வினாப் பெயர். — எது, ஏது, யாது.

சுட்டுப் பெயர். — அது, இது, உது.

உ பொருளாதி யறுவகைப் பெயர். —
குழையது, பொருளது. பொருள்
நிலத்தது, ஊரது. இடம்
மூலத்தது, ஓணத்தது. காலம்
கோட்டது, கண்ணது. சினை
குறியது, சிறியது. குணம்
ஆடலது, பாடலது. தொழில்

ங ஆய்தத்தோடு கூடிய சுட்டுப்பெயர். — அஃது, இஃது, உஃது.

ச எண்ணுப் பெயர். — ஒன்று.

இன்னன என்றமையால், பிறிது, மற்றையது அன்னது இன்னது என்பவை முதலாக அஃறிணைப் பொருளைக்குறித்து வருவனவெல்லாங் கொள்க. (உஉ)

அஃறிணைப் பலவின்பாற்பெயர்:—PLURAL IMPERSONAL NOUNS.

280. முன்ன ரவ்வொடு வருவை யவ்வும்
சுட்டிறு வவ்வுங் கள்ளிறு மொழியும்
ஒன்ற லெண்ணு முள்ள வில்ல
பல்ல சில்ல வுளவில பலசில
இன்னவும் பலவின் பெயரா கும்மே.

(இ - ள்.) முன்னர் அவ்வொடு - முன்னே சொல்லப்பட்ட வினாச் சுட்டுடனும் வேறுமாம் பொருளாதி ஆறனேடும், வரு - (ஏற்றபடி) வருகிற, வை (யும்) அவ்வும் - வை விகுதியீற்றுப் பெயர்களும் அகரவீற்றுப்பெயர்களும், கள் இறு மொழியும் - கள்ளென்னும் பகுதிப்பொருள் விகுதியீற்றுப் பெயர்களும், ஒன்று அல் எண்ணும் - ஒன்றல்லாத இரண்டு முதலாகிய எண்ணுப்பெயர்களும், உள்ள இல்ல பல்ல சில்ல உள இல பல சில - உள்ள என்பது முதலாகிய குறிப்புவினையாலணைந்த எட்டுப் பெயர்களும், இன்னவும் - இவைபோல்வன பிறவும், பலவின் பெயராகும் - அஃறிணைப் பன்மைப்பாற் பெயர்களாகும், எ-று.

(உ - ம்.)

(க) எவை, ஏவை, யாவை அவை, இவை, உவை குழையவை, நிலத்தவை மூலத்தவை, கோட்டவை, குறியவை, ஆடலவை.	வினா சுட்டு பொருளாதி ஆறு.	வை விகுதிப் பெயர்கள்.
(உ) பொருள, பொருளன அகத்த, அகத்தன மூலத்த, மூலத்தன கோட்ட, கோட்டன கரிய, கரியன ஓதுவ, ஓதுவன		அன் சாரியை பெற்றும் பெறாதும் வந்த அகர விகுதிப்பெயர்கள்.
(ங) அவ், இவ், உவ்		வகரமெய்யீற்றுச் சுட்டுப் பெயர்கள்.
(ச) யானைகள், குதிரைகள்		கள் விகுதிப் பெயர்கள்.
(ரு) இரண்டு, மூன்று, பத்து, நூறு		எண்ணுப்பெயர்கள்.

உள்ள முதலாகிய எட்டும் உரைக்கிடையிற்காண்க.

இன்னவும் என்றமையால், யா, பிற, மற்றைய என அஃறிணைப்பன்மைப்பொருள் குறித்து வருவனவெல்லாங் கொள்க.

இவ் வைம்பாற் பெயர்களுள், ஆண்பாற்பெயர்க்கு 'னவ்வீறு' எனவே அன், ஆன், மன், மான் ன் இவ்வைந்தும், பெண்பாற் பெயர்க்கு 'ளவ்வொற்று' எனவே அள், ஆள், ள் இம்மூன்றும், பலர்பாற்பெயர்க்கு 'ரவ்வீறு' எனவே அர், ஆர், மார், ர், இந்நான்கும் அடங்குத லறிக. (உ௩)

M. F. *பால்பகாவஃறிணைப்பெயர்:—COMMON IMPERSONAL NOUNS.

281. பால்பகா வஃறிணைப் பெயர்கள்பாற் பொதுமைய.

(இ - ள்.) அஃறிணை - அஃறிணைப்பெயர்களுள், பால் பகா பெயர்கள் - பால் பகுக்கப்படாத பெயர்க ளனைத்தும், பால் பொதுமைய - (அத்திணை) இரு பாலுக்கும் பொதுப்பெயர்களாம், எ-று.

(உ - ம்.)

பறவை வந்தது, பறவை வந்தன } எனவரும்
மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தன }

இவை பறவை அலரி எனப் பகுபதமும், மரம் பனை எனப் பகாப்பதமும் ஆக வரும். (உ௪)

இருதிணைப் பொதுப்பெயர்:—COMMON CLASS NOUNS.

282. முதற்பெயர் நான்குஞ் சினைப்பெயர் நான்கும்
சினைமுதற் பெயரொரு நான்குமுறை யிரண்டுந்
தன்மை நான்கு முன்னிலை யைந்தும்
எல்லாந் தாந்தா னின்னன பொதுப்பெயர்.

(இ - ள்.) முதற்பெயர் நான்கும் - முதற்பெயராகிய நான்கு பெயரும், சினைப்பெயர் நான்கும் - சினைப்பெயராகிய நான்கு பெயரும், சினைமுதற்பெயர் ஒரு நான்கும் - சினைமுதற் பெய

---

* அஃறிணை யிருபாற் பொதுப்பெயர், அல்லது அஃறிணை யியற்பெயர் எனவும்படும்.

ராகிய நான்குபெயரும், முறை (ப்பெயர்) இரண்டும் - முறைப்பெயராகிய இரண்டுபெயரும், தன்மை (ப்பெயர்) நான்கும் - தன்மைப் பெயராகிய நான்குபெயரும், முன்னிலை (ப்பெயர்) ஐந்தும் -முன்னிலைப்பெயராகிய ஐந்துபெயரும், எல்லாம் தாம் தான் - எல்லாம் தாம தான் என்கிற மூன்றுபெயரும், இன்னன - இவைபோல்வன பிறவும், பொதுப்பெயர் - இருதிணைக்குப் பொதுப்பொயர்களாம், எ-று.

இன்னன என்றமையால், சூரியனுதித்தான், சூரியனுதித்தது என ஒருபொருளே இருதிணையிலும் வரும் பொதுப்பெயர் முதலானவையும்,ஊமை வந்தான், ஊமை வந்தாள் என உயர்திணை யிருபாலிலும் வரும்பொதுப்பெயர் முதலானவையும், தன்மை முன்னிலை வினையாலணையும் பெயர்களும் பிறவுங் கொள்க. (உ௫)

முதற்பெயர் முதலியன வகுத்தல்:—SUB-DIVISION OF COMMON CLASS NOUNS ACCORDING TO GENDER AND NUMBER.

283. ஆண்மை பெண்மை யொருமை பன்மையின்
ஆமந் நான்மைக ளாண்பெண் முறைப்பெயர்.

(இ - ள்.) ஆண்மை பெண்மை ஒருமை பன்மையின் - ஆண்மை முதலாகிய இந்நான்குபாலுங் காரணமாக, அ நான்மைகள் ஆம் - அம் முதற்பெயருஞ் சினைப்பெயருஞ் சினைமுதற்பெயரும் நந்நான்காகும்; ஆண் பெண் - ஆண்மை பெண்மை என்கிற விருபாலுங் காரணமாக, முறைப்பெயர் - முறைப்பெயர்கள் (இரண்டாம்), எ-று.

(உ-ம்.)

க சாத்தன்—ஆண்மை முதற்பெயர் சாத்தி—பெண்மை முதற்பெயர் கோதை—ஒருமை முதற்பெயர் கோதைகள்—பன்மை முதற்பெயர்	முதற் பெயர் - ௪.
உ முடவன்—ஆண்மைச் சினைப்பெயர் முடத்தி—பெண்மைச் சினைப்பெயர் செவியிலி— ஒருமைச் சினைப்பெயர் செவியிலிகள் பன்மைச் சினைப்பெயர்	சினைப் பெய - ௪.

முடக்கொற்றன்—ஆண்மைச் சினைமுதற்பெயர் முடக்கொற்றி—பெண்மைச் சினைமுதற்பெயர் கொடும்புறமருதி—ஒருமைச் சினைமுதற்பெயர் கொடும்புறமருதிகள்—பன்மைச் சினைமுதற்பெயர்	சினை முதற்பெயர்-ச.
தந்தை—ஆண்மை முறைப்பெயர் தாய்—பெண்மை முறைப்பெயர்	முறைப்பயர் - உ. (உசு)

திணைப்பொதுப்பெயர்கள் பாற்பொதுவாதல்:—COMMON-CLASS NOUNS BECOME COMMON AS REGARDS THEIR RESPECTIVE GENDER.

284. அவற்றுள்,
ஒன்றே யிருதிணைத் தன்பா லேற்கும்:

(இ - ள்.) அவற்றுள் - (முதற்பெயர் முதலாகச் சொல்லப் படும் இருபத்தாறும் பிறிவுமாகிய) பொதுப்பெயர்களுள், ஒன்றே - ஒவ்வொன்றே, இருதிணை தன்பால் எற்கும் - இருதிணையிலும் தன்றன்பாலை ஏற்றுவரும், எ-று.

எனவே ஆண்மைப்பொதுப்பெயர் இருதிணையாண்பாலையும், பெண்மைப் பொதுப்பெயர் இவுதிணைப் பெண்பாலையும், ஒருமைப் பொதுப்பெயர் உயர்திணை ஆணொருமை பெண்ணொருமைகளையும் அஃறிணை யொருமையையும், பன்மைப் பொதுப்பெயர் இருதிணைப் பன்மையையும் ஏற்குமென்று ரென்றதாயிற்று.

(உ-ம்.)

பொதுப்பெயர்.

(1) முதற்பெயர் - ச. (படர்க்கை.)

சாத்தனிவன் சாத்தனிவ்வெருது	ஆண்	முதற்பெயர் இருதிணையிலுந் தமக்குரிய பால்களையேற்றுவந்தன.
சாத்தியிவள் சாத்தியிப்பசு	பெண்	
கோதையிவன் கோதையிவள் கோதையிது	ஆண் பெண் ஒன்று	
கோதைகளிவர் கோதைகளிவை	பலர் பல	

(2) சினைப்பெயர் - ச (படர்க்கை.)

முடவனிவன் முடவனிவ்வெருது	ஆண்	சினைப்பெயர் இருதிணையிலுந் தமக்குரிய பால்களையேற்று வந்தன.
முடத்தியிவள் முடத்தியிப்பசு	பெண்	
செவியிலியிவன் செவியிலியிவள் செவியிலியிது	ஆண் பெண் ஒன்று	
செவியிலிகளிவர் செவியிலிகளிவை	பலர் பல	

(3) சினைமுதற்பெயர் - ச (படர்க்கை.)

முடக்கொற்றனிவன் முடக்கொற்றனிவ்வெருது	ஆண்	சினை முதற்பெயர் இரு திணையிலுந் தமக்குரிய பால்களையேற்றுவந்தன.
முடக்கொற்றியிவள் முடக்கொற்றியிப்பசு	பெண்	
கொடும்புறமருதியிவன் கொடும்புறமருதியிவள் கொடும்புறமருதியிது	ஆண் பெண் ஒன்று	
கொடும்புறமருதிகளிவர் கொடும்புறமருதிகளிவை	பலர் பல	

(4) முறைப்பெயர் - உ (படர்க்கை.)

தந்தையிவன் தந்தையிவ்வெருது	ஆண்	முறைப்பெயர் இருதிணையிலுந் தமக்குரிய பால்களையேற்று வந்தன.
தாயிவள் தாயிப்பசு	பெண்	

(5) தன்மைப்பெயர் - ச.

யானம்பி	ஆண்	தன்மைப்பெயர் இருதிணையிலுந் தமக்குரிய பால்களையேற்று வந்தன.
யானங்கை	பெண்	
யான்பூதம்	ஒன்று	
யாமக்கள்	பலர்	
யாம்பூதங்கள்	பல	

நான், நாம் என்பவற்றோடும் இவ்வாறொட்டுக.

(6) முன்னிலைப்பெயர் - ரு.

நீ நம்பி	ஆண்	முன்னிலைப் பெயர் இரு திணையிலும் தமக்குரிய பால்களை யேற்றுவந்தன.
நீ நங்கை	பெண்	
நீ பூதம்	ஒன்று	
நீர் மக்கள்	பலர்	
நீர் பூதங்கள்	பல	

(7) எல்லாம், தான், தாம் (படர்க்கை.)

அவரெல்லாம் அவையெல்லாம்	எல்லாம்	எல்லாம் முதலிய பெயர்கள் இரு திணையிலும் தமக்குரிய பால்களை யேற்று வந்தன.
அவன்றான் அவடான் அதுதான்	தான்	
அவர்தாம் அவைதாம்	தாம்	

எல்லீர், நீயிர், நீவிர் என்பவற்றேடும் இவ்வாறொட்டுக.

மற்றவைகளு மிப்படியே யிருதிணையிலும் கூட்டுக. (உஎ)

M F தன்மை முன்னிலை படர்க்கைப் பெயர்கள்—

PRONOUNS AND THEIR PERSONS.

285. தன்மை யானுன் யாநா முன்னிலை
எல்லீர் நீயிர் நீவிர் நீர்நீ
அல்லன படர்க்கை யெல்லா மெனல்பொது.

(இ - ள்.) தன்மை - தன்மைப்பெயர் (நான்காவன), யான் நான் யாம் நாம் - யான் நான் யாம் நாம் என்பனவாம்; முன்னிலை - முன்னிலைப்பெயர் (ஐந்தாவன), எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ - எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ என்பனவாம்; அல்லன - இவ்வொன்பது மல்லாத பெயர்களெல்லாம், படர்க்கை - படர்க்கை யிடத்திற் குரியனவாம்; எல்லாம் எனல் - (அவற்றுள்) எல்லா மென்னும் பெயரொன்றும், பொது - மூவிடத்திற்கு முரித்தாம், எ-று.

(உ - ம்-)

ஒருமை.	பன்மை.	
யான் / நான்	யாம் / நாம்	தன்மை
நீ	எல்லீர் / நீயிர் / நீவிர் / நீர	முன்னிலை

யாமெல்லாம்	தன்மை	எல்லாம் மூவிடத்துக்கும் பொது.
நீரெல்லாம்	முன்னிலை	
அவரெல்லாம் / அவையெல்லாம்	படர்க்கை	

M. தொழிற்பெயருக்கும் வினைப்பெயருக்கும் இடம்:—

VERBAL NOUNS AND THEIR PERSONS.

286. வினையின் பெயரே படர்க்கை வினையால்
அணையும் பெயரே யாண்டு மாகும்.

(இ-ள்.) வினையின் பெயரே படர்க்கை - தொழிற்பெயர்கள் படர்க்கையிடத்திற் குரியனவாகும்; வினையாலணையும் பெயர் யாண்டும் ஆகும் - வினைமுற்று லணையும் பெயாகளானவை (தனித்தனி) மூவிடத்திற்கு முரியவாகும், எ-று.

(உ - ம்,)

தொழிற்பெயர்	உணல் / தின்ல்	படர்க்கை.
வினையாலணையும்பெயர்	உண்டேனை—தன்மை. / உண்டாயை—முன்னிலை. / உண்டானை—படர்க்கை.	

யானுணல், நீயுணல், அவனுணல் என மூவிட வினைபோ லொற்றுமைப்பட நிற்பனவற்றிற்கே யல்லாமல், எனதுணல் நினதுணல், அவனதுணல் என்றும், உணல் என்றும் வேற்று மைப்பட்டு நிற்கும் வினையின் பெயர்கட்கு எய்தியவிட மிகந்து படுதலில்லை யென வுணர்க.

தொழிற்பெயரும் வினையா லணையும்பெயரும் வினையடியாகப் பிறப்பன. தொழிற்பெயர் - தொழிலுக்கும் பெயராய் வந்து படர்க்கை இடத்திற்கே உரியதாகும்.

வினையாலணையும்பெய ர்— தொழிலையுடைய பொருளுக்குப் பெயராய்வந்து மூவிடங்கட்கு உரியதாகும். (உ௯)

M. F. தான்முதலிய பொதுப்பெயர்களுக்குப் பால்வகுப்பு:—

PRONOUNS AND THEIR NUMBER.

287 தான்யா னானீ யொருமை பன்மைதாம்
யாநா மெலாமெலீர் நீயிர்நீர் நீவிர்.

(இ - ள்.) தான் யான் நான் நீ - தான் யான் நான் நீ என்கிற நான்கும், ஒருமை - (இருதிணை முக்கூற்று) ஒருமைப்பெயர்களாம்; தாம் யாம் நாம் எலாம் எலீர் நீயிர் நீர் நீவிர் - தாம் யாம் முதலிய எட்டும், பன்மை - (இருதிணை இருகூற்றுப்) பன்மைப் பெயர்களாம், எ-று.

இருதிணை முக்கூறு—ஆண், பெண், ஒன்று என்பன.

இருதிணை இருகூறு—பலர், பல என்பன. (௩0)

M. F. எண்ணால் வரும் உயர்திணைப்பெயர்கள் :—PERSONAL NOUNS FORMED FROM NUMERALS.

288. ஒருவ னொருத்திப் பெயர்மே லெண்ணில.

(இ-ள்.) ஒருவன் ஒருத்தி - (ஒன்றென்னு மெண்ணால்) ஒருவன் ஒருத்தி என வருவனவன்றி, மேல் எண் - இவற்றின் மேல் இரண்டு முதலாகிய எண்களால், பெயர் இல - இவ் ஆண்பாற்பெயரும் பெண்பாற்பெயரும் வருவன இலவாம், எ - று. (௩க)

289 ஒருவ ரென்ப துயரிரு பாற்றாய்ப்
பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப.

(இ - ள்.) ஒருவரென்பது - ஒருவர் என வழங்குஞ் சொல், உயர் இருபாற்றாய் - உயர்திணை ஆண் பெண் இவ்விருபாற்கும் பொதுவாய், பன்மை வினைகொளும் பாங்கிற்று - அத்திணைப் பன்மை வாய்பாட்டு வினையைக் கொண்டு முடிகின்ற பாங்கினை யுடைத்தாகும், என்ப - என்று சொல்லுவர் புலவர், எ-று.

(உ - ம்.)

ஆடவரு ளொருவ ரறத்தின் வழிநிற்பார். (ஆண்)
பெண்டிரு ளொருவர் கொழுநன் வழிநிற்பார். (பெண்) (௩உ)

F* ஆகுபெயர்:—METONYMY.

290. பொருண்முத லாறோ டளவைசொற் றானி
கருவி காரியங் கருத்த னாதியுள்
ஒன்றன் பெயரா னதற்கியை பிறிதைத்
தொன்முறை யுரைப்பன வாகு பெயரே.

(இ - ள்.) பொருள் முதல் ஆறோடு - பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்னும் ஆறுடனே, அளவை - (இவற்றின் பகுதியவாகிய நால்வகை) அளவையும், சொல் - சொல்லும், தானி - தானியும், கருவி - காரணமும், காரியம் - காரியமும், கருத்தன் - வினைமுதலும், ஆதியுள் - ஆதியாக வரும் பொருள்களுள், ஒன்றன் பெயரான் - ஒருபொருளினது இயற்பெயரால், அதற்கு இயை பிறிதை - அப்பொருளினுக்கு இயைந்த பிறிதொருபொருளை, தொன்முறை உரைப்பன - தொன்றுதொட்டு வருமுறையே சொல்லப்பட்டு வருவன, ஆகுபெயர் - ஆகுபெயர்களாம், எ-று.

(உ - ம்.)

க. பொருளாகு பெயர்.	தாமரைபுரையுங் காமர்சேவடி. ஆம்பலனைய தேம் பொதிசெவ்வாய்	தாமரை, ஆம்பல் என்னும் முதற்பொருள்களின்பெயர் அவற்றின் மலராகிய சினைப்பொருளுக்கு மாயிற்று.
உ. இடவாகு பெயர்.	அகனமர்ந்து செய்யாளுறையும். புறங்கொடை யறியா மறந்திகழ் வேலோன்.	அகம், புறம் என்னும் உள்ளிடம் வெளியிடம் என்பவற்றைக் குறிக்கும் இடப்பெயர்கள் அவ்விடங்களி லிருக்கும் மனதுக்கும் முதுகுக்கு மாயின.

௩. காலவாகுபெயர்.	காராறுத்தது. கார்த்திகை பூத்தது.	கார், கார்த்திகை என்னுங் காலப்பெயர்கள் அக்காலங்களில் உண்டாகும் பயிருக்கும் புஷ்பத்திற்கு மாயின.

☞ கார் என்னுங் கருநிறப்பெயர் அந்நிறத்தையுடைய மேகத்தை யுணர்த்தும்போது குணவாகுபெயராம். அம்மேகம் பெய்யும் பருவத்தை யுணர்த்தும்போது இருமடியாகுபெயராம். அப்பருவத்தில் விளையும் பயிரை யுணர்த்தும்போது மும்மடி யாகுபெயராம். இப்படியே நான்மடி யாகுபெயர் முதலானவை வருதல் காண்க.

௪. சினையாகுபெயர்.	வெற்றிலைநட்டான். அறுபத முராலும். புளிமுளைத்தது.	வெற்றிலை, அறுபதம், புளி என்னும் அடையடுத்தும் தனித்தும் நின்ற சினைப் பெயர்கள் வெற்றிலைக்கொடி, வண்டு, புளியமரம் என்னும் முதலுக்காயின.

☞ இங்கு புளி என்னுஞ் சுவைப்பெயர் அச்சுவையையுடைய பழத்திற்கானது குணவாகுபெயர். அப்பழத்தின்பெயர் மரத்துக்கானது இருமடியாகுபெயரான சினையாகுபெயராம். [சினை- அவயவம், முதல் - அவயவத்தையுடையது.]

௫. குணவாகுபெயர்.	நீலஞ்சூடாள். கார்நிகர்வண்கை.	நீலம், கார் என்னும் நிறத்தை யுணர்த்தும் குணப்பெயர்கள் அந்நிறங்களையுடைய மலருக்கும் மேகத்துக்கு மாயின.
௬. தொழிலாகுபெயர்.	எழுத்தறியத்தீருமிழிதகைமை. பாட்டின் பொருள். வற்றலுட னுண்டான்.	எழுத்து, பாட்டு, வற்றல் என்னுந் தொழிற்பெயர்கள் அக்ஷரத்துக்கும், சொற்றொடரா லாகிய பாடலுக்கும், ஒருவித வுணவுக்கு மாயின.

எ. அளவையாகுபெயர்.	காலாலே நடந்தான். அரை. ஒன்று. இரண்டு.	கால், அரை, ஒன்று, இரண்டு என்னும் எண்ணளவைப் பெயர்கள் உடலிலுள்ள அவயவங்களுக்கும், அஃறிணையொருமைப் பன்மைப் பெயர்களுக்குமாயின.
	துலாக்கோல் * துலாபாரந் தூக்கினான். துலாவிறைத்தான்.	துலாம் என்னும் எடுத்தலளவைப்பெயர் நிறைகோலுக்கும், தராசுக்கும், இறைற்று இறவை மரத்துக்குமாயின.
	நாழி. உழக்கு. ஆழாக்கு. மரக்கால்.	இம்முகத்தலளவைப்பெயர்கள் அவ்வளவு கருவிகளுக்காயின.
	கீழைத்தடி. மேலைத்தடி.	தடி என்னும் நீட்டலளவைப்பெயர் அதனாலளக்கப்பட்ட கழனிகளுக்காயிற்று.
அ. சொல்லாகுபெயர்.	அவன்மொழி கேட்டான். இந்நூலுக்குரை செய்தான்.	மொழி, உரை என்னும் சொல்லின்பெயர் அதன் பொருளுக்காயின.
கூ. தானியாகுபெயர்.	விளக்கு முறிந்தது. நெஞ்சு நொந்தது.	விளக்கு, நெஞ்சுஎன்னும் தீபமும், மனமும் ஆகிய தானிகளின் பெயர் அவற்றினுக்குத் தானமாகிய விளக்குத் தண்டுக்கும் மார்புக்குமாயின.
க0. கருவியாகுபெயர்.	திருவாசகம். திருவாய்மொழி.	அடையடுத்துவந்த வாசகம், மொழி என்னும் முதற்கருவிப் பெயர்கள் அவற்றின் காரியமாகிய நூல்களுக்காயின.

* இது இருபெயரொட்டு முன்மொழியாகுபெயர்.

கக. காரியவாகு பெயர்.	இந்நூலலங்காரம். இந்நூல்பாட்டியல்.	இவ்விலக்கணங்க ளாகிய காரியத்தின் பெயர் இவற்றைத் தருதற்குக் கருவியாகிய நூல்கட் காயின.
கஉ. கருத்தா வாகு பெயர்.	இந்நூல் திருவள்ளுவர்.	திருவள்ளுவர் என்னும் காத்தாவின் பெயர் அவராற் செய்யப்பட்ட நூலுக்காயிற்று.
பிற வாகுபெயர்கள்.	பாவைவந்தாள் காளைவந்தான் தோகைநின்றாள்	உருமைபற்றிவருவன.
	பரமசிவன் சரவணன் இராமசாமி பார்வதி இலக்குமி.	தேவர் முதலியோர் பெயரை மக்கட்கு இட்டு வழங்குவது.

வகரக்கிளவி — இதில் வகரமாகிய அடைமொழியானது கிளவி யென்பத னியற்பொருளை விசேடித்து நில்லாது எழுத்தாகிய ஆகுபெயர்ப்பொருளை விசேடித்துநிற்கக் கிளவியென்பதே ஆகுபெயர்ப் பொருளையுணர்த்த அவ் விருபெயருமொட்டி நிற்கையால் இருபெயரொட்டாகுபெயராம். இது பின்மொழியாகுபெயர்.

வெற்றிலை என் என்பது முதலியவற்றைப் பொற்றொடி முதலானவைகளைப்போல அன்மொழித்தொகைப் பெயரென்று கொள்ளலாகாதோ வென்றால், அன்மொழித் தொகைப்பெயர் பாடுகிற புலவன் தான் சொல்லியதாகவாவது பிறர் சொல்லியதாகவாவது வியப்பு முதலாகிய காரணத்தாற் சொல்லுமிடத்து அங்கங்கே வருவதல்லாமல் இதுபோல நியதிப்பெயராய் வருவதன்றாதலால் அப்படிக் கொள்ளலாகாது. அல்லாமலும் ஆகுபெயரும் அன்மொழித்தொகையுந் தம்பொருளுணர்த்தாது பிறிதுபொரு ளுணர்த்துதலால் ஒக்குமாயினும் தம்முன் பின் கூறியவாறு வேற்றுமைப்படும்.

ஆகுபெயர் ஒன்றன்பெயரால் அதனோடியைபு பற்றிய பிறிதொன்றனை யுணர்த்தி ஒருமொழியிலே நிற்கும்.

அன்மொழித்தொகை இயைபு வேண்டாமல் இருமொழியுந் தொக்க தொகையாற்றலாற் பிரிதுபொருளுணர்த்தி யிருமொழியிலே நிற்கும்.

வடநூலின்படி சொற்களும் பொருள்களும் செஞ்சொல், ஆக்கச்சொல், குறிப்புச்சொல்; செம்பொருள், ஆக்கப்பொருள், குறிப்புப்பொருள் என மும்மூன்று வகைப்படும். செயல்களும் செஞ்செயல் அல்லது ஆற்றல், ஆக்கச்செயல், குறிப்புச்செயல் என மூவகைப்படும். இவற்றுள்ளே செஞ்செயல்—உரியபொருளை யுணர்த்தல்; ஆக்கச்செயல்—செம்பொருளுக்குப் பொருத்த மில்லாமையால் அப்பொருளின் சம்பந்தியையுணர்த்தல்; குறிப்புச்செயல்—அவ்விரண்டு செயல்களினும் வேறாய பொருளை யுணர்த்தல். முறையே இச்செயல்களை யுடையவையே அச்சொல்லுகளாம். முறையே அச்சொல்லுகளாலே உணரப்படுபவைகளே அப்பொருள்களாம்.

செஞ்சொல் — காரணக்குறி, இடுகுறி, காரண விடுகுறி என மூவகைப்படும்.

உறுப்புப் பொருளைத் தருவது காரணக்குறி;

'பறவை' முதலியவைபோல.

உறுப்பாற்றலை யல்லாமற் சமுதாய வாற்றன் மாத்திரத்தாற் பொருளை யுணர்த்துவது இடுகுறி;

'பனை' முதலியவைபோல.

உறுப்பாற்றலுக் கிடமாகிய பொருளைச் சமுதாயவாற்றலா லுணர்த்துவது காரணவிடுகுறி;

'முள்ளி' முதலியவைபோல.

ஆக்கச்சொல் — விட்ட வாக்கச்சொல், விடாத வாக்கச்சொல், விட்டும்விடாத வாக்கச்சொல் என மூவகைப்படும்.

'அவ்வூர் வந்தது' என்றால் ஊரென்பது அதிலுள்ள மனிதரை யுணர்த்துதலால் விட்டவாக்கச்சொல்.

பூனைகுடியாமற் பாலைக் காப்பாற்று என்றால், பூனை என்பது தன் செம்பொருளை விடாமல் பாலைக்கவர வரும் காக்கை முதலியவற்றையும் உணர்த்தலால் விடாத வாக்கச்சொல்லாம்.

'அவனிவன்' என்றால் அவன் என்பதற்கு அக்காலத்து அவ்விடத்தோடு கூடியவ னென்பதும், இவனென்பதற்கு இக்காலத்து இவ்விடத்தோடு கூடியவ னென்பதுஞ் செம்பொருள்களாம்; இவ்விடத்து இக்காலத்தோடு கூடியிருக்கிறவனிடத்தே அவ்விடத்து அக்காலத்தோடு கூடியிருத்தல் பொருந்தாமை பற்றி அவன் என்பது விசேடணத்தைவிட்டு விசேடியத்தை யுணர்த்தலால் விட்டும்விடாத வாக்கச்சொல்லாம்.

குறிப்புச்சொல் — 'இவன் காசிவாசி' என்று ஒருவனை யுயர்த்திக் கூறுமிடத்தே செம்பொருளுக்குப் பொருத்தமிருந்தும் பயனில்லாமையால் அவனிலுள்ள தூய்மையை உணர்த்திப் பயன்படு மாதலால் இதுபோல்வன வெல்லாங் குறிப்புச் சொல் எனக்கொள்க. (௩௩)

வேற்றுமை.—CASES.

M F வேற்றுமை :—CASE DEFINED.

291. ஏற்குமெவ்வகைப்பெயர்க்கு மீறாய்ப்பொருள்
வேற்றுமைசெய்வனவெட்டேவேற்றுமை.

(இ ள்.) ஏற்கும் - தம்மை ஏற்றுக்கொள்ளுதற்குரிய, எவ்வகைப்பெயர்க்கும் ஈறாய் - எவ்வகைப்பட்ட பெயர்களுக்கும் இறுதியாய், பொருள்வேற்றுமை செய்வன -அப்பெயர்ப்பொருளை வேற்றுமைப் படுத்துவனவாகிய, வேற்றுமை - வேற்றுமைகள், எட்டே - எட்டேயாகும், எ-று.

தன்னையேற்ற பெயர்ப்பொருளை வேற்றுமைசெய்கிற வுருபை வேற்றுமையென்றது காரியவாகுபெயர். (௩௪)

M. F. வேற்றுமையின் பெயரும் முறையும்:— THE NAME AND ORDER OF CASES.

292. பெயரே ஐ ஆல் கு இன் அது கண்
விளியென் றாகு மவற்றின் பெயர்முறை.

(இ-ள்.) அவற்றின் - முன்னே எட்டு வேற்றுமை யென்னப் பட்டவைகளினுடைய, பெயர் முறை - பெயர்களும் முறையு மாவன, பெயர் - பெயரும், ஐ - ஐயும், ஆல் - ஆலும், கு - குவ்வும், இன் - இன்னும், அது - அதுவும், கண் - கண்ணும், விளி - விளியும், என்று ஆகும் - என்றிப்படி சொல்லப்பட்ட வையாகும், எ-று. (௩௫)

M. F. எழுவாயுருபு மற்றை யுருபுகளையேற்றல்:—THE SIX CASAL SIGNS ADDED TO THE NOMINATIVE.

293. ஆற னுருபு மேற்குமவ் வுருபே.

(இ - ள்) அ உருபே - பெயராய் நிற்கின்ற அவ்வெழுவா யுருபே, ஆறன் உருபும் - ஐம்முதலாகிய ஆறு வேற்றுமை யுருபுகளையும், ஏற்கும் - ஏற்றுவரும், எ-று. (௩௬)

F ஐ முதலிய வேற்றுமையுரு பேலாத பெயர்கள் :—INDECLINABLE NOUNS.

294. நீயிர் நீவிர்நா னெழுவா யலபெறா.

(இ - ள்.) நீயிர் நீவிர் நான் - நீயிர முதலாகிய இம்மூன்று பெயர்களும், எழுவாய் அல - எழுவாயல்லாத வேற்றுமைகளை, பெறா - பெறாவாம், எ-று. (௩௭)

M F எழுவாய் அல்லது பெயர்வேற்றுமை:—THE FIRST OR NOMINATIVE CASE.

295 அவற்றுள்,
எழுவா யுருபு திரிபில் பெயரே
வினைபெயர் வினாக்கொள லதன்பய னிலையே.

(இ-ள்.) அவற்றுள் - முன் சொல்லப்பட்ட எட்டுவேற்றுமை களுள், எழுவாய் உருபு - முதல்வேற்றுமையினது உருபாவது, திரிபு இல் பெயரே - (ஐம்முதலாகிய வுருபேற்றுத்) திரிதலில் லாத பெயரேயாம்; வினை - வினையையும், பெயர் - பெயரை யும், வினா - வினாவையும், கொளல் - கொள்ளவருதல், அதன் பயனிலை - அவ்வுருபினது பொருணிலையாய் வருதலாம், எ-று.

எனவே அத்திரிபில்லாத பெயர்தானே தன்பொருளை வினை முதற்பொருளாக வேற்றுமைசெய்யு மென்பதாயிற்று. வினை

முதல், செய்பவன், ஒருபொருட் சொற்கள்; இதனை வடநூலார் கருத்தா என்பர்.

(உ-ம்.)

சாத்தன் வந்தான் கொற்றன்வாழ்க அவன்பெரியன் ஆ வுண்டு.	வினைகொளவந்தன.
ஆ வொன்று அரச னிவன்.	பெயர்கொளவந்தன.
அவன் யார் ஆ யாது.	வினுக்கொள வந்தன.

வினைமுதற் பொருளாவது தனது புடைபெயர்ச்சியாகிய தொழிலிற் சுதந்தரமுடைய பொருளாம்.

சாத்தன்வந்தான்—இங்கு சாத்தனென்கிற பெயர்ப்பொருளாகிய வொருவன் தன் புடைபெயர்ச்சியாகிய வருகைத்தொழிலிலே சுதந்தரமுடையனுதல் காண்க.

இவ்வெழுவாய்க்கு ஐம்முதலானவைபோன்ற உருபு இல்லாதிருந்தாலும் உரையிற்கோட லென்கிற உத்தியால் ஆனவன், ஆகின்றவன், ஆவான் முதலாக ஐம்பாலிலும் வருகிற சொல்லுருபுகள் உண்டெனக்கொள்க. அவை சாத்தனுனவன், சாத்தியானவள், சாத்தரானவர், ஆவானது, ஆக்களானவை எனச் சிலவிடங்களிலே வரும். அல்லாமலும் சிறுபான்மை சாத்தனென்பவன் என வருவதுங்கொள்க. இன்னு மிவ்வுத்தியைப் பின்வரும் வேற்றுமைகளிலே காட்டப்படுஞ் சொல்லுருபுகளுக்கெல்லாங் கொள்க.

இது தோன்று எழுவாயாகவும் வரும். கருத்தா - இயற்றுதற்கருத்தா ஏவுதற்கருத்தா என இருவகைபபடும். (௩௮)

M. F. இரண்டாம் வேற்றுமை—THE 2ND OR ACCUSATIVE CASE.

296. இரண்டா வதனுரு பையே யதன்பொருள்
ஆக்க லழித்த லடைத லீத்தல்
ஒத்த லுடைமை யாதி யாகும்.

(இ-ள்.) இரண்டாவதன் உருபு - இரண்டாம் வேற்றுமையினது உருபாவது, ஐயே - (முன்சொல்லப்பட்ட) ஐ ஒன்றுமேயாம்; அதன்பொருள் - அதனுடைய பொருள்களாவன, ஆக்கல்-ஆக்கப்படுபொருளும், அழித்தல் - அழிக்கப்படுபொருளும், அடைதல் - அடையப்படுபொருளும், நீத்தல் - துறக்கப்படுபொருளும், ஒத்தல் - ஒக்கப்படுபொருளும், உடைமை - உடைமைப்பொருளும், ஆதியாகும் - முதலியனவாக (அவ்வுருபையேற்ற பெயர்ப்பொருள்கள் வேறுபட்ட) செயப்படு பொருள்களாம், எ-று.

(உ-ம்.)

குடத்தை வனைந்தான் மரத்தை வளர்த்தான்.	} ஆக்கப்படுபொருள்.
கோட்டையை யிடித்தான் வேலியைப் பிரித்தான்.	} அழிக்கப்படுபொருள்.
ஊரை யடைந்தான் தேரை யூர்ந்தான்.	} அடையப்படுபொருள்.
மனைவியைத் துறந்தான் பதியை நீத்தான.	} துறக்கப்படுபொருள்.
புலியை யொத்தான் வேளை நிகர்த்தான.	} ஒக்கப்படுபொருள்.
பொன்னை யுடையான் புவியை யுடையான்	} உடைமைப்பொருள்.

செயப்படுபொருளாவது வினைமுதற் றொழிற்பயனுறுவது.

குடத்தை வனைந்தான் — இங்கு மண்கூட்டுகை திரிகை சுழற்றுகை முதலானவை வினைமுதலினுடைய தொழிலாம், குடத்தினது தோன்றுதல் அத்தொழிலின் பயனும், அப்பயனுறுவது குடமாதலாற் குடஞ்செயப்படுபொருளாகும்.

கோட்டையை யிடித்தான் — இங்கு கோட்டையை யிடித்தல் செய்பவனது தொழிலாம், அதனது வடிவு குலைதல் அத்தொழிலின் பயனும், அப்பயனுறுவது கோட்டையாதலாற் கோட்டை செயப்படுபொருளாகும்.

ஊரையடைந்தான் — இங்கு நடந்துசெல்லுதல் கருத்தாவி னது தொழிலாம், ஊரைச்சேர்தல் அத்தொழிலின் பயனும், அப்பயனுறுவது ஊராதலால் ஊர் செயப்படுபொருளாகும்.

மனைவியைத்துறந்தான் — இங்கு வெறுத்துவிடுதல் வினைமு தலின் றொழிலாம், உரிமைக்கேடு அதன்பயனும், அப்பயனுறு வது மனைவியாதலான் மனைவி செயப்படுபொருளாகும்.

புலியையொத்தான் — இங்கு அஞ்சாது பாய்ந்துகொல்லுத லாற் புலியை உபமானமாகக் கொள்ளுதல் கருத்தனது தொழி லாம், உபமானமாகக் கொள்ளப்படுதல் அத்தொழிலின் பய னும், அப்பயனுறுவது புலியாதலால் அது செயப்படு பொரு ளாகும்.

பொன்னையுடையான் — இங்கு சம்பாதித்தல் வினைமுதலின் றொழிலாம், தனதாகுகை அத்தொழிலின் பயனும், அப்பய னுறுவது பொன்னுதலாற் பொன் செயப்படுபொருளாகும். மற்றவையு மிப்படியே.

இன்னுஞ் செயப்படுபொருள் குன்றுத முதனிலைகளின்மேல் வி பி முதலியவிகுதிகள் சேர்ந்து வருவனவாகிய பிறவினைக ளிலே சிலவற்றிற்கு இயற்றும் வினைமுதல் இரண்டாம் வேற் றுமையில் வருதலால், அரசன் பகைவரைச் சிறைச்சாலையை யடைவித்தான் என இரண்டு செயப்படுபொருள் வரும். சில வற்றிற்கு அது மூன்றும் வேற்றுமையிலே வருதலால், 'சாத்தன் கொற்றனுற் பசுவைப் புரப்பித்தான்' என செயப்படுபொருள் ஒன்றேவரும். செயப்படுபொருள் குன்றுத தன்வினைகளிலே ரு மிரண்டு செயப்படுபொருள் வருதலில்லையோவென்றுல்,— 'சுவைப்பாலைக் கறந்தான்' 'யானையைக் கோட்டைக் குறைத் தான்' எனச் சிலவிடங்களிலே வருதலுமுண்டு; ஆனுல் இப்பசு வையும் யானையையுஞ் செயப்படுபொருளாகக் குறியாமல் நீக் கப்பொருளாகக் குறித்தால், பசுவினின்றும் பாலைக் கறந்தான், யானையினின்றுங் கோட்டைக் குறைத்தான் எனவும், சம்பந் தப் பொருளாகக் குறித்தால் பசுவினது பாலைக் கறந்தான், யானையினது கோட்டைக் குறைத்தான் எனவும் வருதலாற் சிறப்பில்லையென் றறிக. மற்றவைகளு மிப்படியே.

ஆதியென்றதனால் வீட்டை விரும்பினான், நூற்பொருளை யறிந்தான் என விரும்புதலும் அறிதலுமாகிய வினைமுதற் றொழில்களுக்கு விடயமாகிய வீடும் நூற்பொருளும் செயப்படு பொருளாகுகை முதலானவையுங் கொள்க. அல்லாமலும் அச் செயப்படுபொருள் கருத்திற் செயப்படுவதும் கருத்தின்றிச் செயப்படுவதும், இருமையிற் செயப்படுவதும் என மூன்று வகையாம் அவை முறையே சோற்றையுண்டான், சோற்றைக் குழைத்தான், பதரையு நெல்லையும் பணத்திற்குக்கொண்டான் எனவரும். (ஙகூ)

M. F. மூன்றும் வேற்றுமை;—THE 3RD OR CAUSAL CONJUNCTIVE CASE.

297. மூன்ற வதனுரு பாலா னோடொடு
கருவி கருத்தா வுடனிகழ் வதன்பொருள்.

(இ - ள்.) மூன்றுவதன் உருபு - மூன்றும் வேற்றுமையி னுடைய உருபுகளானவை, ஆல் ஆன் ஓடு ஒடு - (முன்சொல் லப்பட்ட) ஆலே யன்றி ஆனும் ஓடும் ஒடுவும் ஆகும்; அதன்பொ ருள்-அவ் வுருபுகளுடைய பொருள்களானவை, கருவி - கருவிப் பொருளும், கருத்தா - வினைமுதற்பொருளும், உடனிகழ்வு - உடனிகழ்ச்சிப் பொருளும் ஆகிய (அவ்வுருபுகளையேற்ற பெ யர்ப்பொருள்கள் வேறுபட்ட) மூன்றுமாகும், எ-று.

(உ - ம்.)

வாளால்வெட்டினான் மண்ணாலியன்றகுடம் வாளான்வெட்டினான் மண்ணானியன்றகுடம்.	கருவிப்பொருள்.
அரசனாலாகியகோயில் தச்சனால்செய்யப்பட்டதேர் அரசனானாகியகோயில் தச்சனானாக்கப்பட்டதேர்.	வினைமுதற்பொருள்.
மைந்தனோடுதந்தைவந்தான் தூனோடுகட்டுண்டான் மைந்தனொடுதந்தைவந்தான் தூணொடுகட்டுண்டான்.	உடனிகழ்ச்சிப் பொருள்.

இந்த நான்குருபுகளுக்கும் மூன்றுபொருள்களுமா மெனக் கூட்டிச் சொன்னாராயினும், ஏற்புழிக்கோட லென்கிற உத்தியால் அவ்வுருபுகளுள் ஆல் ஆன் உருபுகளுக்குக் கருவியும் வினைமுதலும், ஓடு ஒடு உருபுகளுக்கு உடனிகழ்ச்சியுஞ் சிறந்தனவென்று கொள்க.

கருவியாவது வினைமுதற் ெறாழிற்பயனைச் செயப்படுபொருளிற் சேர்ப்பது.

வாளாற்பகைவனை வெட்டினான்—இங்கு வாளைப்பற்றிவீசுதல் வினைமுதலினது தொழிலாம், பகைவனுடம்பு அறுதல் அத்தொழிற்குப் பயனும், வாள் அப்பயனைப் பகைவனாகிய செயப்படுபொருளிலே சேர்க்கையால், அது கருவிப்பொருளாகும்.

இன்னும் அக்கருவிப்பொருள் முதற்கருவியும் துணைக்கருவியும் என இருவகைப்படும்.

முதற்கருவியாவது செயப்படுபொருளோ டொற்றுமையுடையது; துணைக்கருவியாவது முதற்கருவிக்குத் துணையாய் அது காரியப்படுமளவு முடனிகழ்வது.

(உ-ம்.)

மண்ணாற் குடத்தை வனைந்தான்	மண் குடமாகிய காரியத்தோ டொற்றுமை யுடையதாதலான் முதற்கருவி.
தண்டசக்கரங்களாற் குடத்தை வனைந்தான்.	தண்டசக்கரங்கள் மண்ணாகிய முதற்கருவிக்குத் துணையாய் அது குடமாகக் காரியமாமளவும் உடனிகழ்வனவாதலால் அவை துணைக்கருவி.

இனி வினைமுதல் இட்படிப்பட்டதென்று முன்னே (295) எழுவாய்ச் சூத்திரவுரையிற் காட்டப்பட்டது. அவ்வெழுவாய் வேற்றுமையில் வருகிற வினைமுதற்பெயர் தன்விகுதி வினையினாலே முடியும். இம்மூன்றும்வேற்றுமையில் வருகிற வினை

முதற்பெயர் செயப்படுபொருள்விகுதி வினையினாலே முடியும். இதுவே அவ்விரண்டிற்கும் வேறுபாடாம்.

(உ - ம்.)

1. குயவன் குடத்தை வனைந்தான்—குயவனென்னும் எழுவாய்க்கருத்தாத் தனக்குரிய ஆன் விகுதி வினையினாலே முடிந்தது.
2. குயவனாற் குடம் வனையப்பட்டது—குயவனாகிய மூன்றனுருபின் கருத்தா தனக்குரிய ஆன்விகுதி வினையினாலே முடியாது, செயப்படுபொருட்குரிய துவ்விகுதி வினையினாலே முடிந்தது.

இன்னும் அவ்வினைமுதற்பொருள் இயற்றும் வினைமுதலும் ஏவும் வினைமுதலும் என இருவகைப்படும்.

இயற்றும் வினைமுதலாவது கருவியைத் தொழிற்படுத்துவது; ஏவும் வினைமுதலாவது அவ்வியற்றும் வினைமுதலினது தொழிலை யுண்டாக்குந் தொழிலையுடையது.

(உ - ம்.)

தச்சனால் கோயில் கட்டப்பட்டது.	தச்சன் இயற்றும் வினைமுதல்.
அரசனால் கோயில் கட்டுவிக்கப்பட்டது.	அரசன் ஏவும் வினைமுதல்.

உடனிகழ்ச்சிப்பொருளாவது வினைகொண்டு முடிகிற பொருளினது தொழில்போன்ற தொழிலைத் தன்னிடத்து முடனிகழ்கிறதாக வுடையது.

(உ - ம்.)

மைந்தனோடு தந்தைவந்தான்—இங்கு தந்தை வினைகொண்டு முடிகிற பொருளாம், வருதல் அப்பொருளினது தொழிலாம், இவ்வருதலைத் தன்னிடத்து முடனிகழ்கிறதாகவுடைய பொருள் மைந்தனாதலால் மைந்தன் உடனிகழ்ச்சிப் பொருளாகும்.

அவ்வுடனிகழ்ச்சிப்பொருள் தலைமைப்பொருளும், தலைமையில் பொருளும் என இருவகைப்படும்.

தலைமைப்பொருளாவது வினைகொண்டு முடிகிற பொருளினுயர்வுடையது; தலைமையில் பொருளாவது வினைகொண்டு முடிகிறபொருளினிழிவுடையது.

(உ - ம்.)

மன்னவனோடு மந்திரி வந்தான் — இங்கு மந்திரி வினைகொண்டு முடியும்பொருள்; மன்னவன் அப்பொருளினுயர்வுடைய பொருளாதலால் தலைமைப்பொருள்.

மாணாக்கனோடு ஆசிரியன் வந்தான்—இங்கு ஆசிரியன் வினைகொண்டு முடியும்பொருள், மாணாக்கன் அப்பொருளினிழிவுடைய பொருளாதலால் தலைமையில்பொருள்.

சிறுபான்மை ஆல், ஆன் உருபுகள் முதற்பொருளின்மேலேற்றிச் சொல்லப்பட்ட விகாரத்தையுடைய சினைப்பொருளிலும் தோறும் என்கிற பொருளிலும் வரும்.

(உ - ம்.)

கண்ணாற்குருடன், காலான் முடவன் — இங்கு குருடன் முடவன் முதற் பொருள்கள்; குருட்டுத் தன்மையும் முடத்தன்மையும் அவைமே லேற்றிச் சொல்லப்படும் விகாரங்கள்; அவ்விகாரங்களையுடைய சினைப்பொருள்கள் கண்ணுங் காலு மாதல் காண்க.

ஊரானொருகோயில் — ஊர்தோறு மொவ்வொரு கோயில் எனப்பொருள் படும்.

சிறுபான்மை ஒடு, ஓடு உருபுகள் வேறுவினைப்பொருள் முதலாகிய பிறபொருள்களிலும் வரும்.

(உ - ம்.)

'தொடியொடு தொல்கவின் வாடியதோள்' — தொடிக்குக் கழலுதலாகிய வேறுவினை யுடனிகழ்தலால் தொடி வேறுவினை உடனிகழ்ச்சிப் பொருளாம்.

'மலையொடுபொருதமால்யானை'—பொருதல் யானைக்கல்லது மலைக்கில்லாமையால் மலை வினையில் உடனிகழ்ச்சிப் பொருளாம்.

'பாலொடு தேன்கலந்தற்றே' — தேனைக் கலக்கப்படுதலால் பால் கலப்புறுபொருளாம்.

'எழுத்தொடு புணர்ந்தசொல்'—எழுத்து சொல்லுக்கு முதற் கருவியாதலால் எழுத்து ஒற்றுமைப் பொருளாம்.

கோபத்தோடு வந்தான் — வருதற்கு விசேடணமாதலால் கோபம் அடைமொழிப் பொருளாம்.

ஆல், ஆன், ஒடு, ஓடு இந்நான் குருபுகளும் தனித்தன்றி ஏகாரம் பெற்றும் வரும்; அவற்றுள் ஆல், ஆன் உருபுகளிலொன்று நிற்றற்குரிய விடத்தே கொண்டு என்கிறது முன் ஐகாரம்பெற்றும் பெறுமலுஞ் சொல்லுருபாக வரும். ஒடு, ஓடு உருபுகள் நிற்றற்குரிய விடத்தே உடன் என்கிறது தனித்தும், ஏகாரம் பெற்றுஞ் சொல்லுருபாக வரும்.

(உ - ம்.)

வாளாலே } வெட்டினான். { வாளைக்கொண்டு வெட்டினான்
வாளானே } { வாள்கொண்டு வெட்டினான்.

மகனொடே } தந்தைவந்தான். { மகனுடன் றந்தைவந்தான்.
மகனோடே } { மகனுடனே தந்தைவந்தான்.

M-F. நான்காம்வேற்றுமை:—THE 4TH OR DATIVE CASE.

298. நான்கா வதற்குரு பாகுங் குவ்வே
கொடைபகை நேர்ச்சி தகவது வாதல் [ருளே.
பொருட்டுமுறை யாதியி னிதற்கிதெனல் பொ

(இ - ள்.) நான்காவதற்கு உருபு - நான்காம் வேற்றுமைக்கு உருபாவது, குவ்வே ஆகும் - (முன்சொல்லப்பட்ட) குவ்வொன்றுமே யாகும்; பொருள் - (அவ்வுருபின்) பொருள்களாவன - கொடை - கொடையும், பகை - பகையும், நேர்ச்சி - நட்பும், தகவு - தகுதியும், அது ஆதல் - முதற்காரணமும், பொருட்டு - நிமித்தகாரணமும், முறை - முறையும், ஆதியின் - முதலான

பொருட்சொற்களின் புணர்ச்சியில், இதற்கு இது எனல் - இதற்கு இதுவென்கிறதுபட வருகின்றவையாகிய அவ்வுரு பேற்ற பெயர்ப்பொருள் வேறுபட்ட பலவுமாம், எ-று.

கொடையெனவே கோடற்பொருளும், பகை நேர்ச்சி யென 'வே பகைதொடர்பொருளும் நட்புத்தொடர்பொருளும், தகுதி யெனவே தகுதியுடைப்பொருளும், அதுவாதலெனவே முதற் காரண காரியப்பொருளும், பொருட்டெனவே நிமித்தகாரண காரியப்பொருளும், முறையெனவே முறைக்கிழமை பொருளும், குவ்வுருபின் பொருள்களாமென்பது பெற்றும்.

(உ - ம்.)

இரவலருக்குப் பொன்னைக் கொடுத்தான் — கோடற்பொருள்.

பாம்புக்குப் பகை கருடன் — பகைதொடர்பொருள்.

சாத்தனுக்கு நட்பாளன் கொற்றன் — நட்புத்தொடர்பொருள்.

அருங்கல மரசர்க்குரித்து — தகுதியுடைப்பொருள்.

குண்டலத்திற்குப் பொன் — முதற்காரண காரியப்பொருள்.

கூலிக்கு வேலைசெய்தான் — நிமித்தகாரண காரியப்பொருள்.

சாத்தனுக்கு மகனிவன். — முறைக்கிழமைபொருள்.

கோடற்பொருளாவது கொடுத்தற்றொழிலின் செயப்படுபொருளைத் தனக் குரியதாக்கிக் கொள்ளுத லையுடைய பொருளாம்.

(உ - ம்.)

இரவலர்க்குப் பொன்னைக்கொடுத்தான் — இங்கு கொடுத்த லின் செயப்படுபொருள் பொன்னும், அதனைத் தனக் குரிய தாக்கிக் கொள்ளுதலையுடைய பொருள் இரவலராதலால், இர வலர் கோடற்பொருளாகும்.

மாணுக்கனுக் கறிவைக்கொடுத்தான் — இங்கு அறிவாகிய செயப்படுபொருள், கொடுப்போன் பொருளாய்க் கொள்வோ னிடத்துச் செல்லாது ஆண்டுத்தோன்றினும் அதனைத் தனக் குரிய தாக்கிக்கொள்ளுதலான் மாணுக்கன் கோடற் பொருளே யாம். அன்றியும் 'மாணுக்கனுக்கு நூற்பொருளுரைத்தான்'

என்புழி சொல்லுதலின் செயப்படுபொருளாகிய நூற்பொருளை அறிதலையுடைய பொருளாகிய மாணுக்கனுங் கோடற்பொருளேயாம். இன்னும், 'அவர் கொடுத்தற் குடம்பட்டார்' என உடம்படுதற்கு விடயமான பொருளும் ஒருவகைக் கோடற்பொருளேயாம்.

கோடல் பலவகைப்படும் :—

(1) ஆவிற்கு நீர்விட்டான் —கேளா தேற்றல்
(2) வறியவர்க்கீந்தான் —கேட்டே யேற்றல்
(3) மாணுக்கனுக்கறிவு கொடுத்தான் —ஏலா தேற்றல்
(4) தனக்குச் சோறிட்டான் —ஈவோ னேற்றல்
(5) அரனுக்குக் கண்ணலர் கொடுத்தான் அரி —உயர்ந்தோ னேற்றல்
(6) அரிக்குச்சக்கரங் கொடுத்தான் அரன் — இழிந்தோ னேற்றல்
(7) சோழனுக்கு விருந்திட்டான் சேரன் — ஒப்போ னேற்றல்
(8) சோற்றிற்கு நெய்விட்டான் —உணர் வின்றி யேற்றல்
(9) மாணுக்கனுக்குக் கசையடி கொடுத்தானுசிரியன் —விருப்பா யேற்றல்
(10) கள்ளனுக்குக் கசையடிகொ கொடுத்தான் அரசன். — வெறுப்பாயேற்றல்.

கசை- குதிரைச் சம்மட்டி.

கொடுத்தலும் பலவகைப்படும்:—

(1) மருமகனுக்கு மகளைக்கொடுத்தான் —வழக்கத்திற் கொடுத்தல்
(2) மகனுக் கரசு கொடுத்தான் —உரிமையிற் கொடுத்தல்
(3) அரசனுக்குத் திறைகொடுத்தான் —அச்சத்திற் கொடுத்தல்
(4) தந்தை தாய்க்குத் திதிகொடுத்தான் —பாவனையிற்கொடுத்தல்

(5) அவனுக்குப் பரிசுகொடுத்தான்—உவகையிற்கொடுத்தல்.

(6) அவனுக்குத் தண்டனைகொடுத்தான்—வெகுளியிற் கொடுத்தல்.

(7) வாய்க்கரிசி கொடுத்தான்—அவலத்திற்கொடுத்தல்.

பகைதொடர்பொருளாவது ஒரு பொருளிடத்துள்ள பகை தொடர்தற்கு இடமாகிய பொருளாம். இப்படியே ஒரு பொருளிடத்துள்ள நட்பு தொடர்தற்கு இடமாகிய பொருள் நட்புத்தொடர் பொருளாம்.

(உ - ம்.)

பாம்புக்குப் பகை கருடன்—பகைதொடர் பொருளாம்.

சாத்தனுக்கு நட்பாளன் கொற்றன். } —நட்புத்தொடர் பொருளாம்.

கருடனிடத்துள்ளபகை தொடர்தற்குப் பாம்பும், கொற்றனிடத்துள்ள நட்பு தொடர்தற்குச் சாத்தனும் இடமாதலறிக.

'அவனுக்குத் தீயவனிவன்', அவனுக்கு நல்லவனிவன்' என்றிறவைகளும் அவைபோல்வனவாம். அன்றியும் வைவின் றீமைதொடர் பொருளும், வாழ்த்தி னன்மைதொடர்பொருளும் பகை நேர்ச்சிகளில் அடங்குமெனக் கொள்க. அவை, தீயோர்க்குக் கேடுண்டாகுக', 'நல்லோர்க்குச் செல்வமுண்டாகுக, என வரும்.

தகுதியுடைப்பொருளாவது ஒரு பொருளோடு பொருந்துதற்குத் தகுதியையுடைய பொருளாம்.

'அருங்கலமரசர்க்குரித்து' என்றிறவிடத்து அருங்கலமானது அரசரோடு பொருந்துதற்குத் தகுதியையுடைய பொருளாதல் காண்க.

முதற்காரண காரியப்பொருளாவது முதற்காரணத்தா லாகும் பொருளாம். நிமித்தகாரண காரியப்பொருளாவது நிமித்தகாரணத்தா லாகும் பொருளாம்.

'குண்டலத்திற்கு வைத்தபொன்' என்கிறவிடத்துப் பொன்னாகிய முதற்காரணத்தாற் குண்டலமாகிய காரியமும், வேலையாகிய நிமித்தகாரணத்தாற் கூலியாகிய காரியமும் உண்டாயின.

முறைக்கியை பொருளாவது பிறப்பினாலொரு பொருளின் முறைக்குத் தானியைந்து நிற்கும் பொருளாம்.

'சாத்தனுக்கு மகனிவன்' என்கிறவிடத்து மகனாதலாகிய முறைக்குச் சாத்தனியைதலறிக.

ஆதி என்றதனால் 'மழைக்கு மின்னல்' என உற்பாதத்தாற் குறிக்கப்படுவதும், 'அவனுக்கிதுபோதும்' எனக் குறைவில்லாமையைக் கொள்வதும், பிறவுங் கொள்க. [உற்பாதம் - மேல்விளையும் நன்மைதீமைகளைக் குறிக்குங்குறி.]

குவ்வுருபு நிற்றற்குரிய சிலவிடங்களிலே பொருட்டு, நிமித்தம் என்கிற சொல்லுருபுகள் வரும். அவை 'கூழின்பொருட்டு வேலைசெய்தான்,' 'கூலியினிமித்தம் வேலைசெய்தான்' என வரும். அல்லாமலும் 'கூலிக்காக வேலைசெய்தான்' எனக் குவ்வுருபிற்குப் பொருட்டுப் பொருளிலே ஆக என்கிறதுஞ் சொல்லுருபாக அவ்வுருபின்மேல் வரும். (சக)

M. F. ஐந்தாம் வேற்றுமை:—THE 5TH CASE.

299. ஐந்தா வதனுரு பில்லு மின்னும்
நீங்கலொப் பெல்லை யேதுப் பொருளே.

(இ-ள்) ஐந்தாவதன் உருபு - ஐந்தாம்வேற்றுமையினுடைய உருபுகளானவை, இல்லும் இன்னும் - இல்லும் (முன்சொல்லப்பட்ட) இன்னுமாம்; பொருள் - அவ்வுருபுகளின் பொருள்களானவை, நீங்கல் - நீக்கப்பொருளும், ஒப்பு - ஒப்புப்பொருளும், எல்லை - எல்லைப் பொருளும், ஏது - ஏதுப்பொருளுமாகிய (அவ்வுருபுகளையேற்ற பெயர்ப்பொருள்கள் வேறுபடும்) இந்நான்குமாம், எ-று.

(உ-ம்.)

மலையின்வீழருவி... ... ...நீக்கப்படுபொருள்.
காக்கையிற்கரிதுகளம்பழம் ...ஒப்புப்பொருள்.
மதுரையின்வடக்குச் சிதம்பரம் .. எல்லைப்பொருள்.
கல்வியிற்பெரியன்கம்பன் ...ஏதுப்பொருள்.

நீக்கப்பொருளாவது பிரிவையுண்டாக்குந் தொழிலின்றிப் பிரிவைமட்டுந் தன்னிடத்திலுடைய பொருளாம்.

'மலையின்வீழருவி' என்கிறவிடத்தே, அருவியின் வீழ்ச்சி, பிரிவையுண்டாக்குந் தொழிலாம், அது தன்னிடத்தில்லாமற் பிரிவொன்றையே தன்னிடத்துடைய தாதலால் மலை நீக்கப் பொருளா மெனக்கொள்க.

ஒப்புப்பொருளாவது புகழ்பொருளிலுந் தன்னிலுமிருக்கின்ற பொதுத்தன்மையால் உபமானமாகிற பொருளாம்.

'காக்கையிற் கரிதுகளம்பழம்' என்கிறவிடத்தே களம்பழம் புகழ்பொருளாம், புகழ்பொருளிலுந் தன்னிலுமுள்ள பொதுத் தன்மை கருமையாம், அதனை லுபமானமாகிய பொருள் காக்கையாத லறிக.

எல்லைப்பொருளாவது ஒரு பொருளினது திசையளவைக் குறிப்பித்தற்கு எல்லையாகநிற்கும் பொருளாம்.

'மதுரையின் வடக்குச் சிதம்பரம்' என்கிறவிடத்தே அறியப்படாத பொருளாகிய சிதம்பரத்தினது திசையைக் குறிப்பித்தற்கு அறியப்பட்ட பொருளாகிய மதுரை எல்லைப்பொருளானவை யறிக. இன்னும் 'கச்சியிற் றிருத்தணிகை மூக்காவதம்' என வழியளவிலும், 'அவனிலிவனிரண்டாண்டு மூத்தவன்' எனக் காலவளவிலும், எல்லைப்பொருள் வருமெனக் கொள்க. அல்லாமலும் 'அரசரிற் பெரியரந்தணர்', 'ஆவினிழிந்ததுமேதி' என்றாற்போல உயர்வு தாழ்வுகளைப் பற்றியும்

எல்லைப்பொருள்வரும். இவற்றுள் 'அர்தணரது பெருமைக்கு அரசரும், மேதியி னிழிவிற்கு ஆவும் எல்லைகளாதல் காண்க. இவ்வுயர்வுதாழ்வுகளை நீக்கப்பொருளென்பாரு முளர்.

'கல்வியிற் பெரியன் கம்பன்' என்பதில் கம்பன் பெரியனாதற்குக் கல்வி ஏதுவாதலறிக.

இன்னும் 'கடவுளிற் றோன்றிய துலகம்' என முதற்காரணப் பொருளாகுகை முதலானவையுங் கொள்க.

இன்னும் 'மண்ணுலகின் வேறு விண்ணுலகம்', 'தீவினையின் வெறுக்கின்றான்' என இப்படி வேற்றுமைக் கெதிர்பொருளினும் விடயப் பொருளினும் வருவனவெல்லாங் கொள்க.

இல், இன் உருபுகள் சிலவிடங்களிலே உம்மைபெற்றும் வரும். அவை 'அவனினும் பெரியனிவன்,' 'இவனினுஞ் சிறியனவன்' என வருதல் காண்க.

நீக்கப்பொருளிலே இல்,இன் உருபுகளின்மேல், நின்று இருந்து என்னப்பட்டவை தனித்தாவது உம் பெற்றாவது ஒரோவிடத்துச் சொல்லுருபுகளாக வரும். ஊரிலிருந்து போனான்' 'ஊரினின்று நீங்கினான்,' 'ஊரிலிருந்தும் போனான்,' ஊரினின்றும் வந்தான்' என வரும். (சஉ)

M. F ஆறாம்வேற்றுமை:—THE 6TH OR GENITIVE CASE.

300. ஆற னொருமைக் கதுவு மாதுவும்
பன்மைக் கவ்வு முருபாம் பண்புறுப்
பொன்றன் கூட்டம் பலவி னீட்டம்
திரிபி னாக்க மாந்தற் கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே.

(இ - ள்.) ஆறன் ஒருமைக்கு - ஆறாம் வேற்றுமையில் (வருமொழியி) னொருமைப் பொருண்மைக்கு, அதுவும் ஆதுவும் - (முன்சொல்லப்பட்ட) அதுவேயன்றி ஆதுவும், பன்மைக்கு - (வருமொழியின்) பன்மைப் பொருண்மைக்கு, அவ்வும் - அகரமும், உருபாம் - உருபுகளாகும்; பொருள் - அவற்

தின் பொருள்களாவன, பண்பு - குணமும், உறுப்பு - அவயவமும், ஒன்றன் கூட்டம் - ஒருபொருட் கூட்டமும், பலவினீட்டம் - பலபொருட் கூட்டமும், திரிபினுக்கம் - ஒன்றுதிரிந் தொன்றுதலும், ஆம் தற்கிழமையும் - ஆகிய ஐந்து தற்கிழமைப் பொருள்களையும், பிறிதின் கிழமையும் - அவையல்லாத பிறிதின் கிழமைப்பொருள்களையும், பேணுதல் - உடையனவாக (அவ்வுருபுகளையேற்ற பெயர்ப்பொருள்கள் வேறுபட்ட இவ்விருவகைச்) சம்பந்தப்பொருள்களு மாகும், எ-று.

தற்கிழமைப் பொருளாவது தன்னோ டொற்றுமையுடையது; பிறிதின்கிழமைப் பொருளாவது தன்னின் வேறாயது.

தற்கிழமைப்பொருள் இவையெனவே, இவையல்லாத பொருளுமிடமுங் காலமுமாகிய மூன்றும் பிறிதின் கிழமைப்பொருளென்றாகும். ஆகவே இப்படிப் பலவகையாலும் வருகின்ற சம்பந்தப்பொருளே இவ்வேற்றுமை யுருபுகளின் பொருளென்பதாயிற்று.

(உ-ம்.) (க) தற்கிழமை.

ஆறனுருபு:

சாத்தனது கருமை	(குணம்)	பண்பு.
சாத்தனது வரவு.	(தொழில்)	
சாத்தனது கை		உறுப்பு.
புலியது வால்.		
மாந்தரது தொகுதி		ஒன்றன் கூட்டம்.
நெல்லது குப்பை.		
படைகளது தொகுதி		பலவினீட்டம்.
பறவைகளது கூட்டம்.		
நெல்லினது பொரி		திரிபினுக்கம்.
மஞ்சளது பொடி.		

(உ) பிறிதின்கிழமை.

சாத்தனது பசு	பொருள்.
முருகனது வேல்.	
சாத்தனது வீடு	இடம்.
முருகனது குறிஞ்சி.	
சாத்தனது நாள்	காலம்.
மாரனது வேனில்.	

அதுவுருபு:
எனது கை
நினது தலை
தனது செவி.

அகரவுருபு:
என கைகள்
நின கைகள்
தன தாள்கள்.

} உறுப்பு.

'இராகுவினது தலை', 'எனதுயிர்' என ஆறனுருபு, உடையதும் உடைமைப்பொருளும் வேறாகாத ஒற்றுமைப்பொருளில் வருதலுங் கொள்க. இராகுவே தலையாதலாலும், நானெனப்பட்டது உயிரேயாதலாலும், ஒற்றுமைப் பொருளாயின. ஒற்றுமை=அபேதம்.

அஃறிணை யொருமை பன்மைகளுக்கு இயைந்த உருபுகள் இங்ஙனங் கூறவே, உயர்திணை யொருமை பன்மையாகிய கிழமைப்பொருளுக்கு இவ்வுருபுகள் ஏலாவென்பது பெற்றாம்.

உயர்திணைப்பெயர் வரும்போது, 'சாத்தனுக்கு மகன்' எனக் குவ்வுருபு வரும். சிறுபான்மை 'அரனது தோழன்' என உயர்திணை யொருமைப் பொருண்மைக்கும், 'நினதடியாரொடல்லால்' என உயர்திணைப்பன்மைப் பொருண்மைக்கும், 'எனது கைகள்' என அஃறிணைப்பன்மைப் பொருண்மைக்கும் அதுவுருபும் வரும். இவ்வீடெனது என்பவற்றில் அது ஆறனுருபன்று. துவ்விகுதியும் அகரச்சாரியையும்பெற்ற குறிப்பு வினைமுற்றெனக் கொள்ளக்கடவது. எனது போயிற்று என்பதில் எனது மேற்கூறியபடி குறிப்பு வினையாலணையும்பெயர்.

இவ்வாறனுருபுகளி லொன்று நிற்றற்குரிய விடத்தே உடைய என்பது சொல்லுருபாக வரும்; அது 'என்னுடைய வீடு' 'என்னுடைய தம்பி' எனவரும். (சங்.)

M. F. ஏழாம்வேற்றுமை:—THE 7TH OR LOCATIVE CASE.

301. ஏழ னுருபுகண் ணாதி யாகும்
பொருண்முத லாறு மோரிரு கிழமையின்
இடனாய் நிற்ற லிதன்பொரு ளென்ப.

(இ-ள்.) ஏழன் உருபு - ஏழாம் வேற்றுமையினுடைய உருபு களானவை, கண் ஆதி ஆகும் - (முன்சொல்லப்பட்ட கண்ணே யன்றி) அது முதலாகிய பிறவுமாம்; இதன்பொருள் - இவ்வுரு புகளுடைய பொருளாவது, பொருள் முதல் ஆறும் - பொரு ளாதியாகிய ஆறும், ஓர் இரு கிழமையின் - (ஆறும்வேற்றுமைச் சூத்திரத்திலே சொல்லப்பட்ட) இருகிழமைப் பொருள்களுக் கும், இடனாய் நிற்றல் - இடமாய் நிற்கிற உருபேற்ற பெயர்ப் பொருள் வேறுபட்ட அவ்விடப் பொருளாம், என்ப - என்று சொல்லுவர் புலவர், எ-று.

(உ-ம்.)

மணியின்கணிருக்கின்றதொளி ..	தற்கிழமை	பொருளிட மாயிற்று.
பனையின்கண் வாழ்கின்றதன்றில் ..	பிறிது	
ஊரின்கணிருக்குமில்லம் .	தற்கிழமை	இடம் இட மாயிற்று.
ஆகாயத்தின்கட்பறக்கின்றது பருந்து ..	பிறிது	
நாளின்கணுழிகையுள்ளது	தற்கிழமை	காலம் இட மாயிற்று.
வேனிற்கட்பாதிரி பூக்கும்	பிறிது	
கையின்கணுள்ளது விரல் .	தற்கிழமை	சினை யிட மாயிற்று.
கையின்கண் விளங்குகின்றது கடகம்.	பிறிது	
கறுப்பின்கண் மிக்கதழகு .. .	தற்கிழமை	குண மிட மாயிற்று.
இளமையின்கண்வாய்த்தது செல்வம்	பிறிது	
ஆடற்கணுள்ளது சதி . .	தற்கிழமை	தொழி லிட மாயிற்று.
ஆடற்கட் பாடப்பட்டது பாட்டு . .	பிறிது	

இடப்பொருளாவது வினைமுதற் றொழிற்காயினுஞ் செயப்படு பொருட்காயினும் இடமாகியபொரு ளாம்.

'மணியின்கணிருக்கின்ற தொளி' என்றவிடத்தே ஒளி வினை முதலாம், இருத்தல் அதன் வினையாம், மணி அத்தொழிலுக் கிடமாம், ஆதலால் அது இடப்பொருளாமென் றறிக. 'கழுவின் கட் கள்ளனை யேற்றினான்' என்றவிடத்தே கள்ளன் செயப் படுபொருளாம், அவனுயிர்ப்பிரிவு அதன் பயனும், கழு இப்பய னுக் கிடமாம், ஆதலால் அதுஇடப்பொருளா மெனவறிக.

இடப்பொருள் தன்னிற் சிறிதிடமாவதும், தான் முழுது மிடமாவதும், விடயமாவதும் என மூவகையாம்.

(உ-ம்,)

1.	ஊர்க்கணிருந்தான் தேரிலிருந்தான்.	சிறிதிடம்.
2.	தீயின்கண்ணுள்ளது சூடு பாலின்கட்சுவை.	முழுவது மிடம்.
3.	கல்வியின்கணுசை குடிகளின்கணிரக்கம்.	விடயம்.

சிறுபான்மை ஏழனுருபுகள் கூட்டிப்பிரிக்கும் எல்லைப்பொருளிலும், பிரித்துக்கூட்டிய கூட்டப்பொருளிலும், ஒருதொழிற் காலத்தைக் குறிக்கும் பிறிது தொழிலாகும் பொருளிலும் வரும்.

1.	குறிலைந்தனுள் அ, இ, உ இம்மூன் றுஞ் சுட்டு அவர்களிலிவன்.	கூட்டிப் பிரிக்கும் எல்லைப் பொருள்.
2.	கல்வி யறிவிலான் விலங்கினுள்வைத் தெண்ணப்படுவான் மற்றையான செத்தாருள் வைக்கப்படும்.	பிரித்துக்கூட் டுங் கூட்டப் பொருள்.
3.	மழை பெய்கையிற் சென்றான் பால் கறக்கையில் வந்தான்.	ஒரு தொழிற்காலத்தைக் குறிக்கும் பிறிதுதொழில்.

F ஏழாம்வேற்றுமையுருபுகள்:—THE SIGNS OF THE 7TH CASE.

302. கண்கால் கடையிடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலமிட மேல்கீழ் புடைமுதல்
பின்பா டளைதே முழைவழி யுழியுளி
உள்ளகம் புறமில் லிடப்பொரு ளுருபே.

(இ-ள்.) கண். ...இல் - கண் முதலாக இவ் ஈறாகச் சொல்லப்பட்ட இவ்விருபத்தெட்டும், இடப்பொருள் உருபு - (தம்மையேற்ற பெயர்ப்பொருளை) இடப்பொருளாக வேற்றுமை செய்கின்ற வுருபுகளாம், எ-று.

(கண்ணல்லாத வுருபுகளுக்கு உதாரணம்.)

ஊர்க்காணிவந்த பொதும்பர் . ..	கால்.
வேலின்கடைமணிபோற் றிண்ணியான் ...	கடை.
கல்லாரிடைப்புக்கு	இடை.

வலைத்தலைமானன்ன நோக்கியர் ... .. தலை.

குரைக்கடல்வாயமுதென்கோ .. வாய்.

தேர்த்திசையிருந்தான் ... . . திசை.

அவர்வயிற்செல்லாய் . .. . வயின்.

கற்றார்முற்றோன்றாகழிவிரக்கம் .. . முன்.

காட்டுச்சாரோடுங் குறுமுயால் ... .. சார்.

கைவலத்துள்ளது கொடுக்கும ... .. வலம்.

இல்லிடப்பரத்தை ... . இடம்.

தனமேற்கடுவரை நீரிற்கடுத்து வரக்கண்டும் ... மேல்.

பிண்டிக்கண்ணார் நிழற்கீழ் .. .. கீழ்.

எயிற்புடைநின்றான் ... .. . புடை.

சுரன்முதல்வந்த வுரன்மாய்மாலை . . முதல்.

காதலிபின்சென்றதம்ம .. .. . பின்.

நம்பாடணையாதநாள் . .. ... பாடு.

கல்லளைச்சுனைநீர் ... ... அளை.

தோழிகுரியவை கோடாய்தேத்து [கோடாய் - கைத்தாய்] ... . தேம்.

அவனுழைவந்தான் ... . உழை.

நின்றதோர்நறவேங்கை நிழல்வழியசைந்தன்ன . வழி.

உறையுழியோலைபோல ... ... உழி.

குயில்சேர் குளிர்காவுளி சேர்ந்துறையும் . உளி.

முல்லையங்குவட்டுள்வாழும் .. உள்.

பயன்சாராப் பண்பில்சொல் பல்லாரகத்து .. அகம்.

செல்லுமென்னுயிர்ப் புறத்திறுத்தமருண்மாலை . புறம்.

ஊரிலிருந்தார் .. .. இல்.

இனிக் கண் கால் முதலானவை இடவேறுபாடுகளை யுணர்த்தும்போது பலவகைப்பட்ட இடப்பெயர்களாம்.

(உ-ம்.) கண்ணகன்ஞாலம்

அகத்திலிருந்தான்

வீட்டின்புறத்திலிருந்தான்

மேலிடத்திருந்தான்

முன்னிருந்தான்

அயற்கண்ணிருந்தான்

இடைச்சுரம்
தென்றிசை. (சரு)

M F. விளிவேற்றுமை:—THE 8TH OR VOCATIVE CASE.

303. எட்ட னுருபே யெய்துபெய ரீற்றின்
திரிபு குன்றன் மிகுத லியல்பயல்
திரிபு மாம்பொருள் படர்க்கை யோரைத்
தன்முக மாகத் தானழைப் பதுவே.

(இ - ள்.) எட்டன் உருபு - எட்டாம் வேற்றுமையினுடைய உருபுகளானவை, எய்து பெயர் ஈற்றின் - விளியடைந்த பெய ரீற்றினுடைய, திரிபு - திரிதலும், குன்றல் - கெடுதலும், மிகுதல் - மிகுதலும், இயல்பு - இயல்பாதலும், அயல் திரிபும் - ஈற் றயலெழுத்துத் திரிதலும், ஆம் - ஆகும்; பொருள் - அவற்றின் பொருளாவது, படர்க்கையோரை - படர்க்கைப் பெயர்ப்பொ ருளை, தன் முகமாக - தனக் கெதிர்முகமாக, அழைப்பது - அழைப்பதாலாகிய விளிக்கப்படுபொருளாம், எ-று.

விளித்தற்குக் கருவியான உருபை விளியென்றது காரியவாகு பெயர். (சகூ)

விளிக்கட்படுபெயர்கள்:—NOUNS WHICH ADMIT OF THE VOCATIVE CASE.

304 இ உ ஊவோ டையோ னளரல
யவ்வீற் றுயர்திணை யோரவல் லிவற்றொடு
ணஃகா னாவீ றாகும் பொதுப்பெயர்
ஞநவொழி யனைத்தீற் றஃறிணை விளிப்பன.

(இ-ள்.) இ உ ஊவோடு ஐ ஓ ன ள ர ல ய ஈற்று உயர் திணைப் (பெயர்) - இகரமும் உகரமும் ஊகாரமும் ஐகாரமும் ஓகாரமும் என்கிற உயிர்களும் ன ள ர ல ய என்கிற மெய் களும் ஆகிய பத்தெழுத்துகளையும் இறுதியிலுடைய உயர்தி ணைப் பெயர்களும், ஓ ர அல் இவற்றொடு - ஓகாரவுயிரும் ரகர மெய்யும் ஒழிந்த இவ்வெட்டெழுத்துகளுடனே, ணஃகான் ஆ ஈறு ஆகும் பொதுப்பெயர் - ணகரமும் ஆவும் ஆகிய இரண் டுங் கூட்டவரும் பத்தெழுத்துகளும் இறுதியாகிய பொதுப் பெயர்களும், ஞ ந ஒழி - ஞகர நகரங்களும் (ஈறுகாத எகர

மும்) ஒழிந்த, அனைத்து ஈறு அஃறிணை - இருபத்தொரு எழுத்துகளையும் ஈற்றிலுடைய அஃறிணைப்பெயர்களும், விளிப்பன - அழைக்கப்படுவன, எ-று. (சஎ)

பொதுவிளியுருபு:—GENERAL VOCATIVE SIGNS.

305. இம்முப் பெயர்க்க ணியல்பு மேயும்
இகர நீட்சியு முருபா மன்னே.

(இ - ள்.) இம் முப்பெயர்க்கண் - முன் விளிக்கப்படுமென்ற மூவகைப் பெயர்களிடத்தும், இயல்பும் - இயல்பாதலும், ஏயும் - ஏகாரமிகுதலும், இகர நீட்சியும் - இகரம் ஈகாரமாதலும், உருபாம் மன் - பெரும்பாலும் விளியுருபுகளாகும், எ-று.

1. உயர்திணைப்பெயர்.

(உ-ம்.)	முனிகூறாய் ...	இயல்பு.
	வேந்துகூறாய் ...	
	ஆடூஉக்கூறாய் ...	
	விடலைகூறாய் ...	
	கோக்கூறாய் ...	
	கோன்கூறாய் ...	
	வேள்கூறாய் ...	
	மாந்தர்கூறீர் ...	
	தோன்றல்கூறாய் ...	
	சேய்கூறாய். ...	
	முனியேகூறாய் ...	ஏ மிகல்
	வேந்தேகூறாய். ...	
	நம்பீகூறாய் ...	இகரநீட்சி.
	தோழீகூறாய் ...	
	செவிலீகூறாய். ...	

2. பொதுப்பெயர்.

பிதாக்கூறாய் ...	இயல்பு.
ஆண்கூறாய் ...	
பெண்கூறாய். ...	
பிதாவேகூறாய் ...	ஏ மிகல்.
ஆணேகூறாய் ...	
பெண்ணேகூறாய். ...	
சாத்தீகூறாய் ...	இகரநீட்சி.
கொற்றீகூறாய் ...	

3. அஃறிணைப்பெயர்.

புல்வாய்கொடியை ... .. } இயல்பு.
விளக்கொடியை... .. ..
புல்வாயேகொடியை. .. .. } ஏ மிகல்.
விளாவேகொடியை. .. .
மந்திகொடியை.... ... .. இகரநீட்சி.

காட்டாதொழிந்த பெயர்களும் இப்படியே வரும். பெரும்பாலு மென்றதனால் இவ்வுருபுகள் சிலவற்றிற்குப் பொருந்தாமை யுளவேற் கொள்க. (௪௮)

ஐகாரவீற்றுப்பெயர்களின் விளியுருபு:—VOCATIVE SIGNS OF NOUNS ENDING IN ஐ

306. ஐயிறு பொதுப்பெயர்க் காயு மாவும்
உருபா மல்லவற் றாயு மாகும்.

(இ - ள்.) ஐ இறு பொதுப்பெயர்க்கு - (பொதுவிதியால் இயல்பும் ஏகாரமிகுதலு மன்றி) ஐகார ஈற்றுப் பொதுப்பெயர்க்கு, ஆயும் ஆவும்- ஐகாரம்) ஆய் ஆதலும் ஆ ஆதலும, அல்லவற்று - (பொதுப்பெயர் நீங்கலாக) உயர்திணை யஃறிணைப் பெயர்களுக்கு, ஆயும் - (பொதுவிதியால் வரும் இயல்பும் மிகலு மன்றி ஐகாரம்) ஆய் ஆதலும், உருபு ஆகும் - விளியுருபுகளாம், எ-று.

(உ-ம்.) அன்னை — அன்னாய் / அன்னா. { பொதுப்பெயர்க்கு ஆயும், ஆவும் வந்தன.

விடலை—விடலாய் / நாரை—நாராய். { உயர்திணைப் பெயர்க்கும் அஃறிணைப் பெயர்க்கும் ஆய் வந்தது.

உரையிற் கோடலென்னு முத்தியால் 'அன்னையுன்னையல்லவினி யாரைநினைக்கேனே' எனப் பொதுப்பெயர் ஏகாரமாகத் திரிதலும் கொள்க. (௪௯)

307. ஒருசார் னவ்வீற் றுயர்திணைப் பெயர்க்கண்
அளபீ றழிவய னீட்சி யதனோ
டுறு போத லவற்றோ டோவுறல்
ஈறழிந் தோவுற லிறுதியவ் வாதல்

அதனோ டயறிரிந் தேயுற லீறழிந்
தயலே யாதலும் விளியுரு பாகும்.

(இ-ள்.) ன ஈறு உயர்திணைப் பெயர்க்கண் - (பொதுவிதியன்றி) னகரமெய்யீற்று உயர்திணைப்பெயர்களுள், ஒருசார் அளபு - சில அளபெடுத்தலும், (ஒருசார்) ஈறு அழிவு - சில ஈறு கெடுதலும், (ஒருசார்) அயல் நீட்சி - சில ஈற்றயல் நீளுதலும், (ஒருசார்) அதனொடு ஈறு போதல் - சில ஈற்றயல் நீண்டு ஈறு கெடுதலும், (ஒருசார்) அவற்றொடும் ஓ உறல் - சில ஈறுகெட்டு ஈற்றயல் நீண்டு ஓகாரமிகுதலும், (ஒருசார்) ஈறு அழிந்து ஓ உறல் - சில ஈறுகெட்டு ஓகாரமிகுதலும், (ஒருசார்) இறுதி ய ஆதல் - சில இறுதி னகரமெய் யகரமெய்யாதலும், (ஒருசார்) அதனொடு அயல் திரிந்து ஏ உறல் - சில ஈற்று னகரமெய் யகரமெய்யாய்த் திரிந்து அயலில் ஆகாரம் ஓகாரமாய் ஏகார மிகுதலும், (ஒருசார்) ஈறு அழிந்து அயல் ஏ ஆதலும் - சில ஈறு கெட்டு அயலில் அகரம் ஏகாரமாதலும், விளி உருபு ஆகும் - விளியுருபுகளாகும், எ-று.

(உ-ம்.)

அம்பர்கிழான் — அம்பர்கிழாஅன் அளபாயிற்று.

புலவன்	— புலவ ...	... ஈறழிந்தது.
பெருமன்	— பெருமான்	... அயனீண்டது.
மன்னன்	— மன்ன ...	... அயனீண்டு ஈறுகெட்டது.
ஐயன்	— ஐயாவோ	... அயனீண்டு ஈறுகெட்டு ஓகார மிக்கது.
திரையன்	— திரையவோ	... ஈறழிந்து ஓகாரமிக்கது.
வாயிலான்	— வாயிலாய்	... இறுதி யவ்வாயிற்று.
வாயிலான்	— வாயிலோயே	இறுதி யவ்வாய் ஈற்றயல் ஆகாரம் ஓகாரமாய் ஏகார மிக்கது.
ஐயன்	— ஐயே ...	... ஈறழிந்து அயலில் அகரம் ஏகாரமாயிற்று.

ஒருசார் என்கிறதை விளியதிகார முழுதுங் கூட்டுக. (௫௦)

ளகரவீற் றுயர்திணைப்பெயர்களின் விளியுருபு:—VOCATIVE SIGNS OF PERSONAL NOUNS ENDING IN ள்.

308. ளஃகா னுயர்பெயர்க் களபீ றழிவயல்
நீட்சி யிறுதி யவ்வொற் றாதல்
அயலி லகரமே யாதலும் விளித்தனு.

(இ-ள்.) ளஃகான் உயர்பெயர்க்கு - (பொதுவிதியன்றி) ளகர மெய்யீற் றுயர்திணைப்பெயர்களுள், (ஒருசார்) அளபு - சில அளபெடுத்தலும், (ஒருசார்) ஈறு அழிவு - சில ஈறு கெடுதலும், (ஒருசார்) அயல் நீட்சி - சில ஈற்றயல் நீளுதலும், (ஒருசார்) இறுதி ய ஆதல் - சில இறுதி ளவ்வொற்று யவ்வொற்றாதலும், (ஒருசார்) அயலில் அகரம் ஏ ஆதலும் - சில ஈற்றயல் அகரம் ஏகாரமாதலும், விளித்தனு - விளியுருபுகளாகும், எ-று.

(உ-ம்.)

வேள்	—வேஎள்	..	அளபெடுத்தது.
எல்லாள்	—எல்லா	...	ஈறுகெட்டது.
மக்கள்	—மக்காள்	..	ஈற்றயனீண்டது.
குழையாள்	—குழையாய்	..	ளவ்வொற்று யவ்வொற்றாயிற்று.
அடிகள்	—அடிகேள்	..	ஈற்றயல் அகரம் ஏகார மாயிற்று. (௫௧)

ரகரவீற் றுயர்திணைப்பெயர்களின் விளியுருபு:—VOCATIVE SIGNS OF PERSONAL NOUNS ENDING IN ர்.

309. ரவ்வீற் றுயர்பெயர்க் களபெழ லீற்றயல்
அகரம் இஈ யாத லாண்டையா
ஈயாத லதனோ டேயுற லீற்றே
மிக்கயல் யாக்கெட் டதனய லீடல்
ஈற்றி னீருற லிவையுமீண் டுருபே.

(இ-ள்.) ர ஈறு உயர் பெயர்க்கு - (பொதுவிதியன்றி) ரகரமெய்யீற்று உயர்திணைப்பெயர்களுள், (ஒருசார்) அளபு * எழல் - சில அளபெடுத்தலும், (ஒருசார்) ஈறு அயல் அகரம் இ ஈ ஆதல் - சில ஈற்றயல் அகரமானது இகரமாதலும் ஈகாரமாதலும், (ஒருசார்) ஆண்டை ஆ ஈ ஆதல் - சில அவ்வீற்றயல் ஆகாரம் ஈகாரமாதலும், (ஒருசார்) அதனோடு ஏ உறல் - சில

அதனோடு ஏகாரம் ஏற்றலும், (ஒருசார்) ஈறு ஏ மிக்கு அயல் யா கெட்டு அதன் அயல் நீடல் - சில ஈற்றில் ஏகாரமிக்கு அயலில் யாக்கெட்டு அதனயல் இகரம் ஈகாரமாதலும், (ஒருசார்) ஈற்றின் ஈர் உறல் - சில ஈற்றில் ஈர் அடைதலும், இவையும் - ஆகிய இவையும், ஈண்டு உருபு - இவ்விடத்து விளியுருபுகளாகும், எ-று.

(உ-ம்.)

சிறார் —சிறாஅர் . அளபெடுத்தது.
தெவ்வர் —தெவ்விர் .. ஈற்றயல் அகரம் இகரமாயிற்று.
நாய்கர் —நாய்கீர் .. ஈற்றயல் அகரம் ஈகாரமாயிற்று.
சான்றார் —சான்றீர் .. ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாயிற்று.
கணியார் —கணியீரோ.. { ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாய் ஏகாரமிக்கது.
நம்பியார் —நம்பீரே .. { ஈற்றில் ஏகாரமிக்கு அயல் யாக்கெட்டு அதனயல் இகரம் ஈகாரமாயிற்று.
எமர் —எமரீர் .. ஈர் ஏற்றது.

ஈண்டு என்ற மிகையால் கடலாரே, கடலீரே, சாத்தியாரே, சாத்தியீரே எ-ம், அஃறிணைப்பெயர் பொதுப்பெயர்களைச் சிறப்பித்து ரவ்வீற்று உயர்திணைப்பெயர் போலக் கூறினும் இவ்வுருபேற்றல் கொள்க. (௫௨)

F. லகர யகரவீற்றுயர்திணைப்பெயர்களின் விளியுருபு:—
VOCATIVE SIGNS OF PERSONAL NOUNS ENDING IN ல் AND ய்.

310. லகாரவீற் றுயர்பெயர்க் களபய னீட்சியும்
யகார வீற்றிற் களபுமா முருபே.

(இ-ள்.) லகார ஈறு உயர் பெயர்க்கு - பொதுவிதியன்றி) லகரமெய்யீற்று உயர்திணைப்பெயர்க்கு, (ஒருசார்) அளபு - சில அளபெடுத்தலும், (ஒருசார்) அயல் நீட்சியும் - சில ஈற்றயல் நீளுதலும், யகர ஈறு (உயர்பெயர்க்கு) - யகரமெய்யீற் றுயர்திணைப்பெயர்க்கு, அளபும் - அளபெடுத்தலும், உருபு ஆம் - விளியுருபுகளாகும், எ-று.

(உ - ம்.) மால் —மா அல் அளபு.
தோன்றல் —தோன்றால் அயல்நீட்சி.
சேய் —சேஎய் அளபு. (ருகூ)

M. F னகரவீற் றஃறிணைப்பெயர் பொதுப்பெயர்களின் விளியுருபு:—VOCATIVE SIGNS OF IMPERSONAL AND COMMON-CLASS NOUNS ENDING IN ன்.

311. னவ்வீற் றுயர்திணை யல்லிரு பெயர்க்கண்
இறுதி யழிவத னோடய னீட்சி.

(இ - ள்.) ன ஈறு உயர்திணை அல் இருபெயர்க்கண் - (பொதுவிதியன்றி) னகரமெய்யீற் றஃறிணைப்பெயர் பொதுப்பெயர்களிடத்து, (ஒருசார்) இறுதி அழிவு - சில ஈறு கெடுதலும், (ஒருசார்) அதனோடு அயல் நீட்சி - சில ஈறு கெடுதலுடனே ஈற்றயல் நீளுதலும் (விளியுருபுகளாம்), எ-று.

அலவன்	அலவ —ஈறழிவு		அஃறிணைப்பெயர்.
	அலவா —அதனோடயனீட்சி		
கலுழன்	கலுழ —ஈறழிவு		
	கலுழா —அதனோடயனீட்சி		
சாத்தன்	சாத்த —ஈறழிவு		பொதுப் பெயர்.
	சாத்தா —அதனோடயனீட்சி		
கொற்றன்	கொற்ற —ஈறழிவு		
	கொற்றா —அதனோடயனீட்சி		(ருச)

லகர ளகர வீற் றஃறிணைப்பெயர் பொதுப்பெயர்களின் விளியுருபு:—VOCATIVE SIGNS OF IMPERSONAL AND COMMON-CLASS NOUNS ENDING IN ல் & ள்.

312. லளவீற் றஃறிணைப் பெயர்பொதுப் பெயர்க்கண்
ஈற்றயனீட்சியு முருபா கும்மே.

(இ - ள்.) ல ள ஈறு அஃறிணைப்பெயர் பொதுப்பெயர்க்கண் - லகர ளகர மெய்யீற் றஃறிணைப் பெயர்க்கும் பொதுப்பெயர்க்கும், ஈறு அயல் நீட்சியும் - (பொதுவிதியன்றி) ஈற்றயலெழுத்து நீளுதலும், உருபு ஆகும் - விளியுருபாகும், எ-று.

(உ-ம்.)

முயல்	—முயால்	அஃறிணைப் பெயர்.
கிளிகள்	—கிளிகாள்	
தூங்கல்	—தூங்கால்	பொதுப்பெயர்.
மக்கள்	—மக்காள்	

(௫௫)

M. F. விளியுருபுகளுக்குப் புறனடை:—A REMARK ON VOCATIVE SIGNS.

313. அண்மையி னியல்புமீ றழிவுஞ் சேய்மையின்
அளபும் புலம்பி னோவு மாகும்.

(இ - ள்.) (முன்சொல்ப்பட்ட விளியுருபுகளுள்), **அண்மையின்** - சமீப விளிகளுக்கு, இயல்பும் ஈறு அழிவும் - இயல்பாதலும் ஈறுகெடுதலும், சேய்மையின் - தூர விளிகளுக்கு, அளபும் - அளபெடுத்தலும், புலம்பின் - புலம்பல் விளிகளுக்கு, ஓவும் - ஓகாரமிகுதலும், ஆகும் - வரும், எ-று.

எனவே மற்றை விளிவேற்றுமையுருபுகள் இம்மூன்றிடங்களிலுங் கலந்து வருமென்கிறது பெற்றும்.

(உ-ம்.)	அன்னை / அன்னையே.	—அண்மைவிளி
	வேஎள்.	—சேய்மைவிளி
	ஐயாவோ.	—புலம்பல்விளி.

(௫௬)

F. விளிக்கப்படாப் பெயர்கள்:—NOUNS WHICH DO NOT ADMIT OF THE VOCATIVE CASE.

314 நுவ்வொடு வினாச்சுட் டுற்ற னளர
வைதுத் தாந்தா னின்னன விளியா.

(இ - ள்.) நுவ்வொடு - நுவ்வுடனே, வினா - (மூன்றுமுதல்) வினாவையும், சுட்டு - (மூன்று) சுட்டையும், உற்ற - முறையே பொருந்திய, ன ள ர - ன ள ர மெய்யீற் றுயர்திணைப் பெயர்களும், வை, து - வை து என்கிற இரண்டு ஈற் றஃறிணைப் பெயர்களும், தாம் தான் - இவ்விரண்டு பொதுப்பெயர்களும், இன்னன - இவைபோல்கின்ற பிறவும், விளியா - விளிக்கப்படுவனவல்ல, எ-று.

(உ - ம்.)

நுமன், நுமள், நுமர் ;
எவன், எவள், எவர், எது, எவை;
யாவன், யாவள், யாவர், யாது, யாவை;
ஏவன், ஏவள், ஏவர், ஏது, ஏவை;
அவன், அவள், அவர், அது, அவை;
இவன், இவள், இவர், இது, இவை;
உவன், உவள், உவர், உது, உவை;
தான்;
தாம்;

} இப்பெயர்கள் விரவியேயா.

இன்னனவென்றதனால், பிறன், மற்றையான் முதலானவை யுங் கொள்க.

வை து என்கிற இரண்டும் நுவ்வொடு பொருந்தாதென்பார் ஒடுக்கொடுத்துப் பிரித்தார். (ருஎ)

F. முதற்சினைப் பெயர்களில் ஐ, அது, கண் என்னு மூன்றுருபுகளும் வருமாறு:—SPECIAL RULE REGARDING THE USE OF THE CASAL SIGNS ஐ, அது AND கண் IN NOUNS EXPRESSING WHOLE AND ITS PARTS.

315. முதலை யையுறிற் சினையைக் கண்ணுறும்.
அதுமுதற் காயிற் சினைக்கை யாகும்.

(இ - ள்.) முதலை - முதற்பெயரை, ஐ உறின் - ஐயுருபு பொருந்தினால், சினையை - சினைப்பெயரை, கண் உறும் - கண்ணுருபு பொருந்தும் ; அது - அது உருபு, முதற்கு ஆயின் - முதற்பெயர்க்கு வரின், சினைக்கு - சினைப்பெயர்க்கு, ஐ ஆகும் - ஐ உருபு வரும், எ-று.

இன்னும் இரட்டுறமொழிதல் என்கிற உத்தியால் 'அதுமுதற் காயிற் சினைக்கையாகும்' என்கிற வாக்கியத்தில் அது வென்பதற்கு அக் கண்ணுருபு எனவும் பொருளுரைத்துக் கொள்க.

(உ - ம்.)

யானையைக் காலின்கண் வெட்டினான்
யானையது காலை வெட்டினான்
யானையின்கட் காலை வெட்டினான்.

என்னவே முதல் சினை யிரண்டிலும் ஐயுருபு வருவது சிறப்பன் றென்பதாயிற்று. (௫௮)

F. முதல் சினை என்பன உரைப்போர் குறிப்பிலுள்ளன:—THE WHOLE AND PART ARE ONLY IN THE CONCEPTION OF THE SPEAKER.

316. முதலிவை சினையிவை யெனவே றுளவில
உரைப்போர் குறிப்பின வற்றே பிண்டமும்.

(இ - ள்.) முதல் இவை சினை இவை என - (கடங்களிவை படங்களிவை என்கிறது போல) முதற்பொருள்களிவை சினைப் பொருள்களிவை என்கிறதற்கு, வேறு உள இல - (இரண்டாக) வேறுள்ளன இலவாம்; உரைப்போர் - (ஒரு பொருளையே இரண்டாகப் பகுத்துச்) சொல்வோரது, குறிப்பின - குறிப் பின் மாத்திரையளவே யாம்; பிண்டமும் - பிண்டப்பொரு ளும், அற்று - அத்தன்மைத்தாம், எ-று.

முன் சூத்திரத்திலே முதல் சினை இரண்டனிடத்தும் ஐயுருபு வாராதென்பது தோன்றச் சொல்லியதற்குக் காரணமும் அச் சூத்திரப்பொருளோடு இச்சூத்திரப்பொருளைப் பிண்டப்பொ ருளுக்கும் ஏற்பித்தலும் உணர்த்துகின்றது.

யானையைக் குறித்தபோது யானையுண்டாக அதனுடைய கை கால் கொம்பு முதலியவை வேறில்லையாம்; அவ் வவயவத் தைக் குறித்தபோது அவையுண்டாக யானை வேறில்லையாம், ஆதலால் இப்படிச் சொல்லப்பட்டன.

இனிப் பிண்டப்பொருள்—நெல்லைப் பொலியின்கண் வாரி னன், நெல்லினது பொலியை வாரினன் என வரும். பிண்டப் பொருளாகிய பொலிக்குப்பையும், பிண்டித்த பொருளாகிய நெல்லும் வேறாகாமையால் அவ்விரண்டனிடத்தும் ஐயுருபு வருவது சிறப்பன்றென வறிக. (௫௯)

M. F. வேற்றுமை மயக்கம்:—INTERCHANGE OF CASES.

317. யாத னுருபிற் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்.

(இ-ள்.) யாதன் உருபின் கூறிற்று ஆயினும் - (ஒரு வேற்று மைப்பொருள்) மற்றொரு வேற்றுமை யுருபால் சொல்லப்பட்ட தாயினும், பொருள் செல் மருங்கின் - அப்பொருள் சென்ற வழியே, வேற்றுமை சாரும் - வேற்றுமையுருபு சேரும், எ-று.

எனவே, பொருளுக்கியையாது மயங்கிவந்த வேற்றுமை யுருபை அப்பொருளுக்கியைந்த உருபாகத் திரித்துக்கொள்க என்பதாயிற்று.

(உ-ம்.)

1. 'நாகுவேயொடு நக்கு வீங்குதோள்' — இங்குவேய் உடனிகழ்ச்சிப் பொருளாகாது செயப்படுபொருளாய் நிற்றலால், ஓடு வுருபை ஐயுருபாய்த் திரித்துக்கொள்க. [நாகு - இளமை, நகல் - நகைத்தல்.]

2. 'மணற்கின்ற நாணற்கிழங்கின் முளை'—இங்கு மணல் கோடற் பொருளாகாது இடப்பொருளாய் நிற்கையாற் குவ்வுருபைக் கண்ணுருபாகத் திரித்துக்கொள்க.

இனி உரையிற்கோட லென்கிற உத்தியால் ஒரு வேற்றுமைப்பொருள் மற்றொரு வேற்றுமை யுருபோடு தகுதியாய் வருதலும் உண்டெனக் கொள்க. அவை வருமாறு:—

(a) வினைமுதற்பொருள் எழுவாயுடனேயும் மூன்றனுருபுடனேயும் அன்றிச் சிறுபான்மை நான்கனுருபுடனேயும் வரும்.

(உ-ம்.) அவர்க்குச் செய்யத்தகு மக்காரியம்.

(b) செயப்படுபொருள் இரண்டனுருபோடன்றிச் சிறுபான்மை எழுவாயுருபோடும், மூன்றனுருபோடும், நான்கனுருபோடும், ஐந்தனுருபோடும், ஏழனுருபோடும் வரும்.

(உ-ம்.)	சோறிடப்பட்டது	எழுவாய்
	அரிசியாற் சோறாக்கினான்	௩ - ஆல்.
	அவட்குக் கொள்ளு மிவ்வணிகலம்	௪ - கு.
	பழியினஞ்சும்	௫ - இன்.
	தூணின்கட்சார்ந்தான்.	௭ - கண்.

(c) கருவிப்பொருள் மூன்றனுருபோடும் ஐந்தனுருபோடும் அன்றிச்சிறுபான்மை எழுவா யுருபோடும், நான்க னுருபோடும் வரும்.

(உ-ம்.)	கண்காணும்	எழுவாய்
	கண்ணிற்குக்காணும்	௪ - கு.

(d) கோடற்பொருள் நான்கனுருபோடன்றிச் சிறுபான்மை இரண்ட னுருபோடும், மூன்றனுருபோடும் வரும்.

(உ-ம்.) 'செய்யவ டௌவையைக் காட்டிவிடும்' எழுவாய். சாத்தனோடு சொன்னான். ந - ஓடு.

(e) பொருட்டுப்பொருள் இரண்டனுருபோடும் வரும்.

(உ-ம்.) கூலியைக் குறித்து வேலைசெய்தான்.

(f) நீக்கப்பொருள் ஐந்த னுருபோடன்றிச் சிறுபான்மை இரண்டனுருபோடும் வரும்.

(உ-ம.) மதுரையை நீங்கினான்.

(g) எல்லைப்பொருள் நான்கனுருபோடும் வரும்.

(உ-ம்.) மதுரைக்கு வடக்குச் சிதம்பரம்.

(h) சம்பந்தப்பொருள் ஆறனுருபோடன்றிச் சிறுபான்மை ஏழனுருபோடும் வரும்.

(உ-ம்.) உயிர்க்கணுணாவு.

(i) இடப்பொருள் ஏழனுருபோடன்றிச் சிறுபான்மை இரண்ட னுருபோடும், நான்கனுருபோடும் வரும்.

(உ-ம்.) வழியைச்சென்றான்	உ - ஐ
வீட்டிற்குப்போவான்	ச - கு
நாளைக்குவருவான்.	ச - ,,

மற்று மிப்படி வருவனவற்றை ஆராய்ந்து அறிந்து கொள்க.

ஐ, ஆன், கு இவ் வேற்றுமையுருபுகள் செய்யுளில் திரிந்து வருதல்:—POETICAL LICENSE REGARDING THE CASAL SIGNS ஐ, ஆன் AND கு.

318. ஐயான்குச் செய்யுட் கவ்வு மாகும்
ஆகா வஃறிணைக் கானல் லாதன.

(இ-ள்.) ஐ ஆன் கு - ஐயும் ஆனும் குவ்வும் ஆகிய மூன்றுருபுகளும், செய்யுட்கு அவ்வுமாகும் - செய்யுளிடத்து ஒரோவழி அகரமாகத் திரிந்துவரவும் பெறும; அஃறிணைக்கு - அஃறிணையிடத்து, ஆன் அல்லாதன ஆகா - ஆன் அல்லாத ஐயுங் குவ்வும் (அகரமாகத்) திரியாவாம், எ-று.

(உ - ம்.)

காவலோனைக் களிறஞ்சும்மே	—காவலோனக்	உயர்திணை.
புலவரான்	—புலவரான	
கடிநிலையின்றேயாசிரியற்கு	—ஆசிரியற்க	
புள்ளினான்	—புள்ளினான	அஃறிணை.

M. F. எட்டு வேற்றுமைகளுக்கும் முடிக்குஞ்சொல்:—
GOVERNMENT OF CASES.

319. எல்லை யின்னு மதுவும் பெயர்கொளும்
அல்ல வினைகொளு நான்கே ழிருமையும்
புல்லும் பெரும்பாலு மென்மனார் புலவர்.

(இ-ள்.) எல்லை இன்னும் - எல்லைப்பொருட்டதாகிய ஐந்தாம் வேற்றுமையும், அதுவும் - ஆறும் வேற்றுமையும், பெயர் கொளும் - பெயரைக் கொண்டுமுடியும், அல்ல - ஒழிந்த எழுவாய் முதலிய வேற்றுமைக ளெல்லாம், வினைகொளும் - வினையைக் கொண்டுமுடியும்; நான்கு ஏழ் - நான்காம் வேற்றுமையும் எழாம் வேற்றுமையும், இருமையும் - வினையையேயன்றி வினையோடு பொருந்தும் பெயரையும், புல்லும் பெரும்பாலும் - பெரும்பாலுங் கொண்டுமுடியும், என்மனார் புலவர் - என்று சொல்லுவர் புலவர்கள், எ-று.

பெரும்பாலு மென்றதனால் வினைகொளற்கு உரியன சிறுபான்மை தொழிற்பெயரையும் வினையாலணையும் பெயரையுங் கொண்டு முடிதலும், எழுவாய் வேற்றுமை வினைகொண்டு முடிதலேயன்றிச் சிறுபான்மை பெயரையும், வினவையுங் கொண்டு முடிதலுங் கொள்க.

(உ - ம்.)

(1) கருவூரின்கிழக்கு
சாத்தனதுகை.
} எல்லை இன்னும் அதுவும் பெயர்கொண்டன.

(2) சாத்தன்வந்தான்
சாத்தன் கரியன்.
குடத்தை வனைந்தான்
குடத்தை யுடையான்.
வாளால் வெட்டினான்
வாளால் வலியன்.
சாத்தனுக்குக் கொடுத்தான்
சாத்தனுக்கு நல்லன்.
நோயின் நீங்கினான்
நோயிற் கொடியன்.
அவையின்கணிருந்தான்.
அவையின்கட் பெரியன்
கொற்றா கொள்
கொற்றா வலியை.
} அல்லன தெரிநிலையும் குறிப்புமாகிய வினைகளைக்கொண்டன.

273

(3) பிணிக்குமருந்து / மணியின்கணொளி — நான்காம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் பெயருங்கொண்டன.

இப் பெயர்கள் இன், அது உருபுகள்கொண்ட பெயர்கள் போலாகாது பிணிக்குக் கொடுக்கும் மருந்து, மணியின்கண் இருக்கும் ஒளி என வினைவேண்டி நிற்றலால் வினையொடு பொருந்தும் பெயர்களாயின.

(4) சாத்தன் அவன் / சாத்தன் யாவன் / சாத்தன் யார் — எழுவாய் வேற்றுமை பெயரையும் வினாவையும் வினாவினைக் குறிப்பையுங் கொண்டது.

இனி வினைகொளும் எனப் பொதுப்படக் கூறினதினாலே ஒழிந்த வினைவிகற்பங்களெல்லாம் வருவித்து முடித்துக் கொள்க.

(5) சாத்தன்
சாத்தன் வந்து
சாத்தன் வராத
சாத்தன் வராது
சாத்தன் வருதல்
சாத்தன் வந்தனன்
குடத்தை வனைந்த
குடத்தை வனைந்து
குடத்தை வனையாத
குடத்தை வனையாது
குடத்தை வனைதல்
குடத்தை வனைந்தவன்.
— வினை விகற்பங்களுந் தொழிற்பெயரும், வினையாலணையும் பெயருங் கொண்டன.

மற்ற வுருபுகளோடு இவ்வாறே ஒட்டி முடித்துக்கொள்க. ()

பெயரியல் முற்றிற்று.

உ. வினையியல்.

ON VERBS.

M. F. தெரிநிலை வினைச்சொல்லின் பொதுவிலக்கணம்.

VERB DEFINED.

320. செய்பவன் கருவி நிலஞ்செயல் காலம்
செய்பொரு ளாறுந் தருவது வினையே.

(இ - ள்.) செய்பவன் - கருத்தாவும், கருவி - காரணமும், நிலம் - இடமும், செயல் - செயலும், காலம் - காலமும், செய்பொருள் - செயப்படுபொருளும் ஆகிய, ஆறும் தருவது - அறுவகைப் பொருளையும் கொடுப்பது, வினை - தெரிநிலை வினைச்சொல்லாம், எ-று.

நட வா முதலியவெல்லாந் தழுவுதற்குச் 'செய்' என்றார். செய்பவனென ஆண்பாலிலே சொன்னாரேனும், 'ஒருமொழி யொழிதன் னினங்கொளற்குரித்தே' என்னும் பொதுச் சூத்திரத்தினால் ஐம்பாலுங் கொள்க.

(உ - ம்.)

வனைந்தான்—இதில் செய்பவன் - குயவன்; கருவி - மண் (முதற்கருவி), தண்ட சக்கரம் முதலியன (துணைக்கருவி; நிலம் - வனையும் இடம்; செயல் - வனையுந்தொழில்; காலம் இறந்தகாலம்; செய்பொருள் - குடம்முதலியன பாண்டங்கள்.

ஆறும் என்ற உம்மையை உயர்வுசிறப்பும்மை யாக்கி இழிந்தன சிலவுள, அவை வேண்டுமேற் கொள்க எனப்பொருளுரைத்து, இன்னதற்கு இதுபயன் என்பவைகளுங் கூட்டிக் கொள்க. அவை பிறர்க்கு வனைந்தான், பொருள்கருதி வனைந்தான் எனவரும். இவ்விரண்டும் கருவியில் அடங்கவும் பெறுமாதலால் இழிந்தன வாயின.

இன்னும் ஆறுந்தருவது வினை என்றதற்கு 'முற்றும்மையொரோவழி யெச்சமுமாகும்' என்கிற இடையியல் [426] சூத்திரத்தால் இத்தொகையிற் சில குறைந்துவரவும் பெறுமெனப் பொருளுரைத்துக் கொள்க.

(உ - ம்.)

கொடியாடிற்று — இதில் ஆடுதல் வினைக்குச் செயப்படு பொருள் குறைந்துவருதல் காண்க.

முற்றுவினைகளிலே பகுதியாற்செயலும், விகுதியாற் செய்பவனும், இடைநிலை முதலியவற்றாற் காலமும், பெயரெச்ச வினையெச்சங்களிலே இம்முறையே செயலுங் காலமும் வெ

ளிப்படையாகத் தோன்றுதலால், மற்றவை குறிப்பாற் றோன்றுமெனக் கொள்க. (௧)

M. F. குறிப்புவினைச்சொல்லின் பொதுவிலக்கணம்:—

INDEFINITE VERB DEFINED.

321 பொருண்முத லாறினுந் தோற்றிமுன் னாறனுள்
வினைமுதன்மாத்திரைவிளக்கல் வினைக்குறிப்பே

(இ - ள்.) பொருள் முதல் ஆறினும் தோற்றி - பொருளாதியாறுங் காரணமாக (அவற்றினிடத்தே) பிறந்து, முன் ஆறனுள் - முன்சொல்லப்பட்ட செய்பவன் முதலாய ஆறனுள் வினைமுதல் மாத்திரை விளக்கல் - கருத்தா ஒன்றையே விளக்குதல், வினைக்குறிப்பு - வினைக்குறிப்புச் சொல்லின் இலக்கணமாம், எ-று.

பொருண் முதலாறும் "பொருளிடங்காலம்" என்னும் பதவியல் ஐந்தாவது [132] சூத்திரத்திலே சொல்லப்பட்டன.

(உ - ம்.)

குழையினன் .. பொன்னினன் ..	பொருள்.	தாளன் .. கண்ணன் ..	சினை
அகத்தினன் .. புறத்தினன் ..	இடம்.	கரியன் .. நல்லன் ..	குணம்
ஆதிரையான் .. ஓணத்தான் ...	காலம்.	நடையன் . சொல்லன் ..	தொழில்

இவற்றுள் விகுதியாற் செய்பவன் விளங்கிற்று. மற்றவைகள் குறிப்பாக உண்டெனக் கொள்க. ஒன்றைக் குழையினன், ஒன்றாற் குழையினன் என வாராமையால், குழையினன் என்கிறதற்குக் கருவியுஞ் செயப்படுபொருளு மில்லையென்றும், ஒன்றையுடையன், ஒன்றுனுடையன் என வருதலால் உடையன் என்கிறதற்கு ஆறும் உண்டெனவுங் கொள்க. (உ)

M F. வினைச்சொற்களின் பகுப்பு, [முற்று, எச்சம்]:—

SUB-DIVISION OF VERBS, [FINITE VERBS AND PARTICIPLES.]

322. அவைதாம்,
முற்றும் பெயர்வினை யெச்சமு மாகி
ஒன்றற் குரியவும் பொதுவு மாகும்.

(இ - ள்.) அவைதாம் - (முன்னிரண்டு சூத்திரங்களாலுந் தெரிநிலையாயுங் குறிப்பாயும் வருமென்ற) வினைச்சொற்கள், முற்றும் - முற்றுவினைச்சொற்களும், பெயர் வினை எச்சமும் ஆகி - பெயரெச்ச வினைச்சொற்களும் வினையெச்ச வினைச்சொற்களும் ஆகி, ஒன்றற்கு உரியவும் - (திணைபாலிடங்களுள்) ஒன்றற்குச் சிறப்பாய் வருவனவும், பொதுவும், - பலவற்றிற்குப்) பொதுமையி னிற்பனவும், ஆகும் - ஆகும், எ-று.

இவற்றிற்கு உதாரணம் பின்வரும் தத்தஞ் சிறப்புச் சூத்திரங்களிற் காண்க.

இனி 'ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே' என்னும் [பொது-358] சூத்திரத்தினால், பிறவழியால் ஒன்றற்குரியவும் பொதுவுமாய் நிற்பனவுஞ் சிலவுள வெனக் கொள்க.

(உ-ம்.) (1)	நடந்தான்	— தன்வினை.
	நடத்தினான்	— பிறவினை.
	வெளுத்தான்	— மேலிரண்டிற்கும் பொதுவினை.
(2)	நடந்தான்	— விதிவினை.
	நடவான்	— மறைவினை.
	சாவான்	— மேலிரண்டிற்கும் பொதுவினை.
	வேவான்	— மேலிரண்டிற்கும் பொதுவினை.
(3)	உண்பான்	— செய்வினை.
	உண்ணப்பட்டது	— செயப்பாட்டுவினை.
	புலிகொன்றயானை	— 'கொன்ற' மேலிரண்டிற்கும் பொதுவினை.
(4)	தேடியசாத்தன் தேடியவந்தான்	ஒருசொல்லே ஈரெச்சங்களுக்கும் பொதுவாய் வந்தது. ()

---

௪. முற்றுவினை.
FINITE VERBS.

M. F முற்றுவினையின் இலக்கணம்:—FINITE VERB DEFINED.

323. பொதுவியல் பாறையுந் தோற்றிப் பொருட்பெ
முதலறு பெயரல தேற்பில முற்றே. [யர்

(இ - ள்.) பொது இயல்பு ஆறையும் தோற்றி - (பலவகை வினைகளுக்கும்) பொது இலக்கணமாகிய செய்பவன் முதல் ஆறையும் தோன்றச்செய்து, பொருட்பெயர் முதல் அறுபெயர் அலது - பொருட்பெயர் முதலாகிய அறுவகைப் பெயரல்லாத மற்றொன்றையும், ஏற்பில - ஏலாதன, முற்று - முற்று வினைகளும் வினைக்குறிப்பு முற்றுகளுமாம், எ-று.

(உ - ம்.)

செய்தானவன் — தெரிநிலை நல்லனவன் — குறிப்பு	}	பொருட்பெயர் கொண்டன.
குளிர்ந்தது நிலம் — தெரிநிலை நல்லது நிலம் — குறிப்பு	}	இடப்பெயர் கொண்டன.
வந்ததுகார் — தெரிநிலை நல்லதுகார் — குறிப்பு	}	காலப்பெயர் கொண்டன.
குவிந்ததுகை — தெரிநிலை நல்லதுகை — குறிப்பு	}	சினைப்பெயர் கொண்டன.
பரந்ததுபசப்பு — தெரிநிலை நல்லதுபசப்பு — குறிப்பு	}	குணப்பெயர் கொண்டன.
ஒழிந்ததுபிறப்பு — தெரிநிலை நல்லதுபிறப்பு — குறிப்பு	}	தொழிற்பெயர் கொண்டன.

மற்றைத் திணைபாலிடங்கள்தோறும் ஒட்டுக. (ச)

தெரிநிலைவினைமுற்றின் விகற்பங்கள்:—27 INFLECTIONS WHICH FINITE VERBS UNDERGO ON ACCOUNT OF PERSON, TENSE, NUMBER AND GENDER.

324 ஒருவன் முதலைந்தையும்படர்க்கையிடத்தும்
ஒருமைப்பன்மையைத்தன்மைமுன்னிலையினும்
முக்காலத்தினுமுரணமுறையே
மூவைந்திருமூன்றுறுய்முற்று
வினைப்பதமொன்றேமூவொன்பானும்.

(இ-ள்.) ஒருவன் முதல் ஐந்தையும் - ஆண்பால் முதலாகிய ஐம்பால் வினைமுற்றுக்களையும், படர்க்கை இடத்தும் - படர்க்கையிடத்திலும், ஒருமை பன்மையை - ஒருமை வினைமுற்றையும் பன்மை வினைமுற்றையும், தன்மை முன்னிலையினும் - தன்-

மையிடத்திலும் முன்னிலையிடத்திலும் (வைத்து), முக்காலத்திலும் முரண - முக்காலங்களாலும் மாற, முறையே - (சொல்லப்பட்ட) முறையே, மூவைந்து - (படர்க்கை வினைமுற்றுக்கள்) பதினைந்தும், இரு மூன்று - (தன்மை வினைமுற்றுக்கள்) ஆறும், ஆறு ஆய் - (முன்னிலை வினைமுற்றுக்கள்) ஆறும் ஆகி முற்றுவினைப் பதம் ஒன்று - தெரிநிலை வினைமுற்றுப்பதமொன்றே, மூவொன்பான் ஆம் - இருபத்தேழாகும், எ-று.

(உ - ம்.)

இறந்தகாலம்.	நிகழ்காலம்.	எதிர்காலம்.
	படர்க்கை - 15.	
ஆண். நடந்தான்	நடக்கின்றான்	நடப்பான்
பெ. நடந்தாள்	நடக்கின்றாள்	நடப்பாள்
பலர். நடந்தார்	நடக்கின்றார்	நடப்பார்
ஒன். நடந்தது	நடக்கின்றது	நடப்பது
பல். நடந்தன	நடக்கின்றன	நடப்பன.
	தன்மை - 6.	
ஒரு. நடந்தேன்	நடக்கின்றேன்	நடப்பேன்
பன். நடந்தேம்	நடக்கின்றேம்	நடப்பேம்.
	முன்னிலை - 6.	
ஒரு. நடந்தாய்	நடக்கின்றாய்	நடப்பாய்
பன். நடந்திர்	நடக்கின்றீர்	நடப்பீர்.

ஆக வகை ந-க்கும் தெரிநிலை வினைமுற்று ஒரு பகுதிமேல் இருபத்தேழாகியவாறு காண்க. (ஞ)

M. F ஆண்பாற் படர்க்கை வினைமுற்று:—MASCULINE FINITE VERBS.

325. அன் ஆ னிறுமொழி யாண்பாற் படர்க்கை.

(இ-ள்.) அன் ஆன் இறு மொழி-அன் ஆன் என்கிற இரண்டு விகுதியையும் இறுதியிலுடைய மொழிகள், ஆண்பால் படர்க்கை - உயர்திணையாண்பாற் படர்க்கை வினைமுற்றுங் குறிப்பு முற்றும் ஆம், எ-று.

(உ-ம்.)

அன் - ஆன்.	தெரிநிலை	இறந்தகாலம்.	நடந்தனன் நடந்தான்.	அவன்.
		நிகழ்காலம்.	நடக்கின்றனன். நடக்கின்றான்	
		எதிர்காலம்.	நடப்பன் நடப்பான்.	
	குறிப்பு		குழையன் குழையான்.	

மற்றவைகளு மிப்படியே. (சு)

M F. பெண்பாற் படாக்கை வினைமுற்று:—FEMININE FINITE VERBS.

326. அள் ஆ ளிறுமொழி பெண்பாற் படர்க்கை.

(இ-ள்.) அள் ஆள் இறு மொழி - அள் ஆள் என்கிற இரண்டு விகுதியையும் இறுதியிலுடைய மொழிகள், பெண்பால் படர்க்கை - உயர்திணைப் பெண்பாற் படாக்கை வினைமுற்றுங் குறிப்பு முற்றும் ஆம, எ-று.

(உ-ம்.)

அள் - ஆள்.	தெரிநிலை	இறந்தகாலம்	நடந்தனள் நடந்தாள்.	அவள்
		நிகழ்காலம்	நடக்கின்றனள் நடக்கின்றாள்.	
		எதிர்காலம்	நடப்பள் நடப்பாள்.	
	குறிப்பு		குழையள் குழையாள்.	

மற்றவைகளு மிப்படியே. (எ)

M. F பலர்பாற் படர்க்கை வினைமுற்று:—PERSONAL PLURAL FINITE VERBS.

327. அர் ஆர் பவ்வூ ரகரமா ரீற்ற
பல்லோர் படர்க்கைமார் வினையொடு முடிமே.

(இ-ள்.) அர் ஆர் பவ்வூர் அகரம் மார் ஈற்ற - அர் ஆர் ப மார் என்கிற நான்கு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள்,

பல்லோர் படர்க்கை - உயர்திணைப் பலர்பாற்படர்க்கை வினை முற்றுங் குறிப்புமுற்றுமாம்; மார் - (இவற்றுள்ளே) மாரீற்று வினைமுற்று, வினையொடு முடியும் - (பொதுவிதியாற் பெயருடன் முடிவதன்றி) வினையுடனும் முடியும், எ-று.

மார் விகுதியும் பவ்விகுதியுந் தாமே காலங்காட்டுமெனப் பதவியல் "றவ்வொடுகர" என்கிற [145] சூத்திரத்துட் கூறுதலால், அவை குறிப்புவினைக்கு வருதலில்லை.

(உ - ம்.)

அர் - ஆர் - ப - மார்.			
தெரிநிலை	இறந்தகாலம்	நடந்தனர் நடந்தார்.	அவர்.
	நிகழ்காலம்	நடக்கின்றனர் நடக்கின்றார்.	
	எதிர்காலம்	நடப்பா நடப்பார் நடப்ப பாடன்மார்.	
குறிப்பு		குழையர் குழையார்.	

"ஆர்த்தார் கொண்மார் வந்தார" என மாரீற்று வினை முற்று வினையோடு முடிந்தது. கொண்மார் = கொள்வார். பாடன்மார்=பாடுவாரல்லர், அல் - எதிர்மறை. (அ)

M. F. ஒன்றன்பாற் படர்க்கை வினைமுற்று:—IMPERSONAL SINGULAR FINITE VERBS.

328. துறுடுக் குற்றிய லுகர வீற்ற
ஒன்றன் படர்க்கைடுக் குறிப்பி னாகும்.

(இ - ள்.) து று டு குற்றியலுகர ஈற்ற - து று டு என்னும் இம் மூன்று குற்றியலுகர விகுதிகளை இறுதியிலுடைய மொழிகள், ஒன்றன் படர்க்கை - அஃறிணை யொன்றன்பாற் படர்க்கை வினைமுற்றுங் குறிப்புமுற்றும் ஆம்; டு - (இவற்றுள்) டுவ் விகுதி, குறிப்பின் ஆகும் - குறிப்புவினை முற்றிற்கே யல்லது தெரிநிலை வினைமுற்றிற்கு வருவதில்லை, எ-று.

றுவ்விகுதி இறந்தகாலத்திற்கே வருமெனக் கொள்க.

(உ - ம்.)

ஒ - ரு - டு.
- தெரிநிலை.
  - இறந்தகாலம் { நடக்கின்றது / கூயிற்று.
  - நிகழ்காலம் - நடக்கின்றது.
  - எதிர்காலம் - நடப்பது.
- குறிப்பு.
  - குழையது
  - அற்று
  - பொருட்டு.

} அது.

மற்றவைகளு மிப்படியே (கூ)

M F பலவின்பாற்படர்க்கை வினைமுற்று:—IMPERSONAL PLURAL FINITE VERBS.

329. அ ஆ வீற்ற பலவின் படர்க்கை
ஆவே யெதிர்மறைக் கண்ண தாகும்.

(இ - ள்.) அ ஆ ஈற்ற - அ ஆ என்கிற விகுதிகளை இறுதியிலுடைய மொழிகள், பலவின்படர்க்கை - பலவின்பாற் படர்க்கை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம் ; ஆ - (அவற்றுள்) ஆகாரம், எதிர்மறைக்கண்ணது ஆகும் - எதிர்மறையினிடத்து வருமே (யன்றி உடன்பாட்டினிடத்து வாராது), எ-று.

(உ - ம்.)

- தெரிநிலை.
  - இறந்தகாலம் - நடந்தன
  - நிகழ்காலம் - நடக்கின்றன
  - எதிர்காலம் - நடப்பன
  - - நடவா (எதிர்மறை)
- குறிப்பு. - குழையன.

} அவை.

F. இருதிணைப் பொதுவினை:—VERBS COMMON TO BOTH PERSONAL AND IMPERSONAL CLASSES.

330. தன்மை முன்னிலை வியங்கோள் வேறிலை
உண்டீ ரெச்ச மிருதிணைப் பொதுவினை.

(இ - ள்.) தன்மை - தன்மைவினை வினைக்குறிப்பு முற்றுகளும், முன்னிலை - முன்னிலைவினை வினைக்குறிப்பு முற்றுகளும், வியங்கோள் - வியங்கோள் வினைமுற்றுகளும், வேறு இல்லை உண்டு - வேறு இல்லை உண்டு என்கிற மூன்று வினைக்குறிப்பு முற்றுகளும், ஈர் எச்சம் - பெயரெச்சவினை வினைக்குறிப்புகளும் வினையெச்சவினை வினைக்குறிப்புகளும், இருதிணை பொது வினை - (உயர்திணை அஃறிணை என்கிற) இருதிணைக்கும் பொது வினைகளாம், எ-று.

செய்யுமென்னும் பெயரெச்சமே செய்யுமென்னு முற்றுதலால் அம்முற்றும் இருதிணைப் பொதுவினையா மென்கிறது தானே தோன்றுதல் காண்க. (கக)

M F தன்மையொருமை வினைமுற்று:—FIRST PERSON SINGULAR FINITE VERBS.

331. குடுதுறு வென்னுங் குன்றிய லுகரமோ
டல்ல னென்னே னாகு மீற்ற
இருதிணை முக்கூற் றொருமைத் தன்மை.

(இ - ள்.) குடுதுறு என்னுங் குன்றியலுகரமோடு - கு டு து று என்கிற குற்றியலுகர விகுதிகளும், அல் அன் என் ஏன் ஆகும் - அல் அன் என் ஏன் (என்கிற நான்கு மெய்யீற்று விகுதிகளும்) ஆகிய, ஈற்ற - (இவ்வெட்டு விகுதிகளையும்) இறுதியிலேயுடைய மொழிகள், இருதிணை முக்கூற்று - இருதிணையிடத்தனவாகிய (ஒருவன் ஒருத்தி ஒன்று என்கிற) மூன்று பால்களுக்கும் பொதுவாகிய, ஒருமைத்தன்மை - ஒருமைத் தன்மை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம், எ-று.

கு டு து று என்கிற நான்குந் தாமே காலங்காட்டுதலாற் குறிப்புவினைக்கு வாரா ; அல் - எதிர்காலத்திலே மாத்திரம் வரும்.

(உ-ம்.)

து, டு, கு, று, அல், அன், என், ஏன். — தெரிநிலை — யான்.

- இறந்தகாலம்: உண்டு, வந்து, சென்று, உண்டனன், உண்டனென், உண்டேன்.
- நிகழ்காலம்: உண்ணாநின்றனன், உண்ணாநின்றனென், உண்ணாநின்றேன்.
- எதிர்காலம்.: உண்கு, வருது, சேறு, உண்பல், உண்பன், உண்பென், உண்பேன்.

குறிப்பு: தாரினன், தாரினென், தாரினேன்.

மற்றவைகளு மிப்படியே. (சஉ)

M. F. உளப்பாட்டுத் தன்மைப்பன்மை வினைமுற்று:—

FIRST PERSON COMPREHENSIVE PLURAL FINITE VERBS.

332 அம்மா மென்பன முன்னிலை யாரையும்
எம்மே மோமிவை படர்க்கை யாரையும்
உம்மூர் கடதற விருபா லாரையும்
தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை.

(இ-ள்.) அம் ஆம் என்பன- அம் ஆம் என்கிற (இரண்டு விகுதிகளையும் இறுதியிலுடைய) மொழிகள், முன்னிலையாரையும் - (தன்னிலையில் நிற்கையன்றி) முன்னிலை இடத்தாரையும், எம் ஏம் ஓம் இவை - எம் ஏம் ஓம் இம்மூன்று விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள், படர்க்கையாரையு - (தன்னிலையில் நிற்கையன்றிப்) படர்க்கையிடத்தாரையும், உம் ஊர் க ட த

ற - கும் டும் தும் றும் என்கிற நான்கு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள், இருபாலாரையும் - (தன்னிலையில் நிற்கையன்றி) அவ்வீரிடத்தாரகளையும், தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை - தன்னுடன் கூட்டுகிற தன்மைப்பன்மை வினைமுற்றுங் குறிப்பு முற்றுமாம், எ-று.

கும் டும் தும் றும் என்கிற நான்குந் தாமே காலங் காட்டுதலாலே குறிப்புவினைக்கு வாரா.

அம், ஆம், எம், ஏம், ஓம், கும், டும், தும், றும்.	தெரிநிலை	இறந்தகாலம்	உண்டனம், உண்டாம்	யாம், யானு நீயும்.
			உண்டனெம், உண்டேம், உண்டோம்	யாம், யானு மவனும்.
			உண்டும், வந்தும், சென்றும்	யாம், யானு நீயுமவனும்.
		நிகழ்காலம்	உண்கின்றனம், உண்கின்றும்	யாம், யானு நீயும்.
			உண்கின்றனெம், உண்கின்றேம், உண்கின்றோம்	யாம், யானு மவனும்.
		எதிர்காலம்	உண்பம், உண்பாம்	யாம், யானு நீயும்.
			உண்பெம், உண்பேம், உண்போம்	யாம், யானு மவனும்.
			உண்கும், வருதும், சேறும்	யாம், யானு நீயுமவனும்.
	குறிப்பு		தாரினம், தாரினும்	யாம், யானு நீயும்.
			தாரினெம், தாரினேம், தாரினோம்.	யாம், யானு மவனும்.

இவை சிறுபான்மை இம்முறையின்றி மயங்கி வருதலு முண்டு. மற்றவைகளு மிப்படியே வரும். (கரு).

தன்மை வினைமுற்றுகள் [செய்கு, செய்கும்]:—
SPECIAL RULE REGARDING FIRST PERSON FINITE VERBS
செய்கு AND செய்கும்.

333. செயகெ ஞெருமையுஞ் செய்குமென் பன்மை
யும், வினையொடு முடியினும் விளம்பிய முற்றே.

(இ-ள்.) செய்கு என் ஒருமையும் - செய்கு என்கிற தன்மை யொருமை முற்றும், செய்கும் என் பன்மையும் - செய்கும் என்கிற தன்மைப்பன்மை முற்றும், வினையொடு முடியினும் — (பெயருடனேயன்றி) வினையுடனே முடியினும், விளம்பிய முற்றே - முன்சொல்லப்பட்ட முற்றுகளேயாம், எ-று.

(உ - ம்.) உண்கு வந்தேம்.
உண்கும் வந்தேம். (கச)

M. F உளப்பாட்டு முன்னிலைப் பன்மைவினைமுற்று:—SECOND PERSON COMPREHENSIVE PLURAL FINITE VERBS.

334. முன்னிலை கூடிய படர்க்கையு முன்னிலே.

(இ - ள்.) முன்னிலை கூடிய - முன்னிலையோடு சேர்ந்த, படர்க்கையும் - படர்க்கையும், முன்னிலை - முன்னிலையாம் எ-று.

	தெரிநிலை.	குறிப்பு.	
(உ-ம்.)	உண்டனிர்	குழையினிர்.	நீயுமவனும்.
	உண்டீர்	குழையீர்.	
	உண்மின்		

இச்சூத்திரம் முன்னிலைப் பன்மை கூறியவழியே கூறுது, 'ஒன்றினமுடித்த றன்னின முடித்தல்' என்கிற வுத்தியால் இங்கே சொல்லப்பட்டது. (கரு)

M. F. முன்னிலை யொருமைவினைமுற்று:—SECOND PERSON SINGULAR FINITE VERBS.

335. ஐயா யிகர வீற்ற மூன்றும்
ஏவலின் வருஉ மெல்லா வீற்றவும்
முப்பா லொருமை முன்னிலை மொழியே.

(இ-ள்.) ஐ ஆய் இகரம் ஈற்ற மூன்றும் - ஐ ஆய் இ என்கின்ற மூன்று விகுதிகளை இறுதியிலுடைய மொழிகளும், ஏவலின் வரும் எல்லா ஈற்றவும் - (விகுதி குன்றாதுங் குன்றியு நிற்பன வாகிய) ஏவலிலே வருகிற இருபத்து மூன்றீற்று மொழிகளும், முப்பால் - (ஒருவன ஒருத்தி ஒன்று என்கிற) மூன்றுபால்களுக்கும் பொதுவாகிய, முன்னிலை ஒருமை மொழி - முன்னிலையொருமை முற்றுங் குறிப்பு முற்றுமாம், எ-று.

இகரவிகுதி எதிர்காலத்தை இடைநிலை யில்லாமல் தானே காட்டும்.

ஏவல்வினைமுற்றுக்கள் தெரிநிலைக்கேயன்றி குறிப்புவினையில் இல்லை என்று அறிவித்தற்கு உம்மைகொடுத்துப் பிரித்தார்.

(உ-ம்.)

ஐ, ஆய், இ:
- தெரிநிலை
  - இறந்தகாலம்: உண்டனை, உண்டாய், உண்டி
  - நிகழ்காலம்: உண்ணாநின்றனை, உண்ணாநின்றாய், உண்ணாநின்றி
  - எதிர்காலம்: உண்பை, உண்பாய், சேறி.
- குறிப்பு: வில்லை, வில்லாய், வில்லி.

} நீ.

ஏவல்வினைகள், — நடவாய், வாராய், கேளாய், அஃகாய், என விகுதிகுன்றாமலும், நட, வா, கேள், அஃகு என விகுதி குன்றியும் வரும்.

ஏவலெனப் பொதுப்படச் சொல்லியதனால், செய்வி, செய்விப்பி என் ஏவன்மேல் ஏவலாக வருவனவும், செய்யல், செய்யேல், மருல், நடவாதே என எதிர்மறையில் வருவனவும், சொல்லிக்காண், நடந்திடு, எழுந்திரு, அருளு என உடன்பாட்டில் வருவனவுங் கொள்க.

அல், ஏல், ஆல் விகுதிகள் எதிர்மறை யிடத்தே வரும்.

எதிர்மறை ஏவலொருமை விகுதிகள் உண்ணூதே உண்ணுதி எனவரும்போது எதிர்மறை ஆகாரவிகுதிமுன் தகர எழுத்துப் பேற்றேடேவரும் ஏ-இ - விகுதிகளில் ஒன்று பெற்றுவரும்.()

M. F. சில ஏவல்வினைமுற்றுக்குச் சிறப்புவிதி:—SPECIAL RULE REGARDING CERTAIN IMPERATIVE VERBS.

336. முன்னிலை முன்ன ரீயு மேயும்
அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே.

(இ-ள்.) முன்னிலை முன்னா - முன்னிலை ஏவன் முற்றெனை முன் சொல்லப்பட்டவற்றிற்கு முன், ஈயும் ஏயும் - ஈகாரமும் ஏகாரமும், அந்நிலை மரபின் மெய் - அவ்விடத்து நிற்றற்குரிய தன்மையையுடைய (யாதானும்) ஒருமெய்யை, ஊர்ந்துவரும் - ஏறிவரும், எ-று.

(உ-ம்.) 'சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரே'.
'அட்டி லோலை தொட்டனை நின்மே'.

இந்த ஈகார ஏகாரங்கள் விகுதிகளல்ல ஆய் விகுதிகுறைந்த ஏவலில்வரும் முன்னிலையசை. இவை முறையே றகர ஒற்றை யும் மகர ஒற்றையும் ஊர்ந்து வந்தன. றகரமகரங்கள் எழுத் துப்பேறு. (கள்)

M. F முன்னிலைப்பன்மை வினைமுற்று:—SECOND PERSON PLURAL FINITE VERBS.

37. இர்ஈ ரீற்ற விரண்டு மிருதிணைப்
பன்மை முன்னிலை மின்னவற் றேவல்.

(இ-ள்.) இர் ஈர் ஈற்ற இரண்டும் - இர் ஈர் என்கிற இரண்டு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள், இருதிணை - இரு திணைக்கும் பொதுவாகிய, பன்மை முன்னிலை - பன்மைமுன் னிலை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம்; மின் - மின் விகுதி யை இறுதியிலுடைய மொழிகள், அவற்று ஏவல் - முன்னிலைப் பன்மை ஏவன்முற்றும், எ-று.

உம் விகுதி முன்னிலைப்பன்மை ஏவலுக்கு இக்காலத்தில் வழங்கிவருதலால் 'புதியனபுகுதலும் வழுவல' என்பதனாற் கொள்க.

(உ-ம்.)

இர், ஈர், மின், உம்.	தெரிநிலை	இறந்தகாலம்	உண்டனிர் உண்டீர்	நிர்.
		நிகழ்காலம்	உண்கின்றனிர் உண்கின்றீர்	
		எதிர்காலம்	உண்பிர் உண்பீர்	
	குறிப்பு	..	குழையிர் குழையீர்.	

உண்மின் உண்ணீர் உண்ணும் ஏவல்வினைமுற்று. (௧௮)

M. F வியங்கோள் வினைமுற்று:—OPTATIVE VERBS (COMMON TO ALL PERSONS AND NUMBERS.)

338. கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
இயலு மிடம்பா லெங்கு மென்ப.

(இ-ள்.) க ய வொடு ர ஒற்று - க ய என்கிற இரண்டு உயிர்மெய்யினையும் ரகரமெய்யினையும், ஈற்ற - இறுதியிலுடைய மொழிகள், வியங்கோள் - வியங்கோள் முற்றுக்களாம்; இடம் பால் எங்கும் - மூன்றிடங்களிலும் ஐம்பால்களிலும், இயலும் என்ப - செல்லும் என்று சொல்லுவர் புலவர், எ-று.

வாழ்க வாழிய வாழியர்	யான், யாம், நீ, நீர், அவன், அவள், அவர், அது, அவை.	வாழ்த்துப் பொருள்.

☞ இவ்வியங்கோள் வினைமுற்று வாழ்த்துதற் பொருளிலும், உயர்ந்தோன் இழிந்தோனை விதித்தற் பொருளிலும், வேண்டிக்கோடற் பொருளிலும், வைதற்பொருளிலும் வரும்.

"வெல்க வாழிநின் வென்றிவார் கழல்" "செல்கதியன சிறக்க நின்புகழ்"	வாழ்த்துதல்.
நீ நடக்க நீ வருக அவன் உண்க	விதித்தல் (=ஏவுதல்.) இது தன்மையில் வராது.

எம்மைக்காத்தருள்க
"வல்லைசெயிற்செய்க" } வேண்டிக்கோடல்.

தீயோன் கெடுக
"பரந்துகெடுக வுலகியற்றியான்" } வைதல்.

அ, அல், ஆல், தல் விகுதிகளுஞ் சிறுபான்மை வியங்கோளுக்கு வரும்.

"அறங்களோங்க"
"வேள்விமல்க" } அ - விகுதி.

"வருத்தனர் கொளலே"
"மகனெனல்"
"மக்கட்பதடியெனல்" } அல் - விகுதி.

"மரீஇய தொரால்" ஆல் - விகுதி.

"மனத்துக்கண் மாசிலனாதல்" தல் - விகுதி.

அன்றியுஞ் சிறுபான்மை இக்கால வழக்கத்தில் நடவன், நடப்பாளுக எனப் பாலிடங்களுள் ஒன்றை வருவனவுங் கொள்க.

M. F. பொதுக்குறிப்பு வினைமுற்று [வேறு, இல்லை, ?
FINITE VERBS வேறு இல்லை AND உண்டு (COMM TO
ALL PERSONS AND NUMBERS.)

339. வேறில்லை யுண்டைம் பான்மூ விடத்தன.

(இ - ள்.) வேறு இல்லை உண்டு - வேறு இல்லை உண்டு என்கிற மூன்று வினைக்குறிப்பு முற்றுகளும், ஐம்பால் மூவிடத்தன - ஐம்பாலுக்கும் மூவிடத்திற்கும் உரியனவாம், எ-று.

யான், யாம் { வேறு, இல்லை, உண்டு. } தன்மை

நீ, நீர். { வேறு, இல்லை, உண்டு. } முன்னிலை

அவன், அவள், அவர், அது, அவை. { வேறு, இல்லை, உண்டு. } படர்க்கை.

இனி இல்லை என்பது சிறுபான்மை இல் என நிற்றலும் உண்டு. 'மொழிந்த பொருளோ டொன்றவவ்வயின் மொழியாதத

ஙாயு மூட்டின்று முடித்தல்' என்கிற உத்தியால் வேண்டும், தகும், படும் என்கிற சொற்களும் ஐம்பான் மூவிடத்திற்கும் பொதுவாம் எனக் கொள்க.

(உ-ம்.)

அவ ரோதல் வேண்டும் .. } வேண்டும்.
நீ போகல் வேண்டும் ..

இச்சோ றுண்ணத்தகும் .. } தகும்.
இவரா லிக்காரியஞ் செய்யத்தகும் ..

வஞ்சரை யஞ்சப்படும் ... } படும்.
கற்றறிந்தோரைத் தலைநிலத்து வைக்கப்படும்.

இம்மூன்றும் ஒருபொருட் சொற்களாய்த் தொழிற்பெயத் தேற்றப்பொருள் பட்டே நிற்கும் என்றறிக. (உ0)

உ. பெயரெச்சம்.

RELATIVE PARTICIPLES.

F. பெயரெச்சத்தின் இலக்கணம்:—RELATIVE PARTICIPLE DEFINED.

340 செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டில்
காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு
செய்வதாதி யறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே.

(இ-ள்.) செய்த செய்கின்ற செய்யும் என்பாட்டில் - செய்த செய்கின்ற செய்யும் என்றுசொல்லப்படுகிற மூவகை வாய்பாட்டுச் சொற்களிலே, காலமும் செயலும் தோன்றி - (முறையே இறப்பு நிகழ்வு எதிர்வு என்கிற மூன்று) காலங்களும் தொழிலும் தோன்றி, பாலொடு - பாலுடனே, செய்வது ஆதி அறுபொருள் பெயரும் - செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செயப்படுபொருள் என்கிற அறுவகைப் பொருட் பெயர்களும், எஞ்சநிற்பது - ஒழிய நிற்பன, பெயரெச்சம்- பெயரெச்சவினை வினைக்குறிப்புகளாம், எ-று.

ஏற்புழிக்கோடலால் இச்சூத்திரத்தில் தோன்றி என்பது வரைக்குந் தெரிநிலைப் பெயரெச்சத்திற்கும், மற்ற விதி தெரிநிலையும் குறிப்பும் ஆகிய இரண்டுவகைப் பெயரெச்சங்களுக்குங் கொள்க.

(உ - ம்.)

இறந்.	நிகழ்.	எதிர்	
உண்ட	உண்கின்ற உண்ணாநின்ற	உண்ணும்	சாத்தன் —செய்பவன் கலம் —கருவி வீடு —நிலம் ஊண் —செயல் பகல் —காலம் சோறு —செயப்படு பொருள்.

வேலாண்முகத்தகளிறு மூவிலையவேல் உள்ளபொருள் கரியகுதிரை புதியநட்பு.	உடன்பாட்டுக் குறிப்புப்பெயரெச்சம்.
ஓடாதகுதிரை உண்ணாதசாத்தன்	எதிர்மறைத்தெரிநிலைப்பெயரெச்சம்
இல்லாதபொருள் அல்லாதகுதிரை.	எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம்.

'அறுபொருட்பெயரும்' என்ற உம்மையால் களைகட்டபயிர், களைகட்டகூலி என இன்னதற்கு இதுபயன் என்னும் பெயர்கள் எஞ்சநிற்பனவும், உண்டவிளைப்பு குடிபோனவூர் எனப் பிறபெயர் எஞ்சநிற்பனவுங் கொள்க. (உக)

M F. செய்யுமென்னெச் சத்திற்குச்சிறப்புவிதி:—**SPECIAL RULE REGARDING THE RELATIVE PARTICIPLE FORM** செய்யும்.

341. செய்யுமெ னெச்சவீற் றுயிர்மெய் சேறலும்
செய்யுளு ளும்முந் தாகலு முற்றேல்
உயிரு முயிர்மெய்யு மேகலு முளவே.

(இ - ள்.) செய்யும் என் எச்சம் - செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சத்தினுடைய, ஈறு உயிர்மெய் - இறுதியிலுள்ள உயிர்மெய்யானது, சேறலும் - கெடுதலும், செய்யு

ளுள் - செய்யுளிடத்து, உம் உந்து ஆகலும் - உம் விகுதியா னது உந்து எனத் திரிதலும், முற்றேல் - (அது) முற்றாயின், உயிரும் - (அதன் இறுதி) உயிராயினும், உயிர்மெய்யும் - உயிர் மெய்யாயினும், ஏகலும் உள - கெடுதலும் உளவாம், எ-று.

'செய்யுளுள் உம் உந்தாம்' எனவே மற்ற விகுதிகள் வழக்கி லும் செய்யுளிலும் வருமெனக் கொள்க.

(உ-ம்.)

வாவும்புரவி	—வாம்புரவி	எச்சத்தில் உயிர் மெய் கெட்டது.
ஆகும்பொருள்	—ஆம்பொருள்	
போகும்போது	—போம்போது	
பாயும்	—"தென்கடற்றிரைமிசைப் பாயுந்து"	உம் எச்சத்தில்உந்து ஆயிற்று.
கூப்பெயர்க்கும்	—"நீர்க்கோழி கூப்பெயர்க் குந்து"	
கலுழும்	"—சாரனாடவென் றோழி யுங் கலுழ்மே"	முற்றில் உயிர் கெட்டது.
மொழியும்	—"அம்பலூரு மவனொடு மொழிமே"	முற்றில் உயிர் மெய் கெட்டது.
ஆகும்	—அதுவாம்	
போகும்	—இவைபோம்	

செய்யும் என் முற்று என்றாயினும், செய்யும் என் ஏவன் முற்று என்றாயினுங் கூறாது பொதுப்பட 'முற்றேல்' எனக் கூறினமையின், 'மாமறைமாக்கள் வருகுவங்கேண்மோ', 'முது மறை யந்தணிர் முன்னியதுரைமோ' என ஏவன்முற்றில் உயி ரும் உயிர்மெய்யுங்கெட்டு வருதலுங் கொள்க.

"சொற்றொரு மிற்றிதன்பெற்றி" என்னும் [உரிச்-461] சூத் திரத்தில், ஆடுவாமோ என்னும் தன்மைப்டன்மை முற்றும், "பொன்னூச லாடாமோதோழி" என எதிர்கால இடைநிலை கெட்டு நிற்றலும் பிறவும் கொள்க. (உஉ)

௯. வினையெச்சம்.
VERBAL PARTICIPLES.

M. F. வினையெச்சத்தின் இலக்கணம்:—VERBAL PARTICIPLE DEFINED.

342. தொழிலுங் காலமுந் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினையெச் சம்மே.

(இ-ள்.) தொழிலும் காலமும் தோன்றி - செயலும் பொழுதும் விளங்கி, பால் வினை - பாலுடனே வினையானது, ஒழிய நிற்பது - எஞ்ச நிற்பன, வினையெச்சம் - வினையெச்சவினை வினைக்குறிப்புகளாகும், எ-று.

வினையெனப் பொதுப்படக் கூறுதலால் வினைமுற்றுங் குறிப்புமுற்றும் வினையாலணையும்பெயருந் தொழிற்பெயருங் கொள்க. (உ௯)

M. F. வினையெச்சவாய்பாடுகள்:—VERBAL PARTICIPLE FORMS.

343. செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்கின வினையெச் சம்பிற
ஐந்தொன் றாறுமுக் காலமு முறைதரும்.

(இ - ள்.) செய்து......செய்யியர் - செய்து என்பது முதல் செய்யியர் என்பது ஈறாகிய ஒன்பது வாய்பாட்டால் வருவனவும், வான் பான் பாக்கு - இம்மூன்று விகுதிகளைக்கொண்டு வருவனவும், இன - இவைபோல்வன பிறவும், வினையெச்சம்-வினையெச்சவினைகளாம்; ஐந்து - (முன்னைய ஐந்தும்), ஒன்று - (நடுநின்ற) ஒன்றும், ஆறு - (பின்னைய) ஆறும், முக்காலமும் - இறந்தகாலமும் நிகழ்காலமும் எதிர்காலமும், முறை தரும் - முறையாற் காட்டுவனவாம், எ-று.

இவற்றுள் செய்து, செய்தென என்னும் இரண்டும் ஒழிந்த மற்றவை இடைநிலைபெறாமல் தாமே காலங் காட்டும்.

(உ-ம்.)

இறந்தகாலம்.			நிகழ்காலம்.			எதிர்காலம்.		
1.	நடந்து உண்டு சென்று கற்று	செய்து	6.	நடக்க உண்ண உன்ன கற்க	செய	7.	நடக்கின் உண்ணின் தின்னின் கற்கின்	செயின்
2.	உண்குபு உண்பு தின்பு	செய்பு				8.	ஆடிய பாடிய உண்ணிய	செய்யிய
3.	உண்ணா பெய்யா குன்றா கல்லா	செய்யா				9.	ஆடியர் பாடியர் உண்ணியர்	செய்யியர்
4.	உண்ணூ காணூ	செய்யூ				10.	உண்ணுவான் விடுவான் காணுவான்	வான்
5.	உண்ணென தின்னென	செய்தென				11.	தின்பான் நடப்பான் கடப்பான்	பான்
						12.	வேபாக்கு விடுபாக்கு	பாக்கு

வான், பான், பாக்கு என்பன அந்தந்த எச்சவிகுதிகளாய் அம்மொழிகளை யுணர்த்திவருங் குறிப்புச்சொல்.

'இன' என்றமையால் செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம் இகர யகர விகுதிகளைப்பெற்றும், விகுதி விகாரப்பட்டும், பகுதி விகாரப்பட்டும் வருமெனவும்; செயவென்னும் வாய்பாட்டு வினையெச்சம் குவ்விகுதி பெறுமெனவும்; செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம், அல், கால், ஏல், ஏனும், உம் என்கிற விகுதிகளைப்பெற்று வருமெனவும்; எதிர்மறை வினையெச்சங்கள் மை, மே, மல் விகுதிகளைப்பெற்று வரு

மெனவும்; குறிப்பு வினையெச்சங்கள் றி, து, மல் விகுதிகளைப் பெற்று வருமெனவுங் கொள்க.

(உ - ம்.)

செய்து	ஆடி	இகரவிகுதி.
	தேடி	
	ஆய்	யகரவிகுதி.
	போய்	
	தழீஇ	விகுதிவிகாரம்.
	ஓரீஇ	
	சினைஇ	
	புக்கு	பகுதிவிகாரம்.
	நட்டு	
	செற்று	
செய	உணற்கு	குவ்விகுதி.
	தினற்கு	
செயின்	உண்டால்	ஆல், கால், ஏல், ஏனும், உம் விகுதிகள்.
	தின்றால்	
	உண்டக்கால்	
	தின்றக்கால்	
	உண்டானேன்	
	பெற்றானேன்	
	எள்ளுமேனும்	
	தினையளவேனும்	
	காண்டலும்	
	தின்னலும்	
எதிர்மறை	உண்ணாமை	மை, மே, மல் விகுதிகள்.
	தின்னாமை	
	உண்ணாமே	
	தின்னாமே	
	உண்ணாமல்	
	தின்னாமல்	
குறிப்பு	அருளின்றிவந்தான் ...	றி, து, மல் விகுதிகள்.
	அவனல்லதில்லை	
	அவனல்லாமலில்லை ...	

உரையிற்கோடலால், சிறுபான்மை செயவெனெச்சம் உண்ணப் பசிதீர்த்து என வருகிறவிடத்தே இறந்தகாலமும், உண்ணவந்தான் என வருகிறவிடத்தே எதிர்காலமுந் தருமெனக் கொள்க.

296

F. வினையெச்சங்களின் முடிபுவேறுபாடு :—GOVERNMENT OF THE DIFFERENT FORMS OF VERBAL PARTICIPLES.

344. அவற்றுள்,
முதலி னான்கு மீற்றின் மூன்றும்
வினைமுதல் கொள்ளும் பிறவுமேற் கும்பிற.

(இ - ள்.) அவற்றுள் - (முன்சூத்திரத்துட் சொல்லிய) வினையெச்சங்களுள், முதலில் நான்கும் - முதலிலுள்ள (செய்து செய்பு செய்யா செய்யூ என்கிற) நான்கும், ஈற்றில் மூன்றும் - இறுதியி லுள்ள (வான் பான் பாக்கு என்கிற விகுதிகளையுடைய) மூன்றும், வினைமுதல் கொள்ளும் - தன் கர்த்தாவின் வினையைக் கொண்டுமுடியும்; பிற - (நடுவிலுள்ள செய்தென செய செயின் செய்யிய செய்யியர் என்கிற ஐந்தும் இவை போல்வன பிறவு மென்றதனால் வருஞ் செய்தால் முதலியவையும் வினையெச்சக் குறிப்புகளும் ஆகிய) இவைகள், பிறவும் ஏற்கும் - (தன் கர்த்தாவின் வினையையே யன்றி) பிற கர்த்தாவின் வினையையும் கொண்டு முடியும், எ-று.

விகுதி.	(உ - ம்.)	
உ.	தானடந்துவந்தான்	முதலினான்கும் ஈற்றின் மூன்றும் தன்கர்த்தாவின் வினைகொண்டு முடிந்தன.
பு.	தானுண்குபுபோனான்	
ஆ.	தான்கல்லாக்கழித்தான்	
ஊ.	தான்காணாமகிழ்ந்தான்	
வான்.	தான்கொல்வான்செல்வான்	
பான்.	தானலைப்பான்புகுந்தான்	
பாக்கு	தான்றருபாக்குவருவான்.	
என	தானுண்டெனமகிழ்ந்தான் பிறனுண்டெனமகிழ்ந்தான்	இடையிலைந்தும் தன்கர்த்தாவின் வினையும் பிறகர்த்தாவின் வினையுங் கொண்டு முடிந்தன.
அ.	தானுண்ணவருகிறான் பிறனுண்ணக்காண்கின்றான்	
இன்	தானுண்ணின்மகிழ்வான் பிறனுண்ணிற்கொடுப்பான்	
இய	தானுண்ணியவருவான் பிறனுண்ணியகொடுப்பான்	
இயர்	தானுண்ணியர்போவான் பிறனுண்ணியர்வழங்குவான்	

உண்டாலுவக்கும் உண்டாற்பசிதீரும் மழையின்றிப்பொய்ப்பின் விருந்தின்றியுண்டான்.	'இன்ன' என்றதனால் வருகிற செய்தால் முதலியவையும், வினையெச்சக்குறிப்பும், இப்படியே வினைமுதலும் பிறவு மேற்றன.(உரு)

345 சினைவினை சினையொடு முதலொடுஞ் செறியும்.

(இ-ள்.) சினைவினை-(முதலினான்கு மீற்றின்மூன்று மென்ற வினையெச்சங்கள்) சினைவினையாயின் (அவை), சினையொடும்-(முன் வினைமுதல் கொள்ளு மென்ற விதியினாலே) சினையுடனே யன்றி, முதலொடும் செறியும் - முதலுடனும் முடியும், எ-று.

(உ-ம்.)

காலொடிந்து விழுந்தான். கண்வருவான் கதிரவனைத் தொழுதான்.	ஒடிதல், வருதல்—சினைவினை ; விழுதல், தொழுதல்—முதல்வினை. (உசு)

வினையெச்சவாய்பாடுகளின்திரிபு :—VERBAL PARTICIPLE FORMS INTERCHANGED.

346. சொற்றிரி யினும்பொரு டிரியா வினைக்குறை.

(இ - ள்.) சொல் - (முதலினான்கு மீற்றின் மூன்று மென்ற) வினையெச்ச வாய்பாடுகளாக, வினைக்குறை திரியினும் - பிற வினையெச்ச வாய்பாடுகள் வேறுபடினும், பொருள் திரியா-(அவற்றின்) பொருள்கள் வேறுபடாவாம், எ-று.

(உ-ம்.) கோழி கூவிப் பொழுது புலர்ந்தது.
யான்கொள்ளுவான் பொன்கொடுத்தான்.

இவற்றில் கூவ என்பது கூவி என்றும், கொள்ள என்பது கொள்வான் என்றுந் திரிந்தன. மற்றவைகளு மிப்படியே. ()

௪. ஒழிபு.
MISCELLANEOUS.

வினைக்குறிப்புக்கு ஆவதோர் சிறப்புவிதி:—A SPECIAL RULE REGARDING INDEFINITE VERBS.

347. ஆக்க வினைக்குறிப் பாக்கமின் றியலா.

(இ- ள்.) ஆக்க வினைக்குறிப்பு - (ஆதல் என்னும்) ஆக்கச் சொல்லைக் கொண்ட வினைக்குறிப்புச்சொற்கள், ஆக்கம் இன்று இயலா - (அந்த) ஆக்கச்சொல் இல்லாமல் வாராவாம், எ-று.

வேற்றுமைப் புணர்ச்சிக்கு வேற்றுமை உருபுகள் விரிந்தாயினும் தொக்காயினும் அதற்கு உரிமையாய் நிற்றல்போல, ஆக்க வினைக்குறிப்பிற்கு ஆக்கச்சொல் விரிந்தாயினும் தொக்காயினும் அதற்கு உரித்தாய் நிற்றலால் 'ஆக்கமின்றியலா' என்றார்.

(உ-ம்.) சாத்தன் நல்லனாயினான் } ஆக்கச்சொல்
கல்வியிற் பெரியனாயினான் } விரிந்தது.
சாத்தன் நல்லன் } ஆக்கச்சொல்
கல்வியிற் பெரியன் } தொக்கது.

எனவே நல்லன் பெரியன் என்பன இயற்கை வினைக்குறிப்பாயின் ஆக்கச்சொல் தொகுதலும் விரிதலுமின்றிச் சாத்தன் நல்லன், கல்வியிற் பெரியன் என்றே வருமெனக் கொள்க. ()

M. F. செய்யுமென் வினைமுற்றுக்குச் சிறப்புவிதி:—A SPECIAL RULE REGARDING THE FINITE VERBAL FORM செய்யும்.

348. பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில்
செல்லா தாகுஞ் செய்யுமென் முற்றே.

(இ - ள்.) செய்யும் என் முற்று - செய்யுமென் முற்றானது, பல்லோர் படர்க்கை (யில்) - உயர்திணைப்பன்மைப் படர்க்கையிலும், முன்னிலை (யில்) - முன்னிலையிலும், தன்மையில் - தன்மையிலும், செல்லாது ஆகும் - செல்லாது, எ-று.

எனவே பலர்பால் ஒழிந்த மற்ற படர்க்கை நாற்பாலிலுஞ் செல்லுமென்பது பெற்றாம்.

(உ-ம்.) அவனுண்ணும், அவளுண்ணும்,
அதுவுண்ணும், அவையுண்ணும் எனவரும். (உகூ)

M. F. யார் என்னும் குறிப்புவினைமுற்றுக்குச் சிறப்புவிதி:— A SPECIAL RULE REGARDING THE INDEFINITE VERB யார்.

349. யாரென் வினாவினைக் குறிப்புயர் முப்பால்.

(இ - ள்.) யார் என் வினா - யார் என்கிற வினாப்பொருளைத் தருகிற, வினைக்குறிப்பு - குறிப்புவினைமுற்று, உயர் முப்பால் - உயர்திணை மூன்றுபால்களுக்கும் பொதுவினையாம், எ-று.

(உ-ம்.) அவன்யார், அவள்யார், அவர்யார் எனவரும்.

இது ஆர் எனவும் வழங்கும். (௩௦)

M. F. எவன் என்னும் குறிப்பு வினைமுற்றுக்குச் சிறப்புவிதி:—A SPECIAL RULE REGARDING THE INDEFINITE VERB எவன்.

350. எவனென் வினாவினைக் குறிப்பிழி யிருபால்.

(இ - ள்.) எவன் என் வினா - எவன் என்கிற வினாப்பொருளைத் தருகிற, வினைக்குறிப்பு - குறிப்புவினைமுற்று, இழி இரு பால் - அஃறிணை இரண்டு பாலுக்கும் பொதுவினையாம், எ-று.

(உ-ம்.) அஃதெவன், அவையெவன் எனவரும்.

இது என், என்னை, என்ன எனவும் மருவி வழங்கும். (௩௧)

M. F. வினைமுற்றுகளுக் காவதோர் சிறப்புவிதி:—A SPECIAL RULE REGARDING FINITE VERBS IN GENERAL.

351 வினைமுற் றேவினை யெச்ச மாகலும்
குறிப்புமுற் றீரெச்ச மாகலு முளவே.

(இ-ள்.) வினைமுற்றே - (தெரிநிலை) வினைமுற்றே, வினையெச்சம் ஆகலும் - வினையெச்சமாகி வருதலும், குறிப்புமுற் (றே)- குறிப்புவினைமுற்றே, ஈர் எச்சம் ஆகலும் - வினையெச்சமாகியும் பெயரெச்சமாகியும் வருதலும், உள - உளவாம், எ-று.

(உ - ம்.)

கண்டனன் வணங்கினான்—கண்டு வணங்கினான். முகந்தனர் கொடுத்தார் = முகந்து கொடுத்தார்.	வினைமுற்று வினையெச்சமாயிற்று.
அவன் வில்லினன்வந்தான்—அவன் வில்லினனாகிவந்தான்.	குறிப்புமுற்று வினையெச்சமாயிற்று
வெந்திறலினன் விறல்வழுதி—வெந்திறலினனாகிய விறல்வழுதி	குறிப்புமுற்று பெயரெச்சமாயிற்று

மற்றவைகளு மிப்படியே வரும்.

வினையியல் முற்றுப்பெற்றது.

300

௫. பொதுவியல்.
ON WORDS IN GENERAL.

[இது முன்வந்த பெயருக்கும் வினைக்கும் பின்வரும் இடைக்கும் உரிக்கும் பொதுவிலக்கணங்களைச் சிங்க நோக்காக அறிவிக்கும்படி நடுவே வைக்கப்பட்டது.]

க. பொதுவிதி.
GENERAL RULES.

F. பாற் பொதுமை நீக்கல்:—DETERMINATION OF GENDER IN AMBIGUOUS NOUNS AND VERBS.

352 இருதிணை யாண்பெண் ணுள்ளொன் றனையொழிக்கு
பெயரும் வினையுங் குறிப்பி னானே. [ம்

(இ-ள்.) இரு திணை - இருதிணையிலும், பெயரும் வினையும்- (ஆண்பால் பெண்பால்களுக்குப் பொதுவாகிய) பெயர்ச்சொற் களும் வினைச்சொற்களும், ஆண் பெணுள் ஒன்றனை - அவ் வாண்பால் பெண்பால்களுள் ஒருபாலை, குறிப்பினான் ஒழிக் கும் - குறிப்பினால் நீக்கும், எ-று. [ஏ - அசை]

(உ-ம்.)

ஆயிரமக்கள் போர்செய்தற்குப் போயினார்—இதில் **மக்கள்** என்னும் உயர்திணை இருபாற் பொதுப்பெயரும், **போயினார்** என்னும் பொதுவினையும், **போர்க்கு** என்னுங் குறிப்பினாலே பெண்பாலை ஒழித்தன.

பெருந்தேவி பொறையுயிர்த்த கட்டிற்கீழ் நால்வர் மக்களு ளர்—இதில் **மக்கள்** என்னும் பொதுப்பெயரும் **உளர்** என்னும் பொதுவினைக்குறிப்பும், **பொறையுயிர்த்தல்** என்னுங் குறிப்பினால் உயர்திணை ஆண்பாலை ஒழித்தன. [பொறையுயிர்த்தல்=பிரசவித்தல்].

இப்பெற்றங்கள் உழவொழிந்தன — இதில் **பெற்றங்கள்** என்னும் அஃறிணை இருபாற் பொதுப்பெயரும், **ஒழிந்தன** என்னும் பொதுவினையும் உழவு என்னும் குறிப்பினால் பெண்பாலை ஒழித்தன.

இப்பெற்றங்கள் பால்சொரிந்தன — இதில் பெற்றங்கள் என்னும் பொதுப்பெயரும், சொரிந்தன என்னும் பொதுவினையும், பால் என்னுங் குறிப்பினால் ஆண் பாலை ஒழித்தன. (க)

M. F. *செய்யுளிடத்து சிலபெயர்வினையின் ஈற்றயல் ஆ ஓ ஆகத் திரிதல்:*—CHANGE OF ஆ INTO ஓ IN CERTAIN NOUNS AND VERBS IN POETRY.

353. பெயர்வினை யிடத்து னளரய வீற்றயல்
ஆவோ வாகலுஞ் செய்யுளு ளுரித்தே.

(இ-ள்.) பெயர் வினை இடத்து - பெயரிடத்தும் வினையிடத்தும், ன ள ர ய ஈறு - னகர ளகர ரகர யகர ஈற்றிற்கு, அயல் ஆ - அயலிலுள்ள ஆகாரம், ஓ ஆகலும் - ஓகாரமாதலும், செய்யுளுள் உரித்து - செய்யுளிடத்து உரித்தாம், எ-று.

(உ - ம்.)

வில்லான்—"வில்லோன்காலனகழலே"
தொடியாள்—"தொடியோண்மெல்லடிமேலனசிலம்பே"
கல்லார்—"நல்லோர்யார்கொல்"
கொடுத்தாய்—"வரையாதுகொடுத்தோய்"
} பெயர்.

படைத்தான்—"படைத்தோன்மன்றவப்பண்பிலாளன்"
பெயர்த்தாள்—"நல்லோன்மன்றகூப்பெயர்த்தோளே"
சென்றார்—"சென்றோரன்பிலர்தோழி"
வந்தாய்—"வந்தோய்மன்றதெண்கடற்சேர்ப்ப"
} வினை.

வினையாலணையும் பெயரிடத் தல்லாமல் வினையிடத்தும் ஓரோவிடத்து ஆ ஓ வாய்த் திரிந்துவருதலின் அதனையு முடன் கூறினார். "ஆவோவாகலும்" என்ற [illegible] வும்மை யாகக்கொண்டு "மலைகிழவோனே" என [illegible]டத்து ஓகாரமாகி வரும். (உ)

உருபும் வினையீறும் எதிர்மறையிலும் திரியா:—CASAL AND VERBAL TERMINATIONS COMMON TO BOTH AFFIRMATIVE AND NEGATIVE FORMS.

354. உருபும் வினையு மெதிர்மறுத் துரைப்பினும்
திரியா தத்தமீற் றுருபி னென்ப.

(இ-ள்.) உருபும் - (எட்டுவேற்றுமை) உருபுகளும், வினையும் - (மூவகை) வினைச்சொற்களும், எதிர்மறுத்து உரைப்பினும் - எதிர்மறுத்தல் செய்து சொல்லுமிடத்தும், தத்தம் ஈற்(றின்) உருபின் - தத்தம் ஈற்றினின்றும் அவ்வுருபினின்றும், திரியா என்ப - வேறுபடா என்று சொல்லுவர் புலவர், எ-று.

உருபு உருபினின்றும் வினை ஈற்றினின்றும் என எதிர்நிரனிறையாகப் பொருள்கொள்க. உருபின்கண் எதிர்மறுத்தல் அவைகளின் பயனிலைகளை எனக்கொள்க.

(உ-ம்.) சாத்தன்வாரான்
குடத்தைவனையான்
வாளாலெறியான்
புல்லர்க்குக்கொடான்
நிலையினீங்கான்
பொருளினதின்மை
தீயர்கட்சேரான்
சாத்தாபோகேல்
நடவான்
நடவாத
நடவாது.

ஓடாக்குதிரை—இதில் ஓடாதவென்னும் பெயரெச்ச வீறு கெட்டது.

உரையிற்கோடலால், நடந்து, நடவாமல், நடவாமை, நடவாமே என வருகிற வினையெச்சமும், நடத்தல், நடவாமை எனத்தொழிற்பெயரும், உண்ணா, உண்ணேல், உண்ணாதே என ஒருமையேவலும் ஈறுதிரிந்தும் வருமெனக் கொள்க. (௩)

M. F. உருபும் வினையும் அடுக்கி முடிதல்:—SEVERAL CASES OR VERBS IN A SENTENCE HAVE BUT ONE GOVERNING WORD.

355. உருபுபல வடுக்கினும் வினைவே றடுக்கினும்
ஒருதம் மெச்ச மீறுற முடியும்.

(இ - ள்.) உருபு பல அடுக்கினும் - (வேற்றுமை) உருபுகள் (விரிந்துந் தொக்குந் தம்முள் விரவியேனும் வெவ்வேறாகவேனும்) பல அடுக்கிவரினும், வினை வேறு (பல) அடுக்கினும்

(மூவகை) வினைச்சொற்களும் வெவ்வேறு பல அடுக்கிவரினும், ஒரு தம்மெச்சம் ஈறு உற - தத்தமெச்சமொன்று இறுதியில் வர, முடியும் - அதனோடணைந்து முடியும், எ-று.

(உ - ம்.)

அரசனனவன் பகைவனை வாளால் வெட்டினன்	உருபு பலவடுக்கி ஒருவினை கொண்டன.
சாத்தனையுங் கொற்றனையும் வாழ்த்தினன் சாத்தனுக்குங் கொற்றனுக்குந் தந்தை	ஐயுருபுங் குவ்வுருபும் வேறு பலவடுக்கி முறையே ஒருவினையும் ஒருபெயருங் கொண்டன.
வாள்கைக்கொண்டான் அருளறமுடையான்	உருபுதொக்கு முறையே ஒருவினையும் ஒருபெயருங் கொண்டன.
ஆடினன் பாடினன் சாத்தன் இளையன் மெல்லியன் மடந்தை	வினைமுற்றுங் குறிப்பு முற்றும் வேறுபலவடுக்கி முறையே ஒவ்வொரு பெயர்கொண்டன.
கற்றகேட்ட பெரியோர் கற்றுக்கேட்டறிந்தார்	பெயரெச்சமும் வினையெச்சமும் வேறுபல வடுக்கி முறையே ஒருபெயரும் ஒருவினையுங் கொண்டன. (௪)

M. F இடைப்பிறவரல்:—ADJUNCTS OR WORDS INTERPOSED.

356. உருபு முற்றீ ரெச்சங் கொள்ளும்
பெயர்வினை யிடைப்பிற வரலுமா மேற்பன.

(இ-ள்.) உருபு - வேற்றுமை உருபுகளும், முற்று - முற்றுகளும், ஈர் எச்சம்-பெயரெச்ச வினையெச்சங்களும், கொள்ளும்- கொண்டுமுடியும், பெயர் வினை இடை - பெயர்க்கும் வினைக்கும் நடுவே, ஏற்பன பிற - பொருந்துவனவாய பிறசொற்கள், வரலும் ஆம் - வருதலுமாம், எ-று.

(உ - ம்.)

சாத்தன் (வயிறார) வுண்டான்
அறத்தை (யழகுபெறச்) செய்தான்
வாளான் (மாய) வெட்டினன்
தேவர்க்குச் (செல்வம்வேண்டிச்) சிறப்பெடுத்தான். } உருபு

மலையினின்று (உருண்டு) வீழ்ந்தான்
சாத்தனது (இத்தடக்கை) யானை
ஊர்க்கண் (உயர்ந்த வொளி) மாடம்
சாத்தா (விரைந்தோடி) வா. } உருபு.

வந்தான் (அவ்வூர்க்குப்போன) சாத்தன் முற்று.
வந்த (வடகாசி) மன்னன் பெயரெச்சம்.
வந்து சாத்தன் (இன்றைக் கவனூர்க்குப்) போயினான். } வினையெச்சம். (ரு)

F. முடிக்குஞ்சொற்கள் ஈற்றிலும் வரும்:—DEPENDENT WORDS MAY ALSO FOLLOW THEIR PRINCIPALS.

357. எச்சப் பெயர்வினை யெய்து மீற்றினும்.

(இ - ள்.) எச்சப் பெயர் வினை - (உருபுகளும் முற்றுகளும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களுங்கொண்டுமுடியும்) எச்சமாகிய பெயரும் வினையும், ஈற்றினும் எய்தும் - (அவற்றிற்கு) ஈற்றிலும் வரும், எ-று.

ஈற்றினும் என்ற உம்மையால் முதலினும் வருதல் கொள்க.

(ஈறு)	முதல்	
சாத்தன்வந்தான்	வந்தான்சாத்தன்	உருபுகள் எச்சங்கள்
மரத்தைக்குறைத்தான்	குறைத்தான்மரத்தை	
சாத்தனால்வந்தான்	வந்தான்சாத்தனால்	
சாத்தனுக்குக்கொடுத்தான்	கொடுத்தான்சாத்தனுக்கு	
சாத்தனினீங்கினான்	நீங்கினான்சாத்தனின்	
சாத்தன தாடை	... ...	
சாத்தன்கட்சென்றான்	சென்றான்சாத்தன்கண்	
மணியின்கணொளி	... ...	
சாத்தாவா	வா சாத்தா	
வந்தான்சாத்தன்	சாத்தன்வந்தான்	முற்று, பெயரெச்சம், வினையெச்சம்
வந்தசாத்தன்	... ...	
வந்துபோயினான்	போயினான்வந்து.	

முதற்கண்வருதலை உம்மையாற் றழுவிக் கொண்டமையால், ஆறனுருபி னெச்சமும் ஏழனுருபி னெச்சப்பெயரும் பெயரெச்சத்தி னெச்சமும் முதற்கண் வாராவாம். (௬)

M. F. ஒருமொழி தன்னினத்தையுமுணர்த்தும்:—
A WORD EXPRESSED ALSO INCLUDES THOSE UNDERSTOOD.

358.* ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே.

(இ - ள்.) ஒருமொழி - (பெயர் வினை இடை உரிகளுள்) ஒரு சொல், ஒழி தன் இனம் - ஒழித்துநின்ற தன்னுடைய இனங்களை, கொளற்கு உரித்து - கொண்டு முடிதற்கு உரித்தாகும், எ-று.

(உ - ம்.)

சோற்றை நனி யுண்டான் என்பதில் கறியை நனிதின்றான்;
பாக்கு நனிதின்றான் என்பதில் வெற்றிலை நனிதின்றான், சுண்ணாம்பை நனிதின்றான்;
நஞ்சுண்டவன் சாவான் என்பதில் நஞ்சுண்டவள் சாவாள், நஞ்சுண்டவர் சாவார், நஞ்சுண்டது சாம், நஞ்சுண்டவை சாம்;
} எனவும் பிறவுங் கூறுதலின் இனங்களாய் எஞ்சிநின்றன.

இவற்றுள், சோற்றை என்கிற பெயர்ச்சொல்லும் உருபிடைச்சொல்லும், கறியை என்கிற பெயர்ச்சொல்லையும் உருபிடைச் சொல்லையும்; நனியுண்டான் என்கிற உரிச்சொல்லும் வினைச்சொல்லும், நனிதின்றான் என்கிற உரிச்சொல்லையும் வினைச்சொல்லையும்; கொள்ளுதற்குரியவாய் நிற்றல் காண்க. மற்றவைகளு மிப்படியே வரும். (எ)

பொதுப்பெயர்வினைகளின் பொதுமைநீக்கும்வழி:—THE GENDER &c. OF EPICENE NOUNS & VERBS DETERMINED BY GOVERNING WORDS.

359. பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும் மேல்வருஞ் சிறப்புப் பெயர்வினை தாமே.

(இ - ள்.) பொது - (திணை பால் இடங் காலங்களுக்குப்) பொதுவாகிய, பெயர் வினைகளின் பொதுமை - பெயர் வினைக

ளுடைய பொதுத்தன்மையை, மேல் வரும் சிறப்பு பெயர் வினைதாமே - மேலேவருகிற சிறப்பாகிய பெயர்களும் வினைகளும், நீக்கும் - நீக்கி ஒன்றற் குரிமைசெய்யும், எ-று.

(உ - ம்.)

சாத்தன் அவன் சாத்தன் அது	சிறப்புப்பெயர்	பெயரில் திணைப்பொதுமை நீக்கின.
சாத்தன் வந்தான் சாத்தன் வந்தது	சிறப்புவினை	
ஒருவர் என் தந்தையார் ஒருவர் என் தாயார்	சிறப்புப்பெயர்	பெயரில் பாற்பொதுமை நீக்கின.
மரம் வளர்ந்தது மரம் வளர்ந்தன	சிறப்புவினை	
யாமெல்லாம்வந்தோம் நீவிரெல்லாம் போமின் அவரெல்லாம் வருவார்	சிறப்புப்பெயர் வினைகள்	பெயரில் இடப்பொதுமை நீக்கின.
வாழ்க அவன் வாழ்க அவள் வாழ்க அவர் வாழ்க அது வாழ்க அவை வாழ்க யான் வாழ்க யாம் வாழ்க நீ வாழ்க நீவிர்.	சிறப்புப் பெயர்	வினையில் திணைபாலிடப் பொதுமை நீக்கின.
உண்டுவந்தான் உண்டுவந்தாள் உண்டுவந்தார் உண்டு வந்தது உண்டுவந்தன உண்டுவந்தேன் உண்டுவந்தோம் உண்டுவந்தாய் உண்டுவந்தீர்.	சிறப்பு வினை	வினையில் திணைபாலிடப் பொதுமையை நீக்கின.

எச்சங்களும் அவைகளின் முடிபுகளும்:—DEFECTIVE FORMS AND THEIR GOVERNING WORDS.

360. பெயர்வினை யும்மைசொற் பிரிப்பென வொழி
யிசை, எதிர்மறை யிசையெனுஞ் சொல்லொழி

பொன்பதும், குறிப்புந் தத்த மெச்சங் கொள்ளும்.

(இ - ள்) பெயர் (சொல்லொழிபு) - பெயரெச்சமும், வினை (சொல்லொழிபு) - வினையெச்சமும், உம்மை (சொல்லொழிபு) - உம்மையெச்சமும், சொல் (சொல்லொழிபு) - சொல்லெச்சமும், பிரிப்பு (சொல்லொழிபு) - பிரிநிலை யெச்சமும், என (சொல்லொழிபு) - எனவெச்சமும், ஒழியிசை (சொல்லொழிபு) - ஒழியிசையெச்சமும், எதிர்மறை (சொல்லொழிபு) எதிர்மறையெச்சமும், இசை (சொல்லொழிபு) - இசையெச்சமும், எனும் - என்கிற, சொல்லொழிபு ஒன்பதும் - சொல்லெச்சங்கள் ஒன்பதும், குறிப்பு (ஒழிபும்) - குறிப்பெச்சமும், தத்தம் எச்சம் - தந்தம்முடைய எச்சங்களை, கொள்ளும் - கொண்டுமுடியும், எ-று.

எனவே, எச்சங்கள் சொல்லெச்சம் குறிப்பெச்சம் என இருவகைப்படும் என்பதாயிற்று.

(உ-ம்.)

1.	செய்த சாத்தன் நல்ல சாத்தன்	பெயரெச்சம் தம் மெச்சங்களாகிய செய்பவனது பெயரைக்கொண்டன.
2.	செய்துவந்தான் செய்து நல்லனாயினான்	வினையெச்சம் தம் மெச்சங்களாகிய வினைமுற்றுக் குறிப்புமுற்றுக்களைக் கொண்டன.
3.	சாத்தனும் வந்தான் நளனும் போனான்	உம்மையெச்சம் முறையே முன்னே கொற்றன் வந்தான், மற்றதேவர்கள் போனார்கள் என்னும் தம் மெச்சங்களைக் கொண்டன.
4.	நல்லவனென்றான்	சொல்லெச்சம் நல்லவன் என்று சொன்னான் எனச் சொல் என்னுந் தன் எச்சங் கொண்டது.
5.	சாத்தனே கொண்டான் சாத்தனோ கொண்டான்	பிரிநிலை யெச்சம் பிறர் கொண்டிலரெனத் தம்மெச்சங் கொண்டன.

6.	கடலொல்லென ஒலித்தது விண்ணென இசைத்தது	எனவெச்சம் தம் மெச்சமாகிய வினையைக்கொண்டன, மிகவும் ஒலித்தது, மிகவும் இசைத்தது என்பன பொருள்.
7.	கூரியதோர் வாண்மன் உன்னுதற்கோ வந்தான்	ஒழியிசையெச்சம் முறையே கோடிற்று, கலகஞ்செய்ய வந்தான் எனத் தம்மெச்சங் கொண்டன.
8.	வரலுமுரியன் யானே செய்தேன் "மறப்பினு மோத்துக் கொளலாகும்"	எதிர்மறையெச்சம் முறையே வராமைக்கு முரியன், யான் செய்திலேன், மறக்கலாகாது எனத் தம்மெச்சங் கொண்டன.
9.	"கற்றதனா லாயபய னென்கொல்" "அந்தா மரையன்ன மேனின் னை யானகன் றுற்றுவனே"	இசையெச்சம் நூற்களைக் கற்றதனால் என ஒரு சொல்லும், "என்னுயிரினுஞ் சிறந்த உன்னை" எனப் பல சொற்களும் வருவித் துரைக்கப்படும்.

இசையெச்சமாவது வாக்கியங்களில் அவ்வவ் விடங்களுக் கேற்றபடி ஒரு சொல்லும் பல சொற்களுமாக வருவித்துரைக் கப்படுவது. [இசை=சொல்.]

10. குறிப்பாவது [269] சூத்திரத்திலே "ஒன்றொழி பொதுச் சொல்" முதலாக "இன்னபிறவும்" வரைக்கும் சொல் லப்பட்டவைகளாம். (௬)

உ. தொகைநிலைத் தொடர் மொழிகள்.
ELLIPTICAL COMBINATIONS.

தொகைநிலைத் தொடர்மொழி இலக்கணம்:—ELLIPTICAL COMBINATION DEFINED.

361. பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளி னவற்றி னுருபிடை

ஒழிய விரண்டு முதலாத் தொடர்ந்தொரு
மொழிபோ னடப்பன தொகைநிலைத் தொடர்
சொல்.

(இ - ள்.) பெயரொடு பெயரும் - பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல்லும், (பெயரொடு) வினையும் - பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும், வேற்றுமை முதலிய பொருளின் - (பின் சொல்லப்படும்) வேற்றுமை முதலாகிய (அறுவகைப் பொருட்) புணர்ச்சிக்கண், அவற்றின் உருபு - அவற்றினுடைய உருபுகள், இடை ஒழிய - நடுவிலே தொக்கு நிற்ப, இரண்டு முதலா தொடர்ந்து - இரண்டு சொற்கள் முதலாகப் பலசொற்கள் தொடர்ந்து, ஒருமொழிபோல் நடப்பன - ஒருசொற் போல நடப்பவை, தொகைநிலைத் தொடர்சொல் - தொகைநிலைத் தொடர்ச்சொற்களாம், எ-று.

தொகையென்பது இங்கே உருபுமறைதல். (௧0)

M F. ஆறுவகைத் தொகைநிலைத் தொடர்கள்:—SIX KINDS OF ELLIPSES.

362 வேற்றுமை வினைபண் புவமை யும்மை
அன்மொழி யெனவத் தொகையா றாகும்.

(இ - ள்.) வேற்றுமைத் (தொகை) - வேற்றுமைத் தொகையும், வினைத் (தொகை) - வினைத் தொகையும், பண்புத் (தொகை) - பண்புத்தொகையும், உவமைத் (தொகை) - உவமைத் தொகையும், உம்மைத் (தொகை) - உம்மைத் தொகையும், அன்மொழித் (தொகை) - அன்மொழித்தொகையும், என அத் தொகை - என்று முன்னே சொல்லப்பட்ட தொகைநிலைத் தொடர்மொழிகள், ஆறு ஆகும் - ஆறுவகைப்படும், எ-று. ()

N. F. வேற்றுமைத்தொகை:—ELLIPSIS OF CASAL PARTICLES.

363. இரண்டு முதலா மிடையா றுருபும்
வெளிப்பட லில்லது வேற்றுமைத் தொகையே.

(இ-ள்.) இடை - (எழுவாய்க்கும் விளிக்கும்) இடையே நிற்கிற, இரண்டு முதல் ஆம் ஆறு உருபும் - இரண்டாவது முதலா யிருக்கின்ற ஆறுவேற்றுமை யுருபுகளும், வெளிப்படல்

இல்லது - தொக்க தொடர்மொழிகள், வேற்றுமைத் தொகை - வேற்றுமைத் தொகைகளாம், எ-று.

(உ - ம்.)

நிலங்கடந்தான் ..	௨-ம்.	வேற்றுமைத்தொகை.	இருமொழித்தொடர்.
தலைவணங்கினான் ..	௩-ம.	வேற்றுமைதொகை.	
சாத்தன்மைந்தன் .	௪-ம்.	வேற்றுமைத்தொகை.	
ஊர்நீங்கினான் ..	௫-ம்.	வேற்றுமைத்தொகை.	
சாத்தன்கை .	௬-ம்.	வேற்றுமைத்தொகை.	
குன்றக்கூகை ..	௭-ம்.	வேற்றுமைத்தொகை.	

யானைக்கோட்டு நுனிகுறைத்தான் பன்மொழித்தொடர்.

எனவே கடந்தானிலம், இருந்தான்குன்றத்து என இறுதியிலே தொகின், நிலங்கடந்தான், குன்றத்திருந்தான் எனக் கூட்டப்படுதலால் இடையிலே தொக்கவையேயாம்.

ஆறுருபும் என்கிற முற்றும்மையை எச்சவும்மை யாக்கி, கைக்களிறு, பொற்குடம் என்பனபோல உருபுடனே முடிக்குஞ்சொல் தொக்கவையும் தொகைநிலைத் தொடராம் எனக் கொள்க. இவை கையையுடைய களிறு, பொன்னாற்செய்த குடம் என விரியும். (௧௨)

N. F. வினைத்தொகை:—ELLIPSIS IN VERBS OF THE PARTICLES DENOTING TENSE.

364. காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை.

(இ - ள்.) காலம் கரந்த - காலம்பற்றிப் புடைபெயர்கிற வினையுருபுகள் தொக்க, பெயரெச்சம் - பெயரெச்சவினைகள், வினைத்தொகை - வினைத்தொகைகளாம், எ-று.

காலம்—ஆகுபெயர். காலம்பற்றிப் புடைபெயர் வினையுருபுகள் தொகுமெனவே முதனிலைமாத்திரந் தொகாதிருக்குமென்பது பெற்றும்.

(உ - ம்.)

நேற்றுக்கொல்களிறு ..	இறந்தகால வினைத்தொகை.	
முன்விடுகணை ...		
இன்றுகொல்களிறு ...	நிகழ்கால வினைத்தொகை.	
இப்போதுவிடுகணை ...		

நாளைக்கொல்களிறு .. } எதிர்கால வினைத்தொகை.
பின்விடுகணை .. }

இவைமுறையே கொன்ற, கொல்கிற, கொல்லும் எனவும்; விட்ட, விடுகின்ற, விடும் எனவும் விரியும். இவை முக்காலம் பற்றிவரின் முக்காலவினைத்தொகை எனப்படும்.

வருவழி, தருபுனல், நடந்திடுகுதிரை எனச் சில வினைத் தொகை முதனிலை திரிந்தும் வரும். (கரு)

M. F பண்புத்தொகை:—ELLIPSIS OF ADJECTIVE PARTICLES.

365. பண்பை விளக்கு மொழிதொக் கனவும்
ஒருபொருட் கிருபெயர் வந்தவுங் குணத்தொகை.

(இ - ள்) பண்பை விளக்கும் மொழி - (பண்போடு பண்பிக்கு உண்டாகிய ஒற்றுமை நயத்தை விளக்குகிற ஆகிய என்னும்) பண்புருபு, தொக்கனவும் - தொக்கு நின்றவையும், ஒருபொருட்கு இருபெயர் - ஒருபொருளுக்கு (பொதுப்பெயருஞ் சிறப்புப் பெயருமாகிய) இருபெயர்கள், வநதவும் - வந்தவையும், குணத்தொகை - பண்புத்தொகைகளாம், எ-று.

குணத்தொகை என்றதனால் ஒரு பொருளுக்கு வருகிற அவ்விரண்டு பெயர்க்கும் நடுவில் ஆகிய வென்கிற பண்புருபு தொக்கு வருமென்பது பெறப்பட்டது. பண்பெனப் பொதுப்படச் சொன்னதனால் வண்ணம் வடிவு அளவு சுவை முதலாயினவை யெல்லாங் கொள்க.

(உ - ம்.)

செந்தாமரை .. } வண்ணப் பண்புத்தொகை.
கருங்குவளை .. }

வட்டக்கல் .. } வடிவுப் பண்புத்தொகை.
சதுரப்பலகை .. }

ஒருபொருள் .. } அளவுப் பண்புத்தொகை.
முக்குணம் ... }

துவர்க்காய் ... } சுவைப் பண்புத்தொகை.
இன்சொல் .. }

சாரைப்பாம்பு .. } இருபெயரொட்டுப் பண்புத்தொகை.
ஆயன்சாத்தன் .. }

செங்கிறக்குவளை .. பன்மொழித்தொடர்.

இவை செம்மையாகிய தாமரை, சாரையாகிய பாம்பு, செம்மையாகிய நிறமாகிய குவளை என விரியும். (கச)

N. F. உவமத்தொகை:—ELLIPSIS OF THE PARTICLES OF COMPARISON.

366. உவம வுருபில * துவமத் தொகையே.

(இ - ள்.) உவம உருபு - (வினை பயன் மெய் உரு என்பவற்றைப்பற்றி வருகிற) உவம உருபுகள், இலது - தொக்க தொடர்மொழிகள், உவமத்தொகை - உவமத்தொகைகளாம், எ-று.

(உ-ம்.)

புலிக்கொற்றன் ... ... குருவிகூப்பிட்டான் ...	வினையுவமத்தொகை.
மழைக்கை ... ... கற்பகவள்ளல்	பயனுவமத்தொகை.
துடியிடை .. ... உரற்கால்யானை	மெய்யுவமத்தொகை.
பொற்சுணங்கு .. .. பவளவாய்	உருவுவமத்தொகை.
மரகதக்கிளிமொழி .. இருண்மழைக்கை ..	பன்மொழித்தொடர்.

இவை புலிபோலுங் கொற்றன், மழைபோலுங்கை, துடிபோலுமிடை, பொன்போலுஞ் சுணங்கு, மரகதம்போலுங் கிளிபோலுமொழி எனவிரியும். செயப்படுபொருள் குறித்தால் புலியைப்போலுமென ஐயுருபுந் தோன்றும். (கரு)

F. உவம உருபுகள்:—PARTICLES OF COMPARISON.

367. போலப் புரைய வொப்ப வுறழ
மானக் கடுப்ப வியைய வேய்ப்ப
நேர நிகர வன்ன வின்ன
என்பவும் பிறவு முவமத் துருபே.

(இ-ள்.) போல.. .. நிகர - இப் போல முதலாகிய செயவெனெச்சம் பத்தும், அன்ன இன்ன என்பவும் - அன்ன இன்ன என்கிற பெயரெச்சக் குறிப்பிரண்டும், பிறவும் - இவைபோல்வன பிறவும், உவமத்துருபு - உவம உருபுகளாம், எ-று.

---

* உவமைத்தொகை என்றும் வழங்கும்.

பிற என்றதனால் போல முதலானவைகளின் முதனிலையிற் பிறக்கின்ற மற்றை வினையெச்சங்களும், வினைமுற்றுகளும், பெயரெச்சங்களும், பொருவ ஏற்ப அனைய முதலானவையுங் கொள்க. (௧௬)

M. F. உம்மைத்தொகை:—ELLIPSIS OF THE CONJUNCTIVE PARTICLE உம்.

368. எண்ண லெடுத்தன் முகத்த னீட்டல்
எனுநான் களவையு ளும்மில தத்தொகை.

(இ-ள்.) எண்ணல் - எண்ணலளவையும், எடுத்தல் - எடுத்தலளவையும், முகத்தல் - முகத்தலளவையும், நீட்டல் - நீட்டலளவையும், எனும் நான்கு அளவையுள் - என்கிற நான்களவைப்பெயர்களுள், உம் இலது - உம்மையாகிய உருபுதொக்கு நிற்பவை, அத்தொகை - அவ்வும்மைத்தொகைகளாம், எ-று.

ஒன்றேகால் ... .. கபிலபரணர்	எண்ண லும்மைத்தொகை.
கழஞ்சேகால் ... .. தொடியேகஃசு	எடுத்த லும்மைத்தொகை.
கலனேதூணி ... ... நாழியாழாக்கு	முகத்த லும்மைத்தொகை.
சாணங்குலம் .. .. சாணரை ..	நீட்ட லும்மைத்தொகை.

சேர சோழ பாண்டியா .. பன்மொழித்தொடர்.

இவை ஒன்றுங்காலும், கழஞ்சுங்காலும், கலனுந்தூணியும், சாணுமங்குலமும், சேரனுஞ் சோழனும் பாண்டியனும் என விரியும். (௧௭)

M. F. அன்மொழித்தொகை:—METONYMY [ELLIPSIS OF OTHER WORDS.]

369. ஐந்தொகை மொழிமேற் பிறதொக லன்மொழி.

(இ-ள்.) ஐந்தொகை மொழிமேல் - (வேற்றுமைத்தொகை முதலிய) ஐவகைத் தொகைநிலைத் தொடர்மொழிகளுக்குப் புறத்தே, பிற தொகல் - (அவையல்லாத) பிறமொழிகளாகிய உருபுகள் தொக்கு வருவன, அன்மொழி - அன்மொழித் தொகைகளாம், எ-று.

(உ-ம்.)

1\.
- பூங்குழல் ...௨-ம் வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை; =பூவையுடைய குழலினை யுடையாள்.
- பொற்றொடி .. ௩-ம் வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை; = பொன்னாலாகிய தொடியினை யுடையாள்.
- கவியிலக்கணம் . ௪-ம் வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை; = கவிக் கிலக்கணஞ் சொல்லப் பட்டநூல்.
- பொற்றாலி .. ௫-ம் வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை; = பொன்னினாலாகிய தாலியினை யுடையாள்.
- கிள்ளிகுடி ...௬-ம் வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை; =கிள்ளியினது குடியிருக்குமூர்.
- கீழ்வயிற்றுக்கழலை எ-ம் வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை; = கீழ்வயிற்றின்கண் எழுந்த கழலைபோல்வான். (கழலை - கட்டி)

2\. தாழ்குழல் .. வினைத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை; =தாழ்ந்த குழலினையுடையாள்.

3\. கருங்குழல் ...பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; =கருமையாகிய குழலினை யுடையாள்.

4\. துடியிடை ...உவமததொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; =துடிபோலு மிடையை யுடையாள்.

5\. உயிர்மெய் ...உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை ;
= உயிரு மெய்யுமாகிய இரண்டுங் கூடிப்பிறந்த எழுத்து.

தகரஞாழன்மார்பு...பன்மொழித்தொடர் ;
=தகரமும் ஞாழலுங்கூடி யுண்டாகிய சாந்தை யணிந்த மார்பினை யுடையாள். (௧௮)

தொகைநிலைத்தொடர் மொழிகள் பொருள் சிறந்து நிற்கும் இடங்கள்:—ELLIPTICAL EXPRESSIONS HOW RENDERED INTELLIGIBLE.

370. முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி
எனுநான் கிடத்துஞ் சிறக்குந் தொகைப்பொ
ருள்.

(இ - ள்.) முன்மொழி - முன்சொல்லும், பின்மொழி - பின்சொல்லும், பன்மொழி - பலசொற்களும், புறமொழி - புறத்து வருகிற சொல்லும், எனும் நான்கு இடத்தும் - என்கிற நான்கிடத்தி லொன்றிலே, தொகைப்பொருள் - தொகைநிலைத்தொடர்ப்பொருள், சிறக்கும் - சிறந்துநிற்கும், எ-று.

(உ - ம்.)

குடம்வனைந்தான் ... வேங்கைப்பூ ... .. செந்தாமரை	குடம் முதலிய முன்மொழிகள் இனம் விலக்கி நிற்கையால் அவ்வகளிற் பொருள்சிறந்தன.
நிலமுழுதான் . கண்ணிமை ... .. செஞ்ஞாயிறு	நிலம் முதலாகிய முன்மொழிகள் இனம் விலக்குதலின்றி நிற்கையால் உழுதான் முதலாகிய பின்மொழிகளிற் பொருள் சிறந்தன.
கபிலபரணர் .. ... சேரசோழபாண்டியர் .. புலிவிற்கெண்டை .	எல்லா மொழிகளிலும் பொருள் சிறந்தன.
பூங்குழல் ... ... கருங்குழல்	அன்மொழித் தொகைகளில் உடையாள் என்பது முதலாகிய புறமொழிகளிற் பொருள்சிறந்தன. ()

இடத்தொகை, பெயர்த்தொகைகட்கு வேறுபா டறிகுறி:—
HOW TO DISTINGUISH BETWEEN AN ELLIPSIS OF CASAL PARTICLES AND THAT OF ADJECTIVE PARTICLES.

371. வல்லொற்று வரினே யிடத்தொகை யாகும்
மெல்லொற்று வரினே பெயர்த்தொகை யாகும்

(இ-ள்) வல்லொற்று வரின் - வல்லொற்றானது (இடையே) வந்தால், இடத்தொகை ஆகும் - இடத்தின்கண்ணே தொக்க தொகை ஆகும்; மெல்லொற்று வரின் - மெல்லொற்றானது (இடையே) வந்தால், பெயர்த்தொகை ஆகும் - பெயரின்கண்ணே தொக்கதொகையாகும், எ-று.

(உ-ம்.)

வடுகக்கண்ணன் =வடுகநாட்டிற் பிறந்த கண்ணன்.
வடுகங்கண்ணன் =வடுகனாகிய கண்ணன், (அல்லது) வடுகனுக்கு மகனாகிய கண்ணன்.

துளுவச்சாத்தன் =துளுவநாட்டிற் பிறந்த சாத்தன்.
துளுவஞ்சாத்தன் =துளுவனாகியசாத்தன், (அல்லது) துளுவனுக்கு மகனாகிய சாத்தன்.

பொதுப்பெய ருயர்திணை என்கிற [159] சூத்திரத்தில் "சில விகாரமா முயர்திணை" என்றதினாலே வல்லின முதன்மொழி வந்து புணரும்போது ஈறுகெட்டு வல்லொற்றாவது மெல்லொற்றாவது மிக்கு வந்தபோது வேற்றுமைத்தொகையோ பண்புத்தொகையோ எனச் சந்தேகம் தோன்றியவிடத்து மேலே கூறியபடி வல்லொற்று மிகின் வேற்றுமைத்தொகை யென்றும், மெல்லொற்று மிகின் பண்புத்தொகை யென்றும் துணியவேண்டும். வடுகநாதன், வடுகவணிகன், வடுகவரசன் என மெல்லின இடையின முதன்மொழியாவது உயிர் முதன்மொழியாவது வரின் உரைப்போன் குறிப்பாலன்றித் துணியப்படா. (உ0)

M. F. உம்மைத்தொகைக் காவதோர் புறனடை:—SPECIAL RULE FOR THE ELLIPSIS OF உம்.

372 உயர்திணை யும்மைத் தொகைபல ரீறே.

(இ - ள்.) உயர்திணை உம்மைத்தொகை - உயர்திணை யொருமையில் வருகிற உம்மைத்தொகைகளானவை, பலர் ஈறே -

(ரவ்வொற்றுங் கள்ளுமாகிய) பலர்பால் விகுதியை ஈற்றி லுடையனவே யாம், எ-று.

(உ-ம்) சேரசோழ பாண்டியர்
கபில பரணர்
தேவன் றேவிகள்.

பலரீறே என்கிற தேற்றத்தால் அஃறிணை யொருமையிலும் பொதுத்திணை யொருமையிலும் வருகிற உம்மைத்தொகைகள் பன்மைவிகுதி பெற்றே வரல்வேண்டு மென்கிற நியதியில்லை என்பதாயிற்று.

(உ-ம்) நன்மை தீமை தந்தை தாய்	}	பன்மைவிகுதியின்றி வந்தன.
நன்மை தீமைகள் தந்தை தாய்கள் தந்தை தாயார்	}	பன்மைவிகுதிபெற்று வந்தன.

சேரன் சோழன் பாண்டியன் எனப் பிளவுபட்டு வந்தாற் செவ்வெண்ணும் எனக்கொள்க. (உக)

F. தொகைநிலைத் தொடர்மொழிகள் பலபொருள் படுதல்:— EXPANSION OF AMBIGUOUS ELLIPTICAL EXPRESSIONS.

373. தொக்குழி மயங்குந விரண்டு முதலேழ்
எல்லைப் பொருளின் மயங்கு மென்ப.

(இ - ள்.) தொக்குழி மயங்குந - (வேற்றுமையுருபு முதலாகிய வுருபுகள்) தொக்கு நின்றவழி (பொருள்களினாலே) மயங்குந் தன்மையனவாகிய தொடர்மொழிகள், இரண்டு முதல் ஏழ் எல்லை பொருளின் - இரண்டுமுதல் ஏழீறாகிய பொருள்களால், மயங்கும் என்ப - மயங்கும் என்று சொல்லுவர் புலவர், எ-று.

(உ-ம்.)

தெய்வவணக்கம் . (1) தெய்வத்தை வணங்குகிற வணக்கம், (2) தெய்வத்துக்கு வணக்கம் என இரண்டு பொருள்களினாலே மயங்கியது.

தற்சேர்ந்தார் ...(1) தன்னைச்சேர்ந்தார், (2) தன்னொடு சேர்ந்தார, (3) தன்கட்சேர்ந்தார்

என மூன்றுபொருள்களினாலே மயங்கியது.

சொல்லிலக்கணம் ...(1) சொல்லினதிலக்கணம், (2) சொற்கிலக்கணம், (3) சொல்லின்கணிலக்கணம், (4) சொல்லின திலக்கணஞ் சொன்னநூல் என நான்குபொருள்களினாலே மயங்கியது.

பொன்மணி ...(1) பொன்னாலாகியமணி, (2) பொன்னாகியமணி, (3) பொன்னின்கண்மணி, (4) பொன்னோடு சேர்ந்தமணி, (5) பொன்னு மணியும் என ஐந்துபொருள்களினாலே மயங்கியது.

மரவேலி .. (1) மரத்தைக்காக்கிற வேலி, (2) மரத்துக்குவேலி, (3) மரத்தினது வேலி, (4) மரத்தின்புறத்து வேலி, (5) மரத்தாலாகிய வேலி, (6) மரமாகிய வேலி, என் ஆறுபொருள்களினாலே மயங்கியது.

சொற்பொருள் ...(1) சொல்லா லறியப்படுகிற பொருள், (2) சொல்லினதுபொருள், (3) சொல்லுக்குப்பொருள், (4) சொல்லின்கட்பொருள், (5) சொல்லும்பொருளும், (6) சொல்லாகிய பொருள், (7) சொல்லானது பொருள் என ஏழுபொருள்களினாலே மயங்கியது.

புலிகொல்யானை .. பன்மொழித்தொடர். (1) புலியைக்கொன்றயானை, (2) புலியானது கொன்ற யானை, (3) புலியினாலே கொல்லப்பட்டயானை என மூன்று பொருள்களினாலே மயங்கியது.

வலிந்துபொருள் கொள்ளின் ஏழெல்லை கடந்தும் வரும் (உ-உ.)

௨

௩. தொகாநிலைத் தொடர்மொழிகள்.

M. F. தொகாநிலையின் இலக்கணம்:—UNELLIPTICAL EXPRESSION DEFINED.

374. முற்றீ ரெச்ச மெழுவாய் விளிப்பொருள்
ஆறுரு பிடையுரி யடுக்கிவை தொகாநிலை.

(இ - ள்) முற்று - வினைமுற்றும், ஈரெச்சம் - பெயரெச்சமும் வினையெச்சமும், எழுவாய் - எழுவாயும், விளி - விளியும் ஆகிய, பொருள் - ஐவகைப் பொருள்களிலே (பெயர்வினைகள் புணருகிற புணர்ச்சியும்), ஆறு உருபு - (வேற்றுமைப் பொருள்களில் அவற்றினுருபுகளாகிய) இரண்டாவது முதலாகிய ஆறுருபுகளும் விரிந்துநிற்கப் பெயர்வினைகள் புணருகிற புணர்ச்சியும், இடை - இடைச்சொற் புணர்ச்சியும், உரி - உரிச்சொற் புணர்ச்சியும், அடுக்கு - அடுக்குப் புணர்ச்சியுமாகிய, இவை - இவ்வொன்பதும், தொகாநிலை - தொகாநிலைத் தொடர்மொழிகளாம், எ-று.

(உ-ம்.)

உண்டான்சாத்தன் ... (தெரி) கரியன்கொற்றன் ... (குறி)		வினைமுற்றுத்தொடர்.
உண்டசாத்தன் ... ... (தெரி) கரியகொற்றன் ... ... (குறி)		பெயரெச்சத் தொடர்.
உண்டுவந்தான் .. (தெரி) இன்றிவந்தான் .. ... (குறி)		வினையெச்சத் தொடர்.
சாத்தன்வந்தான் ... ... அம்பிபோனான்		எழுவாய்த் தொடர்.
சாத்தாவா .... கொற்றுகொடு		விளித்தொடர்.
குடத்தைவனைந்தான் .. ... வாளால்வெட்டினான் ... ... இரப்போர்க்கீந்தான் ... .. மலையினிழிந்தான் ... ... சாத்தனதுகை ... . மணியின்கனொளி		வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்.

மற்றொன்று . .. ... } இடைச்சொற்றொடர்.
கொன்னேகழிந்தது ... .

நனிபேதை ... . } உரிச்சொற்றொடர்.
கடிக்கமலம் ... .

பாம்பு பாம்பு ... ... } அடுக்குத் தொடர். (௨௩)
நெருப்பு நெருப்பு .. ...

---

௪. வழாநிலை, வழுவமைதி.

F. எழுவகை வழுக்கள்:—THE SEVEN KINDS OF GRAMMATICAL ERRORS.

375. திணையே பாலிடம் பொழுது வினாவிறை
மரபா மேழு மயங்கினும் வழுவே.

(இ-ள்.) திணை - இருதிணையும், பால் - ஐம்பாலும், இடம் - மூவிடமும், பொழுது - முக்காலமும், வினா - வினாவும், இறை - விடையும், மரபு - (பலவகை) மரபுகளும், ஆம் ஏழும் - ஆகிய ஏழும், மயங்கின் - (அவ்வவற்றின் நெறி) பிறழுமாயின், வழு ஆம் - வழுவாகும், எ-று.

(உ - ம்.)

அவன்வந்தது ... ... திணைவழு
அவன் வந்தாள் .. .. பால்வழு
யான்வந்தான் ... .. . இடவழு
நாளைவந்தான் .. .. காலவழு
கறக்கிறவெருமை பாலோசினையோ ... வினாவழு
கடம்பூர்க்கு வழியாதோ வென்றால் } விடைவழு
இடம்பூணி என ஆவின்கன்றன்று }
யானைமேய்ப்பானை இடையன் என்பது மரபுவழு. (௨௪)

திணைபால்களோடு வினாவிடைகள் வழுவாமற் காத்தல்:—HOW TO AVOID DOUBTFUL GENDER IN QUESTIONS AND ANSWERS.

376. ஐயந் திணைபா லவ்வப் பொதுவினும்
மெய்தெரி பொருண்மே லன்மையும் விளம்புப.

(இ-ள்.) திணை (ஐயம்) - திணை ஐயத்தையும், பால் (ஐயம்) - பாலையத்தையும், அவ்வவ் பொதுவினும் - அவ்வவற்றின் பொ

துச்சொல்லாலும், மெய் தெரி பொருண்மேல் - துணிந்த பொருண்மேல், அன்மையும் - அல்லாத தன்மையை வைத்தும், விளம்புப - சொல்லுவர் புலவர், எ - று.

(உ - ம்.)

வினா. (1) குற்றியோ மகனோ அவ்விடத்துத் தோன்றுகிற வுரு—திணை ஐயத்தில் உரு எனப் பொதுச் சொல்லாற் கூறப்பட்டது. இப்படிக்கன்றித் தோன்றுகிறது தோன்றுகிறவன் எனச் சிறப்புச் சொற்களாற் கூறின் திணைவழூவும் வினு வழூவும் ஆம். [குற்றி—மரக்கட்டை.]

(2) ஆண்மகனோ பெண்மகளோ அங்கே தோன்றுகிறவர்—உயர்திணைப் பால் ஐயத்தில் தோன்றுகிறவர் எனப் பொதுச்சொல்லாற் கூறப்பட்டது. இப்படிக்கன்றி தோன்றுகின்றவன் தோன்றுகின்றவள் எனச் சிறப்புச் சொற்களாற் கூறின் பால்வழூவும் வினுவழூவும் ஆம்.

(3) ஒன்றோ பலவோ இச்செய் புக்க பெற்றம்.—அஃறிணைப்பால் ஐயத்தில் பெற்றம் எனப் பொதுச்சொல்லாற் கூறப்பட்டது. பெற்றம் பால் பகா வஃறிணைப்பெயராதலால் அத்திணை இரு பாலுக்கும் பொதுச்சொல்லாயிற்று. இப்படிக் கன்றிப் புக்கது புக்கன எனச் சிறப்புச்சொற்க ளாற் கூறின் பால்வழூவும் வினுவழூவும் ஆம்.

விடை. (1) மேலே முதல் உதாரணத்தில் துணிந்த பொருள் குற்றியெனின் மகனன்று (=அக்குற்றி மக னன்று); மகனெனில் குற்றியல்லன் (=அம் மகன் குற்றியல்லன்); எனத் துணிந்த பொருண்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறவேண்டும்.

(2) மேலே இரண்டாம் உதாரணத்தில் துணிந்த பொருள் ஆண்மகனெனில் பெண்மகளல்லன் (=அம் மகன் பெண்மகள் அல்லன்); பெண்மகளெனின்

ஆண்மகனல்லள் (=அப்பெண் ஆண்மகள் அல்லள்); எனத் துணிந்த பொருண்மேல் மற்றொன்றல்லாத தன்மையைவைத்துக் கூறவேண்டும்.

(3) மேலே மூன்றாம் உதாரணத்தில் துணிந்தபொருள் ஒன்றாயின் பலவன்று (=அது பலவன்று) பலவெனின் ஒன்றல்ல (=அவை ஒன்றல்ல); எனத் துணிந்த பொருண்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறவேண்டும்.

மகனல்லன் அவ்வுருக் குற்றி எனக்கூறின் சொற்பல்குதல் என்னும் விடை வழுவாம். (௨௫)

M. F. திணைவழுவமைதி :—IMPERSONAL CLASS WORDS FOLLOWING A PERSONAL CLASS HAVE A PREDICATE OF THE LATTER CLASS.

377. உயர்திணை தொடர்ந்த பொருண்முதலாறும்
அதனொடு சார்த்தி னத்திணை முடிபின.

(இ-ள்.) உயர்திணை தொடர்ந்த - உயர்திணையைப் பற்றிய, பொருள்முதல் ஆறும் - பொருளாதியாறும், அதனொடு சார்த்தின் - அவ்வுயர்திணையோடு சேர்த்து முடிக்கின், அத்திணை முடிபின - அவ்வுயர்திணை முடிபினவாம், எ-று.

(உ-ம்.)

நம்பிபொன்பெரியன்	பொருள்	இங்கு உயர்திணை எழுவாயின் பயனிலையோடு அஃறிணை எழுவாயும் முடிந்தது.
நம்பிநாடுபெரியன்	இடம்	
நம்பிவாழ்நாள்பெரியன்	காலம்	
நம்பிமூக்குக்கூரியன்	சினை	
நம்பிகுடிமைநல்லன்	குணம்	
நம்பிநடைகடியன்	தொழில்	

பொன் என்னும் அஃறிணையெழுவாய் பெரியன் என்னும் உயர்திணை யெழுவாயின் பயனிலைகொண்டு முடிதலால் எழுவாய்த் தொடர்புண்டாயிருத்தல்பற்றிச் சார்த்தி முடித்தலால் வழுவமைதி யாயிற்று.

"சொற்றொறுமிற்றிதன்பெற்றி," என்கிற [461] சூத்திரவிதியால், 'மாடு கோடு கூரிது,' 'கிணறு நீரூறிற்று' என அஃறிணையோடுசேர்ப்பின் அஃறிணை முடிபாதலுங் கொள்க.

சார்த்தினனவே சார்த்தாவிடின் வழாநிலையாக நம்பிக்குப் பொன்பெரிது எனத் தன்முடிபேற்று வரும். (உகூ)

M. F. திணைபால்களின் மரபு வழுவமைதி:—PERSONAL AND IMPERSONAL CLASSES HAVING A COMMON PREDICATE.

378. திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்
மிகவினு மிழிபினு மொருமுடி பினவே.

(இ - ள்.) திணைபால் விரவின - திணைகளும் பால்களும் கலந்து நின்றனவாகிய, பொருள் பல - வேறுவினைப் பலபொருள்களும், சிறப்பினும் - சிறப்பினாலும், மிகவினும் - மிகுதியினாலும், இழிபினும் - இழிவினாலும், ஒரு முடிபின - ஒருமுடிபினவாகும், எ-று.

திணை. (1) திங்களுஞ் சான்றோரு மொப்பர்.

இங்கு இருதிணையுங்கலந்து சிறப்பினால்ஒப்பர் என உயர்திணை முடிபேற்றன. [சிறப்பு=உயர்வு]

'தொல்லை நால்வகைத் தோழரும் துணைமணிநெடுந்
மல்லற்றம்பியு மாமனு மதுவிரிகமழ்தார்ச் [தேர்
செல்வன் றுதையுஞ் செழுநகரொடுவளநாடும்
வல்லைதொக்கன வளங்கெழுகோயிலு ளொருங்கே.'

இங்கு நகரும் நாடும் சிறத்தலால் முன்னின்ற உயர்திணைப்பெயர் நான்கும், பின்னின்ற அஃறிணைப்பெயர்க ளிரண்டும் கலந்து தொக்கன என அஃறிணை முடிபேற்றன.

(2) 'பார்ப்பார்தவரே சுமந்தார் பிணிப்பட்டார்
மூத்தார் குழவியெனு மிவர்கட்கு.'

இங்கு இருதிணையுங்கலந்து மிகுதியால் இவர்கள் என உயர்திணை முடிபேற்றன. "குழவி" ஒன்றே, அஃறிணை; பார்ப்பார், தவர், சுமந்தார் முதலிய ஐந்தும் உயர்திணை; ஆதலின் மிகுதி என அறிக.

'எச்சிலார் தீண்டார் பசுப்பார்ப்பார் தீத்தெய்வம்
உச்சந் தலையோ டிவையென்ப.'

இங்கு இருதிணையுங்கலந்து மிகுதியால் இவை என அஃறிணை முடிபேற்றன. எச்சிலார், தீண்டார், பாப்பார் மூன்றும் உயர்திணை; பசு, தீ, தெய்வம், உச்சந்தலை நான்கும் அஃறிணை; ஆதலின் மிகுதி என அறிக.

(3) மூர்க்கனு முதலையுங் கொண்டது விடா.

இங்கு இருதிணையுங்கலந்து இழிவினால் விடா என அஃறிணை முடிபேற்றன.

'வடுக ரருவாளா வான்கரு நாடர்
சுடுகாடு பேயெருமை யென்றிவை யாறுங்
குறுகா ரறிவுடையார்.'

இங்கு முன்சொன்ன மூன்று உயர்திணைப் பெயரும் இழிவினால் பின்வந்த மூன்று அஃறிணைப் பெயரோடு கலந்து இவை என அஃறிணை முடிபேற்றன.

பால். 'தானுந் தன்றையலுந் தாழ்சடையோ னுண்டிலனேல்'
மனைவியுந் தானும் வந்தான்.

இங்குச் சிறப்பினால் ஆண்பால் பெண்பாற் பெயர்கள் கலந்து ஆண்பால் முடிபேற்றன.

'சொற்றொறு மிற்றிதன்பெற்றி' என்கிற விதியினாலே தோழனுந் தானும் வந்தான், தோழியுந் தானும் வந்தாள் என ஒருமை முடிபேற்றனவுங் கொள்க.

மரபு. கறியுஞ்சோறு முண்டான்
மாலையுமுடியுங் கவித்தான்
குஞ்சமுங்குடையுங் கவித்தான்'

என வேறுவினைப் பலபொருள்கள் கலந்து சிறப்பினால் உண்டான், கவித்தான் என ஒருபொருளுக்குரிய வினைமுடிபைக் கொண்டன. (உஎ)

M F. *திணைபால் வழுவமைதி:*—CLASS, GENDER AND NUMBER INTERCHANGED IN CERTAIN CASES.

379. உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலி னும், இழிப்பினும் பாறிணை யிழுக்கினு மிய ல்பே.

(இ - ள்.) பால் திணை - பாலும் திணையும், உவப்பினும் - மகிழ்ச்சியினாலும், உயர்வினும் - மேன்மையினாலும், சிறப்பி னும் - சிறப்பினாலும், செறலினும் - கோபத்தினாலும், இழிப்பி னும் - பழிப்பினாலும், இழுக்கினும் - வழுவிவரினும், இயல்பு - இயல்பாம், எ-று.

(உ - ம்.)

பால். (1) தன்புதல்வனை, 'என்னம்மை வந்தாள்' என்பது உவப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

(2) ஒருவனை, 'அவர்வந்தார்' என்பது உயர்வினா லொரு மைப்பால் பன்மைப்பாலாயிற்று.

(3) 'தாதா யுலகுக்கோர் தாயே' என்பது சிறப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

(4) 'எனைத்துணையராயினு மென்னாந் தினைத்துணையுந், தேரான் பிறனில் புகல்' என்பது செறலினாற் பன்மைப்பா லொருமைப்பா லாயிற்று.

(5) பெண்வழிச் செல்வானை நோக்கி, 'இவன்பெண்' என் பது இழிப்பினா லாண்பால் பெண்பாலாயிற்று.

திணை. (1) ஓராவினை, 'என்னம்மை வந்தாள்' என்பது உவப்பி னால் அஃறிணை உயர்திணையாயிற்று.

(2) 'செந்தார்ப் பசுங்கிளியார் சென்றார்க்கோ ரின்னு ரை, தந்தாரேற் றந்தாரென் னின்னுயிர்' என்பது உயர்வினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

(3) 'தம்பொருளென்ப தம்மக்கள்' என்பது சிறப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

(4) 'ஏவவுஞ்செய்கலான் றான்றேரா னவ்வுயிர் போஒ மளவுமோர் நோய்' என்பது செறலினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

(5) 'நாமரனுடைமை' என்பது இழிப்பினுல் உயர்திணை அஃறிணையாயிற்று.

இனிச் 'சொற்ருெடு மிற்றிதன்பெற்றி' என்னும் விதியால் புதல்வனை 'என்னப்பன் வந்தான்' எனவும், புதல்வியை 'என்னம்மை வந்தாள்' எனவும் வழங்கும் வழுவமைதியுங் கொள்க.

F. பால் இட வழுவமைதி:—INTERCHANGE OF GENDER AND PERSON.

380. ஒருமையிற் பன்மையும் பன்மையி ெனருமையும்
ஓரிடம் பிறவிடந் தழுவலு முளவே.

(இ-ள்.) ஒருமையின் - ஒருமைப்பாலில், பன்மையும் - பன்மைப்பாற் சொல்லையும், பன்மையின் - பன்மைப்பாலில், ஒருமையும் - ஒருமைப்பாற் சொல்லையும், ஓரிடம் - ஓரிடத்தில், பிற இடம் - பிறவிடச் சொல்லையும், தழுவலும் - தழுவிக் கூறுதலும், உள - உளவாம், எ-று.

(உ - ம்.)

(1) வெயிலெல்லா மறைத்தது மேகம்
'உள்ளியதெல்லா முடனெய்தும்' } அஃறிணை ஒருமையிற் பன்மை.

இங்குவெயில், உள்ளியது என்னும் ஒருமைச் சொற்களோடு எல்லாம் என்னும் பன்மைச்சொல் சேர்த்துக் கூறப்பட்டது.

(2) இரண்டுகண்ணுஞ் சிவந்தது
'இருநோக் கிவளுண்க ணுள்ளது' } அஃறிணைப் பன்மையி லொருமை.

இங்கு இருகண், இருநோக்கு என்னும் பன்மைச்சொற்களோடு முறையே சிவந்தது, உள்ளது என ஒருமைச் சொற்கள் சேர்த்துக் கூறப்பட்டன.

(3) 'அஃதை தந்தை யண்ணல்யானை யடுபோர்ச்செழியர்' } உயர்திணை ஒருமையிற் பன்மை.

இங்குத் தந்தை என்னும் ஒருமைச்சொல்லோடு செழியர் என்னும் பன்மைச்சொல் சேர்க்கப்பட்டது. செழியர் ஒவ்வொருவரும் தனித்தனி அஃதைக்குத் தந்தைபோல்வராதலின் வழுவமைதி யாயிற்று. அஃதை — திக்கற்ற

வன், திக்கற்றவள், திக்கற்றது என உயர்திணை யாணொருமை பெண்ணொருமை அஃறிணை யொருமையிலும் விரவிநிற்பதோர் பொதுச்சொல்.

(4) ஏவலிளையர் தாய்வயிறு கரிப்ப — உயர்திணை பன்மையி லொருமை.

இங்கு ஏவலிளையர் என்னும் பன்மைச்சொல்லோடு தாய் என்னும் ஒருமைச்சொல் சேர்த்துக் கூறப்பட்டது. சேனையிலுள்ள இளையர் ஒவ்வொருவருக்கும் தாய் எனத் தனித்தனிச் சென்றியைதலால் வழுவமைதி யாயிற்று.

(5) சாத்தன் றாயவை செய்வலோ — தன்மையிற் படர்க்கை.

இங்கு யான் எனக் கூறவேண்டிய விடத்துச் சாத்தன் றாய் எனப் படர்க்கைச்சொல்லாற் கூறப்பட்டது; சாத்தன் றாயாகிய யான் என்பது பொருள்.

(6) 'எம்பியை யீங்குப் பெற்றே
னென்னெனக் கரியதென்றான்' — முன்னிலையிற் படர்க்கை.

இங்குத் தன் தம்பியை முன்னிலைப்படுத்தி அவனையே நோக்கிக் கூறுதலால் நின்னை எனக் கூறவேண்டுமிடத்து எம்பியை எனப் படர்க்கைச்சொற் சேர்த்துக் கூறப்பட்டது.

(7) நீயோவவனோ யாரிதுசெய்தார்
யானோவவனோ யாரிதுசெய்தார்
நீயோயானோ யாரிதுசெய்தார்
நீயோவவனோ யானோ யாரிதுசெய்
தார் — இடம்விரவிலொரிடத்திற் பிற விடம் வந்தது.

ஒருபாற்பொருளை மற்றொருபாற் சொல்லாலும் ஓரிடப்பொருளை மற்றோரிடச் சொல்லாலுங் கூறுதலால் வழுவாய் அவை சான்றோர்க்கு ஏற்பமுடிதலால் அமைதியாயிற்று. (உக)

M. F. இடம் வழுவாமற் காத்தல்:—HOW TO GUARD AGAINST ERRORS AS TO PERSON IN THE USE OF THE THREE TENSES.

381. தரல்வரல் கொடைசெலல் சாரும் படர்க்கை
யெழுவா யிரண்டு மெஞ்சிய வேற்கும்.

(இ-ள்.) தரல் வரல் கொடை செலல் - தரல் என்பது முதலிய இந்நான்கு சொற்களையும், படர்க்கை - படர்க்கையானது, சாரும் - அடையும்; எழுவாய் இரண்டும் - இவற்றுள் முதலிற் சொல்லப்பட்ட தரல் வரல் என்கிற இரண்டு சொற்களையும், எஞ்சிய - ஒழிந்த தன்மை முன்னிலைகள், ஏற்கும் - ஏற்று வரும், எ-று.

தரல், வரல், கொடை, செலல் என்பன அவ்வப்பகுதிகளை யுணர்த்திநின்றன, ஆதலால் அவ்வப்பகுதிகளினின்றும் பிறக்கும் வினைவிகற்பங்களனைத்தையுங் கொள்க.

(உ - ம்.)

அவனுக்குத் தந்தான் . . அவனிடத்து வந்தான் ... ... அவனுக்குக் கொடுத்தான் அவனிடத்துச் சென்றான் ..	படர்க்கை
எனக்குத் தந்தான் .. . என்னிடத்து வந்தான்	தன்மை
உனக்குத் தந்தான் ... ... உன்னிடதது வந்தான் . ..	முன்னிலை.

(௩௰)

M. F. காலம் மூன்று:—THE THREE TENSES.

382. இறப்பெதிர்வு நிகழ்வெனக் கால மூன்றே.

(இ-ள்.) இறப்பு - இறந்தகாலமும், எதிர்வு - எதிர்காலமும், நிகழ்வு - நிகழ்காலமும், என காலம் மூன்று - என்று, காலமானது மூன்றும், எ-று. (௩௧)

M. F. கால வழுவமைதி:—THE INDEFINITE PRESENT EXPRESSES THE THREE TENSES.

383 முக்கா லத்தினு மொத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழுங் காலத்தானே.

(இ - ள்.) முக்காலத்தினும் - மூன்றுகாலங்களினும், ஒத்து இயல் - தமதுதொழி லிடையறு தொத்து நிகழுகின்ற, பொருளை - பொருள்களை, நிகழும் காலத்தான் - நிகழ்காலத்தினால், செப்புவர் - சொல்லுவர் (புலவர்); எ-று.

(உ-ம்.) எனக்குத்துணை நீ யிருக்கிறாய்
தெய்வ மிருக்கிறது

ஆறெழுகுகிறது
அரசர் பூமியை ஆளுகிறார். (கூ௨)

M. F. கால வழுவமைதி:—TENSES INTERCHANGED IN CERTAIN CASES.

384. விரைவினு மிகவினுந் தெளிவினு மியல்பினும்
பிறழவும் பெறூஉமுக் காலமு மேற்புழி.

(இ - ள்.) விரைவினும் - விரைவினாலும், மிகவினும் - மிகுதியினாலும், தெளிவினும் - தெளிவினாலும், இயல்பினும் - (இம் மூன்று காரணங்களு மின்றி) இயல்பினாலும், முக்காலமும் - மூன்றுகாலங்களும், பிறழவும் பெறும் - ஒன்று மற்றொன்றுகச் சொல்லப்படவும் பெறும், ஏற்புழி - ஏற்குமிடத்து, எ-று.

(உ-ம்.)

(1) உண்ணும்படியாக இருக்கின்றவனை யுடன் கொண்டுபோக வேண்டிய மற்றொருவன் பார்த்து, இன்னும் உண்டிலையோ? வென்றால், 'உண்டேனுண்டேன்' என்பான்.
உண்கின்றவனை அப்படி வினவினால் 'உண்டே னுண்டேன்' என்பான்.

இவை விரைவினால் எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்தகாலமாயின.

(2) நீ அவனுடனே பகைத்தாற் செத்தாய்
இக்காட்டிட்போனாற் கூறையிழந்தாய்.

இவ்விடத்தே மிகுதியால் எதிர்கால மிறந்தகால மாயிற்று. சாதலுங் கூறையிழத்தலுந் தப்பினுந் தப்புமாதலான் மிகுதியாயின.

(3) அறஞ்செய்தாற் சுவர்க்கம் புக்கான்.
எறும்பு முட்டைகொண்டு திட்டையேறின் மழைபெய்தது.

இவ்விடத்தே தெளிவினால் எதிர்காலம் இறந்தகாலமாயின. உரையளவையினாற் சுவர்க்கம் புகுதற்கு அறஞ்செய்தலும், காட்சி யளவையினாலே மழைபெய்தற்கு எறும்புமுட்டை கொண்டு திட்டையேறுதலுங் காரணமாகத் தெளிந்தமையினாலே தெளிவாயின.

(4) பண்டுவிளையாடுவே திச்சோலை.

.... யாம்பண்டுவிளையாடுகிற திச்சோலை.

இவ்விடத்தே காரணமில்லாமல் இயல்பினால் இறந்த காலம் எதிர்காலமும் நிகழ்காலமு மாயிற்று. (ௐ)

M. F. அறுவகை வினா:—SIX KINDS OF QUESTIONS.

385. அறிவறி யாமை யையுறல் கொளல்கொடை
ஏவ றரும்வினா வாறு மிழுக்கார்.

(இ - ள்.) அறிவு - அறிதலும், அறியாமை - அறியாமையும், ஐ உறல் - சந்தேகித்தலும், கொளல் - கொள்ளுதலும், கொடை - கொடுத்தலும், ஏவல் - ஏவுதலும் ஆகிய பொருள்களை, தரும் வினா ஆறும் - தருதலால் வருகிற வினாக்கள் ஆறனையும், இழுக்கார் - களையாது கொள்வர் புலவர், எ-று.

(உ - ம்.)

(1)	இச்சூத்திரத்திற்குப் பொருள் யாது?	(ஆசிரியன் கேள்வியாயின்) அறி வினா.
(2)	இச்சூத்திரத்திற்குப் பொருள் யாது..?	(மாணாக்கன்கேள்வி யாயின்) அறியாவினா.
(3)	குற்றியோமகனோ? ..	ஐய வினா.
(4)	பயறுளதோவணிகரே? ...	கொளல் வினா.
(5)	சாத்தனுக்காடையில்லையா? ..	கொடை வினா.
(6)	சாத்தா உண்டாயா? ...	ஏவல் வினா. ()

F. எண்வகை விடை:—EIGHT KINDS OF ANSWERS.

386. சுட்டு மறைநே ரேவல் வினாதல்
உற்ற துரைத்த லுறுவது கூறல்
இனமொழி யெனுமெண் ணிறையு ளிறுதி
நிலவிய வைந்துமப் பொருண்மையி னேர்ப.

(இ - ள்) சுட்டு - சுட்டும், மறை - எதிர்மறுத்தலும், நேர் - உடன்படலும், ஏவல் - ஏவுதலும், வினாதல் - எதிர்வினாதலும், உற்றது உரைத்தல் - உற்றதைச்சொல்லுதலும், உறுவது கூறல் - உறுவதைச் சொல்லுதலும், இனமொழி - இனத்

தைச்சொல்லுதலும், எனும் எண் இறையுள் - என்கிற இவ்வெட்டு விடைகளுள், இறுதி நிலவிய ஐந்தும் - ஈற்றில் விளங்கிய ஐந்தும், அப்பொருண்மையின் - அவ்விடைப்பொருளைத் தருதலினாலே, நேர்ப - விடைகளாகவே தழுவிக்கொள்வர் புலவர், எ-று. (இறை - விடை.)

எனவே முதன்மூன்றும் நேர்விடை எனவும் பின்னைய ஐந்தும் விடைப்பொருள் தருவன வெனவுங் கொள்க.

(உ - ம்.)

கருவூர்க்கு வழியாது ? எனின்,

(1) 'இது' என்பது சுட்டுவிடை.

சாத்தா இது செய்வாயா ? என்றபோது,

(2) 'செய்யேன்' என்பது மறை விடை.

(3) 'செய்வேன்' என்பது நேர் விடை.

(4) 'நீசெய்' என்பது ஏவல்விடை.

(5) 'செய்வேனோ' என்பது வினாவிடை.

(6) 'உடம்பு நொந்தது' 'நோவாநின்றது' என்பன உற்றதுரைத்தல் விடை.

(7) 'உடம்புநோம்' என்பது உறுவது கூறல் விடை.

(8) 'மற்றையது செய்வேன்' என்பது இனமொழி விடை. (௩௫)

வினாவிடைகளில் முதல் சினை வழுவாமை:—IN QUESTIONS AND ANSWERS THE WHOLE AND ITS PART ARE NOT TO BE CONFOUNDED.

387. வினாவினுஞ் செப்பினும் விரவா சினைமுதல்.

(இ - ள்.) வினாவினும் - வினாவுதற்கண்ணும், செப்பினும் - விடைகொடுத்தற்கண்ணும், சினை முதல் - சினையும் முதலும், விரவா - ஒற்றுமை கருதி மயங்கச் சொல்லப்படாவாம், எ-று.

(உ - ம்.) கண்பிறந்ததோ கயல்பிறழ்ந்ததோ என வினாவினார்க்குக் 'கண்பிறழ்ந்தது' 'கயல்பிறழ்ந்தது' எனல்வேண்டும்.

சாத்தனல்லனோ கொற்றனல்லனோ என வினாவினார்க்குச் 'சாத்தனல்லன், கொற்றனல்லன்' எனல்வேண்டும்.

இப்படிக்கன்றிக் கண்பிறழ்ந்ததோ என்பதற்கு அதனையுடையானைக்குறித்து இவன் பிறழ்ந்தானோ என வினவுதலும், இவன் பிறழ்ந்தான் எனச் செப்புதலும் வழுவாம். (௩௬)

F. மரபு:—USAGE.

388. எப்பொரு ளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர்
செப்பின ரப்படிச் செப்புதன் மரபே.

(இ - ள்.) எப்பொருள் - யாதொருபொருளை, எச்சொலின் - யாதொரு சொல்லால், எவ்வாறு - யாதொரு வழியால், உயர்ந்தோர் செப்பினர் - அறிவுடையோர்கள் சொன்னார்களோ, அப்படி செப்புதல் - (அப்பொருளை) அச்சொல்லால் அவ்வழியால் சொல்லுதல், மரபு - மரபாம், எ-று.

(உ-ம்.) குதிரைக்குட்டி
பசுவின்கன்று
மான்கன்று
யானைப்பாகன்
யானையிலண்டம்.

இப்படியல்லாமல், குதிரைக்கன்று, பசுவின்குட்டி, யானைச்சாணம் என்பன மரபு வழுவாம். (௩௭)

மரபு வழாநிலை:—NOUNS OF DIFFERENT SHADES OF MEANING SHOULD HAVE A VERB OF COMMON IMPORT.

389. வேறுவினைப் பலபொரு டழுவிய பொதுச்சொ
லும், வேறவற் றெண்ணுமோர் பொதுவினை
வேண்டும்.

(இ - ள்.) வேறு வினை - வெவ்வேறு வினைகளுக்குரிய, பல் பொருள் தழுவிய - பலபொருள்களையும் ஒருசேரத் தழுவிய, பொதுச்சொல்லும் - ஒருபொதுச்சொல்லும், வேறு அவற்று எண்ணும் - அவற்றின் சிறப்புச்சொற்களாக (எண்ணிநிற்கிற பலசொற்களும்), ஓர் பொதுவினை - (எல்லாவற்றிற்கு முரியதோர்) பொதுவினையை, வேண்டும் - கொண்டுமுடியும், எ-று.

(உ-ம்.) (1) அணி அணிந்தார்
அடிசி லயின்றார்
படை வழங்கினார்.

இங்கு அணி என்பது கவிக்கப்படுவது, கட்டப்படுவது,இடப்படுவது, பூணப்படுவது முதலிய பல ஆபரணங்களுக்கும் பொதுப்பெயர் ஆதலால், அணிந்தார் எனப் பொதுவினை கொடுத்துக் கூறப்பட்டது.

அடிசில் என்பது உண்பது, தின்பது, நக்குவது, பருகுவது முதலிய பலவித உண்டிகளுக்கும் பொதுப்பெய ராதலால், அயின்றார் எனப் பொதுவினை கொடுத்துக் கூறப்பட்டது.

படை என்பது எய்வன, எறிவன, வெட்டுவன, குத்துவன வாகிய பலவித ஆயுதங்களுக்கும் பொதுப்பெய ராதலால், வழங்கினார் எனப் பொதுவினை கொடுத்துக் கூறப்பட்டது.

(2) கிரீடமும் குண்டலமும் வீரக்கழலும் அணிந்தார்
சிலநாட்சோறும் சிலநாண்மாவும் சிலநாட்பாலும்
சிலநாணீரும் சிலநாட் சருகு மயின்றார்.
வாளும் வேலும் வரைவின்றி வழங்கினார்.

இங்கு கவித்தல், இடுதல், கட்டுதலாகிய வெவ்வேறு தொழிலுக்குரிய கிரீடமுதலிய பலவற்றிற்கும் அணிதலாகிய பொதுவினையும்; உண்ணல், தின்னல், பருகலாகிய வெவ்வேறு தொழிலுக்குரிய சோறு முதலியவற்றிற்கு அயிலுதலாகிய பொதுவினையும்; வெட்டல் எய்தலாகிய வெவ்வேறு தொழிலுக்குரிய வாள் வேல் என்னு மாயுதங்கட்கு வழங்கலாகிய பொதுவினையுங் கொடுத்துக் கூறப்பட்டன. (௩அ)

மரபு வழாநிலை:—THE MEANING OF AN EQUIVOCAL WORD DETERMINED BY A WORD IN THE CONTEXT.

390. வினைசார் பினமிட மேவி விளங்காப்
பலபொரு ளொருசொற் பணிப்பர் சிறப்பெ
டுத்தே.

(இ - ள்.) வினை - வினையும், சார்பு - சார்பும், இனம் - இனமும், இடம் - இடமும், மேவி விளங்கா - பொருந்தி விளங்காத, பலபொருள் ஒரு சொல்-பலபொருள்படும் ஒருசொல்லை, சிறப்பு எடுத்து - சிறப்புச்சொல்லோடு கூட்டி, பணிப்பர் - சொல்லுவர் (புலவர்), எ-று.

எனவே, வினை முதலியவற்றுள் ஒன்றைப் பொருந்தி விளங் கிக்கிடந்த பலபொரு ளொருசொல்லை வாளா கூறுவ ரென்ப தாயிற்று.

(உ - ம்.) மா என்பது மாமரத்திற்கும், வண்டிற்கும், ஒரு சார் விலங்கிற்கும், திருவிற்கும் பொதுவான பலபொரு ளொ ருசொல்; இப்பொருள்களுள்:—

(1) மாபூத்தது	மரமென்பது வினையால் விளங்கிற்று.
(2) மாவீழ் மலர்	வண்டென்பது சார்பால் விளங்கிற்று.
(3) தேர்கரிமாக்காலாள்	குதிரையென்பது இனத் தால் விளங்கிற்று.
(4) மாமறுத்த மார்பன்	திருவென்பது இடத்தா ல் விளங்கிற்று.

இவை வாளா கூறப்பட்டன.

இனி மாவேறினான், மாவியாது? என்றவழிக் குறித்தபொ ருள் விளங்காமையால் விளங்குதற்பொருட்டு, பாய்மாவேறி னான், மாமர மேறினான், பாய்மா யாது, மாமரம் யாது எனச் சிறப்புச் சொல்லோடு கூட்டிக் கூறுக. (௩௯)

வழாநிலை [பலபொரு ளொருசொற் றொடர்மொழிகள்]:—

COMPOUNDS HAVING DIFFERENT MEANINGS DETERMINED BY DIVIDING THEM INTO THEIR COMPONENT PARTS IN PRONUNCIATION.

391. எழுத்திய றிரியாப் பொருடிரி புணர்மொழி
இசைத்திரி பாற்றெளி வெய்து மென்ப.

(இ - ள்.) எழுத்து இயல் திரியா - எழுத்தினது தன்மை வேறுபடாமல், பொருள் திரி புணர்மொழி - பொருள் வேறு பட்டு நிற்கிற தொடர்மொழிகள், இசை திரிபால் - (குறிக் கப்பட்ட சொற்களி னிறுதியும் முதலுந்தோன்ற) இசையறுத் துச் சொல்லுகிற வேறுபாட்டால், தெளிவு எய்தும் - துணி வுண்டாகும், என்ப - என்றுசொல்லுவர் புலவர், எ-று.

(உ-ம்.)

செம்பொன்பதின்றொடி (தொடி=பலம்.)

நாகன்றேவன்போத்து (நாகு= இளம்பெண்ணெருமை; போத்து=கடா.)

குறும்பரம்பு (பறம்பு=கழனிதிருத்தும் பலகை.)

இவற்றை,

செம்பொன் பதின்றொடி செம் பொன்பதின்றொடி நாகன்றே வன்போத்து நாகன் றேவன் போத்து குறும் பரம்பு குறும்ப ரம்பு.	இங்குப்பிரித்துக் காட்டியபடி இசையறுத்து உச்சரித்துக் குறித்த பொருளைக் காட்டுக. (௪0)

M. F மரபுவழாநிலையும் வழுவமைதியும் [ஒருபொருட் பலபெயர்த் தொடருக்கு விதி]:—WORDS IN APPOSITION HAVE GENERALLY A COMMON PREDICATE.

392. ஒருபொருண் மேற்பல பெயர்வரி னிறுதி
ஒருவினை கொடுப்ப தனியு மோரோவழி.

(இ - ள்.) ஒரு பொருள்மேல் - ஒருபொருளின்மேலே, பல பெயர் வரின் - பலபெயர்கள் வருமாயின், இறுதி - இறுதியில், ஒரு வினை - ஒருமுடிக்குஞ்சொல்லை, கொடுப்ப -(பொருளொன்றே யென்பது தோன்றக்) கொடுத்துக் கூறுவர்; ஓரோவழி - ஒருபொருளாகுகை தவறுதவிடத்தே, தனியும் - பெயர்தோறும், (கொடுப்ப) - கொடுத்துக்கூறுவர், எ-று.

(உ - ம்.)

"ஆசிரியன் பேரூர்கிழான் சாத்தன் வந்தான்"

"குயிலைச்சிலம்படிக்கொம்பினைத்தில்லையெங்கூத்தப்பிரான்
கயிலைச்சிலம்பிற்பைம்பூம்புனங்காக்குங்கருங்கட்செவ்வாய்
மயிலைச்சிலம்பகண்டியான்போய்வருவன்வண்பூங்கொடிகள்
பயிலைச்சிலம்பெதிர்கூய்ப்பண்ணைநண்ணும்பளிக்கறைக்கே"

இவை இறுதியிலே முறையே வந்தான் எ - ம், கண்டு எ-ம், ஒருசொல்லைக் கொண்டன.

'வேலோன்வருக விமலைசேய் வருக மாலோன்மருகன் வருகவென்றளவே' எனப்பெயர்தோறும் வினைகொண்டன. ()

[இயற்பெயர் பின் வரவேண்டும்:—EPITHETS SHOULD PRECEDE THE NAME.

393. திணைநிலஞ் சாதி குடியே யுடைமை
குணந்தொழில் கல்வி சிறப்பாம் பெயரோ
டியற்பெய ரேற்றிடிற் பின்வரல் சிறப்பே.

(இ - ள்.) **திணை** - ஐந்திணையும், **நிலம்** - தேசமும், **சாதி** - குலமும், **குடி** - குடியும், **உடைமை** - உடைமையும், **குணம்** - குணமும், **தொழில்** - தொழிலும், **கல்வி** - வித்தையும், (**ஆகிய** இவற்றைப்பற்றி வருகிற,) **சிறப்பாம் பெயரோடு** - சிறப்புப் பெயரோடு, **இயற்பெயர்** - இயற்பெயரை, **ஏற்றிடின்** - (ஒரு பொருள் ஒருசேர) ஏற்குமாயின், **பின் வரல்** - (அவ்வியற் பெயர்) பின் வருதல், **சிறப்பு** - சிறந்த மரபாம், எ-று.

சிறப்பென்றதனால் முன் வருவது வழுமைதியாம்.

(உ - ம்.)

குன்றவன்கொற்றன் ... ... கொற்றன்குன்றவன்	} திணை.
அரிவாளனழகன் ... ... அழகனரிவாளன்	} நிலம்.
பார்ப்பான் பாராயணன் ... ... பாராயணன் பார்ப்பான்	} சாதி.
ஊர்கிழானேணன் .. .. ஏணனூர்கிழான்	} குடி.
பொன்னன் பொறையன் ... ... பொறையன் பொன்னன்	} உடைமை.
கரியன் கம்பன் ... . கம்பன் கரியன்	} குணம்.
நாடகி நம்பி ... ... நம்பி நாடகி	} தொழில்.
ஆசிரியனமிழ்தன் ... ... அமிழ்தனாசிரியன்	} கல்வி.

[illegible]

மரபுவழாநிலையும் வழுவமைதியும் (சுட்டுப்பெயர்வரும் இடம்):—THE POSITION OF THE DEMONSTRATIVE.

394. படர்க்கை முப்பெயரோ டணையிற் சுட்டுப்
பெயர்பின் வரும்வினை யெனிற்பெயர்க் கெங்
கும், மருவும் வழக்கிடைச் செய்யுட் கேற்புழி.

(இ-ள்.) படர்க்கை - படர்க்கை யிடத்தையுடைய, முப்பெயரோடு - (உயர்திணைப்பெயர் அஃறிணைப்பெயர் பொதுப்பெயர் என்கிற) மூவகைப்பெயர்களோடு, சுட்டுப்பெயர் அணையின் - சுட்டுப்பெயர் சேரின், வினையெனின் - வினை (யாகிய முடிக்குஞ்சொல்) வருமாயின், பின் வரும் - (அச்சுட்டுப்பெயர்) பின்வரும், பெயர்க்கு - (அம்முடிக்குஞ் சொல் இல்லையாயின்) அப்பெயர்க்கு, வழக்கிடை - (இம்மரபு) வழக்கின்கண், எங்கும் மருவும் - பின்னும் முன்னும் வரும்; செய்யுட்கு - செய்யுளிடத்தே, ஏற்புழி (மருவும்) - (நியதியின்றி) வேண்டியவாறே வரப்பெறும், எ-று.

(உ-ம்.)

(1) நம்பிவந்தான் அவனுக்குச் சோறிடுக } உயர்திணை.
எருது வந்தது அதற்குப் புல்லிடுக } அஃறிணை.
சாத்தன்றெய்வம் அவனுக்குப் பலியிடுக, சாத்தன்வந்தது அதற்குப் புல்லிடுக } பொது.
} வினை நிகழ் வழிச் சுட்டுப்பெயர் பின்வந்தன.

(2) நம்பி அவன்
அவன் நம்பி
குதிரை யது
அது குதிரை
} பெயர்க்குப் பின்னு முன்னுஞ் சுட்டுப்பெயர்வந்தன.

(3) "அவனணங்கு நோய்செய்தா னாயிழாய் வேலன்
விறன்மிகுதார்ச் சேந்தன்பேர் வாழ்த்தி - முகனமர்ந்
தன்னை யலர்கடப்பந் தாரணியி லென்னைகொல்
பின்னை யதன்கண் விளைவு."

இங்கு வினை வருவழியும் சுட்டுமுன் வந்தது. (சாடு)

F. மரபுவழாநிலையும் வழுவமைதியும் (அடுக்குத்தொடர்):—
REPETITION OF WORDS.

395. அசைநிலை பொருணிலை யிசைநிறைக் கொரு
சொல், இரண்டு மூன்றுநான் கெல்லைமுறை
யடுக்கும்.

(இ-ள்.) அசைநிலை - அசைநிலைக்கும், பொருணிலை-(விரைவு வெகுளி உவகை அச்சம் துன்பம் முதலாகிய) பொருணிலைக்கும், இசைநிறைக்கு - இசைநிறைக்கும், ஒருசொல் - ஒரு மொழி, இரண்டு மூன்று நான்கு எல்லை - இரண்டும் மூன்றும் நான்குமாகிய அளவும், முறை-முறையாக, அடுக்கும் - அடுக்கி வரும், எ-று.

எனவே அசைநிலைக்கு இரண்டும், பொருணிலைக்கு இரண்டு மூன்றும், இசைநிறைக்கு இரண்டும் மூன்றும் நான்கும், அடுக்குமென்றதாயிற்று.

(உ-ம்.)

அன்றேயன்றே	அசைநிலை.	
மற்றோ மற்றோ		
உண்டேன் உண்டேன்	விரைவு	பொருணிலை.
வந்தேன் வந்தேன் வந்தேன் . ..		
அடி அடி	வெகுளி	
கொல் கொல் கொல்		
வருக வருக	உவகை	
பொலிக பொலிக பொலிக		
பாம்பு பாம்பு	அச்சம்	
தீத் தீத் தீ		
உய்யேன் உய்யேன்	துன்பம்	
வாழேன் வாழேன் வாழேன்		

ஏஏ யம்பன் மொழிந்தன ளாயே ...	இசைநிறை.
நல்குமே நல்குமே நல்குமே நாமகள்	
பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ...	

ஒருசொல்லைப் பலகாற் சொல்லுதல் வழுவாயினும், இவ்விடத்தே ஆமென்றல் வழுவமைதியும் இதற்கு இவ்வெல்லை கடவாதென்றல் வழுவாமற் காத்தலு மாம். (௩௯௫)

மரபுவழாநிலை (அடுக்குப் பிரிந்து பொருள்படா):— WORDS DOUBLED MUST NOT BE DIVIDED.

396. இரட்டைக் கிளவி யிரட்டிற்பிரிந் திசையா.

(இ-ள்.) இரட்டைக் கிளவி - இரட்டைச்சொற்கள், இரட்டின் பிரிந்து - அவ்விரட்டிப்பின் நீங்கி, இசையா - (தனித்து) ஒலியாவாம், எ-று.

எனவே வலிந்து பிரித்துச் சொன்றற் பொருள்படா தென்பதும் இரட்டித்துச் சொல்லல் மரபென்பதும் ஆயிற்று.

(இ-ம்.) சலசல மும்மதம் பொழிய
குறுகுறு நடந்தும்
துடிதுடித்துத் துள்ளிவரும். (௫௫)

மரபுவழாநிலை (முக்கியமான அடைமொழிகள் பிரிக்கப்படா):—ESSENTIAL ADJUNCTS NOT TO BE SEPARATED.

397. ஒருபொருட் பல்பெயர் பிரிவில வரையார்.

(இ-ள்.) ஒரு பொருள் - ஒரு பொருளின்மேல், பல் பெயர்- பலபெயர் சொல்லும்போது, பிரிவு இல - அப்பொருளினின்றும் பிரிதலில்லா தனவற்றை, வரையார் - நீக்காது கொள்வர் புலவர், எ-று.

(உ-ம்.) ஆரியன் பேரூர்கிழான் இளங்கண்ணன் சாத்தன் வந்தான்.
பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி வந்தான்.

இங்குப் பலபெயரும் பிரிவிலவாய் ஒருபொருண்மேற் சென்று கேட்போர்க்குச் சொல்லுவோன் குறித்தபொருளை விளக்கின. (௫௬)

M. F. மரபுவழுவமைதி (ஒருபொருட்பன்மொழி):— REDUNDANT WORDS [PLEONASM] ALLOWABLE IN CERTAIN CASES.

398. ஒருபொருட் பன்மொழி சிறப்பினின் வழா.

(இ-ள்.) ஒருபொருள் - ஒருபொருளைக் குறித்து வருகிற, பல் மொழி-பலசொற்கள், சிறப்பினின்-சிறந்து நிற்கையால், வழா - (அவை) வழுவென்று நீக்கப்படாவாம், எ-று.

சிறந்துநிற்றல் செவிக்குச் சொல்லின்பம் தோன்றநிற்றல்.

(உ-ம். மீமிசை ஞாயிறு
புனிற்றிளங் கன்று
நாகிளங் கமுகு
உயர்ந்தோங்கு பெருவரை
குழிந்தாழ்ந்த கண். (சஎ)

M. F. மரபுவழுவாமற்காத்தல் (முற்றும்மை உபயோகிக்கப் படுமிடம்):—WHEN COMPLETE உம் IS NECESSARY.

399. இனைத்தென் றறிபொரு ளுலகி னிலாப்பொருள், வினைப்படுத் துரைப்பி னும்மை வேண்டும்.

(இ - ள்) இனைத்து என்று - இவ்வளவினதென்று, அறிபொருள் - அளவறியப்படுகிற பொருளும், உலகின் இலாப்பொருள் - எக்காலத்தும் எவ்விடத்தும் இல்லாத பொருளும், வினைப்படுத்து உரைப்பின் - வினைப்படுத்துச் சொல்லும்போது, உம்மை வேண்டும் - முற்றும்மையை வேண்டிநிற்கும், எ-று.

(உ - ம்.)

தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார் வேதநான்கு முணர்ந்தார்	பொருள்.	இனைத்தென் றறிபொருள் முற்றும்மை கொண்டன.
உலகமூன்று மொருங்குணர்ந்தான் திசையொருநான்குஞ் சீர்திகழ்பெம்மான்	இடம்.	
காலமூன்றுங் கண்டோன் சிறுபொழுதாறுஞ் சிறந்த திமருதம்	காலம்.	
கண்ணிரண்டுஞ் சிவந்தன தோளிரண்டும் பூரித்தன	சினை	
சுவையாறு முடைத்திவ்வடிசில் வண்ணமைந்து முடையதிக்கிளி	குணம்	
தொழின்மூன்று முடையமுதல்வன் கதியைந்து முடைய திக்குதிரை.	தொழில்	

பவளக்கோட்டு நீலயானை யென்றுமில்லை
முயற்கோடு ஆமைமயிர்க்கம்பல மென்று மில்லை
ஒளிமுன் னிருளெங்கு மில்லை
மண்ணுற்செய்த பட்டும் நூலாற்செய்த கடமு மென்றுமில்லை.
} உலகினிலாப் பொருள் முற்றும்மை கொண்டன.

(சஅ)

F. மரபுவழுவமைதி (செயப்படுபொருளைக் கருத்தாவாகக் கூறல்):—THE OBJECT SOMETIMES EXPRESSED AS SUBJECT.

400. செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கினு ளுரித்தே.

(இ - ள்) செயப்படுபொருளை - செயப்படுபொருளை, செய்ததுபோல - வினைமுதலைப்போல வைத்து, தொழிற்பட கிளத்தலும் - (அதன்மேல்) அவ்வினைமுதல்வினை யேற்றிச் சொல்லுதலும், வழக்கினுள் உரித்து - வழக்கினிடத்து உரித்தாம், எ-று.

(உ - ம்.)

இம்மாடு யான்கொண்டது இச்சோறு யான்கொடுத்தது இவ்வெழுத்து நானெழுதியது.	செயப்படு பொருள்.

"கிளத்தலும்" என்ற உம்மையால் கருமத்தைக் கருத்தாவாகக் கூறுதலேயன்றிக் கருவி நிலஞ் செயல் காலங்களைக் கருத்தாவாகக் கூறுதலு மமையுமென்பது பெற்றாம்.

(உ-ம்.)

இவ்வெழுத்தாணி யானெழுதியது —கருவி.
இவ்வீடு யானிருந்தது —இடம்.
இத்தொழில் யான்செய்தது —தொழில்.
இந்நாள் யான்பிறந்தது —காலம். (சக)

அடையடுத்து வரும் மொழிகள்:—COMPOUND WORDS.

401. பொருண்முத லாறு மடைசேர் மொழியினம்
உள்ளவு மில்லவு மாமிரு வழக்கினும்.

(இ - ள்.) பொருள் முதல் ஆறும் - பொருளாதி ஆறுகிய, அடை சேர் மொழி - அடைகளடுத்து வருகிற மொழிகள், இனம் உள்ளவும் - இனமுள்ளவையேயா மன்றி, இல்லவும் ஆம் - இனமில்லாதவையுமாம, இருவழக்கினும் - உலகவழக்கினுள்ளுஞ் செய்யுள் வழக்கினுள்ளும், எ-று.

(இனமுள்ளன)	(இனமில்லன)	
நெய்க்குடம்	உப்பளம்	பொருள்
குளநெல்	ஊர்மன்று	இடம்
கார்த்திகைவிளக்கு	நாளரும்பு	காலம்

பூமரம்	இலைமரம்	சினை
செந்தாமரை	செம்போத்து	குணம்
ஆடுபாம்பு.	தோய்தயிர்.	தொழில்.

என வழக்கிடத்து வந்தன. அளம் எனவே உப்பு என்பதும், மன்று எனவே ஊர் என்பதும், அரும்பு எனவே நாள் என்பதும், மரம் எனவே இலை என்பதும், போத்து எனவே செம்மை என்பதும், தயிர் எனவே தோய்தல் என்பதும் தாமேவந்தியைதலால் அளம் முதலியன இவ்வடைகளின்றியும் பொருளாதி ஆறையுமுணர்த்தும்; உப்பிலா அளமும், ஊரில்லாச் சபையும் (மன்றும்), நாளிலா அரும்பும், இலையிலா மரமும், செம்மையில்லாப் போத்தும், தோய்தலில்லாத் தயிரும் இல்லை யாதலால் உப்பளம் முதலியன இனமில்லன வாயின.

இனி முற்கூறிய இனமுள்ளனவற்றை அடைகொடாது கூறின், குறித்தபொருள் விளங்காது பொதுமையின் நிற்குமாதலால், அவற்றை அடைகொடுத்துக் கூறுவதே மரபாயிற்று.

இனிச் செய்யுளினு மிவ்வாறே வரும்.

(உ-ம்.)

பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் ...	பொருள்	இனமுள்ளன.
கான்யாற்றடைகரை	இடம்	
முந்நாட்பிறையின் முனியாதுவளர்ந்தது ..	காலம்	
கலவமாமயிலெருத்திற் கடிமலரவிழ்ந்தன காயா	சினை	
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கியாங்கிவள்	குணம்	
ஆடரவாடவாடு மம்பலத்தமிர்தே	தொழில்	
பொற்கோட்டிமயமும் பொதியமும் போன்றே	பொருள்	இனமில்லன.
வடவேங்கடந் தென்குமரியாயிடை .	இடம்	
வேனிற்கோங்கின பூம்பொகுட்டன்ன ..	காலம்	
சிறகர்வண்டு செவ்வழிபாட	சினை	
செஞ்ஞாயிற்றுநிலவு வேண்டினும்	குணம்	
முழங்குகடலோத மூழ்கிப்போக	தொழில்	

இனமுள்ளவற்றை அடைகொடுத்துக் கூறுதல் வழாநிலையும், இனமில்லனவற்றை அடைகொடுத்துக் கூறுதல் வழுவமைதியுமா மென்க. (௫௦)

அடைசேர்மொழிகள் இனமல்லாதவையும் குறிக்கும் :— COMPOUNDS MAY ALSO SUGGEST OTHERS OF OPPOSITE MEANING.

402 அடைமொழி யினமல் லதுந்தரு மாண்டுறின்.

(இ - ள்) அடைமொழி - (முன்சொல்லப்பட்ட) அடைசேர் மொழி, இனம் அல்லதும் தரும் - இனத்தைத் தருவதன்றி இனமல்லாததையும் கொடுக்கும், ஆண்டு உறின் - அவ்விடத்திற்குப் பொருந்துமாயின், எ-று.

(உ-ம்) பாவஞ் செய்தான் நரகம் புகுவான் என்புழிப் புண்ணியஞ்செய்தான் சுவர்க்கம் புகுவான் என இனத்தைத் தந்தது. இதுவுமன்றி அவன் இதுசெய்யின் இதுவரும் என்னும் அறிவிலி என இனமல்லாததையுந் தந்தது.

மேலைச்சேரிச்சேவல் அலைத்தது என்றவிடத்துக் கீழைச் சேரிச் சேவல் அலைப்புண்டது என இனத்தைத் தருதலேயன்றி அச்சேவலை யுடையார்க்கு வெற்றி யாயிற்று என்கிற இனமல்லாததையுந் தந்தது. (௫௧)

அடைமொழிகள் முதல்சினைகளை யடுத்துவரும்விதம்:—HOW EPITHETS ARE USED IN COMPOUND WORDS.

403. அடைசினை முதன் முறை யடைதலு மீரடை
முதலோ டாதலும் வழக்கிய லீரடை
சினையொடு செறிதலு மயங்கலுஞ் செய்யுட்கே

(இ - ள்.) அடை - (ஓர்) அடையும், சினை (ஒரு) சினையும், முதல் - (ஒரு) முதலும், முறை அடைதலும் - ஒன்றை யொன்று விசேடித்து வருதலும், ஈர் அடை - இரண்டு அடைகள், முதலோடு ஆதலும் - முதலை விசேடித்து வருதலும், வழக்கு இயல் - வழக்குநடையாம்; ஈரடை - இரண்டடைகள், சினையொடு செறிதலும் - சினையை விசேடித்து வருதலும், மயங்கலும் - இவ்வரம்பு கடந்து வருதலும், செய்யுட்கு - செய்யுணடையாகும், எ-று.

வழக்கு (1)	வேற்கைமுருகன் செங்காலுநாரை முழங்குதிரைக்கடல்.	ஓரடையும் ஒருசினையும் ஒருமுதலும் ஒன்றை யொன்று விசேடித்துவந்தன.

344

	(2) மனைச்சிறுகிணறு சிறுகருங்காக்கை கருநெடுங்கூந்தல்.	ஈரடைமுதலை விசேடித்து வந்தன.
செய்யுள்	(1) "சிறுபைந்தூவியிற் செயிரறச்செய்த" "கருநெடுங்கண்டருங் காமநோயே"	ஈரடை சினையை விசேடித்துவந்தன.
	(2) "பெருந்தோட் சிறுமருங் குற்பேரமர்க்கட் பேதை" "சிறுநுதற் பேரமர்க்கட் செய்யவா யையநுண் ணிடையாய்"	வரம்பு கடந்து முறை பிறழ்ந்தும் வந்தன.

அடைசினை முதன்முறை யடைதலொன்றும் வழூவாமற் காத்தலும் மற்றைமூன்று வழூவமைதியும் ஆம். (௫௨)

மரபுவழூவமைதி:—(இயற்கைப்பொருளைச் செயற்கைப் பொருள்போற் கூறல்):—HOW NATURAL QUALITIES ARE TO BE EXPRESSED.

404. இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தல்.

(இ - ள்.) இயற்கைப் பொருளை - (இயற்கைப்பொருள் செய்யற்கைப்பொருள் என்கிற இருவகைப் பொருள்களுள்) இயற்கைப்பொருளை, இற்று என - இத்தன்மைத்தென்று, கிளத்தல் - சொல்லுக, எ-று.

இயற்கைப் பொருளாவது தனக்குப்பின் தோன்றாது தான் தோன்றும்போதே உடன் தோன்றியதன்மையை யுடையபொருள். செயற்கைப்பொருளாவது தனக்குப்பின் தோன்றிய தன்மையையுடைய பொருள்.

(உ-ம்.)	மெய்யுள்ளது பொய்யில்லது நிலம்வலிது	நீர் தண்ணிது தீவெய்து மயிர் கரிது.

இயற்கைப்பொருளை இற்றென்னும் வினைக்குறிப்பாகிய செயற்படுத்துச் செயற்கைப் பொருள்போலக் கூறுதலின் இதுவழூவமைதி யாயிற்று. (௫௩)

மரபுவழுவாமற் காத்தலும் வழுவமைதியும்: (செயற்கைப் பொருளை யுணர்த்தல்):—HOW OTHER QUALITIES ARE TO BE EXPRESSED.

405 காரண முதலா வாக்கம் பெற்றும்
காரண மின்றி யாக்கம் பெற்றும்
ஆக்க மின்றிக் காரண மடுத்தும்
இருமையு மின்றியு மியலுஞ் செயும்பொருள்.

(இ-ள்.) செயும்பொருள் - செயற்கைப்பொருள், காரணம் - காரணச்சொல், முதல் ஆக - முதல் வர, ஆக்கம் பெற்றும் - ஆக்கச்சொல் (பின்வரப்) பெற்றும், காரணம் இன்றி - காரணச் சொல் தொக்கு நிற்க, ஆக்கம் பெற்றும் - ஆக்கச்சொல் (வரப்) பெற்றும், ஆக்கம் இன்றி - ஆக்கச்சொல் தொக்குநிற்க, காரணம் அடுத்தும் - காரணச்சொல் வரப்பெற்றும், இருமையும் இன்றியும் - அவ்விரண்டும் தொக்கு நிற்கவும், இயலும் - நடக்கும், எ-று,

(உ-ம்.)

கடுவுங்கைபிழி யெண்ணெயும் பெற்றமையான் மயிர்நல்லவாயின எருப்பெய் திளங்களைகட்டு நீர்கால் யாத்தமையாற் பயிர்நல்லவாயின	முன்காரணமும் பின்னாக்கமும் பெற்றன.
மயிர்நல்லவாயின .. .. பயிர்நல்லவாயின .. .	காரணமின்றி ஆக்கம் பெற்றன.
கடுவுங் கைபிழியெண்ணெயும் பெற்றமையான் மயிர்நல்ல .. .. எருப்பெய் திளங்களைகட்டு நீர்கால் யாத்தமையாற் பயிர்செழித்தன	ஆக்கமின்றிக் காரணம் வந்தன.
மயிர்நல்ல ... . பயிர்நல்ல	காரணச்சொல் ஆக்கச்சொல் இரண்டுந் தொக்கு நிற்கப்பெற்றன.

காரணமுதலாவாக்கம் பெறுதலொன்றும் வழுவாமற் காத்தல், மற்றை மூன்றும் வழுவமைதிகள். (௫௪)

மரபுவழுவாமற்காத்தல் (விடைகூறும் விதம்):—DIRECT AND INDIRECT FORMS OF NEGATION AND AFFIRMATION.

406. தம்பா லில்ல தில்லெனி னினனாய்

உள்ளது கூறியு மாற்றியு முள்ளது
சுட்டியு முரைப்பர் சொற்சுருங் குதற்கே.

(இ - ள்.) தம்பால் இல்லது - தம்மிடத்து இல்லாதபொருளை, இல்லெனின் - இல்லையெனின், இனனாய் உள்ளது கூறி - (வினவப்பட்டதற்கு) இனமாய் இருக்கின்ற பொருளைச்சொல்லி, மாற்றியும் - (அச்சொல்லைக்கொண்டு அதனை) இல்லையென்றும், உள்ளது - இருக்கிறபொருளாயின், சுட்டியும் - இவ்வள வுண்டென்றும், உரைப்பா - சொல்லுவர், சொல் சுருங்குதற்கு - (வினவும் விடையுமாகிய) சொற்கள் சுருங்குதற் பொருட்டு, எ - று.

(உ - ம்.)

பயறுண்டோ வணிகீரே? என்றவருக்கு அது இல்லை யென்பார், உழுந்துண்டு, உழுந்துந் துவரையு முண்டு, என அதனினத்தைச் சொல்லக்கடவர். இங்கு இனமொழிகள் பயறில்லை யென்னும் விடைப்பொருளைத் தருதலேயன்றி, மேலே உழுந்துண்டோ? துவரையுண்டோ என்னும் வினாக்களும் அவைகளின் விடைகளும் பெருகாமற் காத்தல் காண்க.

பயறுண்டோ வணிகீரே? என்றவருக்கு அதுவுண்டென்பார் இருகலமுண்டு, இருதூணியுண்டு, என அதனளவைச் சொல்லக்கடவா. இங்கு அளவைமொழிகள் பயறுண்டு என்னும் விடைப்பொருளைத் தருதலேயன்றி, எவ்வளவுண்டு என்னும் வினாவும் அதற்கு விடையும் பெருகாமற் காத்தல் காண்க. (௫௫)

மரபுவழுவாமற்காத்தல் (ஈ, தா, கொடு):—THE USAGE OF THE WORDS ஈ, தா AND கொடு.

407. ஈதா கொடுவெனு மூன்று முறையே
இழிந்தோ னொப்போன் மிக்கோ னிரப்புரை.

(இ - ள்.) ஈ தா கொடு என்னும் மூன்றும் - ஈ தா கொடு என்கிற மூன்றுசொற்களும், முறையே - முறையாக, இழிந்தோன் - இழிந்தவனும், ஒப்போன் - ஒப்பவனும், மிக்கோன் - உயர்ந்தவனும், இரப்பு உரை - இரத்தற்கு வருகிற சொற்களாகும், எ - று.

எனவே, ஈ என்பது இழிந்தோன் உயர்ந்தோனிடத்து இரக்கும்போதும், தா என்பது ஒப்போன் ஒப்போனிடத்து இரக்கும்போதும், கொடு என்பது உயர்ந்தோன் இழிந்தோனிடத்து இரக்கும்போதும் வருமெனக் கொள்க.

(உ-ம்.) தந்தாய் ஈ — இழிந்தோனிரப்பு
தோழா தா — ஒப்போனிரப்பு
மைந்தா கொடு — உயர்ந்தோனிரப்பு. (௫௬)

F. வழுவமைதி (குறிப்பிற்றருமொழி:)—WORDS THAT SUGGEST IDEAS.

408. முன்னத்தி னுணருங் கிளவியு முளவே.

(இ - ள்.) முன்னத்தின் உணரும் - குறிப்பினால் (பொருள்) அறியப்படுகிற, கிளவியும் உள - சொற்களும் (சில) உளவாம், எ-று. (முன்னம் - குறிப்பு.)

அவையாவன, ஒன்றொழி பொதுச்சொல் முதல் சொல்லுவான் குறிப்பீறாகப் பெயரியலிலே ௬௨ - ம் சூத்திரத்திலே சொல்லப்பட்டனவாம்.

(உ-ம்.) 'குழைகொண்டு கோழியெறியும் வாழ்க்கையர்; என்றால், பெருஞ்செல்வ வாழ்க்கையர் என்பது குறிப்பினா லுணரப்பட்ட பொருளாம். மற்றவைகளு மிப்படியே.

கேட்பவர்களுக்குப் பொருள் விளங்கச் சொல்லல் மரபாதலால் இது வழுவமைதி யாயிற்று. (௫௭)

மரபுவழுவமைதி :—PERSONIFICATION.

409. கேட்குந போலவுங் கிளக்குந போலவும்
இயங்குந போலவு மியற்றுந போலவும்
அஃறிணை மருங்கினு மறையப் படுமே.

(இ - ள்.) கேட்குந போலவும் - (கேளாதவைகளைக்) கேட்பவைகள் போலவும் - கிளக்குந போலவும் - (சொல்லாதவைகளைச்) சொல்பவைகள் போலவும், இயங்குந போலவும் - (நடவாதவைகளை) நடப்பவைகள் போலவும், இயற்றுந போலவும் - (செய்யாதவைகளைச்) செய்பவைகள் போலவும், அஃறிணை

மருங்கினும் - அஃறிணையிடத்தும், அறையப்படும் - சொல்லப்படும், எ-று.

(உ - ம்.)

நன்னீரைவாழியனிச்சமே	கேட்பதுபோலக் கூறப்பட்டது.
பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்கும்	பேசுவதுபோலக் கூறப்பட்டது.
இவ்வழி யவ்வூர்க்குப் போகும்	நடப்பதுபோலக் கூறப்பட்டது.
தன்னெஞ்சே தன்னைச்சுடும்.	செய்வதுபோலக் கூறப்பட்டது. (௫௮)

மரபுவழுவமைதி [உருவக முதலியவற்றில், திணை, சினை முதல்கள் பிறழ்தல்]:—IN RHETORICAL FIGURES, CLASS, GENDER, WHOLE AND PARTS CONFOUNDED.

410 உருவக வுவமையிற் றிணைசினை முதல்கள்
பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே.

(இ-ள்.) உருவகம் உவமையில் - உருவகத்திலும் உவமையிலும், திணை சினை முதல்கள் - இருதிணைகளும் சினைகளும் முதல்களும், பிறழ்தலும் - (தம்முள்ளே) மயங்குதலும், பிறவும் - (இவ் வியலுட் சொல்லாது) ஒழிந்தவையும், பேணினர் கொளல் - பாதுகாத்துக் கொள்க; எ-று.

(உ - ம்.)

நம்மரசனாகிய சிங்கத்திற்குப் பகைவர் கூட்டமாகிய யானைகளஞ்சியோடின	உயர்திணை அஃறிணையோடு மயங்கிற்று.	உருவகம்.
அவ்வரசனுக்குத் தம்பியரிருவரு மிரண்டு தோள்கள்.	உயர்திணைமுதல் உயர்திணைச் சினையோடு மயங்கிற்று.	
முகமாகியமதி	உயர்திணைச்சினை அஃறிணை முதலோடு மயங்கிற்று.	
கல்வி மங்கையைக் கற்றோர் விரும்புவார்	அஃறிணை உயர்திணையோடு மயங்கிற்று.	

மயில்போலு மங்கை ...	உயர்திணை அஃறிணையோடு மயங்கிற்று.	உவமை
கயல்போலுங்கண் ...	உயர்திணைச்சினை அஃறிணை முதலோடு மயங்கிற்று.	
தளிர்போலுமேனி ..	உயர்திணைமுதல் அஃறிணைச் சினையோடு மயங்கிற்று.	

இனி 'பிறவும்' என்றதனால், இவன் சரஸ்வதிக் கொப்பானவன் எனப் பால் மயக்கங் கூறுதலும், செங்கோல் வீரக்கழல் என ஒருபொருட்டன்மையை மற்றொருபொருண்மேல் வைத்துக் கூறுதலும், ஈந்தான் என்பதற்கு அருளினான் என வொரு வினையை மற்றொரு வினையாற் கூறுதலும், அரசு, வேந்து என உயர்திணையை அஃறிணையாகக் கூறுதலும், பிறவுங் கொள்க. ()

---

௫. பொருள்கோள்.

POETICAL CONSTRUCTION.

பொருள்கோள் எண்வகை:—EIGHT KINDS OF CONSTRUCTIONS.

411. யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்
தாப்பிசை யளைமறி பாப்புக் கொண்டுகூட்
டடிமறி மாற்றெனப் பொருள்கோ ளெட்டே.

(இ - ள்.) யாற்றுநீர் - யாற்றுநீர்ப் பொருள்கோளும், மொழிமாற்று - மொழிமாற்றுப் பொருள்கோளும், நிரனிறை - நிரனிறைப் பொருள்கோளும், விற்பூண் - விற்பூட்டுப் பொருள்கோளும், தாப்பிசை - தாப்பிசைப் பொருள்கோளும், அளைமறி பாப்பு - அளைமறி பாப்புப் பொருள்கோளும், கொண்டுகூட்டு - கொண்டுகூட்டுப் பொருள்கோளும், அடிமறி மாற்று - அடிமறிமாற்றுப் பொருள்கோளும், என - என்று, பொருள்கோள் - பொருள்கோள், எட்டு - எட்டு வகையினவாம், எ - று.

இவைகளுக்கு உதாரணம் அவ்வவற்றின் சிறப்புச் சூத்திரங்களிற் காண்க. (௯௦)

F. (1) யாற்று நீர்:—THE NATURAL CONSTRUCTION.

412. மற்றைய நோக்கா தடிதொறும் வான்பொருள்
அற்றற் றொழுகுமஃ தியாற்றுப் புனலே.

(இ - ள்.) மற்றைய நோக்காது - மொழிமாற்று முதலியவை போலப் பிறழ்ந்து செல்லவேண்டாம், அடிதொறும் வான் பொருள் - (யாற்றுநீ ரொழுக்குப்போல நெறிப்பட்டு) அடிதோறும் சிறந்தபொருள், அற்று அற்று ஒழுகும் அஃது - அறுபட்டு அறுபட்டு நடப்பதாகிய அப்பொருள்கோள், யாற்றுப்புனல் - யாற்றுநீர்ப் பொருள்கோளாம், எ-று.

திரும்பாமலே ஒரேமுகமாக ஓடுகிற ஆற்றுநீ ரோட்டம் உவமையாதலால், அற்றற் றொழுகுதலாவது மொழி மாற்று முதலியனபோலத் திரும்பி நடக்கும் நடையற்று அங்கங்கே அமைந்து நடத்தலே யன்றிப் பொருள் முடிந்து நடத்தல் அன் றெனக் கொள்க.

(உ-ம்.) "சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் றோற்றம்போன்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே."

இப்பாட்டினுள் சொல்லென்னும் எழுவாயினை முதலெடுத்து அதன்றொழிலாகிய இருந்து, ஈன்று, நிறுவி, இறைஞ்சி என் னும் வினையெச்சங்கள் ஒன்றனை ஒன்றுகொள்ள இடையே முறைநிறுத்திக் காய்த்த என்னும் பயனிலை இறுதியிலே தந்து முடித்தமையால, இப்பொரு ளொழுகுதல் யாற்றுநீ ரொழுக் குப் போலுதல் காண்க. [சொல் - நெற்பயிர்.] (௬௧)

F. (2) மொழிமாற்று:—THE TRANSPOSED CONSTRUCTION.

413. ஏற்ற பொருளுக் கியையு மொழிகளை
மாற்றியோ ரடியுள் வழங்கன் மொழிமாற்றே.

(இ - ள்) ஏற்ற பொருளுக்கு - ஏற்ற (இரண்டு) பயனிலை களுக்கு, இயையும் மொழிகளை - பொருந்து மொழிகளை, மாற்றி - (ஏலாத பயனிலைகளுக்குத்) தனித்தனிக் கூட்டி, ஓர் அடியுள் வழங்கல் - ஓரடியுள்ளே சொல்லுவது, மொழிமாற்று மொழிமாற்றுப் பொருள்கோளாம், எ-று.

(உ - ம்.) "சுரையாழ வம்மிமிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை."

இதனுள் ஆழ என்னும் பயனிலைக் கியைந்த அம்மியென்னு மொழியினை மிதப்ப என்னும் பயனிலைக்கும், மிதப்ப என்னும் பயனிலைக்கு இயைந்த சுரை என்னு மொழியினை ஆழ என்னும் பயனிலைக்கும், நீத்து என்னும் பயனிலைக் கியைந்த முயல் என்னும் மொழியினை நிலை என்னும் பயனிலைக்கும், நிலை என்னும் பயனிலைக்கியைந்த யானை என்னு மொழியினை நீத்து என்னும் பயனிலைக்குமாக மாற்றிக் கூறியவாறு காண்க. (௬௨)

F. (3) நிரனிறை:—THE PARALLEL CONSTRUCTION.

414. பெயரும் வினையுமாஞ் சொல்லையும் பொருளை
யும், வேறு நிரனிறீஇ முறையினு மெதிரினும்
நேரும் பொருள்கோ ணிரனிறை நெறியே.

(இ - ள்.) பெயரும் வினையும் ஆம் சொல்லையும் - பெயரும் வினையுமாகிய சொற்களையும், பொருளையும் - (அவை கொள்ளும் பெயரும் வினையுமாகிய) பயனிலைகளையும், வேறு நிரல் நிறீஇ - வேறு வேறு வரிசையாக நிறுத்தி, முறையினும் எதிரினும் - முறையாகவேனும் எதிராகவேனும், நேரும் பொருள்கோள் - (இதற்கிது பயனிலை யென்பதுபடக்) கூறும் பொருள்கோள், நெறி நிரனிறை - நெறிப்பட்ட நிரனிறைப் பொருள்கோளாம், எ - று.

1. "கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி
மதிபவள முத்தமுகம் வாய்முறுவல்
பிடிபிணை மஞ்ஞை நடைநோக்குச் சாயல்
வடிவினளே வஞ்சி மகள்."

இது, கொடி—நுசுப்பு, குவளை—உண்கண், கொட்டை—மேனி, எ-ம்; மதி—முகம், பவளம்—வாய், முத்தம்—முறுவல், எ-ம்; பிடி—நடை, பிணை—நோக்கு, மஞ்ஞை—சாயல், எ-ம்; பெயர்ச்சொற்களும் பெயர்ச்சொற்களுமாய் வந்த முறை நிரனிறை.

2. "காதுசேர் தாழ்குழையாய் கன்னித் துறைச்சேர்ப்ப
போதுசேர் தார்மார்ப போர்ச்செழிய - நீதியான் [கு
மண்ணமிர்த மங்கையர்தோண் மாற்றுரை யேற்றார்க்
நுண்ணிய வாய பொருள்."

இது, கா—மண், து—அமிர்தம், சேர்—மங்கையர் தோள், தாழ்—மாற்றுரை, குழை—ஏற்றார்க்கு, ஆய்—நுண்ணியவாய பொருள், என வினையும் பெயருமாய் வந்த முறை நிரனிறை.

3. "களிறுங் கந்தும் போல நளிகடற்
கூம்புங் கலனுந் தோன்றும்
தோன்றன் மறந்தோர் துறைகெழு நாட்டே."

இது, களிறு—கலன், கந்து—கூம்பு, எனப்பெயரும் பெயருமாய் வந்த எதிர் நிரனிறை. கலன் - கப்பல், கந்து - கட்டுத்தறி, கூம்பு - பாய்மரம்.

4. "ஆடவாக ளெவ்வா றகன்றொழிவார் வெஃகாவும்
பாடகமு மூரகமும் பஞ்சரமா - நீடியமா
னின்றா னிருந்தான் கிடந்தா னிதுவன்றோ
மன்றார் மதிற்கச்சி மாண்பு."

இது, வெஃகா—கிடந்தான், பாடகம் — இருந்தான், ஊரகம்—நின்றான், எனப் பெயரும் வினையுமாய் வந்த எதிர் நிரனிறை. (௬௩)

F. (4) பூட்டுவில்:—THE STRUNG-BOW CONSTRUCTION.

415. எழுவா யிறுதி நிலைமொழி தம்முள்
பொருணோக் குடையது பூட்டுவில் லாகும்.

(இ - ள்.) எழுவாய் இறுதி - (செய்யுள்) முதலினும் இறுதியினும், நிலைமொழி - இருக்கின்ற மொழிகள், தம்முள் - தமக்குள், பொருள் நோக்குஉடையது - பொருளை நோக்குதலுடைய பொருள்கோள், பூட்டுவில் ஆகும் - பூட்டுவிற் பொருள்கோளாம், எ-று.

(உ - ம்.)

"திறந்திடுமின் றீயவை பிற்காண்டு மாத
ரிறந்து படிற்பெரிதா மேத - முறந்தையர்கோன்
றண்ணார மார்பிற் றமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு."

இதில் 'திறந்திடுமின்—கதவு' என நோக்கிற்று. (௬௪)

F. (5) தாப்பிசை:—THE SWING OR DOUBLE-FACED CONSTRUCTION.

416. இடைநிலை மொழியே யேனையீ ரிடத்தும்
நடந்து பொருளை நண்ணுத றாப்பிசை.

(இ-ள்.) இடைநிலை மொழி - நடுவிலுள்ள மொழி, ஏனை ஈரிடத்தும் நடந்து - ஒழிந்த முதலிலு மீற்றிலும் சென்று, பொருளை நண்ணுதல் - பொருளைக்கூடுமே (பொருள்கோள்), தாப்பிசை - தாப்பிசைப் பொருள்கோளாம், எ-று.

ஊசல்வடம்போ லிடைநின்று இருமருங்குஞ் செல்லலால், இப்பெயர் பெற்றது. தாம்பு தாப்பு என விகாரமாயிற்று. தாம்பு=ஊசல்வடம். இசை=சொல்.

(உ-ம்.) 'உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
வண்ணாத்தல் செய்யா தளறு.'

இதில் ஊன் என்பது ஊனுண்ணாமை யுள்ளது என முதலிலும், 'ஊனுண்ண' எனப் பின்னரும் செல்லல் காண்க. (குறு

F (6) அளைமறிபாப்பு.—THE INVOLVED CONSTRUCTION IN WHICH THE SENSE BEGINS AT THE END AND GOES BACKWARD TO THE BEGINNING.

417 செய்யு ளிறுதி மொழியிடை முதலினும்
எய்திய பொருள்கோ ளளைமறி பாப்பே.

(இ-ள்.) செய்யுள் இறுதி மொழி - செய்யுளில் இறுதியிலுள்ள சொல், இடை முதலினும் எய்திய - இடையிலும் முதலிலும் சென்ற, பொருள்கோள் - பொருள்கோள், அளைமறிபாப்பு - அளைமறிபாப்புப் பொருள்கோளாம், எ-று.

புற்றிலே தலைவைத்து மடங்கும் பாம்பு போலுதலால் அப்பெயர் பெற்றது. அளை = புற்று, மறி = மடங்கல், பாப்பு= பாம்பு, வலித்தல்விகாரம்.

(உ-ம்.)

"தாழ்ந்த வுணர்வினராய்த் தாளுடைந்து தண்டேன்றித்
தளர்வார் தாமுஞ்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து நாற்கதியிற்
சுழல்வார் தாமு

மூழ்ந்த பிணிநலிய முன்செய்த வினையென்றே
முனிவார் தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி
முயலாதாரே."

இதில் "வாழ்ந்தபொழுதினே வானெய்தி நெறி முன்னி முயலாதார், மூழ்ந்த பிணிநலிய முன்செய்த வினையென்றே முனிவார், சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து நாற்கதியிற் சுழல்வார், தாழ்ந்த வுணர்வினராய்த் தாளுடைந்து தண்டேன்றித் தளர்வார்" எனத் தலைகீழாய் இடையிலும் முதலிலும் சென்று கூடுதல் காண்க. (௬௬)

F. (7) கொண்டு கூட்டு:—THE DISARRANGED CONSTRUCTION IN WHICH THE SENSE IS MADE UP BY SELECTING WORDS HERE AND THERE.

418. யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை
ஏற்புழி யிசைப்பது கொண்டு கூட்டே.

(இ - ள்,) யாப்பு அடி பலவினும் - செய்யுளடிகள் பலவற்றினும், கோப்பு உடை மொழிகளை - கோக்கப்படுதலையுடைய சொற்களை, ஏற்புழி இசைப்பது - (எடுத்த பொருளுக்கு) ஏற்ற விடத்துக் கூட்டும் பொருள்கோள், கொண்டுகூட்டு - கொண்டு கூட்டுப் பொருள்கோளாம், எ-று.

(உ-ம்.)

" தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்
வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி
யஞ்சனத் தன்ன பசலை தணிவாமே
வங்கத்துச் சென்றா வரின்."

இதனுள் 'வங்கத்துச் சென்றார் வரின் அஞ்சனத்தன்ன பைங்கூந்தல் மாமேனி தெங்கங் காய்போலத் திரண்டுருண்ட கோழிவெண்முட்டை யுடைத்தன்ன பசலை தணிவாம்' எனக் கொண்டு கூட்டுக. (௬௭)

F. (8) அடிமறிமாற்று:—THE CONSTRUCTION IN WHICH THE LINES ARE INTERCHANGEABLE WITHOUT AFFECTING THE HARMONY OR THE MEANING OF THE STANZA.

419. ஏற்புழி யெடுத்துடன் கூட்டுறு மடியவும்

யாப்பி றிடைமுத லாக்கினும் பொருளிசை
மாட்சியு மாறு வடியவு மடிமறி.

(இ-ள்.) ஏற்புழி எடுத்து - (பொருளுக்கு) ஏற்குமிடத்து எடுத்து, உடன் கூட்டுறும் - நீங்காது கூட்டுகிற, அடியவும் - அடியை யுடையவையும், யாப்பு ஈறு இடை முதல் - (யாதானு மோரடியை) அச்செய்யுளின் இறுதி நடு முதல்களில் (யாதானு மோரிடத்து), ஆக்கினும் - (எடுத்துக்) கூட்டினும், பொருள் இசை மாட்சியும் - பொருளோடு ஓசைச்சிறப்பும் ஓசையொ ழிய பொருட் சிறப்பும், மாறு அடியவும் - வேறுபடாத அடி யையுடையவையும், அடிமறி - அடிமறிமாற்றுப் பொருள்கோ ளாம், எ-று.

(உ-ம்.)

(1) "நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்
கொடுத்துத்தான் றுய்ப்பினு மீண்டுங்கா லீண்டு
மிடுக்குற்றுப் பற்றினு நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால்"

'கொடுத்துத்தான் றுய்ப்பினு மீண்டுங்காலீண்டும் விடுக் கும் வினையுலந்தக்கா லிடுக்குற்றுப்பற்றினு நில்லாதுசெல்வம் (இஃதறியார்) நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந்துடையார்' என அடிகளை ஏற்குமிடத்து எடுத்துக்கூட்டுக.

(2) "மாறுக்காதலர் மலைமறந்தனரே
யாறுக்கட்பனி வரலானாவே
வேறுமென்றோள் வளைநெகிழும்மே
கூறுய்தோழி யான்வாழுமாறே"

*இதனுள், எவ்வடிவை எங்கே கூட்டினும் பொருளும் ஓசை யும் வேறுபடாமை காண்க.

(3) "அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றஞ்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றங்
கொலற்பாலுங் குற்றமே யாம்"

இதனுள் கடையடியை யாதேனு மோரிடத்துக் கூட்டும் போது ஓசை வேறுபட்டுப் பொருள் வேறுபடாமை காண்க.()

பொதுவியன் முற்றுப்பெற்றது.

ச. இடைச்சொல்லியல்.

M. F. இடைச்சொல்லின் இலக்கணம்:—PARTICLE DEFINED.

420. வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்
தத்தம் பொருள விசைநிறை யசைநிலை
குறிப்பெனெண் பகுதியிற் றனித்திய லின்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் னோரிடத்
தொன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்
சொல்.

(இ - ள்.) வேற்றுமை (உருபுகள்) - ஐ முதலிய வேற்றுமை உருபுகளும், வினை (உருபுகள்) - விகுதி முதலிய வினை உருபுகளும், சாரியை (உருபுகள்) - அன் ஆன் முதலிய சாரியை உருபுகளும், ஒப்பு (உருபுகள்) - போல புரைய முதலிய உவமை உருபுகளும், தத்தம் பொருள - தத்தமக்குரிய பொருளை யுணர்த்தி வருபவையும், இசைநிறை - செய்யுளிசை நிறைத்து வருபவையும், அசைநிலை - அசைத்தலே பொருளாக நிற்பவையும், குறிப்பு - (இவைபோலாது) குறிப்பினால் வருபவையும், என் - என்கிற, எண் பகுதியின் - எட்டுவகையினை யுடையனவாய், தனித்து இயல் இன்றி - தனித்து நடத்தலில்லாமல், பெயரினும் வினையினும் - பெயர்ச்சொல்லினகத்தும் வினைச்சொல்லினகத்தும், பின் முன் ஓர் இடத்து - (அவற்றின் புறமாகிய) பின்னும் முன்னும் (ஆகிய இவ்வாறிடங்களில்) ஓரிடத்து, ஒன்றும் பலவும் வந்து ஒன்றாயினும் பலவாயினும் வந்து, ஒன்றுவது - ஒன்றுபட்டு நடக்குந்தன்மையது, இடைச்சொல் - இடைச்சொல்லாகும், எ-று.

(உ-ம்.)

(1) குழையன்	—அன் - விகுதியிடைச்சொல் ஒன்று வந்தது.	பெயரினகத்து.
முடியினன்	—இன், அன் - இடைநிலையும் விகுதியுமாகிய இடைச்சொற்கள் பல வந்தன.	
நிலத்தினன்	—அத்து, இன், அன்-சாரியை, இடைநிலை, விகுதியுமாகிய இடைச் சொற்கள் பல வந்தன.	

(2)	உண்ணுன்	—ஆன்-விகுதி இடைச்சொல் ஒன்று வந்தது.	வினையகத்துறுப்பு.
	உண்டான்	—ட், ஆன், - இடைநிலையும், விகுதியுமாகிய இடைச்சொற்கள் பல வந்தன.	
	உண்டனன்	—ட், அன், அன் - இடைநிலை, சாரியை, விகுதியுமாகிய இடைச் சொற்கள் பல வந்தன.	
(3)	நம்பியை	— ஐ - உருபிடைச்சொல் ஒன்று பின்னே வந்தது.	பெயரின் புறத்துறுப்பு.
	அதுவே	— ஏ - இடைச்சொல் ஒன்று பின்னே வந்தது.	
	அதுமற்றம்ம	— மற்று, அம்ம - இடைச் சொற்கள் பல பின்னே வந்தன.	
	பொன்னினுலோ	— இன், ஆல், ஓ - சாரியை, உருபு, ஓவுமாகிய இடைச் சொற்கள் பல பின்னே வந்தன.	
(4)	கொன்னூர் ஓ பெரியன்	— கொன், ஓ - இடைச் சொற்கள் ஒவ்வொன்று முன்னே வந்தது.	
	ஓ ஓ கொடியை இனி மற்றொன்று	— ஓ ஓ, இனி, மற்று - இடைச் சொற்கள் பல முன்னே வந்தன.	
(5)	வந்தானே	— ஓ - இடைச்சொல் ஒன்று பின்னே வந்தது.	வினையின் புறத்துறுப்பு.
	கொன்றான் கூகூ	— கூ கூ - இடைச் சொற்கள் பல பின்னே வந்தன.	
(6)	ஐயோ இறந்தான்	— ஐயோ - இடைச்சொல் ஒன்று முன்னே வந்தது.	
	சீ சீ போ	— சீ சீ - இடைச் சொற்கள் பல முன்னே தந்தன.	

இடைச்சொற் பொருள்கள்:—SIGNIFICATIONS OF PARTICLES.

421. தெரிநிலை தேற்ற மையமுற் றெண்சிறப்
பெதிர்மறை யெச்சம் வினாவிழை வொழியிசை
பிரிப்புக் கழிவாக்க மின்னன விடைப்பொருள்.

(இ - ள்.) தெரிநிலை - தெரிநிலையும், தேற்றம் - தெளிவும், ஐயம் - சந்தேகமும், முற்று - முற்றும், எண் - எண்ணும், சிறப்பு - சிறப்பும், எதிர்மறை - எதிர்மறையும், எச்சம் - எச்சமும், வினா - வினாவும், விழைவு - விருப்பமும், ஒழியிசை - ஒழிந்தசொல்லும், பிரிப்பு - பிரிநிலையும், கழிவு - கழிவும், ஆக்கம் - ஆக்கமும், இன்னன - இவைபோல்வன பிறவும், இடை - (தத்தம் பொருள என்ற) இடைச்சொற்களுடைய, பொருள் - பொருள்களாம், எ-று.

இன்னன என்றதனாற் சில வருமாறு:—

அ, இ, உ என்பன சுட்டுப்பொருளைத் தருவன.

எ, யா என்பன வினாப்பொருளைத் தருவன.

முன், பின், இனி என்பன இடப்பொருளுங் காலப்பொருளுந் தருவன.

தொறும், தோறும்—இடப்பன்மைப் பொருளைத்தருவன.

ஆவது, ஆயினும் முதலியவை விகற்பப் பொருளைத் தருவன.

ஐயோ, அந்தோ முதலியவை இரக்கப்பொருளைத் தருவன.

ஆ, அம்மா, ஓ, ஓகோ முதலியவை வியப்புப்பொருளைத் தருவன.

கூகூ, ஐயோ, முதலியவை அச்சப்பொருளைத் தருவன.

சீ, சிச்சீ, சை முதலியவை இகழ்ச்சிப்பொருளைத் தருவன.

கடகடென, துடுமென, ஒல்லென முதலியவை ஒலிக் குறிப்புப்பொருளைத் தருவன.

பொள்ளென, சரேலென முதலியவை விரைவுக் குறிப்புப் பொருளைத் தருவன.

மற்று மிப்படியே வருகிற பலவகைப்பட்ட இடைச்சொற்களை ஆராய்ந்தறிந்து கண்டுகொள்க. (௨)

M F. ஏகார இடைச்சொல், (ஆறுபொருள்):—SIX USES OF THE PARTICLE ஏ.

422. பிரிநிலை வினாவெண் ணீற்றசை தேற்றம்
இசைநிறை யெனவா றேகா ரம்மே.

(இ-ள்.) பிரிநிலை - பிரிநிலையும், வினா - வினாவும், எண்-எண்ணும், ஈற்றசை - ஈற்றிலசைத்தலும், தேற்றம் - தெளிவும், இசைநிறை - இசை நிறைத்தலும், என ஆறு - என்று ஆறு பொருளைத் தரும், ஏகாரம் - ஏகார இடைச்சொல், எ-று.

(உ-ம்.)

1. அவனேகொண்டான் — ஒரு கூட்டத்திலிருந்து ஒருவனை பிரித்து நிற்கையால் பிரிநிலை.

2. நீயேகொண்டாய்? — நீயா கொண்டாய் என வினாவி நிற்கையால் வினாவாம்.

3. நிலனே நீரே தீயே வளியே — நிலனும் நீருந் தீயும் வளியும் என எண்ணிநிற்கையால் எண்ணும்.

4. வருகதில் லம்ம வெம்மூர் கொளலே — இறுதியி லசைத்து நிற்கையால் ஈற்றசையாம்.

5. நானேகொண்டேன் — துணிவைக் காட்டுதலால் தேற்றமாம்.

6. ஏ ஏ இவளொருத்தி பேடியோவென்றா — இசை நிறைத்து நிற்கையால் இசைநிறையாம்.

அன்றியும், யானேகொண்டேன் என்பது, யான் கொள்கிலனென்னும் எதிர்மறைப்பொருளையுந் தருமாதலால் எதிர்மறையாம்; ஏகாரம் எதிர்மறைப்பொருளைத் தருவது புதியன புகுதலாற் கொள்க. (௩)

௩. ஓகார இடைச்சொல், (எண்பொருள்):—EIGHT USES OF THE PARTICLE ஓ.

423. ஒழியிசை வினாச்சிறப் பெதிர்மறை தெரிநிலை
கழிவசை நிலைபிரிப் பெனவெட் டோவே.

(இ-ள்.) ஒழியிசை - ஒழியிசையும், வினா - வினாவும், சிறப்பு - சிறப்பும், எதிர்மறை - எதிர்மறையும், தெரிநிலை - தெரிநிலையும், கழிவு - கழிவும், அசைநிலை - அசைநிலையும், பிரிப்பு - பிரிநிலையும், என எட்டு - என்று எட்டுப்பொருளைத் தரும், ஓ - ஓகார இடைச்சொல், எ-று.

சிறப்பு, உயர்வுசிறப்பும் இழிவுசிறப்பும் என இருவகைப்படும்.

(உ - ம்.)

1. கொளலோ கொண்டான் — கொண்டெய்யப் போயினு னல்லன் என ஒழிந்த சொற்களைத் தருதலால் ஒழியிசை.
2. குற்றியோ மகனோ — வினு
3. ஓ ஓ பெரியன் — உயர்வுசிறப்பு.
ஓ ஓ கொடியன் — இழிவுசிறப்பு.
4. அவனோ கொண்டான் — கொண்டில னெனப் பொருள் படின் எதிர் மறை.
5. ஆணோ அதுவுமன்றுபெண்ணோ அதுவுமன்று — அத்தன்மை யில்லாமையைத்தெரிவித்து நிற்கையால் தெரிநிலை.
6. உறுதியுணராது கெட்டாரை ஓ ஓ தமக்கோருறுதி யுணராரோ — கழிவிரக்கப் பொருள் தருதலால் கழிவு.
7. காணியவம்மினோ கங்குலது நிலையே — அசைநிலை.
8. அவனோ கொண்டான். — பலருளிருந்து ஒருவனைப்பிரித்தலாற் பிரிநிலை. ()

F. என, என்று என்னு மிடைச்சொற்கள்; (ஆறுபொருள்):—

THE SIX USES OF THE PARTICLES என AND என்று.

424. வினைபெயர் குறிப்பிசை யெண்பண் பாறினும்
எனவென் மொழிவரு மென்று மற்றே.

(இ - ள்.) வினை - வினையும், பெயர் - பெயரும், குறிப்பு - குறிப்பும், இசை - இசையும், எண் - எண்ணும், பண்பு - பண்பும் (ஆகிய), ஆறினும் - ஆறுபொருளிலும், என எனும்மொழி- என என்னும் இடைச்சொல், வரும் - சேர்ந்துவரும்; என்றும் - என்று என்னும் இடைச்சொல்லும், அற்று - அப்படியே (ஆறு பொருளிலும்) வரும், எ-று.

(உ - ம்.)

1. மைந்தன் பிறந்தானெனத் தந்தை யுவந்தான்—வினை.
2. அழுக்காறென வொருபாவி —பெயர்.
3. பொள்ளென வாங்கே புறம்வேரார் —குறிப்பு.

4. குட்டத்துத் துடுமெனப்பாய்ந்தது —இசை.
5. நிலனென நீரெனத் தீயென வளியென வா னெனப் பூதங்க ளைந்து } —எண்.
6. காரெனக் கறுத்தது —பண்பு.

என்று என்பதையும் மேற்குறித்த உதாரணங்களில் ஒட்டிக் கொள்க. (௫)

M. F. உம் இடைச்சொல் ; (எண்பொருள்):—EIGHT USES OF THE PARTICLE உம்.

425. எதிர்மறை சிறப்பைய மெச்சமுற் றளவை
தெரிநிலை யாக்கமோ டும்மை யெட்டே.

(இ - ள்.) எதிர்மறை - எதிர்மறையும், சிறப்பு - சிறப்பும், ஐயம் - சந்தேகமும், எச்சம் - எச்சமும், முற்று - முற்றும், அளவை - அளவையும், தெரிநிலை - தெரிநிலையும், ஆக்கம் - ஆக்கமுமாகிய, எட்டு - எட்டுப்பொருளைத்தரும், உம்மை - உம்மை இடைச்சொல் எ-று.

எச்சவும்மை இறந்தது தழீஇயதும் எதிரது தழீஇயதும் என இருவகைப்படும்.

(உ - ம்.)

1. கொற்றன் வருதற்குமுரியன் — எதிர்மறை.
2. குறவரு மருளுங் குன்று — { குன்றினுயர்வைச் சிறப்பித்தலால் உயர்வு சிறப்பாம்.

'புலையனும் விரும்பாப் புன் புலால் யாக்கை' } — { உடம்பினிழிவைச் சிறப்பித்தலால் இழிவு சிறப்பாம்.

3. பத்தாயினு மெட்டாயினுங் கொடு } — ஐயம்.
4. சாத்தனும் வந்தான் — { கொற்றன் வந்ததன்றி எனப் பொருள் படின் இறந்தது தழீஇய எச்சவும்மையாம்.

சாத்தனும் வந்தான் — { இனிக் கொற்றனும் வருவானெனப் பொருள்படின் எதிரது தழீஇய எச்சவும்மையாம்.

5. தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்	—	முற்றும்மை.
6. சாத்தனுங் கொற்றனும் வந்தார்	—	எண்ணும்மை
7. ஆணுமன்று பெண்ணுமன்று	—	தெரிநிலையும்மை.
8. பாலுமாயிற்று.		அதுவே மருந்து மாயிற்று என்ப பொருள்படின் ஆக்கவும்மை. ()

முற்றும்மைக்குச் சிறப்புவிதி:—SPECIAL RULE REGARDING THE PARTICLE DENOTING UNIVERSALITY OR TOTALITY.

426. முற்றும்மை யொரோவழி யெச்சமு மாகும்.

(இ - ள்.) முற்று உம்மை - முற்றும்மையானது, ஒரோவழி எச்சமும் ஆகும்-ஒரோவிடத்தே எச்சவும்மையு மாகும், எ-று.

(உ - ம்.) எல்லாரு மிதுசெய்யார்—இங்கு சில ரிது செய்வா ரெனவும் பொருள்படுதல் காண்க. (எ)

எச்சவும்மைக்குச் சிறப்புவிதி:—SPECIAL RULE REGARDING THE PARTICLES INDICATING SOMETHING UNDERSTOOD.

427. செவ்வெண் ணீற்றதா மெச்ச வும்மை.

(இ-ள.) எச்ச உம்மை - எச்சவும்மையானது, செவ்வெண் - செவ்வெண்ணிலே வருமாயின், ஈற்றது ஆம் - ஈற்றிலே வரும், எ-று.

செவ்வெண் என்பது எண்ணிடைச்சொல் இன்றி எண்ணி நிற்பது.

(உ-ம்.) கல்வி செல்வ மொழுக்கங் குடிப்பிறப்பும் பெறுவாருமுளர்—இங்கு இவற்றுள் சில பெறுவாரு முளர் எனப் பொருள் படுதல் காண்க. (அ)

சில எண்ணிடைச் சொற்களுக் காவதோர் இலக்கணம்:—RULE REGARDING CERTAIN PARTICLES OF ENUMERATION.

428 பெயர்ச்செவ் வெண்ணே யென்ற வெனுவெண்
நான்குந் தொகைபெறு மும்மையென் றெண
வோ, டிந்நான் கெண்ணுமஃ தின்றியு மியலும்.

(இ - ள்.) பெயர் செவ்வெண் - பெயர்களிடத்தே எண்ணிடைச்சொல் தொக்குவருகிற செவ்வெண்ணும், ஏ (எண்) - ஏகார எண்ணும், என்று (எண்) - என்று எண்ணும், எனு எண் - எனு எண்ணுமாகிய, நான்கும் - நான்கெண்களும், தொகை பெறும் - தொகையைப்பெற்று நடக்கும்; உம்மை (எண்) - உம்மை எண்ணும், என்று (எண்) - என்று எண்ணும், என (எண்) - என எண்ணும், ஓடு (எண்) - ஓடு எண்ணும் ஆகிய, இந்நான்கு எண்ணும் - இந்த நான்கெண்களும், அஃது இன்றியும் இயலும் - தொகைபெறுமலும் நடக்கும், எ - று.

(உ - ம்.)

சாத்தன் கொற்ற னிருவரும் வந்தார்
சாத்தனே கொற்றனே யிருவரும் வந்தார்
சாத்தனென்று கொற்றனென்று விருவரும் வந்தார்
சாத்தனெனுக் கொற்றனெனு விருவரும் வந்தார்

} தொகை பெற்று வந்தன.

இவை வழக்கின்கண் ஓரோவிடத்துத் தொகை பெறுது வரின் இசையெச்சமாகவும், செய்யுளின்கண் தொகைபெறுது வரின் தொகுத்தல் விகாரமாகவுங் கொள்க.

சாத்தனுங் கொற்றனு மிருவரும் வந்தார்
சாத்தனென்று கொற்றனென் றிருவருளர்
சாத்தனெனக் கொற்றனென விருவருளர்
சாத்தனேடு கொற்றனே டிருவருளர்
சாத்தனுங் கொற்றனும் வந்தார
நிலனென்று நீரென்று தீயென்று காற்றென் றளவறு
காயமென் றுகிய வுலகம்
நிலனென நீரெனத் தீயெனக் காற்றென வளவறு காய
மென்றுகிய வுலகம்
நிலனேடு நீரோடு தீயோடு காற்றே டளவறு காயமோ
டாகிய வுலகம்.

} தொகைபெற்றும் பெறுதும் வந்தன.

என்று, என, ஒடு என்னும் எண்ணிடைச் சொற்களுக்குச் சிறப்பு விதி:—SPECIAL RULES REGARDING THE PARTICLES OF ENUMERATION என்று, என AND ஒடு.

429. என்று மெனவு மொடுவு மோரோவழி
நின்றும் பிரிந்தெண் பொருடொறு நேரும்.

(இ - ள்.) என்றும் எனவும் ஒடுவும் - என்று என்பதும் என என்பதும் ஒடு என்பதும், ஓரோவழி நின்றும் - (பொருடோறு

நிற்றலே யன்றி) ஓரிடத்திலே நின்றும், பிரிந்து - பிரிந்து, எண் பொருள்தொறும் நேரும் - எண்ணப்படுகின்ற பொருள் தோறும் பொருந்தும், எ-று.

(உ-ம்) (1) வினைபகையென்றிரண்டு
(2) பகைபாவமச்சம் பழியெனநான்கும்
(3) பொருள்கருவிகாலம் வினையிடனொடைந்தும்

இவற்றுள் வினையென்று பகையென்று எனவும்; பகையென, பாவமென, அச்சமென, பழியென எனவும்; பொருளொடு, கருவியொடு காலமொடு, வினையொடு, இடனொடு எனவுங் கூட்டி எண்ணுக. (௧௦)

பெயரோடு வரும் எண்ணிடைச்சொற்கள் வினையோடு வருமாறு:—THE PARTICLES OF ENUMERATION USED WITH VERBS FOLLOW THE SAME RULES AS WHEN USED WITH NOUNS.

430 வினையொடு வரினுமெண் ணினைய வேற்பன.

(இ - ள்.) எண் - எண்ணிடைச்சொற்கள், வினையொடு வரினும் - வினையோடு வந்தாலும், இனைய ஏற்பன - (பெயரோடு வரும்போது சொல்லப்பட்ட) இவ்விலக்கணங்களை யெல்லாம் ஏற்கும், எ - று.

(உ - ம்.)

மயிலாடக் குயில்பாட மாமுகி லெழுந்தது —செவ்வெண்
கற்றுங்கேட்டுங் கற்பனை கடந்தார் —உம்மையெண்
உண்ணவென்றுடுக்கவென்றுவந்தான் —என்றெண்
உண்ணவென உடுக்கவென வந்தான் —எனவெண்
உண்ண வுடுக்கவென்றுவந்தான் —பிரிந்துகூடுமெண்

மற்றவையு மிப்படியே வரும். (௧௧)

தில் இடைச்சொல்; (முப்பொருள்):—THREE USES OF THE PARTICLE தில்.

431. விழைவே கால மொழியிசை தில்லே.

(இ-ள்.) விழைவு - ஆசையும், காலம் - காலமும், ஒழியிசை- ஒழிந்தசொல்லும் (ஆகிய மூன்று பொருளையுந் தரும்), தில் - தில் என்னு மிடைச்சொல், எ-று.

(உ-ம்.)

1. வார்ந்திலங்குவையெயிற்றுச் சின்மொழி யரிவையைப் பெறுக தில்லம்ம யானே — அரிவையைப் பெறுதல் வேட்கையையுணர்த்தலால் விழைவு.

2. பெற்ருங்கறிகதில்லம்மவிவ் வூரே — பெற்றகாலத்தறிக எனக்காலத்தை யுணர்த்தலாற் காலம்.

3. வருகதில்லம்மவெஞ்சேரிசேர — வந்தா லொன்று செய்வே னென்னும் ஒழிந்த சொற்பொருளை யுணர்த்தலால் ஒழியிசை. (கஉ)

F. மன் இடைச்சொல்; (ஆறுபொருள்):—SIX USES OF THE PARTICLE மன்.

432. மன்னே யசைநிலை யொழியிசை யாக்கங்
கழிவு மிகுதி நிலைபே ருகும்.

(இ-ள்.) மன் - மன் என்னும் இடைச்சொல், அசைநிலை - அசைத்துநிற்றற் பொருளிலும், ஒழியிசை - ஒழிந்த சொற்பொருளிலும், ஆக்கம் - ஆக்கப்பொருளிலும், கழிவு - கழிதற்பொருளிலும், மிகுதி - மிகுதிப்பொருளிலும், நிலைபேறு - நிலைபெறுதற்பொருளிலும், ஆகும் - வரும், எ-று.

(உ-ம்.)

1. அதுமற்கொண்கன்றேரே — அசைநிலை.

2. கூரியதோர்வாண்மன் — அது இரும்பை அறத்துணித்தது என்கிற சொல் லொழிய நின்றதனால் ஒழியிசை.

3. நெடியன்மன் — அவனே வலியனு மானுனெனப்பொருள் படுதலால் ஆக்கம்.

4. சிறியகட்பெறினே யெமக்கீயுமன்னே — இப்பொழுது அவன் இறந்ததனால் எமக்குக் கொடுத்தல் கழிந்ததெனப்பொருள் பயவதினுற் கழிவு.

5. எந்தையெமக்கருளுமன் — மிகுதியும் அருளு மெனப்பொருள்படுதலால்மிகுதி.

6. மன்னுவுலகத்துமன்னி யதுபுரிமே } — { இவ்விடைச்சொல் லடியாகப் பிறந்த வினையுள் மன்னென்பது நிலையினை யுணர்த்தலால் நிலைபேறு.

F. மற்று என்னும் இடைச்சொல்; (முப்பொருள்) :—THREE USES OF THE PARTICLE மற்று.

433. வினைமாற் றசைநிலை பிறிதெனு மற்றே.

(இ-ள்.) மற்று - மற்றென்னு மிடைச்சொல், வினைமாற்று - வினைமாற்றுப் பொருளையும், அசைநிலை - அசைத்துநிற்றற் பொருளையும், பிறிது எனும் - பிறிதுபொருளையுந் தரும், எ-று.

(உ-ம்.)

1. 'மற்றறிவாநல்வினை யாமிளைய மென்னாது' } — { விரைந்தறிவா மென்னும் வினையை யொழித்து விரையா தறிவாமென்னும் வினையைத் தருதலால் வினைமாற்று.

2. மற்றடிகள் கண்டருள் செய்யமலரடிக்கீழ் } — அசைநிலை.

3. 'ஊழிற்பெருவலி யாவுளமற்றொன்று சூழினுந் தான்முந்துறும்' } — { ஊழல்ல தொன்றென்னும் பொருளைத் தந்தமையாற் பிறிது. (௧௪)

மற்று என்னும் இடைச்சொற்குச் சிறப்புவிதி:—SPECIAL RULE REGARDING THE PARTICLE மற்று.

434. மற்றைய தென்பது சுட்டிய தற்கினம்.

(இ - ள்) மற்றைய தென்பது - மற்றைய தென்னும் பொருளாகிய வினைமாற்றும் பிறிதும், சுட்டியதற்கு - குறிக்கப்பட்டதற்கு, இனம் - இனமாகிய வினைமாற்றும் பிறிதுமாம், எ-று.

(உ-ம்.) மற்றறிவாம் நல்வினை

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்."

இங்கு நல்வினையை விரைந்தறிவா மெனக் குறிக்கப்பட்டதற்கு விரையாதறிவாமெனவும், ஊழொன்றெனக் குறிக்கப்பட்டதற்கு ஊழல்ல தொன்றெனவும், இனம் வந்தவாறு காண்க. (௧௫)

M. F. கொல் என்னுமிடைச்சொல்; (இரண்டு பொருள்):—
TWO USES OF THE PARTICLE கொல்.

435. கொல்லே யைய மசைநிலைக் கூற்றே.

(இ - ள்.) கொல் - கொல் என்னு மிடைச்சொல்லானது, ஐயம் - ஐயப்பொருளிலும், அசைநிலை - அசைநிலைப்பொருளிலும் (வருகிற), கூற்று - இடைச்சொல்லாம், எ-று.

(உ - ம்.)

1. இவ்வுருக் குற்றிகொல் மகன்கொல் } — ஐயம்.
2. 'கற்றதனாலாய பயனெ ன்கொல்' } — அசைநிலை. (௧௬)

ஒடு, தெய்ய என்னு மிடைச்சொற்கள்:—THE PARTICLES ஒடு AND தெய்ய.

436. ஒடுவுந் தெய்யவு மிசைநிறை மொழியே.

(இ-ள்.) ஒடுவுந் தெய்யவும் - ஒடு தெய்ய என்கிற இரண்டும், இசைநிறை - இசைநிறைத்தற்பொருளைத் தருகிற, மொழி - இடைச்சொற்களாம், எ-று.

(உ-ம்.) விதைக்குறு வட்டிற் போதொடு பொதுள.
சொல்லென் றெய்ய நின்னொடு பெயர்த்தே. (௧௭)

அந்தில், ஆங்கு என்னுமிடைச்சொற்கள்; (இரண்டுபொருள்):—
TWO USES OF THE PARTICLES அந்தில் AND ஆங்கு.

437. அந்திலாங் கசைநிலை யிடப்பொரு ளவ்வே.

(இ - ள்.) அந்தில் - அந்தில் என்பதும், ஆங்கு - ஆங்கு என்பதும், அசைநிலை இடப்பொருள - அசைநிலைப் பொருளையும் இடப்பொருளையுந் தருவனவாம், எ-று.

(உ - ம்.)

1. அந்திற்கழலின் கச்சினன் ... ... } அசைநிலை.
ஆங்கத்திறனல்ல யாங்கழற ... ...
2. சேயிழையந்திற்*கொழுநற்காணிய ... } இடம். (௧௮)
ஆங்காங் காயினுமாக .. ... .

* அந்தில்=அவ்விடம்.

F. அம்ம என்னு மிடைச்சொல் (இரண்டு பொருள்):—
TWO USES OF THE PARTICLE அம்ம.

438. அம்ம வுரையசை கேண்மினென் றாகும்.

(இ-ள்.) அம்ம - அம்ம என்பது, உரையசை - உரையசைப் பொருளைத் தருவதும், கேண்மின் என்று - (ஒன்று சொல்லுவேன்) கேண்மின் என்கிற ஏவற் பொருளைத் தருவதும், ஆகும் - ஆகும், எ-று.

(உ - ம்.)

1. அதுமற்றம்ம — உரையசை.
2. அம்ம வாழி தோழி — கேளென்ற ஏவற் பொருளைத் தந்தது. (௧௧)

மா என்னு மிடைச்சொல்:—THE OPTATIVE PARTICLE மா.

439. மாவென் கிளவி வியங்கோ ளசைச்சொல்.

(இ-ள்.) மா என் கிளவி - மா என்னுஞ்சொல், வியங்கோள்- வியங்கோளிடத்து (வருகிற), அசைச்சொல் - அசைச் சொல்லாகும், எ-று.

(உ-ம்.) உப்பின்று புற்கை யுண்கமா கொற்கையோனே. ()

முன்னிலை அசைச்சொற்கள்:—VOCATIVE PARTICLES.

440. மியாயிக மோமதி யத்தை யித்தை
வாழிய மாளவீ யாழமுன் னிலையசை.

(இ - ள்.) மியா...யாழ - மியா இக மோ மதி அத்தை இத்தை வாழிய மாள ஈ யாழ என்கிற பத்து இடைச்சொற்களும், முன்னிலை - முன்னிலையிடத்து வருகிற, அசை - அசைச் சொற்களாம்.

(உ - ம்.)

மியா — சென்மியா
இக — தண்டுறையூர காணிக
மோ — கண்டது மொழிமோ
மதி — சென்மதி பெரும
அத்தை— குறுமகளுள்ளிச் செல்வத்தை
இத்தை— நீயொன்று பாடித்தை
வாழிய — வாழி வாழிய
மாள — சிறிது தவிர்ந்தீக மாள

ஈ — சென்றீ பெரும
யாழ — செலவயர்ந்தியாழ. (உக)

F. எவ்விடத்தும் வரும் அசைச்சொற்கள்:—EXPLETIVE PARTICLES.

441. யாகா பிறபிறக் கரோபோ மாதிகும்
சின்குரை யோரும் போலு மிருந்திட்
டன்றாந் தாந்தான் கின்றுநின் றசைமொழி.

(இ - ள்.) யா...நின்று - யா கா பிற பிறக்கு அரோ போ மாது இகும் சின் குரை ஒரும் போலும் இருந்து இட்டு அன்று ஆம் தாம் தான் கின்று நின்று என்கிற இருபதிடைச் சொற்களும், அசைமொழி - (எல்லாவிடங்களிலும் வருகிற) அசைச் சொற்களாம் எ-று.

(உ - ம்.)

(1) யா — யா பன்னிருவர் மாணக்க ரகத்தியனார்க்கு
(2) கா — இவளிவட்காண்டிகா
(3) பிற — ஆயனை யல்லபிற
(4) பிறக்கு — நசைபிறக்கொழிய
(5) அரோ — குயிலாலுமரோ
(6) போ — வாழாதென்போ
(7) மாது — விளிந்தன்றுமாதோ
(8) இகும் — காண்டிகுமல்லமோ
(9) சின் — என்றிசின்
(10) குரை — பலகுரைத்துன்பம்
(11) ஒரும் — 'அஞ்சுவதோருமறனே'
(12) போலும் — வருந்தினைபோலும்
(13) இருந்து — எழுந்திருந்தேன்
(14) இட்டு — பிளந்திட்டான்
(15) அன்று — சேர்துமன்றே
(16) ஆம் — பணியுமாமென்றும்
(17) தாம் — நீர்தாம்
(18) தான் — நீதான்
(19) கின்று — ஆசைப்பட்டிருக்கின்றேன்
(20) நின்று — துணையாய்நின்றான். (உஉ)

இடைச்சொல்லியல் முற்றுப்பெற்றது.

ரு. உரிச்சொல்லியல்.

ON QUALIFYING WORDS.

(ADJECTIVES AND ADVERBS.)

M. F. உரிச்சொல்லின் இலக்கணம்:—QUALIFYING WORD DEFINED.

442. பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி
ஒருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன வுரிச்சொல்.

(இ - ள்.) பல் வகை - (இசையும் குறிப்பும் பண்பும் ஆகிய) பலவேறு வகைப்பட்ட, பண்பும் - பண்புகளையும், பகர் பெயர் ஆகி-உணர்த்துகிற பெயராகி, ஒரு குணம் பல குணம் தழுவி - ஒரு குணத்தையும் பல குணங்களையும் உணர்த்துவனவாய், பெயர் வினை ஒருவா - பெயர்வினைகளை விட்டு நீங்காவாய், செய்யுட்கு உரியன - செய்யுளுக்கு உரியவையாய்ப் பொருளுக் குரிமை பூண்டு நிற்பவை, உரிச்சொல்-உரிச்சொற்களாம், எ-று.

[இசை = ஓசை, குறிப்பு = மனத்தாற்குறித்து உணரப்படுவது, பண்பு = பொறியாலுணரப்படுவது.] (க)

பண்பின் இலக்கணம்:—QUALITY DEFINED.

443. உயிருயி ரல்லதாம் பொருட்குணம் பண்பே.

(இ-ள்.) உயிர் - உயிராகியபொருளும், உயிர் அல்லது - உயிரல்லாதபொருளும், ஆம் - ஆகிய, பொருள் குணம் - பொருள்களினுடைய குணங்கள், பண்பு - பண்புகளாகும், எ-று. (உ)

ஐவகை உயிர்:—FIVE KINDS OF LIVING CREATURES.

444. மெய்ந்நா மூக்கு நாட்டஞ்செவிகளின்
ஒன்றுமுத லாக்கீழ்க் கொண்டுமே லுணர்தலின்
ஓரறி வாதியா வுயிரைந் தாகும்.

(இ - ள்.) மெய்...செவிகளின் - மெய்யும் நாவும் நாசியும் கண்ணும் காதும் ஆகிய ஐம்பொறிகளாலும், ஒன்று முதல் ஆ - (மெய்யாற் பரிசத்தையுணரு முணர்ச்சி) ஒன்று முதலாக,

கீழ்க்கொண்டு - கீழ்ப்போன வுணர்ச்சியுங்கொண்டு, மேல் உணர்தலின் - (இரசம் கந்தம் உருவம் சத்தம் என) மேல் வரும் புலன்களை (ஒவ்வொன்ருக) உணரலின், ஓர் அறிவு ஆதி ஆ - ஓரறிவுயிர் முதலாக, உயிர் ஐந்து ஆகும் - அவ்வுயிர் ஐந்து வகையாகும், எ-று. (௩)

ஓரறி வுயிர்கள்:—CREATURES OF ONE SENSE [PERCEPTION.]

445. புன்மர முதலவுற் றறியுமோ ரறிவுயிர்.

(இ - ள்.) புல் மரம் முதல் - புல்லும் மரமும் முதலியவை, உற்று அறியும் - (மெய்யாற்) பரிசித்துப் பரிசத்தையறிகிற, ஓர் அறிவு உயிர் - ஓரறிவு உயிர்களாம், எ-று. (௪)

ஈரறி வுயிர்கள்:—CREATURES OF TWO SENSES [PERCEPTION AND TASTE.]

446. முரணந் தாதிநா வறிவொடீ ரறிவுயிர்.

(இ-ள்.) முரண் நந்து ஆதி - இப்பியும் சங்கும் முதலியவை, நாவு அறிவோடு - (கீழ்ப்போன மெய்யறிவேயன்றி) நாவாலிரசத்தையும் அறிகிற, ஈர் அறிவு உயிர் - ஈரறிவுஉயிர்களாம்,எ-று.

மூவறி வுயிர்கள்:—CREATURES OF THREE SENSES [PERCEPTION, TASTE AND SCENT.]

447. சிதலெறும் பாதிமூக் கறிவின்மூ வறிவுயிர்.

(இ-ள்.) சிதல் எறும்பு ஆதி - கரையானும் எறும்பும் முதலியவை, மூக்கு அறிவின் - கீழ்ப்போன இரண்டறிவுகளேயன்றி) மூக்காற் கந்தத்தையும் அறிகிற அறிவோடு, மூவறிவு உயிர் - மூவறிவு உயிர்களாம், எ-று. (௬)

நாலறி வுயிர்கள்:—CREATURES OF FOUR SENSES [PERCEPTION, TASTE, SCENT, AND SIGHT.]

448. தும்பிவண் டாதிகண் ணறிவிஞ லறிவுயிர்.

(இ-ள்.) தும்பி வண்டு ஆதி - தும்பியும் வண்டும் முதலியவை, கண் அறிவின் - (கீழ்ப்போன மூன்றறிவுகளே யன்றிக்) கண்ணால் உருவத்தை அறிகிற அறிவோடு, நால் அறிவு உயிர் - நாலறிவு உயிர்களாம், எ-று. (௭)

ஐயறி வுயிர்கள் :—CREATURES OF FIVE SENSES [PERCEPTION, TASTE, SCENT, SIGHT, AND HEARING.]

449. வானவர் மக்க ணரகர் விலங்குபுள்
ஆதி செவியறிவோ டையறி வுயிரே.

(இ - ள்.) வானவர் மக்கள் நரகர் விலங்கு புள் ஆதி - தேவர்கள் மனிதர் நரகர் மிருகங்கள் பறவைகள் முதலியவை, செவி அறிவோடு - (கீழ்ப்போன நாலறிவுகளேயன்றிச்) செவியாற் சத்தத்தையும் அறிகிற அறிவோடு, ஐ அறிவு உயிர் - ஐயறிவு உயிர்களாம், எ-று. (அ)

உயிரல்லாத பொருள்கள்:—LIFELESS MATTER.

450. உணர்விய லாமுயி ரொன்று மொழித்த
உடன்முத லனைத்து முயிரல் பொருளே.

(இ - ள்.) உணர்வு இயல் ஆம் - அறிவுமயமாகிய, உயிர் ஒன்றும் ஒழித்த - உயிரொன்றுமே யன்றி, உடல் முதல் அனைத்தும் - உடம்பு முதலாகிய உலகத்துப்பொருள்களெல்லாம் உயிர் அல் பொருள் - உயிரல்லாத பொருள்களாம், எ-று. (௯)

உயிரல் பொருள் (உடல் உயிர்):—BODY AND SOUL, ONE AND YET DIVERSE.

451. ஒற்றுமை நயத்தி னொன்றெனத் தோன்றினும்
வேற்றுமை நயத்தின் வேறே யுடலுயிர்.

(இ-ள்.) ஒற்றுமை நயத்தின் - (எவ்வுயிர் எவ்வுடம்பை யெடுத்ததோ அவ்வுடம்பின் மயமாய் நிற்கிற) ஒற்றுமை நயங்கருதியவழி, ஒன்று என தோன்றினும் - ஒன்றுபோலத் தோன்றுமாயினும், வேற்றுமை நயத்தின் - (உயிர் சித்தாயும் உடம்பு சடமாயும் நிற்கிற) வேற்றுமை நயமாகிய வுண்மை கருதியவழி, உடல் உயிர் - அவ்வுடலும் உயிரும், வேறு - வேறாம், எ-று. (௧0)

உயிர்ப் பொருளின் குணம்: QUALITIES OF LIVING CREATURES.

452. அறிவரு ளாசை யச்ச மானம்
நிறைபொறை யோர்ப்புக் கடைப்பிடி மையல்

நினைவு வெறுப்புவப் பிரக்கநாண் வெகுளி
துணிவழுக் காறன் பெளிமை யெய்த்தல்
துன்ப மின்ப மிளமை மூப்பிகல்
வென்றி பொச்சாப் பூக்க மறமதம்
மறவி யினைய வுடல்கொ ளுயிர்க்குணம்.

(இ - ள்.) அறிவு...மறவி - அறிவு அருள் ஆசை அச்சம் மானம் நிறை பொறை ஓர்ப்பு கடைப்பிடி மையல் நினைவு வெறுப்பு உவப்பு இரக்கம் நாண் வெகுளி துணிவு அழுக்காறு அன்பு எளிமை எய்த்தல் துன்பம் இன்பம் இளமை மூப்பு இகல் வென்றி பொச்சாப்பு ஊக்கம் மறம் மதம் மறவி என்கிற முப்பத்திரண்டும், இனைய - இவைபோல்வன பிறவும், உடல் கொள் உயிர்க்குணம் - உடம்போடுகூடிய உயிர்களினுடைய குணங்களாம், எ - று. (௧௧)

உயிர்ப் பொருளின் தொழிற்குணம்:—FACULTIES OF LIVING CREATURES.

453. துய்த்த றுஞ்ச றொழுத லணிதல்
உய்த்த லாதி யுடலுயிர்த் தொழிற்குணம்.

(இ-ள்.) துய்த்தல்...உய்த்தல் - துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல் உய்த்தல் என்கிற ஐந்தும், ஆதி - இவைபோல்வன பிறவும், உடல் உயிர் - உடம்போடுகூடிய உயிரினுடைய, தொழிற்குணம் - தொழிற்குணங்களாம், எ - று. (௧௨)

உயிரல் பொருளின் குணம்:—QUALITIES OF LIFELESS MATTER.

454. பல்வகை வடிவிரு நாற்றமை வண்ணம்
அறுசுவை யூறெட் டுயிரல் பொருட்குணம்.

(இ - ள்.) பல் வகை வடிவு - (வட்டம் இருகோணம் முக்கோணம் சதுரம் இவை முதலாகிய) பலவகை வடிவுகளும், இரு நாற்றம் - (நற்கந்தம் துர்க்கந்தம் என்கிற) இருநாற்றங்களும், ஐ வண்ணம் - (வெண்மை செம்மை கருமை பொன்மை பசுமை என்கிற) ஐந்து வண்ணங்களும், அறு சுவை - (கைப்பு புளிப்பு துவர்ப்பு உவர்ப்பு கார்ப்பு இனிப்பு என்கிற) அறுசுவைகளும், ஊறு எட்டு - (வெம்மை தண்மை மென்மை வன்மை

நொய்ம்மை சீர்மை இழுமெனல் சருச்சரை என்கிற) எட்டு ஊறுகளும், உயிர் அல் பொருள் குணம் - உயிரல்லாத பொருள்களினுடைய குணங்களாம், எ - று. (௧௩)

இருபொருள்களின் தொழிற்குணம்:—FACULTIES AND QUALITIES COMMON TO BOTH.

455. தோன்றன் மறைதல் வளர்தல் சுருங்கல்
நீங்க லடைத னடுங்க லிசைத்தல்
ஈத லின்னன விருபொருட் டொழிற்குணம்.

(இ-ள்.) தோன்றல்.. ஈதல் - தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல் நீங்கல் அடைதல் நடுங்கல் இசைத்தல் ஈதல் என்கிற ஒன்பதும், இன்னன - இவைபோல்வன பிறவும், இருபொருள் தொழிற்குணம் - (உயிர்ப்பொருளும் உயிரல்பொருளுமாகிய) இரண்டற்கும் பொதுவாகிய தொழிற்குணங்களாம், எ - று.

(உ-ம்.) உயிர்தோன்றி மறைந்தது.
உடல்தோன்றி மறைந்தது.
நெருப்புத்தோன்றி மறைந்தது. (௧௪)

M. F. ஒருகுணந்தழுவிய பல உரிச்சொல்:—SIX WORDS IMPLYING ONE QUALITY [EXCESS].

456. சால வுறுதவ நனிகூர் கழிமிகல்.

(இ - ள்.) சால...கழி - சால என்பது முதலாகிய இவ்வாறு உரிச்சொற்களும், மிகல் - மிகுதி (என்னும் ஒருகுணத்தை யுணர்த்துகிற உரிச்சொற்களாம்), எ - று.

(உ-ம்.) பருவந்துசாலப் பலகொலென்றெண்ணி ...சால
உறுவளிதூக்கு முயர்சினைமாவின் ...உறு
தவச்சேய்நாட்டாராயினும் ...தவ
நனிபேதையேநயனில்கூற்றம் .. நனி
துனிகூரெவ்வமொடு ...கூர
காமங்கழிகண்ணோட்டம் ...கழி.

பலகுணந்தழுவிய ஒரு உரிச்சொல் (கடி):— ONE WORD (கடி) EXPRESSING 13 QUALITIES.

457. கடியென் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்க மச்சஞ் சிறப்பே

விரைவே மிகுதி புதுமை யார்த்தல்
வரைவே மன்றல் கரிப்பி னாகும்.

(இ-ள்.) கடி என் கிளவி - கடி என்னும் உரிச்சொல், காப்பு-காவலும், கூர்மை - கூர்மையும், விரை - வாசனையும், விளக்கம் - விளக்கமும், அச்சம் - அச்சமும், சிறப்பு - சிறப்பும், விரைவு - விரைவும், மிகுதி - மிகுதியும், புதுமை - புதுமையும், ஆர்த்தல் - ஒலித்தலும், வரைவு - நீக்கலும், மன்றல் - மணமும், கரிப்பின் - கரிப்பும் (ஆகிய பதின்மூன்று குணங்களிலும்), ஆகும் - வரும், எ - று.

(உ - ம்.)

1. கடிநகர் ... .காப்பு
2. கடிநுனைப்பகழி ... ...கூர்மை
3. கடிமாலை... .. .. நாற்றம்
4. கன்னுடியன்னகடிமார்பன் . .. விளக்கம்
5. கடியரமகளிர்க்கேகைவிளக்காகி ...அச்சம்
6. விழாக்கடி .. .. சிறப்பு
7. எம்மம்புகடிவிடுதும் ... ...விரைவு
8. கடியுண்கடவுட்கிட்டசெழுங்குரல் .. மிகுதி
9. கடியுண்கடவுட்கிட்ட செழுங்குரல் (இது புதிதுண்கடவுளென்றுமாதலால்) } புதுமை
10. கடிமுரசு ... ...ஆர்த்தல்
11. கடிமதுநுகர்வ ... .வரைவு
12. கடிவினைமுடிகி ... ...மன்றல்
13. கடிமிளகுதின்ற கல்லாமந்தி ... ...கரிப்பு. ()

F. ஒருகுணந்தழுவிய பல உரிச்சொல் :—SIXTEEN WORDS SIGNIFYING சொல்.

458. மாற்ற நுவற்சிசெப் புரைகரை நொடியிசை
கூற்றுப் புகறன் மொழிகிளவி விளம்பறை
பாட்டுப் பகர்ச்சி யியம்பல் சொல்லே.

(இ - ள்.) மாற்றம்.. இயம்பல் - மாற்றம் முதலாகிய பதினாறும், சொல் - சொல் என்னு மொருகுணத்தை யுணர்த்துகிற உரிச்சொற்களாம், எ - று.

(உ-ம்.)

1. கோவலர்வாய் மாற்றமுணர்ந்து ...மாற்றம்
2. இருபிறப்பாளர் பொழுதறிந்துநுவல ...நுவல
3. தெருண்டாரவை செப்பலுற்றேன் ...செப்பல்
4. உரைப்பா ருரைப்பவையெல்லாம் ...உரை
5. அறங்கரை நாவினான்மறை ... ...கரை
6. அஞ்சொற்பெரும்பணைத்தோ ளாயிழை யாடானொடியும் ...நொடி
7. நசையுநர்க்கடையா நன்பெருவாயி லிசையெனப்புக்கு ...இசை
8. உற்றது நாங்கள் கூற வுணர்ந்தனை ...கூற
9. புகன்றவன்றியும் ... ...புகன்ற
10. காமஞ்செப்பாது கண்டதுமொழிமோ ...மொழி
11. கிளந்தகிளை முதலுற்ற ... ...கிளந்த
12. மெய்ம்மூ வாறெனை விளம்பினர் புலவர் ...விளம்பு
13. அச்சுத னடிதொழு தறைகுவன் சொல்லே...அறை
14. ஒருவன் செய்நன்றி கொன்றார்க் குய்தியில்லென வறம்பாடின்றே ...பாடு
15. வார்த்தைபகாகுற்றேன் .. ...பகர்
16. இடிபோலியம்பினனே ... ...இயம்பு

என முறையே காண்க. (கசு

F. ஒருகுணந்தழுவிய பல உரிச்சொல்:—TWENTY-TWO WORDS SIGNIFYING ஓசை.

459. முழக்கிரட் டொலிகலி யிசைதுவை பிளிறிரை
இரக்கழுங் கியம்ப லிமிழ்குளி றதிர்குரை
கனைசிலை சும்மை கௌவை கம்பலை
அரவ மார்ப்போ டின்னன வோசை.

(இ-ள்.) முழக்கு...ஆர்ப்போடு - முழக்குமுதலான இருபத்திரண்டும், இன்னன - இவைபோல்வன பிறவும், ஓசை - ஓசையென்னு மொருபொருளை யுணர்த்து முரிச்சொற்களாம், எ-று.

(உ-ம்.)

1. முழங்குமுந்நீர் முழுவதும்வளைஇ... ...முழக்கு.
2. குடிஞையிரட்டுங் கோடுயர்நெடுவரை ...இரட்டு.

3. ஒல்லெனவொலிக்கு மொலிபுனலூரற்கு ...ஒலி.
4. கலிகெழுமூதூர் ... ...கலி.
5. பறையிசை ... ...இசை.
6. பல்லியந்துவைப்ப .. ..துவை.
7. பிளிறுவார்முரசம் ... .பிளிறு.
8. இரைக்குமஞ்சிறைப் பறவைகள் ...இரை.
9. இரங்குமுரசினம் ... .இரங்கு.
10. இரும்பிழிமாரி யழுங்கினமூதூர் ...அழுங்கு.
11. காலைமுரசமதியம்ப... ... ...இயம்பல்.
12. இமிழ்கடல்வளைஇய ... ...இமிழ்.
13. குளிறுமுரசங்குணில்பாய .. ...குளிறு.
14. களிறுகளித்ததிரும் ... ...அதிர்.
15. கார்குரைபுனற்கன்னி .. ...குரை.
16. கனைகடற்சேர்ப்ப ... ...கனை.
17. சிலைத்தார்முரசங்கறங்க ... ..சிலை.
18. தள்ளாதசும்மைமிகு தக்கிணநாடுகண்ணி ...சும்மை.
19. கௌவைநீர்வேலி ... . கௌவை.
20. வினைக்கம்பலை மனைச்சிலம்பவும் ...கம்பலை.
21. அறைகடலரவத்தானை ... ..அரவம்.
22. ஆர்த்த பல்லியக்குழாம் ... .. ஆர்ப்பு.

என முறையே காண்க. (௧௮)

இவ்வுரிச்சொல்லியலுக்குப் புறனடை:—A REMARK ON THIS CHAPTER ON QUALIFYING WORDS.

160. இன்ன தின்னுழி யின்னண மியலும்
என்றிசை நூலுட் குணகுணிப் பெயர்கள்
சொல்லாம் பரத்தலிற் பிங்கல முதலா
நல்லோ ருரிச்சொலி னயந்தனர் கொளலே.

(இ - ள்.) இன்னது - (பெயர்வினையிடையுரிகளில்) இன்ன சொல், இன்னுழி - (தன்மை முன்னிலை படர்க்கைகளிலும் வழக்குச்செய்யுள்களிலும்) இவ்விடத்தே, இன்னணம் - இவ் விலக்கண முள்ளதாய், இயலும் என்று - நடக்குமென்று, இசை நூலுள் - சொல்லக்கடவதாகிய இந்நூலுள், குண குணிப்

பெயர்கள் - குணப்பெயர்களையும் குணிப்பெயர்களையும், சொல்லாம் - (வேண்டியமட்டுஞ் சொல்வதன்றி விரித்துச்) சொல்லக்கடவமல்லம், பரத்தலின் - விரிக்கின் (மற்றொன்று விரித்தலென்னுங்குற்றம் வருமாதலின்), நல்லோர் - (அவற்றைக்கண்டறியவேண்டிய) நல்லோர், பிங்கலம் முதல் ஆ - பிங்கலந்தை திவாகர முதலிய நூல்களில், உரிச்சொலில் - உரிச்சொற்றொகுதியுள், நயந்தனர் கொளல் - விரும்பிக்கொள்க, எ-று.

எனவே பெயரியலுட் பெயர்ச்சொற் றொகுதியையும், வினையியலுள் வினைச்சொற் றொகுதியையும், இடையியலுள் இடைச்சொற் றொகுதியையும், விரிக்காமைக்கும் இதுவே புறனடையா மென்ப தாயிற்று. (௧௯)

சொல்லதிகாரத்துக்கு ஓர் புறனடை :—GENERAL REMARK ON THE CHAPTERS ON WORDS.

461. சொற்றொறு மிற்றிதன் பெற்றியென் றனைத்து
முற்ற மொழிகுறின் முடிவில வாதலின்
சொற்றவற் றியலான் மற்றைய பிறவும்
தெற்றென வுணர்த றெள்ளியோர் திறனே.

(இ - ள்.) சொற்றொறும் - சொற்றோறும், இற்று இதன் பெற்றி என்று - இத்தன்மைத்து இதனிலக்கணமென்று, அனைத்தும் - முழுதும், முற்ற மொழிகுறின் - நிறைவுற சொல்லப்புகுந்தால், முடிவு இல - முடிவில்லவாம்; ஆதலின் - ஆதலால், சொற்றவற்று இயலான் - எடுத்துச்சொல்லப்பட்ட சொற்களுடைய இலக்கணங்களைக்கொண்டு, மற்றைய பிறவும் - சொல்லப்படாதவற்றி னிலக்கணங்களையும், தெற்றென உணர்தல் - (ஒப்புமை கருதி) இதுவு மதுவென உணர்தல், தெள்ளியோர் திறன் - நூலோதித் தெளிதற்குரிய மாணாக்கரது கடனும், எ- று.

இதற்குதாரண முன் வந்தன காண்க. (௨௦)

இந்நூலுக்கோர் புறனடை :—A REMARK ON NUNNUL IN GENERAL.

462. பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே.

(இ - ள்.) பழையன கழிதலும்-முற்காலத்துள்ள இலக்கணங்களுட் சில பிற்காலத்திறத்தலும், புதியன புகுதலும் - முற்காலத்தில்லன சில பிற்காலத்திலக்கணமாதலும், வழுவல - குற்றமல்லவாம், காலவகையினான் - காலவேற்றுமை யதுவாகலான், எ-று.

இவற்றிற்கும் உதாரண முன் வந்தன காண்க. (௨௧)

உரிச்சொல்லியல் முற்றிற்று.

சொல்லதிகாரம் முற்றுப்பெற்றது.

இருதிணைமூவிட நான்மொழியைம்பா லறுதொகையேழ்
அருவழுவெட்டுரு பொன்பான் றொகாநிலை யாய்ந்தவெச்சம்
ஒருபது கோளெட்டு முப்பொழுதீரிட மோரியல்பாய்
வருமொழிமூன்று முணரச்சொல்வண்மை வருந்திருவே.

நன்னூற்காண்டிகையுரை

முற்றிற்று.

உ

கடவுள்துணை.

நன்னூற்சூத்திர அகராதி.

முதற்குறிப்பு	பக்கம்.	முதற்குறிப்பு	பக்கம்.
அ		அவற்றுள், ஏழா	௯௨
அஆஉஊ	௫௫	அவற்றுள், ஒன்றே	௨௨௫
அஆஎஒவ்	௫௬	அவற்றுள், கிளையெ	௨௧௩
அஆவீற்ற	௨௭௭	அவற்றுள், முதலி	௨௯௨
அஇஉம்முதற்	௩௯	அவற்றுள், முயற்சி	௪௩
அஐமுதலிடை	௬௪	அவற்றுள், வினையி	௭
அகமுனர்ச்	௧௬௪	அவைதாம், முற்றும்	௨௭௧
அசைநிலை	௩௩௪	அவ்வழி, ஆவி	௪௩
அடிநா	௪௫	அவ்வினையாள	௨௮
அடைசினை	௩௩௯	அழலிநீங்கா	௨௯
அடைமொழி	௩௩௯	அளக்கலாகா	௧௯
அண்ணநுனிநாநனி	௪௫	அள் ஆளிறு	௨௭௫
அண்ணநுனிநாவரு	௪௫	அறம்பொரு	௮
அண்பல்லடி	௪௪	அறிவருளாசை	௩௬௮
அண்பன்முதலு	௪௫	அறிவறியாமை	௩௨௬
அண்மையி	௨௬௩	அன் ஆனிறு	௨௭௪
அதுமுன்	௧௩௧	அன்ஆன்அள்	௮௦
அதுவே, இயற்சொற்	௨௦௮	அன்ஆன்இன்	௧௮௬
அத்தினகர	௧௯௨	அன்றியின்றி	௧௨௫
அந்திலாங்	௩௬௩	அன்னமாவே	௨௪
அம்மவுரை	௩௬௪	ஆ	
அம்மாமென்	௨௭௯	ஆஈஊஏ	௩௯
அம்முதலீரா	௩௮	ஆக்கவினைக்	௨௯௩
அம்முனிகரம்	௬௬	ஆக்கியோன்	௨௯
அரிதிற்பெயக்	௨௨	ஆசானுரைத்த	௨௮
அர்ஆர் பவ்வூ	௨௭௫	ஆண்பெண்	௨௦௧
அல்வழி இஐ	௧௨௭	ஆண்மைபெண்மை	௨௨௪
அல்வழியாமா	௧௨௩	ஆநின்றுகின்று	௮௭
அவற்றுள், அஇஉ	௩௯	ஆமாகோனவ்	௧௮௯
அவற்றுள், எழுவா	௨௩௬	ஆமுன்பகரவீ	௧௨௮

முதற்குறிப்பு	பக்கம்.	முதற்குறிப்பு	பக்கம்.
ஆயிரமுகத்தா	௩௨	இலக்கணமுடைய	௨௦௪
ஆய்தக்கிடந்தலை	௪௫	இலக்கியங்கண்	௮௫
ஆவிஞணநமன	௫௬	இல்லெனின்மை	௧௭௪
ஆவியரழ	௧௧௨	இறப்பெதிர்வு	௩௨௪
ஆவியுமொற்று	௫௪	இனைத்தென்	௩௩௬
ஆறனுருபு	௨௩௬	இன்னதின்னுழி	௩௭௩
ஆறனொருமைக்	௨௫௦	ஈ	
ஆற்றொழுக்	௧௫	ஈதலியல்	௨௩
இ		ஈதாகொடு	௩௪௨
இஈஎஏ	௪௪	ஈமுங், கம்மு	௧௬௫
இஈஐவழி	௧௧௪	ஈறுபோத	௭௫
இஉஊவோ	௨௫௬	ஈற்றியா	௧௧௧
இசைகெடின்	௪௭	உ	
இடுகுறிகாரணப்	௩௭	உஊஒஓஔ	௪௪
இடுகுறிகாரணமர	௨௧௨	உஊஒஓவல	௫௫
இடைச்சொல்	௧௪௮	உடன்மேலுயி	௧௫௦
இடைத்தொட	௧௩௩	உணர்வியலா	௩௬௮
இடைநிலை	௩௪௯	உயர்திணைதொடர்ந்	௩௧௮
இடையினம்	௪௧	உயர்திணையும்மைத்	௩௧௨
இடையினுன்கு	௯௧	உயிருமுடம்புமா	௩௬
இடையுரி	௧௭௮	உயிருயிரல்லதா	௩௬௬
இணைந்தியல்	௯௫	உயிர்மவிலா	௬௯
இதற்கிதுசாரியை	௧௯௩	உயிர்மெய்யாய்த	௩௬
இதற்கிதுமுடிபென்	௧௯௬	உயிர்மெய்யிரட்டு	௩௬
இமுப்பெயர்க்கண்	௨௫௭	உயிர்வரினுக்	௧௧௬
இயல்பினும்விதி	௧௧௭	உரத்தின்வளம்	௧௮
இயல்பின்விகா	௧௯௪	உரிவரினுழியி	௧௨௬
இயல்பெழு	௫௪	உருபின்முடிபவை	௧௭௭
இயற்கைப்பொ	௩௪௦	உருபுபல	௨௯௮
இரட்டைக்கிளவி	௩௩௫	உருபுமுற்றீ	௨௯௯
இரண்டாவதனுரு	௨௩௭	உருபும்வினையு	௨௯௭
இரண்டுமுதலா	௩௦௫	உருவகவுவமையிற்	௩௪௪
இரண்டுமுன்வரிற்	௧௪௬	உவப்பினு	௩௨௧
இருதிணையாண்பெ	௨௯௬	உவமவுருபில	௩௦௮
இருவர்நூற்கு	௭	எ	
இர்ஈரீற்ற	௨௮௩	எகரவினமுச்	௧௧௫

முதற்குறிப்பு	பக்கம்.	முதற்குறிப்பு	பக்கம்.
எச்சப்பெயர்வினை	௩00	ஐயீற்றுடைக்குற்	௧௩௭
எடுத்தல்படுத்தல்	௪௬	ஒ	
எட்டனுடம்பு	௧௪௩	ஒடுவுந்தெய்யவு	௩௬௩
எட்டனுருபே	௨௫௬	ஒருகுறிகேட்போ	௨௮
எண்ணலடுத்தன்	௩0௯	ஒருசாரனவ்வீற்	௨௫௮
எண்ணிறையளவு	௧௩௯	ஒருநெறியின்றி	௧௪
எண்பெயர்	௩௪	ஒருபஃதாதி	௧௪௫
எண்மூவெழுத்திற்	௧0௫	ஒருபுணர்க்கிரண்டு	௧0௫
எதிர்மறைசிற	௩௫௭	ஒருபொருட்பல்	௩௩௫
எப்பொரு	௩௨௮	ஒருபொருட்பன்	௩௩௫
எயாமுதலு	௪0	ஒருபொருண்	௩௩௧
எல்லாமென்ப	௧௮௭	ஒருபொருள்குறித்	௨0௯
எல்லாருமெல்	௧௮௭	ஒருமையிற்பன்மை	௩௨௨
எல்லையின்னு	௨௬௮	ஒருமொழிதொடர்	௧௯௮
எவனென்	௨௯௫	ஒருமொழிமூவழி	௧0௪
எழுத்தியறிரி	௩௩0	ஒருமொழியொரு	௧௯௯
எழுத்தே	௬௮	ஒருமொழியொழி	௩0௧
எழுவகை	௮	ஒருவரென்பது	௨௨௯
எழுவாயிறுதி	௩௪௮	ஒருவனொருத்திபல	௧௮௨
எனறுமெனவு	௩௫௯	ஒருவனொருத்திப்	௨௨௯
ஏ		ஒருவன்முதலே	௨௭௩
ஏழனுருபுகண்	௨௫௨	ஒழியிசைவினைச்	௩௫௫
ஏற்குமெவ்வகைப்	௨௩௫	ஒற்றுமை	௩௬௮
ஏற்புழியெடு	௩௫0	ஒற்றுயிர்	௧௮௩
ஏற்றபொருளுக்	௩௪௬	ஒன்பதொழித்த	௧௪௭
ஐ		ஒன்பானொடு	௧௪௩
ஐஔஇஉச்	௪௧	ஒன்றன்புள்ளி	௧௪0
ஐகானயவ்வழி	௬௫	ஒன்றுமுதலீ	௧௪௬
ஐந்தனொற்	௧௪௨	ஒன்றுமுதலெட்	௧௯0
ஐந்தாவதனுரு	௨௪௮	ஒன்றேபலவென்	௨0௧
ஐந்தொகை	௩0௯	ஒன்றொழிபொது	௨0௬
ஐயர்திணைபா	௩௧௬	க	
ஐயந்திரப்	௨0	கஙவும்சஞவும்	௪௪
ஐயாயிகர	௨௮௧	கசதபவொழி	௫௮
ஐயான்குச்செய்யுட்	௨௬௭	கடியென்கிளவி	௩௭0
ஐயிறுபொதுப்பெய	௨௫௮	கண்காலகடை	௨௫௪

முதற்குறிப்பு	பக்கம்.	முதற்குறிப்பு	பக்கம்.
கயவொடு	உஅச	**சி**	
கருத்துப்பதப்	கசா	சிதலெறும்பாதி	ஙசாஎ
களிமடிமானி	உசா	சில்வகையெழு	கச
கா		சிறப்பினுமினத்	சஉ
காரணமுதலா	ஙசக	சினைவினை	உகூங
காலங்கரந்த	ஙOசா	**சு**	
காலங்களனே	ஙO	சுட்டியவெகர	ருசா
கி		சுட்டின்முன்னாய்த	ககூக
கிளந்தகிளைமுத	உகஅ	சுட்டுமறைநே	ஙஉசா
கிளைமுதலாக	உகசா	சுட்டுவகரமூ	கஎரு
கீ		சுருங்கச்சொல்	கO
கீழின்முன்	கசாஅ	சுவைப்புளி	கஉஎ
கு		**சூ**	
குடுதறுவென்னு	உஎஅ	சூத்திரத்துட்	கஎ
குயினூன்வேற்	கருகூ	**செ**	
குலனருடெ	கஅ	செந்தமிழாகித்	உOஅ
குறியதன்கீழா	கஉரு	செந்தமிழ்நிலஞ்	உகO
குறியதன்முன்னர்	சஎ	செம்மைசிறுமை	எச
குறிலணைவில்லா	கருரு	செயப்படுபொரு	ஙஙஎ
குறில்செறியா	கசாகூ	செய்கெனொரு	உஅக
குறில்வழிலள	கசாகூ	செய்தசெய்கின்ற	உஅசா
குற்றுயிரளபி	ருஎ	செய்துசெய்பு	உஅகூ
குன்றக்கூறன்	கூ	செய்பவன்கருவி	உசாகூ
கே		செய்யியவென்	கககூ
கேட்குநபோ	ஙசங	செய்யுமெனெச்ச	உஅஎ
கொ		செய்யுளிறுதி	ஙசகூ
கொல்லேயைய	ஙசாங	செய்யென்வினை	எகூ
கோ		செவ்வெணீற்றதா	ஙருஅ
கோடன்மரபே	உசா	**சொ**	
ந		சொற்றிரியினும்	உகூங
நஞணநமன	சகூ	சொற்றொருமிற்	ஙஎச
நம்முன்கவ்	ருகூ	**ஞ**	
சா		ஞணநமலவளன	கருஉ
சாதிகுழூஉப்	கருசா	ஞனமுன்றம்மினம்	ருகூ
சாலவுறுதவ	ஙஎO	**ட**	
சாவவென்மொழி	கஉஉ	டடறமுன்கசப	ருகூ

முதற்குறிப்பு	பக்கம்.
ணா	
ணனமுன்னினங்	சு0
ணனமுன்னும	ருஉ
ணனவல்லினம்	கருச
த	
தடறவொற்றின்	அசு
தத்தம், பகாப்ப	எச
தமிழவ்வுறவும்	கசுஎ
தம்பாலில்ல	ஙசக
தம்பெயர்மொழி	சுஉ
தரல்வரல்	ஙஉங
தற்சுட்டளபொழி	ருக
தனிக்குறின்	கருக
தன்மகனாசான்	உச
தன்மைமுன்னிலைபடர்	உ0ங
தன்மைமுன்னிலைவியங்	உஎஎ
தன்மையானான்	உஉஎ
தன்னாசிரியன்	ஙக
தன்னென்னென்	கசுக
தன்னொழி	கருக
தா	
தாணமுயற்சி	சக
தானேதரக்	உஉ
தான்தாம்நாம்முதல்	கஅஅ
தான்யானாணீ	உஉகூ
தி	
திசையொடுதிசை	கஙஎ
திணைநிலஞ்சாதி	ஙஙஉ
திணைபால்பொருள்	ஙககூ
திணையேபாலிடம்	ஙகசு
து	
தும்பிவண்டாதி	ஙசுஎ
துய்த்தறுஞ்ச	ஙசுகூ
துறுடுக்குற்றிய	உஎசு
தெ	
தெங்குநீண்டிற்	கஙகூ
தெரிநிலைதேற்ற	ஙருங
தெரிவரும்பெரு	ககூ
தெவ்வென்மொழி	கஎசு
தே	
தேன்மொழி	கருஅ
தொ	
தொகுத்தல்விரி	ஙக
தொக்குழிமயங்கு	ஙகங
தொல்லைவடிவின	ருங
தொழிலுங்கால	உஅசு
தோ	
தோன்றறிரிதல்	க0உ
தோன்றன்மறைதல்	ஙஎ0
தோன்றுதோற்றித்	ஙஉ
ந	
நடவாமடிசி	எசு
நவ்விறுதொழிற்	கருங
நா	
நான்கன்மெய்யே	கசஉ
நான்காவதற்குரு	உசச
நி	
நிறையுயிர்	சங
நின்றநெறி	ருஎ
நீ	
நீயிர்நீவிர்நா	உஙசு
நு	
நுதலிப்புகுத	ச0
நுந்தம், எம்நம்	கசுச
நுவ்வொடுவினா	உசுங
நூ	
நூலினியல்பே	ரு
நூலேநுவல்வோ	ரு
நூல்பயிலியல்பே	உஎ
நூற்பொருள்வழ	கங
நெ	
நெடிலோடாய்த	ரு0

முதற்குறிப்பு	பக்கம்.
நெடிலோடுயிர்த்	௧௩௪
நெல்லுஞ்செல்லுங்	௧௭௩
நே	
நேரினமணியை	௧௪
ப	
பகாப்பதமேழும்	௬௯
பகுதிவிகுதி	௭௩
பகுப்பாற்	௭௦
பஞ்சிதன்சொல்	௧௭
படர்க்கைமுப்	௩௩௩
படர்க்கைவினைமுற்	௨௦௨
பண்பைவிளக்கு	௩௦௭
பதமுன்விகுதி	௧௮௪
பலசிலவெனுமிவை	௧௨௨
பல்லோர்படர்க்கை	௨௯௪
பல்வகைத்தாதுவி	௨௦௫
பல்வகைப்பண்பும்	௩௬௬
பல்வகையுதவி	௨௩
பல்வகைவடிவிரு	௩௬௯
பவ்வமூவிடத்	௮௭
பவ்விநீமீ	௧௨௯
பழையனகழிதலும்	௩௭௪
பனைமுன்கொடி	௧௪௯
பன்னீருயிரும்	௫௫
பா	
பாடங்கருத்தே	௧௬
பாயிரம்பொதுச்	௫
பால்பகாவஃறிணை	௨௨௩
பி	
பிண்டந்தொகைவகை	௧௫
பிரிநிலைவினாவெண்	௩௫௪
பு	
புள்ளியுமுயிரு	௧௯௫
புள்ளிவிட்டவ்	௪௬
புள்ளும்வள்ளுந்	௧௭௪
புன்மரமுதலவுற்	௩௬௭
பூ	
பூப்பெயர்முன்	௧௪௮
பூமலியசோகின்	௩௪
பெ	
பெண்மைவிட்	௨௦௧
பெயரும்வினையும்	௩௪௭
பெயரேஐஆல்	௨௩௫
பெயரொடுபெயரும்	௩௦௪
பெயர்ச்செவ்	௩௫௮
பெயர்வழித்தம்	௧௮௩
பெயர்வினையிடத்து	௨௯௭
பெயர்வினையும்மை	௩௦௨
பெய்தமுறை	௨௧
பொ	
பொதுப்பெயருயர்	௧௦௮
பொதுப்பெயர்வினை	௩௦௧
பொதுவியல்பாறை	௨௭௨
பொதுவெழுத்	௨௧௧
பொருண்முதலாறு	௩௩௭
பொருண்முதலாறி	௨௭௧
பொருண்முதலாறோ	௨௩௦
பொருளிடங்காலஞ்	௭௧
போ	
போலப்புரைய	௩௦௮
ம	
மகரவிறுதி	௬௩
மக்கடேவர்	௨௦௦
மங்கலமாகி	௨௦
மம்முன்பயவ	௬௦
மரப்பெயர்முன்ன	௧௧௯
மரமல்லெகின்	௧௫௯
மலர்தலையுலகின்	௧
மவ்வீறொற்றழிந்	௧௬௨
மற்றையதென்பது	௩௬௨
மற்றையநோக்கா	௩௪௯
மன்னுடைமன்றத்	௩௨

385

முதற்குறிப்பு	பக்கம்.	முதற்குறிப்பு	பக்கம்.
மன்னேயசைநிலை	௩௬௧	மூன்றுருபெண்	௧௩௦
மா		மூன்றுயிரளபிரண்	௫௩
மாடக்குச்சித்திர	௩௩	மெ	
மாவென்கிளவி	௩௬௪	மெய்களகரமு	௬௭
மாற்றநுவற்சி	௩௭௧	மெய்ந்நாமூக்கு	௩௬௬
மி		மெய்யுயிர்முதலீ	௯௭
மியாயிகமோ	௩௬௪	மெல்லினம்	௪௦
மின்பின்பன்கன்	௧௬௦	மென்றொடர்	௧௩௫
மீ		மே	
மீகீழிதழுறப்	௪௪	மேற்பல்லிதழுற	௪௫
மீன்றல்லொடு	௧௫௭	மொ	
மு		மொழிகுணமின்மை	௨௧
முகவுரை	௪	மொழிமுதற்காரண	௩௫
முக்காலத்தினு	௩௨௪	மொழியாய்த்தொட	௬௮
முக்காற்சேட்டின்	௨௮	ய	
முச்சகநிழற்று	௧௯௮	யகரம்வரக்குற	௫௦
முதலிருநான்கா	௧௪௪	யரழமுன்னர்க்கசதப	௧௬௬
முதலிவைசினை	௨௬௫	யரழமுன்னர்மொழி	௬௦
முதலையையுறிற்	௨௬௪	யரழவொற்றின்	௬௧
முதல்வழி	௬	யா	
முதற்பெயர்நான்	௨௨௩	யாகாபிறபிறக்	௩௬௫
முதனூல்கருத்த	௩௦	யாதனுருபிற்	௨௬௫
முரணர்தாதிகா	௩௬௭	யாப்படிபலவினும்	௩௫௦
முழக்கிரட்டொலி	௩௭௨	யானென்வினுவினை	௨௯௪
முற்றீரெச்ச	௩௧௫	யாற்றுநீர்மொழி	௩௪௫
முற்றும்மை	௩௫௮	ர	
முன்மொழி	௩௧௧	ரவ்விற்கம்முத	௯௪
முன்னத்தினுணரும்	௩௪௩	ரவ்வீற்றுயர்பெயர்	௨௬௦
முன்னரவ்வொடு	௨௨௨	ரழவல்லனதம்முற்	௬௧
முன்னிலைகூடிய	௨௮௧	ல	
முன்னிலைமுன	௨௮௩	லகாரவீற்றுயர்	௨௬௧
முன்னோர்நூலின்	௭	லளமுன்கசப	௬௧
முன்னோர்மொழி	௮	லளமெய்திரிந்த	௯௨
மூ		லளவிறுதொழிற்	௧௭௧
மூன்றனுருப்	௧௪௧	லளவீற்றஃறிணை	௨௬௨
மூன்றுவதனுரு	௨௪௦	லளவீற்றியைபினு	௫௨

நன்னூற் சூத்திர அகராதி.

முதற்குறிப்பு	பக்கம்.
லளவேற்றுமையிற்	கசூஅ
வ	
வலித்தன்மெலித்த	க0ங
வல்லினங்கசட	ச0
வல்லேதொழிற்	கஎஉ
வல்லொற்றுவரினே	ஙகஉ
வவ்விறுசுட்டிற்	ககூக
வன்றொடரல்லன	கஙஉ
வா	
வாழியவென்பத	கஉஉ
வானவர்மக்கள்	ஙசூஅ
வி	
விகாரமனைத்து	க0உ
விகுதிபதஞ்சா	ககூங
விரைவினுமிகவினு	ஙஉரு
விழைவேகால	ஙசூ0
விளம்பியபகுதி	அ0
வினாச்சுட்டுடனும்	உஉக
வினாவினுஞ்செப்பினு	ஙஉஎ
வினைசார்பின	ஙஉகூ
வினைபெயர்	ஙருசா
வினைமாற்றசை	ஙசூஉ
வினைமுற்றே	உகூரு
வினையின்பெயரே	உஉஅ
வினையொழிவரி	ஙசூ0
வே	
வேறில்லையுண்	உஅரு
வேறுவினைப்பல	ஙஉஅ
வேற்றுமைமப்	கசூங
வேற்றுமையாயி	கசூகூ
வேற்றுமையைம்	கூஅ
வேற்றுமைவினைசா	ஙருஉ
வேற்றுமைவினைபண்	ங0ரு
ள	
ளஃகானுயர்	உசூ0
ற	
றவ்வொடுகர	அஅ
றனழஎஒவ்	கூசூ
ன	
னஃகான்கிளைப்	கருஎ
னலமுன்றனவும்	கஎசூ
னவ்வீற்றுயர்	உசூஉ

நன்னூற் சூத்திர அகராதி

முற்றிற்று.

விளம்பரம்.

இதனடியில்வரும் புத்தகங்கள் சென்னப்பட்டணம் முத்தியாலுபேட்டை தம்புசெட்டியார் வீதியில் 289-வது கதவிலக்கமுள்ள வீட்டிலிருக்கும் கலாரத்நாகரம் என்னும் அச்சுக்கூடத்தில் விலைக்குப் பெறலாம்.

பெரியபுராணவசனம்	1	12	0
பெரியபுராணச்சுருக்கம் படத்துடன்	0	12	0
திருவாசகம் ஷை ...	0	14	0
தாயுமானசுவாமிகள் பாடல் ஷை ...	0	12	0
விநோதரசமஞ்சரி (*Calico bound.*)	1	2	0
குறள் — பரிமேலழகர் உரையும் தெளிபொருள் விளக்கப் பதவுரையும் ஆங்கிலேய மொழிபெயர்ப்புடன்.	5	0	0
ஸ்ரீ விஷ்ணுபுராணம்	1	14	0
நைடதம் மூலமும் உரையும்	2	0	0
நாலடியார் மூலமும் உரையும் ஆங்கிலேய மொழிபெயர்ப்புடன் (*Calico bound.*)	1	2	0
நளவெண்பா மூலமும் உரையும் ...	0	13	0
திரிகடுகம் மூலமும் உரையும் ஆங்கிலேய மொழிபெயர்ப்புடன்.	0	5	0
ஏலாதி ,, ,,	0	5	0
இராமாயணக்கருப்பொருள் ,, ,,	0	5	0
நீதிநெறிவிளக்கம் ,, ,,	0	5	0
நன்னூல்மூலம்	0	1	0
பஞ்சதந்திரம் (*Tamil*) ...	0	4	0
ஷை (*with English Translation.*)	0	14	0
நன்னூற்காண்டிகையுரை ...	0	13	0
பாரதவசனம்-விராடபர்வம் ...	0	12	0
அறப்பளீசுரசதகம்	0	2	0
குமரேசசதகம் ...	0	2	0
திருவேங்கடசதகம் ...	0	2	0
தண்டலையார்சதகம் ...	0	1	0
முதல்நிகண்டு ...	0	0	9
முதல்திவாகரம் ...	0	0	6
ஆத்திசூடி மூலமும் உரையும் ...	0	0	6
கொன்றைவேந்தன் ,, ...	0	0	9
வெற்றிவேற்கை ,, ...	0	1	0
வாக்குண்டாம் ,, ...	0	1	[illegible]
நல்வழி ,, ...	0	1	0
நன்னெறி ,, ...	0	1	6